

ஜூலை, 2002
புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம்
திருப்பூர் குடிநீர் விநியோகம்
மற்றும் கழிவுநீர் அகற்றுத்திட்டம்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
புரட்சித் தலைவி
செல்வி ஜெ ஜெயலலி
TIRUPUR WATER
Selvi J JAYALALITHAA
Honourable Chief Minister
On
Project cost





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2033
ஆனி – ஆடி
ஜூலை 1–31, 2002
மலர்: 34 இதழ்: 1 & 2
விலை : ரூ.10

Verified

## இந்த இதழில்...

- நடப்பாண்டு தமிழகத் திட்ட ஒதுக்கீடு ரூ.5,750 கோடி .......... 2
- காவிரி நதி நீர் பிரச்சினை உச்சநீதி மன்றத்தை அணுக அரசு முடிவு. .. 5
- முதலமைச்சருக்கு 7.2 கி.மீ. நீள வாழ்த்து மடல் - பள்ளி மாணவர்கள் சாதனை .......... 9
- உறுதியான பொருளாதாரமும் உழைப்புச் சக்தியும் திருப்பூர் நகரத்தை தொழில் முனைவோர் நாடி வரும் வேடந்தாங்கலாக மாற்றியுள்ளது .......... 14
- தமிழகத்தின் தொழில் மற்றும் கட்டமைப்பு வசதிகளில் முன்னேற்றம் ..20
- முதல்நிலை மாணவ - மாணவிகளுக்கு முதலமைச்சர் பாராட்டு .......... 22
- மகளிர் வாழ்வில் மலர்ச்சி, மகளிர் குழுக்களின் புரட்சி .......... 25
- பொன்விழி - புதிய தமிழ் மென்பொருள் .......... 33
- கலை - பண்பாட்டுத்துறை வளர்ச்சிக்கு அரசு தனிக்கவனம் செலுத்துகிறது - முதல்வர் உரை .......... 37
- காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் - விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவி .......... 40
- தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் பற்றி ஆலோசனை .......... 45
- ஓசூர் மலர் ஏற்றுமதி மையம் .......... 47
- ஓராண்டு சாதனை - காஞ்சிபுரம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் .......... 49
- திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் பகுதியில் செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்கள் - ஒரு பார்வை ... 54
- தேனி மாவட்ட சுற்றுலா மற்றும் திருத்தலங்கள் .......... 57
- எங்கள் ஊர் பிரச்சினை .......... 65
- குறவஞ்சி (இலக்கியக் கட்டுரை) .......... 70

*முதல் பக்க அட்டையில்...*

கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

*இரண்டாம் பக்க அட்டையில் :*

12 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில், முதல்நிலை பெற்ற மாணவ – மாணவியருக்கு முதல்வர் பாராட்டு.

*கடைசிப் பக்க அட்டையில் :*

காவலர் குடியிருப்பு திறப்பு விழா

# நடப்பாண்டு தமிழகத் திட்ட ஒதுக்கீடு ரூ.5,750 கோடி

புதுடெல்லியில், 12–6–2002 அன்று மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவர் திரு. கே.சி.பந்த் அவர்களுடன் நடத்திய ஆலோசனையின் போது, தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.

### நிதி மற்றும் வருவாய் பற்றாக்குறை

தமிழ்நாட்டிற்கான 10–வது ஐந்தாண்டு திட்டம் மற்றும் 2002–2003–ஆம் ஆண்டுக்கான வருடாந்திரத் திட்டம் ஆகியன பற்றி விவாதிப்பதில், பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். கடந்த 2001–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இதே மன்றத்தில் நடைபெற்ற ஆண்டுத் திட்ட விவாதங்களின் போது, 9வது திட்டக்கால திட்டங்களை எனது அரசு மேற்கொள்ளும் என்றும், 10–வது திட்ட காலத்தை நோக்கி முயற்சிகள் முனைப்புடன் ஊக்குவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.எனினும் வளர்ச்சி சாரா அரசுச் செலவினத்துடன், நிதி மற்றும் வருவாய் பற்றாக்குறைகள் முன் எப்போதும் இல்லாத அளவில் அச்சமூட்டுகிற அளவுக்கு அதிகரித்து இருந்ததுடன், 1996 முதல் 2001 வரையிலான ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கடுமையான நிதி நெருக்கடியும், எனது அரசு மீது கூடுதல் பளுவாக அமைந்தது. 2001–ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றப் பேரவையின் நிதி நிலை அறிக்கை விவாதத்தின் போது, அரசு நிதி நிலைமை குறித்த வெள்ளை அறிக்கை ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது.

11–வது நிதி கமிஷன் மூலம், தமிழ்நாட்டைப் போன்ற முன்னேறிய மாநிலங்களுக்கு நியாயமான பங்கு கிடைக்காததால், எங்கள் மாநிலத்தின் பிரச்சினைகள் மென்மேலும் அதிகரித்தது. மானியங்களை பரவலாக்குவது என்ற பெயரில், 11–வது நிதி கமிஷன் மேற்கொண்ட அடிப்படை காரணி மாற்றங்களால், எங்கள் மாநிலம் 5 ஆண்டு காலத்தில் மட்டும், ஏறத்தாழ 2,946 கோடி ரூபாயை இழக்க நேரிட்டுள்ளது. 2001–2002–இல் மத்திய வரிகளிலிருந்து எங்களுக்கு கிடைத்திருக்க வேண்டிய பங்கை இந்திய அரசு ரூ.512 கோடியாக குறைத்தது. எதிர்பாராத கூடுதல் சுமையாகவே மாறியது. தேசிய பொருளாதாரத்தில், குறிப்பாக உற்பத்தி துறையில், ஏற்பட்டுள்ள பொதுவான மந்தப் போக்கும் கூட மாநில அரசு வரி வசூல்களில் மிகக் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி, சூழ்நிலையை மென்மேலும் மோசமானதாக ஆக்கியது.

மேற்கண்ட நிதி ஆதார கட்டுப்பாடுகள் காரணமாக 2001–2002–ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீட்டை 6 ஆயிரத்து 40 கோடி ரூபாயில் இருந்து, 5 ஆயிரத்து 200 கோடி ரூபாயாக குறைக்க வேண்டிய நிலைக்கு எனது அரசு தள்ளப்பட்டுவிட்டது.

### நிதி நிலைமை சீராக்க கடுமையான நடவடிக்கைகள்

நிதி நிலைமை சீராக்குவதற்காக, எனது அரசு சில கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. நிதி மற்றும் பட்ஜெட் சீர்திருத்த திட்டத்தை அறிவித்துள்ள எனது அரசானது, வருவாய் செலவினத்தில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பு வேகத்தை மட்டுப்படுத்துவது, அரசு வருவாய்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை



மேற்கொள்வது, மாநில பட்ஜெட் நிதி ஆதாரத்தை, உற்பத்தி சாராத இனங்களுக்கு பதிலாக, உற்பத்தி சார்ந்த இனங்களுக்கு ஒதுக்கீடு செய்வது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மின்துறையில் குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் நோக்கிலான, முதல் நடவடிக்கையாக, கடந்த ஜனவரி 9–ஆம் நாள் இந்திய அரசுடன் ஒரு உடன்பாடு கையொப்பமாகியுள்ளது. 5 ஆண்டு காலத்தில், வருவாய் பற்றாக்குறையை பூஜ்யம் அளவுக்கும், நிதிப் பற்றாக்குறையை மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் 2 சதவீதத்திற்கும் குறைப்பதற்கான ஒரு குறுகிய கால நிதிச் சீர்த்திருத்த திட்டத்தையும் எனது அரசு தயாரித்துள்ளது.

நிதிச் சீர்த்திருத்த ஏற்பாட்டின் மூலமாக 402 கோடி ரூபாய் அளவுக்கு நிதி கிடைப்பதற்கான உடன்பாடு ஒன்றும், விரைவில் இந்திய அரசுடன் செய்து கொள்ளப்பட இருக்கிறது.

### முதலீட்டை நோக்கி

இப்பின்னணியிலும், கணிசமான மீளாய்வுக்குப் பின்னரும், பல்வேறு முக்கிய துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களை கலந்தாய்வு செய்து, நாங்கள் 10–வது திட்ட அம்சங்களை உருவாக்கி இருக்கிறோம். 2001–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற தேசிய வளர்ச்சி குழுக் கூட்டத்தில், முதலமைச்சர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டபடி, வளர்ச்சி விகிதத்தை 8 விழுக்காட்டு அளவிற்கு அதிகரிக்க வேண்டிய தேவையை நாங்கள் முழுமையாக உணர்ந்துள்ள அதே சமயம், இந்த வளர்ச்சியானது அனைவருக்கும் சம அளவில் பலன் அளிக்கக் கூடியதாகவும், கிராம – நகர மற்றும் பாலின பாகுபாடுகள் நீக்கப்பட்டு, நீடித்து நிலைபெறத் தக்கதாக இருக்கவுமானதாக அமைய வேண்டும் என்பதிலும், நாங்கள் உறுதி பூண்டிருக்கிறோம். மனித மேம்பாட்டு குறியீடுகளின்படி, தமிழ்நாடானது, நாட்டிலேயே 3வது இடத்தில் இருப்பதாக திட்டக்குழு அண்மையில் வெளியிட்ட தேசிய மனித மேம்பாட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 10வது திட்ட காலத்தில் அனைத்து சமூக, பொருளாதார துறைகளில் முதலிடத்தை எட்டுவதை நோக்கி எங்கள் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளை வரையறுத்துக் கொள்ளவும் நாங்கள் உறுதிபூண்டியிருக்கிறோம்.

### 15 அம்ச திட்டம் செயல்படுத்த ரூ.3000 கோடி வேண்டும்

மேற்கண்ட குறிக்கோள்களை நிறைவேற்றிட எல்லா சமூக, பொருளாதார துறைகளிலும் செயல்படக்கூடிய 15 அம்சத் திட்டத்தை எனது அரசு அறிவித்துள்ளது. இவை குறித்த விவரங்கள், எமது ஒதுக்கீட்டு கோரிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த குறிக்கோள்களை எட்டிட, நிதிக்குழுவிடம் இருந்தும் அதுபோலவே மத்திய நிதி அமைச்சகத்திடம் இருந்தும் போதிய ஆதரவு எங்களுக்கு தேவைப்படுகிறது. தற்போதைய மிகப்பெரும் நிதிப்பளுவில் இருந்து மாநில அரசு விடுவித்துக் கொள்ள ஒரு சிறப்பு ஒதுக்கீடாக 3000 கோடி ரூபாய் அளவுக்கு தனி ஒதுக்கீடு வழங்கவேண்டும் என்று, நாங்கள் கோரிக்கை விடுத்துள்ளோம். எனது இந்த வேண்டுகோளானது, என்னைப் போன்றே பல்வேறு மாநில முதலமைச்சர்களும் விடுத்துள்ள கோரிக்கைகளால் மேலும் வலுப்பெற்றுள்ளது. இந்தக் கோரிக்கை மீது மத்திய நிதிக்குழுவும், மத்திய நிதியமைச்சரும், சாதகமான முடிவை விரைவில் எடுப்பார்கள் என நம்புகிறேன். அடையாளம் காணப்பட்ட ஆதாரங்களுக்கும் 10வது திட்டத் தேவைகளுக்கும் இடையே காணப்படும் இடைவெளியை, மத்திய அரசின் திட்டங்களை மாநில அரசுக்கு மாற்றுவதன் மூலமாகவும், வெளி நிதிகளை பெருக்குவதற்கான அதிகபட்ச உரிமைகளை வழங்குவதன் மூலமாகவும் குறைக்க முடியும்.

### ரூ.5400 கோடிக்கான திட்ட ஆதாரம்

2002–2003–ஆம் ஆண்டின், ஆண்டு திட்டத்திற்காக 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய்க்கான திட்ட ஆதாரங்களை நாங்கள் கண்டறிந்து இருக்கிறோம். குறைந்தது 200 கோடி ரூபாயை வெளிச்சந்தை கடன்கள் மூலமாக பெறுவது மற்றும் 100 கோடி ரூபாய் சிறப்பு கூடுதல் மத்திய உதவி ஆகியவற்றின் மூலம் நடப்பாண்டுக்கான இந்த ஒதுக்கீட்டை 5 ஆயிரத்து 750 கோடியாக அதிகரிக்க மத்திய நிதிக்குழு அனுமதிக்க வேண்டும் என விரும்புகிறோம். இந்த சிறப்பு கூடுதல் மத்திய உதவியானது.

[illegible] நிலை மேம்பாட்டுத் திட்டம்.

### திட்ட ஒதுக்கீட்டில் முதல்வர் அவர்களின் சாதனை

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மத்திய திட்டக்குழு துணைத்தலைவர் கே.சி.பந்துக்கும் இடையே டெல்லியில் நடைபெற்ற சந்திப்பின்போது, தமிழ்நாட்டிற்கான பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட (2002–2007) ஒதுக்கீடாக ரூ.40,000 கோடிக்கு ஒப்புதல் கிடைத்துள்ளது. கடந்த ஐந்தாண்டு ஒதுக்கீட்டை விட இது 60 சதவிகிதம் அதிகமாகும். இது முதல்வர் அவர்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.



224071

ஆ) சமுதாய அடிப்படையிலான மன நல திட்டங்கள்.

இ) ஊரக பகுதிகளான 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள ஆரம்ப சுகாதார மையங்களின் தரம் உயர்த்துவது.

ஈ) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஏழை மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வருவதை போல், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்குவது போன்ற திட்டங்களுக்கு எங்களால் பயன்படுத்தப்படும்.

**முழுமையான நிவாரணம் கிடைக்க திட்டக்குழு உதவ வேண்டும்**

மத்திய அரசு அதன் பட்ஜெட்டில், நடப்பாண்டு மத்திய வரிகளில்இருந்து,தமிழ்நாட்டிற்கு ஒதுக்கியுள்ள ரூ3,322 கோடியையும் கணக்கில் கொண்டே எங்களது நிதி ஆதாரத்தை நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டைப் போல், இந்த ஆண்டும் பகிர்ந்தளிப்பில் குறைவு ஏற்பட்டால், எங்கள் மாநிலத்திற்கு முழுமையான நிவாரணம் கிடைக்க மத்திய திட்டக்குழு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன், எந்த ஒரு நிதிப்பிரச்சினைகளும் இல்லாமல், திட்ட ஒதுக்கீட்டு திட்டங்கள் முழுமையாக இந்த ஆண்டே நிறைவேற்றப்படவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

**பழுப்பு நிலக்கரிக்கும் ராயல்டி வேண்டும்**

எனது உரையை நிறைவு செய்யும் முன்பாக, மாநில அரசுக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ள ஒரு முக்கியமான பிரச்சினையை, தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விழைகிறேன். 5வது ரக நிலக்கரிக்கு வழங்கப்படுவது போன்றே, பழுப்பு நிலக்கரிக்கும் ராயல்டி வழங்குவது என கடந்த 1990ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்திய அரசு முடிவு செய்திருந்த போதிலும், 2001ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து தான், இந்த ராயல்டி, நிதி நிலைமைகளுக்கு ஏற்ப, ராயல்டியை அதிகரித்து பெறும் பிற மாநிலங்களைப் போன்றே தமிழ்நாட்டிற்கும் வழங்கவேண்டும் என எனது அரசு மத்திய அரசை தொடர்ந்து பலமுறை வலியுறுத்தி வந்த போதிலும், பழைய வீதத்திலேயே ராயல்டி வழங்கி வருவது, பாரபட்சமாக உள்ளது என தமிழகம் கருதுகிறது.

**நியாயமான கோரிக்கைக்கு ஆதரவு தர வேண்டும்**

1990ம் ஆண்டு ஆகஸ்டில், மேற்கொள்ளப்பட்ட முடிவை, அதில் உள்ளவாறே அமலாக்க வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. இந்த நியாயமானதும் மிகுந்த காரணபூர்வமானதுமான இக்கோரிக்கைக்கு மத்திய நிதிக்குழு ஆதரவு தர வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இந்த வகையில் மட்டும் ராயல்டீ மூலமாக வரவேண்டிய தொகை 669.74 கோடி ரூபாயாக உள்ளது.

இந்த மேலான மன்றத்தில் எனது கருத்துக்களையும், தேவைகளையும் முன் வைத்திட எனக்கு வாய்ப்பு அளித்த நிதிக்குழுவின் துணைத்தலைவர் கே.சி.பந்த் மற்றும் அவரது அணியினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் ஆதரவு தொடர வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

**கடந்த ஐந்தாண்டு திட்டத்தைவிட 60 சதவிகிதம் கூடுதல்**

தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் மத்திய அரசின் திட்டக்குழு துணைத்தலைவர் கே.சி. பந்த்துக்கும் இடையே டெல்லியில் 12.6.2002 அன்று நடந்த சந்திப்பின்போது, மத்திய அரசு திட்டக்குழு நிதியாண்டு 2002–2003 ஆண்டுக்காக 5,750 கோடி ரூபாய் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் அளித்தது. அதேபோன்று தமிழ்நாட்டிற்கான பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட (2002–2007) ஒதுக்கீடு ரூ40,000 கோடிக்கும் ஒப்புதல் அளித்தது.

இந்த சந்திப்பிற்காக சென்ற அரசுக் குழுவில் முதலமைச்சர் அவர்களுடன், நிதியமைச்சர் சி. பொன்னையன், தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி, தலைமைச் செயலாளர், நிதித்துறை செயலாளர், மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலர் ஆகியோர் சென்றனர்.

பத்தாவது ஐந்தாண்டு திட்ட ஒதுக்கீடான ரூ40,000 கோடி என்பது ஒன்பதாவது ஐந்தாண்டு திட்ட ஒதுக்கீடான ரூ25,000 கோடியை விட 60 சதவிகிதம் அதிகமானதாகும்.

திட்டக்குழுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய முதலமைச்சர் அவர்கள், தமிழக அரசு பட்ஜெட் மற்றும் நிதி சீரமைப்பு மூலம் அரசின் வருவாயை அதிகரிக்க எடுத்த நடவடிக்கை பற்றி குறிப்பிட்டார். தமிழ்நாட்டில் 2002–2003ம் ஆண்டுத் திட்டத்துக்கு மத்திய திட்டக்குழு சிறப்பான உதவியை அளிக்க முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

திட்டக்குழுவின் துணைத்தலைவர் கே.சி.பந்த், முதல்வர் அவர்கள் மேற்கொண்ட நிதி சீரமைப்பு நடவடிக்கைகளை பெரிதும் பாராட்டினார். தமிழ்நாட்டுக்கான வளர்ச்சி நடவடிக்கைகளில் மத்திய அரசின் முழு ஆதரவு உண்டு என்றும் உறுதியளித்தார். அவர் மேலும் கூறுகையில், தமிழக அரசு எல்லாத் துறைகளிலும் குறிப்பாக சுகாதாரம், கல்வி, ஆகிய துறைகளில் மிகச் சிறப்பான பணிகளை ஆற்றி வருகிறது என்று புகழ்ந்துரைத்தார். ★



# காவிரி நதிநீர் பிரச்சினை உச்சநீதிமன்றத்தை அணுக அரசு முடிவு

காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினை என்பது தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கிடையே பல்லாண்டுகளாக தீராத சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. இந்த பிரச்சினை தொடர்பான சர்ச்சைகளை நியாயமான முறையில் தீர்த்துக் கொள்வதற்காக உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் மத்திய அரசு, காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தை (Cauvery Water Disputes Tribunal) நியமித்தது.

காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி ஒரு வருடத்தில் ஜூன் முதல் மே மாதம் வரை 205 டிஎம்சி அடி நீரை மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு கர்நாடகா அளிக்க உறுதி செய்யப்பட வேண்டும். இந்த நீரை அவ்வாணையில் குறிப்பிட்டுள்ளவாறு மாதாந்திர அடிப்படையில் அளிக்க வேண்டும். மாதந்தோறும் அளிக்க வேண்டிய நீரை நான்காக பிரித்து வாராந்திர அடிப்படையில் அளிக்கப்பட வேண்டும். ஏதாவது ஒரு வாரத்தில் குறைவு ஏற்படுமானால், அக்குறைபாடு பின்வரும் வாரத்தில் ஈடு செய்ய வேண்டும். இவ்வாணை 25–6–1991 அன்று வழங்கப்பட்டது. 1–7–1991 முதல் செயலாக்கத்திற்கு வந்தது. இந்த 205 டிஎம்சி அடி நீரிலிருந்து தமிழ்நாடு பாண்டிச்சேரிக்கு 6 டிஎம்சி நீரை விடுவிக்க வேண்டும். காவிரி நீரைக் கொண்டு கர்நாடகா நடுவர் மன்றத்தில் தெரிவித்தவாறு அதன் பாசனப் பரப்பை மே 1991ல் இருந்த 11.2 இலட்சம் ஏக்கருக்கு மேல் விரிவாக்கம் செய்யக் கூடாது.

இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து இவ்வாணையை கர்நாடகா செயல்படுத்த முன் வரவில்லை.

மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவா சட்டம் 1956 (மத்திய சட்டம் 33/1956) பிரிவு 6–அன் கீழ் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை செயற்படுத்துவதற் கான ஒரு திட்டத்தினை மத்திய அரசு தீட்ட உத்தரவு வழங்குமாறு கோரி இந்த தமிழ்நாடு அரசு மே 1992இல் ஒரு வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

அதனைத் தொடர்ந்து, மத்திய அரசு "காவிரி நீர்த் திட்டம் 1997" என்னும் புதிய திட்டத்தை வகுத்து, மே 1997ல் சுற்றோட்டத்திற்கு அனுப்பியது. இதன்படி 1. மத்திய அரசு மற்றும் காவிரிப்படுகை மாநிலங்களைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய "காவிரி நதி ஆணையம்" ஒன்றை அமைப்பது, 2. இந்த ஆணையத்தின் கீழ் மத்திய அரசு மற்றும் காவிரிப்படுகை மாநிலங்களைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களை அடங்கிய "ஒழுங்குமுறை குழு" ஒன்றை அமைத்து இடைக்கால உத்தரவு அமல்படுத்தப்படுவதை உறுதி



செய்வது. மேலும், ஆணையத்தின் உத்தரவை ஏற்று நீர்தேக்கங்களின் நீர் வழங்கும் முறையை குழுவே ஏற்றுக்கொள்வது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் சுற்றோட்டத்திற்கு விடப்பட்ட இந்த வரைவுத் திட்டம், துரதிருஷ்டவசமாக பல மாறுதல்களுக்கு இலக்காகியும், அதன் உட்பொருள் வலுவிழந்தும் பாரதப் பிரதமரை தலைவராகவும், காவிரிப் படுகை மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட, தற்போதைய காவிரி நதி நீர் ஆணையமாக உருமாறியது.

அதன் அடிப்படையில் மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவா சட்டம் 1956 (மத்திய சட்டம் 33/1956) பிரிவு 6–Aன் கீழ் நடுவர் மன்ற இடைக்கால ஆணையை செயலாக்குவதற்காக காவிரி நதி ஆணையத்தையும், காவிரி கண்காணிப்புக் குழுவையும் மத்திய அரசு ஏற்படுத்தி அதை அதன் அரசிதழில் 11–8–1998 அன்று வெளியிட்டது. காவிரி நதி ஆணையம் பிரதமரை தலைவராகவும், காவிரி படுகை மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாக கொண்டும் செயல்பட்டு வருகிறது. காவிரி கண்காணிப்புக் குழு மத்திய நீர் ஆதார அமைச்சக செயலரை தலைவராகவும், காவிரி படுகை மாநிலங்களின் தலைமைச் செயலர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மத்திய நீர்க் குழுமத்தின் தலைமைப் பொறியாளர் ஆகியோர்களை உறுப்பினர்களாக கொண்டு இயங்கி வருகிறது. காவிரி நதி ஆணையம், 28–10–1998, 14–7–2000 மற்றும் 10–10–2001 ஆகிய நாட்களில் மூன்று முறை மட்டுமே கூடியது. காவிரி கண்காணிப்புக் குழு 12 முறை கூடியது. கடைசியாக 17–5–2002 அன்று கூடியது.

காவிரி கண்காணிப்புக் குழு மற்றும் காவிரி நதி ஆணையத்தின் முடிவுகளை கர்நாடகா அரசு செயல்படுத்தவில்லை. காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை மதித்து செயல்படாமல் தமிழ்நாட்டிற்கு அவசியமான தருணத்தில் கர்நாடகா அரசு நீரை அளிக்காமல் இருந்து வந்ததை கீழ்க்கண்ட நிகழ்வுகளில் இருந்து அறிந்து கொள்ளலாம் –

1. செப்டம்பர் 1999ல் மேட்டூர் அணையில் நீர் இருப்பு 8.9 டிஎம்சி அடி எனும் மிகக் குறைந்த அளவில் இருந்தது. 24–9–1999 அன்று நடைபெற்ற காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் 30–9–1999க்கு முன்னர் 10 டிஎம்சி அடி நீரை கர்நாடகா அரசு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இதனை கர்நாடகா அரசு செயல்படுத்தவில்லை.

2. 14–7–2000 அன்று பிரதமர் தலைமையில் நடைபெற்ற இரண்டாவது காவிரி நதி ஆணையத்தின் கூட்டத்தில், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு மிக மோசமான நிலையில் உள்ளதை தமிழ்நாடு சுட்டிக் காட்டியது. அக்கூட்டத்தில் மேட்டூர் அணைக்கு ஜூன் 2000ல் அளிக்கப்பட வேண்டிய நீரின் குறைபாட்டினை அடுத்த 30 நாட்களுக்குள் கர்நாடகா அளிக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. கர்நாடகா அரசு இந்த முடிவினை செயல்படுத்தவில்லை. 26–8–2000 அன்றைய நிலையில் மேட்டூர் அணையில் 19.49 டிஎம்சி அடி நீர் என்ற அளவில் மிகக் குறைவாகவே நீர் இருந்தது.

3. காவிரி கண்காணிப்புக் குழுவின் 9வது அவசரக் கூட்டத்தில் கர்நாடகா நீர்த்தேக்கங்களில் இருந்து நீரை விடுவிப்பது குறித்து அடுத்த 5 நாட்களில் ஆய்வு செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், இக்குழுவால் மறுஆய்வு செய்யப்படவில்லை.

4. தமிழ்நாட்டின் காவிரி வடிநிலப் பரப்பில் நிலவிவந்த சூழ்நிலையில், மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு நடுவர் மன்ற இடைக்கால ஆணைப்படி நீரை அளிக்குமாறு 10–10–2001 அன்று நடைபெற்ற காவிரி நதி ஆணையத்தின் 3வது கூட்டத்தில் கர்நாடகா பணிக்கப்பட்டது. அந்த முடிவையும் கர்நாடக அரசு செயல்படுத்தவில்லை.



★ சுதந்திரம் என்றால் பயமில்லாது வாழ்வதுதான் அப்படி பயமில்லாது வாழவேண்டும் என்றால், நாம் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும்.

★ பெண்கள் விழிப்பு அடைந்தால், குடும்பம் முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்.

★ நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலும் தான் நமது முன்னேற்றம் இருக்கிறது.

★ ஏழைகளை நல்ல முறையில் வாழவைத்து, எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும். அதுதான் சுதந்திரம், அதற்காகத்தான் சுதந்திரம் கேட்டார் மகாத்மா காந்தி.

– **கர்மவீரர் காமராஜர்**



மேற்குறிப்பிட்டவைகளைக் காணும் பொழுது கர்நாடகா அரசு இடைக்கால ஆணைகளையோ அல்லது ஆணையத்தின் முடிவுகளையோ செயல்படுத்த தவறிவிட்டது. இந்த ஆணையத்திற்கு போதுமான அதிகாரங்கள் இல்லாத நிலையில் நடுவர் மன்ற இடைக்கால ஆணைகளையும் மற்றும் ஆணையத்தின் முடிவுகளையும் கர்நாடகாவை செயலாக்கும்படி கட்டாயப்படுத்த இவ்வாணையத்தால் முடியவில்லை.

1.2.2001 அன்று தொடங்கிய நீர் ஆண்டில் காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு கர்நாடகா நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை விடுவிக்கவும், மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு வரவேண்டிய நீரில் ஏற்பட்ட குறைவினை விடுவிக்கவும் தக்க அறிவுரையை கர்நாடகா அரசிற்கு வழங்கவும், காவிரி கண்காணிப்புக் குழுவின் கூட்டத்தைக் கூட்டக் கோரியும், 21.6.2001, 23.7.2001, 27.7.2001, 3.8.2001, 14.8.2001 மற்றும் 23.8.2001 ஆகிய நாட்களில் 6 கடிதங்கள் மத்திய அரசிற்கு தமிழக அரசால் அனுப்பப்பட்டன. 6.9.2001 அன்று நடைபெற்ற கண்காணிப்புக் குழுவின் அவசரக் கூட்டத்திற்கு பிறகு, கர்நாடகா நீர்த்தேக்கங்களிலிருந்து நீரைத் திறந்துவிடக் கோரியும், காவிரி நதி ஆணையத்தை கூட்டக் கோரியும் நான்கு கடிதங்கள் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டன. இதற்கிடையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8.9.2001 அன்று கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கேற்ப, அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்று 10.9.2001 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களை சந்தித்து, கர்நாடகா நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை திறந்துவிடுவது குறித்து ஒரு கோரிக்கை மனுவை அளித்தது. மேற்படி குழு 11.9.2001 அன்று மேதகு குடியரசுத் தலைவர் அவர்களை சந்தித்து, நீரின்றி வாடும் பயிரைக் காக்க அவரது உதவியையும் கோரியது. மேற்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டும் எந்தவித பயனும் ஏற்படவில்லை.

இச்சூழலில், தமிழக அமைச்சரவை 18.9.2001 அன்று கூடி, உச்சநீதி மன்றத்தில் ஒரு சிவில் வழக்கை தாக்கல் செய்ய முடிவு செய்தது. இந்த முடிவிற்கு ஏற்ப, 19.9.2001 அன்று உச்சநீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு ஒரு சிவில் வழக்கை (ஓ.எஸ்.எண்.3/2001) தாக்கல் செய்தது. அதில் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில் முக்கியமானவை வருமாறு:

1. கர்நாடகா நடுவர் மன்ற இடைக்கால ஆணையை செயல்படுத்த உத்தரவிட வேண்டும்.

2. காவிரி நதி ஆணையம் வாராந்திர / மாதாந்திர அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு நீர் அளிப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட வேண்டும்.

3. நடுவர் மன்ற ஆணையின்படி நீர் வரத்தை உறுதி செய்யும் பொருட்டு திட்டத்தினை உரிய முறையில் மாற்றியோ, திருத்தியோ, அதற்கு விளக்கமளித்தோ ஒரு திட்டத்தினை தீட்டி அது சுதந்திரமாக இயங்கும் வகையில் இருக்க வேண்டி, ஓர் உறுத்துக் கட்டளையை (Decree) பிறப்பிக்குமாறு உத்தரவிட வேண்டும்.

இவ்வழக்கு உச்சநீதி மன்றத்தின் முன் நிலுவையில் இருக்கிறது. இவ்வழக்கு விசாரணைக்காக 22.7.2002 அன்று பட்டியலிடப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

2001–2002 பாசன ஆண்டில் தமிழகத்திற்கு கர்நாடகா அளிக்க வேண்டிய நீரில் சுமார் 42 டிஎம்சி அடி நீர் குறைபாடு உள்ளது என்றும், அந்தக் குறைபாட்டினை அகற்றும் பொருட்டு கர்நாடகா நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை விடுவிக்கவும் ஜூன் 2002 முதல் காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி நீரை விடுவிக்கக் கோரியும், ஏப்ரல் 2002–இல் தமிழக முதலமைச்சரிடமிருந்து, கர்நாடகா முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. 29.4.2002 அன்று அனுப்பப்பட்ட நேர்முக கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ஜூன் 2002 முதல் தமிழகத்திற்கு காவிரி நடுவர் மன்றத்தின் ஆணையின்படி கர்நாடகா நீர்த்தேக்கங்களிலிருந்து நீர் திறந்துவிட வேண்டுமென்று வலியுறுத்தி கர்நாடகா முதலமைச்சருக்கு, தமிழக முதலமைச்சர் மீண்டும் 1.6.2002 அன்று கடிதம் அனுப்பினார்.

காவிரி நதி ஆணையத்திற்கான ஒருங்கிணைந்த விதிமுறைகள் புதியதாக பரிசீலிக்கப்பட்டு ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்படும் வரையில் தமிழ்நாடு பரிந்துரைத்துள்ள திருத்தங்களை மேற்கொள்வதற்காக உடனடியாக காவிரி நதி ஆணையத்தை கூட்டுமாறு மத்திய அரசுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டன. நீர்த்தேக்கங்களை இயக்குதல் மற்றும் நீர்

ஆதாரத்தில் அனுபவம் உள்ள மத்திய நீர் பொறியியல் துறையிலிருந்து மூத்த நிர்வாக நிலைக்கு கீழ் இல்லாத தொழில்நுட்ப அதிகாரிகளை நியமனம் செய்து அந்த அதிகாரிகள் கர்நாடகா நீர்த்தேக்கங்களின் இயக்குதலை கண்காணிக்கவும், அவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஆணையத்தின் உத்தரவின் கீழ் பிற நீர்த்தேக்கங்களை கண்காணிக்கவும், எந்த ஒரு மாநிலமாவது ஆணையத்தின் முடிவினை செயலாக்க முன்வரவில்லை என்றால் பரிந்துரைக்கப்பட்டுள்ள விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு நியமனம் செய்யப்படவுள்ள தொழில்நுட்ப அதிகாரிகள் அம்மாநிலங்களில் உள்ள நீர்த் தேக்கங்களை தன்வசம் எடுத்துக் கொண்டு அவற்றை இயக்கவும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதே இந்த வரைவு விதிகளின் முக்கிய குறிக்கோளாகும். இதன் பொருட்டு காவிரி நதி ஆணையத்தை உடனடியாகக் கூட்டி ஆணையத்தின் விதிகளுக்கு தமிழகம் அளித்துள்ள திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மத்திய அரசிற்கு 28.12.2001, 23.5.2002, 1.6.2002 மற்றும் 11.6.2002 ஆகிய நாட்களில் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

6.6.2002 அன்று மேட்டூர் நீர்த்தேக்கத்தின் நீர் இருப்பு, நீர்வரத்து மற்றும் மேட்டூர் நீர்த்தேக்கத்தை பாசனத்திற்காக திறப்பது குறித்து முதலமைச்சர் அவர்கள் ஓர் ஆய்வை மேற்கொண்டார்.

12.6.2002 அன்று பிரதமர் அவர்களை, முதலமைச்சர் அவர்கள் சந்தித்தபோது ஒரு கோரிக்கை மனுவை அளித்தார். இந்த கோரிக்கையில், காவிரி நதி ஆணையத்தை உடனே கூட்டி, ஒரு புதிய திட்டத்தை தீட்டுவது குறித்தும் அதற்கு முன்னர் ஏற்கனவே உள்ள காவிரி நதி ஆணையத்தின் விதிகளை தமிழ்நாடு தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் திருத்தங்களை வெளியிட வேண்டியதன் அவசியமும் இடம் பெற்றது.

தமிழ்நாட்டின் காவிரி படுகையில் நிலவி வரும் மோசமான சூழ்நிலையும், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு மிகவும் குறைவாக இருப்பதால், மேட்டூர் நீர்த்தேக்கம் பாசனத்திற்காக திறக்கப்பட வேண்டிய நாளான ஜூன் 12–ஆம் தேதியன்று திறக்க இயலாத நிலைக்கு தமிழகம் தள்ளப்பட்டு உள்ளது என்பதை பிரதமர் அவர்களிடம் முதலமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார். மேலும், காவிரி நதி ஆணையத்தை உடனே கூட்டி அதன் விதிமுறைகளுக்கு திருத்தம் கொண்டு வருவதற்கு பிரதமர் அவர்களின் தலையீடு மிகவும் அவசியம் என்று முதலமைச்சர் அவர்கள், பிரதமரிடம் விளக்கிக் கூறினார். கர்நாடக மாநிலத்தின் சம்மதம் இன்றி காவிரி நதி ஆணையத்தின் விதிகளுக்கு திருத்தம் வெளியிட இயலாது என பிரதமர் அவர்கள் முதலமைச்சரிடம் தெரிவித்தார். இதிலிருந்து காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை திறம்பட செயலாக்குவதற்கு மத்திய அரசிடமிருந்து எந்தவித உதவியும் கிடைக்காது என்று கருதப்படுகிறது.

மேற்கூறிய சூழ்நிலையில், 14.6.2002 அன்று மீண்டும் முதலமைச்சர் அவர்கள் ஓர் ஆய்வினை மேற்கொண்டார். விவாதத்திற்கு பிறகு நடுவர் மன்ற ஆணையை செயல்படுத்த கர்நாடகா அரசிற்கும், மத்திய அரசிற்கும் உத்தரவு பிறப்பிக்க கோரி உச்சநீதி மன்றத்தை அணுகுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கருதப்பட்டது. மேலும், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையையும், காவிரி நதி ஆணையத்தின் முடிவையும் திறம்பட செயல்படுத்த இயலாத நிலையில் காவிரி நதி ஆணையம் இருப்பதால், அவ்வாணையத்தில் தமிழ்நாடு தொடர்ந்து இருக்க வேண்டுமா என்று முடிவெடுக்கப்பட வேண்டும் எனவும் கருதப்பட்டது.

மேற்கூறிய சூழ்நிலையில் கீழ்க்கண்டவற்றின் மீது 21.6.2002 அன்று தமிழக அமைச்சரவை விவாதித்து கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்துள்ளது:

1. தற்போதுள்ள காவிரி நதி ஆணையம் எவ்வித அதிகாரமும் இல்லாமல், காவிரி நடுவர் மன்றத்தின் ஆணையை திறம்பட செயல்படுத்த இயலாத நிலையில் இருப்பதால் அவ்வாணையத்தின் கூட்டங்களில் இனிமேல் தமிழ்நாடு கலந்து கொள்ளாது. இந்த முடிவு தற்போதுள்ள கண்காணிப்புக்குழு கூட்டங்களுக்கும் பொருந்தும்.

2. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையையும், இனி வரப்போகும் இறுதி ஆணையையும் முழுமையாகவும், திறம்படவும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக 1956–ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நதிநீர்த் தாவா சட்டம் பிரிவு 6–ஏ–ன் கீழ் தமிழக அரசு சமர்ப்பிக்க உள்ள புதிய வரைவு திட்டத்தை செயலாக்க மத்திய அரசிற்கு ஆணையிட கோரி உச்சநீதிமன்றத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 131–ன் கீழ் புதிய வழக்கு தொடரப்படும்.

3. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையையும், இனி வரப்போகும் இறுதி ஆணையையும் கர்நாடக அரசு மதித்து செயல்படுத்த வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் கர்நாடக அரசிற்கு ஆணையிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் கோரிக்கை வைக்கப்படும்.

21.6.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் கூடிய தமிழக அமைச்சரவை மேற்கண்ட முடிவுகளை உள்ளடக்கிய தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

• • •



# முதலமைச்சருக்கு 7.2 கி.மீ. நீள வாழ்த்து மடல்

## – பள்ளி மாணவர்கள் சாதனை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, 22.6.2002 அன்று தலைமைச் செயலகத்தில், சேலம் மாவட்டம் வீனஸ் வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி சார்பில் அப்பள்ளியின் நிறுவனத் தலைவர், தாளாளர், தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவப் பிரதிநிதிகள் சந்தித்து, மாண்புமிகு முதலமைச்சராக பதவியேற்றமைக்காக செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை வாழ்த்தி தங்கள் பள்ளியின் மாணவ மாணவிகள் தயாரித்த 7.2 கி.மீ. நீளமுள்ள வாழ்த்து மடலை அளித்துள்ளார்கள்.

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டத்தைச் சேர்ந்த வேப்பிலைப்பட்டி கிராமத்தில் உள்ள, வீனஸ் வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவ மாணவிகள், தமிழ்நாட்டின் முதலமைச்சராக செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பதவியேற்றதற்காக ஒரு வாழ்த்து மடலை எழுதியிருந்தார்கள்: 7.2 கி.மீ. நீளமுள்ள இந்த வாழ்த்து மடலை அரசியலில் பல்வேறு சோதனைகளை தாங்கி, அவற்றை சாதனைகளாக்கி வெற்றி கண்டதற்கும், அரசின் கடும் நெருக்கடியான நிதி நிலைகளுக்கிடையேயும் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கும், கல்வித் துறையில் வெளிப்படையான மாறுதல் கொள்கை, கிராமப்புற கல்வி மேம்பாடு, தொட்டில் குழந்தை திட்டம் முதலான பல்வேறு நடவடிக்கைகளுக்கும் பாராட்டு தெரிவித்திருந்தார்கள்.

பள்ளி ஆசிரியைகள், மாணவ–மாணவிகள் ஆகியோரால் தனித்தனியே எழுதப்பட்டு பின்னர் இணைக்கப்பட்டு வாழ்த்துமடல் பேனராக 15 நாட்களில்



உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு கி.மீ. நீள பேனரில் 9,900 வாழ்த்துக்கள் என்ற அளவில் சுமார் 70 ஆயிரம் வாழ்த்துக்களை உள்ளடக்கிய 182 கிலோ எடையுள்ள சுமார் 43 ரீம் பேப்பர் ரோல் கொண்ட இந்த பேனரை 86 மாணவர்கள் 45 மாணவிகள் உட்பட 131 மாணவ மாணவியர்களும், பள்ளி ஆசிரியைகளும் தயாரித்தார்கள். மொத்தம் 5 3/4 அடி நீளம், 1 3/4 அடி அகலம் 2 1/2 அடி உயரம் கொண்ட 20 கிலோ எடையுள்ள மரப்பெட்டியில் இந்த வாழ்த்து மடல் வைக்கப்பட்டது.

இந்த வாழ்த்து மடலை தயாரித்த மாணவச் செல்வங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து இதனை வழங்க வேண்டுமென்று பத்திரிகைகள் வாயிலாகவும், கடிதம் மூலமாகவும் கோரிக்கை வைத்திருந்தனர். இளம் மாணவ மாணவியர்களின் இந்தக் கோரிக்கையை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவர்களை சந்திக்க விரும்பி தக்க ஏற்பாடு செய்யுமாறு ஆணையிட்டார். இதன்படி, சென்னை, தலைமைச் செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையில் மாணவ–மாணவிகளை முதலமைச்சர் அவர்கள் சந்திக்கின்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

மொத்தம் 7.2 கி.மீ. நீளமுள்ள இந்த வாழ்த்து மடலை பள்ளியின் சார்பாக தலைவர் திரு. பி. செல்வராஜ், தாளாளர், தலைமையாசிரியர், பள்ளி ஆசிரியைகள், மாணவ மாணவிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் 22.6.2002 அன்று நேரில் வழங்கினார்கள். மேலும், இச்சாதனையை கின்னஸ் நிறுவனத்திற்கு அனுப்ப மாணவ மாணவிகள் முடிவு செய்துள்ளதையும் அப்போது தெரிவித்தார்கள்.

பின்னர் தலைமைச் செயலகத்தின் நாமக்கல் கவிஞர் மாளிகை பத்தாவது தளத்தி ல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எளிய நிகழ்ச்சியில் மாணவ மாணவியர்களிடையே முதலமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் வாழ்த்து மடலை பார்த்தேன்..

7.2 கிலோ மீட்டர் நீளத்திற்கு வாழ்த்து மடலை எழுதியுள்ளீர்கள். பல மணி நேரம், பல நாட்கள் செலவிட்டு என்னுடைய வெற்றியைப் பாராட்டுவதற்காக நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியைப் பார்க்கும் போது எனக்கு வியப்பாக இருக்கிறது.

உங்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களை எல்லாம் பார்க்கும் போது என் மனம் மிக்க மகிழ்ச்சியடைகிறது. உங்கள் முயற்சி மிகவும் வித்தியாசமானது. என்னை வாழ்த்துவதற்கு நீங்கள் அனைவரும் மிகவும் சிரமப்பட்டிருக்கிறீர்கள். வாழத்துமடல் தயாரித்த உங்கள் அனைவரையும் நேரில் சந்திக்க வேண்டும் என்ற விருப்பத்தோடு இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்.

அரசியலில் நான் எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெற்றுள்ளதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பது எனக்கு ஆச்சரியமாக உள்ளது.

என்னுடைய அரசு நல்ல பல திட்டங்களை அறிவித்துள்ளது. தொட்டில் குழந்தை திட்டம் , கிராமப்புற கல்வி மேம்பாடு, பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு, இந்து கலாச்சார பாதுகாப்பு, கல்வியில் புதுமை போன்ற சிறந்த நலத் திட்டங்களைப் பற்றி நீங்கள் உங்கள் வாழ்த்து மடலிலேயே குறிப்பிட்டுள்ளீர்கள்.

இந்த திட்டங்களைப் பற்றி வாய்ப்பு கிடைக்கும் போது மற்றவர்களிடம் எடுத்துக் கூறுங்கள். அது அனைவருக்கும் உதவிகரமாக இருக்கும்.

இந்த நல்ல நேரத்தில் ஒரு சில செய்திகளை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

நீங்கள் அனைவரும் மெட்ரிகுலேஷன் பள்ளியில் படிக்கிறீர்கள், கண்டிப்பாக அங்கே உயர் தரமான கல்வி கிடைக்கும்.ஆகவே நீங்கள் ஒரு வகையில் கொடுத்து வைத்தவர்கள் தான், அதே நேரத்தில் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களுக்கு, இந்த மாதிரி வாய்ப்புகள் கிடைப்பதில்லை. அவர்களுக்கு வாழ்க்கையில் முன்னேற வாய்ப்புகள் கிடைப்பதில்லை. ஆகவே முதலில் நீங்கள் நன்றாக படிக்க வேண்டும்.நன்றாக படியுங்கள். எதுவரை படிக்க இயலுமோ அதுவரை படியுங்கள். படிப்பு முடிந்து வாழ்க்கையில் முன்னேறிய பிறகு உங்களைவிட கீழ்நிலையில் உள்ளவர்களை கை தூக்கி விட உங்களால் முடிந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்ற உறுதியை நீங்கள் மனதில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பயிலும் பாடங்களில் மனித நேயம் மிக முக்கியமானது ஆகும். வெறும் கல்வி மட்டுமே போதுமானது அல்ல. சமுதாயத்தில் நம்மைவிட கீழ் நிலையில் உள்ளவர்களுக்கு உதவி செய்வதே கல்வியினுடைய பயன் ஆகும். ஆகவே ஏழை எளியவர்களுக்கு உதவுவதை முக்கிய குறிக்கோளாக கொள்ள வேண்டும் என்று உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உங்களில் பலருக்கு வெளிநாட்டில் கல்வி பயில, உயர்படிப்புக்குச் செல்ல வாய்ப்பு கிடைக்கலாம். அவ்வாறு கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு, மேலை நாடுகளுக்குச் செல்லலாம். அங்கே கற்க வேண்டிய கல்வி அனைத்தையும் கற்றுக்கொண்டு அங்கேயே தங்கி விடக்கூடாது. திரும்பவும் தாய் நாட்டிற்கே வந்து, தாய்நாட்டின் வளர்ச்சிக்காக நீங்கள் அனைவரும் பாடுபட





வேண்டும்-அதுதான், பிறந்த நாட்டிற்கு நீங்கள் செய்யும் கடமையாகும். தாய் நாட்டிற்காக எந்த வகையிலாவது நீங்கள் உதவி செய்ய வேண்டும். இதை நீங்கள் ஒரு போதும் மறக்கக்கூடாது.

உங்களுக்காக மட்டும் வாழாமல்,பிறருக்காகவும் வாழ வேண்டும், அதுதான் நம்முடைய பிறவிப்பயன்.

இந்த நேரத்தில் இன்னொரு முக்கியமான செய்தியை உங்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போதெல்லாம் நிறைய குடும்பங்களில் என்ன பார்க்கிறோம் ? பெற்றவர்கள், தாய்தந்தையர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு ,எத்தனையோ தியாகங்களை செய்து பிள்ளைகளை படிக்கவைத்து , பின்னர் அவர்களை வெளிநாடுகளுக்கு உயர்கல்விக்காக அனுப்புகிறார்கள். அந்தப் பிள்ளைகள் பெரியவர்கள் ஆன பிறகு வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு கல்வி பயின்ற பிறகு அங்கேயே தங்கிவிடுகிறார்க்ள், பெற்றவர்களையும் மறந்துவிடுகிறார்கள், எத்தனையோ பேர் வயதான காலத்தில் பிள்ளைகள் இருந்தும் அவர்களைக் கவனிப்பதற்கு யாரும் இல்லாமல் அனாதையாக இங்கே தனிமையில் வாடுகிறார்கள், ஆகவே தாய் நாட்டிற்காக நீங்கள் செய்ய வேண்டிய கடமையை மறக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிற அதே நேரத்தில் உங்களை பெற்றவர்களுக்கும் நீங்கள் செய்ய வெண்டிய கடமை உள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது. உங்கள் தாய் தந்தையர் தான் உங்களுக்கு உயிர் கொடுத்தார்கள். உங்களை பெற்றெடுத்ததற்காக தாய் தந்தையர் அவர்கள் செய்யவேண்டிய கடமையை உங்களுக்காக செய்கின்றார்கள், உங்களை படிக்க வைக்கிறார்கள். உங்களுக்கு வேண்டிய துணிமணிகளை வாங்கிக் கொடுக்கிறார்கள். உங்களுக்கு வேண்டிய புத்தகங்களை வாங்கிக் கொடுக்கிறார்கள் - இன்னும் உங்களுக்கு என்னென்ன தேவைப்படுகின்றதோ எல்லாவற்றையும் உங்கள் பெற்றோர்கள் செய்து கொடுக்கிறார்கள். அவர்கள் எதை எதிர்ப்பாத்து இதையெல்லாம் செய்கிறார்கள் ? பெற்றவர்களுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமை என்று ஒன்று இருக்கிறது அல்லவா ? பெற்றோர்கள் உங்களுக்காக இவ்வளவு செய்கிறார்களே,அதற்கு கைமாறாக உங்கள் பெற்றோர்களுக்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும் ? உங்கள் பெற்றோர்களுக்கு வயதாகிவிடும் போது வயதான காலத்தில் அவர்களுக்கு எந்த கஷ்டமும் இல்லாமல் எந்த துன்பமும் இல்லாமல் அவர்களை நீங்கள் நன்றாக கவனித்துக்கொள்ளவேண்டும், அதுதான் உங்கள் முக்கியமான கடமை என்பதை நீங்கள் உணரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பள்ளி பருவம் இருக்கிறதே பள்ளிக்குச் செல்லும் நாட்கள்தான் ஒருவர் வாழ்க்கையில் மிகவும் இனிமையான நாட்கள். இந்த வயதில் உங்களுக்கு எந்த பொறுப்பும் கிடையாது. எந்த கஷ்டமும் கிடையாது. உலகத்தின் சிரமங்கள் என்னவென்று உங்களுக்குத் தெரியாது. பள்ளிக்குச் செல்லும் நாட்களில் உங்களுக்கு இதுவே கஷ்டமாக தோன்றலாம். தினமும் பள்ளிக்குச் செல்ல சொல்கிறார்களே தினமும் படிக்கச் சொல்கிறார்களே நம் இஷ்டம்போல் ஆடிப்பாடி திரிய முடியவில்லையே .வேண்டிய அளவு விளையாட முடியவில்லையே . தினமும் பள்ளிக்குச் செல்வது Bore என்று கூட உங்களில் பலர் நினைக்கலாம்.

அது இப்போது உங்களுக்கு புரியாது.ஆனால், நீங்கள் பெரியவர்கள் ஆன பிறகு குடும்ப பாரத்தை எல்லாம் நீங்கள் சுமக்க வேண்டிய நாட்கள் வரும்போது வாழ்க்கையில் பல பிரச்சனைகளை சந்திக்க வேண்டிய தருணம் வரும்போது அப்போது நீங்கள் நினைத்துப் பார்ப்பீர்கள். குழந்தையாக இருந்தபோது பள்ளியில் படித்த நாட்களில் எவ்வளவோ நிம்மதியாக இருந்தோமே என்று அப்போது நீங்கள் நினைக்கக்கூடும். ஆகவே, இந்த நாட்களை முழுமையாக நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த நேரத்தில் பள்ளிக்குச் செல்லும் நாட்களில் நீங்கள் என்ன படிக்கிறீர்களோ என்ன கல்வியை நீங்கள் கற்கிறீர்களோ இதுதான் உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு அஸ்திவாரமாக அமையும். இந்த நேரத்தில்தான் உங்களுடைய மூளை பசுமையாக இருக்கும். அதில் எதை ஏற்றினாலும் பசுமரத்து ஆணி போல் அப்படியே பதிந்து விடும்.என்னுடைய சொந்த அனுபவத்தையே சொல்கிறேன். நான் குழந்தையாக இருந்த போது என்ன கற்றேனோ, என்ன படித்தேனோ அதை இன்றுவரை நான் மறக்கவில்லை. ஆனால், நான் பெரியவளானபிறகு இன்னும் எத்தனையோ விஷயங்களை நான் கற்றுக்கொண்டேன். அவற்றில் ஒரு சில தான் எனக்கு நினைவில் இருக்கின்றன. நிறைய விஷயங்களை நான் மறந்துவிட்டேன். எல்லோருக்கும் அப்படித்தான். ஆகவே, குழந்தை பருவத்தில் நீங்கள் என்ன கல்வியை பயிலுகிறீர்களோ, என்ன கற்கிறீர்களோ, உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு இதுதான் அஸ்திவாரம் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. நீங்கள் எல்லாம் பெரியவர்கள் ஆகி நாளை இந்த நாட்டை நீங்கள்தான் நடத்தப்போகிறீர்கள். எதிர்காலத்தில் நீங்கள்தான் நாட்டை நடத்துகின்ற தலைவர்களாக , விஞ்ஞானிகளாக, மருத்துவர்களாக, பொறியாளர்களாக, இன்னும் பல்வேறு துறைகளில் சிறந்தவர்களாக நீங்கள்உருவெடுக்கப்போகிறீர்கள். ஆகவே, அதற்கெல்லாம் அஸ்திவாரம் போடுகின்ற நேரம் இந்த நேரம். ஆகவே, படிக்கின்ற நேரத்தை வீணாக்காமல் நீங்கள் அனைவரும் நன்றாக படிக்க வேண்டும்.

எனக்கு வாழ்த்து தெரிவிக்கவேண்டும் என்று விரும்பிய உங்கள் அனைவரையும் சந்தித்து என் மகிழ்ச்சியை தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவே உங்களையெல்லாம் இங்கு அழைத்திருக்கிறேன். என்னுடைய அழைப்பை ஏற்று இங்கு வந்துள்ள உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது அன்பு பரிசாக உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கைக்கெடிகாரம் வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று பிற்பகல் MGM Dizzee World Amusement Park-க்கு நீங்கள் அனைவரும் சென்றுவர ஏற்பாடுசெய்துள்ளேன். அங்கு நீங்கள் கேளிக்கை நிகழ்ச்சிகளை கண்டு களித்துவிட்டு அங்கேயே மதிய உணவு சாப்பிட்டுவிட்டு மாலையில் உங்கள் இருப்பிடம் திரும்பலாம். ஞாயிற்றுக்கிழமை – நாளை காலை நீங்கள் இரயில் மூலம் உங்கள் ஊருக்கு திரும்பச் செல்லுவதற்கான பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வாழ்க்கையில் நீங்கள் அனைவரும் எல்லா வளங்களையும் பெற்று பல சிறப்புக்களை எய்த வேண்டும். இந்த நாட்டிற்கு சேவை செய்ய வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை நெஞ்சார வாழ்த்துகிறேன்.

★ ★ ★

# காயிதே மில்லத் பிறந்தநாள் - முதல்வர் மரியாதை

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.6.2002 அன்று கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் 107-வது பிறந்த நாளையொட்டி அவரது நினைவிடத்தில் மலர்ப்போர்வை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

5.6.2002 அன்று இஸ்லாமிய சமுதாயத்தின் முதுபெரும் தலைவரும், இந்திய விடுதலைப் போராட்ட வீரருமான, இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் நிறுவனத் தலைவர் மறைந்த கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் 107-வது பிறந்த நாள் ஆகும். இதனை முன்னிட்டு சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா பெரியபள்ளிவாசல் வளாகத்தில் உள்ள கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களின் நினைவிடத்திற்கு 5.6.2002 அன்று காலை 10 மணிக்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, ஏராளமான முஸ்லீம் சமுதாய பெருமக்களும், அமைச்சர் பெருமக்களும் வரவேற்றனர். பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் துயிலுமிடத்தில் மலர்ப்போர்வை வைத்து மரியாதை செலுத்தினார். திருவல்லிக்கேணி வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் திரளாக கூடியிருந்த முஸ்லீம் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் தங்களது இனிய தலைவரான கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் பிறந்த நாளுக்கு மரியாதை செலுத்திய மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.




# நெடுஞ்சாலைத்துறை இணைய தளம்

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 17.6.2002 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத் துறைக்கென வடிவமைக்கப்பட்டுள்ள புதிய இணைய தளத்தைத் தொடங்கி வைத்தார். இந்த இணைய தளத்தின் முகவரி "tnhighways.org" ஆகும்.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் நடவடிக்கைகள் யாவும், ஒளிவு மறைவற்று வெளிப்படையாக இருந்திட வேண்டும் என்பதே தமிழக அரசின் நோக்கமாகும்.இந்த நோக்கத்தின் அடிப்படையில், அரசின் நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் அனைத்தும் மக்களைச் சென்றடைய, தமிழ்நாடு அரசு, விஞ்ஞான வளர்ச்சியின் உதவியோடு துறைகள் தோறும் புதிய இணைய தளங்களை உருவாக்கி வருகின்றது. இந்த வகையில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையின் சிறப்பு, பெருமை, சேவை ஆகியவை குறித்தும், தமிழகத்தை முன்னேற்றும் பணியில் அதன் பங்கு குறித்தும் வெளிப்படுத்தும் வகையில் புதிய இணைய தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணைய தளத்தில்

1. தற்போதுள்ள சாலை அமைப்பு
2. கொள்கைகள் மற்றும் திட்டங்கள்
3. மக்கள் சாசனம்
4. பணிகள் செயலாக்கம் குறித்து அறியும் முறை
5. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
6. இத்துடன் இணைந்த தொடர்புகள்
7. நிர்வாக அமைப்பு
8. அணுகவேண்டிய அதிகாரிகள்
9. வரைவு சாலைக் கொள்கை
10. வரைவு சாலைப் பாதுகாப்புக் கொள்கை
11. துறையின் பல்வேறு பிரிவுகள் குறித்த தகவல்கள்
12. ஒப்பந்ததாரராக பதிவு செய்து கொள்ளத் தேவையான வழிமுறைகள்
13. பொது.முக்கியத்துவம் வாய்ந்த அரசாணைகள் ஆகிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன.



## புதிய இணையதளம் :

இந்த புதிய இணைய தளத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 17.6.2002 அன்று தொடங்கி வைத்தார். இந்த இணையதளம் முழுவதையும் பார்வையிட்ட முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேலும் சில முக்கிய விவரங்களைச் சேர்க்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். தற்பொழுது தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்து ஏற்பட்டால் அந்த விபத்தில் பாதிக்கப்படுபவர்களுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிக்க Trauma Care Centre – மருத்துவ சிகிச்சை மையங்கள் தமிழக அரசால் அமைக்கப்பட்டு வருகின்றன. இது பற்றிய விவரங்களை இந்த இணைய தளத்தில் சேர்க்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார். மேலும் பொது மக்களுக்கு பயன்படும் வகையில் நெடுஞ்சாலைகளில் உள்ள தங்கும் விடுகள், உணவு விடுதிகள் மற்றும் மருத்துவமனைகள் பற்றிய விவரங்களையும் இந்த இணைய தளத்தில் சேர்க்குமாறு அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியின் போது மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு.சுகவனேஸ்வர் அவர்கள், நெடுஞ்சாலைத் துறை செயலாளர் திரு.நாகராஜன் அவர்கள், நெடுஞ்சாலைத்துறையின் முன்னாள் செயலரும் தற்போதைய வேளாண்மைத்துறை செயலாளருமான திரு.டி.எஸ். ஸ்ரீதர் அவர்கள், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் திட்ட இயக்குநர் திரு.ராம மோகன ராவ் அவர்கள், நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் திரு என்.தயானந்தன் அவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.



# உறுதியான பொருளாதாரமும் உழைப்புச் சக்தியும் திருப்பூர் நகரத்தை தொழில்முனைவோர் நாடிவரும் வேடந்தாங்கலாக மாற்றியுள்ளது

**– மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா**

"இந்த இனிய விழா, அரசு விழா என்பதைவிட, வளர்ச்சிப் பணிகளுக்கு புதிய பாதை அமைக்கப் போகும் மகத்தான விழா என்பது தான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

நான் உங்களைக் காண அன்புடன் வருவதும், நீங்கள் என்னைக் காண ஆர்வத்துடன் வருவதும் வேறு எங்கும் காண முடியாத விழுமிய காட்சிகளாகும்.


உழைப்பால் இந்த தேசத்தை உயர்த்திக் கொண்டு இருக்கின்ற தொழிலாளர் சகோதரர்களும், தொழில் முனைவோர்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பூமி இது!

உலக வணிக வரைபடத்தில் தமிழகத்திற்கு சிறப்பான ஓரிடத்தை வழங்கி இருக்கும் பெருமை மிக்க ஊர்– திருப்பூர்!

உலகத்தரம் வாய்ந்த பின்னலாடைகளை உற்பத்தி செய்து, தமிழகத்திற்குத் தனிப்புகழை ஈட்டித்தரும் சிறப்பு பெற்றது திருப்பூர்! உறுதியான பொருளாதாரமும், உழைப்புச் சக்தியும் இந்த நகரத்தை ஒரு வேடந்தாங்கலாக மாற்றியுள்ளன. அதனால் தான், தொழில் முனைவோர்களும், தொழிலாளர்களும் திருப்பூரை நாடி வந்த வண்ணம் உள்ளனர்.

கடந்த முறை தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த போது, திருப்பூரின் பெருகி வரும் குடிநீர் தேவை, அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தேவை, கழிவுநீர் அகற்றும் வசதிகள் தேவை ஆகியவை குறித்து, பல்வேறு அமைப்புகளின் வாயிலாக கோரிக்கைகள் வரப்பெற்றேன். அவற்றை நான் பரிசீலித்து, இந்த வசதிகளை ஏற்படுத்தித் தந்து திருப்பூர் நகரத்தில் இருந்து ஏற்றுமதி ஆகும் பின்னலாடைகள் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணியை அதிகரிக்கும் பொருட்டு ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கருதினேன். இந்த எண்ணத்திற்கு செயல் வடிவம் கொடுத்து, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் என்னும் அமைப்பு 1995 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 ஆம் நாள் தொடங்கப்பட்டது. இந்த அமைப்பு, கடந்த முறை நான் முதலமைச்சர் பொறுப்பில் இருந்த காலத்தின் இறுதிப் பகுதியில் அமைக்கப்பட்டதை இங்கு நினைவுகூர வேண்டும்.





அதற்குப் பின்பு, ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள், என்ன கருதினார்களோ தெரியவில்லை, இந்தத் திட்டம் அப்படியே கிடப்பிலே போடப்பட்டது. ஒருவேளை, என்னால் தொடங்கப்பட்ட திட்டம் என்பதினால் அவர்கள் இதை ஒதுக்கிவிட்டார்கள் என்று தான் கருத வேண்டும்.

மீண்டும் 2001 ஆம் ஆண்டு நான் தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்பு, இந்தத் திட்டம் உள்ள நிலையை அறிந்து மிகவும் வருத்தம் அடைந்தேன். ஏனென்றால், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் தொடங்கிய நிலையிலேயே இருந்தது. அமைப்பு தான் இருந்ததே ஒழிய, செயல்பாடுகள் எதுவும் இல்லை. பணிகள் எதுவும் தொடங்கப்படவில்லை என்பதை அறிந்து, உடனடியாக இந்த அமைப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீர் அகற்றும் பணிகள் தொடங்கத் தேவையான ஆயத்த நடவடிக்கைகளை எடுக்க நான் அறிவுறுத்தினேன். கடந்த ஓராண்டு காலமாக, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்திற்கு தேவையான நிதி ஆதாரங்களை உறுதிப்படுத்தும் பணிகள் நிறைவு பெற்று, திருப்பூர் நகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கான கட்டுமானப் பணிகளும், கழிவு நீர் அகற்றி சுத்திகரிக்கும் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா இனிதே நடைபெற்று வருகிறது. அன்று போட்ட விதை, இன்று அரிய பலன்களை தந்து கொண்டிருக்கிறது.


இந்த புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்திற்கு நிதி ஆதாரங்களை உறுதி செய்யும் Industrial Development Bank of India, Small Industries Development Bank of India, Life Insurance Corporation, Infrastructure Leasing & Financial Services அமைப்பு, State Bank of India போன்ற பல்வேறு அரசுடைமை ஆக்கப்பட்ட வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்கள் கூட நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு தான் இந்தத் திட்டத்தில் நம்பிக்கை கொண்டு, புதிய அமைப்புக்கு நிதி ஆதாரத்தைக் கொடுக்க முன்வந்துள்ளன என்பதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிதி நிறுவனங்கள் பழைய ஆட்சியாளர்களை நம்பவில்லை என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. தகுதி வாய்ந்த தலைமையை ஏற்றுத்தானே யாரும் நம்பிக்கை வைப்பார்கள். இந்தத் திட்டத்தில் நம்பிக்கை வைத்து, அரசு மற்றும் தனியார் பங்கேற்கும் இந்த கூட்டு நிறுவனத்தில் முதலீடு செய்ய வந்துள்ள அனைத்து நிதி நிறுவனங்களையும், வெளிநாட்டு Consortium அமைப்புகளையும் நான் மனதார பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

1991 ஆம் ஆண்டு ஏற்பட்ட Globalisation - உலகமயமாக்கல் கொள்கைக்குப் பின்பு, நம்முடைய தொழில் மற்றும் வணிக அணுகுமுறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நாம் உற்பத்தி செய்யும் பொருட்கள் உலகத் தரம் வாய்ந்தவை ஆகவும், விலை குறைவானதாகவும் இருக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்த நோக்கங்களை அடைய தனியார் துறையும், அரசும் ஒன்றோடு ஒன்று கைகோர்த்து செயல்பட்டு உலகச் சந்தையில் பல்வேறு போட்டிகளுக்கு இடையே பொருட்களை விற்று லாபம் ஈட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஆகவே இதற்கு பயன்படக் கூடிய அமைப்புகளை உருவாக்க வேண்டிய நேரம் வந்துள்ளது. அந்த வகையில், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் ஒரு முன்னோடி அமைப்பாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. அடிப்படை கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தில் இது சிறந்த முன் உதாரணங்களில் ஒன்றாகத் திகழும் என்பது பொருளாதார வல்லுனர்களின் கருத்து.

அண்மைக் காலங்களில் அரசின் நிதி நிலைமை இக்கட்டான சூழ்நிலையை சந்தித்து வருகிறது என்பதை பல்வேறு சமயங்களில் நான் கூறி வந்து இருக்கிறேன். அரசுக்குக் கிடைக்கும் வருவாயில் வளர்ச்சித் திட்டங்களுக்கு மிகக் குறைந்த அளவே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த நிலையைப் போக்க என்னுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இருப்பினும், அரசின் நடவடிக்கைகள் மட்டுமே போதுமானதாக அமையாது என்பதையும் நான் நன்கு அறிவேன். அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்கு உறுதுணையாக, தனியார் துறையின் முயற்சியும் வேண்டும் என்பதே எனது எண்ணம். இந்த உயரிய எண்ணத்திற்கு வடிவம் கொடுக்கும் வகையில் அமைந்தது தான், அண்மையில் நான் அறிமுகப்படுத்திய "இதயம் காப்போம்" என்னும் புதிய மனித நேயத் திட்டம். அந்தத் திட்டத்தின்

மூலம், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அறக்கட்டளை மூலமாக, இதய நோயால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு இலவச பைபாஸ் அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை நான் அறிமுகப்படுத்தி வைத்தேன். இலவச பைபாஸ் அறுவை சிகிச்சை கோரும் ஏழை எளியவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதால், அரசின் முயற்சிகள் மட்டுமே அவர்களுடைய தேவையை நிறைவு செய்யாது என்பதை உணர்ந்து, தனியாரும் இந்த முயற்சியில் பங்கு பெற வேண்டும் என்ற பெருவிருப்பத்தோடு தான், நாங்களே அதற்கு முன் உதாரணமாக விளங்கி, இந்தத் திட்டத்தை நான் தொடங்கி வைத்துள்ளேன்.

அதே போன்று தான், தமிழக அரசு பங்கேற்கும் Tamil Nadu Water Investment Company என்ற அமைப்போடு Thiruppur Exporters' Association மற்றும் பல்வேறு நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் கூட்டமைப்பாக விளங்கும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் ஏறத்தாழ 960 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகளை துவக்க உள்ளது.



இன்றைய தினம் அந்த புதிய அமைப்பின் மூலம் செயல்பட உள்ள ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் அகற்றும் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

என்னுடைய அரசைப் பொறுத்தவரை, குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துவதற்கும், கழிவுநீர் அகற்றுவதற்கும் முன்னுரிமை அளித்து வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். சென்னை மாநகருக்கு வீராணம் ஏரியில் இருந்து குடிநீர் வழங்கும் திட்டம், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு காவிரி நதியில் இருந்து நீர் கொண்டு செல்லும் திட்டம், தர்மபுரி மாவட்டத்திற்கு ஒகேனக்கல் குடிநீர் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்த இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை உணர்ந்த திருப்பூர் நகரம் ஜெய்வாய் பாய் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகள், தங்களது பள்ளி வளாகத்தில் தடுப்பு அணை ஒன்றை கட்டி, மழை நீரை சேகரித்து, அந்தப் பள்ளியில் இருந்த கிணற்றுக்கு செல்லுமாறு செய்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி புரிந்த சாதனையைப் பாராட்டி, நான் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அறக்கட்டளையின் சார்பாக பரிசளித்தேன் என்பதை பெருமிதத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இன்று துவக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் பயன்களைப் பற்றி எனக்கு முன்பு உரையாற்றியவர்கள் குறிப்பிட்டுக் கூறினார்கள். இந்தத் திட்டம் குறிப்பாக திருப்பூர் நகரிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இயங்கி வரும் சாயப் பட்டறைகள் மற்றும் சலவைப் பட்டறைகளுக்கு நீர் வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது என்றாலும், திருப்பூர் நகரம், அதனைச் சுற்றியுள்ள 15 கிராமப் பஞ்சாயத்துகள், இரண்டு நகரப் பஞ்சாயத்துகள், காவிரி நதியில் இருந்து நீர் கொண்டு வரப்படும் தடத்தில் உள்ள 5 ஊராட்சி ஒன்றியங்கள் என மொத்தம் ஏறத்தாழ 780 குடியிருப்புகளுக்கு இந்தத் திட்டத்தினால் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. மேலும், ஒழுங்கற்ற முறையில் செயல்பட்டு வரும் திருப்பூர் கழிவு நீர் அகற்றும் திட்டம் சீராக்கப்படும். இதன் கட்டுமானப் பணிகள் 30 மாதங்களில் முடிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்தத் திட்டத்தினால் இந்தப் பகுதி குறிப்பிடத்தக்க அளவில் மேம்பாடு அடையும் என்பது நிச்சயம்.

திருப்பூர், தமிழ்நாட்டின் மிக முக்கியமான பொருளாதார மையமாக விளங்குகிறது. பின்னலாடை தயாரிப்பதில் மிகப் பெரிய ஏற்றுமதி வணிகத்தை ஏற்படுத்தியுள்ள திருப்பூர் மக்கள், தொழில் முனைப்புமிக்கவர்கள் என்பதில் ஐயம் இல்லை. இன்று, ஒரு பில்லியன் டாலர் மதிப்புள்ள பொருட்களை, ஐரோப்பிய இணையம், அமெரிக்கா மற்றும் கிழக்காசிய நாடுகள் உட்பட உலகின் பல்வேறு



பகுதிகளுக்கு திருப்பூர் ஏற்றுமதி செய்து வருகிறது என்பது நமக்கெல்லாம் தித்திக்கும் செய்தியாகும்.

இந்த வெற்றியின் பயன்கள் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, அகில இந்தியாவிற்குமே உரிய வெற்றிக்கனிகளாகும். திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் உலக அளவில், இன்னும் திறம்படப் போட்டியிட்டு, பெரும் அளவில் வணிகத்தை நடத்துவதற்கு இந்தத் திட்டம் நிச்சயம் உதவும்.

இந்தத் திட்டம், பெரிய அளவில் வேலைவாய்ப்பை வழங்கி, மக்களின் வருமானத்தைப் பெருக்கி, அதன் மூலம் மாநிலத்தின் வளர்ச்சிக்குத் துணை செய்யும்.

இத்திட்டத்தின் வெற்றி, தமிழ்நாட்டில் இன்னும் பல நகரங்களில் இப்படிப்பட்ட திட்டங்கள் உருவாகத் தூண்டுகோலாக அமையும் என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

வணிகத்துறைக்குத் தரமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கும் மக்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் அர்ப்பணித்துக் கொண்ட அரசே தமிழ்நாடு அரசு என்பதை இந்தத் திட்டத்தின் வெற்றி தேசத்திற்கு தெரியப்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் அனேக முறை குறிப்பிட்டிருப்பதைப் போல, இந்தியாவிலேயே முதலீட்டாளர்கள் நாடும் முதன்மையான இடமாகத் தமிழகத்தை ஆக்குவதே இந்த அரசின் இலட்சியமாகும். அடுத்து வரும் ஆண்டுகளில், நாட்டிலேயே முதன் மாநிலமாக, தமிழ்நாடு உருவாகும் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

முதலிடம் என்று நான் குறிப்பிடுவது முதலீட்டைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல, பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, மிக முக்கியமாக, நம் மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றிலும் முதலிடம் பெறுவதே எனது இலட்சியம். முதலீடுகளை ஈர்ப்பதிலும், மிக மேலான பொருளாதார வளர்ச்சியை அடைவதிலும், மக்களுக்குச் சமூக நீதிகளை வழங்குவதிலும், நமக்குள்ள திறமையை இந்தத் திருப்பூர்த் திட்டம் வெளிப்படுத்துகிறது.

எப்போதோ தொடங்கிச் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டியது இந்தத் திட்டம். என்றாலும், இப்போதாவது நடைபெறுகிறதே என்ற திருப்தி உண்டாகிறது.

எது, எப்போது, யாரால் முடிக்கப்பட வேண்டும் என்பது காலத்தின் கணக்கு.

புதிய திருப்பூர்ப் பகுதி மேம்பாட்டுக் கழகத்தை நான் அன்று தொடங்கினேன். அதனுடைய திட்டத்திற்கு கால்கோள் நாட்டவும் இன்று, நான் தான் வந்திருக்கிறேன்.

*மக்கள் குரலே மகேசன் குரல்.*
*மக்கள் பணியே மகேசன் பணி*

- என்பதுதான் என்னுடைய கொள்கை. அத்தகைய பணியை உங்கள் மகத்தான ஆதரவோடு அன்றும் நான் தான் செய்தேன், இன்றும் நான் தான் செய்கிறேன், நாளையும் நான் தான் செய்வேன். இது என் அன்பிற்குரிய தமிழக மக்களாகிய உங்களின் அன்புக் கட்டளை.

இந்த நேரத்தில் Thiruppur Exporters' Association பொறுப்பாளர்கள் தமிழ்நாட்டில் ஜவுளித் தொழில் மேம்பாடு பற்றியும், குறிப்பாக பின்னலாடை தொழில் பற்றியும் பல்வேறு கோரிக்கைகளை என் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் அனைத்தும் அரசின் ஆய்வில் உள்ளது என்பதையும், அவற்றின் மீது தக்க முடிவுகள் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஏற்கெனவே குறிப்பிட்டது போல தேர்தல் வாக்குறுதிகளை நான் இதய சுத்தியோடு நிறைவேற்றி வருகிறேன் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை எளியவர்களுக்கு வழங்கப்படும் ரேஷன் அரிசியின் விலையை 3 ரூபாய் 50 பைசாவிற்கு மேல் உயர்த்த மாட்டேன் என்று ஆண்டிபட்டி தேர்தல் பிரச்சாரத்தின் போது கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்ற தக்க ஆணையை நான் ஏற்கெனவே பிறப்பித்து இருக்கிறேன். அதேபோல் 1992–93ஆம் ஆண்டுகளில் உச்ச நீதிமன்ற உத்தரவின்படி தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்டு இடையில் பயிற்சி கிடைக்காமல் போன மாணவ மாணவியர்கள் 15,760 பேருக்கு ஆசிரியர் பயிற்சி இடங்கள் ஏற்படுத்தி கொடுத்து ஆசிரியர் பயிற்சிக்கு ஏற்பாடு செய்வோம் என்று 2001ஆம் ஆண்டு பொது தேர்தலின் போது வாக்குறுதி அளித்து இருந்தேன். இதை இப்போது நான் நிறைவேற்றி உள்ளேன். அந்த மாணவ மாணவியர்கள் இப்போது பயிற்சி பெற்று வருகிறார்கள்.

அதேபோல் கடந்த காலத்தில் ஆசிரியர் இடமாறுதலின் போது நடந்த ஊழல் முறைகேடுகளை தவிர்க்கும் பொருட்டு, எங்கள் ஆட்சியில் வெளிப்படையான, தூய்மையான இடமாற்ற நெறிமுறைகள் செயல்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தோம். அதன்படி ஆசிரியர்களுக்கான இடமாறுதல் ஏற்பாடுகளுக்கு எங்கள் ஆட்சிக் காலத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்''.

இப்படி தேர்தலின் போது நாங்கள் வழங்கிய ஒவ்வொரு வாக்குறுதியையும் நிறைவேற்ற இந்த அரசு உறுதியாக செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த இனிய விழாவோடு கடந்த ஓராண்டில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறைவேற்றப் பட்ட அரசு திட்டப் பணிகளுக்கான திறப்பு விழாவும், புதிய பணிகளுக் கான அடிக்கல் நாட்டு விழாவும், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் இணைக்கப் பட்டுள்ளன.



30 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்ட 895 பணிகள் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று 29 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்பட உள்ள 393 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

தொண்டாமுத்தூர் – நரசீபுரம் சாலை உயர்நிலைப் பாலம், திருப்பூர் நகராட்சி வணிக வளாகக் கட்டடம், திருப்பூர் அரசு தலைமை மருத்துவமனையில் அவசர கால சிகிச்சைப் பிரிவுக் கட்டடம், 104 தொகுப்பு வீடுகள், 26 பள்ளிக் கட்டடங்கள், 24 கிராமச் சாலைகள் என்பன போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்ட பணிகளில் அடங்கும்.

அதேபோன்று, ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கு 6 விடுதிக் கட்டடங்கள், காரமடை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் X-ray, அவசர சிகிச்சைப் பிரிவுடன் கூடிய கட்டடம், மேட்டுப்பாளையம் நகராட்சி துப்புரவு வளாகக் கட்டடங்கள், திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி விடுதிக் கட்டடம், 10 திருக்கோயில்களில் திருப்பணிகள் ஆகியவை உள்ளிட்ட பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, கோயம்புத்தூர் மாவட்டத்தில் இன்று ஏறத்தாழ 6,870 பயனாளிகளுக்கு 8 கோடியே 95 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அரசு நலத்திட்ட உதவிகள் இந்த விழாவில் வழங்கப்படுகின்றன.

மேலும், இந்த விழாவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக, திருப்பூரை மையமாக வைத்து, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் பகுதிகளில், திருப்பூரில் இருந்து சோழிபாளையம், திருப்பூரில் இருந்து செங்கப்பள்ளி, திருப்பூரில் இருந்து குன்னத்தூர் ஆகிய வழித் தடங்கள் உள்ளிட்ட 29 புதிய வழித் தடங்களை இன்று தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று இந்த விழாவில் நலத்திட்ட உதவிகளைப் பெற உள்ள 6,870 பேருக்கும் நலத்திட்ட உதவிகளை நானே வழங்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும், கால அவகாசம் இல்லாத காரணத்தினால், ஒரு சிலருக்கு மட்டும் நான் இப்போது வழங்க உள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற பயனாளிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு அதிகாரிகளும் நான் மேடையில் பயனாளிகளுக்கு உதவிகளை வழங்கிய பின்பு, இதே நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளை வழங்குவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் இந்தியாவிற்கே வழிகாட்டுகிறது என்ற வகையில், இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த புதிய அமைப்பின் மூலம் ஏற்படுகின்ற அனுபவங்களை வைத்து, தமிழகத்தின் பிற நகரங்களிலும், குறிப்பாக, சிவகாசி போன்ற தொழில் நகரங்களில் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதையும் இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, மீண்டும் ஒரு முறை அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியை உரித்தாக்கிக் கொண்டு விடை பெறுகிறேன்''.

*கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரிலுள்ள ஆண்டிபாளையத்தில் 20–6–2002 அன்று நடைபெற்ற புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழக திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டு விழா, வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடக்க விழா, புதிய திட்டப் பணிகள் தொடக்க விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆகியவற்றை தொடங்கிவைத்து மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.*



# அன்னதானத் திட்டத்திற்கு முதலமைச்சர் நன்கொடை

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏப்ரல் 2002 மாதத்திற்குரிய தனது சம்பளப் பணமான 10,000/– ரூபாய்க்கான காசோலையை மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோவிலுக்கும், மே 2002 மாதத்திற்குரிய சம்பளப் பணமான 10,000/– ரூபாய்க்கான காசோலையை விழுப்புரம் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோவிலுக்கும் அன்னதான திட்டத்திற்காக நன்கொடையாக 21.6.2002 அன்று தலைமைச் செயலகத்தில் அளித்தார்.



தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு மதிய நேரத்தில் வருகை தரும் பக்தர்கள் பசியாறும் வகையில் அவர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் அன்னதான திட்டத்தை கடந்த 23.3.2002 அன்று தொடங்கி வைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த அன்னதானத் திட்டத்திற்கு அனைவரும் தாராளமாக நிதியுதவி வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடுவித்திருந்தார். மேலும், முதலமைச்சர் என்ற முறையில் அரசிடமிருந்து தமக்குக் கிடைக்கும் சம்பளப் பணத்தை ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் அன்னதானத் திட்டத்திற்காக நன்கொடையாக கொடுக்க முடிவு செய்திருப்பதாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.

அதன்படி, முதலமைச்சர் அவர்கள் கடந்த மார்ச் 2002 மாதத்திற்குரிய தனது சம்பளப் பணமான 9,677/– ரூபாய்க்கான காசோலையை திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவிலுக்கு நன்கொடையாக வழங்கினார்.

இதனையடுத்து தற்போது தமது ஏப்ரல் மற்றும் மே 2002 மாதங்களுக்குரிய சம்பளப் பணத்தை முறையே, மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில் மற்றும் விழுப்புரம் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயில் அன்னதான திட்டத்திற்கு 21.6.2002 அன்று வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள் வீழங்கிய அன்னதான திட்டத்திற்கான காசோலைகளை, மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோவில் நிர்வாக அலுவலர் திரு ஜி.ஆறுமுகம் அவர்களும், விழுப்புரம் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோவிலின் பரம்பரை அறங்காவலர் திரு. டி.குமார் அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அன்னதான திட்டத்திற்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கன்னியாகுமரி மற்றும் பிற மாவட்டங்களைச் சார்ந்த முக்கியப் பிரமுகர்கள் ஆகியோர் மொத்தம் 15 இலட்சத்து 66 ஆயிரத்து 511 ரூபாய் நிதியினை 8–7–2002 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினர்.

• • •

# தமிழகத்தின் தொழில் மற்றும் கட்டமைப்பு வசதிகளில் முன்னேற்றம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது முன்னிலையில் தமிழ்நாடு அரசுக்கும் Infrastructure Development Finance Company Limited (IDFC) என்கிற கட்டமைப்பு மேம்பாடு வளர்ச்சி நிறுவனத்திற்கும் 28.6.2002 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் கொள்கை அளவிலான ஒப்பந்தம் (Memorandum of Understanding) ஒன்று கையெழுத்தானது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு துறைகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளில் விரைந்த முன்னேற்றத்தையும், ஒட்டுமொத்த வளர்ச்சியையும் ஏற்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் தொழில் மற்றும் கட்டமைப்பு வசதி ஆகியவற்றின் மேம்பாடு குறித்து கொண்டுள்ள எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுக்கின்ற வகையில், தமிழக அரசு பல்வேறு கட்டமைப்பு திட்டங்களில் தனியார் துறையின் பங்கேற்பு அமைவதற்கு ஏதுவாக உரிய கொள்கை திட்டத்தை உருவாக்கியுள்ளது. தமிழகத்திலுள்ள பல்வேறு கட்டமைப்பு வசதிகளில் விரைந்த முன்னேற்றத்தை கொண்டு வருவதற்காக, தமிழ்நாடு அரசுக்கும் Infrastructure Development Finance Company Limited என்கிற நிறுவனத்திற்கும் இடையே கொள்கை அளவிலான ஒப்பந்தம் ஒன்று 28–6–2002 அன்று கையெழுத்தானது. இந்த MoU ஒப்பந்தத்தில், தமிழ்நாடு அரசின்சார்பில் தலைமைச் செயலாளர் திரு சுகவனேஷ்வர் அவர்களும், IDFC நிறுவனத்தின் சார்பாக அதன் நிர்வாக இயக்குநர் திரு நசீர் முன்ஜீ அவர்களும் கையெழுத்திட்டனர்.

தமிழக அரசுக்கும் IDFC நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தான MoU தமிழ் நாட்டில் பல்வேறு துறைகளில் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படுவதற்கு தனியார் துறையின் முதலீட்டை பெற்றுத்தர உரிய வழிமுறைகளை வழங்கும். குறிப்பாக எரிசக்தி, தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பவியல், ஒருங்கிணைந்த போக்குவரத்து நகர்ப்புற கட்டமைப்பு வசதி, உணவு மற்றும் வேளாண் வணிகம் ஆகிய துறைகளில் லாபகரமான இயங்கும் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட உரிய முதலீட்டினை IDFC நிறுவனம் பெற்றுத் தரும். இந்த MoU ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டில் பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் கூட்டு முயற்சிகளுடன் ஏற்படுத்தப்பட இருக்கும் பல்வேறு கட்டமைப்பு வசதி திட்டங்களுக்கு தேவைப்படுகின்ற நிதி வசதியினை சென்னைத் தரமணியில் அமையவிருக்கும் சிங்கப்பூர் அரசின் நிறுவனமான JTC நிறுவனத்தின் ஒத்துழைப்போடு அமையவிருக்கின்ற இரண்டாவது தகவல் தொழில் நுட்பவியல் பூங்கா (Second I.T. Park) டாக்டர் எம்.ஜி.ஆர். அறிவு நகரம் (Dr.M.G.R. Knowledge City, Tharamani), சென்னைக்கு அருகே தகவல் தொழில் நுட்பவியல் பகுதியில் (I.T.Corridor) அமையவிருக்கின்ற தகவல் தொழில் நுட்பவியல் நகரம் (Knowledge Industrial Township) மற்றும் சாலைகள், சுற்றுலா, வேளாண்மை ஆகிய துறைகளில் IDFC நிறுவனம் பெற்றுத்தரும். இதுதவிர, தமிழ் நாட்டிலுள்ள போக்குவரத்துத் துறையின் திட்டங்களுக்கும் IDFC நிறுவனம் நிதி வசதியினை வழங்கும்.



IDFC நிறுவனம் பெற்றுத் தருகின்ற நிதி குறிப்பிட்ட திட்டம் சார்ந்ததாக (Project Specific) இருக்கும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) திட்ட செயலாக்க நிறுவனமாக இயங்கும். IDFC நிறுவனத்தைப் பொருத்த வரையில் கடந்த 31.3.2002 வரையில், தமிழ் நாட்டில் மொத்தம் 19 கட்டமைப்பு வசதி திட்டங்களுக்கு ரூ.1500 கோடி அளவுக்கு நிதி உதவியினை வழங்கி இருக்கின்றது. இவற்றில் 8 திட்டங்களுக்கு ரூ.404 கோடி வரை நிதி ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, IDFC நிறுவனம் சென்னை Metro Water நிறுவனத்தின் கட்டண விகிதங்கள் குறித்த ஓர் ஆய்வினை நடத்தி முடித்துள்ளதோடு, மேலும் பல்வேறு துறைகளில் பெரிய அளவிலான கட்டமைப்பு வசதி திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கும் பரிசீலனையும் செய்து வருகின்றது.

தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த MoU ஒப்பந்தம் கையெழுத்தாகின்ற நிகழ்ச்சியின்போது, தமிழக அரசும், IDFC நிறுவனமும் இணைந்த அமல்படுத்த உள்ள பல்வேறு கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்களுக்கு தம்முடைய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு, இதுபோன்று பல்வேறு துறைகளில் கட்டமைப்பு வசதிகள் மேலும் வலுவூட்டப்படுவது தமிழகத்தின் விரைந்த தொழில் வளர்ச்சிக்கு பெரிதும் துணை நிற்கும் என்று தாம் நம்புவதாக குறிப்பிட்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 3.3 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலம் அரசு பொறுப்பில் இருப்பதாகவும், அவற்றை விளை நிலங்களாக மாற்ற தமிழக அரசு முயற்சி எடுத்து வருவதாகவும், அதற்கும் இந்த நிதி நிறுவனம் உதவி செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார். மேலும் சென்னைகடற்கரை ஓரத்தில் உள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்காக கடல் நீரை நன்னீர் ஆக்க சிறிய அலகுகளை அமைத்து சிறு சிறு திட்டங்களை நிறைவேற்றவும் கடற்கரை பகுதிகளில் வாழும் மக்களுக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யவும் இந்த நிதி நிறுவனங்கள் உதவி செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியின் போது தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு நயினார் நாகேந்திரன், தொழில்துறை செயலாளர் திரு.அருண் ராமநாதன், நிதித்துறை செயலாளர் திரு.என்.நாராயணன், டிட்கோ நிறுவத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு எம். மாதவன் நம்பியார் மேலும் IDFC நிறுவனத்தின் சார்பாக அதன் முதன்மை நிர்வாக அலுவலர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.நாசர் முன்ஜீ, தலைமை இயக்க அலுவலர் திரு A.K.T.சாரி, தலைமை நிதி அலுவலர் திரு அனுப் செத், துணைத் தலைவர்கள் – இயக்கம் செல்வி ஜெயலட்சுமி ஜெயராமன் மற்றும் திரு அனுபம் ஸ்ரீவட்சவா ஆகியோர் உடன் இருந்தனர்.





# முதல் நிலை மாணவ - மாணவிகளுக்கு முதலமைச்சர் பாராட்டு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 7.6.2002 அன்று தலைமைச் செயலகத்தில், கடந்த 2002 மார்ச் திங்களில் நடைபெற்ற பள்ளி இறுதி வகுப்பு பொதுத் தேர்வில் (SSLC) தமிழை முதற் மொழி பாடமாக கொண்டு பயின்ற மாணவ மாணவியர்களில் மாநிலத்திலேயே மொத்த மதிப்பெண்கள் அதிகம் பெற்று முதல் மூன்று நிலைகள் பெற்ற மூன்று மாணவ மாணவிகளுக்கு மேல்நிலைப்பள்ளியில் தொடர்ந்து படிப்பதற்கு உதவித் தொகையாக தலா ரூ.1,500/-க்கான காசோலையினையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி பாராட்டினார்.

தமிழக முதலமைச்சர் அவர்களிடம் பரிசு பெற்ற முதல் மூன்று நிலைகளில் தேறிய மாணவ மாணவிகளின் விவரம் வருமாறு :

மொத்த மதிப்பெண் 500க்கு 493 பெற்று முதல் நிலை - செல்வி பி. ஹேம பிரியா, ஜெயராணி, பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சேலம்-2.

மொத்த மதிப்பெண் 500க்கு 492 பெற்று இரண்டாம் நிலை - செல்வன் ஜெ. சாய் சரவணன், சாந்தோம் மேல்நிலைப்பள்ளி, மயிலாப்பூர், சென்னை.

மொத்த மதிப்பெண் 500க்கு 491 பெற்று மூன்றாம் நிலை - செல்வி டி. நிஷாந்தி, செயின்ட் ஆன்ஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கடலூர்.

தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கண்ட மூன்று மாணவ மாணவிகளுக்கும் கல்வி நிதி உதவி மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி, அவர்கள் தொடர்ந்து ஊக்கமுடன் நன்முறையில் மேற்படிப்பு பயின்று, தமிழகத்திற்கு பெருமை தேடித்தர வேண்டும் என்று கூறி தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து கொண்டார். இந்த நிகழ்ச்சியின் போது பரிசு பெற்ற மாணவ மாணவிகளின் பெற்றோர்களும் உடனிருந்தார்கள்.

## பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 7.6.2002 அன்று



தலைமைச்செயலகத்தில், பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் தமிழை முதல் மொழி பாடமாக எடுத்து படித்து தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களிடையே மாநிலத்திலேயே அதிக மதிப்பெண்கள் எடுத்து முதல் மூன்று இடங்களைப் பெற்ற 11 மாணவ மாணவிகளுக்கு, அரசே அவர்களின் உயர் படிப்புக்கான முழுச் செலவினை ஏற்பதற்கான சான்றிதழ் அளித்து அவர்களுக்கு தலா 5000/- ரூபாய்க்கான காசோலையினை முன் பணமாக வழங்கி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

முதல் மூன்று இடங்களைப் பெற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் பரிசும், பாராட்டும் பெற்ற மாணவ மாணவிகளின் விவரம் வருமாறு :



மொத்த மதிப்பெண் 1200-க்கு 1177 மதிப்பெண்கள் பெற்று முதல் நிலை பெற்றவர்கள்.

1. செல்வி பி. நந்தினி தேவி
   ஹோலிகிராஸ் ஆங்கிலோ இந்திய பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.
2. செல்வி கே. இந்துபிரியா,
   எஸ்.ஆர்.வி. மேல்நிலைப்பள்ளி, ராசிபுரம்.
3. செல்வி ஏ. கோதை நாச்சியார்,
   வித்யாவிகாஷ் மேல்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு.
4. செல்வன் எல். பிரவீன்குமார்,
   வித்யாவிகாஷ் மேல்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு.
5. செல்வன் கே. எஸ். கார்த்திக்,
   பிரின்ஸ் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி, மடிப்பாக்கம், சென்னை.
6. செல்வன் எஸ். விஸ்வநாத்,
   டி.ஏ.வி. மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி, கோபாலபுரம், சென்னை.

மொத்த மதிப்பெண் 1200-க்கு 1176 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் நிலை பெற்றவர்கள்.

1. செல்வன் எஸ். சந்தோஷ்,
   வித்யாவிகாஷ் மேல்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு.
2. செல்வி ஆர். சாலை வளர்மதி,
   பி.எஸ்.கே. மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, புதுப்பேட்டை.

மொத்த மதிப்பெண் 1200-க்கு 1174 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் நிலை பெற்றவர்கள் :

1. செல்வன் ஏ.ஆர்.முல்லை பாலாஜி,
   எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிகுலேஷன், மேல்நிலைப்பள்ளி, சொக்காம்புதூர்.
2. செல்வி ஆர்.சங்கீதபாய்,
   எஸ்.ஆர்.வி.மேல்நிலைப்பள்ளி, ராசிபுரம்.
3. செல்வி சி.சங்கீதா,
   செயின்ட் மேரீஸ் மேல்நிலைப்பள்ளி, செங்கல்பட்டு.

அரசின் நிதி உதவி மற்றும் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட மாணவ மாணவிகள், அவர்களது திறமைக்கு ஊக்கமளிக்கும் வகையில் அரசு வழங்கும் இந்த உதவியை முழுமையாக பயன்படுத்தி தங்களது உயர்கல்வியை மிகவும் நல்ல முறையில் கற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியின் போது பரிசும், பாராட்டும் பெற்ற மாணவ மாணவிகளின் பெற்றோர்களும் உடன் இருந்தார்கள்.

# பசுமை விருதுகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.6.2002 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுச் சூழலைப் பேணிப் பாதுகாப்பதில் சிறப்புடன் செயல்பட்ட சேலம், நீலகிரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுக்கு தமிழ்நாடு அரசின் பசுமை விருதுகளை வழங்கினார்.

எதிர்கால சந்ததிகளின் நல்வாழ்வுக்கு இன்றியமையாத தேவையான, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில், தமிழ்நாடு ஏனைய மாநிலங்களுக்கு முன்னோடியாக முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, இயற்கை வளங்களை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டியது நமது கடமையும், பொறுப்பும் ஆகும் என்பதை உணர்ந்த தமிழக அரசு, இதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. சுற்றுச்சூழல் சீர்கேடுகளால் ஏற்படும் தீமைகளைப் பற்றி அனைவரும் உணரும் வண்ணம், எல்லோருடைய ஒத்துழைப்போடு ஓர் இயக்கமே நடத்தப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இதன் அடிப்படையில், சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பணியில் சிறப்புடன் பணியாற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அவர்களது பணியினை மேலும் ஊக்குவிக்கும் வண்ணம் விருதுகள் வழங்கப்படும் என அறிவித்தார்.



இதன்படி உலக சுற்றுச்சூழல் தினமான 5.6.2002 அன்று முதலமைச்சர் அவர்கள், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புப் பணியில் சிறப்புடன் செயல்பட்ட சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சுப்ரியா சாஹு, விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கே.கோபால் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசின் "பசுமை விருது"களை வழங்கிச் சிறப்பித்தார்.

தொழில் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இடம் மாறும் (Non-Point) மாசுக் குறைப்பு, மழைநீர் சேமிப்பு, தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களை அகற்றுவது, மறுபயன்பாட்டு செயல் வகைகளை ஊக்குவிப்பது, நகர்ப்புற திடக்கழிவு மேலாண்மை, மனித மற்றும் விலங்கினக் கழிவுகளை அகற்றுவதில் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு, பசுமைக் கவச (Green Belt) மேம்பாடு, உயிரி மருத்துவ மற்றும் அபாயகரக் கழிவுகள் மேலாண்மை, ஒலி மாசுக்குறைப்பு, சுற்றுச்சூழல் பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற அம்சங்களில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியமைக்காக சேலம், நீலகிரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் ஆட்சியர்களுக்கு பசுமை விருது இந்த ஆண்டு வழங்கப்பட்டு உள்ளது.

பசுமை விருதுகளை வழங்கிய முதலமைச்சர் அவர்கள், விருது பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொண்டார். அடுத்த ஆண்டும் இதே போல விருது பெறும் வகையில் செயல்படுமாறு அன்போடு கூறினார்.

மேலும், சுற்றுப்புறச்சூழல் மேம்பாடு குறித்து மாசுகட்டுப்பாடு வாரியம் தயாரித்துள்ள சுவரொட்டிகளை, முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். இதனை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் துறை அமைச்சர் திரு.ப.மோகன் அவர்கள் பெற்று கொண்டார்கள். தமிழில் வெளியிடப்பட்டுள்ள சுவரொட்டிகளை முழுமையாக படித்துப் பார்த்த முதலமைச்சர் அவர்கள், இதன் மூலம் மக்களுக்கு சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு பெருகும் என்று நம்பிக்கை தெரிவித்தார். ★





# மகளிர் வாழ்வில் மலர்ச்சி குழுக்களின் புரட்சி

தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களிலும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கிளை அலுவலகம் உள்ளன. மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட மகளிர் நல அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகத்திற்கும் மகளிர் குழுக்களுக்கும் இணைப்புப் பாலமாகத் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட சுமார் 300 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் 1.40 இலட்சம் சுய உதவிக் குழுக்களுக்கு மேல் இயங்கி வருகின்றன. சுய உதவிக் குழு தொடங்க விரும்பும் மகளிர் மாவட்ட அலுவலகம், தொண்டு நிறுவனம் அல்லது அருகாமையிலுள்ள குழு உறுப்பினர் இவர்களில் ஒருவரைத் தொடர்புக் கொண்டால் குழு தொடங்க வழிகாட்டுவார்.

## மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி

ஈரோடு மாவட்டம் பெருந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அன்று தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டது. 12 சுயஉதவிக் குழுக்களி லுள்ள 30 பெண்களைத் தேர்ந்தெடுத்து CARE தொண்டு நிறுவனத்தால் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தைச் சார்ந்த திட்ட

ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஏ. தனலெட்சுமி என்பவர் 7 நாள் பயிற்சியைத் தொடர்ந்து அளித்தார். இவர் பயிற்சியாளருக்கான தொழிற் பயிற்சியைப் பெற்றவர் ஆவார்.

மூன்று பெண்கள் தன்னம்பிக்கையோடு அந்தப் பயிற்சியை மேற்கொண்டனர். முதல்நாள் பயிற்சியை தங்களுக்குத் தொழில் பற்றிய தெளிவையும் ஊக்கத்தையும் அளித்தது என்றனர்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் தனலெட்சுமி தொழில் முனைவது தொடர்பான அனைத்துத் தரப்பு விளக்கங்களையும் எடுத்துரைத்தார். "தொழில் முனைதல் என்றால் என்ன? தொழில் முனைவதில் உள்ள தடைகள் என்ன? தடைகளைத் தகர்ப்பது எப்படி? தொழில் முனைவோராக உருவாவது எப்படி? தொழில் முனைவோரின் சுய மதிப்பீடு, தொழில் முனைவோரின் குண நலன், தொழில் வகைகள், தொழில் முறைகள், தொழில் வாய்ப்புகள், சந்தை, சந்தை ஆய்வு, விற்பனை விவரம், சந்தைக்கும் விற்பனைக்கும் உள்ள வேறுபாடுகள், பொருட்களின் தரம், சந்தைப் பொருளுக்கும் நமது பொருளுக்கும் வித்தியாசப்படுத்துதல், தொழில் நிர்வாகம், பதிவேடு பராமரிப்பு, லாப நஷ்டக் கணக்கு, நிதிநிலை அறிக்கை, திட்ட அறிக்கை தயார் செய்தல் எவ்வாறு என்பனக் குறித்து விரிவான விளக்கம் அளித்தார்.

மேலும் "தொழில் முனைவதற்கு 296 வகையான தொழில்கள் உள்ளன. உள்ளூர் வளத்தைக் கண்டு பிடித்து தொழில் முனைவோரை உருவாக்குவதற்கு முன்னர் உள்ள பிரச்சனைகள் அதற்கான தீர்வு, தொழில் முனைவோராக உருவாகிய பின்னர் உள்ள பிரச்சனை அதற்கானதீர்வு'' எனச் சாதக பாதகங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தார்.

தொழில் முனைவோரை சந்தைக்கு அனுப்பி ஆய்வு செய்தல், வீடுகளுக்குச் சென்று வாங்குவோரின் விருப்பங்கள் குறித்து சர்வே எடுத்தல், அரசாங்கக் கடன் பெறுவதற்கான வழிகள், சிறு முதலீடுகளில் தொழில் செய்தல், 1000 ரூபாய் முதலீட்டில் தொழில் செய்து 200 ரூபாய் இலாபம் பெறுவது எப்படி என்பன போன்ற ஏராளமான விவரங்களை எடுத்துக் கூறினார்.

தனிநபர் தொழில் செய்தல், கூட்டுத் தொழில் செய்தல், குழுவாகத் தொழில் செய்தல், கூலி வேலை செய்தல், தொழில் முனைவோராக மாறுதல் என்பது குறித்துத் தெளிவுபடுத்தினார்.

## அன்னை தெரசா மகளிர் சுயஉதவிக் குழு

அன்னை தெரசா மகளிர் சுயஉதவிக் குழு ஈரோடு ஊராட்சி ஒன்றியம், மேட்டு நாகவம்பாளையம் ஊராட்சி மன்றத்தைச் சார்ந்த காளிங்கராயன்





பாளையத்தில் தொடங்கப்பட்டது. 14 உறுப்பினர்களைக் கொண்டு இக்குழுவின் பிரதிநிதி திருமதி. சி.சரஸ்வதி. இக்குழு உறுப்பினர்களின் வார சேமிப்பு ரூ.36,000 தொடக்க வேளாண்மைத் கூட்டுறவு வங்கியில் வைக்கப்பட்டுள்ளது.

அரசு மற்றும் வங்கியின்மூலம் சுழற்சி நிதியாக ரூ.25,000 இந்தக் குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ளது.

இக்குழு உறுப்பினர்கள் ஊறுகாய் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மாதம் 5000 ரூபாய்க்கு வியாபாரம் செய்து சுமார் 1500 ரூபாய் இலாபம் ஈட்டி வருகின்றனர்.

பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் இனிப்புப் பலகாரங்கள் தயாரித்து விற்பனை செய்து மூன்று நாட்கள் பணியில் ஈடுபட்டு, 30,000 ரூபாய்க்கு வியாபாரம் செய்து ரூ.5000 வரை இலாபம் ஈட்டி வருகின்றனர்.

இக்குழுவினர் பல்பொருள் அங்காடி நடத்திட ரூ.1 இலட்சம் கடன் பெற்று, விரைவில் அங்காடி தொடங்கிட உள்ளனர்.

+2 படித்த இக்குழுவின் பிரதிநிதி திருமதி. சி. சரஸ்வதி வங்கிக் கடனுக்காக திட்ட அறிக்கையைத் தானே தயாரித்து அளித்து வங்கி மேலாளரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

மேட்டு நாகவம்பாளையம் ஊராட்சியின் 3வது வார்டு உறுப்பினராகவும் கடந்த தேர்தலில் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## கணவர் ஒத்துழைப்பு - மாமியார் மாமனார் பாராட்டு

மகளிர் சுயஉதவிக் குழுவில் ஈடுபடுவதற்கு முன்னர் வீட்டுக்கு வெளியில்தனியேசென்று பழக்கம் இல்லை. வீட்டு வேலை தெரியும். வேறு எதுவும் தெரியாது. வெளி உலகம் தெரியாது. கூண்டுப் பறவை போல் இருந்தேன்.

இன்றைக்கு ஒன்றிய அளவிலான குழுவில் செயலாளராக உள்ளேன். கலெக்டரைத் தெரியும், அதிகாரிகளைத் தெரியும். நேரக் கட்டுப்பாடு எனக்குத் தெரியும். பயம் இல்லை, தெளிவு ஏற்பட்டுள்ளது. குழுப் பயிற்சியின் மூலம், பிரச்சனையின்றி வாழ்கிறேன்.

குழுவிற்கு வருவதற்கு முன்னர் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டுமென்றாலும் கணவர் துணை வேண்டும். இன்றைக்கு குழு உறுப்பினர்கள் தாங்களே தனித்துச் செயல்படத் துணிச்சல் ஏற்பட்டுள்ளது. குழந்தைகளை சுத்தமாக வைத்திருக்கின்றோம். பிறருக்கு சுகாதாரம் பற்றி எடுத்துக் கூறுகிறோம். மக்களிடத்திலும் அதிகாரிகளிடத்திலும் சுய உதவிக் குழு என்றால் தனி மரியாதை இருக்கிறது.

குழுக்கூட்டம் செல்வதென்றாலே என்னமோ? ஏதோ என்று முகம் சுளித்த கணவர் இன்றைக்கு மற்றவர்களிடம் எனது மனைவி சுய உதவிக் குழு பிரதிநிதி என்று பெருமையோடு அறிமுகப்படுத்துகிறார். ஏதாவது பொது உதவி வேண்டுமானால் என் மனைவியை அழைத்துச் செல்லுங்கள் என்று கூறுகிறார்.

## குழு வாழ்க்கைக்கு வழிகாட்டி

குழுக் கூட்டத்திற்குப் போக நேரமாகி விட்டது சீக்கிரம் போம்மா குழந்தையை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று மாமியார் மாமனார் துரிதப்படுத்தி அனுப்புகின்றனர். பிறர் வந்து எங்களிடம் ஆலோசனை கேட்கும் அளவுக்கு எங்களுக்கு மரியாதை இருக்கிறது. யார் கையும் எதிர்பாராமல் வாழ்ந்து வருகிறோம். மற்றவர்களுக்கும் உதவியாக இருக்கிறோம். சுயஉதவிக் குழு பெண்களின் கண்களைத் திறந்துள்ளது. வாழ்க்கைக்கு வழிகாட்டியுள்ளது என்று குழு பிரதிநிதி திருமதி சி. சரஸ்வதி கூறுகிறார். உறுப்பினர்கள் திருமதி. எஸ். திருவேணி, திருமதி. ஜெயலெட்சுமி ஆகியோரும் அவரது கருத்துக்களை ஆமோதிக்கின்றனர்.

## பெண்கள் அணியும் கொலசு - பெண்ணே தயார் செய்கின்றனர்

சேலம் நகரிலிருந்து 7 கி.மீ தொலைவிலுள்ள சிற்றூர் சிவதாபுரம். 19 பெண்கள் ஒன்றுபட்டு சுய உதவிக்குழுவைத் தொடங்கி உள்ளனர். இக்குழுவின் ஊக்குநர் திருமதி. மேகலா. வாரந்தோறும் குழுக் கூட்டங்களை நடத்தி சிறுசேமிப்பில் விருப்ப சேமிப்பில் ஈடுபட்டு இக்குழுவினர் ரூ.50,528 சேமிப்புச் செய்துள்ளனர். ரூ.25,000 சுழல் நிதியாகப் பெற்று அவசரத் தேவைகளுக்கும் குழு உறுப்பினர்கள் எளிய

வட்டியில் இந்தத் தொகையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

### எங்கள் நேரம் எங்கள் கையில்

இந்தியன் வங்கியில் ரூ.2 இலட்சம் இக்குழுவினர் கடன் பெற்றுள்ளனர். இக்குழு ஊக்குநர் திருமதி . மேகலா , "கந்து வட்டிக்கு வாங்கி கஷ்டத்துக்கு ஆளான எங்களுக்கு சுய உதவிக்குழு

### குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிந்தது

சுயஉதவிக் குழுவைத் தொடங்குவதற்கு முன்னர் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் வேலைக்கு அனுப்பினோம். கொலுசுத் தொழில் தொடங்க கடன் வேண்டிய பொழுது மாவட்டக் கலெக்டர் அவர்கள் உங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பினால்தான் கடன் பரிந்துரைக்க முடியும் என்று எங்களுக்கு நிபந்தனை விதித்தார்.




தொடங்கிய பின்னர் சுகம் கிடைத்துள்ளது. அவசரத் தேவைகளுக்கு குடும்பச் செலவுக்கு, குழந்தைகள் படிப்பிற்கு சுழல் நிதி எங்களது தேவைக்குப் பயன்படுகிறது. கூலி வேலையை மட்டுமே நம்பி இருந்த எங்களுக்கு இந்தக் கொலுசு தயாரிக்கும் தொழில் தன்னம்பிக்கையை வளர்த்துள்ளது. கையில் காசு பார்ப்பதே கஷ்டமாக இருந்தது. எங்கள் குழுவில் பணப்புழக்கம் இருக்கிறது. குடும்பமே முன்னேறி யுள்ளது. வீட்டிலேயே கொலுசு தயாரிக்கும் வேலையைச் செய்வதால் எங்கள் சேரம் தங்கள் கையில் உள்ளது. குழந்தைத் தொழிலாளர் முறை இல்லை. எங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறோம் '' என்று கூறுகிறார்.

அதன்படி நாங்களும் உறுப்பினர்களுக்கும் பகுதி மக்களுக்கும் எடுத்துச் சொல்லி குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி வருகிறோம்.

### கடன் திரும்பச் செலுத்துதல்

தொழில் செய்ய வாங்கிய கடன் ரூ.2 இலட்சத்தில் ரூ.63000 திரும்பிச் செலுத்தி இருக்கிறார்கள். உறுப்பினர் அனைவரும் தாங்களே கொலுசு செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளதால் நாளொன்றுக்கு தினக் கூலியாக ரூ.35 வீதம் 20 நாட்கள் வேலை செய்து சுமார் 700 ரூபாய் வரைப் பெற்று வருகின்றனர். எஞ்சிய நாட்களில் வேறு கூலித் தொழிலிலும் ஈடுபட்டு வருகின்றனர்.. கையில் காசு இல்லை என்ற நிலையோ, வேலை இல்லை என்ற கஷ்டமோ, இந்த பெண்களுக்கு இல்லை.





### கொலுசு தயாரிக்க 25 நிலைகள்

கொலுசு தயாரிக்க வெள்ளிக் கட்டிகளை வாங்குகின்றனர். இதைக் கம்பியாக மாற்றி, பல்வேறு மாற்றங்களைச் செய்து 25வது நிலையை அடைந்த பின்னர்தான் கொலுசாக உருமாறுகிறது.

### பாறைக்காடு மகளிர் சுய உதவிக்குழு - சமூக சேவை

20 மகளிர் உறுப்பினர்களைக் கொண்ட இந்த சுயஉதவிக் குழுவின் ஊக்குநர் திருமதி. கே.சாந்தி ரூ.40,000 சுயசேமிப்புச் செய்து ரூ.2 இலட்சம் கடன் பெற்று ரூ.34,000 திருப்பிச் செலுத்தியுள்ளனர். "குழுவுக்கு வந்தபின்னர் தான் வெளி உலகம் தெரிந்தது. நல்லஅனுபவம் கிடைத்துள்ளது. குடியரசு தின விழா, மருத்துவ முகாம்கள், புகை ஒழிப்பு தினம் போன்ற விழாக்களில் கலந்து கொண்டோம். பெண் குழந்தைகள் சிசு கொலைத் தடுப்பு, குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் ஆகிய பணிகளிலும் ஈடுபட்டு வருகிறோம். வெளியூர்களுக்கும் சென்றுவராத எங்களுக்கு சென்னை வரை சென்று தீவுத்திடல் பொருட்காட்சியில் கலந்து கொண்டு கொலுசு விற்கின்ற வாய்ப்பினையும் பெற்றோம்.

### பெண் சிசுக் கொலை கண்காணிப்புக் குழுவில் சுயஉதவிக் குழு இடம்

ஓமலூர் காடையான்பட்டி, எடப்பாடி, திரமங்கலம் பகுதிகளில் பெண் சிசுக் கொலை பரவலாக உள்ளது. பெண் சிசுக் கொலைத் தடுப்பு கண்காணிப்புக் குழு அரசால் அமைக்கப்பட்டு, அக்குழுவில் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கும் இடம் அளிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு சம உரிமையும், சொத்துரிமையும் கிடைத்துள்ளது. தொட்டில் குழந்தைத் திட்டம் பெண் சிசுக் கொலை பெரும் அளவில் குறைந்துள்ளது. இவற்றை யெல்லாம் உணர்ந்து சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றனர்.

### எருமாப்பாளையம் ஊராட்சி

### குப்பைமேடு சுயஉதவிக் குழு கறவை மாடுகள்-பால்விற்பனைத் தொழில்

20 மகளிரை உறுப்பினராகக் கொண்ட இந்த சுயஉதவிக் குழு இதுவரை சுயசேமிப்பு மூலம் ரூ.72,000 சேமித்து வைத்துள்ளனர். சுழல் நிதியாக ரூ.25,000 பெற்றுள்ளனர். அவசர காலத் தேவைக்கு இந்த நிதி குழு உறுப்பினர்களுக்குப் பெரிதும்

பயன்படுகிறது என்று குழு ஊக்குநர் திருமதி. அமுதா தெரிவிக்கிறார்.

6.12.2000 அன்று ரூ.2.5 இலட்சம் வங்கியில் கடனாகப் பெற்று இரண்டு கட்டமாக 20 கறவை மாடுகளை இந்தக் குழுவில் வாங்கியுள்ளனர். கறவை மாடு ஒன்றின் விலை சராசரியாக ரூ.12,000 முதல் 14,000 வரை வாங்கியுள்ளனர். ஒவ்வொரு உறுப்பினரும் நாளொன்றுக்கு ரூ.100 வரை கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தின் மூலம் விற்பனை செய்து வருகின்றனர். இதுவரை இக்குழு வாங்கிய கடனில் ரூ.69,000 வங்கிக்குத் திருப்பிச் செலுத்தி இருக்கின்றனர்.

இந்த சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் பால் தொழில் மட்டுமல்லாது மளிகைக்கடை, தயிர், சிற்றுண்டி, டீக்கடை, பீடிச்சுற்றுதல் போன்ற பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டு வருமானம் ஈட்டி வருவதாக குழுவின் ஊக்குநரும் உறுப்பினர்களும் தெரிவிக்கின்றனர்.

''குழுவில் எந்தக் குறைபாடும் இல்லையெனவும், திருப்தியாகச் செயல்படுவதாகவும் இவர்கள் கூறுகின்றனர். சுயமாகத் தொழில் செய்ய குழு தைரியம் அளித்துள்ளது. கந்து வட்டியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளோம். மகளிர் தினவிழா, மருத்துவ முகாம்களில் பங்கேற்கிறோம். கிராமசபையில் கலந்து கொள்கிறோம். சேலம் ஒன்றியத்தில் சிறந்த சுயஉதவிக் குழு என்ற பரிசினைப் பெற்றுள்ளோம்'' என்று ஊக்குநரும் உறுப்பினர்களும் தெரிவிக்கின்றனர்.

## அதிசயம் - ஆனால் உண்மை

### சுய உதவிக் குழுவினர் பெற்ற தொழில் கடன் 100 % திருப்பிச் செலுத்தப்பட்டு வருகிறது - வங்கி மேலாளர் நற்சான்று

கடன் பெற்றவர்கள் திருப்பிச் செலுத்த முடியாமல் போவதும், தொழில் கடன் பெற்றுத் தொழில் நடத்துபவர்கள் தொழிலில் நஷ்டம் ஏற்படுவதும் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போவதும், வாடிக்கையான நிகழ்ச்சியாகத்தான் நடந்து வருகின்றன.

ஆனால் சுயஉதவிக் குழு மகளிர் வங்கிகளில் பெற்ற கடன் தொகையை முறையாகத் தொழிலில் பயன்படுத்தி நல்ல இலாபம் ஈட்டி வருகின்றனர். தங்கள் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் பெற்றுள்ளனர்.

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டினம் ஒன்றியத்திலுள்ள இந்தியன் வங்கி மேலாளர் திரு. எஸ். பாலசுப்ரமணியம் சுயஉதவிக் குழு மகளிரைப் பாராட்டி நற்சான்று வழங்குகிறார். ''அயோத்தியா பட்டணம் பகுதியிலுள்ள 118 சுய உதவிக்குழுவினருக்குத் தொழில்முனைய ரூ.1.12 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் 100% கடனைத்திருப்பிச் செலுத்தி வருகின்றனர். சுய உதவிக் குழுவினருக்குத் கடன் கொடுத்தால் கூட்டாகத் தொழில் செய்கின்றனர். நல்ல இலாபம் ஈட்டுகின்றனர். தொழிலில் கண்ணும் கருத்துமாக உள்ளனர். கடனை வசூல் செய்வது எளிது. அவர்களை அடையாளம் காட்டவும் அவர்களுக்கு வழிகாட்டவும், பயிற்சி அளிக்கவும் தொண்டு நிறுவனங்களும், மகளிர் மேம்பாட்டு நிறுவன அலுவலக அதிகாரிகளும் உள்ளனர். இதேபோல் குழுவாக இல்லாமல் தனியாகப் பெண்களுக்குக் கொடுத்த கடன் சரியாக வசூல் ஆவது இல்லை'' என்று கூறுகிறார். '' ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு'' என்ற கருத்துத்தான் நமக்கு நினைவுக்கு வருகிறது.

வங்கி மேலாளர் மேலும் கூறுகையில் ''இந்தக் குழுவினர்கள் கடன் தொகையை முறையாகத் திருப்பிச் செலுத்துவதால் கிராம மகளிர் சௌபாக்கியா திட்டத்தின் கீழ் 50 பெண்களுக்கு தொலைக்காட்சி பெட்டி மற்றும் டி.வி.எஸ் இரண்டு சக்கர வாகனம் வாங்கத் தலா நபருக்கு ரூ.15,000– வீதம் ரூ.7.50 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது''என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

### பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பாக்கு மட்டையில் சாப்பாட்டு தட்டுகள்

பிளாஸ்டிக் பொருட்களை எரிக்கும் பொழுது சுகாதார கேடு ஏற்படுவதாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது. இதற்குத் தகுந்த மாற்றாகப் பாக்கு மட்டை சாப்பாட்டுத் தட்டுகளை எருமைப்பாளையம் பெருமாள் கோவில் தெரு மற்றும் மனங்காடு குழுவினர்கள் தயாரித்து வருகின்றனர். நட்சத்திர ஓட்டல்களுக்கு இத்தட்டுகள் அனுப்பப்பட்டு நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

இவ்விரு குழுக்களின் ஊக்குநர்கள் திருமதி. பூமலர், திருமதி. குமுதா மற்றும் உறுப்பினர்கள் ஏழு நாட்கள் தொழில் முனைவோர் பயிற்சியும் பாக்கு மட்டையில் தட்டு செய்யும் பயிற்சியையும் பெற்றுள்ளனர். வாழ்க்கையிலும், தொழில் முனைவதிலும் இவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாகவும் நல்ல இலட்சியம் கொண்டிருப்பதாகவும் கூறுகின்றனர். ''படிப்பு இல்லை கையொப்பம் இடத் தெரியாத எங்களுக்கு வெளி அனுபவமும், தொழில் விவரங்களும் அறிந்து கொண்டோம். கந்து வட்டிக்குப் பணம் வாங்கிய எங்களுக்கு குறைந்த வட்டியில் தொழில் கடன் கிடைத்துள்ளது'' என்று மகிழ்ச்சியுடன் இந்தக் குழுவினர் கூறுகின்றனர்.

### பல்பொருள் அங்காடி

அயோத்தியா பட்டினத்தில் மகளிர் பல்பொருள் அங்காடி, காரியாபட்டி பஞ்சாயத்து ஒன்றியத்தின் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. ரூ.1.50 இலட்சம் அங்காடி நடத்த வங்கிக் கடன் பெறப்பட்டுள்ளது.



மலையன் நகர் குழு உறுப்பினர் திருமதி. ராதிகா விற்பனையில் ஈடுப்பட்டுள்ளார். வீட்டுக்குத் தேவையான மளிகைச் சாமான்கள் விற்கப்படுகிறது. குழு உறுப்பினர்களுக்கு ரூ.500 வரையிலான பொருட்கள் கடனாக வழங்கப்படுகிறது. வீட்டில் பொருட்களைக் கொண்டுபோய்க் கொடுப்பதற்கான திட்டமும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

### டிராக்டர் உரிமையாளர்கள் - சுய உதவிக் குழு மகளிர்

எந்த நாட்டில் பெண்கள் மதிக்கப்படுகிறார்களோ அந்த நாடுதான் வளம் பெறும். இந்தக் காட்சிகள் இன்றைக்குத் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு பெண் நினைத்தால் எதையும் சாதிப்பாள். அதை இன்றைக்கு நடைமுறையில் பார்க்கிறோம். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பது வழக்கம். இன்றைக்கு பெண்களின் வெற்றிக்குப் பெண்களே பக்கத் துணை. ஆண்களும் பின் நின்று வெற்றிக்குத் துணை செய்கின்றனர். இந்தக் காட்சிகள் சுயஉதவிக் குழுக்களின் மூலம் தமிழ்நாட்டில் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

சேலம் மாவட்டம், அயோத்தியா பட்டினம் ஊராட்சி ஒன்றியம் பெருமானுர் என்ற ஊரில் சுய உதவிக் குழுவில் 20 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழையினும் ஏழைப் பெண்கள். குழுவினர் வாரம்தோறும் கூடித் தங்கள் முன்னேற்றம் பற்றியும், சமூகத் தொண்டு குறித்தும் கலந்து பேசுகின்றனர்.

கூலி வேலை செய்து வருகின்ற ஏழைப் பெண்கள் தான் இவர்கள். வேளாண்மை சார்ந்த தொழிலைச் செய்வோம் எனத் திட்டமிட்டு டிராக்டர் வாங்கியுள்ளனர். ரூ.3.00 இலட்சம் இந்தியன் வங்கியில் கடனாகப் பெற்றுள்ளனர். சுய சேமிப்பிலிருந்து ரூபாய் 40,000 செலுத்தி ரூ.3,40,000 செலவில் டிராக்டர் மற்றும் டிரெய்லர் வாங்கி இருக்கின்றனர். இந்த சுய உதவிக்குழு மகளிர் தாங்களே முதலாளி தாங்களே தொழிலாளி.

டிராக்டரை வாடகைக்கு விடுகின்றனர். விவசாய நிலத்திற்கு மண் அடிக்க இவர்களே இவற்றில் கூலித் தொழிலாளியாகப் பணியாற்றி மண்வாரிப் போடுகின்றனர். நாளொன்றுக்கு ஒருவருக்கு ரூ.50 வீதம் சம்பளம் பெறுகின்றனர். இதுபோக டிராக்டர் வருமானத்தின் இலாபம் தனி.

வங்கிக் கடன் தவணை மாதம் ரூ.5000 மட்டுமே செலுத்த வேண்டும். ஆனால் இந்தக் குழுவினர் மாதம் ரூ.10,000 முதல் ரூ.13,000 – வரை கடனைத் திருப்பிச் செலுத்தி வருகின்றனர்.

குழு ஊக்குநர் திருமதி. லதா, பிரதிநிதி திருமதி. செல்வி ஆகியோர் டிராக்டர் வரவு செலவு கணக்கு விவரங்களைத் துல்லியமாகப் பராமரித்து வருகின்றனர். குழுவின் சுய சேமிப்பு இதுவரை ரூ.80,300. வங்கியில் திருப்பிச் செலுத்திய கடன் தொகை ரூ.1.30 இலட்சம்.

"எங்களிடம் சொத்து எதுவும் இல்லை. கந்து வட்டிக்கு வாங்கிய எங்களுக்கு இந்தக் குழு இவ்வளவு பெரிய கடன் தொகையைப் பெற்றுத் தந்துள்ளது. எந்த நேரமும் கையில் கொஞ்சம் தொகை இருக்கிறது. அவசரத் தேவைகளுக்கு யாரையும் நாட வேண்டியதில்லை. தன்னம்பிக்கையே தனக்குதவி. பிறர்கையை எதிர்பார்ப்பதில்லை. குழு உறுப்பினர்கள் பலரும் டிராக்டர் மட்டுமல்லாமல் பெட்டிக்கடை, பூச்செடி வளர்த்தல், டெய்லரிங், கறவைமாடு வளர்த்தல் முதலான தொழில்களைச் செய்து வருகிறோம். பொது சேவைகளிலும் ஈடுபட்டு வருகிறோம். நாங்கள் விழிப்புணர்வு பெற்றது மட்டுமல்லாமல், மற்ற பெண்கள் விழிப்புணர்வு பெறவும் பாடுபட்டு வருகிறோம்''. என்று குழு ஊக்குநர் திருமதி லதா தெரிவிக்கிறார்.

### சுய உதவிக்குழு - அரிசி வியாபாரம்


அயோத்தியா பட்டணம் – சாவடிக்காடு உதவிக்குழு 20 உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. சுழல் நிதியாக ரூ.25,000 தொழில் கடனாக ரூ.2 இலட்சம் பெற்று அரிசி வியாபாரத்தில் இந்தக் குழு ஈடுபட்டுள்ளது. கடன் தொகையில் ரூ.52,500 திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. குழுவின் சுய சேமிப்பு ரூ.1,12,075 ஆகும். இதுவரை ரூ,5,46,630 அரிசி வியாபாரம் செய்து ரூ.36,000 நிகர இலாபம் பெற்றுள்ளனர்.

இக்குழுவின் ஊக்குநர் திருமதி. ஆர். வாசுகிராணி, பிரதிநிதி திருமதி. விஜயலெட்சுமி – இக்குழுவை அமைத்து சேமிக்கப் பழகிக் கொண்டோம். தொழில் கற்றுக் கொண்டதோடு, வெளி அனுபவம் பெற்றுள்ளோம். வருமானம் வருகிறது. குழுவில் சேர்ந்து எல்லோரும் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டோம். பொது சேவை செய்கிறோம். அம்மா அப்பா இல்லாத குழந்தைகளுக்கு உதவி செய்கிறோம். கிராமசபைக் கூட்டத்தில் கலந்து கொள்கிறோம். சமூகச் சேவை செய்கிறோம். மாமியார் மருமகள் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தோம். பிரிந்த கணவன் மனைவியை சேர்த்து வாழ வைத்தோம் – எனப் பெருமையுடன் தங்கள் சாதனைகளையும் முன்னேற்றத்தைப் பற்றியும் குழுவினர் தெரிவித்தனர்.

"ஆணுக்குப் பெண் நிகரெனக் கொள்வதால், அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்'' என்ற பாரதி பாட்டுக்கு கிராம மகளிர் குழு மகளிரே எடுத்துக்காட்டு.

– தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்





# பொன்விழி

## புதிய தமிழ் மென்பொருள்

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.6.2002 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் இணையப் பல்கலைக்கழக இணையத் தளத்தில், இணையப் பாடத் திட்டம் மற்றும் மின் நூலகத்தை (Digital Library) தொடங்கி வைத்து, 'பொன்விழி' தமிழ் OCR என்று (Tamil Optical Character Recognizer) புதிய தமிழ் மென்பொருளை வெளியிட்டார். இந்த தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையத்தள முகவரி www.tamilvu.org ஆகும்.

### மின் நூலகம்

உலகின் பல பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள், தமிழில் ஈடுபாடு கொண்டவர்கள் ஆகியோர் தமிழ் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் தமிழ் மொழியைக் கற்று கொள்ள கல்விச் சாதனங்களை உருவாக்கி இணையம் வழியாக அளிப்பதற்காக தமிழக அரசால் நிறுவப்பட்ட நிறுவனம் தமிழ் இணையப் பல்கலைக்கழகமாகும். இதில், சான்றிதழ், மேற்சான்றிதழ் கல்வி மற்றும் இளநிலை (தமிழியல்), முதுநிலை (தமிழியல்), தமிழியல் ஆய்வு என்ற பல்வேறு நிலைகளில் பாடத்திட்டங்கள் வழங்க திட்டமிடப்பட்டு அதற்கான பாடத்திட்டத்தினையும், மின் நூலகத்தையும் (Digital Library) முதலமைச்சர் அவர்கள் 18.6.2002 அன்று தொடங்கி வைத்தார்.

இந்த மின் நூலகத்தில், நூல்கள், அகராதி, பிற பார்வைக் கூறுகள் என மூன்று பிரிவுகள் உள்ளன. நூல்கள் பிரிவில் சங்ககாலம் முதல் தற்காலம் வரையில் எழுதப்பட்டு, அரசுடைமையாக்கப்பட்ட நூல்கள் வரை உரை நூல்களுடன் தமிழிலும் ஆங்கில வரிவடிவிலும் உள்ளன. அகராதிப் பிரிவில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேரகராதி (Lexicon) ஆங்கில–தமிழ் அகராதி, பழனியப்பா நிறுவனத்தின் ஆங்கில–தமிழ் அகராதி, தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் மு.சண்முகம் பிள்ளை எழுதிய தமிழ் – தமிழ் அகராதி போன்றவை இடம் பெற்றுள்ளன. இதைப்போன்று பிற பார்வைக் கூறில் பண்பாட்டு நிகழ்ச்சிகள், சைவ, வைணவக் கோயில் காட்சிகள், 2 இலட்சம் கலைச் சொற்கள், பிற இணையதள இணைப்புகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

### புதிய தமிழ் மென்பொருள்

தமிழக அரசின் , தமிழ்மென்பொருள் மேம்பாட்டு நிதியுதவியுடன் முனைவர் வெ.கிருஷ்ண மூர்த்தி அவர்களால் உருவாக்கப்பட்ட 'பொன்விழி' என்ற வணிக ரீதியிலான முதல் தமிழ் OCR என்று (Tamil Optical Character Recognizer) மென்பொருளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.6.2002 அன்று வெளியிட்டார். இதனை மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இந்த தமிழ் OCR மென்பொருள் மூலம் தமிழ்ப்புத்தகங்களை

5

சில நொடிப் பொழுதில் கணிப்பொறிக்குள் பிழையின்றி உள்ளீடு செய்ய முடியும். அச்சிடப்பட்ட தமிழ்ப் பக்கங்களை ஒளிப்பேழை (Scanner) மூலம் கணிப்பொறிக்குள் செயல்படுத்தினால் விசைப்பலகை (Key Board) மூலம் உள்ளிட்ட தகவல் போலவே, உள்ளிட்ட தகவலை மாற்றிப் பதித்தல், பிழை திருத்துதல் போன்ற செயல்பாடுகளுக்கு இந்த மின்பொருளை உட்படுத்தலாம். தமிழ் நூல்கள் பிழையின்றி மின்வடிவாக்க உதவும் இந்தமென்பொருள் இந்திய மொழிகளிலேயே தமிழ் மொழியில்தான் முதன் முறையாக உருவமைக்கப்பட்டுள்ளது. தமிழ் மென்பொருள் மேம்பாட்டு நிதியுதவி மூலம் மேலும் 5 தமிழ் மென்பொருள்கள் தற்போது தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தால் உருவமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்மொழியை, இணையத்தில் மேம்படுத்துவதற்கான ஆய்வுப் பணிக்காக அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட 5 இலட்ச ரூபாய் நிதியிலிருந்து தமிழ்த்தள தேடுபொறி (Search Engine) உலாவி (Browser) ஆகியவை உருவமைக்கப்பட்டு வருகின்றன.

### முதலமைச்சர் அவர்கள் பாராட்டு

உலகம் முழுவதுமுள்ள தமிழ் பேசும் மக்களுக்காக தமிழ் இணையப் பல்கலைக்கழகம் செயல்படுத்த உள்ள தொடர்பு மைய (Study Centres) திட்டங்களையும், 'பொன்விழி' என்ற தமிழ் மென்பொருளை உருவமைத்த முனைவர் வெ.கிருஷ்ணமூர்த்தி அவர்களையும், மிகப் பெரிய இந்தப் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டு தெரிவித்தார். நான்காம் தமிழான அறிவியல் தமிழை வளர்க்க தமிழக அரசு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தரும் என தெரிவித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு.சுகவனேஷ்வர் தகவல் தொழில் நுட்பத்துறை செயலாளர் திரு.விவேக் ஹரிநாராயன், தமிழ் இணையப் பல்கலைக்கழக இயக்குநர் முனைவர் மு. பொன்னவைக்கோ, 'பொன்விழி' தமிழ் OCR மென்பொருளைஉருவமைத்த முனைவர் வெ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உடன் இருந்தனர்.

## பொதுவிநியோக திட்டத்தில் அரிசி பெற கூப்பன்கள்

தமிழ்நாட்டில் பொது விநியோகத்தின் கீழ் அரிசி பெற விருப்பம் தெரிவித்துள்ள 1,36,46,146 குடும்ப அட்டைகளுக்கு அரிசி கூப்பன் வழங்கும் திட்டத்தை அரசு 1.6.2002 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி அரிசி பெறவிருப்பம் தெரிவித்த குடும்ப அட்டைதாரர்களுக்கு 1.6.2002 மற்றும் 2.6.2002 ஆகிய தினங்களில் அரிசி கூப்பன்கள் இதற்கென இம்மாநிலத்தில் அமைக்கப் பட்டுள்ள 24,494 விநியோக மையங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டன. அரிசி கூப்பன்கள் அரிசி விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு ஜுன் மாதம் முதல் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

1. அரிசி கூப்பன் புத்தகம் அதற்கென அமைக்கப்பட்டுள்ள மையத்தில் ஜுன் மாதம் 1,2,8,9,15,16,22,23,29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை குடும்ப அட்டையினை காண்பித்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

2. மேற்படி மையங்களில் அரிசி கூப்பன்கள், குடும்ப அட்டையில் புகைப்படம் அச்சிடப்பட்டுள்ள குடும்ப தலைவரிடம் மட்டுமே ஒப்படைக்கப்படும் . இதர குடும்ப நபர்கள்/வெளி நபர்களிடம் கூப்பன்கள் வழங்கப்படமாட்டாது.

3. கூப்பன் புத்தகத்தினை அட்டையுடன் பத்திரமாகப் பாதுகாப்பது குடும்பத் தலைவரின் தலையாய கடமையாகும். எக்காரணத்தைக் கொண்டும் கூப்பன் புத்தகம் தொலைந்தாலோ அல்லது சேதம் அடைந்தாலோ மாற்று புத்தகம் கண்டிப்பாக வழங்கப்படமாட்டாது.

4. நியாய விலை கடைகளில் அரிசி பெற்று வரும் குடும்ப அட்டைதாரர்களுக்கு 1.7.2002 முதல் குடும்ப அட்டையுடன் அரிசி கூப்பன் புத்தகம் கொண்டு வந்தால் மட்டுமே அரிசி விநியோகம் செய்யப்படும். 1.7.2002 முதல் அரிசி பெற குடும்ப தலைவர் (குடும்ப அட்டையில் அச்சிடப்பட்டுள்ள புகைப்படத்தில் உள்ள நபர்) நேரில் அட்டை மற்றும் கூப்பனுடன் பொது விநியோக அங்காடிக்கு வந்து அரிசி பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் வழக்கம் போல் குடும்ப அட்டையின் அடிப்படையிலேயே தொடர்ந்து வழங்கப்படும். அரிசி வாங்குவதற்கு மட்டுமே கூப்பன்கள் தேவைப்படும்.

❑ ❑ ❑



## விண்கலம் செலுத்தும் போட்டியில் வென்று நாசா விண்வெளி நிறுவனத்திற்கு சென்று திரும்பிய சென்னை மாணவருக்கு முதல்வர் உதவி

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 17.6.2002 அன்று தலைமைச் செயலகத்தில், உலகளாவிய அளவில் விண்கலம் செலுத்தும் மாணவர் (Student Navigator) இந்தத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்று அமெரிக்காவின் நாசா விண்வெளி நிறுவனத்திற்கு சென்று திரும்பிய சென்னையைச் சேர்ந்த மாஸ்டர் அவினாஷ் சந்திரசேகர் என்ற மாணவருக்கு அவரது அறிவியல் திறமையைப் பாராட்டி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையையும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அறக்கட்டளையிலிருந்து ரூ.1.51 இலட்சத்தினையும் சேர்த்து மொத்தம் ரூ.2.51 இலட்சம் வழங்கினார்.

அமெரிக்காவில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் "NASA" (National Aeronautic Space Association) மற்றும் JPL (Jet Propulsion Labs) நிறுவனம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் "Red Rover Goes to Mars" என்ற திட்டத்தின் கீழ் "முன்னோடி மாணவர்களை" (Student Navigator) தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட உலகளாவியப் போட்டியில் 60 நாடுகளிலிருந்து 8 சிறுவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செவ்வாய் கிரகம் பற்றிய ஆராய்ச்சியை விளக்கும் இந்தப் போட்டியில் குழு விவாதம், நேர்முகத் தேர்வு மற்றும் தொலைபேசியில் கலந்துரையாடல் (Tele-Conference) ஆகியவற்றின் மூலம் தேர்வு செய்யப்பட்ட சென்னை, நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்த 13 வயதான 8ம் வகுப்பு மாணவன் மாஸ்டர் அவினாஷ் சந்திரசேகர் தேர்வு செய்யப்பட்டு அமெரிக்காவில் உள்ள விண்வெளி



ஆராய்ச்சி நிலையமான நாஸா நிறுவனத்தைப் பார்வையிட்டு தமிழ்நாட்டிற்கு திரும்பி உள்ளார்.

### முதலமைச்சர் அவர்களிடம் மனு :

இந்நிலையில் இவரது தாய் திருமதி அனுராதா சந்திரசேகர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு மனு அனுப்பி இருந்தார். அந்த மனுவில், தனது மகன் மாஸ்டர் அவினாஷ் (Student Navigator) போட்டியில் வெற்றி பெற்று அமெரிக்காவில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையமான NASA சென்று வந்ததையும், இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக இந்த போட்டிக்கு பயிற்சி எடுத்ததையும் குறிப்பிட்டு இருந்தார். தங்கள் மகனை ஊக்கப்படுத்தும் வகையில் மாநில அரசின் சார்பில் உரிய அங்கீகாரம் வழங்கவும், தகுந்த உதவி புரியுமாறும், தனது மனுவில் கூறியிருந்தார். மேலும் இந்தப் போட்டி தொடர்பாக அமெரிக்காவிலுள்ள நாசா நிறுவனத்திற்குச் சென்று தங்கி, திரும்பியதற்காகவும் இந்தப் போட்டிக்காக கணினியில் இணைய தளத்தைப் பயன்படுத்திய பயிற்சிக் கட்டணம், தொலைபேசி, தொலைநகல் (FAX) ஆகியவற்றை பயன்படுத்தியதற்கான கட்டணங்கள் பல்வேறு தொழில்நுட்ப மையங்களை பார்வையிட்டது அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகளுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கியது போன்றவற்றால் தங்கள் மகனுக்கு ரூ 2.5 இலட்சம் செலவிட்டதாகவும், தெரிவித்திருந்தார்.

### முதலமைச்சர் உத்தரவு

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாணவனின் குடும்பம் இந்த போட்டிக்காக இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக முயற்சி எடுத்தை அறிந்து அம்மாணவனை மேலும் ஊக்குவிக்கும் வகையில் அவனது அறிவியல் ஆர்வத்தைப் பாராட்டி " முதலமைச்சரின் பொது நிவாரண நிதி''யிலிருந்து ரூபாய் ஒரு இலட்சத்தினை வழங்க உத்தரவிட்டார்கள். மேலும், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அறக்கட்டளையிலிருந்து இந்த மாணவனுக்கு 1.51 இலட்சம் ரூபாயினை வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்திரவிட்டுள்ளார்.

இதன்படி, ``முதலமைச்சரின் பொது நிவாரண நிதி``யிலிருந்து அனுமதிக்கப்பட்ட ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையினையும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அறக்கட்டளையிலிருந்து அனுமதிக்கப்பட்ட 1.51 இலட்சம் ரூபாயினையும் சேர்த்து மொத்தம் ரூ.2.51 இலட்சத்தினை முதலமைச்சர் அவர்கள் மாஸ்டர் அவினாஷ் சந்திரசேகரிடம் வழங்கினார். அப்போது, அம்மாணவனின் அறிவியல் ஆர்வத்தையும், முயற்சியையும் பாராட்டி மிகவும் சிறப்பான எதிர்காலம் அமைய வாழ்த்தினார்கள். மேலும் தொடர்ந்து பல்வேறு அறிவியல் சாதனைகளைப் புரிந்து டாக்டர் அப்துல் கலாம் போன்று பெரிய விஞ்ஞானியாக உருவாக வேண்டும் என்று தனது மனமுவந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட அம்மாணவனின் குடும்பத்தினர் தங்களது நன்றியை உளப்பூர்வமாக தெரிவித்துக் கொண்டனர்.

• • •

### எம். ஆர். ஐ. ஸ்கேன் கட்டணம் குறைப்பு

தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகம் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ.ஸ்கேன் கருவியை இயக்கி வருகிறது. ஏழை எளிய மக்களும் பயன்படுத்தி கொள்ளும் வகையில் இதுவரை வசூலிக்கப்பட்டு வந்த கட்டணத்திலிருந்து ரூ.1000 குறைத்து ஏற்கெனவே வசூலிக்கப்பட்டு வந்த ரூ.4,500க்கு பதிலாக ரூ.3,500க்கு Brain, Cervical Lumbar, Abdomen, Thoracic, M.R.Angio, Pelvis, M R C P & any large part போன்ற பாகங்களுக்கும், மற்றும் ரூ.3,500க்கு பதிலாக ரூ.2,500க்கு Knee. Hipjoint. Shoulder, Wrist, Elbow, MR Mylogram and Small area including Limited sequence of spine போன்ற பாகங்களுக்கும் மாற்றி அமைத்துள்ளது. கூடுதலாக ரூ.1,500 காண்ட் ராஸ்ட்க்கு வசூலிக்கப்படும்.

இந்தக் கட்டணம் தனியார் மருத்துவமனைகளில் வசூலிக்கும் கட்டணத்தைவிட மிகவும் குறைவானது.

பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு மேற்கூறிய மருத்துவ மனைகளின் முதல்வர்களை அணுகவும்.



# கலை - பண்பாட்டுத்துறை வளர்ச்சிக்கு அரசு தனிக்கவனம் செலுத்துகிறது

*– தஞ்சாவூரில்*
*தென்னக பன்னாட்டு மையத்தின்*
*புதிய பண்பாட்டு வளாகத்தைத்*
*திறந்துவைத்து,*
*அகில இந்திய கைவினைப் பொருட்கள்*
*கண்காட்சி மற்றும்*
*தேசிய நாட்டுப்புற நாட்டியத் திருவிழாவை*
*24-6-2002 அன்று தொடங்கிவைத்து*
*முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.*

"தஞ்சாவூரில் தென்னக பண்பாட்டு மையத்தின் புதிய பண்பாட்டு வளாகத்தை துவங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இது தென்னக மாநிலங்களாகிய தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் பாண்டிச்சேரி, அந்தமான் நிகோபர் தீவுகள் மற்றும் லட்சத்தீவு யூனியன் பிரதேசங்கள் ஆகிய மக்களின் கலாபூர்வமான விருப்பங்களுக்கு பயன்படுகிறது.

மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட அகில இந்திய கைவினைப் பொருட்கள் கண்காட்சி மற்றும் நாட்டுப்புற நடனத் திருவிழா ஆகியவற்றின் தொடக்க விழாவிலும் என்னை இணைத்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக அரசு, என்னுடைய ஆட்சிக் காலத்தில், எப்போதும் கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. முன்பு நான் தமிழக முதலமைச்சராக இருந்த போதுதான், 1991ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், கலைகளில் கல்வி அளிக்கும் அனைத்து கல்வி நிலையங்களையும் இதர அமைப்புகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவரும் நோக்கத்துடன் கலை மற்றும் பண்பாட்டு இயக்குநரகம் என்ற தனியான துறை உருவாக்கப்பட்டது. இந்த கலை மற்றும் பண்பாட்டுத்துறை தற்போது முழுமையான இயக்குநரகமாக வளர்ந்திருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

உண்மையில் என்னுடைய முந்தைய முதலமைச்சர் பதவிக் காலத்தில்தான், 1992ம் ஆண்டு, அப்போது தஞ்சாவூரில் ஒரு வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த தென்னக பண்பாட்டு மையத்திற்கு 25 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, கேரளா ஆகிய நான்கு தென் மாநிலங்களின் கலைவடிவங்களை சித்தரிக்கும் நான்கு நுழைவாயில்களைக் கொண்ட புதிய பண்பாட்டு வளாகம், இந்த மையத்திற்கு 25 ஏக்கர் நிலத்தை ஒதுக்கிய எனது நடவடிக்கையை முழுமையாக நியாயப்படுத்தி உள்ளது. ஒரு கலைக்கூடம், ஒரு அரங்கம், ஒரு கண்காட்சி அரங்கம், ஒரு நூலகம், ஒரு நிர்வாக வளாகம், ஒரு மத்திய திறந்தவெளி அரங்கம் ஆகியவை அடங்கிய புதிய பண்பாட்டு வளாகம் தென்னிந்திய கலை வடிவங்களை வளர்த்தெடுத்து, பரவலாக்கிடுவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு மேலும் பாராட்டுகளையும், பெருமைகளையும் சேர்க்கும் என்று நம்புகிறேன்.

எந்த இனத்தின் பண்பாடு, அவர்களுடைய பழக்க வழக்கங்கள் மற்றும் பாரம்பரியங்கள், வாழ்க்கைத்தரம், நம்பிக்கைகள் மற்றும் குறிப்பாக கலை வடிவங்கள் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாகும். இந்தியப் பண்பாடு உலகம் முழுவதும் அதன் செழுமைக்குப் பாராட்டப்படுகிறது. குறிப்பாக, தென்னிந்திய பண்பாடு இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதிலும் மிகவும் முன்னேறிய, தொன்மையான பண்பாடு என்று போற்றப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

இப்பகுதியிலுள்ள தமிழ்ப் பண்பாடு காலத்தால் மிகவும் தொன்மையானது, உள்ளடக்கத்தில் மிகவும் வளமானது என்று தேசிய மற்றும் சர்வதேச அறிஞர்கள் கூறியுள்ளார்கள் என்பதை எண்ணும் போது பெருமை அளிக்கிறது. வளமான தமிழ்ச்



சமுதாயத்தின் பகுதியாக, தமிழ்ப் பண்பாடு தொன்மையானது மட்டுமின்றி, பல தனிப்பெருமையுள்ள அம்சங்களின் வடிவமும் ஆகும் என்ற உண்மையால் ஒருவர் பேருவகை பெறுகிறார்.

பண்டைக்காலத் தமிழர்கள் உலகம் முழுவதும் வாழும் மக்களைத் தங்கள் சொந்த மக்களாகக் கருதினர் என்பதை தொன்மையான புறநானூறு கவிதை வரிகளான "யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பது எடுத்துக் காட்டுகிறது. இந்த உலகளாவிய, மனிதநேயமிக்க கண்ணோட்டம் இன்னமும் தமிழ்நாட்டில் சீர்குலையாமல் இருக்கிறது. தெய்வீகம் மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியத்திற்கு புகழ்பெற்ற பழமையான தமிழ் நகரமான தஞ்சாவூரில் அமைந்துள்ள தென்னகப் பண்பாட்டு மையம், நமது மாபெரும் நாட்டின் பண்பாட்டு பாரம்பரியப் பெருமையில் இழையோடியுள்ள உன்னதமான கோட்பாடான "பன்முகத்தில் ஒற்றுமை'' என்ற உணர்விற்கு நீடித்து நிலைத்த சாட்சியாக விளங்கும் என்று நான் நம்புகிறேன்.

மனித நேயத்தின், நல்வாழ்விற்காக கலையைப் பயன்படுத்துபவர்கள் மட்டும்தான் உண்மையிலேயே மாபெரும் கலாவிற்பன்னர்களாகத் திகழ முடியும். இங்கே நான் எங்களுடைய மரியாதைக்குரிய தலைவர்களான பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் ஆற்றிய குறிப்பிடத்தக்க பாங்கினை நினைவு கூர்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் தமிழ்நாட்டு மக்களிடையே பகுத்தறிவு சிந்தனையைப் பரப்ப நாடகம் போன்ற பாரம்பரிய கலைவடிவங்களையும், திரைப்படம் போன்ற சமகாலக் கலைவடிவங்களையும் பயன்படுத்தியது மட்டுமன்றி, தமிழ்நாட்டில் புதிய திசைவழியை உருவாக்கிய சமூக சீர்திருத்தங்களையும், சமுதாய மாறுதலில் பெருமைமிக்க முன்முயற்சிகளையும் மேற்கொண்டனர். **1986**–ஆம் ஆண்டு தஞ்சையில் தென்னக பண்பாட்டு மையம் போன்று பண்பாட்டு மையங்கள் நாட்டில் ஏழு இடங்களில் ஆரம்பிக்கப்பட்டன.



கலை மற்றும் பண்பாட்டைப் பாதுகாத்தல், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குதல், மேம்படுத்துதல், பரவலாக்குதல், வளர்ச்சியடைந்த கலைகள் தவிர நாட்டுப்புற மற்றும் பழங்குடியின கலைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதில் இளைஞர்களை ஈடுபடுத்தி ஊக்குவித்தல் போன்ற இந்த பண்பாட்டு மையங்களின் பிரதான குறிக்கோள்களை தஞ்சாவூரிலுள்ள தென்னக பண்பாட்டு மையம் சிறப்பான முறையில் அடைந்துள்ளது. தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்த அனைவருக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழக அரசு 15 அம்சத் திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்து துறைகளின் நடவடிக்கைகளிலும் சகல துறைகளிலும் வளர்ச்சிக்கான திட்டம் இது என்பதைக் கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன். இந்த 15 அம்சத் திட்டத்தில் 12வது அம்சம் கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சி பற்றியதாகும்.

இது தொடர்பாக கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு தமிழக அரசு எடுத்துள்ள சில முன்முயற்சிகளை எடுத்துக்கூற விரும்புகிறேன். மாநிலத்தில் நலிந்த சூழ்நிலைகளில் உள்ள 1640 கலைஞர்களுக்கு நிதியுதவி அளிக்க எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைக் கூறுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆண்டு ரூ.30 இலட்சம் செலவில், இத்தகைய நலிந்த நிலையிலுள்ள கலைஞர்கள் 500 பேருக்கு மாதம் ரூ.500 வீதம் நிதி உதவி வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள கலைஞர்களுக்கு அடுத்த ஆண்டு வழங்கப்படும். கலைத்திறனுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், திறமையான கலைஞர்கள் நடத்தும் நாட்டுப்புறக் கலைகள், வீதி நாடகங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் ஆகியவை அனைத்து மாவட்டங்களிலும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ரூ.2 இலட்சமும், சென்னைக்கு ரூ.10 இலட்சமும் வழங்கப்படுகிறது. இதுதவிர ரூ.3.50 இலட்சம் செலவில், ரூ.2,500 என்ற மதிப்பில் 5 புதிய விருதுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 கலை வல்லுநர்களுக்கு வழங்கப்படும். இவை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் செயல்படும் 'மாவட்ட கலை அமைப்பு' மூலம் விநியோகிக்கப்படும். தவிர, பல்வேறு நுண்கலைகளில் தேர்ச்சி பெற்ற கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

தமிழக அரசும், கேரள அரசும் தென்னக பண்பாட்டு மையத்திற்கு தங்களது மானியமாக ரூ.1.50 கோடி வழங்கியிருக்கின்றன. தமிழ்நாடு அத்துடன் நிற்காமல், மேற்கொண்டு ஒரு நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழ்நாடு இந்த மையத்திற்கு நிலமும், புதிய பண்பாட்டு வளாகத்தைக் கட்டி முடிக்க ரூ.2 கோடியும் வழங்கியுள்ளது.

'கலையினால் உலக ஒற்றுமை காண்போம்' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. இந்த பழமொழிக்கேற்ப தென்னக பண்பாட்டு மையம் அதன் செயல்பாடுகளை மிக நல்ல முறையில் செய்து வருகிறது. கடந்த ஆண்டு, தமிழ்நாடு கலை மற்றும் பண்பாட்டுத் துறையுடன் இணைந்து, இந்த மையம் ஆண்டு முழுவதும் பல கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்தியது. இந்த மையம் இதர மண்டலங்களின் கலாச்சாரக் குழுக்களுடன் சேர்ந்து, இதர மாநிலங்களின் கலை வடிவங்களையும் சித்தரிக்கும் கலாச்சார நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது.


இந்த மையம் மொரீசியஸ், மேற்கு ஜெர்மனி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ரஷியா போன்ற நாடுகளுக்கு கலாச்சாரக் குழுக்களை அனுப்பி அதன் மூலம் நமது வளமான கலாச்சார பாரம்பரியங்களை வெளிநாடுகளிலும் பரப்பி வருகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த அற்புதமான நிகழ்ச்சியில் கலந்து கொள்ள என்னை அழைத்தமைக்காக தென்னக பண்பாட்டு மையத்தின் தலைவரான ஆளுநர் அவர்களுக்கும், இந்த நிகழ்ச்சி அமைப்பாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கர்நாடகா மாநில பண்பாட்டுத் துறை அமைச்சர் இன்று இங்கு நம்முடன் இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.



இந்தத் தருணத்தில் தென்னக பண்பாட்டு மையத்திற்கும், இன்று இங்கே கூடியிருக்கும் அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும், கலைஞர்களுக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய எதிர்கால முயற்சிகளில் வெற்றி அடைவார்கள் என்ற நம்பிக்கையை தெரிவிக்கிறேன்''.

– இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்கள்.



# காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் - விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு உதவி




இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் பருவம் தவறி பெய்த பெருமழையின் காரணமாக காவிரி டெல்டா பகுதி மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் ஏற்பட்ட பயிர் சேதத்தை ஈடுசெய்யும் பொருட்டு தமிழக அரசு 42 கோடி ரூபாய் அளவில் விவசாய பெருங்குடி மக்களுக்கு நிவாரண உதவி வழங்கியது. ஏற்கெனவே தமிழகம் முழுவதும் விவசாயிகள் வாங்கியிருந்த கடனுக்கு வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றை தள்ளுபடி செய்தும் உத்தரவிட்டிருந்தது. இப்படி விவசாயிகளுக்கு இன்னல் வருகின்ற போதெல்லாம் தமிழக அரசு ஓடோடி வந்து அவர்களது துயர் களைய எல்லா முயற்சியும் எடுத்து வருகிறது.

இந்த ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் தேதி மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருந்து காவிரி நதியில் நீர் திறந்துவிட இயலாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை தொடர்ந்து காவிரி டெல்டா பகுதி மாவட்டங்களில் குறுவை சாகுபடி முழுமையாக நடைபெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் 9.63 இலட்சம் நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கு பெருமளவில் வேலைவாய்ப்பு இல்லாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு காவிரி டெல்டா பகுதியில் வாழும் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு மாற்று வேலைவாய்ப்பு வழங்கிடவும், குறுவை சாகுபடி குறைந்து போனதால் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தஞ்சாவூரில் 24-6-2002 அன்று ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். அந்த கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர், நிதியமைச்சர், உள்ளாட்சித்துறை அமைச்சர், வேளாண்மைத்துறை அமைச்சர், வருவாய்த்துறை அமைச்சர் மற்றும் உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் ஆகியோருடன் தலைமைச் செயலாளர், நிதி, உணவு மற்றும் கூட்டுறவு, வேளாண்மை, பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை ஆகிய துறைகளின் செயலாளர்களும், தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், பிற அரசு அலுவலர்களும் கலந்து கொண்டார்கள். இக்கூட்டம் பிற்பகல் 2.00 மணி முதல் 3.30 மணி வரை நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு கருத்துக்கள் விரிவாக விவாதிக்கப்பட்டு அதன் பின்னர் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கீழ்க்கண்ட முடிவுகளை அறிவித்துள்ளார்.





அண்மைக் காலங்களில் குறுவைச் சாகுபடியின் கீழ் உள்ள (Kuruvai cultivation) நிலப்பரப்பு சராசரியாக 1,17,000 எக்டேர் ஆகும். அவற்றில் பெரும்பான்மையானவை தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ளன. இது தவிர, மேலும் ஐந்து மாவட்டங்களில் குறுவைச் சாகுபடி சிறிய அளவில் நடைபெறுகிறது. ஆகவே, பாதிப்பிற்குள்ளாகி உள்ள தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு உடனடி உதவிகள் செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

1. மத்திய மற்றும் மாநில அரசுகளால் நிதி உதவி செய்யப்படும் ஊரகப் பணிகள் சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தை மிகப் பெரிய அளவில் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் செயல்படுத்த 31.18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். கால்வாய் மற்றும் நீர்பாசனத்திற்கான ஆதாரங்களை தூர் எடுத்தல், கதிரடிக்கும் களங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்காக சிறிய மையங்கள் கட்டுதல் ஆகியவை இந்தத் திட்டத்தில் அடங்கும்.

2. இந்தத் திட்டத்தின் கீழ் வேலைக்கு அமர்த்தப்படும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு நாளைக்கு மொத்தம் 54 ரூபாய் என்ற வகையில் ஐந்து கிலோ அரிசியாகவும், மீதம் பணமாகவும் கொடுக்கப்படும். இந்த திட்டத்தின் மூலம் 34.63 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்படும்.

3. ஊரக இணைப்புச் சாலைகள் திட்டத்தின் கீழ், மூன்று மாவட்டங்களிலும் 24 கோடி ரூபாய் செலவில் நல்ல சாலைகள் அமைக்கப்படும்.

4. இந்த மூன்று மாவட்டங்களில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பி, சி மற்றும் டி கால்வாய்கள் மற்றும் நீர் ஆதாரங்களை தூர்வாருதல் திட்டத்தை உடலுழைப்பு (Manual Labour) மூலம் பொதுப்பணித்துறையால் தீவிரமாக மேற்கொள்ளப்படும்.

5. இந்த மூன்று மாவட்டங்களிலும் பண்ணைக் குட்டைகள் (Farm Ponds) அமைப்பதற்கான திட்டம் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இந்த திட்டத்தின் கீழ் விவசாயிகளின் நிலத்தில் மழை நீரை சேமிப்பதற்காக ஒரு சிறிய குட்டையை நிறுவி அது மீன் வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படும்.

6. வாய்க்கால்களிலும் நீர் ஆதாரங்களிலும் மண்டிக் கிடக்கும் நெய்வேலி காட்டா மணக்கை (IPOMEA) அகற்றுவதற்காக 2 கோடி ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

7. கடந்த வருடம் இந்த மூன்று மாவட்டங்களிலும் தமிழ்நாடு மின்சார வாரியம் 3,225 விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கியது. இந்த திட்டத்தை மேலும் துரிதப்படுத்தும் வகையில் இந்த ஆண்டு மூன்று மாவட்டங்களிலும் 7000 மின் இணைப்புகள் கொடுக்கப்படும். இந்த 7000 மின் இணைப்புகளில் 1000 மின் இணைப்புகள் இலவசமாக கொடுக்கப்படும். தமிழ்நாடு மின்சார வாரியம் இதை உடனடியாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில் மின்சார வாரியம் செலவிடும் தொகை 35 கோடி ரூபாய் ஆகும்.

8. தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மிகப் பெரிய அளவில் மறு சீரமைப்புத் திட்டம் (Massive Reconstruction Programme) மேற்கொள்ளப்படும். இதன்படி பழுதடைந்த 25 இதர மாவட்ட சாலைகள் (Other District Roads) மற்றும் பழுதடைந்த 80 பாலங்கள் 59 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டு அவற்றின் நிலை உயர்த்தப்படும். இந்த திட்டத்தின் கீழ் உடனடியாக பணிகள் ஆரம்பிக்கப்படும். இதன் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் சாலைப் போக்குவரத்து நெரிசல் குறையும். அதன் காரணமாக இந்த மாவட்டங்களின் விவசாயிகளுக்கு போக்குவரத்து வசதி மேம்பாடு அடையும்.

9. காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கும், விவசாய தொழிலாளர்களுக்கும் உடனடியாக வேலைவாய்ப்பு வழங்கவும், அவர்களுடைய துயரைத் துடைப்பதற்காக நிவாரணம் வழங்கவும் தமிழக அரசு மொத்தம் 164.18 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை உடனடியாக அமல்படுத்த உள்ளது. இத்திட்டங்கள் 1-7-2002 முதல் 30-9-2002 வரை செயல்படுத்தப்படும். தேவைக்கேற்ப அதன் பின்னரும் நீட்டிக்கப்படும்.

10. துறைவாரியான சுருக்கம் பின்வருமாறு :

| வ. எண். | துறை | அமல்படுத்தும் திட்டம் | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | ஊரக வளர்ச்சித்துறை | சம்பூர்ண கிராமிய வேலைவாய்ப்புத் திட்டம் | 31.18 |
| 2. | ஊரக வளர்ச்சித்துறை | பிரதம மந்திரி கிராம இணைப்புச் சாலை திட்டம் | 24.00 |
| 3. | பொதுப்பணித்துறை | பி,சி மற்றும் டி வகை பாசன வாய்க்கால்களில் தூர் வாருதல் | 10.00 |
| 4. | வேளாண்மை பொறியியல் துறை | பண்ணைக் குட்டைகள் அமைத்தல் | 3.00 |
| 5. | வேளாண்மைத்துறை | பாசன வாய்க்கால்களில் காட்டாமணக்குகளை அழித்தல் | 2.00 |
| 6. | மின் வாரியம் | விவசாயப் பம்ப் செட்டுகளுக்கு கூடுதல் மின்இணைப்பு வழங்குதல் | 35.00 |
| 7. | **நெடுஞ்சாலைத்துறை** | **பாலங்கள் அமைத்தல்** | **59.00** |
| | **மொத்தம்** | | **164.18** |

11. மேலும் இந்த மாவட்டங்களில் வாழும் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர் வாங்கியுள்ள கூட்டுறவு கடன்களை ஒரே தவணையில் தீர்க்கும் திட்டத்தின் கீழ் திரும்ப செலுத்துவதற்கு கடைசி நாள் 30–6–2002 என்று இருந்த காலக்கெடு 30–9–2002 என்று நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 31–3–2003 வரை காலக்கெடு நீட்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதால் இதற்கு அனுமதி கோரி நபார்டு நிறுவனம் அணுகப்படும்.

12. குறுகிய கால கடன்களை மத்திய கால கடன்களாக மாற்ற வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளதால், இதற்கும் அனுமதி கோரி நபார்டு (NABARD) நிறுவனம் அணுகப்படும்.

13. **அதேபோல மேலும் தமிழ்நாடு அரசின் பங்காக ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்தப்பட வேண்டிய பிரிமியத் தொகை 6.61 கோடி ரூபாய் உடனடியாக செலுத்தப்படும். இதனால் இந்த மூன்று மாவட்டங்களில் வாழும் விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 13.82 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை பெறுவார்கள். இதுவும் இன்னலுற்று இருக்கின்ற இந்த** மாவட்ட விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும்.



14. இந்த திட்டத்தின்கீழ், தினந்தோறும் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கேனும் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

15. மாநில அளவில் இந்த திட்டத்தை மேற்பார்வையிட பொதுப்பணித்துறை அமைச்சர் தலைமையில் உயர்நிலைக்குழு ஒன்று அமைக்கப்படும். இந்த குழு அவ்வப்போது இந்த திட்டத்தின் செயலாக்கத்தை ஆய்வு செய்யும்.

16. **இந்த திட்டத்தின் செயல்பாட்டை இந்த மூன்று மாவட்டங்களின் மேற்பார்வை அலுவலர்கள் (Monitoring Officers) முதல் மாதத்தில் வாரம் ஒரு முறையும் பின்னர் இருவாரங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்து நடைமுறைப்படுத்துவார்கள்.**

17. கூட்டுறவு கடன் மீதான ஜப்தி நடவடிக்கை இந்த மூன்று மாவட்டங்களிலும் 24–6–2002 முதல் உடனடியாக நிறுத்தப்படும்.

18. இந்த திட்டத்தின் கீழ் வேலைசெய்யும் விவசாயத் தொழிலாளர்களுக்கு தேவைப்படுமாயின் 50 சதவிகித மானியத்தில் மண்வெட்டி, கடப்பாரை போன்ற வேளாண்மைக் கருவிகள் பெற்றுத் தரப்படும். இந்த மூன்று மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் இவற்றை விவசாயத் தொழிலாளர்களுக்குப் பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

★ ★ ★





# டாக்டர் அப்துல் கலாம் – முதலமைச்சர் சந்திப்பு

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் 17.6.2002 அன்று புதுடெல்லி சென்று இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளதால், அதற்கு முன்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 16.6.2002 அன்று சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் அவரைச் சந்தித்து பொன்னாடை போர்த்தி, மலர்க்கொத்து வழங்கி, தமிழக மக்கள் சார்பாக அனைவருடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கு டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்கள் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து ஒவ்வொரு தமிழரும் அது தமக்குக் கிடைத்த ஒருபெருமை, கௌரவம் என்று கருதுகிறார்கள் என்பதையும், குறிப்பாக மாணவர் சமுதாயம் இதனால் பேருவகை அடைந்துள்ளார்கள் என்பதையும் முதலமைச்சர் அவர்கள் டாக்டர் அப்துல் கலாம் அவர்களிடம் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் “இந்தியா 2020 – புத்தாயிரம் ஆண்டுகளுக்கான ஒரு தொலைநோக்கு'' என்ற தலைப்பிட்ட தாமே எழுதிய ஒரு புத்தகத்தை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு வழங்கினார். அந்தப் புத்தகத்தில் அவர் கைப்பட –

“மாண்புமிகு தமிழக முதல்வர் Dr. ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு நல்வாழ்த்துக்கள்

அன்புடன்

**ஆ. ப. ஜெ. அப்துல் கலாம்**

16.6.2002''

– என்று எழுதி வாழ்த்துக்களை தெரிவித்து இருந்தார்.

தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதல் மாநிலம் ஆக்குவேன் என்று முதலமைச்சர் அவர்கள் கூறி வருவதைப் பாராட்டி, அந்த இலட்சியத்தை அடைய டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். குறிப்பாக, தமிழகத்தில் உள்ள ஊரகப் பகுதிகளை நகரப் பகுதிகளுக்கு நிகராக முன்னேற்றம் அடையச் செய்ய அண்ணா பல்கலைக்கழகம் வாயிலாக தாம் வகுத்து வைத்துள்ள சில திட்டங்களைப் பற்றி முதலமைச்சர் அவர்களிடம் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் விளக்கிக் கூறினார். தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காக அவர் வகுத்துக் கொடுத்துள்ள அரிய திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுக்க இந்த அரசு பாடுபடும் என்று முதலமைச்சர் அவர்கள் உறுதி கூறினார்.

இந்த சந்திப்பின் போது, ஒட்டுமொத்த இந்தியா முன்னேற்றம் அடைந்து, உலகிலேயே இந்திய நாடு முதலாவது வல்லரசு நாடாக வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருப்பத்தை அறிந்த டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் அது அடையக்கூடிய இலட்சியம் தான் என்று தெரிவித்து, அந்த இலட்சியத்தை அடையக்கூடிய வழிமுறைகள் என்னென்ன என்பதை விவரித்தார். ★

# இலங்கை பிரதமர் – முதலமைச்சர் சந்திப்பு



மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.6.2002 அன்று சென்னை ஆளுநர் மாளிகையில், சென்னைக்கு வருகை தந்த மாண்புமிகு இலங்கை பிரதமர் திரு.ரனில் விக்ரம சிங்கே அவர்களை சந்தித்துப் பேசினார்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை பிரதமர் திரு ரனில் விக்ரம சிங்கே அவர்கள், மாண்புமிகு இந்திய பிரதமர் மற்றும் அரசியல் கட்சி தலைவர்களை சந்தித்துள்ளார். இதனைத் தொடர்ந்து இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஏற்ற வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்துப் பேச விருப்பம் தெரிவித்திருந்தார்.

மாண்புமிகு இலங்கை பிரதமரின் விருப்பத்தினை ஏற்று, முதலமைச்சர் அவர்கள் டெல்லி செல்ல இருந்த தனது பயணத்தை ஒத்தி வைத்து, இலங்கை பிரதமரை சந்தித்துப் பேச முடிவு செய்திருந்தார்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 11.6.2002 அன்று சென்னை ஆளுநர் மாளிகையில், மாண்புமிகு இலங்கை பிரதமர் திரு.ரனில் விக்ரம சிங்கே அவர்களைச் சந்தித்து பேசினார்.

பின்னர் மாண்புமிகு இலங்கை பிரதமருக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு.ராமமோகன் ராவ் அவர்கள் அளித்த விருந்திலும் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்றார். இந்நிகழ்ச்சியில் இலங்கை பிரதமரின் துணைவியார் திருமதி மைத்ரி விக்ரமசிங்கே, ஆளுநரின் துணைவியார் திருமதி உமா ராவ், இலங்கை யு.என்.பி. கட்சியின் தலைவர் திரு.மாலிக் சமாராவிக்ரேமா, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு.சுபாஷன் ரெட்டி, தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு.சுகவனேஷ்வர், காவல்துறை தலைமை இயக்குநர் திரு.பி.பி.நெயில்வால், அரசு அதிகாரிகள் மற்றும் தொழிலதிபர்கள் பங்கேற்றனர்.



# தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் பற்றி ஆலோசனை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 28.6.2002 அன்று தலைமைச் செயலகத்தில், இலங்கை அரசின் மறு வாழ்வு, மறு குடியமர்த்தல் மற்றும் அகதிகள் துறையின் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனே தலைமையிலான தூதுக் குழு சந்தித்து, தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் பற்றி ஆலோசனை நடத்தியது.

இலங்கையின் இனப் பிரச்சினை காரணமாக ஏற்பட்ட கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் உயிர் பிழைக்க வேண்டி அங்கிருந்து தப்பி பிழைத்து தமிழகத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர். இவ்வாறு தமிழகத்திற்கு வந்து தஞ்சம் அடைந்துள்ள அகதிகளுக்கென முகாம்கள் அமைக்கப்பட்டு அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான பல்வேறு உதவிகளை தமிழக அரசு செய்து வருகிறது. இது தொடர்பாக, இலங்கை அமைச்சர் அவர்கள் தலைமையிலான தூதுக்குழு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை சந்தித்து ஆலோசனை நடத்தியது.

இலங்கை அரசின் மறு வாழ்வு மறு குடியமர்த்தல் மற்றும் அகதிகள் துறையின் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனே (Dr. Jayalath Jayawardena, Minister for Rehabilitation, Resettlement and Refugees, Government of Sri Lanka) தலைமையிலான இந்த தூதுக்குழுவில் இலங்கை மறு வாழ்வுத்துறை அமைச்சக செயலாளர் திரு.ஏ.ஜய்ரத்னம் (A. Jyaratnam, Secretary Ministry of Rehabilitation) இலங்கை பதிவுத்துறை தலைவர் திரு எல்.கே.ரத்னஸ்ரீ, (L.K.Ratnasiri, Registrar General of Sri Lanka) மறு வாழ்வு, மறுகுடியமர்த்தல்மற்றும் அகதிகள் துறை அமைச்சக கூடுதல் செயலாளர் திரு டி.குமாரதாசன் (T.Kumaradasan.Addl Secretary. Ministry of Rehabilitation, Resettlement and Refugees, Govt of Sri Lanka) இலங்கை குடிபுகுதல் மற்றும் குடிபெயர்தல் துறையின் உதவி கட்டுப்பாட்டு அலுவலர் திரு. சி.ஏ.பொன்சேகா (C.A.Fonseka, Asst Controller, Department of Immigration & Emigration) சென்னையிலுள்ள இலங்கை அரசின் இந்திய நாட்டிற்கான துணைத் தூதுவர் திரு ஏ.எஸ். நகந்தாலா (A.S.Nakandala, Deputy High Commissioner for Sri Lanka in Chennai) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

## முதல்வருடன் தூதுக்குழுவினர் சந்திப்பு

இந்த தூதுக்குழுவினர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை 28.6.2002 அன்று சந்தித்து, தமிழகத்தில் அகதிகளாக வாழும் இலங்கை மக்களுக்கு தமிழக அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற உதவிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். மேலும், தமிழகத்தில் இருக்கும் இலங்கை அகதிகளை தாயகத்திற்கு திரும்ப அழைத்துச் செல்ல முயற்சிகள் மேற்கொள்வதாக மாண்புமிகு இலங்கை அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனே தெரிவித்தார்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, தமிழகத்தில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களது தாயகத்திற்கு திரும்ப அழைத்துச் செல்லும் இலங்கை அரசின் முயற்சிக்கு பாராட்டு தெரிவித்ததோடு, அதற்கு முன் நடவடிக்கையாக இலங்கை அகதிகளுக்குத் தேவையான பாஸ்போர்ட், இதர சான்றிதழ்கள் வழங்குவது, அவர்கள் தமிழகத்தில்கற்ற கல்விக்குரிய சான்றிதழ்களை அங்கீகரிப்பது, இலங்கையில் அமைதி திரும்புவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல் தருதல் போன்றவற்றை மேற்கொள்ளலாம் எனக் கருத்து தெரிவித்தார்.

மேலும், இலங்கைத் தூதர் தமிழகத்திலுள்ள மற்ற அகதிகள்முகாம்களுக்கு சென்று அங்கு வசிப்பவர்களிடம் இலங்கை அரசின் முயற்சிகளை விவரிப்பதுடன், இலங்கை அகதிகள் தாயகம் திரும்பினால் அவர்கள் கண்ணியமாகவும், அடிப்படை வசதிகளுடன் குடியமர்த்தப்படுவர் என்ற உறுதியை அளிக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்த மேற்கண்ட கருத்துக்களை ஏற்றுக் கொண்ட இலங்கைஅமைச்சர் இதற்கான உரிய ஏற்பாடுகளை செய்வதாக உறுதி அளித்தார். மேலும், இலங்கையில்இனக் கலவரத்தின் போது சேதமடைந்த யாழ்ப்பாண நூலகத்தை புதுப்பிக்கும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளதாகவும், அந்த நூலகத்திற்கு தேவையான தமிழ் நூல்கள் மற்றும் தமிழ் நூல்கள் அடங்கிய கம்ப்யூட்டர் மென்பொருட்கள் முதலியவற்றை தமிழக அரசு நன்கொடையாக அளிக்க வேண்டும் என்று இலங்கை அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். மேலும், அந்தப் பல்கலைக் கழகத்தை தமிழக பல்கலைக் கழகங்களுடன் கம்ப்யூட்டர் மூலம் இணைத்தல், இலங்கையிலிருந்து வரும் மகளிருக்கு செவிலியர் பயிற்சி, அலுவலர்களுக்கு மேலாண்மை பயிற்சி, காவல்துறை பயிற்சி, கோவை வேளாண்மை பல்கலைக் கழகத்துடன் கல்விசார் தொடர்பு நடவடிக்கை, வேலூரில் உள்ள இலங்கை அரசர் விக்ரம ராஜசிங்கே நினைவிடத்தில், அவரது சிலையை நிறுவுவதற்கு அனுமதி போன்றவற்றிக்கு தமிழக அரசு உரிய உதவிகளை செய்ய வேண்டும் என்று இலங்கை அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனே கோரினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இக்கோரிக்கைகளை கவனமுடன் கேட்டறிந்து, இதன் மீது விரைவில் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் டாக்டர் மு.தம்பிதுரை, தலைமைச் செயலாளர். திரு.சுகவனேஸ்வர், பொதுத்துறை செயலாளர் திரு. டி.பிச்சாண்டி, உள்துறை செயலாளர் திரு. நரேஷ் குப்தா, மறுவாழ்வுத்துறை சிறப்பு ஆணையர் திரு. ஐ.வி.மணிவண்ணன், மீனளத்துறை இயக்குநர் திருமதி. எம்.பி.நிர்மலா, கூடுதல் காவல்துறை இயக்குநர் (நுண்ணறிவு) திரு.வெங்கடகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கைஅமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனே அவர்களின் துணைவியார் திருமதி. உதிதமேனிகா ஜெயவர்த்தனே (Mrs. Udithamenike Jayawardena) அவர்களும் இக் கூட்டத்தின் போது உடனிருந்தார்.

* * *

## வீரமரணம் அடைந்த வீரருக்கு மரியாதை - அவரது குடும்பத்திற்கு உதவி -

### முதலமைச்சர் அறிவிப்பு

“இந்திய எல்லையில், ஜம்முவில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வேலூர் மாவட்டம், கம்மவான் பேட்டை. கொள்ளைமேட்டை சேர்ந்த திரு.ஆர்.மணி என்பவரின் மகன் ராணுவ வீரர், திரு.எம்.நாராயணன், கண்ணி வெடி தாக்கி 2.6.2002 அன்று வீரமரணம் அடைந்தார். நாட்டை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் போது தனது இன்னுயிரை ஈந்த தமிழக வீரர் திரு.எம்.நாராயணன் அவர்களின் மறைவிற்கு முதலமைச்சர் அஞ்சலியை செலுத்தி, இவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு தமிழக அரசின் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

வீரமரணம் அடைந்த ராணுவீரர் திரு. எம் நாராயணனின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு சார்பாக சிறப்பு நிதி உதவி ரூ.5 இலட்சம் வழங்க உத்திரவிட்டுள்ளார்.- மேலும், உயிரிழந்த ராணுவவீரர் திரு.எம்.நாராயணனின் குடும்பத்திலுள்ள ஒருவருக்கு அவரின் தகுதியின் அடிப்படையில் உரிய அரசுப்பணி அளிக்கவும் உத்திரவிட்டுள்ளார்.

• • •



ஓராண்டு சாதனை :

# காஞ்சிபுரம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்



காஞ்சிபுரம் மாவட்டம் சரித்திரப் புகழ் பெற்ற மாவட்டமாகும். பல்லவ மன்னர்கள் இப்பகுதியை ஆண்டு, சிற்பக்கலைக்கு முக்கியத்துவம் அளித்து, வடித்த சிற்பங்கள் என்றும் பல்வேறு நாட்டினரையும் வியக்கச் செய்து **கொண்டிருக்கின்றன.** காஞ்சிபுரம் என்றதும் நம் நினைவுக்கு வருவது பட்டாடைகளாகும். இவற்றுக்கு உள்நாட்டில் மட்டுமல்ல அயல் நாட்டிலும் வரவேற்பு இருப்பது இம்மண்ணுக்கு பெருமை தான். அயல்நாட்டுப் பறவைகளும் இம்மாவட்டத்தில் அமைந்துள்ள வேடந்தாங்கலுக்கு வந்து செல்வது பெருமைக்கும் பெருமை சேர்க்கும். அனைத்துக்கும் மேலாக பேரறிஞர் அண்ணா அவர்களை ஈன்று உலகிற்கு உவந்த பூமி இது. இது போன்ற பல்வேறு சிறப்புகளை கொண்டது காஞ்சிபுரம் மாவட்டம்.

சரித்திர புகழ்பெற்ற காஞ்சிபுரம் மாவட்டம், கடந்த ஓராண்டில் தமிழக அரசின் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களினால் மேன்மேலும் மெருகூட்டப்பட்டு புத்துணர்ச்சிப் பெற்றுள்ளது.

### மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2001–2002–ஆம் நிதியாண்டிற்கான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ரூ.499.59 இலட்சம் மதிப்பில் 1,541 தொகுப்பு வீடுகள் 204 முடிக்கப்பட்டுள்ளன. கட்சா வீடுகள் ரூ.24.60 இலட்சம் மதிப்பில் 746 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஜவகர் கிராம வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.533.03 இலட்சம் மதிப்பீட்டில் சம்பூர்ண கிராமின் ஒஜ்கார் யோஜான திட்டப்பணிகளை சேர்த்து 1,943 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.3,736 குழுக்கள் உள்ளன. அவற்றில் 325 குழுக்கள் தேர்வு செய்து 226–குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ.226 இலட்சமும், 83 குழுக்களுக்கு பொருளாதார கடனுதவியாக ரூ.211.93 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 120– பணிகள் எடுக்கப்பட்டு ரூ.328.58 இலட்சம் மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது. சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் 363 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 44 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. அவற்றின் மதிப்பு ரூ.49.22 இலட்சம் ஆகும். திருத்தியமைக்கப்பட்ட மத்திய ஊரக சுகாதார திட்டத்தின் மூலம் ரூ.7.42 இலட்சத்தில் 1,404 தனிநபர் இல்லக்கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த பெண்களுக்கான ஊரக சுகாதார கழிப்பிட திட்டத்தின் மூலம் ரூ.26 இலட்சத்தில் 13 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.287.08 இலட்சம் மதிப்பில் 157 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பகுதி–2 திட்டத்தின் கீழ் ரூ.50.20 இலட்சம் மதிப்பில் 308 பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. சாண எரி வாயு திட்டத்தில் 50 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. புகையில்லா அடுப்புத் திட்டத்தின் கீழ் கிராமப்புற வறுமைக்கோட்டிற்கு கீழ் குடும்பங்களின் 250 வீடுகளில், புகையில்லா அடுப்பு அமைக்கப்பட்டுள்ளது.

### மாவட்டத் தொழில் மையம்

பாரதப்பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 375 நபர்களுக்கு ரூ.147.90 இலட்சமும், மூலதனமானியமாக 60 நபர்களுக்கு ரூ.58.90 இலட்சமும், மின் ஆச்சி மானியம் 9 நபர்களுக்கு ரூ.1.12 இலட்சமும் மற்றும் மின் மானியம் 78 நபர்களுக்கு ரூ.3.77 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. 1,050 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சி தொகையாக

ரூ.3,23,400 வழங்கப்பட்டுள்ளது. கைவினைத் தொழில் பயிற்சி 133 நபர்களுக்கும், குடிசை தொழில் பயிற்சி 180 நபர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

## தாட்கோ

தாட்கோ நிறுவனம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு பல பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த திட்டத்தின்கீழ் 352 நபர்களுக்கும், தொழில் வர்த்தகம் மற்றும் சேவை திட்டத்தின் கீழ் 130 நபர்களுக்கும், தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 182 நபர்களுக்கும், சுயவேலை வாய்ப்பு பயிற்சி திட்டத்தின் கீழ் 184 நபர்களும், கணினி பயிற்சி 122 நபர்களுக்கும், மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக 1,470 ஆதிதிராவிட மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பழங்குடியினர் மக்களுக்கான திட்டத்தின் கீழ் 10 நபர்களுக்கு ஆக மொத்தம் **ரூ.146.99** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 454 நபர்களுக்கு ரூ.31,47,000 மதிப்பில் நில எடுப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. வன் கொடுமை தீருதவித்திட்டத்தின் கீழ் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 21 ஆதிதிராவிடர்களுக்கு தீருதவியாக ரூ.2,31,000/- வழங்கப்பட்டுள்ளது. இடைநிலை ஆசிரியர் பணிநியமனம் 42 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தின் கீழ் +1, +2 மாணவிகளுக்கு ரூ.32.54 இலட்சம் மதிப்பில் 2373 இலவச சைக்கிள் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த 19 மாணவிகளுக்கு 19 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. கொத்தடிமைகள் 55 நபர்கள் விடுவிக்கப்பட்டு தீருதவிகள் ரூ.7,58,000/- வழங்கப்பட்டுள்ளது. தகுதி மானிய உதவி திட்டத்தின் கீழ் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர் 270 நபர்களுக்கு தலா ரூ.300 வீதம் ரூ.81,000 வழங்கப்பட்டுள்ளது.

## பிற்பட்டோர் மிகவும் பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

இத்துறையின் சார்பில் பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு, இலவசக் கல்வி (பட்டப்படிப்பு) இலவசக் கல்வி (தொழில் பட்டயப்படிப்பு) மற்றும் இலவச கல்வி (தொழில் படிப்பு) முதலிய படிப்புகளுக்கு 37,515 நபர்களுக்கு ரூ.1,28,74,000 வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பரிசு, தந்தைப் பெரியார் நினைவுப் பரிசு, அண்ணா நினைவுப்பரிசு முதலானவற்றிற்கு 25 நபர்களுக்கு ரூ.63,000 வழங்கப்பட்டுள்ளது. ரூ.5.26 இலட்சம் மதிப்பில் 35 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. **ஏற்கெனவே** நிலம் கையகப்படுத்தப்பட்ட இடங்களுக்கு சாலை வசதி, மின் விளக்குகள் மற்றும் குடிநீர் அமைத்துத் தரும் திட்டத்தின் கீழ் ரூ.6.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 108 மகளிருக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.42,000/- செலவில் முனைவர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. +2 படித்தவர்கள் மேற்படிப்பு தொடர்ந்து பயில 111 நபர்களுக்கு ரூ.1,67,000 ஊக்கப்பரிசு வழங்கப்பட்டுள்ளது. மானிய கடன் திட்டத்தின் கீழ் சலவையகம் மற்றும் முடிதிருத்தம் அமைக்க 26 நபர்களுக்கு ரூ.39,000 வழங்கப்பட்டுள்ளது.





## கல்வித்துறை

கல்வித்துறையின் சார்பில் 12-ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவர்களுக்கு பொறியியல், மருத்துவம் போன்ற உயர் கல்வியினைத் தொடர ரூ.1,91,685/- வாங்கப்பட்டுள்ளது. ஆசிரியர் நியமனத்தில் உடற்கல்வி ஆசிரியர்கள் 12 நபர்களுக்கும், தையல் ஆசிரியர் ஒரு நபரும், ஓவிய ஆசிரியர் ஒரு நபரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பஸ்பாஸ் பெறாத +1 மற்றும் +2 பயிலும் எஸ்.சி. மற்றும் எஸ்.டி. மாணவர்கள் 2400 நபருக்கு இலவச மிதி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

## கைத்தறி மற்றும் துணி நூல் துறை

வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 11 நெசவாளர்களுக்கு கூட்டுறவு சங்கங்களில் உள்ள 27 உறுப்பினர்களுக்கு மானியமாக ரூ.6.91 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. முதியோர் ஓய்வு திட்டத்தின் கீழ் 537 உறுப்பினர்களுக்கு ரூ.13.17 இலட்சம் ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது. குடும்ப ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 30 பயனாளிகளுக்கு ரூ.1.27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## வனத்துறை

வனத்துறை மூலம் 6-டேப் கிராமங்களில் உள்ள மக்களுக்கு மானிய விலையில் ரூ.1,50,000/- செடிகள் வழங்கியும் நடவு மற்றும் பராமரிப்பு பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. மொத்த நிதி இலக்கு ரூ.269.25 இலட்சத்தில் ரூ.216.79 இலட்சம் செலவிடப்பட்டு, 80 சதவீதம் நிதி குறியீடு எட்டப்பட்டுள்ளது.

## மாவட்ட மறுவாழ்வுத் துறை

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் கீழ் இயங்கும் மாவட்ட மறுவாழ்வு மையம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களின் மூலம் 1,933 பயனாளிகளுக்கு ரூ.14,62,675 மதிப்பில் உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளது. ஊனமுற்றோருக்கு உதவிப்பொருட்கள் வழங்குவதற்கு ரூ.17.5 இலட்சம் செலவில் பொருட்கள் தருவிக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் விநியோகிக்கப்படவுள்ளது.

## வேளாண்மைத்துறை

2001-2002-ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெல்சாகுபடி பரப்பு 1,57,000 **எக்டேர்** பரப்பிற்கு 1,68,472 எக்டேர்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் அரிசி உற்பத்தி 5.90 இலட்சம் மெ.டன் ஆகும். இதற்கு 6.52 இலட்சம் மெ.டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதுவரை இம்மாவட்டத்தில் சான்று பெற்ற நெல்விதைகள் 1341.066 மெ.டன்னும், பயறுவகை விதைகள் 32.414 மெ.டன்னும், எண்ணெய் வித்துக்கள் 106.438 மெ.டன்னும் விநியோகம் செய்யப்பட்டது. தேசிய பயறு வகை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 24,735 டன் பயிறு விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விதை **மானியம்** வாங்கப்பட்டது. இத்திட்டத்தில் மொத்தம் 12,670 இலட்சம் **மானியம்** வழங்கப்பட்டுள்ளது. பண்ணை மகளிர் பயிற்சி திட்டத்தின் கீழ் 1,150 மகளிர் விவசாயிகளுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.4,520 இலட்சம் செய்யப்பட்டுள்ளது. ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 234 ஏரிகள் நீர்ப்பாசன விவசாயிகள் சங்கங்கள் தொடங்கப்பட்டு 17,959 விவசாயிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு உள்ளனர்.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு ஊரக குடிநீர் திட்டங்களின் கீழ் தனி மின்விசை குடிநீர் திட்டங்கள் ரூ.9.15 கோடி மதிப்பீட்டில் 145 குடியிருப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் சிறப்புத் திட்டங்களான சிறுமின்விசை குடிநீர் திட்டங்கள் 100 கைப்பம்புடன் கூடிய சிறுமின்விசைத் திட்டங்கள் – 6, குடிநீர் தன்மை குடிப்பதற்கு உகந்ததல்ல என்று பரிசோதனை செய்து மாற்று நீராதாரம் அமைக்கும் திட்டங்கள் – 26, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குடிநீர் தேக்கத் தொட்டிகள் – 47, கோடைக்கால குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கும் கைப்பம்புகள் – 42, அரசுப் பள்ளிகளுக்கு குடி நீர் தேக்கத் தொட்டி வசதி செய்யும் திட்டங்கள் 434, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – 3 ஆகிய திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் வாலாஜாபாத் ஒன்றியத்தில், ஐயம்பேட்டை, முத்தியால்பேட்டை மற்றும் 33 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.3.45 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சிறுசேமிப்புத் திட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 108 கோடி ரூபாய் நிகர சிறுசேமிப்பு இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டது. ரூ.112 கோடி நிகர வசூல் செய்து சாதனைப் படைத்துள்ளது. சிறுசேமிப்பு வசூலில் அடிப்படையில் ரூ.2.15 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறுசேமிப்பு வசூலில் சாதனைப் படைத்து முன்னோடி மாவட்டமாக திகழ்கின்றது.

## இந்து சமய அறநிலையத் துறை

இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் 7 திருக்கோயில்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 8 திருக்கோயில் குளங்கள் ரூ.16.97 இலட்சம் செலவில் திருக்குள பணி நடைபெற்று வருகிறது. கிராமப்புற திருக்கோயில் திருப்பணிக்கு தலா ரூ. 25,000/- வீதம் மூன்று திருக்கோயில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ஒரு கால பூஜை நிதியுதவி திட்டத்தின் கீழ் 83 திருக்கோயில்களுக்கு தலா ரூ.25,000/– நிரந்தர வைப்புத் தொகையின் வட்டி மூலம் ஒரு கால பூஜை செய்வதற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. "அன்னதான திட்டம்'' மேதகு ஆளுநர் அவர்கள் சட்டப்பேரவையில் ஆற்றிய உரையில் அறிவித்தபடி மாண்புமிகு முதல்வர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 63 திருக்கோயில்களுள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாங்காடு காமாட்சியம்மன் திருக்கோயில்/ தேவராஜ சுவாமி திருக்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிக்காக அன்னதான திட்டம் 23.2.2002 அன்று துவக்கப்பட்டு சிறப்பாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

## கூட்டுறவுத் துறை

கூட்டுறவுத் துறையின் மூலம் குறுகிய கால கடனாக 13,199 நபர்களுக்கு ரூ.279.22 இலட்சமும், மத்திய கால கடனாக 858 நபர்களுக்கு ரூ.145.75 இலட்சமும், நீண்ட கால கடனாக 1,315 நபர்களுக்கு ரூ.766.86 இலட்சமும், நகைக்கடனாக 1,43,445 நபர்களுக்கு ரூ.13,462.02 இலட்சமும், பண்ணைச்சாரா கடனாக 4,330 நபர்களுக்கு ரூ.182.59 இலட்சமும், நலிவுற்றப்பிரிவினருக்கு கடனாக 50,572 நபர்களுக்கு ரூ. 361.42 இலட்சமும், மகளிர் சிறு வணிகக் கடனாக 684 நபர்களுக்கு ரூ.13.36 இலட்சமும், டாப்செட்கோ கடன் 21 நபர்களுக்கு ரூ.18.04 இலட்சமும், மருத்துவப் பொறியாளர் 361 நபர்களுக்கு ரூ.361.42 இலட்சமும், வீடு கட்டும் கடனாக 753 நபர்களுக்கு ரூ.475.34 இலட்சமும், டாம்கோ கடன் 14 நபர்களுக்கு ரூ.7.65 இலட்சமும், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலம் 172 குழுக்களுக்கு ரூ.39.43 இலட்சமும் தானியஈட்டுக் கடனாக ரூ.49.95 இலட்சமும், மகளிருக்கு தொழில் முனைவோர் கடனாக ரூ.12.30 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மகளிர் அமைப்புகளுக்கு 7 கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு 2 மண்ணெண்ணை வழங்கும் நிலையமும் புதிதாக வழங்கப்பட்டுள்ளது.

## மாவட்ட வழங்கல் துறை

மாவட்ட வழங்கல் துறையின் மூலம் 4,98,323 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. போலி குடும்ப அட்டைகள் 2,797 கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதிய 8 மகளிர் நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் விவசாய மின் இணைப்புகள் 114, சுயநிதி மின் இணைப்பு 170, ஜீவன் தாரா விவசாய இணைப்பு 40, குடிநீர் மேல்நிலைத் தேக்கத் தொட்டிகள் மற்றும் சிறிய மின் பம்புகள் இணைப்பு 100, குடிசைகளுக்கு மின் இணைப்பு 172, குழல் விளக்கு, சோடிய விளக்குகள் 170 ஆகிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

## சமூக நலத்துறை

சமூக நலத்துறையின் சார்பில் கடந்த ஓர் ஆண்டில் இம் மாவட்டத்தில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி திட்டத்தின் கீழ் 130 மகளிரும், கலப்புத் திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் 112 நபர்களும், ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் 47 நபர்களும், அன்னை தெரசா அம்மையார் ஆதரவற்ற மகளிர் திருமண உதவி திட்டத்தின் கீழ் 3 நபர்களும், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண நிதி உதவி திட்டத்தின் கீழ் 8 நபர்களும், சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஊக்கம் அளிக்கவும்,பெண் சிசு கொலை ஒழிப்பதற்காகவும், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் போக்கை கட்டுப்படுத்துவதற்காகவும், தமிழக அரசு இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் ஏழைக்குழந்தைகளைச் சார்ந்த பெண் குழந்தைகளுக்கு அதிக நிதி பயன் கிட்டும் வகையில் முற்றிலுமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

## மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணித்துறை

காஞ்சிபுரம் அரசினர் தலைமை மருத்துவமனைக்கு குடும்ப நலத்திட்டத்திற்காக ரூ.1.89 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடபழுது நீக்கம் மற்றும் 4 வண்ண தொலைகாட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. கண் சிகிச்சைப் பிரிவிற்கு ரூ.68,000/– மதிப்பில் இரண்டு குளிர் சாதனப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம், மதுராந்தகம் மற்றும் தாம்பரம் மருத்துவமனைகளுக்கு பேறுகால பின் கவனிப்புத் திட்டத்தின் கீழ் தலா ரூ.50,000/– வீதம் வழங்கப்பட்டுள்ளது. குடும்பநல திட்டத்தின் கீழ் பெண் அறுவைச் சிகிச்சை 14,603 நபர்களுக்கும், ஆண் அறுவைச் சிகிச்சை 164 நபர்களுக்கும் செய்யப்பட்டுள்ளன.

இச்சுகாதார மாவட்டத்தில் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 185 துணை சுகாதார நிலையங்களும், 1 தலைமை மருத்துவமனையும், 3 தாலுக்கா மருத்துவமனைகளும் உள்ளன. பல்ஸ்போலியோ திட்டத்தின் கீழ் 2,54,679 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளன. 868 பள்ளிகளில் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு 1,92,092 குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. சிறப்பு மருத்துவ முகாம் உத்திரமேரூர், அச்சிரப்பாக்கம் ஆகியப் பகுதிகளில் நடத்தப்பட்டன. அதில் 6,960 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. குடும்ப நல்வாழ்வு சிறப்பு முகாம் ஆண், பெண் இருபாலருக்கும் 40 முகாம்கள் தனித் தனியாக நடத்தப்பட்டுள்ளது. யானைக்கால் நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 9,86,031 நபர்களுக்கு டி.இ.சி. மற்றும் அல்பண்டசால் மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது.



## நெடுஞ்சாலைத்துறை

நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பாலப்பணிகள் ரூ.918 இலட்சம் மதிப்பில் 3 பணிகள், சாலைப்பணிகள் ரூ.57.90 இலட்சம் மதிப்பில் 1 பணி, மிகவும் பழுதடைந்த சாலைப்பணிகள் ரூ.419 இலட்சம் மதிப்பில் 23 பணிகள், மத்திய சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.104.50 இலட்சம் மதிப்பில் 3 பணிகள் ஆகியவை எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 25 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதம் 5 பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

பேரூராட்சி – அலுவலகத்தின் மூலம் சாலை வசதி, வடிகால் வசதி, சிறு பாலம், குடிநீர், தெரு விளக்கு மற்றும் இதரப் பணிகள் சேர்த்து ஆக மொத்தம் ரூ.1319.73 இலட்சம் மதிப்பில் 1182 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.


## முன்னாள் படை வீரர் நலம்

தமிழ்நாடு முன்னாள் படை வீரர் நல துறையின் மூலம் நலநிதியாக 5327 நபர்களுக்கு ரூ, 20,41,086 தொகுப்பு நிதியாக 52 நபர்களுக்காக ரூ.93,654 மத்திய முப்படை வாரியம் மூலம் 3 நபர்களுக்கு ரூ66,253 யும் மத்திய சேமநல நிதி 1 நபருக்கு ரூ.30,000/– இதர நிதிகள் மூலம் 16 நபர்களுக்கு ரூ.32,500/– நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. வீர சக்கர விருது பெற்ற 2 நபர்களுக்கு தலா ரூ.50,000/– வீதம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.



## பொதுப்பணித்துறை

தமிழ்நாடு நீர்வள ஆதார ஒருங்கிணைப்பு திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் பாலாறு வடிநிலத்திலுள்ள 465 ஏரிகளில் இக்கோட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 57 ஏரிகளை புனரமைப்பிற்காக ரூ.1,208.92 இலட்சம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதில் 45 ஏரிகளின் பணிகள் துவக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டில் இக்கோட்டத்தில் உள்ள 57 ஏரிகளை புனரமைக்கும் பணிக்கு ரூ.1334.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.224 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. டிசம்பர் 2002–க்குள் பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



*வற்றாது வளங்கொழிக்கும் ஆறுகளைக் கொண்டோ, வானோங்கிய மலைகளைக் கொண்டோ ஒரு நாட்டை மதிப்பிட முடியாது; மக்களின் மனவளத்தைக் கொண்டே மதிப்பிட முடியும்.*

*– அறிஞர் அண்ணா*


# திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் பகுதியில் செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்கள் – ஒரு பார்வை

திருநெல்வேலி மாவட்டத்தின் தலைநகரான திருநெல்வேலி புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களை உள்ளடக்கியது. கல்வியறிவில் இம்மாநகராட்சி சிறப்பான இடம் பெற்றிருந்தாலும், சில பகுதிகள் இன்னும் சமூக பொருளாதார நிலையில் பின்தங்கியே உள்ளன. குறிப்பாக சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் மேலப்பாளையம் பகுதி அடிப்படை வசதி, கல்வியறிவு, வேலைவாய்ப்பு போன்றவற்றில் பின்தங்கி உள்ளது. இப்பகுதி இளைஞர்கள் போதிய வேலை வாய்ப்பின்றி இருப்பதால் வாழ்க்கைத் தரத்தில் பின்தங்கி இருந்தனர். இதன் காரணமாக சட்டம் ஒழுங்கு பிரச்சினை எழும் வாய்ப்புகள் ஏற்பட்டன. இதைக் கருத்திற் கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரைப்படி தமிழக அரசின் தலைமைச் செயலர் அவர்கள் அப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி அவர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்த மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார். அதன்படி மாவட்ட நிர்வாகம் இப்பகுதி மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு அரசு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**வேலையில்லாத இளைஞர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை உருவாக்குதல்**

மாவட்ட தொழில் மையத்தின் மூலம் இப்பகுதி மக்களிடையே, சுயதொழில் தொடங்குவதற்கும், அதற்கான வழிமுறைகளையும் தெரியப்படுத்தவும் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. இதன் மூலம் சுயதொழில் பற்றிய விழிப்புணர்வும், அதன் மூலம் வேலைவாய்ப்பை எப்படி உருவாக்குவது என்பது பற்றியும் விளக்கப்பட்டது.

மேலும் 14–8–2001 அன்று சிறப்பு நேர்காணல் நடத்தி சுய தொழில் தொடங்க 45 நபர்களுக்கு பாரத பிரதமர் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் சுமார் 21.61 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டது. இதில் ரூ.2.20 இலட்சம் மானியமாகும். மாதந்தோறும் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்பவர்களின் மனு பரிசீலிக்கப்பட்டு தொடர்ந்து கடனுதவி வழங்கப்படுவதை ஆய்வு செய்யப்படுகிறது. வங்கியாளர்களின் ஒத்துழைப்பும் முழு அளவில் இத்திட்டத்தில் கிடைத்துவருகிறது. வங்கிகள் தங்கள் சேவைப்பகுதியையும் தாண்டி இப்பகுதி மக்களுக்கு உதவ முன்வந்துள்ளனர். இத்திட்டத்தை இப்பகுதியில் சிறப்பாக செயல்படுத்திய பரோடா வங்கி மற்றும் கனரா வங்கி கிளை மேலாளர்கள் குடியரசு தினத்தன்று மாவட்ட ஆட்சியர் அவர்களால் கவுரவிக்கப்பட்டனர்.



மேலும் ஆயத்த ஆடைகள் தயார் செய்யும் தொழிற் கூட்டுறவு சங்கம் அமைத்து 50 சிறுபான்மையினத்தவர் வேலைவாய்ப்பு பெறும் வகையில் முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பப் பட்டது. வருகிற 2002–2003 ஆம் ஆண்டில் சங்கம் அமைய உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் என தொழில் மற்றும் வணிகத் துறையின் இயக்குநர் தெரிவித்துள்ளார்கள்.





மேலும் இப்பகுதி மக்களுக்கு அரசின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தவும் நலத் திட்டங்கள் முறையாக மக்களை சென்றடையவும் கீழ்க்கண்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**குழந்தை தொழிலாளர் சிறப்புப் பள்ளிகள் புதிதாக திறத்தல்**

இப்பகுதி மக்கள் பெரும்பான்மை யானோர் நடுத்தர மற்றும் கீழ்தட்டு மக்களாவார்கள். இவர்களின் முக்கிய வேலைவாய்ப்பு என்பது பீடி சுற்றுதல் ஆகும். குடும்பத்திலுள்ள பெரியவர்கள் இவ்வேலையில் ஈடுபட்டுள்ளதால் அவர்களின் குழந்தைகளும் இத்தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இதனால் கல்வியறிவு இக்குழந்தைகளுக்கு கிடைப்பதில்லை. இக்குறையை போக்குவதற்கு தேசிய குழந்தை தொழில் ஒழிப்பு திட்ட இயக்குநர் தலைமையில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. குழந்தைகளை வேலைக்கு அனுப்புவது சட்டப்படி குற்றம் என்பதை இப்பகுதி மக்களுக்கு தெரிவிக்கும் நோக்கில் விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது. ஏற்கெனவே இப்பகுதியில் இருந்த இரண்டு குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகளோடு மேலும் இரண்டு பள்ளிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கை 103 ஆகும். இவற்றில் 59 மாணவர்கள் சிறுபான்மையினத்தவரும், 44 மாணவர்கள் மற்ற சமூகங்களை சார்ந்தவர்களும் ஆவர். இப்பள்ளிகள் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தின் கீழ் செயல்படும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகிறது. இப்பள்ளிகள் குழந்தைகளுக்கு கல்வியறிவு மட்டுமின்றி, சமூக ஒற்றுமை, மத நல்லிணக்கம் போன்ற நற்பண்புகளை வளர்க்கும் வகையில் செயல்படுகிறது.

**சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் சுமார் 21.61 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டது. இதில் ரூ.2.20 இலட்சம் மானியமாகும்.**




**நூலக வசதி**


நல்ல நூல்களை படிப்பதன் மூலம் நல்ல குணங்களை பெற முடியும். இப்பகுதி வேலையில்லா இளைஞர்களின் எதிர்காலத்தை சிறப்பாக அமைக்கும் நோக்கிலும், தங்களது ஓய்வு நேரங்களை பயனுள்ளதாக அமைக்கும் எண்ணத்திலும் இப்பகுதியில் ஏற்கெனவே உள்ள மூன்று நூலகங்களோடு, மேலும் இரண்டு பகுதிநேர நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

## சுய உதவிக் குழுக்கள்

சுய உதவிக் குழு எனும் திட்டம் மிக சிறப்பான திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களான பெண்களிடம் சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கிறது. மேலும் அவர்களுக்கு சுகாதாரம், துப்புரவு, சத்துணவு பற்றிய கருத்துக்களை தங்களுக்குள் பகிர்ந்து கொள்ள ஏதுவாக உள்ளது. இப்பகுதியில் திட்ட அலுவலர் (மகளிர் மேம்பாடு) மூலம், ஏற்கெனவே உள்ள 36 குழுக்களோடு மேலும் 34 குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களில் சிறுபான்மையான பெண்கள் மட்டுமின்றி மற்ற சமூக பெண்களும் உறுப்பினராக உள்ளார்கள்.

## ஊட்டச்சத்து மற்றும் சத்துணவு மையங்களை மேம்படுத்துதல்

கர்ப்பிணி தாய்மார்களின் நலனையும், குழந்தைகளின் நலனையும் கருத்தில் கொண்டு இப்பகுதி ஊட்டச்சத்து மற்றும் சத்துணவு மையங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டது. இத்தகைய 23 மையங்கள் இப்பகுதியில் செயல்படுகிறது. இம்மையங்களின் பொறுப்பாளர்கள் மிக சிறப்பாகவும் சேவை மனப்பான்மையோடும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் பழுதடைந்த 11 மையங்கள் ரூ.2.05 இலட்சம் மதிப்பில் மாநகராட்சி மூலம் சீரமைக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட சுமார் ரூ.3.40 இலட்சம் சிறுசேமிப்பு ஊக்க நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




## சமூகநலத்துறை திட்டங்கள்

மகளிர் நலத்திற்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து மாவட்ட சமூகநல அலுவலர் மூலம் இப்பகுதியில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. இப்பகுதி பெண்கள் பயன்பெறும் வகையில் 8 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 12 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. மேலும் 11 பெண்களுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி திட்டத்தின் கீழ் தலா ரூ.10,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் சிறுபான்மையின பெண்களும் இதர பெண்களும் அடங்குவர்.

## மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்படும் அடிப்படை வசதிகள்

இப்பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்காக ரூ.301.35 இலட்சம் மதிப்பில் பொது கழிப்பிடங்கள், கழிவுநீர் கால்வாய், பள்ளிக் கட்டடங்கள், சாலைகள், குடிநீர்வசதி போன்றவைகள் மேற்கொள்ள மாநகராட்சி ஆணையரால் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நகராட்சி நிர்வாகத்துறைக்கு முன்மொழிவுகள் அனுப்பி நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியின் உடனடித் தேவைக்கு ரூ.2 இலட்சம் மதிப்பில் 32வது வார்டில் 3 ஆழ்துளை கிணறுகளும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியும் கட்ட சிறுசேமிப்பு ஊக்க நிதியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் விருப்பப்படியும் தலைமைச் செயலாளரின் உத்தரவிற்கேற்பவும் மேற்கண்ட பல்வேறு அரசு வளர்ச்சி திட்டங்கள் இப்பகுதியில் ஆகஸ்ட் 2001 திங்கள் முதல் செயல்படுத்தப்படுகிறது. மாவட்டத்தின் பல்வேறு துறை உயர் அலுவலர்கள் நேரடியாக இப்பகுதிக்கு சென்று பொதுமக்களை சந்தித்து கலந்துரையாடி தொடர்ந்து அவர்களின் குறைகளை தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தங்கள் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு அரசு எடுத்துவரும் முயற்சிகளும் திட்டங்களும் இப்பகுதி மக்களுக்கு நம்பிக்கையையும் புத்துணர்வையும் அளிப்பதாக உள்ளது என்றால் அது மிகையன்று.

– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி.



# தேனி மாவட்ட சுற்றுலா மற்றும் திருத்தலங்கள்

தேனி மாவட்டம் ஓர் இயற்கை வளம் நிறைந்த எழிலும், அமைதியும் ஒருங்கே குடிகொண்டு தமிழகத்தின் சிறந்த மாவட்டங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. நீர்வளத்தினையும், சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையிலும் பல நீர்த்தேக்கங்களை கொண்டுள்ளது. பழங்கால கோயில்களும், பழமை வாய்ந்த திருவிழாக்களும் கொண்டாடப்பட்டு வரும் தேனி மாவட்ட சுற்றுலா மற்றும் புனித திருத்தலங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு.


## தேனி மாவட்ட சுற்றுலா மற்றும் புனித ஸ்தலங்கள்

### வைகை அணை :

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே வைகை ஆற்றின் குறுக்கே 1958–ஆம் ஆண்டு 11,675 அடி நீளத்தில் கட்டப்பட்டது. ஆண்டிபட்டியில் இருந்து சுமார் 8 கி.மீ. தொலைவிலும், மாவட்ட தலைநகர் தேனியில் இருந்து 14 கி.மீ தொலைவிலும் அமையப் பெற்றுள்ளது.

அணை 111 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. 71 அடி உயரம் வரை நீர் தேக்க முடியும். மதுரையில் இருந்து சுமார் 70 கி.மீ தொலைவில் உள்ளது. மதுரையில் இருந்து கொச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து 8 கி.மீ உள்ளடங்கி உள்ளது.

வைகை அணையின் பின்புறம் பல வண்ண செடிகள், மரங்கள், பூக்கள் மற்றும் அழகிய புல்தரைகள்,



வைகை அணை

கலை நுட்பம் கொண்ட சிலைகள் அமையப் பெற்ற பூங்கா அமையப் பெற்றுள்ளது. இந்த பூங்காவை சின்ன பிருந்தாவன் " என்று அழைக்கலாம். இது எந்தவித ஆரவாரம் இன்றி அமைதியான சூழலில் அமைந்துள்ள அழகிய சுற்றுலாத்தலம்.

சிறுவர், சிறுமியர்கென்று தனியாக பொழுது போக்கு அம்சங்கள் கொண்ட விளையாட்டு சாதனங்கள் உள்ளது.


ஒவ்வொரு சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சுற்று வட்டார உள்ளூர் சுற்றுலா பயணிகள், மாணவ, மாணவியர் குழுமமாக இந்த அணைக்கு வந்து கண்டு களித்து செல்கின்றனர். சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும்

**தலத்தின் சிறப்பு :**

இந்த திருக்கோயில் அமைந்துள்ள திட்டை ஒட்டி மழை வெள்ளம் வழிகின்றது. அவை மருதமரங்கள், மா மரங்கள் மத்தியிலும், அடியிலும் பீறிட்டுக் கொண்டு வருவதால் மாவூற்று என்று பெயர் பெற காரணமாயிற்று. இந்த ஊற்றில் தண்ணீர் எக்காலமும் இருக்கும்.

**வரலாறு :**

இக்கோயிலின் மூல விக்ரகம் மலையில் வாழும் பளியர் இனத்தவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு கண்டமனூர் ஜமின்தாரர் அவர்களால் விக்ரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.



கும்பக்கரை அருவியின் தோற்றம்

வண்ணம் அணையின் பின்புறம் அமைந்துள்ள பூங்காக்கள் மற்றும் சிலைகளிலும், அணையின் மேல்தளத்தில் அமைந்துள்ள அலங்கார மின்விளக்குகளிலும் மின் ஒளி வசதிகள் செய்யப்படுகிறது.

**அருள்மிகு மாவூற்று வேலப்பர் திருக்கோயில்**

இத்திருத்தலம் தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டியிலிருந்து 20 கி.மீ தொலைவில் வருசநாடு மலைப்பிரதேசத்தில் அமைந்துள்ளது.

மலைகளால் சூழப்பெற்று மலைஉச்சியில் சிறிய திட்டில் இயற்கை எழிலுடன் அமைந்துள்ளது. இந்த திருக்கோயிலுக்கு ஆண்டிபட்டியிலிருந்து அடிவாரம் வரை வாகன வசதி உண்டு.

11.4.1973–ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இக்கோயிலில் உள்ள அருள்மிகு விநாயகர், வேலப்பர், சப்தமாதாக்கள் ஆகியவை பழையனவாகும்.


**சிறப்பு :**

இத்திருத்தலத்துக்கு வந்து மாவூற்று நீரில் குளித்து வழிப்பட்டு, சமைத்து உண்டால் தீராத நோயும் நீங்கும் என்று மக்களால் நம்பப்படுகிறது.

**ஸ்ரீ காமாட்சி அம்மன் திருக்கோயில் - தேவதானப்பட்டி:**

இத்திருக்கோயில் தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டம் தேவதானப்பட்டியிலிருந்து சுமார் 3 கி.மீ





சோத்துப்பாறை அணை

தொலைவில் மஞ்சலாறு நதிக் கரையில் அமைந்துள்ளது. இத்திருத்தலத்தில் மூலஸ்தானம் எனும் குச்சு வீட்டின் கதவு திறக்கப்படுவதில்லை. அடைக்கப்பட்ட கதவிற்கே மூன்று கால பூஜையும், இரவு பகல் நெய் விளக்கும் எரிகின்றது.

**சிறப்பு :**

உறுமி, சங்கு, சேகன்டிகள் முழங்க சாயாட்சை பூஜையில் சயன உத்திரவு கேட்பது சிறப்பம்சம்.

**கும்பக்கரை அருவி:**

விண்ணைத் தொடும் மலைகள், ரீங்காரமிடும் வண்டுகள், துள்ளித்திரியும் மந்திகள் கூட்டம், பாடும் பறவைகள் சலசலக்கும் நீரோடைகள் ஆகிய அணைத்தும் ஒருங்கே அமையப்பெற்று காண்போரை வியக்க வைக்கும் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்த இடம்தான் கும்பக்கரை அருவி.

**அருவியின் அமைப்பு :**

மேற்கு தொடர்ச்சி மலைகள் சூழ்ந்த கொடைக்கானல் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது கும்பக்கரை.

கும்பக்கரை பெரியகுளத்திற்கு மிக அருகாமையில் 8 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. கும்பக்கரை அருவியின் முன்பகுதியில் ஒரு கல் மண்டபமும், அதற்கு எதிரே மல்லீஸ்வரர் கோவிலும் உள்ளது. கும்பக்கரை நாலாபுறமும் பாறைகளால் அமைந்த பகுதியில் நீர் பெருக்கெடுத்து ஒடி வருவது கண்கொள்ளாக் காட்சி ஆகும்.

பெரியகுளத்திலிருந்து கும்பக்கரை செல்லும் வழியில் குளுமையான மாந்தோப்புகள் அமைந்திருப்பது அருவியின் அழகுக்கு அழகு செய்யும் சிறப்பான அம்சமாகும்.

அருவியில் நீர் பாய்ந்து வரும் இடங்களில் பெரும் பள்ளங்கள் ஏற்பட்டு, அவை கஜங்கள் என எல்லோராலும் அழைக்கப்பட்டு வருகிறது. அதாவது கும்பக்கரை அருவியில் புலிகஜம், யானைகஜம், பாம்புகஜம், பூனைகஜம் என இப்பகுதி மக்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

இந்த கஜங்களை தாண்டி மெயின் அருவி அமைந்துள்ளது. இந்த அருவியின் நடுவில் நின்று பார்த்தால் நாலாபுறமும் மலைகள் அமைந்து, பள்ளத்தாக்கு போல காட்சியளிக்கும்.

அருவியில் நாலாபுறமும் உள்ள வானுயர்ந்த மரங்கள் நிலமகளுக்கு பச்சை பட்டாடை உடுத்தியது போல கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

**பெயர் காரணம் :**

கும்பம் போன்ற மலைகளிலிருந்து ஓடிவரும் ஆறுகள், துள்ளிக்குதித்து அருவியாக விழுவதாலும், அதே மலைகள் அருவியின் கரைகளாலும் அமைந்துள்ளதால் கும்பக்கரை என இந்த அருவி அழைக்கப்படுகிறது. கும்பக்கரைக்கு மேற்புறம் சிறு அருவிகளும், வழுக்கு பாறையும் அமைந்துள்ளது. கும்பக்கரை அருவி மேற்கு தொடர்ச்சி மலைகளின் வழியாக ஊடுருவி வருவதால் அதன் நீரில் அரிய பல மூலிகைகள் கலந்து வருகிறது. எனவே இதில் நீராடுபவர்கள் நல்ல ஆரோக்கிய நிலையை அடையலாம் என்பது மறுக்க முடியாத உண்மை.

கும்பக்கரை அருவியில் வரும் நீர் மூலிகைகள் கலந்து வருவதால் தண்ணீரை பருகுவோருக்கு குளிர் பானங்களை மிஞ்சுமளவிற்கு சுவையாக இருக்கும். வேறு எந்த அருவிக்கும் கிடைக்காத சிறப்பு கும்பக்கரை தண்ணீருக்கு உண்டு.

**சோத்துப்பாறை அணை:**

தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டம் பெரியகுளத்திலிருந்து சுமார் 12 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இந்த அணை வராஹா நதி கரையில் தென்கரை கிராமம் அருகில் அமையப்பட்டுள்ளது.

இந்த அணை ஒரு சுற்றுலா தலமாக அமைந்துள்ளது. அணையில் நீர் முழுமையாக இருக்கும்போது கண்கொள்ளாக் காட்சியாக விளங்கும். வார சுற்றுலா தலமாகவும், மாணவர், மாணவியரும் மற்றும் உள்ளூர் மக்கள் கண்டு களிக்கும் வார இறுதி சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் இடமாக அமைந்துள்ளது.

***வீரபாண்டி - அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில்:***

**திருக்கோயில் வரலாறு:**

தேனி மாவட்டம் மற்றும் வட்டம், வீரபாண்டி, அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் வீரபாண்டியன் என்னும் பாண்டிய மன்னனால் 14ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். வீரபாண்டிய மன்னன் மதுரையில் ஆட்சி செய்தபோது ஊழ்வினையால் தன் இரண்டு கண்களையும் இழந்தார். கண்களை இழந்த வீரபாண்டிய மன்னன் அன்னை கௌமாரியை வணங்கி ஒரு கண்ணும், அருள்மிகு கண்ணீஸ்வரமுடையாரை வணங்கி மறுகண்ணும் பெற்றதாக தலவரலாறு கூறுகிறது.


**தலத்தின் பெருமை:**

வீரபாண்டிய மன்னர் இங்கு ஆட்சி செய்ததால் அம்மன்னரின் **பெயராலேயே** வீரபாண்டி என இத்தலம் பெயர் பெற்றது. இத்தலத்தில் திருக்கோயிலுக்கு அருகில் திருக்கோயிலுக்கு மேற்கில் வற்றாத முல்லை ஆறு ஓடுவது இத்தலத்திற்கு பெருமை சேர்ப்பதாகும்.

**அருகிலுள்ள நகரம் மற்றும் தங்கும் வசதி:**

அருகிலுள்ள நகரம் தேனி. தேனியிலிருந்து வீரபாண்டி 8 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. திருக்கோயிலில் தங்குவதற்கு விடுதி வசதி இல்லை. வீரபாண்டியில் தனியாருக்குச் சொந்தமான கல்யாண மண்டபங்கள் உள்ளன. தேனி நகரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விருந்தினர் மாளிகை உள்ளது. தேனி நகரில் நெடுஞ்சாலைத்துறைக்குச் சொந்தமான தங்கும் விடுதி உள்ளது. தேனி நகரில் தனியார் தங்கும் விடுதிகள் நிறைய உள்ளன.

சின்னச்சுருளி



**குச்சனூர் சனீஸ்வரன் கோவில்:**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் சின்னமனூரிலிருந்து 6 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. தேனியிலிருந்து 25 கி.மீ தொலைவில் உள்ளது. சனீஸ்வர பகவான் முதல் மூர்த்தியாக மற்ற கிரகங்களோடு இணைந்து இல்லாமல் தனித் தெய்வமாக கோவில் கொண்டிருப்பது குச்சனூர் ஒன்றேதான். வேறு எங்கும் இல்லை. அதனால் குச்சனூரரான் என்ற பெயரும் உண்டு.

கம்பம் பள்ளத்தாக்கில் சுருளி நதி ராஜா வாய்க்காலில் மேற்கு கரையருகில் அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றி சோலைகளும், வாய்க்கால்களும் வயல்களும் நிறைந்து இருக்கின்றது.

**தீர்த்ததொட்டி:**

இயற்கை நீருற்றான "தீர்த்த தொட்டி" என்று அழைக்கப்படும் இத்தலம் தேனியிலிருந்து போடிநாயக்கனூர் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இந்த நீருற்று அருகே அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் வந்து செல்கின்றனர்.





சின்னச்சுருளி அருவியின் இயற்கைக் காட்சிகள்

குற்றாலத்திலும் சரி, தமிழ்நாட்டில் உள்ள அருவிகளிலும் சரி குறிப்பிட்ட காலத்தில் மட்டும் தான் தண்ணீர் கொட்டும். குற்றாலத்தில் 3 மாதம் மட்டுமே தண்ணீரைப் பார்க்க முடியும். ஆனால் சுருளி அருவியில் அப்படி அல்ல. வருடம் 365 நாளும் இங்கே தண்ணீர் கொட்டிக் கொண்டே இருக்கும்.

சுருளி அருவி அமைந்துள்ள மலைக்கு மேலே மேகமலை, பச்சகுமாச்சிமலை, இரவங்கல் மலை, வெள்ளிமலை என வரிசையாக மலைகள் உள்ள இந்த மலைகளில் பெய்யும் மழை தண்ணீர் வழிந்தோடி சுருளி அருவியாக கீழே கொட்டுகிறது. இந்த அருவி 2 ஆயிரம் ஆண்டு கால பெருமை உடையது.

**சுருளி அருவி :**

தேனி மாவட்டம் கம்பம் நகரில் இருந்து 12 கி.மீ தூரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் சுருளி அருவி அமைந்துள்ளது. சுருளி நீர்வீழ்ச்சியானது வானளாவும் மரங்கள்,மரங்களைத் தொட்டுச்செல்லும் மேகங்கள், ரீங்காரமிடும் வண்டுகள், பாடும் பறவைகள், விளையாடும் வானரங்கள் இத்தனைக்கும் நடுவில் வற்றாமலும், வளம் குன்றாமலும் நீர்வீழ்ச்சியை வழங்கிக் கொண்டிருக்கிறது.

3 பக்கமும் விண்ணைமுட்டும் மலைகளும், மரங்களும் சூழ்ந்துள்ள இடத்தில் நடுவில் உள்ள மலையில் சுமார் 150 அடி உயரத்தில் இருந்து சுருளி அருவி கீழே கொட்டுகிறது. அந்த தண்ணீர் கீழே விழுந்த இடத்தில் இருந்து 150 மீட்டர் தூரம் வழிந்தோடி பின்னர் 40 அடி உயரத்தில் கீழே சமதரையில் விழுகிறது. இந்த இடத்தில் தான் ஆண்களும், பெண்களும் தனித்தனியே குளிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

குற்றால அருவியை போலவே சுருளி அருவிக்கும் பல மகிமைகள் உண்டு. இங்கே ஒரே நாளில் எத்தனை தடவை குளித்தாலும் ஜலதோஷம் பிடிக்காது. அரிய மூலிகைகளில் உருண்டு புரண்டு அருவி ஓடி வருவதால் சில நோய்களை தீர்க்கும் சக்தியும் இந்த தண்ணீருக்கு உண்டு. இங்கு குளித்தால் தீராத நோயும் தீர்ந்துவிடும், செய்த பாவங்கள் அகலும் என்றும் நம்பப்படுகிறது.

கோடை கால கடும் வறட்சி காலத்தில் வேண்டுமானால் தண்ணீர் அளவு குறையுமே தவிர முற்றிலும் நின்றுவிடாது. தற்போது 13 கன அடி தண்ணீர் வருகிறது. ஜுன் மாதத்திற்கு பிறகு **தண்ணீர் விழுவது மிகவும் அதிகரிக்கும். ஜுன் 15ல் இருந்து அக்டோபர் வரை 182 கன அடி தண்ணீர்** விழும். அப்போது அருவியைப் பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். குளிப்பதற்கும் மிகவும் ஆனந்தமாக இருக்கும். இந்த காலத்தில் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். பயங்கர இரைச்சலுடன் தண்ணீர் வருவதை அப்போது பார்க்கலாம். தண்ணீரின் நீர்த்துளிகள் 100 மீட்டர் தூரம் வரை அப்போது விசிறி அடிக்கும்.

குற்றாலத்தின் அழகை திரிகூடராசப்ப கவிராயர் வர்ணித்து பாடியது போல சுருளியை பற்றிய விவரங்கள் சிலப்பதிகாரத்தில் பாடலாக இடம் பெற்றுள்ளது.

***கைலாசநாதர் கோவில் குகை :***

அருவியை சுற்றியுள்ள இடங்களில் ராமர் குகை, கருட குகை, காளி குகை, கைலாசர் குகை என 18 குகைகள் உள்ளன. இந்த குகைகளில் சித்தர்களும், முனிவர்களும் தவம் இருந்துள்ளனர். முப்பத்து முக்கோடி தேவர்களும் 48 ஆயிரம் ரிஷிகளுக்கும்

தலைவனான லோககுரு லாட சன்னியாசியப்பன் இங்குதான் வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது.

சுருளி அருவிக்கு மேலே 800 மீட்டர் உயரத்தில் கைலாச நாதர் கோவிலும் குகையும் உள்ளது. இங்கு ஒரு தீர்த்தம் உள்ளது. இங்குள்ள தண்ணீரை எடுத்து பருகினால் பல நோய்கள் தீருவதாகவும் ஐதீகம் உள்ளது.

**அபுபக்கர் மஸ்தான் தர்ஹா :**

கைலாசநாதர் குகைக்கு கொஞ்ச தூரம் தள்ளி அபுபக்கர் மஸ்தான் தர்ஹா உள்ளது. இங்கு அபுபக்கர் மஸ்தான் அடக்கம் செய்யப்பட்டுள்ளார். இவர் 1630ம் ஆண்டுவாக்கில் இங்கு வந்து தங்கிய முஸ்லீம் ஞானி ஆவார். இந்த தர்ஹாவின் நினைவாக மலைக்கு அடிவாரத்தில் சுருளி அருவிக்கு அருகேயும் ஒரு தர்ஹா அமைக்கப்பட்டுள்ளது. இங்கு முஸ்லீம் மக்கள் ஏராளமான பேர் வந்து வழிபடுகிறார்கள்.

**சுருளி வேலப்பர் கோவில்:**


குன்றெங்கும் குடியிருக்கும் குமரன் இந்த மலையில் "சுருளி வேலப்பர்" என்ற பெயரில் குடியிருக்கிறார். அவருக்கு அங்கு மலையிலேயே கோவில் கட்டி இருக்கிறார்கள். அந்த கோவிலை சுருளி வேலப்பர் கோவில் என்று அழைக்கிறார்கள். தேனி மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து சித்திரை மாதத்தின் அனைத்து சனிக்கிழமைகளிலும் பால்குடம் எடுத்து வந்து சுருளி வேலப்பரை தரிசித்துச் செல்கின்றனர்.

**மேகமலை :**

தேனியிலிருந்து சுமார் 55 கி.மீ தொலைவில் உள்ளது. இயற்கை காட்சிகள் நிறைந்த இத்தலம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 1500 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. வனவிலங்குகள் நிறைந்த மலைப்பகுதியாக அமைந்துள்ளது. மேகமலையில் அமைந்துள்ள தேயிலைத் தோட்டங்களும், ஏலத் தோட்டங்களும் காண்போரை கவரும் வண்ணம் அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால் சுற்றுலாப் பயணிகளை கவரலாம்.

**போடிமெட்டு :**

தேனி மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற மலைவாசஸ்தலங்களில் முதன்மை பெற்றுத் திகழ்வது போடிமெட்டு ஆகும். போடியில் இருந்து 26 கி.மீ தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள போடிமெட்டு விண்ணைத் தொடும் மலைகள், பள்ளத்தாக்குகள், ரீங்காரமிடும் வண்டுகள், துள்ளித்திரியும் வானரங்கள், பாடும் பறவைகள் ஆகிய அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்று காண்போரை வியக்க வைக்கும் கண்கொள்ளாக்காட்சிகளை தன்னகத்தே கொண்டுள்ள குளுகுளு மலைப்பிரதேசமாக விளங்குகிறது. சுமார் 4,500 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த மலைப்பிரதேசம் இயற்கை என்னும் கவிஞன் காலம் காலமாகத் தான் எழுத நினைத்த கவிதையை காவியமாக எழுதி வைத்தது போல் அத்தனை அழகையும் மொத்தமாய் சுமந் தடிக்கிறது. சுமார் 1000 மக்கள் தொகை கொண்ட போடிமெட்டுக்கு செல்லும் வழியில் உள்ள காப்பித் தோட்டங்கள் போடி மெட்டுக்கு மேலும் அழகூட்டுகின்றது.



சேசனூர் கோவில்

**புலியருவி :**

போடிமெட்டுக்கு செல்லும் வழியில் தேசிய நெடுஞ்சாலையில் 3 பக்கமும் விண்ணைமுட்டும் மலைகளும், மரங்களும் சூழ்ந்துள்ள இடத்தின் நடுவில் உள்ள மலையில் சுமார் 50 அடி உயரத்தில் இருந்து புலியருவி கொட்டுகிறது.



போடிமெட்டு

ஏராளமான சுற்றுலாப் பயணிகளும், வாகனங்களில் செல்லும் பயணிகளும் சிறிது நேரம் நின்று புலியருவியின் அழகினை கண்டு களித்து செல்கின்றனர்.

**வெள்ளிமலை :**

மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெள்ளி மலை பகுதி கடமலைக்குண்டு கிராமத்திலிருந்து சுமார் 42 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. ஆண்டு முழுவதும் மழைமேகங்களால் சூழ்ந்துள்ள பகுதியாக இருப்பதால் வெள்ளிமலை என்ற பெயர் அமைந்துள்ளதாக தெரியப் பெற்றுள்ளது. ஏலக்காய், தேயிலை மற்றும் காபி முதலிய பயிர்கள் இங்குள்ள விளை பொருட்களாகும். வனவிலங்குகள் அதிகமான அளவில் அடைக்கலம் கொண்டுள்ள இயற்கை சூழ்நிலையுள்ள பகுதியாக அமைந்துள்ளது. மேகமலை ஹைவேவிஸ் எஸ்டேட்டின் தொடர்ச்சியாக மேற்குமலைத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது.

**சின்னச்சுருளி அருவி :**

மயிலாடும் பாறை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சின்னச்சுருளி அருவி தேனியிலிருந்து 54 கிலோமீட்டர் தூரத்தில் கோம்பைத்தொழு கிராமத்தின் அருகே அமைந்துள்ளது. இந்த அருவிக்கு மேகமலை எஸ்டேட் பகுதியில் இருந்து நீர் வருகிறது. கோம்பைத் தொழு கிராமத்தில் இருந்து 3 கிலோமீட்டர் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. அருவி மலைப்பகுதியில் அமைந் துள்ளதால் சுமார் 1.6 கிலோமீட்டர் தூரம் நடைபயணமாக செல்ல வேண்டும். ஆண்டு முழுவதும் இந்த அருவியில் நீர் வந்து கொண்டிருக்கும். வனவிலங்குகள் நிறைந்துள்ள இயற்கை சூழலில் அமைந்துள்ளது.



குச்சனூர் கோவில்

**ராயப்பன்பட்டி தேவாலயம் :**

சுருளி தீர்த்தம் செல்லும் வழியில் ராயப்பன்பட்டி கிராமத்தில் நூற்றாண்டுக்கு மேல் பழமை வாய்ந்த பனிமயமாத தேவாலயம் உள்ளது. இது தேனியிலிருந்து 35 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. ஏப்ரல் மாதம் தூய வெள்ளி அன்று பசலிக்கரக விழா மிகவும் பிரசித்தம் பெற்றது.

– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.

# காவலர் குடியிருப்பு திறப்பு விழா

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 10.6.2002அன்று தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் சார்பாக சென்னை எழும்பூர் நரியங்காடு லாங்க்ஸ் தோட்டச் சாலையில் கட்டப்பட்டுள்ள 192 காவலர் குடியிருப்புகளை திறந்து வைத்து, புதியதாக கட்டப்பட உள்ள 64 காவலர் குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும் "தி எகனாமிக் டைம்ஸ்" நாளிதழின் சார்பாக தயாரிக்கப்பட்டுள்ள "சென்னை மாநகர காவல்"- சிறப்பு கையேட்டினை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

சென்னை எழும்பூரில் உள்ள மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தின் அருகில் நரியங்காடு லாங்க்ஸ் தோட்ட சாலையில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் சார்பாகஅடிப்படை வசதிகள் முழுமையாகக் கொண்ட 192 காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 64 புதிய காவல் குடியிருப்புகள் இதே வசதியில் கட்டப்படவுள்ளன. இந்தக் குடியிருப்புகளின் திறப்பு விழாவும். கட்டப்படவுள்ள குடியிருப்புகளின் கால்கோள் விழாவும் 10.6.2002 மிகவும் சிறப்புடன் நடைபெற்றது. காவலர்களுக்கென கட்டப்பட்டுள்ள புதிய குடியிருப்புகளை திறந்து வைக்கவும், கட்டப்படவுள்ள குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டவும் வருகை தந்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, காவல் துறைத் தலைமை இயக்குநர் திரு.பி.பி.நெயில்வால், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ஐ.கே.கோவிந்த், மற்றும் சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு.கே. விஜயகுமார் ஆகியோர் வரவேற்றனர். பின்னர் காவல் உதவி ஆய்வாளர் விஜயலட்சுமியின் தலைமையிலான பெண் காவலர் படை அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் அவர்கள் ஏற்று கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, தமிழக முதலமைச்சர் அவர்கள் புதிய குடியிருப்புகளை திறந்து வைத்து, மேலும் புதிதாக கட்டப்படவுள்ள 64 காவலர் குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். இக்குடியிருப்புகளின் முதல் வீடான ஏ-1 இல்லத்தில் குத்து விளக்கேற்றி வைத்தார். இதனையடுத்து, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் சார்பாக அதன் செயல்பாடுகளை விளக்கி வைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சியினை பார்வையிட்டார். பின்னர் அருகே அமைக்கப்பட்டிருந்த எளிய மேடையில் குடியிருப்புகளின் ஒதுக்கீடுதாரர்களுக்கு அவர்களுக்குரிய இல்லங்கள் வழங்கப்பட்டதற்கு அடையாளமாக மூன்று காவலர் தம்பதியினருக்கும், ஆறு காவலர்களுக்கும் அவர்களது இல்லங்களின் சாவிகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து,"தி எகனாமிக் டைம்ஸ்" நாளிதழ் சார்பாக, தயாரிக்கப்பட்டுள்ள சென்னை மாநகரக் காவல் பற்றிய சிறப்பு கையேட்டினை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். இந்த கையேட்டின் முதல் பிரதியை உள்துறை செயலாளர் திரு.நரேஷ் குப்தா அவர்கள் பெற்று கொண்டார்.



மேலும் காவல்துறை தலைமை இயக்குநர் திரு.பி.பி.நெயில்வால்,காவலர் வீட்டுவசதிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. ஐ.கே.கோவிந்த். சென்னை மாநகர காவல் ஆணையர் திரு.கே.விஜயகுமார், சென்னை மாநகர காவல் துறை இணை ஆணையர் (போக்குவரத்து), திரு. உமா கணபதி சாஸ்திரி ஆகியோரும் முதலமைச்சர் அவர்களிடமிருந்து இந்த கையேட்டினை பெற்று கொண்டனர். இந்நூலின் சென்னை மாநகர காவல் பணிகள் பற்றியும், குற்றங்களுக்கு எதிராக மக்கள் பெறவேண்டிய விழிப்புணர்வு பற்றியும், குற்றங்களைக் களைய இரவு பகல் பாராது பணியாற்றும் காவல்துறைக்கு பொதுமக்கள் அளிக்கவேண்டிய ஒத்துழைப்பு பற்றியும், குற்றங்களைக் களைய இரவு பகல் பாராது பணியாற்றும் காவல் துறைக்கு பொதுமக்கள் அளிக்கவேண்டிய ஒத்துழைப்பு பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ★



# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை :**

*திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்டம், மாவல்வாடி அஞ்சல் படூர் கிராமம் அரிஜன காலனியில், எங்கள் காலனியில் இருந்து வேப்பங்கரணை செல்லும் பாதை மிக மோசமாக மேடு மேடாகவும் பள்ளமாகவும் உள்ளது. எங்கள் காலனியில் இருந்து கூட்டுறவு கடைக்குச் செல்வதாக இருந்தால் நாங்கள் படூர் ஊர் சுற்றி போய் ஆகவேண்டும். எங்கள் ஊரில் இருந்து படூர் வரைக்கும் செல்லும் பாதை இன்னும் சீர் அமைக்கப்படவில்லை. எங்கள் காலனியில் இருந்து சுமார் 200 குழந்தைகள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கும் வேப்பங்கரணை கிராமத்துக்குச் சென்று படிக்கின்றனர். எங்கள் ஊரில் உள்ள சத்துணவு கூடத்தில் இருந்து சரியான முறையில் சத்துணவு போடுவது கிடையாது. வருகின்ற அரிசியை அவர்கள் வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்துகிறார்கள். இதற்கு தக்க தீர்வு காணுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

ஊர் பொதுமக்கள், படூர் கிராமம், வந்தவாசி
திருவண்ணாமலை மாவட்டம்.

**தீர்வு :**

மாவல்வாடி சாலையில் இருந்து படூர் கிராமம் காலனி வரை சாலை வசதி கோரியதில், இதன் நீளம் 1.2 கி.மீ. ஜல்லி சாலையாக உள்ளது. மிகவும் பள்ளம் மேடாக உள்ளதை இரண்டு லேயர் ஜல்லி மற்றும் **தார்சாலையாக** அமைக்க ரூ.6.90 இலட்சம் செலவினம் ஆகும்.

மேலும் படூர் கிராமத்தில் இருந்து படூர் காலனி வரை நீளம் 1.5 கி.மீ. கிராவல் சாலையாக உள்ளது. இச்சாலையை இரண்டு அடுக்கு ஜல்லி மற்றும் தார்சாலையாக மேம்பாடு செய்துதர ரூ.8.60 இலட்சம் செலவினம் ஆகும் என ஒன்றிய பொறியாளர் தெரிவிக்கின்றார். தற்போது ஒன்றிய பொதுநிதியில் போதுமான நிதி வசதி இல்லை.

எனவே, மேற்படி வேலைகளை எடுத்து செய்ய இவ்வூராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாததால் இவ்வேலைக்கு தனி ஒதுக்கீடு வழங்கினால், சாலைகள் மேம்பாடு செய்ய இயலும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், படூர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி சத்துணவு மையத்தில் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவுகள் சரியாக போடுவதில்லை என்றும், தமிழரசு புகார் மனு மீது விசாரணை செய்ததில், படூர் சத்துணவு மையத்தில் அமைப்பாளர், சமையலர் மற்றும் உதவியாளர் மூவரும் பணியில் இருந்தனர். அரிசி மற்றும் உணவு பொருட்கள் எவரும் வீட்டுக்கு எடுத்து செல்வதில்லை என்றும், சத்துணவு மையம் பள்ளிக்கு அருகில் ஊராட்சி அலுவலகம் இருப்பதாலும், மக்கள் நடமாட்டம் எப்பொழுதும் இருந்துகொண்டே இருப்பதால், உணவு பொருட்கள் பாதுகாப்பாக உள்ளது என பொதுமக்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும், உணவு வழங்குவது குறித்து மாணவ–மாணவிகளிடம் விசாரித்ததில், உணவு நன்றாக சமைக்கப்பட்டு, நல்லமுறையில் வழங்குகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்கள். சத்துணவு மையத்தில் பொருட்களில் இருப்பு சரியாக உள்ளது என விசாரணை செய்ததில் தெரியப்படுகிறது. முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், தெள்ளார்.*

**பிரச்சினை :**

*புதிய அரியலூர் – திட்டக்குடி நெடுஞ்சாலை 1. எடுத்துக்காரன்பட்டி ஊராட்சி 2. கோவிந்தபுரம் ஊராட்சி 3. மனக்கால் ஊராட்சி இம்மூன்று ஊராட்சியும் உள்ளடக்கிய சாலை புதிய அரியலூர் – திட்டக்குடி நெடுஞ்சாலை என விளம்பரம் செய்து பெயர் பலகை நடப்பட்டு ஏறத்தாழ 10 ஆண்டுகளாகிறது. இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. தமிழக அரசுக்கு பலமுறை இக்கோரிக்கையை தெரியப்படுத்தி உள்ளோம். எங்கள் பகுதியில் 1. கொத்தவாசம் 2. சுப்பராயபுரம் 3. மனக்காலி 4. கோவிந்தபுரம் 5. மங்களம் 6. கீழமாத்தூர் 7. ஜெயராமபுரம் 8. மகாலிங்கபுரம் 9. எடுத்துக்காரன்பட்டி ஆகிய 9 கிராமங்கள் உள்ளது. ஏறக்குறைய 15,000 பேர் பொதுமக்கள் வசிக்கிறார்கள். மேற்கண்ட 3 ஊராட்சிகளில் உள்ள பள்ளிக்கூடம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பிற அரசு அலுவலர்கள் குறித்த நேரத்திற்கு பணிக்கு வரமுடியவில்லை. மற்றும் பள்ளிக்கூட மாணவ மாணவிகள் உயர்நிலைப்பள்ளி கல்லூரிக்கு குறித்த நேரத்திற்கு செல்ல முடியவில்லை. ஆபத்தான நோயாளிகள், பிரசவ வேதனைபடும் பெண்களை பொது மருத்துவமனை கூட்டி போக முடியவில்லை. விவசாய விளைபொருளை, விளைபொருள் விற்பனைக்கூடம் எடுத்துப் போக முடியவில்லை. போதிய அரசுப் பேருந்தும் இல்லை. போதிய*

*மினி பஸ்சும் இல்லை. எங்கள் ஊராட்சிப் பகுதி மிகவும் நலிவடைந்த ஊராட்சியாகும். அரசு பேருந்தை நம்பி இருக்கின்றோம். ஆகவே, அரசு அறிவித்துள்ளபடி புதிய அரியலூர் – திட்டக்குடி சாலையை சீர்செய்து நெடுஞ்சாலையாக அறிவித்து அனைத்து வாகனத்தையும் இயக்கினால் 15,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலன் அடைவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். 1. மனக்கால் 2. கோவிந்தபுரம் ஆகிய இரண்டு ஊராட்சிகளிலும் கால்நடை மருத்துவமனை இல்லாததால் 8 கி.மீ. தொலைவில் உள்ள அரியலூர் செல்ல வேண்டி உள்ளது. கால்நடை பிராணிகளின் நோயை குறித்த நேரத்தில் குணப்படுத்த முடியாமல் உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. மணக்காலி கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை கட்டிக் கொடுத்தால் 7 கிராமங்களில் உள்ள கால்நடை பிராணிகளை காப்பாற்றிட வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்து மேற்கண்ட எங்களது பிரச்சினையை தீர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

மா. பெரியசாமி, தலைவர், மருக்கா ஊராட்சி
அரியலூர் ஊராட்சி ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.

**தீர்வு :**

அரியலூர் – திட்டக்குடி நெடுஞ்சாலை 1. எடுத்துக்காரன்பட்டி ஊராட்சி 2. கோவிந்தபுரம் ஊராட்சி 3. மணக்கால் ஊராட்சி இம்மூன்று ஊராட்சியும் உள்ளடக்கிய சாலை புதிய அரியலூர் திட்டக்குடி நெடுஞ்சாலை என விளம்பரம் செய்து பெயர்ப் பலகை எதுவும் வைக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இருப்பினும், புதிய அரியலூர்–திட்டக்குடி சாலை என்பது மூன்று சாலைகளாக வகைப்படுத்தப்படுகிறது. இதில் 1. கி.மீ.0/0–5/0 வரை அரியலூர் (நெஊபது) உட்கோட்ட பராமரிப்பில் உள்ள அரியலூர்–கோவிந்தபுரம் எனும் இதர மாவட்ட சாலை ஆகும். இது நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு எல்லாக் காலங்களிலும் வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றதாக வைக்கப்பட்டுள்ளது.

2. கி.மீ.0/0–3/0 வரை கோவிந்தபுரம்–வெண்மணி சாலை எனும் ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இந்த சாலை வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

3. இக்கோட்டக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள குன்னம் (நெஊபது) உட்கோட்டப் பராமரிப்பில் உள்ள மாத்தூர்–திட்டக்குடி சாலையான (கி.மீ.0/0–26/0 வரை) பெரிய மாவட்ட சாலையாகும். இந்த சாலையில்தான் கி.மீ. 4/4 (வெண்மணி) என்கிற இடத்தில் அரியலூர்–கோவிந்தபுரம் சாலையும் (இதர மாவட்ட சாலை) மற்றும் கோவிந்தபுரம் – வெண்மணி சாலையும் (ஊராட்சி ஒன்றிய சாலை) இணைகிறது.

இந்த பெரிய மாவட்ட சாலையான மாத்தூர்–திட்டக்குடி சாலையில் கி.மீ.8/4–9/4, 13/0–14/0, 15/4–17/0, 17/10, 19/4, 20/4, 8,10, 21/2,4, 22/6, 24/2 வரை மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் ரூ.20,00,000க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மீதமுள்ள பகுதியில் தார் நொடிகள் அவ்வப்பொழுது போடப்பட்டு சாலை போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை மற்றும்*
*ஊரகப் பணித்துறை, அரியலூர் – 621 704.*

**பிரச்சினை :**

*விருதுநகர் எம்.எஸ்.பி.நகர் நகரளவை வார்டு எண்.18 நகரளவை எண்.728/3 பகுதியில் 5–93 ஏக்கர் தயாளன் ராஜேஸ் காலனி இடம் மனைப்பிரிவில், 5 எண்ணம் குழல் விளக்குகள் மட்டுமே உள்ளது. இந்த மனைப்பிரிவு உள்ள இடம் நகரில் எக்ஸ்டன்ஷன் ஏரியா இந்த மலைப்பிரிவில் இதுவரை நிறைய குடியிருப்புகள் கட்டப்பட்டு குடியிருப்புகள் வந்துவிட்டன. சர்ச் ஒன்றும் உள்ளது. மேலும் நிறைய குடியிருப்புகள், கல்யாண மண்டபம், அரசின் சிறுவர்கள் விளையாடும் இடம் ஒன்றும் வர இருப்பதாக தெரிய வருகின்றது. தெரு விளக்குகள் இல்லாததால் இரவு நேரங்கள் கள்வர் பயம், பாம்பு போன்ற பூச்சிகளுக்கு பயப்படக்கூடிய சூழ்நிலை உள்ளது.*

*ஆகவே, ஆணையர் அலுவலக கடிதம் ந.க.எண்.இ2/11955/94 நாள் : 2–1–97ன்படி ஏற்கெனவே அமைந்த 5 தெரு விளக்குகள் போக மீதம் 20 தெரு விளக்குகளை அமைக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.*

கே.எஸ்.எஸ்.எல். சண்முகம், 54, சவுண்டித் தெரு
அல்லம்பட்டி, விருதுநகர்–626 001

**தீர்வு :**

விருதுநகர் எம்.எஸ்.பி.நகர் விரிவமைப்புத் திட்டம் நகளவை வார்டு எண்.18 நகரளவு எண்.728/3 பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் புதிய தெருவிளக்குகள் அமைக்க கோரப்பட்டுள்ளது.

இந்நகராட்சி மூலம் 5 எண்ணம் சூழல் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் நகராட்சியில் போதுமான நிதி இல்லை. ஆதலால் அடிப்படை வசதிகள் திட்டத்தில் தெருவிளக்குகள் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு திட்டப்பிரேரணைகள் இவ்லுவலகம் மூலம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசு நிதி ஒதுக்கீடு வந்தவுடன் முன்னுரிமை தந்து மேற்படி இடத்தில் தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*ஆணையாளர், விருதுநகர் நகராட்சி, விருதுநகர்.*



**பிரச்சினை :**

*மருதூர் கிளை நூலகத்தில் மாடு அடைக்கும் பட்டியை நிலம் உரிமை மாற்றம் **செய்யப்பட்டுள்ளது** மேலும், புதிய நூலக கட்டடம் அமையவிருக்கும் இடம் 30 x 30 நிலம் அகலம் கொண்டது. இந்த இடத்தில் 2ஆம் நிலை நூலகம் போன்று, படிக்கும் (வாசகர்) அறை, குறிப்பு எடுக்கும் அறை மற்றும் நூல்கள் வைக்க விசாலமான தனி அறையும், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், தேர்வாளர்கள் படிப்பதற்கு தனி அறை போன்ற மூன்றடுக்கு மாடி கொண்ட கட்டடம் கட்டித்தருமாறு தங்கள் துறை மூலம் மீண்டும், தமிழ்நாடு பொது நூலக துறை இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை கடிதம் அனுப்பி எங்களது கனவை நனவாக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.*

– ஊர் பொது மக்கள் சார்பாக,
நேரு இளைஞர் நற்பணி மன்றம்
மருதூர் அஞ்சல், குளித்தலை வட்டம்
கரூர் மாவட்டம் – 639 107

**தீர்வு :**

கரூர் மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் செயல்படும் மருதூர் கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 90 சதுர மீட்டர் அளவுள்ள நிலம் பெறப்பட்டுள்ளது.

அனைத்து வசதிகளும் கொண்ட நூலகக் கட்டடம் கட்ட சென்னை பொது நூலக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரைத்து 2002–2003ஆம் நிதியாண்டில் கட்டடம் கட்ட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அன்புடன் தெரிவிக்கப்படுகிறது.

*– மாவட்ட நூலக அலுவலர், கரூர் மாவட்டம்*

**பிரச்சினை :**

*வடமலைக்குறிச்சி கிராமம் விருதுநகர் மாவட்டம். எங்கள் ஊரில் சுமார் 35 ஆண்டுகளாக அரசினர் உயர்நிலைப்பள்ளியில் உள்ள இதுவரை +2 வகுப்பு ஆரம்பிக்கவில்லை. எங்கள் ஊர் மக்கள் தொகை 8000. எங்கள் ஊர் சுற்றி 10 கி.மீ. தூரத்திலிருந்து படிக்க வருகின்றனர். +2 இல்லாததால் குழந்தைகள் மிகவும் கஷ்டப்பட வேண்டியுள்ளது. இதனால் குழந்தைகள் கல்வி அறிவு நின்றுவிடுகின்றது. வசதி இல்லாதவர்கள் விருதுநகரில் படிக்க வைக்க முடியவில்லை. கிராம அலுவலக அதிகாரி, பஞ்சாயத்து தலைவர், தாசில்தார், மாவட்ட கலெக்டர் ஆகியோர் சொல்லியும் 10 வருடமாக யாரும் கண்டுகொள்ளவில்லை. இப்பொழுது 10வது வரை வெறும் பெண்கள் டீச்சராக உள்ளார்கள். பாடம் சரிவர சொல்லித் தருவதில்லை. ஊர் குழாயில் ஒரு நபர் ஒன்றுக்கு 3 குடம் மேல் பிடிக்கக்கூடாது என்று சொல்லியும் யாரும் கேட்பதில்லை. தண்ணீர் வசதி மற்றும் பஸ் வசதி இல்லை. இதற்கு தீர்வு காணுமாறு கேட்டு கொள்கிறேன்.*

ஊர் பொதுமக்கள் சார்பாக குணசேகரன்
வடமலைக்குறிச்சி, விருதுநகர்

**தீர்வு :**

அரசு உயர்நிலைப் பள்ளி, வடமலைக்குறிச்சியினை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவது சார்பான கருத்துரு ஏதும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை.

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக்கோரும் கருத்துரு பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் அரசுக் கணக்கில் செலுத்தி செல்லுச்சீட்டுடன் விண்ணப்பத்தினை அனுப்பினால் அதனை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்படும் என்ற விவரத்தினை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

*முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)*
*விருதுநகர் மாவட்டம், விருதுநகர்.*

## புதிய இடைநிலை பட்டதாரி ஆசிரியர்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது 15 அம்சங்களை உள்ளடக்கிய திட்டங்களில் "பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை கல்வியைத் தரம் உயர்த்துவதில் கவனம் செலுத்துதல்'' என்ற திட்டமும் அடங்கும். இதனைக் கருத்தில் கொண்டு அரசு, ஒன்றிய, நகராட்சி, நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் (அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் உட்பட) 6, 7, 8 ஆகிய வகுப்புகளில் தற்போதுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் காலி ஏற்பட, ஏற்பட அவ்விடங்களுக்குப் பதில் "இடைநிலை பட்டதாரி ஆசிரியர்'' அதாவது "Middle grade graduate-teacher" என்ற புதிய பதவியினை படிப்படியாக உருவாக்கி அப்பதவிகளுக்கு ஆங்கிலம், அறிவியல், கணிதம், பாடங்களைக் கொண்ட பி.எட்., தகுதி பெற்ற ஆசிரியர்களை ரூ.4625–125–7000 என்ற ஊதிய விகிதத்தில் 2002–2003–ஆம் கல்வியாண்டு முதல் நியமிக்கப்படவுள்ளது. இந்த Middle grade graduate-teacher post – பணியிடங்களானது ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் போட்டி எழுத்துத் தேர்வு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வகை ஆசிரியர்கள் நியமனம் பெற்றபின் குழந்தைகள் மன இயல் குறித்து பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது.**

# மனை-வீடு விற்பனை

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், ஐசிஐசிஐ வங்கியுடன் இணைந்து, வீடுகள்/ மனைகள்/அடுக்குமாடி வீடுகள் ஆகியவற்றை விற்பதற்கான விற்பனை விழா ஜூன் 7,8 மற்றும் 9 தேதிகளில் தந்தை பெரியார் சமுதாயக்கூடம், அண்ணாநகர் மேற்கில் நடைபெற்றது. இவ்விழாவை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் 7.6.2002 அன்று துவக்கி வைத்தார்.

இந்த விற்பனை விழாவில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளுவர் ஆகிய மாவட்டங்களில் வீட்டு வசதி வாரிய கோட்டங்களில் உள்ள வீட்டுமனைகள்/ வீடுகள்/ அடுக்குமாடி வீடுகள் ஆகியவற்றின் விவரங்கள் பொதுமக்கள் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்பட்டுள்ளது.இந்த அரங்கில் ஒவ்வொரு கோட்டத்திற்கும் தனித்தனியாக இடம் ஒதுக்கப்பட்டு அந்தந்த கோட்டத்தின் அலுவலர்கள் பொதுமக்களுக்கு அவரவர் கோட்டத்தில் உள்ள வீடுகளின் விவரம் மற்றும் அத்திட்டப் பகுதியின் சிறப்பு இயல்புகள் ஆகியவற்றை வீளக்கி கூறுவார்கள்.

மேலும் இந்த விற்பனை விழாவில் மனைகள் / அடுக்குமாடி குடியிருப்புகள் வாங்க விரும்புவோர் உடனடியாக ரூ.5,000/- முன்பணம் செலுத்தி பதிவு செய்து கொண்டு, மீதி செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகையையோ அல்லது முழுத் தொகையையோ பதினைந்து தினங்களுக்குள் செலுத்தினால், செலுத்தும் தொகையில் விழாக்கால சிறப்புச் சலுகையாக 1% தள்ளுபடி அளிக்கப்படும்.

கடந்த பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பரிசு பொருள் அறிவித்து விற்கப்பட்ட வீடுகளின் ஒதுக்கீடுதாரர்கள் 26 பேருக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி ஆகியவற்றை ஒதுக்கீடுதாரர்களுக்கு மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் இவ்விழாவில் வழங்கினார்.

மேற்கண்ட விற்பனை விழாவில் முகப்பேர் அண்ணாநகர், எஸ்.ஏ.எப். கேம்ஸ் வில்லேஜ், பாடிக்குப்பம், வில்லிவாக்கம், அம்பத்தூர், ஆவடி, ஆலப்பாக்கம், கும்மிடிப்பூண்டி, காக்களூர், கே.கே.நகர், கொடுங்கையூர், மாதாவரம், மதுராந்தகம், மதுரவாயல், மணலி, எம்.கே.பி.நகர், நெசப்பாக்கம், நொலாம்பூர், பெருமாள்பட்டு, புலியூர், சென்னியம்மன் கோயில், செவ்வாப்பேட்டை, தாம்பரம், திருமுல்லைவாயில், திருவள்ளூர், திருவான்மியூர், வால்மீகி நகர், திரூர், டிரஸ்ட்புரம் ஆகிய திட்டப்பகுதியில் உள்ள வீட்டுமனைகள் / வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவற்றின் விவரங்கள் வைக்கப்பட்டிருந்தன.

மேலும் ஐசிஐசிஐ வங்கியுடன் இணைந்து இந்த விழாவில் வீட்டுமனைகள் / வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகள் விற்கப்பட உள்ளதால் ஐசிஐசிஐ வங்கி அரங்கிலேயே உடனடியாக கடன் வழங்க மேற்கண்ட வங்கியின் கிளை ஒன்றும் விற்பனை விழாவில் அமைக்கப்பட்டிருந்தது.



## புதுமைப்பித்தன் படைப்புகள் நாட்டுடைமையாகின்றன

சிறுகதைகளுக்குப் புத்துயிர் ஊட்டி, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த எழுத்தாளர் புதுமைப்பித்தனின் இலக்கியப் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடமையாக்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். மேலும் இதன் தொடர்பில் எழுத்தாளர் புதுமைப்பித்தனின் மரபுரிமையாளருக்கு ரூ.5 இலட்சம் பரிவுத் தொகை வழங்கிடவும் முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

தமிழ் சிறுகதைகளின் முன்னோடியும், கதை இலக்கிய மேதையுமான புதுமைப்பித்தன் 100 சிறுகதைகளுக்கு மேல் எழுதியவர் ஆவார். பழமையும், புதுமையும் இணைந்த வண்ணம் நம் நாட்டு மரபுகளும், மேல்நாட்டு மரபுகளும் பின் னிவர கதைகள் தந்தவர். உலகத்தின் சிறந்த சிறுகதைகளை தமிழ் மக்கள் அறியும் வண்ணம் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தவர். தமிழ் சிறுகதை இலக்கியத்தை உலகத் தரத்திற்கு உயர்த்தியவர்.

இவர் நாடகங்கள், கட்டுரைகள், மதிப்புரைகள், நாவல்கள் என்று பல்வேறு இலக்கியப் படைப்புகள் உருவாக்கியதோடு மொழி பெயர்ப்புத் துறையிலும் சிறந்து விளங்கினார்.

காலத்தை வென்று நிற்கும் அவரது இலக்கியப் படைப்புகளை நாட்டுடமையாக்கம் செய்ய வேண்டி தமிழறிஞர்களும், எழுத்தாளர்களும், பத்திரிக்கையாளர்களும் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். இதனை பரிவுடன் பரிசீலனை செய்த முதலமைச்சர் அவர்கள் எழுத்தாளர் புதுமைப்பித்தனின் இலக்கியப் படைப்புகள் அனைத்தும் பொதுமக்களை எளிதில் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் அவற்றை நாட்டுடமையாக்கம் செய்து ஆணை பிறப்பித்துள்ளார். மேலும் இதன் தொடர்பில் எழுத்தாளர் புதுமைப்பித்தனின் மரபுரிமையாளருக்கு ரூ.5 இலட்சம் பரிவுத் தொகையாக வழங்கவும் ஆணை பிறப்பித்துள்ளார்.

## திருமதி கு.ப.சேது அம்மாள் படைப்புகள் நாட்டுடமையாகின்றன

தமிழ் இலக்கிய வரலாற்றின் மணிக்கொடி காலப் படைப்பாளரும், திரு கு.பராசகோபாலன் (கு.ப.ரா.) அவர்களின் தங்கையுமான இலக்கிய எழுத்தாளர் திருமதி கு.ப.சேது அம்மாள் அவர்களின் படைப்புகளை நாட்டுடமையாக்கி பரிவுத் தொகையாக ரூ.5 இலட்சத்தினை தமிழக அரசு எடுக்க உள்ள திரு.கு.ப.ரா. அவர்களின் நூற்றாண்டு விழாவின் போது, வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார். திரு.கு.ப.ரா. அவர்களின் மகன் திரு.பட்டாபிராமன் மற்றும் திருமதி கு.ப.சேது அம்மாள் ஆகியோர் பரிவுத் தொகையை பெற்றுக் கொள்ளவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் தனது மகனுடன் வசித்து வரும் 94 வயதான தமிழ் இலக்கிய எழுத்தாளர் திருமதி. கு.ப.சேது அம்மாள் அவர்கள் தற்போது தமிழக அரசின் மூலம் அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர் நிதி உதவி திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.500 பெற்று வருகிறார். இருந்த போதிலும், தாம் வறுமையில் வாடுவதாகவும், தனது படைப்புகளான 8 நாவல்களையும் 119 சிறுகதைகளையும், 4 சிறு கதை தொகுதிகளையும், சமய நூல் பற்றிய 2 நூல்களையும் வானொலியில் 10 தலைப்புகளில் பேசியவற்றையும் நாட்டுடமையாக்கி நிதி உதவி வழங்குமாறும் கோரியிருந்தார்.

இவர்களது குடும்ப சூழ்நிலையினை பரிவுடன் பரிசீலித்த முதலமைச்சர் அவர்கள், இவர்களது கோரிக்கையை ஏற்று திருமதி. கு.ப.சேது அம்மாள் அவர்களின் படைப்புகளை நாட்டுடமையாக்கியதோடு, தமிழக அரசு சார்பில் கொண்டாடப்பட உள்ள திரு.கு.ப.ரா. அவர்களின் நூற்றாண்டு விழாவின் போது அவரது மகன் திரு.பட்டாபிராமன் அவர்களுக்கு 2 இலட்ச ரூபாயும், கு.ப.இராசகோபாலன் அவர்களின் தங்கை திருமதி.கு.ப.சேது அம்மாள் அவர்களுக்கு 3 இலட்ச ரூபாயும் ஆக மொத்தம் 5 இலட்ச ரூபாய் பரிவுத் தொகையாக வழங்க ஆணையிட்டுள்ளார்.

# குறவஞ்சி

□ இரா. குமரவேலன்

தமிழ் இலக்கிய வகையில் தனித்தன்மை வாய்ந்ததாகத் திகழ்வது குறவஞ்சி நாடக வகையாகும். ஏறத்தாழ முந்நூறு ஆண்டுக்கால வளர்ச்சியை உடைய குறவஞ்சி இயல்,இசை,நாடகம் என்னும் மூன்று நிலைகளிலும் சிறப்புப் பெற்றது. தொல்காப்பியர் கூறிய 'விருந்து', 'புலன்' ஆகிய வனப்புகளுக்கு எடுத்துக் காட்டாகத் தோன்றி வளர்ந்தது குறவஞ்சி. புதியன படைக்க விரும்பிய புலவர் பெருமக்களுக்குக் குறவஞ்சி நிலத்தைக் களனாகக் கொண்ட குறவர் வாழ்வியல் மனத்தை ஈர்ப்பதாக இருந்திருக்க வேண்டும்.

அகவன் மகளாகச் சங்க இலக்கியத்தில் காட்சி தரும் குறத்தி ஓர் இலக்கியத் தகுதியைப் பிற்காலப் புலவர்களிடம் பெற்றாள். முதலாவதாக இவ்வகையில் தோன்றிய சிற்றிலக்கிய வடிவம் 'குறம்' என்பது; குறவன், குறத்தி, நூவன் முதலான பாத்திரங்களைக் கொண்டதாக அது அமைந்து, குறி சொல்லுதலை மையமாகப் பெற்றிருந்தது. 'மீனாட்சியம்மை குறம்' முதலானவற்றை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

இதனை அடுத்துத் தோன்றிய வகை 'குறத்திப் பாட்டு' என்பது. இது பற்றிச் சதுரகராதி சில செய்திகளை இயம்புகிறது. தலைவன் 'பவனி வருதல்' தொடங்கிக் 'குறத்தி விடை கூறல்' என்பது ஈறாகப் பல உறுப்புகளைப் பெற்று வருவது குறத்திப் பாட்டு.

'குளுவ நாடகம்' இதன் அடுத்த வளர்ச்சி; குளுவன் தோன்றுதல், சிங்கன் வருதல், சித்து வித்தை கூறுதல், வேட்டைக்குத் தெய்வம் பராவல், பறவைகளைக் காணல், பறவைகள் வருதல், பறவைகள் சேர்தல், பறவைகள் மேய்தல், கண்ணி கொண்டு வருதல், கண்ணி ஊன்றுதல், பறவை சிக்குதல், பறவை எண்ணுதல், கொடை வேண்டுதல், சிங்கியைத் தேடுதல், சிங்கன் சிங்கி உரையாடல் ஆகிய பதினைந்து உறுப்புகளோடு, முதலில் காப்புப் பகுதியையும் இறுதியில் வாழ்த்துப் பகுதியையும் கொண்டு விளங்குவது குளுவ நாடகம்.

'குறத்திப் பாட்டு' வடிவத்தில் காணும் 'குறி சொல்லுதல்' ஆகிய முக்கிய பகுதியும், 'குளுவ நாடக' வடிவத்தில் காணும் 'பறவை வேட்டை' ஆகிய பகுதியும் இணைந்து, தலைவன் – தலைவி காதல் கூறும் பகுதியோடு சேர்ந்து விளங்குவதே 'குறவஞ்சி' ஆகும்.

குறவஞ்சி நாடகத்தின் இறுதியில் வரும் சிங்கன் – சிங்கி காதல் பகுதியில் காணப்பெறும் அனைத்தும் குளுவ நாடகத்திலும் காணப்படுகின்றன. ஆனால், குறவஞ்சியில் உள்ள குறி கூறும் பகுதி குளுவ நாடகத்தில் இடம் பெறவில்லை.

குறம், குறத்திப்பாட்டு, குளுவ நாடகம், குறவஞ்சி ஆகிய எல்லா வடிவங்களுக்கும் அடிப்படை கிளவித் தலைவனின் பெருமை கூறுதலும், பாட்டுடைத் தலைவனின் புகழைப் பறை சாற்றுதலும் ஆகும்.

## முத்தமிழ் நாடகம்

குறவஞ்சி முதலும் முடிவுமாக ஒரு நாடகமே என்றாலும் முத்தமிழின் கூறுகள் இணைந்த ஒன்றாகவே காட்சியளிக்கிறது. நமக்குக் கிடைத்துள்ள முதல் குறவஞ்சி நூலான திருக்குற்றாலக் குறவஞ்சியிலிருந்து பெரும்பாலானவை இலக்கியத் தரம் உடைய கவிதைகளைக் கொண்டனவாக – இயல் நூல் என்று கருதப்படக் கூடியவையாக அமைந்துள்ளன.





இசை, குறவஞ்சி நூல்களில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது; இடையிடையே வரும் அகவல், விருத்தம், வெண்பா நீங்கலாக மற்றப் பகுதிகள் அனைத்தும் இசையால் சிறப்புப் பெறத்தக்க வகையில் எழுதப்பட்டுள்ளன. பல்வகை ராக தாளங்களை ஆசிரியர்கள் பயின்றுள்ளனர். டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நூலுக்கு நூன்முகம் எழுதும்போது இந்நூல் 'கீர்த்தன ரூபமானது' என்று குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து எல்லாக் குறவஞ்சி நூல்களுக்கும் பொருந்துவதாகும்.

குறவஞ்சி நூல்களின் இசை தனியே ஆராயப்பட வேண்டியதாகும். எந்த எந்தக் கட்டங்களில் எவ்வெவ்வகையான இராகங்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன என்பதையும், எவை பயன்படுத்தப்பெறல் வேண்டும் என்பதையும் ஆராய்வது இவ்வகை இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைநிற்கும். தியாகேசர் குறவஞ்சியை வெளியிட்டுள்ள இசையறிஞர் வே. பிரேமலதா அவர்கள் அந்நூலின் பாடல்களை ராக தாள சுரக் குறிப்புகளுடன் மிக விரிவாக விளக்கியுள்ளது ஈண்டு நினைத்தற்குரியது. இத்துறையில் மேலும் ஆராய்ச்சி தேவை.

''குறவஞ்சியில் காணப்படும் இராகங்கள் யாவும் சுத்தமான நாட்டுப்பாடல் மெட்டுகளுடன் கூடிய சக்தி ராகங்களேயாகும். விறுவிறுப்பான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய நாட்டியங் களுக்கு ஏற்ற ஜதிக் கோவைகள் சாகித்தியங் களின் இடையில் பொருத்தப்பட்டுள்ளன'' என்கிறார் வே. பிரேமலதா.

மூன்றாவதாக, குறவஞ்சி நாடகம் என்று கருதப்படுதலைக் குறிக்கலாம்; பொதுவாக நாடகம் எனினும் 'நாட்டிய நாடகமாகவே' பெரிதும் நடிக்கப் பெறுவது குறவஞ்சி. இதுவரை மேடையில் நடித்தவர்கள் அனைவரும் இதனை நாட்டிய நாடகமாகவே நடித்தது இங்குக் கருதத்தக்கது. நூல் பாயிரத்தில் ஆசிரியர்கள் 'குறவஞ்சி நாட்டியம்' என்றே சில இடங்களில் குறிப்பிட்டுள்ளனர். ''பொருட் குறவஞ்சி நாட்யம் கன்றிட இமயச் செல்வி கருணை பெற்றுவந்த நாரி கணபதி காப்புத் தானே'' என்கிறது அர்த்தநாரீசுவரர் குறவஞ்சி. ''அறந்தெரி பெருமாள் போற்றும் அலகுமாமலை வேள் மீது குறவஞ்சி நாட்யம் ஒன்று குறித்த செந்தமிழால் சொன்னேன் என்றும், ''காமேவு முயரலகு மலைச்

**குறவஞ்சி முதலும் முடிவுமாக ஒரு நாடகமே என்றாலும் முத்தமிழின் கூறுகள் இணைந்த ஒன்றாகவே காட்சியளிக்கிறது. நமக்குக் கிடைத்துள்ள முதல் குறவஞ்சி நூலான திருக்குற்றாலக் குறவஞ்சியிலிருந்து பெரும்பாலானவை இலக்கியத் தரம் உடைய கவிதைகளைக் கொண்டனவாக - இயல் நூல் என்று கருதப்படக் கூடியவையாக அமைந்துள்ளன.**

செவ்வேள் மீது கவியினால் குறவஞ்சி நாட்யத்தைப் பாட என்றும் ஒதாளர் குறவஞ்சி என்னும் அலகுமலைக் குறவஞ்சி பாடுகிறது.

பிற பாமர நாடக வகைகளைக் காட்டிலும் மிகுதியாக நடிக்கப் பெற்ற பெருமையை உடையதும் குறவஞ்சியே ஆகும். திருக் குற்றாலக் குறவஞ்சி, தியா கேசர் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, திருவேற்காடு ஸ்ரீ கிருஷ்ணமாரி குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி போன்றவை அவையினர் முன் நடிக்கப் பெற்ற நாட்டிய நாடகங்கள் ஆகும்.

**குறவஞ்சி நூல்களின் இசை தனியே ஆராயப்பட வேண்டியதாகும். எந்த எந்தக் கட்டங்களில் எவ்வெவ்வகையான இராகங்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன என்பதையும், எவை பயன்படுத்தப்பெறல் வேண்டும் என்பதையும் ஆராய்வது இவ்வகை இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைநிற்கும். தியாகேசர் குறவஞ்சியை வெளியிட்டுள்ள இசையறிஞர் வே. பிரேமலதா அவர்கள் அந்நூலின் பாடல்களை ராக தாள சுரக் குறிப்புகளுடன் மிக விரிவாக விளக்கியுள்ளது ஈண்டு நினைத்தற்குரியது. இத்துறையில் மேலும் ஆராய்ச்சி தேவை.**

எனவே, குறவஞ்சி பாடியவர்கள் அனைவரும் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று துறைகளிலும் வல்லவர்களாக இருந்து தக்க இடங்களில் அவ்வத் திறங்களை வெளிப்படுத்துகின்றனர். குறவஞ்சியில் இயல் சிறக்கிறது; இசை மணக்கிறது; நடிப்பு மிளிர்கிறது. இவை மூன்றும் ஒன்றிணைந்து திகழ்தலே குறவஞ்சி உணர்த்தும் முதல் இலக்கியக் கொள்கையாகும்.

## பெயர்கள்

குறவஞ்சி பெரும்பாலும் கிளவித் தலைவன் ஊர் அல்லது மலையை ஒட்டியே பெயர்பெறும். திருக்குற்றாலக் குறவஞ்சி, சிதம்பரக் குறவஞ்சி, கதிரைமலைக் குறவஞ்சி, திருமயிலைக் குறவஞ்சி, குறுக்குத்துறைக் குறவஞ்சி, செந்தில் குறவஞ்சி, திருப்போரூர்க் குறவஞ்சி, திருவிடைக்கழிக் குறவஞ்சி, பெத்லகேம் குறவஞ்சி என்பன போலப் பெயர் அமையும். அர்த்தநாரீசுவரர் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, கண்ணப்பர் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, கிருஷ்ணமாரி குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி என்று தெய்வம் அல்லது மானிடம் பெயரிலும் குறவஞ்சி வழங்கப் பெறுதலுண்டு. ஞானக் குறவஞ்சி, தத்துவக் குறவஞ்சி, கூட்டுறவுக் குறவஞ்சி, நவபாரதக் குறவஞ்சி, தமிழரசி குறவஞ்சி என வேறு வகைப் பெயர்களையும் குறவஞ்சி நூல்களுக்குச் சூட்டக் காண்கிறோம்.

நூலின் பெயர்களே தலத்தின் பெருமையை நிலைநாட்டுதலும், தல இறைவன் அல்லது வள்ளலின் புகழைப் பரக்கப் பேசுதலும் புலவர்தம் கொள்கையாக விளங்கியதை நமக்கு அறிவுறுத்துகின்றன.


## காப்பு, அவையடக்கம், நூற்பயன், மங்களம்

நூலின் தொடக்கத்தில் காப்பு, அவையடக்கம், நூற்பயன், மங்களம் ஆகிய பகுதிகள் பல குறவஞ்சி நூல்களில் அமைக்கப் பெற்றுள்ளன. குறவஞ்சி பாடியவர்கள் பலரும் தெய்வபக்தி நிரம்பியவர் களாகவும், செய்நன்றி உடையவர்களாகவும் விளங்கினர். தாம் வாழும் தலத்தின் பெருமையை நிலை நாட்டுவது தம் குறிக்கோள் எனக் கருதியவர் உண்டு; அதுபோலவே தம்மைப் புரந்த வள்ளல்களைப் போற்றுவது தம் கடன் என்று உணர்ந்தவரும் உண்டு. இந்த அடிப்படையில் நூல் எழுதப் புகுந்தவர்கள் நூல் நன்கு நிறைவேறப் பல தெய்வங்களையும் அடியார்களையும் பணிந்து வேண்டுகின்றனர். திருக்குற்றாலக் குறவஞ்சியில் ஒன்பது பாடல்களில் காப்பும் அவையடக்கமும் நூற்பயனும் நுவலப்படுகின்றன; அலகுமலைக் குறவஞ்சியில் 25 பாடல்களில் இவை மூன்றோடு மங்களமும் இடம்பெற்றுள்ளது. மங்களம், தோடையம், கணபதி வருகை ஆகியவை பல நூல்களில் இடம் பெறவில்லை.

## கதைக் கரு

நகரின் பெருவீதி வழி உலாவரும் எழில்மிகு தலைவனைப் பெண்கள் பலர் கண்டு மையலுறுகின்றனர்; அவர்களுள் தலைவியும் ஒருத்தி; விரகதாபத்தால் துடிக்கும் அவளுக்குத் தோழியர் பலர் ஆறுதல் கூறுகின்றனர். தலைவி தென்றல், நிலா, மன்மதன் ஆகியவற்றைப் பழித்துப் பாடுகிறாள்; தோழியரைத் தலைவனிடம் தூது சென்று மாலை வாங்கிவருமாறு வேண்டுகிறாள். செல்லும் தோழி வழியில் ஒரு குறத்தியைக் கண்டு தலைவிக்கு நல்ல குறி சொல்லிவருமாறு அனுப்புகிறாள். குறத்தியை வரவேற்கும் தலைவி அவளது நாட்டு வளம், மலைவளம், நகர் வளம், குறி சொல்லும் திறன் ஆகியவற்றை வினவி அறிந்து தனக்குக் குறி சொல்லுமாறு வேண்டுகிறாள். குறிசொல்ல





**"குறவஞ்சியில் காணப்படும் இராகங்கள் யாவும் சுத்தமான நாட்டுப்பாடல் மெட்டுகளுடன் கூடிய சக்தி ராகங்களேயாகும். விறுவிறுப்பான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய நாட்டியங்களுக்கு ஏற்ற ஜதிக் கோவைகள் சாகித்தியங்களின் இடையில் பொருத்தப்பட்டுள்ளன"**

அனைத்து ஏற்பாடுகளையும் செய்துகொண்டு தலைவியின் மனம் மகிழுமாறு குறிப்பாகவும் வெளிப்படையாகவும் தலைவன் பெயர் சொல்லி அவனை அவள் அடைவாள் என்று குறத்தி கூறுகிறாள். தலைவி, மிகுந்த பொன்னையும், பொருளையும் கொடுத்துக் குறத்தியை அனுப்புகிறாள்.

பிரிந்து சென்ற சிங்கியைக் காணப்பெறாமல் சிங்கன் வருந்துகிறான்; பறவை வேட்டையாட வலை விரித்து வந்த பறவைகளைத் தப்ப விட்டுச் சிங்கியின் நினைவாகவே திரிகிறான் சிங்கன். நூவன் அவனுக்குத் துணையாக நிற்கிறான். இறுதியில் சிங்கியை வழியிற் கண்டு வியந்து விவரங்களை அறிகிறான். இறுதியில் வாழ்த்துப் பகுதியோடு குறவஞ்சியின் கதை நிறைவுறுகிறது.

குறத்தி குறிசொல்லுதலே இதில் முக்கிய இடம்பெறுதலால் இவ்விலக்கியம் 'குறவஞ்சி' என்று வழங்குகிறது.

கதையமைப்பு எல்லாக் குறவஞ்சிகளிலும் ஒரே தன்மையதாக அமைந்தாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் புதிய பகுதிகள் சேர்க்கப் படுவதலுண்டு.

கதையின் அடிப்படைக் கருவாக அமைவது காதல்; முதற்கண், பவனி வரும் தலைவனுக்கும் அவனைக் கண்டு உருகும் தலைவிக்கும் இடையே காதல்; அடுத்து, குறி சொல்லும் சிங்கிக்கும் அவளைத் தேடிவரும் சிங்கனுக்கும் இடையே உள்ள காதல். முதற் பகுதியில் இடம்பெறுவது தெய்வீகக் காதல்; பின்பகுதியில் வருவது மானிடக் காதல்.

புறத்திணையில் இடம்பெறும் கைக்கிளைப் பாடாண் பாட்டு முதற்காதல்; இதில் காம மிக்க கழிபடர் கிளவியாகப் பாடல்கள் வருவதைக் காணலாம். தூது அனுப்புதல் முதலான துறைகளும் பயன்படுத்தப்படும்.

## தத்துவம்

குறவஞ்சியின் கதை காதலை அடிப்படைக் கருவாகக் கொண்டிருந்தாலும் தத்துவ உட்பொருளும் கொண்டதாக விளங்கும். தலைவி தலைவனை இணைய விரும்புதல் சீவான்மா பரமான்மாவை அடைய முற்படுதலைக் குறிப்பதாகக் கொள்வர்.

பெத்லகேம் குறவஞ்சி இத் தத்துவக் குறிப்புப் பொருளை நன்கு விளக்குகிறது. அதில் வரும் கட்டியங்காரன் யோவான் ஸ்நானகன்; பவனி வரும் தலைவன் ஏசுராசா; கண்டு மயங்கும் தலைவி தேவ மோகினி, சீயோன் குமாரத்தி; சந்திரன், மாயை; தென்றற் காற்று, உபத்திரவம், மன்மதன் பழைய மனிதன் ஆகிய ஆதாம்; தலைவி ஆடும் பந்து, புவன உருண்டை; விசுவான குறவஞ்சி பராபரனுடைய வசனமாகிய தீர்க்க தரிசனத்தைக் குறியாகக் கூறுகிறாள்; அவளைத் தேடும் சிங்கன், குரு; அவனுக்குத் துணையான நூவன், உபதேசி; அவர்கள் விரிக்கும் வலைகள் புதிய பழைய

ஏற்பாடுகள்; அவ்வலைகளில் வந்து படியும் பறவைகள் மனித இனத்தினர்.

இவ்வாறு ஒவ்வொரு குறவஞ்சிக்கும் அவ்வச் சமயங்களுக்கு ஏற்பத் தத்துவக் கருத்துகளை விரிவுபடுத்திக் கூறலாம்.

இந்த வகையில் குறவஞ்சி இலக்கியம் ஒரு குறியீட்டு நூலாகவே திகழ்கிறது.

## தத்துவ விளக்கம்

தம் சமய தத்துவத்தை விளக்கும் கொள்கையினராகச் சிலர் நூல் படைத்துள்ளனர். பாத்திரங்கள் வாயிலாக அவர்கள் கருத்து விளக்கம் தருகின்றனர்.

*"சாக்கிர மாதியைந் திடத்தும் சிலசில*
*தத்துவத் தோடுயிர் சாரத் திரிதல்போல்*
*தேக்கிடு மங்கங்கே கிலபக்கி கணிற்கத்*
*திகழொரு குஞ்சுடன் வருகு தொருபக்கி"*

என்ற பகுதியில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாத்தம் ஆகிய ஐந்தனை ஆசிரியர் நினைவுகூர்கின்றார்.

*"ஆங்காரந் தன்னை யடக்கிப் புலனைவென்*
*றகத்தைப் பரத்தி விடத்தி னிறுத்தியே*
*தூங்காமல் தூங்கிடு மாங்கவர் போலவே*
*தூயவொரு நாரை யோய்வுற் றிருக்குது"*

என்பதும் தத்துவச் செய்தியை உணர்த்துவதாகும்.

## பக்தி

குறவஞ்சி பக்தி இயக்கத்தில் விளைந்த ஓர் அரும்பு; அது சில இடங்களில் ஆழ்ந்த பக்தியுணர்வால் மலர்ந்து மணம் வீசுவதுண்டு. திருக்குற்றாலக் குறவஞ்சியிலும் பிறவற்றிலும் முதற் பகுதியில் தலைவன் உலா வரும்போதும் தலைவி மயங்கி வாடும் நிலையிலும் புலவரின் பக்தி உணர்வு நயம்பட வெளிப்படுதலைக் காணலாம். சிங்கன் வாயிலாக அப் பக்தி உணர்வைச் சுட்டும் போது ஒரு வேகத்தையும் வீரத்தையும் பார்க்கிறோம்.

*"தடுப்ப தொருகரம்*
*கொடுப்ப*
*தொருகரம்*
*தரித்த சுடர்மழு*
*விரித்த தொருகரம்*
*எடுத்த சிறுமறி பிடித்த தொருகரம்*
*இலங்கப் பணியணி துலங்கவே"*

என்றிவ்வாறு முதற் பகுதியில் தெய்வ பக்தி உணர்த்தப்படுகிறது.

*"காதலஞ் செழுத்தார் போதநீ றணியார்*
*கைந்நரம் பெடுத்துக் கின்னகரம் தொடுத்துப்*
*பாதகர் தோலால் பலதவில் அடித்துப்*
*பறவைகள் படுக்கும் குறவனும் நானே"*

என்பது சிங்கனின் பக்திக்கு எடுத்துக்காட்டு. திருமலையாண்டவர் குறவஞ்சியில் வரும் குளுவன்,

*"ஆறெழுத் தோதி யைம்பொறி யடக்கி*
*அருள்வடி வேலன் றிருவடி நினையார்*
*மறிய நெஞ்சைக் கீறியென் பெடுத்து*
*வில்லென வளைக்கும் வல்லவ னானே"*

என்று தன் பக்தி வீரத்தை இயம்புகிறான்.

## தலைவர்

பெரும்பாலான குறவஞ்சிகளில் சிவபெருமானே பாட்டுடைத் தலைவராக இடம் பெறுகிறார். அடுத்து முருகன்மீது பல நூல்கள் தோன்றியுள்ளன. திருமால் மீது அழகர் குறவஞ்சி போன்ற சில உள. பெத்லகேம் குறவஞ்சியில் ஏசு பாடப் பெறுகிறார். பீர் முகம்மதுவின் ஞானரத்தினக் குறவஞ்சி இசுலாமிய சமயத்தைச் சார்ந்தது. எனவே பல்வகையில் பல்வேறு தெய்வங்களைத் தலைவராகக் கொண்டு குறவஞ்சி பாடப் பெற்றிருக்கிறது.

திருவேற்காடு ஸ்ரீ கிருஷ்ணமாரி குறவஞ்சியில் கருமாரியம்மன் பெருமை பாடப்பெறுகிறது; மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி இலங்கை மாத்தளைப் பகுதியில் கோயில் கொண்டுள்ள அன்னை முத்துமாரி பற்றியதாக விளங்குகிறது. இவை இரண்டும் பெண் தெய்வங்களைப் பற்றிக் கூறும் குறவஞ்சி நூல்களாகும்.

**குறவஞ்சியில் இயல் சிறக்கிறது; இசை மணக்கிறது; நடிப்பு மிளிர்கிறது. இவை மூன்றும் ஒன்றிணைந்து திகழ்தலே குறவஞ்சி உணர்த்தும் முதல் இலக்கியக் கொள்கையாகும்.**

உலாவரும் வேதபுரீசரைக் கண்டு காதலிக்கிறாள் மதன வல்லி; குறிசொல்லும் குறவஞ்சி அவரை அடைய வேண்டு மானால் திருவேற்காட்டுக் கருமாரித் தேவியை வழிபடுதல் வேண்டும் என்று கூறுகிறாள். வழிபாடியற்றவே தேவி தோன்றி நாக நடனம் ஆடி அருள் செய்கிறாள்.



முத்துமாரியம்மன் குறவஞ்சியில் அன்னை முத்து மாரியே உலா வருகிறாள். ஒரு செட்டி அவளைக் கண்டு காதல் கொள்ளுகிறான். குறத்தியின் சொற்படி நடந்து இறுதியில் அவள் அருள் பெறுகிறான்.

*"கொலுவீற்*
*றிருக்கும்*
*குலமுத்து*
*மாரியின்*
*பொலிவினைக்*
*கண்டு புளகம்*
*கொள்ளுவை*
*அவளே ஆதி*
*அவளே அகிலம்*
*அவளே*
*அருட்கடல்*
*அன்னையும்*
*அவளே*
*.... ஆதலின்*
*நின்குறை வேண்டுதல் நீதவிர்ந் திடுவை*
*உன்குறை அறிகுவள் உளமறி வாளவள்*
*எங்கும் நிறையின் பத்தொடும்*
*பொங்கு பூரணப் பொன்முத்து மாரியே"*

என்று முடிகிறது முத்துமாரியம்மன் குறவஞ்சி. இந்நூல் ஒன்றே தேவியின் உலா வருதலைச் செப்புகிறது.

## தலைவி

திருக்குற்றாலக் குறவஞ்சியில் வசந்தவல்லியும், கும்பேசர் குறவஞ்சியில் செகன் மோகினியும், கிருஷ்ணமாரி குறவஞ்சியில் மதனவல்லியும், திருமலையாண்டவர் குறவஞ்சியில் காமவல்லியும், பெத்லகேம் குறவஞ்சியில் சீயோன் குமாரத்தி ஆகிய தேவமோகினியும், சிதம்பரக் குறவஞ்சியில் அதிரூப மோகினியும் தலைவியராக வருகின்றனர். வேறு பல குறவஞ்சிகளில் காமரசவல்லி, மோகினி, மதன்ரதி, இராஜமோகினி, மோகனாங்கி, கற்பகவல்லி முதலான பெயர்களில் கதைத் தலைவியர் பெயர் பெறுகின்றனர்.

கதையில் தலைவராக வருபவர்கள் அவ்வத் தலங்களுக்குரிய தெய்வங்களாக இருக்க, இத்



தலைவியர் படைத்துக் கொள்ளப்பெற்ற மாந்தராக வருகின்றனர். அவ்வத் தெய்வங்களின் தோற்றப் பொலிவும் அருட் சிறப்பும் பிற பெருமைகளும் குறவஞ்சித் தலைவர்களின் பண்பு நலன்களாக அமைய, இத்தலைவியரோ தலைவர் மீது கொண்ட காதலால் விரகதாப முற்று ஏங்கி வருந்தும் பெண்டிராகவே படைக்கப் பெற்றுள்ளனர். பெரும்பாலும் ஆன்மாவின் அல்லது உயிரின் குறியீட்டு உருவமாக இவர்கள் இருத்தலினால் இறைவனை அடைவதற்கு முன் உயிர் படும் அவலங்களை அவர்கள் அடைவதுபோல ஆசிரியர்கள் படைத்துக் காட்டியுள்ளனர் எனலாம்.

## குறவஞ்சி

தலைவிக்குக் குறி சொல்லும் குறத்தியைத் தோழி அழைத்து வருவாள்; இவளுக்குப் பொதுவாக எப்பெயரும் இடுதல் மரபு இல்லை; ஆனால் சிற்சில குறவஞ்சி நூல்களில் பொதியமலைக் குறத்தி என்பது போல மலையை ஒட்டிப் பெயர்வழங்குதல் உண்டு. இக் குறத்தி தலைவியின் வேண்டுதலுக்கு இணங்கத் தன் மலைவளம், நாட்டு வளம், நகர்வளம், கிளை விசேடம், குறிச்சிறப்பு, தான் பெற்ற பரிசு முதலானவற்றை நிரல்பட அவளுக்கே உரிய முறையில் எடுத்துரைப்பாள். இவள் வாயிலாகவே பெரிதும் இறைவனின் பெருமைகள் கூறப்படும். கைக்குறியும் மெய்க்குறியுமாகப் பல வகைகளில் குறிபார்த்துச் சொல்ல வல்லவள் இவள்; குறி சொல்லுமுன் தன் இஷ்ட தெய்வத்தை வணங்க ஏற்பாடுகள் செய்வாள்; தரை மெழுகிக் கோலமிட்டுத் தான் வேண்டுவனவற்றை யெல்லாம் கொண்டு வந்து தரும்படி கேட்டுக்கொள்வாள்; அனைத்தையும் பெற்றபின் தெய்வத்தைத் தன் நாவில் வந்திருக்குமாறு வேண்டி நல்ல குறி சொல்லுவாள். தலைவி விரும்பும் தலைவனையே அவள் அடைவாள் என்றெடுத்துச் சொல்லும் குறவஞ்சி சிலபோது

குறிப்பாகவும் சில நேரங்களில் வெளிப்படையாகவும் உணர்த்துவாள். இறுதியில் பெரும்பரிசினைப் பெற்றுச் செல்வாள்.

சிங்கன்மீது இவள் கொண்டிருக்கும் காதல் பிற்பகுதியில் கூறப்படும்; சிங்கன் அவளை நினைந்து புலம்பும்போது அவளுடைய இயல்புகள் அனைத்தையும் உரைப்பான்; குறத்தி அவனுக்கு அடங்கிக் கற்பு வாழ்க்கையே நடத்துபவள், ஆனால் மிகுந்த காமசுகம் வேண்டுபவள். "கிஞ்சுக வாயிதழ் அஞ்சுக வாய்மொழிக் கீற்றிள மாமதி தோற்றிய வல்லியைக் கஞ்சுக வார்முலையின் கைக்காரிகைக் காமரசந்தரு காமியைக் காமித்து'' என்கிறான் திருமலையாண்டவர் குறவன். குறத்தியின் காம சுகத்தைப் பற்றிச் சொல்லும் கும்பேசர் குறவஞ்சியில் வரும் குறவன் 'சுரதத்தினால் இளைத்தாற் கையை நெரிப்பாள்' என்றும், 'கலவியில் ஒன்றரைச் சாமம் விடாளே' என்றும் கூறுகிறான். ஆனல் கற்புநெறியில் சிறந்தவள்; 'பரபுருடரைக் கையினாலே தொடாளே' என்கிறான் குறவன். தெய்வத்தின் மீது பக்தியும் கணவன்மீது பாசமும் கொண்டவள் குறத்தி; ஆனால் தொழிலில் வல்லவள்; குறி சொல்வதில் நிகரற்றவள். பேச்சிலும் சாகசத்திலும் இணையவற்றவள்; எவரையும் மயக்க வல்லவள். பல மலைகளையும் நாடுகளையும் பார்த்தவள்; பல தலங்களையும் தீர்த்தங்களையும் கண்டு மகிழ்ந்தவள். குறத்தி புராண வரலாறுகளை நன்கறிந்தவள்; தெய்வக் கதைகளைத் தன் சொற்களோடு இணைத்துச் சொல்பவள். பிறர் மனம் புண்படாதபடி பேச வல்லவள்; பேசியே பெண்களை ஈர்க்க வல்லவள்.

**நூலின் தொடக்கத்தில் காப்பு, அவையடக்கம், நூற்பயன், மங்கலம் ஆகிய பகுதிகள் பல குறவஞ்சி நூல்களில் அமைக்கப்பெற்றுள்ளன. குறவஞ்சி பாடியவர்கள் பலரும் தெய்வபக்தி நிரம்பியவர்களாகவும், செய்நன்றி உடையவர்களாகவும் விளங்கினர். தாம் வாழும் தலத்தின் பெருமையை நிலை நாட்டுவது தம் குறிக்கோள் எனக் கருதியவர் உண்டு; அதுபோலவே தம்மைப் புரந்த வள்ளல்களைப் போற்றுவது தம் கடன் என்று உணர்ந்தவரும் உண்டு.**

தமிழ்ப் புலவர்களின் தலைசிறந்த ஒரு குறிக்கோள் படைப்புப் பாத்திரம் குறவஞ்சி; உலகியலும் உளவியலும் இறையியலும் இன்பவியலும் இணைந்தவளாக இவள் படைக்கப்பட்டிருக்கிறாள்.

இலட்சணக் குறவஞ்சி என்ற நூலில் இலக்குமிதேவி குறத்தியாக வந்து கங்கா பவானிக்குக் குறி சொல்லுகிறாள்; தியாகேசர் குறவஞ்சியில் நாரதர் குறத்தியாக வருகிறார்; ஸ்ரீ கிருஷ்ணமாரி குறவஞ்சியில் மாதவனாகிய திருமால் குறத்தியாக வந்து குறி சொல்லுகிறான்.

## தோழி

குறவஞ்சி நூல்களில் காதல் நோயால் வருந்தும் தலைவியின் துயர் நீக்குபவளாகத் தோழி இடம்பெறுகிறாள். அவள் அழகு மிக்கவள்; 'சிலைக் காமனைச் சினந்தோங்கிக் கூட்டிச் சேர்த்துப் பிரிக்க ரெண்டுந் தெரிந்த சித்திராங்கி' பக்தி உணர்வு உடையவள்; சின்ன வயதிலிருந்தே தலைவிக்குத் தோழியாகிச் சிறந்தவள்.

தோழி, மற்றவர்களோடு சேர்ந்து தலைவிக்கு ஆறுதல் கூறுவாள்; தலைவனை முதலில் பழித்து அவன் உள்ளக் காதலை அறிந்துணர்வாள்; 'தூது நீ சொல்லிவாராய் பெண்ணே' என்று தலைவி வேண்ட, விவரங்களைக் கேட்டறிந்து சென்று சமயமறிந்து தலைவனைக் கண்டு மாலை வாங்கி வருவாள். தலைவிக்கு நம்பிக்கை ஊட்டும் வண்ணம் நல்ல குறி சொல்லுவதற்கு அழகிய குறத்தியைத் தேடி அழைத்துப் போவாள். தலைவிக்கு அந்தரங்கமானவள்; 'பாலனைய மாமொழி சொல் பாங்கி மருதுளாங்கி' தலைவி அவளை நினைத்தவுடன் அருகில் வந்து நிற்பாள்; சிதம்பரக் குறவஞ்சியில் வரும் தோழி 'பொன்னுகர்ந்த மாமணிபோல் பூநுகர்ந்த வண்டினம்போல் நின்னடர்ந்திருந்த எனை நீ நினைந்தது ஏது ஊரையாய்' என்று கூறிச் சேதி அறிந்து தூது செல்கிறாள்.

பொதுவாகத் தோழிக்குக் குறவஞ்சி நூல்களில் பெயர் சூட்டுவதில்லை; ஆனால் தியாகேசர் குறவஞ்சியில் வரும் தோழி மோகனரேகை என்ற பெயரால் அழைக்கப் படுகிறாள்.

## குறவன்

கொண்டையும் கொக்கிறகுமாகத் தோன்றுபவன் சிங்கன் எனப்படும் குறவன்; சிங்கிமேல் மிகுந்த மையல் கொண்டவன்; அவள் இன்றி ஒரு கணமும் இருக்கத் தரியான்; அவள் இல்லாத போது அவளோடு 'கூடிக் கலந்த சுகம் பாடிப் பாடி' தேடி வருவான்; 'கன்னெஞ்சி தன்னை நட்டாற்றிற் கைவிட்டுச் சென்றாள்' என்று வருந்துவான்; கவலை மீதூரக் கள் குடித்து மயங்குவான்; தன் தோழனிடம் அவள் அங்க அடையாளங்களை ஒன்று விடாமற் கூறி எப்படியேனும் தேடிவரச் சொல்லுவான்; அவளுக்கு இணையாகச் சொல்ல உலகில் எவருமில்லை என்று கூறுவான். அவளைத் தேடித் தருவதாக இருந்தால் அதற்காக 'என்ன வேண்டுமானாலும் தருவேன்' என்பான்.

பெண்ணை மயக்கும் மருந்து தருவான்; கல்லைக் கரைக்க வேர் தருவான்; நெருப்பு குளிரப் பச்சிலை தருவான்; மலடி பிள்ளை பெற வழி செய்வான்; நரிக் கொம்பு கொணர்ந்து தருவான்; நரைத்த மயிர் கறுக்க மாத்திரை கொடுப்பான்; காடுகட்டு, கினிக்கட்டு, குறளி வித்தை, கண்கட்டு வித்தை ஆகியவை கற்றுத் தருவான்; மலையைக் கரையப் பண்ணுவான்; குமரிகட்கு வாராத முலைகளும் வரப் பண்ணுவான் – இவ்வாறு செய்ய இயலாதனவெல்லாம் கற்றுத் தருவதாகவும் செய்து தருவதாகவும் உறுதி கூறுவான்.

தன் காதலி சிங்கியைப் பாட்டுடைத் தலைவன் நாட்டில் மீண்டும் சந்திப்பான்; மகிழ்ச்சியால் துள்ளுவான்; அவளைக் கொண்டாடிக் கூத்தாடுவான்; அவளுடைய புதிய அணிகளையும் ஆட்களையும் தோற்றப் பொலிவையும் கண்டு ஐயம் கொண்டு பல வினாக்களை எழுப்புவான்; அவள் தரும் பதிலைக் கேட்டு மனநிறைவு கொள்வான்; இறுதியில் அவளோடு சேர விரும்புவான்; அவளும் 'ஆக்கப்பொறுத்தவர் ஆறப் பொறார்களோ?' என்று கூறி விலகுவாள்.

சிங்கனுக்கு நூவன் அல்லது குளுவன் என்ற தோழன் இருப்பான்; இவர்கள் இருவர்க்கும் நூல்களில் பொதுவாகப் பெயரிடுதல் இல்லை. சில நூல்களில் முதலில் சிங்கன் தோன்றுகிறான்; சிலவற்றில் குளுவன் முதலில் தோன்றுகிறான்.

குறச்சிங்கன் தெய்வ பக்தி மிக்கவன்; தன் தெய்வப் பக்தியாலேயே சிங்கியை மீண்டும் கண்டதாக மகிழ்வான்; தான் போற்றும் தெய்வத்தையோ மந்திரத்தையோ போற்றாதவரையும் இகழ்வாரையும் அவன் சும்மா விடான்; அவர்கள் கைந்நரம்பெடுத்துக் கின்னரம் தொடுப்பான்; தோல்கொண்டு தவில் செய்தடிப்பான்; சிகைமயிர் கொண்டு கண்ணிகள் கட்டுவான்; நெஞ்சை கீறி வில்லாக வளைப்பான்; கண்களைப் பிடுங்கிச் சிலையில் விருதாகத் தூக்குவான்.

குறவஞ்சி இலக்கியத்தில் சிங்கனுக்கு மிக முக்கியமான இடமுண்டு; பக்திச்சுவை மிகுந்த முன்பகுதிக்கு ஈடாகக் காதற்சுவையை (சிருங்காரத்தை) பிற்பகுதியில் தருபவன் இவனே; காதலும் பக்தியும் தோழமையும் தொழிலாற்றலும் இவன் சிறந்த பண்புகள். பல கலைகளில் வல்லவன்; மந்திர தந்திரங்கள் தெரிந்தவன். புலவர்கள் சிங்கனை – குறவனை – அழகுறப் படைத்துத் தம் நூல்களைச் சிறப்பித்துள்ளனர்.

## நூவன்

குறச் சிங்கனின் தோழன் நூவன்; குளுவன், குழுவன், புலியன் (திருமலை ஆண்டவர் குறவஞ்சி) என்ற வேறு பெயர்களில் வருபவன்; இவன் வாயிலாக நகைச்சுவை வெளிப்படுகிறது. 'கலிகளும் கதையும் பேசிக் கையிலே ஈட்டி வாங்கி எலிகளைத் துரத்தும் வீரன் ஈப்புலி நூவன்' வந்ததாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுகிறது; வேட்டையாடுவதில் தலைவனான சிங்கனுக்கு எப்போதும் துணையாக இருப்பவன்; அது மட்டுமல்ல அவன் துணைவி சிங்கியைத் தேடுவதிலும் துணையாக இருந்து கேலியும் பேசுவான்; கோள் சொல்லும் இயல்புடையவன்; எலியன் முதலான பல தோழர்களை உடையவன்; கொட்டகைத்



தூண்போல் அவன் கால் விளங்கும்; ஒட்டகம் போல அவன் மேனி விளங்கும். பறவைகளைப் போலக் குரலெடுத்துக் கூவும் திறனுடையவன். சிங்கன் வாள்வீச்சில் வல்லவனாயிருக்க, இவனோ பூனையைக் குத்திப் பிடிப்பதில் வல்லவன்; சிங்கியை நினைத்தேங்கிப் பிடித்த பறவைகளையும் கோட்டை விட்டுவிட்ட சிங்கனை நூவன் ஏசிப் பேசுகிறான்; அவளைத் தேடுதற்குத் துணையாக அழைத்தபோதும் முதலில் மறுக்கிறான்.

நூவன், குறவஞ்சி இலக்கியத்திற்குச் சுவையூட்டும் ஒரு சிறிய – ஆனால் வலிமையான – பாத்திரம்.

## கட்டியங்காரன்

குறவஞ்சியின் அறிமுகம் கட்டியங்காரனால் சொல்லப்படுகிறது. இவன் தோற்றத்தை நூல்கள் அழகாகத் தீட்டிக் காட்டுகின்றன. தலைவனின் பவனி எச்சரிக்கை கூறுபவன் இவனே. மார்பில் முப்புரிநூல் இலங்கும்; கையில் நெடிய பிரம்பு இருக்கும்; கரிய உடலோடு கார்கொண்ட முகிலேறு போல நடைபோடுவான். மேகம் போல முழக்கம் செய்வான். மேனியில் சவ்வாது மணக்கும்; சுங்கு உருமாலை மேலே மிளிரும்; காவிச் சல்லடம் (காற்சட்டை) துலங்கும்; அதன் மேல் கச்சை இறுக்கிக் கட்டியிருப்பான்.

கட்டியங்காரன் நூலின் தொடக்கத்தில் வருவதோடு நின்று விடுகிறான்; இடையில் அவன் வருவதில்லை. பவனி எச்சரிக்கை கூறுவதோடு அவன் பணி முடிவடைகிறது. ஒரே காட்சியில் வந்தாலும் கண்கவரும் தோற்றத்தோடு வந்து அரங்கில் கலகலப்பை உருவாக்கி முழக்கம் செய்து மறைகிறான்.

திருமயிலைக் குறவஞ்சியில் கட்டியங்காரன் இறுதிவரை வருகிறான். தியாகேசர் குறவஞ்சியில் கட்டியங்காரன் வருவதில்லை.

## குறவஞ்சி மாந்தர்

தலைவன், தலைவி, தோழி, குறவஞ்சி, குறவன் (சிங்கன்), நூவன், கட்டியங்காரன் ஆகிய இவர்களே குறவஞ்சி நூல்களின் நிரந்தரக் கதை மாந்தர்கள்; தலைவன் ஒருவனே நூலுக்கு நூல் வேறுபட்டவனாகக் காட்சியளிக்கிறான்; மற்ற எல்லா மாந்தர்களும் ஒரே வார்ப்பில் வடிக்கப்பட்டவர்களாக நடமாடுகிறார்கள்; முன்னர்க் குறிப்பிடப்பட்ட பண்புகளுடனேயே அனைவரும் எல்லா நூல்களிலும் வந்து செல்கின்றனர். அந்தந்தச் சமயங்களுக்கேற்பவும், நூலின் சுருக்கம் அல்லது விரிவிற்கேற்பவும், புலவர்தம் கவிபுனை யாற்றலுக்கேற்பவும் கதைமாந்தர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில வேறுபாடுகள் இருக்கலாம்; இவ்வேறுபாடுகள் பொதுவாகக் கதை மாந்தரின் பொதுவியல்புகளைப் பாதிப்பதில்லை.

சிற்சில மாறுதல்களைச் செய்வதற்கு உரிமை படைத்தவர் புலவர்கள்; சான்றாக, குற்றாலக் குறவஞ்சியில் சிங்கன் சிங்கி உரையாடலுக்குப் பின் வாழ்த்துப் பகுதியோடு கதை நிறைவுறுகிறது. ஆனால் கும்பேசர் குறவஞ்சியில் சிங்கன் சிங்கி உரையாடலுக்குப்பின் அவர்கள் இருவருக்கும் காட்சி தரவேண்டி கும்பேசர் தோன்றி அருள்புரிகிறார்.

சிதம்பரக் குறவஞ்சியில் குறத்தி குறிசொல்லி முடித்தவுடனேயே அம்பலவாணர் தோன்றி அதிரூப மோகினியை அணைந்து அருள்புரிகிறார்.

இத்தகைய சில மாற்றங்கள் கதைப் போக்கையோ கதை அமைப்பையோ சிதறடிக்காமல், கதை மாந்தரின் பண்புகளையும் கெடுக்காமல் விளங்குகின்றன.

## புதுமைகளும் வேறுபாடுகளும்

காலப்போக்கில் குறவஞ்சி நூல் செய்தவர்கள் சில புதுமைகளையும் சில வேறுபாடுகளையும் உருவாக்க முனைந்தனர். அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் குறித்தல் நலம்.

மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சியில் பெண் தெய்வமாகிய முத்துமாரி உலா வருதலே ஒரு புதுமை; இந்நூலில் புள்வருதல், சிங்கன் கண்ணி வைத்தல், சிங்கியைச் சிங்கன் தேடி அலைதல் முதலானவை இடம் பெறவில்லை. 'பெண்கள் சனம் விலத்தல்' என்ற ஒரு புதிய பகுதியை இந்நூல் காட்டுகிறது. உலாவைக் காணும் பெண்கள் நெருங்கி நிற்கும் ஆடவரை விலகி நிற்கச் சொல்லும் பகுதி இது.

**குறவஞ்சி பக்தி இயக்கத்தில் விளைந்த ஓர் அரும்பு; அது சில இடங்களில் ஆழ்ந்த பக்தியுணர்வால் மலர்ந்து மணம் வீசுவதுண்டு. திருக்குற்றாலக் குறவஞ்சியிலும் பிறவற்றிலும் முதற் பகுதியில் தலைவன் உலா வரும்போதும் தலைவி மயங்கி வாடும் நிலையிலும் புலவரின் பக்தி உணர்வு நயம்பட வெளிப்படுதலைக் காணலாம்.**



கடவுள் வணக்கம், அவையடக்கம், நூற்பயன் ஆகியவை முடிந்தவுடன், கட்டியங்காரன் வந்து எச்சரிக்கை கூற அடுத்து நூல் தலைவன் உலா வருவதாகப் பல குறவஞ்சிகளில் புலவர் பாடுவர்; ஆனால் சரபேந்திர பூபாலக் குறவஞ்சியிலும் கும்பேசர் குறவஞ்சியிலும் 'கணபதி வருகை' என்ற ஒரு பகுதி இடம் பெற்றுள்ளது.

அலகுமலைக் குறவஞ்சியில் ஒதாளர் குலத் தலைவர் பெரிய பெருமானின் மகுடாபிஷேக மாண்பு தலைவி செகன்மோகினிக்குக் கூறப்படுகிற புதுமையைக் காண்கிறோம். நூலின் பல பகுதிகளில் கொங்கு நாடு பற்றியும் பொங்கலூர் வட்டம் பற்றியும் விரிவான விளக்கங்களைக் காண்கிறோம்.

பெத்லகேம் குறவஞ்சி பிற நூல்களைக் காட்டிலும் மிக நீண்டதாகவும் நிறைந்த பாடல்களைக் கொண்டதாகவும் பல உறுப்புகளைப் பெற்றதாகவும் விளங்குகிறது.

**பெரும்பாலான குறவஞ்சிகளில் சிவபெருமானே பாட்டுடைத் தலைவராக இடம் பெறுகிறார். அடுத்து முருகன்மீது பல நூல்கள் தோன்றியுள்ளன. திருமால் மீது அழகர் குறவஞ்சி போன்ற சில உள. பெத்லகேம் குறவஞ்சியில் ஏசு பாடப் பெறுகிறார். பீர் முகம்மதுவின் ஞானரத்தினக் குறவஞ்சி இசுலாமிய சமயத்தைச் சார்ந்தது. எனவே பல்வகையில் பல்வேறு தெய்வங்களைத் தலைவராகக் கொண்டு குறவஞ்சி பாடப் பெற்றிருக்கிறது.**

கவிஞர் தஞ்சைவாணன் (துரை.சீனிவாசன்) எழுதிய கூட்டுறவுக் குறவஞ்சி ஒரு கொள்கைப் பரப்பு நாடகம்; பிரச்சார நாடகம். பன்னிரு காட்சிகளில் அமைந்துள்ள இந்நூல் இசைப் பாடல்களால் ஆனது. சனநாயகம் என்கிற நாட்டரையன் வீதி உலா வருகிறான்; அவனைக் கண்டு கூட்டுறவாள் என்னும் கன்னி காதல் கொள்கிறாள். இவ்வாறு குறவஞ்சியைப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியதும் ஒரு புதுமையே.

''கங்கா பவானிக்கு இலட்சுமி தேவி திருவாய் **மலர்ந்தருளிய** இலட்சணக் குறவஞ்சி – ஸ்ரீகாஞ்சி மாநகருக்கடுத்து பனப்பாக்கத்தில் வசிக்கும் செங்குந்தர் சிகாமணியாகியும் இயலிசை நாடகத்திற் சிறந்தவராகி யிலங்கும் முனியப்ப முதலியார் இயற்றியது'' என்ற செய்தியை முகப்பில் கொண்டிருக்கும் இலட்சணக் குறவஞ்சி – குறத்தியாகிய இலட்சுமியும், தலைவியாகிய கங்கையும் மாறிமாறி உரையாடும் போக்கிலேயே முழுவதும் அமைந்துள்ளது.

இத்தகைய புதுமைகளும் வேறுபாடுகளும் நூலிற்குச் சிறப்புத் தருவனவாக அமைகின்றன; பிற்காலக் குறவஞ்சி எத்தனைச் சேர்க்கைகளையும் நீக்கங்களையும் பெற்று விளங்கினாலும் திருக்குற்றாலக் குறவஞ்சிக்கு இணையாக விளங்க முடியவில்லை என்பது உண்மை.

## யாப்பு

குறவஞ்சி நாடகம் ஒரு வகையில் கவிதை நாடகமாகவும் மற்றொரு வகையில் இசை நாடகமாகவும் பிறிதொரு வகையில் நாட்டிய நாடகமாகவும் கருதத்தக்கது. மூன்றிற்கும் அடிப்படை பாடல் என்பதனால் இதன் யாப்பு வடிவம் நினைத்தற்குரியது. பலவகையான இசைப்பாடல்கள் பல்வேறு பண்களின் அடிப்படையில் இயற்றப் பெற்றுள்ளன; அகவல், விருத்தம், வெண்பா, கட்டளைக் கலித்துறை, கண்ணி, சிந்து, கொச்சகக் கலிப்பா முதலான பல பாக்களும் பாவினங்களும் குறவஞ்சியில் காணப் படுகின்றன.

காப்பு, அவையடக்கம், நூற்பயன், மங்களம் முதலான சிறப்புப் பாயிரப் பகுதியில் பெரும்பாலும் அறுசீர், எண்சீர் ஆசிரிய விருத்தங்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன.

கட்டியங்காரன் வருகை பற்றிக் கூறும் கவிக்கூற்று, நாடக மாந்தரின் வருகை பற்றிக் கூறும் கவிக்கூற்றுகள், வேறு சில கதைத் தொடர்பு ஆகியவை விருத்தத்தில் பாடப்பெறும்.

குறவஞ்சியின் வருகை, அவள் தோற்ற வருணனை, குறவஞ்சியின் தெய்வ வணக்கம், குறத்தி அண்ட கோளம் பற்றிக் கூறுதல், அலகுமலைக் குறவஞ்சியில் பெரிய பெருமாள் பெருமை, பொங்கலூர் நாட்டு வளம் முதலானவை அகவல் யாப்பில் பாடப் பெற்றுள்ளன.

தென்றலின் வருகை, புள் வரவு, பறவை படுத்தல் ஆகியவை வெண்பாவில் – கும்பேசர் குறவஞ்சியில் – இடம் பெற்றுள்ளன.

மற்ற பெரும்பாலான குறவஞ்சிப் பகுதிகள் இசைப்பாடல்களாலும், சிந்து, கண்ணிகளாலும் இயற்றப்பட்டுள்ளன.

**பா, பாவினம், இசைப்பாடல் ராகங்கள் ஆகியவற்றை நோக்கினால் ஓர் உண்மை புலப்படுகிறது. குறவஞ்சி ஆசிரியன் சிறந்த கவிஞனாகவும், உயர்ந்த இசைக் கலைஞனாகவும் இருக்க வேண்டும் என்பதே அது; கதை முன்னரே அறிந்த ஒன்றாதலின் இசையாலும் நடிப்பாலும் மக்கள் மனம் கவரப்படுதல் வேண்டும்.**

இசைப்பாடல்கள் கிராமிய மக்களின் பண்பிற்கும் சுவைக்கும் பயிற்சிக்கும் ஏற்ப ராக தாள வடிவங்களைப் பெற்று விளங்குகின்றன.

தோடி, கல்யாணி, பைரவி, காம்போதி, அடானா, முகாரி, பிலஹரி, நீலாம்பரி, எதுகுல காம்போதி, தர்பார், தன்யாசி, பியாகடை முதலிய ராகங்கள் திருக்குற்றலாக் குறவஞ்சியில் பயன்படுத்தப்பட்டுள்ளன; பந்துவராளி, ஆரபி, சங்கராபரணம், பைரவி, காம்போதி ஆகியவை கும்பேசர் குறவஞ்சியிலும், சாவேரி, காம்போதி, முகாரி, தோடி முதலியவை சிதம்பரக் குறவஞ்சியிலும், ஹம்ஸத்வனி, சுரட்டி, நாட்டைக் குறிஞ்சி, ஆனந்த பைரவி, வசந்தா, செஞ்சுருட்டி, தோடி, மத்யமாவதி ஆகியவை திருமயிலைக் குறவஞ்சியிலும் இடம் பெற்றுள்ளன.

அண்மையில் அரங்கேற்றப்பட்ட கிருஷ்ணமாரி குறவஞ்சியில் பல்வேறு ராகங்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி முழுவதும் விருத்தயாப்பிலேயே அமைந்துள்ளது. இடையில் கட்டுரைக் கவிதை ஒன்றும் காணப்படுகிறது.

சங்கீத அமைப்புக்கு ஏற்ற கீர்த்தனங்களையும் நாடக அமைப்பிற்கு ஏற்ற பாடல்களையும் கொண்டு கும்பேசர் குறவஞ்சி விளங்குவதாக அதன் முன்னுரை குறிப்பிடுகிறது.

பா, பாவினம், இசைப்பாடல் ராகங்கள் ஆகியவற்றை நோக்கினால் ஓர் உண்மை புலப்படுகிறது. குறவஞ்சி ஆசிரியன் சிறந்த கவிஞனாகவும், உயர்ந்த இசைக் கலைஞனாகவும் இருக்க வேண்டும் என்பதே அது; கதை முன்னரே அறிந்த ஒன்றாதலின் இசையாலும் நடிப்பாலும் மக்கள் மனம் கவரப்படுதல் வேண்டும்.

**வசனம்**

குற்றாலக் குறவஞ்சியில் வசனம் இடம்பெறவில்லை. ஆனால், வேறு சில குறவஞ்சிகளில் இடையிடையே வசனம் காணப்படுகிறது.

சிதம்பரக் குறவஞ்சியில் குறத்தி வித்தையின் பெருமையினைத் தலைவிக்குக் கூறுவதிலிருந்து நூல் முடியும்வரை தன் இசைப்பாடலுக்குப் பின்னர் சுருக்கமான வசனம் பேசுகிறாள், "அகோ, அதிரூப மோகினி, நானறிந்த கெசகர்ணம் கோகர்ணம் இந்த்ரசாலம் அக்கினித்தம்பம் சிரத்தம்பம் ஆகாச கமனம் காயப்ர வேசம் வச்சம வாதம் வயத்தம்பனம் அதிருசம் அஞ்சனம் அகர் சனம் சரியை கிரியை கோயம் யோகம் ஞானம் இவை முதலான வித்தைகள் எல்லாம் அறிவேனடி அம்மே'' என்றும் "அகோ வாரும் பெண்ணே மோகினி! அம்பலவாண சுவாமி கிருபையினாலேயும் உன் கை இலட்சணம் தானிய ரேகை, தனரேகை சங்க ரேகை சக்கரரேகை பத்ம ரேகை புத்திர ரேகை வித்தியாரேகை உன் முகக்களை முப்பத்திரண்டுறுப்பும் பார்க்குமிடத்தில் நன்றாகத்தானே இருக்குதடி அம்மே'' என்றும் வருவனவற்றை இவ்வசனங்களுக்குச் சான்றாகச் சொல்லலாம். பின்வரும் ஓர் உரையாடல்கூட இக்குறவஞ்சியில் இடம்பெறக் காண்கிறோம்.

| | | |
|---|---|---|
| மோகினி | : | அந்த ஆசைநாயகன் பேரும் ஊரும் சொல்லடி குறத்தி |
| குறத்தி | : | அப்படியே சொல்கிறேன். அல்லாமல் ஒரு தெய்வத்தின் பேர் சொல்லு |
| மோ | : | அம்பலவாண சுவாமி |
| குறத்தி | : | ஒரு தலத்தின் பேர் சொல்லு |
| மோ | : | சிதம்பரம் |
| குறத்தி | : | ஒரு மலையின் பேர் சொல்லு |
| மோ | : | தென்கயிலை |
| குறத்தி | : | ஒரு நதியின் பேர் சொல்லு |
| மோ | : | கங்கா நதி |
| குறத்தி | : | ஒரு வாகனத்தின் பேர் சொல்லு |
| மோ | : | ரிஷப வாகனம் |
| குறத்தி | : | ஒரு ஆயுதத்தின் பேர் சொல்லு |
| மோ | : | திரிசூலாயுதம் |

இவ்வாறு குறவஞ்சியில் பா, பாவினங்களுக்கு இடையே இசைப்பாடல்களுக்குப் பின் வசனங்களையும் உரையாடல்களையும் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

**தமிழ் இலக்கியக் கொள்கை நூலிலிருந்து...**

*வெளியீடு :* **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : கே. செல்லமுத்து, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5364906 தொலையச்சு : 5368926

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.

கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!


**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் | மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (3+4) ரூ. | அரசு தள்ளுபடி* ரூ. | அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |


* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள ... ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு ... அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் ... வழங்கப்படும்.


இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, ... குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - ... கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெ... ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்... மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் ... பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2033
ஆடி – ஆவணி
ஆகஸ்ட் 2002
மலர் : 34 இதழ் : 3 & 4
விலை ரூ.10

## இந்த இதழில்...


★ காமராஜர் பிறந்த நாள் நூற்றாண்டு விழா ........ 2
★ இதர மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக உருவாகும் தமிழ்நாடு ........ 4
★ 1008 இணைகளுக்கு இலவசத் திருமணம் ........ 10
★ 252 புதிய பேருந்துகள் ........ 13
★ நமது இலட்சியம் உயர்வானது ........ 16
★ இராமநாதபுரம் மாவட்ட மக்கள் வாழ்வில் வளங்கள் நிறைய வேண்டும் ........ 25
★ ஏழை மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற ........ 34
★ புதிய குடியரசுத் தலைவர் ........ 37
★ எல்லாருக்கும் கல்வி இயக்கம் ........ 41
★ சர்வதேச வீரர்கள் உருவாக ........ 46
★ திருவள்ளூர் மாவட்டம் – ஓராண்டு சாதனை ........ 49
★ காவல்துறையினருக்கு 'முதலமைச்சர் பதக்கம்' வழங்கும் விழா ........ 57
★ புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ........ 63
★ தூத்துக்குடி குடிநீர்த் திட்டம் ........ 65
★ ஈரோடு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ........ 67
★ கன்னியாகுமரி – சுற்றுலா மேம்பாடு ........ 69
★ வறட்சி நிலைமையை சமாளிக்க அவசர காலத்திட்டம் ........ 71
★ காவலர் குறை கேட்பு ........ 76
★ காதிப்பொருள் விற்பனை ........ 79


முன்பக்க அட்டையில்...

**1008 இணைகளுக்கு இலவசத் திருமணம்**

கடைசிப் பக்க அட்டையில்...

**காமராஜர் பிறந்தநாள் நூற்றாண்டு விழா**

# காமராஜர் பிறந்த நாள் நூற்றாண்டு விழா

படிக்காத மேதை என்றும், கர்ம வீரர் என்றும் தமிழ்நாட்டு மக்கள் போற்றிப் பாராட்டும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களது பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை தமிழக அரசின் சார்பில் இன்று நாம் விமர்சையாக கொண்டாடிக் கொண்டு இருக்கின்றோம். இந்திய தீபகற்பத்தின் தென்கோடி தமிழகத்தில் உள்ள விருதுப்பட்டி என்னும் ஊரில் எளிமையான குடும்பத்தில் பிறந்து கல்வி கற்க இயலாமல் போய் பின்பு அரசியலால் ஈர்க்கப்பட்டு பொது வாழ்க்கையில் ஈடுபட்டு தமிழகத்தின் முதலமைச்சராகவும், பின்னர் அதற்கெல்லாம் மேலாக இந்திய நாட்டின் பிரதமர்களையே உருவாக்குகின்ற ஆற்றல் வாய்ந்தவராகவும் பெருந்தலைவர் காமராஜர் விளங்கினார் என்றால் அது மிகையாகாது. எளிமையின் வடிவமாக திகழ்ந்த அவர் காங்கிரஸ் கட்சியின் அனைத்து இந்திய தலைவராக விளங்கினார் என்பது அனைவரும் அறிந்ததே. பல்வேறு பண்பு நலன்களைக் கொண்டு விளங்கியவர் பெருந்தலைவர் காமராஜர். அவருடைய எளிமை தமிழகத்தை மட்டுமல்ல இந்தியாவை மட்டுமல்ல உலகத்தையே வசீகரித்தது. முன்பு சோவியத் நாடு என்று அழைக்கப்பட்ட தற்போதைய ரஷ்யாவில் அவர் சென்ற இடங்களிலெல்லாம் அவருக்கு மக்கள் மகத்தான வரவேற்பு அளித்தார்கள். அவருடைய எளிமை எல்லோரும் அறிந்ததே. மாஸ்கோ க்ரெம்லின் மாளிகையில் கூட கதர் வேஷ்டி, முக்கால் கைச்சட்டை, ஒரு துண்டு என்று எளிய காட்சியிலேயே அவர் தோன்றினார். உடையில் மட்டுமல்ல உணவில், பிறருடன் பழகுவதில், மேடை பேச்சு இப்படி எல்லாவற்றிலும் அவருடைய எளிமை ஒளி வீசியது. அவருடைய மேடைப் பேச்சு கூட ஆரவாரமான சொற்பொழிவாக அமையவில்லை. ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொண்டால் எப்படி சாதாரணமாக ஒரு விஷயத்தை கூறுவார்களோ அப்படித் தான் அவருடைய மேடை பேச்சும் அமைந்தது.

ஏறத்தாழ 9 ஆண்டுகாலம் தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பு வகித்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் இலவச கல்வி வழங்கும் பணிக்கு அடித்தளம் இட்டார். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது – அனுபவமே உண்மையான ஆசிரியன். பேரறிஞர் அண்ணா அவர்கள் படிக்காத மேதை காமராஜரைப் பற்றி அவருக்கே உரிய அழகிய நடையில் இந்த மாபெரும் உண்மையை ஒரு முறை விளக்கினார். ''காமராஜர் கல்லூரியில் படிக்கவில்லையே தவிர – வாழ்க்கைப் பாடத்தை நன்றாகப் படித்தவர்''.

"மக்களின் புன்னகையை – பெருமூச்சை – கண்ணீரைப் படித்து அவர் பாடம் பெற்றார்''. "முப்பது ஆண்டு –நாற்பது ஆண்டு என்று மக்களிடம் தொண்டு ஆற்றினால் தான் இந்த பாடத்தைப் பெற முடியும்''. இவ்வாறு பேரறிஞர் அண்ணா அவர்களால் வழங்கப்பட்ட இத்தகைய நற்சான்றுகளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள். பதவிகள் இல்லாமலேயே மக்களுக்கு தொண்டு செய்யலாம் – அவ்வாறு செய்ய முடியும் என்பது பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய நம்பிக்கையாக இருந்தது. பண்டித நேருவிற்கு பின்பு லால்பகதூர் சாஸ்திரி அவர்களைப் பாரதப் பிரதமர் ஆக்கியதும், சாஸ்திரி அவர்களின் மறைவிற்குப் பின்பு அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களை பாரதப் பிரதமர் ஆக்கியதும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய சாதனை என்றே சொல்லலாம். உலக நாடுகள் இந்தியாவின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்த வேளையில் எந்தவித குழப்பத்திற்கும் இடம் தராமல் ஒரே மனதாக பாரதப் பிரதமர்களை தேர்ந்தெடுக்கச் செய்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய அரசியல்







ஞானத்தையும், சாதுர்யத்தையும், தன்னலமற்ற தன்மையையும் பாராட்டாதவர்களே இல்லை என்று நாம் சொல்லலாம். திராவிட இயக்கமும், இந்திய தேசிய காங்கிரசும் அரசியல் ரீதியாக முரண்பட்டு இருந்தாலும், தந்தை பெரியார் அவர்களோ, பேரறிஞர் அண்ணா அவர்களோ, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களோ, பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப் பாராட்ட தவறியதில்லை. அவருடைய தியாகத்தை மற்றவர்களைக் காட்டிலும் மிகச் சிறப்பாகவே எடுத்துரைத்தார்கள்.

1967–ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்தை காஞ்சிபுரத்தில் திறந்து வைத்து ஆற்றிய உரையின் போது – "காமராஜர் தம்முடைய பணிகள் மூலம் நாட்டின் தரத்தை உயர்த்த முயன்றார். தமிழர்களுக்கு நற்பணி ஆற்றினார். தமிழர்கள் பெருமைப்படத்தக்க நல்ல காரியங்களைச் செய்தார்'' என்று புகழ்ந்துரைத்தார். தமிழ் சமுதாயத்தின் இருபெரும் தலைவர்களில் ஒருவர் மற்றொருவருக்கு மனமாச்சர்யம் இன்றி சூட்டிய இந்தப் புகழாரத்தை நாம் காணும் போது, நமது நெஞ்சம் நெகிழ்கிறது. அதைப் போலவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் மகத்தான இயல்புகளைப் பற்றி கூறுகிற போது – "போராடி, போராடி வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராஜர். இன்றைக்கு நான் பல கோப்புக்களைப் பார்க்கிறேன். காமராஜர் முதல்வராக இருந்தபோது வீணாக சட்டப் பிரச்சனைகளை வைத்து அவர் செய்ய வேண்டிய காரியங்களை தள்ளி போட்டதில்லை. மக்களுக்காகத் தான் சட்டமே ஒழிய சட்டத்திற்காக மக்கள் அல்ல என்பதை செயலில் காட்டியவர். ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, அழுத்தப்பட்ட, தூக்கி எறியப்பட்ட மக்களின் உள்ளத்திலேயே உறுதியும், வீரமும், துணிவும், அறிவும் வர செயல்பட்டவர் காமராஜர்'' என்று புகழாரம் சூட்டினார் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

மக்களுக்காகவே சட்டம் என்பதையும், மக்களுக்காகவே திட்டங்கள் என்பதையும் மனதில் கொண்டு, புதிய சட்டங்களையும் புதிய திட்டங்களையும் வகுத்து செயல்படுபவர்கள் எல்லாம் மக்கள் மனதில் நிலையாக வாழ்கிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். அந்த வகையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்து நூறாண்டுகள் கடந்த போதிலும் நம்முடைய நினைவிலே

அவருடைய எளிமையால் –

தன்னலமற்ற தொண்டால் –

நாட்டுப் பற்றால் –

புரிந்த தியாகத்தால் –

வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அது மிகையாகாது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய சிறப்புகள் எவ்வளவோ உள்ளன. அத்தனை பண்பு நலன்களையும் கைக்கொள்ள முடியாவிட்டாலும், அவற்றில் ஒரு சிலவற்றையாவது இன்று அரசியலுக்கு வர விரும்புவோர் பின்பற்ற வேண்டும் என்பதே அவரது வாழ்க்கை நமக்குச் சுட்டிக் காட்டுகின்ற உண்மையாகும்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்த நாள் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற இந்த வேளையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்தை சிறப்பான மாநிலமாக மாற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகளை நாமும் தொடர்ந்து மேற்கொள்வோம் என்ற உறுதியை தெரிவித்து, பெருந்தலைவர் காமராஜர் அவர்களது புகழ் என்றென்றும் நிலைக்கட்டும் .

*(15–7–2002 அன்று சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கத்தில் நடைபெற்ற பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.)*

• • •

# இந்தியாவுக்கு முன்மாதிரியாக இதர மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக உருவாகும் 'தமிழ்நாடு'

*மாண்புமிகு முதலமைச்சர்*
*செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்*
*இந்திய வர்த்தக தொழில் கழகக் கூட்டமைப்பின்*
*செயற்குழுக் கூட்டத்தில் 5-7-2002 அன்று ஆற்றிய உரை.*

இந்திய வர்த்தக தொழில் கழகக் கூட்டமைப்பின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில், அதன் உறுப்பினர்களாகிய உங்களிடையே உரையாற்றுவதில் நான் பேருவகையும், பெருமகிழ்ச்சியும் அடைகிறேன். இந்த தருணத்தில் உங்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறத்தாழ எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட இந்திய வர்த்தக – தொழில் கழகக் கூட்டமைப்பு, படிப்படியாகத் தழைத்து, செழித்தோங்கி வளர்ந்து, இன்றைக்கு 500 வர்த்தக தொழிற் கழகங்களைக் கொண்ட ஒரு பெரிய விருட்சமாகத் திகழ்கிறது. கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளில், இந்தக் கூட்டமைப்பு, நமது நாட்டின் பொருளாதாரத் துறையில் ஏற்பட்டு வரும் துரிதமான வளர்ச்சியையும் ஏற்ற இறக்கங்களையும் ஆராய்ந்து, மத்திய, மாநில அரசுகளுக்கு வழிகாட்டும் வகையில் யோசனைகளையும், அணுகுமுறைகளையும் பற்றி கருத்து தெரிவிக்கும் ஆற்றலைப் பெற்று விளங்குவது எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

பெரிதும் வேளாண்மை சார்ந்ததாக இருந்த தமிழ்நாட்டின் பொருளாதாரம் அந்த நிலைமாறி, சேவைத் துறையில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சியின் காரணமாக, சேவைத் துறையைச் சார்ந்த பொருளாதாரமாக தற்போது உருவெடுத்து வருகிறது. நாட்டின் மொத்த உற்பத்திப் பொருள் மதிப்பில் வேளாண்மை போன்ற முதன்மைத் துறையின் பங்களிப்பு 1960ஆம் ஆண்டுகளில் 50 சதவிகிதமாக இருந்து, இன்றைக்கு 17 சதவிகிதமாக குறைந்துள்ளது. தொழில் போன்ற இரண்டாம் நிலைத் துறையின் நடப்புப் பங்களிப்பு சுமார் 33 சதவிகிதமாக உள்ள நிலையில் வர்த்தகம், சேவை போன்ற மூன்றாம் நிலைத் துறையின் பங்களிப்பு கணிசமாக உயர்ந்து இன்றைய நிலவரப்படி 50 சதவிகிதமாக உள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திப் பொருள் மதிப்பில் 7 சதவிகிதம் பங்களிப்பைக் கொண்ட தமிழ்நாடு, தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் நாட்டிலே முதலாவது இடத்தை வகிக்கிறது.

இந்தியாவில் உற்பத்தியாகும் கனரக வாகனங்கள், இலகு ரக வாகனங்கள், மோட்டார் வாகனத் துணைப் பாகங்கள், மின் சக்தியால் இயங்கும் பம்புகள், தோலினால் செய்யப்பட்ட பொருள்கள், செய்தித்தாள், காகிதங்கள் மற்றும் மென்பொருள்களில் கணிசமான அளவு தமிழ்நாட்டில்தான் உற்பத்தி செய்யப்படுகிறது.

உலக அளவிலான முதலீட்டு வாய்ப்புகள் குறித்து பொருளாதார வல்லுநர்களின் தகவல் சேகரிப்புப் பிரிவு அண்மையில் நடத்திய ஆய்வின்படி, 2002–2006ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், வளர்ந்துவரும் சந்தைகளில் செய்யப்படும் அந்நிய நேரடி முதலீடுகளால் அதிகமாகப் பயன்பெறும் நாடுகளிடையே இந்தியா 11வது இடத்தை வகிக்கிறது. 1997–2001 ஆண்டுகளில் வகித்த 16வது இடத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், இது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்று தான் சொல்ல வேண்டும். மிக அதிக அளவில் அந்நிய நேரடி முதலீட்டைப் பெறுவதில் மூன்றாவது இடத்தை வகித்துவரும் தமிழ்நாட்டுக்கு, உலக அரங்கில் நிலவும் இந்த சூழ்நிலை மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பேருவகை அடைகிறேன்.

இன்னும் சற்று விரிவாக பார்த்தால், தனிநபர் வருமானத்தைப் பொறுத்தவரையில், பெரிய மாநிலங்களிடையே, தமிழ்நாடு நான்காவது இடத்தை வகிக்கிறது. பிறப்பு–இறப்பு விகிதத்தில் கிட்டத்தட்ட ஒரு சமன்பாட்டு நிலையை எய்தியுள்ளது என்றே தோன்றுகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தைப் பொறுத்தவரையில், ஒரு ஸ்திரத் தன்மையை எய்தக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. மக்களுக்குத் தரமான கல்வி வசதியும், சுகாதார வசதியும் கிடைக்கச் செய்வதில், குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளோம். தமிழ்நாட்டை முதல் இடத்திற்கு இட்டுச் செல்ல வேண்டுமென்பதே என்னுடைய ஆசையாக இருந்த போதிலும், அதற்கான முயற்சிகளை திட்டமிடும் போது, எளிதாக எடுத்துக் கொள்ள முடியாத பல இடர்ப்பாடுகளை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. வேளாண் தொழில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து மிக அதிகமாகவே, அதாவது சுமார் 50 சதவிகிதம் என்ற அளவில் இருந்து வருவதால், மாநிலத்தின் பொருளாதாரத்தில் வேளாண் துறையின் பங்களிப்பு குறைந்து வருவது, அத்துறையில் கணிசமான அளவு வேலைவாய்ப்பின்மையும், இருக்கும் வேலைவாய்ப்பும் முழு



நேரமும் இல்லாமல் இருப்பதையே உணர்த்துகிறது.

தமிழ்நாட்டில் நிலவும் அதிக அளவிலான வேலை வாய்ப்பினையும், வறுமையும் மாநிலத்தின் வருமானப் பகிர்வு சீராக இல்லை என்பதையே உணர்த்துகிறது. இந்த ஆரோக்கிய மற்ற நிலையை அடியோடு மாற்ற வேண்டிய தருணம் வந்துவிட்டதென்றே நான் கருதுகிறேன். மாநிலத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைத் துறைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற சரக்குகள், பொருள்கள் மற்றும் பணிகளுக்கான தேவையை அதிகரிக்க வேண்டுமாயின், மக்களில் பெரும்பாலோர் தேவையான வாங்கும் சக்தியைப் பெற்றிருப்பதை உறுதி செய்ய வேண்டியது அவசியம். சமூக, பொருளாதார நோக்கிலான செயல்பாடுகளில் மாவட்டங்களிடையே நிலவும் வேறுபாடு இதற்கு ஒரு பெரும் தடையாக இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் நான் மிக உறுதியாக இருக்கிறேன். தற்போதுள்ள பலத்தை அடித்தளமாகக் கொண்டு, நம்மிடையே இன்னும் காணப்படுகின்ற நலிவையும், ஏற்றத் தாழ்வையும் போக்கிட வேண்டுமென நான் கருதுகிறேன். இந்த வகையில் பார்க்கும் போது, மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் துணைபுரியக் கூடிய முதன்மையான பாங்கினை அரசு ஆற்ற வேண்டியுள்ளது. வளர்ச்சிப் பணியில் அரசு சாரா அமைப்புகளையும், தனியார் துறைகளையும் ஈடுபடுத்த வேண்டியதன் அவசியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. மாநிலத்தின் பெரிய அளவிலான, ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு கடந்த எட்டு நாட்களில் மூன்று உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டுள்ளது ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும். முதல் உடன்படிக்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 2,000 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த டைட்டேனியம் – டை ஆக்ஸைடு தொழிற்சாலை அமைப்பதற்காக, டாட்டா ஸ்டீல் நிறுவனத்துடன் கையெழுத்தாகியது. அந்த மாவட்டங்களில் கிடைக்கும் கனிமங்களையும், மனித வள ஆற்றலையும் பயன்படுத்தி செயல்படுத்தப்படவுள்ள இந்த திட்டத்தின் வாயிலாக இந்த பகுதி வளம்பெறும். மற்ற இரண்டு உடன்படிக்கைகளில் ஒன்று, அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியுதவி நிறுவனத்துடனும் (IDFC) மற்றொன்று சிங்கப்பூர் அரசுக்குச் சொந்தமான ஜுரோங் டவுன் கார்ப்பரேஷனின் துணை நிறுவனமான "அசெண்டாஸ்" (ASCENDAS) என்ற நிறுவனத்துடனும்

கையெழுத்தாகியுள்ளன. இவ்விரு உடன்படிக்கைகளின் வாயிலாக, அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டில் தனியார் துறை பெரிய அளவில் ஈடுபடுத்தப்படும். இது விரைவிலேயே தமிழ்நாட்டில் பலநூறு கோடி ரூபாய் மதிப்புள்ள நிதி தனியார் முதலீட்டுக்கு பெறப்பட வழி வகுக்கும். பல்வேறு வர்த்தக மற்றும் தொழிற்சாலைகளின் சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றதையடுத்து, எனது அரசு, சில இடுபொருள்களுக்கும் கச்சாப் பொருள்களுக்கும் நுழைவு வரியை 3 சதவிகிதமாகக் குறைத்துள்ளது. மேலும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மீதான உள்ளூர் விற்பனை வரியை எதிரீடு செய்யவும் அனுமதித்துள்ளது. இதற்கான அறிவிக்கை 1-7-2002 அன்று வெளியிடப்பட்டது. இத்தகைய வர்த்தகத்திற்கு இணைக்கமான நடவடிக்கைகள், தமிழ்நாட்டில் வர்த்தக, தொழில் வளர்ச்சியை மேலும் விரைவுபடுத்த உதவும் என்று நான் நம்புகிறேன்.

நமது மனித வள மேம்பாட்டுக் குறியீட்டெண்கள், உலகின் சிறந்த குறியீட்டெண்களோடு ஒப்பிடத்தக்க அளவில் இருப்பதால், "அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வை'' ஏற்படுத்தித் தருகின்ற குறிக்கோளை எட்டவும், அனைத்துத் துறைகளிலும் நமது மாநிலத்தை நாட்டிலேயே, முதல் மாநிலமாக ஆக்கவும் என்னுடை அரசு, '**15 அம்சத் திட்டம்**' ஒன்றை வெளியிட்டுள்ளது. பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான என்னுடைய செயல் திட்டத்தில் பின்வருவனவும் அடங்கும் :

1. *நிதிநிலையை உறுதிப்படுத்தல் :* அதிக அளவிலான, தாங்க முடியாத வருவாய் பற்றாக்குறை மற்றும் பணப்பற்றாக்குறை காரணமாக, பெருகி வரும் செலவுப் பொறுப்புகளை ஈடுசெய்வதற்காக, அரசு அதிக வரிவிதிக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டது. அரசின் ஆதாயமற்ற செலவுகளைக் குறைப்பதும் மாநில வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு முறையை மாற்றியமைத்து, அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாடு, சுகாதாரம், கல்வி முதலிய உற்பத்தி நோக்கம் கொண்ட துறைகளுக்கு முன்னுரிமை அளிப்பதும் எங்கள் அரசின் நோக்கமாகும். நிதிநிலையை மேலும் உறுதிப்படுத்துவதற்காக, என்னுடைய அரசு, செலவு மற்றும் பணியாளர் சீர்திருத்தங்கள் பற்றி பரிந்துரைப்பதற்காக திரு.ஏ.எம்.சுவாமிநாதன் அவர்கள் தலைமையிலான ஒரு நபர் குழுவையும், அரசின் வருவாயை பெருக்குவதற்கான வழிமுறைகள் குறித்து பரிந்துரைப்பதற்காக டாக்டர் ராஜா செல்லையா குழுவையும் அமைத்தது.

2. வேளாண்மை மற்றும் தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு நிலையான, ஆதாயகரமான வருமானம் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக, அந்தத் துறைகளுக்கு புத்துயிரூட்டல்.



3. ஊரக மற்றும் நகர்ப்புறக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

4. தவிர்க்கத்தக்க நடைமுறை செலவுகளை ஒழிப்பதற்காக, வெளிப்படையான நிருவாகம், ஒளிவுமறைவற்ற வரி விதிப்பு, ஊழலற்ற ஆட்சி.

தமிழ்நாடு 2002-2007ஆம் ஆண்டு கால அளவில் 8 சதவிகிதம் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பை எய்த வேண்டுமென நான் இலக்கு நிர்ணயித்துள்ளேன். இந்த இலக்கு எய்தப்பட வேண்டுமாயின், பொருளாதாரத்தில் காணப்படுகின்ற தேக்க நிலை முழுமையாகவும், உடனடியாகவும் போக்கப்பட வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்க நாம் ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதனால், வேளாண்மை மற்றும் தொழில் துறைகளில் உற்பத்தியாகும் சரக்குகளுக்கும், பொருள்களுக்கும் தேவை அதிகரிக்கும்.

வேளாண்மை வளர்ச்சி வீதத்தை தற்போதைய 2.72 சதவிகிதத்திலிருந்து 2002-2007 கால அளவில் 4 சதவிகிதமாக உயர்த்த உறுதிபூண்டு இதற்கான திட்டங்களை, அண்மையில் தாக்கல் செய்த வரவு-செலவுத் திட்டத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளோம். இந்த வகையில் எங்கள் அணுகுமுறை பற்றி இங்கே சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

★ நீர்வரத்துப்பகுதி மேம்பாடு மற்றும் மழைநீர் சேமிப்பு நடவடிக்கைகளோடு தரிசு நிலச் சீரமைப்பையும் ஒருங்கிணைத்து அதன் மூலம் சாகுபடி நிலப்பரப்பை அதிகரித்தல். சுமார் 20 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பைக் கொண்ட மாபெரும் தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை எங்களுடைய அரசு ஏற்கெனவே தொடங்கியுள்ளது என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டிலேயே, இந்த திட்டத்தின் கீழ், சுமார் 3.33 இலட்சம் எக்டேர் தரிசு நிலப்பரப்பு மேம்படுத்தப்படும். எஞ்சிய நிலப்பகுதி அடுத்த மூன்றாண்டுகளில் பண்படுத்தப்படும். இத்திட்டம், அதிக அளவில் முதலீடு தேவைப்படுகிற, பெரும் எண்ணிக்கையிலான கிராமப்புற மக்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரக்கூடிய திட்டமாதலால், தரிசுநில மேம்பாட்டுப் பணிகளில் தனியார் துறையின் பங்கேற்பையும் வரவேற்றுள்ளோம்.

★ உற்பத்தியையும் நிலத்தின் உற்பத்தித் திறனையும் பெருக்குதல், தோட்டக்கலை மேம்பாடு மற்றும் வேளாண்மை சார்ந்த ஊரகத் தொழில்களின் மேம்பாடு ஆகியவற்றின் மூலமாக மாநிலத்தில் பண்ணைத் தொழில்களிலும், பண்ணை சாராத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு இலாபகரமான வருவாய் கிட்டுவதை உறுதி செய்தல்.

★ மாநிலத்தின் 385 ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் நீடித்த வேலைவாய்ப்புகளை நல்கக் கூடியதும், குறைந்தது ரூ.1 கோடி மூலதனம் தேவைப்படக் கூடியதுமான, ஒரு பொருளாதார நடவடிக்கையையாவது தேர்வு செய்து நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்ட புதியதொரு திட்டத்தை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். இந்த திட்டம், விரைவிலேயே தமிழ்நாட்டின் கிராமப்புறப் பொருளாதாரத்தில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன். மூன்று ஆண்டுகளில், ஒரு இலட்சம் உழவர்களுக்கு அதிக ஆதாயந்தரும் வணிகப் பயிர் சாகுபடி முறைகளில் பயிற்சி அளிக்கும் புதியதொரு திட்டத்தையும் தொடங்கியுள்ளேன்.

★ தமிழ்நாட்டின் ஊரகப்பகுதிக்கென புதியதொரு சமுதாய வளர்ச்சித் திட்டம் தேவைப்படுகிறது.



இந்தத் திட்டத்தின் கீழ், தொலைபேசி மற்றும் இணைய தளத்தொடர்பு, தேவையான குடிநீர் மற்றும் மின்சக்தி வழங்கல், பண்ணை மற்றும் பண்ணை சாராத் தொழிலாளர்களுக்கு நல்ல வருவாய் கிடைப்பதை உறுதி செய்யத் தேவையான அனைத்து வசதிகளையும் கொண்ட உள்ளூர் சந்தை வசதி, ஆகியவற்றை உள்ளடக்கிய நம்பகமான, தரமான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நாங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். தேசிய பொருளாதாரம், ஏனைய உலக நாடுகளுடனான தாராள வர்த்தகத் தொடர்புகளுக்கு வழி வகை செய்துள்ள நிலையில், தமிழ்நாடு கீழ்க்காணும் முக்கியமான சவால்களையும் மாற்றங்களையும் சந்திக்க வேண்டியுள்ளது :

- ☐ மலிவான, நல்ல தரமுடைய, மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதன் விளைவாக, நமது தொழிற்சாலைகள், உள்ளூரிலேயே மேலும் கடும் போட்டியைச் சந்திக்க வேண்டியிருக்கும்.
- ☐ நமது தொழில் நிறுவனங்கள், உள்நாட்டில் கடும் போட்டியை வெற்றிகரமாகச் சமாளிக்க வேண்டியிருப்பதோடு, வெளிநாட்டு சந்தைகளுடனும் போட்டியிட்டு வெல்ல வேண்டியுள்ளது.
- ☐ விளை பொருள்களின் தரம், உரிய நேரத்தில் பொருள்களை வழங்குதல், நல்ல வாடிக்கையாளர் சேவை ஆகியவற்றில் இந்தப் போட்டிகள் இருக்கும்.

மேற்சொன்ன சவால்களின் அடிப்படையில், நான்கு கொள்கை முடிவுகள் எடுக்க வேண்டியுள்ளது. விரைவில் வெளியிடப்படவுள்ள என்னுடைய அரசின் "புதிய தொழிற்கொள்கையில்'' இவை இடம் பெறும்.

1. மாநிலத்தின் வணிகப் பெருக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் தடையாக இல்லாத வகையில், நிர்வாக விதிமுறைகளையும் நடைமுறைகளையும் சீரமைத்தல்.

2. ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பு நோக்கிலான துறைகளில் தொழில்சார் உற்பத்தியையும் ஆதாயம் ஈட்டும் திறனையும் மேம்படுத்தல். தற்போது நிலவும் புதிய தாராளமயமாக்கப்பட்ட வாணிபச் சூழலில், நிலைமைக்கேற்றவாறு நடைமுறைகளைப் பின்பற்றுதல், தமிழ்நாட்டுக்கான மிகப் பெரிய வாய்ப்பே ஜவுளி, பொறியியல் முதலிய துறைகளில் அதற்குள்ள வலுவான உற்பத்தித் திறன், அறிவியல் பூர்வமான பயிற்சி பெற்ற உயர்தர பணியாளர்கள் மற்றும் வலுவான ஆராய்ச்சி - வளர்ச்சி பாரம்பரியம் ஆகிய அதன் உள்ளார்ந்த திறமைகளில் அடங்கியுள்ளது. இந்தத் திறமைகளை மூலதனமாகக் கொண்டு, புதிய திட்டங்களை செயல்படுத்தவும் நவீனமயமாக்கவும், புதிய வளர்ச்சித் துறைகளில் அடியெடுத்து வைக்கவும் நான் திட்டமிட்டுள்ளேன்.

3. தொழில் துறைகளில் முதலீடுகளை ஈர்க்கவும், தொழில் மயமாக்கல் தொய்வின்றித் தொடரவும்

# 1008 இணைகளுக்கு இலவச திருமணம்

"மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 14.7.2002 அன்று சென்னை, திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை சார்பாக 1008 ஜோடி மணமக்களுக்கு இலவச திருமணத்தை நடத்தி வைத்தார்.

திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு அருகே உள்ள எம்.ஜி.ஆர். நகரில் நடைபெற்ற 1008 ஜோடி மணமக்களுக்கு இலவச திருமணத்தை நடத்தி வைக்க வருகை தந்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை கோயம்பேடு அம்பேத்கர் சிலை அருகிலும், நெற்குன்றம் அண்ணா சிலை அருகிலும், மதுரவாயல், வானகரம், வேலப்பன் சாவடி உட்பட பல்வேறு இடங்களில் திரண்டிருந்த தொண்டர்களும், பொதுமக்களும் பூரண கும்ப மரியாதையுடனும், யானை, குதிரை மற்றும் பேண்டு வாத்தியங்கள் முழங்க சிறப்பான வரவேற்பளித்தனர்.

பின்னர் விழா மேடைக்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், திரு பி.சி.இராமசாமி அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், திரு. எம்.ஏ.கௌரி சங்கர் அவர்களும், மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து, மங்கல நாண்கள் வைக்கப்பட்டிருந்த 41 தட்டுக்களை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் முதலமைச்சர் அவர்களிடம் வழங்கி, அவர்களது ஆசிபெற்று, தங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த இடங்களுக்குச் சென்று அங்கு அமர்ந்திருந்த மணமகன்களிடம் வழங்கினார்கள். தொடர்ந்து மங்கல வாத்தியங்கள் முழங்க, ஓதுவார் மந்திரங்கள் சொல்ல, மணமகன்கள் மங்கல நாண்களை மணமகள்களின் கழுத்தில் கட்டினர். இதனைத் தொடர்ந்து மேடைக்கு எதிர்ப்புறம் வலதுபக்கம் மற்றும் இடது பக்கம் என்று மணமக்கள் அமர்ந்திருந்த இடங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் சென்று அட்சதை தூவி மணமக்களை ஆசிர்வதித்தார். முன்னதாக, குங்குமம், மஞ்சள் கொம்பு, வெற்றிலைப் பாக்கு மற்றும் பூ ஆகியவை வைக்கப்பட்டிருந்த தட்டுக்களை அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்களும் மணமக்களிடம் வழங்கினார்கள்.







**திருவேற்காட்டில் இந்து சமய அறநிலையத் துறையினரால் நடத்தப்பட்ட 1008 ஜோடி மணமக்களுக்கான இலவச திருமண விழாவில் முதலமைச்சர் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை :**

பெரும் எண்ணிக்கையிலான அதாவது 1008 இலவச திருமணங்கள் நடந்தேறிய இந்த நிகழ்ச்சி அன்னை தேவி கருமாரி அம்மன் அருளால் இன்று இந்த திருவேற்காடு திருத்தலத்தில் இனிதே நடைபெற்று உள்ளது. இந்த திருமணங்களை ஒரு சேர நடத்தி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் திருவேற்காட்டிற்கு வந்து இன்று திருமணம் புரிந்து கொண்டு, மண வாழ்க்கையைத் தொடங்கி உள்ள மணமக்களாகிய உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நாட்டின் கலை, பண்பாடு, சமூக வரலாறு, தொன்மை ஆகியவற்றின் கருவூலங்களாக நமது நாட்டின் திருக்கோயில்கள் திகழ்ந்து வருகின்றன. நமது ஆலயங்கள் ஒரு வகையில் நமக்கு சமத்துவத்தைப் போதிக்கின்றன. சமுதாயத்தில் நலிவு அடைந்த ஏழை எளிய மக்களுக்கு ஆலயங்கள் ஒரு புகலிடமாகவும் திகழ்ந்து வருகின்றன. அந்த வகையில் தமிழகத்தில் உள்ள வசதி மிக்க திருக்கோயில்களின் ஆதரவில் நடைபெறும் இலவசத் திருமணங்கள் ஆலயங்களில் தொன்று தொட்டு நிலவி வரும் சமூக நீதிக்கு ஒரு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. இங்கே மணம் புரிந்து கொண்டுள்ள மணமக்கள் "எந்த ஜாதி", "எந்த இனம்" என்று யாரும் பார்க்கவில்லை. அவர்கள் அனைவரும் "மனித ஜாதி" யைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் ஒருங்கிணைக்கப்பட்டு இந்த 1008 திருமணங்கள் ஒரு சேர வண்ணமிகு நிகழ்ச்சியாக நடந்துள்ளன.

தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை ஏற்பாடு செய்துள்ள இந்த திருமண விழாவீல் பல்வேறு துறைகளைச் சார்ந்தோரும் உற்சாகத்தோடு பங்கு கொண்டு இந்த விழாவை சீரும் சிறப்புமாக நடத்தி இருப்பது உண்மையிலேயே பாராட்டுதலுக்குரிய செயலாகும்.

இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் தமிழ்நாட்டிலுள்ள வசதி மிக்க திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் இந்த இலவச திருமணத் திட்டம் 1982 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு, அமல்படுத்தப்பட்டு வருகிறது.

சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த குடும்பங்களிலும், ஏழை எளிய குடும்பங்களிலும், திருமண பருவத்தை எய்திய பெண்களுக்கு திருமணம் செய்து வைப்பது என்பது இன்னும் கூட ஒரு சிரமமான காரியமாக இருக்கிறது. அவர்களுக்கு உதவிட வேண்டும் என்ற நோக்கத்துடனும், அத்தகைய திருமணங்கள் வசதி இல்லையே என்ற காரணத்தினால் நின்று போவதை தவிர்த்திட வேண்டும் என்ற எண்ணத்துடனும் திருக்கோயில்களில் குறைந்த செலவில் எளிய முறையில் திருமணங்கள் நடத்தப்பட வேண்டும் என்ற இந்தத் திட்டம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்டது.

இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது ஒரு திருமணத்திற்கு 1000 ரூபாய் வீதம் செலவு செய்ய திருக்கோயில்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. பின்னர் அந்த செலவு தொகை படிப்படியாக அதிகரிக்கப்பட்டு தற்போது எனது ஆட்சிக் காலத்தில் ஒரு திருமணத்திற்கு 4500 ரூபாய் வீதம் செலவு செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளது. ஏழை பெண்களுக்கான திருமணத் திட்டம் என்பது ஏற்கெனவே உள்ளது தான். ஆனால் அந்த திருமணங்கள் பல்வேறு இடங்களில் தனித் தனியாக நடைபெற்றன. அவற்றை ஒருமுகப்படுத்தி ஒரே இடத்தில் நடத்தினால் பொருட் செலவு, கால விரயம் ஆகியவற்றை தவிர்க்கலாம். மேலும் அப்படி செய்வது மணமக்களின் பெற்றோர்களுக்கும் வசதியாக இருக்கும் என்ற

எண்ணத்தில் இந்த திருவேற்காடு திருத்தலத்தில் ஒரே இடத்தில் 1008 ஜோடி மணமக்களுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

1008 ஜோடி மணமக்களுக்கு திருமணங்கள் நடத்தப்படுகிறது என்றால் 1008 ஏழை எளிய பெண்களின் வாழ்க்கையில் இன்று ஒளி விளக்கு ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்று தானே பொருள் ?

இது சமூகப் பணி என்றால்– ஆம் – இது சமூகப் பணி தான். இது ஆன்மீகப் பணிஎன்றால்– ஆம்– இது ஆன்மீகப் பணி தான். என்னைப் பொறுத்தவரை இவை இரண்டிற்கும் வேறுபாடு இல்லை. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்றால்– மக்கள் பணி தானே மகேசன் பணி ?

நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் தொன்மைச் சிறப்பு வாய்ந்த நமது ஆலயங்களை முறையாக பராமரிப்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறேன். சென்ற முறை அதாவது 1991 ஆம் ஆண்டு நான் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்ற போது முதலமைச்சரின் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி என்ற நிதியை ஏற்படுத்தி அந்த நிதியிலிருந்து பாடல் பெற்ற பழமையான திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டன. அவ்வாறு திருப்பணிகள் செய்யப்பட்ட பல திருக்கோயில்களில் கும்பாபிஷேகமும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழகத்தின் கிராமப்புறங்களில் உள்ள பல திருக்கோயில்களில் தினமும் ஒரு வேளை பூஜை கூட நடக்காத திருக்கோயில்கள் ஏராளமாக இருந்தன. ஒரு வேளை பூஜை கூட நடக்காமல் அதாவது, நைவேத்தியம் படைக்காமல், அகல் விளக்குக் கூட ஏற்றாமல் பாழடைந்து கிடந்த கோயில்களில் ஒரு வேளை பூஜையாவது நடத்திட வேண்டும் என்ற நோக்கத்தோடு " ஒரு கால பூஜை திட்டம்'' இறை அன்பர்களின் பங்களிப்போடு அமல்படுத்தப்பட்டது.

ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் ஒவ்வொரு திருக்கோயிலின் பெயரிலும் 25000 ரூபாய் நிரந்தரமாக முதலீடு செய்யபட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டி தொகையிலிருந்து நாள்தோறும் அந்த கோயில்களில் ஒரு கால பூஜை செய்ய வழி காணப்பட்டது.

மேலும் நிதி வசதி இல்லாத ஆயிரம் திருக்கோயில்களுக்கு மின் விளக்கு வசதி, கிராம பூசாரிகளுக்கு ஒய்வூதியத் திட்டம் போன்ற திட்டங்களை நாங்கள் சிறப்பாக அமல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

நான் தமிழகத்தின் முதலமைச்சராக 2002 ஆம் அண்டு மூன்றாம் முறையாகப் பொறுப்பு ஏற்றவுடன் திருக்கோயில்களுக்கு மதிய நேரத்தில் பசியோடு வரும் பக்தர்களின் பசியாற அன்னதானம் வழங்கும் அன்னதானத் திட்டத்தை தமிழகத்தில் தெரிவு செய்யப்பட்ட 63 திருக்கோயில்களில் நடைமுறைப்படுத்த ஆணையிட்டேன்.

மேலும் பண்பாட்டு கருவூலங்களாகத் திகழும் நமது திருக்கோயில்களில் நல்ல பண்புகளும் நாட்டின் தொன்மைச் சிறப்பும் இளைய தலைமுறையினர் இடையே வளர்ப்பதற்கு திருக்கோயில்கள் பயன்பட வேண்டும் என்ற கருத்தை உள்ளடக்கி வாரந்தோறும் ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறிகளை கற்பிக்கும் வகுப்புகள் திருக்கோயில்களில் நடைபெற வேண்டும் எனவும் நான் ஆணையிட்டுள்ளேன். இப்படி ஆலயங்களின் வாயிலாக சமுதாயப் பணிகளைச் செய்வதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

பாடல் பெற்ற திருக்கோயில்களில் ஒன்றான திருவேற்காடு திருத்தலத்தில் இன்று மண விழா காணும் மணமக்கள், உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்கள். இந்த 2016 பேர்களுக்கும், அதாவது 1008 ஜோடி மணமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவன் சாட்சியாகவும், சமுதாயத்தின் ஆதரவோடும் மணவாழ்க்கையை ஏற்றுக் கொண்டுள்ள மணமக்கள் அனைவரும் சமுதாயத்திற்கு தங்களால் ஆன உதவிகளை நல்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'' என்னும் திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப மணமக்கள் வாழ்வாங்கு வாழ வேண்டும் எனவும், இன்று இல்வாழ்க்கை ஏற்றுக் கொண்டுள்ள அனைவரும் எல்லா வளங்களையும், நலன்களையும் பெற்று சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு வாழ வேண்டும், எனவும் உளமார வாழ்த்துகிறேன்.

சில பத்திரிகைகளில் இன்றைக்கு நடைபெற்றுள்ள 1008 திருமணங்கள் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற வேண்டும் என்று எழுதி இருக்கிறார்கள். இது புதிய சாதனை அல்ல. எங்களைப் பொறுத்த வரை இந்தச் சாதனையை ஏற்கெனவே நிகழ்த்தி முடித்து விட்டோம். 1991 முதல் 1996 வரை முதல் முறையாக நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், முதலில் சிதம்பரத்தில் 2500 திருமணங்கள் ஒரு சேர நடத்தினோம். அதனை அடுத்து 1996 ஆம் ஆண்டில் திருச்சி மாநகரத்தில் 5004 திருமணங்களை ஒரு சேர ஒரே பந்தலில் நடத்தினோம். ஆகவே, எங்களைப் பொறுத்தவரை, இது புதிய சாதனை அல்ல. ஆனால் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ், அரசு சார்பில் நடத்தப்படும் இத்தகைய ஒரு மாபெரும் நிகழ்ச்சி இது தான் முதலான நிகழ்ச்சியாகும். முதல் முறையாக அரசு சார்பில் இத்தகைய பிரம்மாண்டமான நிகழ்ச்சிஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம் அல்ல. அதற்காக நாங்கள் எதையும் செய்யவில்லை. ஏழ்மை காரணமாக, திருமணம் கூட செய்து முடிக்க முடியாத குடும்பங்களில் அந்த வாட்டத்தைப் போக்க வேண்டும், ஏழை எளிய பெண்களின் வாழ்க்கையில் ஒளி விளக்கை ஏற்ற வேண்டும். தமிழகத்தில் எல்லோரும் எல்லாமும் பெற்று வளமுடன் வாழ வேண்டும் என்பதே எங்களுடைய நோக்கம். அதற்காக இந்த அரசு தொடர்ந்து முனைப்புடன் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இன்று இல்லறம் ஏற்றுக் கொண்டுள்ள மக்கள் அனைவரும் சீரோடும், சிறப்போடும் வாழ்வாங்கு வாழ வேண்டும்''.

தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை செயலாளர், திரு.பி.ஏ.இராமையா அவர்கள் வரவேற்புரையாற்றினார். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.சி.இராமசாமி அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். விழா முடிவில் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் திரு எம்.ஏ.கௌரிசங்கர் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

• • •



# 252 புதிய பேருந்துகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.7.2002 அன்று சென்னை தீவுத் திடலில் அரசுக்குச் சொந்தமான 252 புதிய பேருந்துகளின் இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

## புதிய பேருந்துகள் வாங்கத் திட்டம்

தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 14.5.2001 அன்று பொறுப்பேற்றதும், போக்குவரத்துத் துறை தொடர்பான ஆய்வின் போது, அரசுக்குச் சொந்தமான பேருந்துகள் மிகவும் நலிவடைந்த நிலையில் இருப்பதையும், இத்தகைய பேருந்துகளில் ஏறிச் செல்லும் பயணிகள் மிகவும் துன்பத்திற்கு ஆளாவதையும் அறிந்து, இவற்றை உடனடியாக மாற்றி புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்றும், போக்குவரத்துக் கழகங்கள் நலிவை நீக்கி, புதிய பேருந்துகள் மூலம் பொலிவு சேர்க்கப்படும் என்றும் தெரிவித்தார். இதன்படி 2001–2002–ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 1550 புதிய பேருந்துகள் ஆயுட் காப்பீட்டுக் கழகத்தின் நிதி உதவியோடு வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ரூ.150 கோடி முதலீட்டில் இந்த புதிய பேருந்துகள் வாங்க திட்டமிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து புதிய பேருந்துகள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் முனைப்பாக மேற்கொள்ளப் பட்டன. ஜூன் 2002 முடிய 690 பேருந்துகளுக்கான அடிச்சட்டங்கள் (Chasis) வாங்கப்பட்டன. இவற்றில் 252 பேருந்துகளுக்கான கூண்டுகள் (Body) சிறப்பான முறையில் கட்டப்பட்டன. இவ்வாறு தயார் நிலையில் உள்ள பேருந்துகளின் இயக்கத்தைத் தொடங்கி வைத்து, அவற்றை உரிய போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கும் விழா 8.7.2002 அன்று நடைபெற்றது.

இந்த விழாவில், முதலமைச்சர் அவர்கள் சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்ட போக்குவரத்துக் கழகங்களுக்கு உரிய 63 பேருந்துகளை அந்தந்த






போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கினார். இதை குறிக்கும் வகையில், சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டங்களுக்குரிய 63 புதிய பேருந்துகளின் இயக்கத்தை தொடங்கி வைத்தார். இதே நேரத்தில் மாநிலத்தின் மற்ற மாவட்ட போக்குவரத்துக் கழகங்களுக்கு உரிய 189 பேருந்துகளுக்கான இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது.

8.7.2002 அன்று இயக்கப்பட்ட மாநகரப் பேருந்துகள் மாசுக் கட்டுப்பாடு (பாரத்–2)–க்கு உட்பட்டவையாக வடிவமைக்கப்பட்டு, தமிழகத்திலேயே முதன் முறையாக மாநகரப் போக்குவரத்து கழகத்தினால் அறிமுகப் படுத்தப்படுகிறது.

பேருந்துகளை தவிர்த்து, அடிச்சட்டங்கள் (Chasis) வாங்கப்பட்டுள்ள 438 பேருந்துகளும் இன்னும் 2 மாதங்களில் இயங்கும் வகையில் கூண்டுகள் கட்டப்பட்டு செயல்படுத்தப்படும். மீதமுள்ள 860 பேருந்துகளுக்கான அடிச்சட்டங்கள் வரும் மாதங்களில் வாங்கப்பட்டு அதற்குரிய கூண்டுகள் உடனடியாக கட்டப்பட்டு, இந்த ஆண்டு இயக்கப்படும்.

**பணியாளர்கள் நியமனம்**

தமிழ் நாட்டில் உள்ள 19 போக்குவரத்துக் கழகங்களில் தற்போது மொத்தம் 16,797 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதில் 15,271 பேருந்துகள் வழித்தட பேருந்துகளாகவும், 1526 மாற்றுப் பேருந்துகளாகவும் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளால் நாளொன்றுக்கு 68 லட்சம் கிலோ மீட்டர் இயக்கப்பட்டு, ஏறத்தாழ 162 லட்சம் பயணிகள் நாள்தோறும் பயனடைகிறார்கள். இந்த பேருந்துகளை இயக்க 1 லட்சத்து 24 ஆயிரம் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

பேருந்துகள் செயல்திறனை அதிகரித்து பயணாளிகளுக்கு சிறப்பான சேவையை அளிக்கும் வகையில், 2002–2003 ஆண்டில் புதிய பேருந்துகள் வாங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இட்ட ஆணையின்படி இந்த ஆண்டு 2,275 புதிய பேருந்துகள் வாங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்துகள் வாங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. •

> **கா**லம் மாறக்கூடியது. மாறிக்
> கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்ப
> கருத்தில் மாற்றம் வேண்டும்.
> மாறாத சமுதாயம் மறைந்து விடும்.
>
> **– பேரறிஞர் அண்ணா**



# மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் வெளிநாடுகளின் தொழில் மற்றும் வணிக அமைப்புகளின் பிரதிநிதிகள் சந்திப்பு

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 11.7.2002 அன்று தலைமைச் செயலகத்தில், அமெரிக்க நாட்டின் தூதர் திரு.பெர்னார்டு ஜே.ஆல்ட்டர் (Mr.Bernard J.Alter) அவர்கள் தலைமையில் அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மன், ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தொழில் மற்றும் வணிக அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் சந்தித்தனர்.

இந்தியாவிலேயே தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதல் மாநிலமாக உருவாக்கிட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இதன் விளைவாக உலகின் பல நாடுகளிலிருந்தும் *Cornell University, ABN Amro Bank, Standard Chartered Bank* மற்றும் உலக வங்கி *முதலான பல்வேறு புகழ் பெற்ற நிறுவனங்கள்* பல்வேறு துறைகளில் முதலீடு செய்ய ஆர்வம் கொண்டு தமிழகத்தை நாடி வந்த வண்ணம் உள்ளனர். மேலும், உலக அளவிலான புகழ்மிக்க நிறுவனங்கள் தமிழகத்தில் முதலீடு செய்து புதிய தொழில்கள் தொடங்கிட வசதி செய்து தரும் வகையில் அந்த நிறுவனங்களின் தலைவர்களுடன் தமிழக அரசு தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகிறது. இதன் அடிப்படையில் 10.7.2002 அன்று அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மன், ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தொழில் மற்றும் வணிக அமைப்புகளின் பிரதிநிதிகள் அமெரிக்க நாட்டின் தூதர் திரு.பெர்னார்டு ஜே.ஆல்ட்டர் (Mr.Bernard J.Alter) அவர்கள் தலைமையில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை சந்தித்துப் பேசினர்.

இந்த குழுவில், அமெரிக்க நாட்டு வணிகர் கழக தமிழ்நாடு பிரிவின் தலைவர் திரு.பிரியன் பிளாக் (Mr.Brian Black, Chairperson, American Chamber) மற்றும் இந்தியன் அடிடீவ்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.கெவின் தோர்ப் (Mr.Kevin Thorpe) ஆகியோரும், பிரிட்டிஷ் வியாபார குழுவின் (British Business Group) (தமிழ்நாடு பிரிவு) இந்திய துணை கண்டத்தின் மண்டல மேலாளர் திரு.ஆலன் டெக்கான் (Mr.Allan Deacon, Regional Sourcing Manager(Indian Sub-Continent), பிரிட்டிஷ் துணை தூதரகத்தின் இரண்டாவது நிலை செயலாளர் (வணிகம்) திரு.டேவிட் அப்பாட் (Thiru.David Abbott, Second Secretary (Commercial), British Deputy High Commission) ஆகியோரும் ஜெர்மன் நாட்டு வியாபாரக் குழுவின் சார்பில் மேன் டக்ராஃப் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.கரேல் ஜிஎல் மீஜர்ஸ் (Mr.Karel GL Meijers, Managing Director, MAN TAKRAF (India) Private Limited) மற்றும் பேப்காக் போர்சிங் பவர் நிறுவனத்தின் துணைத்தலைவர் திரு.க்ளாஸ் மொக்லிங்ஹாஃப் (Mr.Klaus Moecklinghoff, Vice President, Babcock Borsing Power), ஜப்பான் நாட்டு வணிக குழுவின் சார்பில் மிட்சுபா சிகால் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் திரு.ஜே.சுசுகீ (Mr.J.Suzuki, Chairman, Mitsuba Sical India Limited) மற்றும் அதன் நிர்வாக இயக்குநர் திரு.டி.கோபயாஷி (Mr.T.Kobayashi) ஆகியோரும், ஆஸ்திரேலிய வர்த்தக கழகத்தின் சார்பில் அதன் நியமன மேலாளர் திரு.ஏ.கே.தரீன் (Mr.A.K.Tareen, Post Manager, Australian Trade Commission) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.



இந்த நிகழ்ச்சியின் போது, தலைமைச் செயலாளர் திரு.சுகவனேஸ்வர், நிதித்துறை செயலாளர் திரு.என்.நாராயணன், தொழில் துறை செயலாளர் (பொறுப்பு) திரு.கே.ஸ்கந்தன், உள்துறை செயலாளர் திரு.நரேஷ் குப்தா, வணிகவரித் துறை செயலாளர் திரு.சக்திகாந்த தாஸ், பொதுத்துறை செயலாளர் திரு.டி.பிச்சாண்டி ஆகியோர் உடனிருந்தனர். ☐

# நமது இலட்சியம் உயர்வானது! நமது பார்வை தெளிவானது! நமது வெற்றி முடிவானது!

– மதுரை மாவட்டம் மேலூரில் 23–7–02 அன்று நடைபெற்ற பணிகள் வளர்ச்சித் திட்டப்பணிகள் திறப்பு விழா – புதிய திட்டப்பணிகள் கால்கோள் விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...

"கணக்கிட முடியாத காலத்திலிருந்தே, ஆலவாய் அழகனும், அங்கயற் கண்ணியும் அருளாட்சி நடத்தி வரும் மதுரைக்கு அருகில் அமைந்துள்ள மேலூரில் உங்களை எல்லாம் காணவும், கண்டு மகிழவும், நன்றி கூறவும், நலத்திட்ட உதவிகளை வழங்கவும் நான் இன்று இங்கு வந்திருக்கிறேன்.

இந்த நாட்டின் அருள் மையங்களில் ஒன்றான மதுரையில் அன்னை மீனாட்சி ஆலயம் மட்டுமல்லாமல், மதுரையைச் சுற்றி அழகன் முருகன் ஆலயங்கள் இரண்டும் பக்தர்களை பரவசப்படுத்தும் வகையில் அமைந்து இருக்கின்றன.

அறுபடை வீடுகளில் இருபடை வீடுகள் மதுரைக்குச் சொந்தம். ஒன்று திருப்பரங்குன்றம், மற்றொன்று பழமுதிர்சோலை.

இந்த சிறப்பு வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லாத தனிச் சிறப்பாகும்.


சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை மாநகரைத் தலைமையிடமாகக் கொண்ட மதுரை மாவட்டத்திலுள்ள சட்டமன்றத் தொகுதிகள் மொத்தம் 10. கடந்த 2001ஆம் ஆண்டு நடந்த தமிழக சட்டமன்ற பொது தேர்தலின் போது இந்த 10 தொகுதிகளையும் ஒன்றுக்கூட குறையாமல் அப்படியே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், கழக கூட்டணி கட்சிகளுக்கும் நீங்கள் அள்ளி வழங்கினீர்கள்.

நீங்கள் இப்படி எங்கள் மீது காட்டுகின்ற பேரன்பு நேற்று இன்று ஏற்பட்டதல்ல என்பது எனக்கு நன்கு தெரியும்.

தமிழக மக்களிடம் நாங்கள் காட்டும் விசுவாசத்திற்கு கிடைத்த வெகுமதி தான், தமிழக மக்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கை – எங்களுக்கு அளித்த மகத்தான ஆதரவு – எங்களுக்கு அளிக்கப்பட்ட ஆட்சிப் பொறுப்பு.







உடனடியாக, நீலகிரி சிறுதேயிலை விவசாயிகளுக்கு அவர் மனம் நிறைவடையும் வண்ணம் நிவாரணத் தொகையை வழங்கினேன் என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களின் வாழ்க்கையில் ஏற்றம் காண, நீலகிரி தேயிலையை, 'ஊட்டி டீ' என்ற பெயரில் தமிழகம் முழுவதும் இயங்கும் 27,000 நியாய விலைக் கடைகளில் விற்க ஆணையிட்டேன். இன்று ஒவ்வொரு மாதமும், சுமார் 250 டன் தேயிலைத் தூள் விற்கப்பட்டு, சிறு தேயிலை விவசாயிகளின் பிரச்சினை ஓரளவு குறைய வழி காணப்பட்டுள்ளது. இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளது. நல்லவைகளை எனதருமை தமிழக மக்களுக்காக தொடர்ந்து செய்வேன் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு, நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே என்னுடைய புனிதக் கடமையாகக் கருதுகிறேன். ஏழை, எளிய மக்களின் எதிர்ப்பார்ப்புக்களை நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை.

வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களுக்கு, நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 50 பைசா என்ற விலையிலேயே தொடர்ந்து இருக்கும் என்று சட்டமன்றத்திலேயே அனைவரும் மகிழும் வண்ணம் நான் அறிவித்தேன். அரசின் கடும் நிதி நெருக்கடிக்கு இடையேயும், ஏறத்தாழ 1500 கோடி ரூபாய் உணவு மானியம் வழங்க வேண்டி இருந்த போதிலும், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தால் நியாய விலைக்கடைகளில் அரிசியின் விலை கிலோ ஒன்றிற்கு 3 ரூபாய் 50 பைசாவிலிருந்து ஏற்றப்பட மாட்டாது என்று நான் அறிவித்தேன்.

துயர் உறும் மாந்தர்களைக் கண்ட போதெல்லாம், அவர் தம் துயர் களைய உள்ளம் துணிய வேண்டும் – இதுதான் மனித இயல்பு.

இதைத்தான் எனது வாழ்க்கையின் தாரக மந்திரமாக நாளும் கடைபிடித்து வருகிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் நீலகிரி சிறு தேயிலை விவசாயிகள், தம்முடைய வாழ்க்கைக்காக, போராட்டம் நடத்திய வேளையில், அவர்கள் கோரிக்கையை கவனிக்காமல், போராட்டத்தை நசுக்கியது முந்தைய அரசு.

அப்போதே அவர்களின் நியாயமான கோரிக்கையை ஆதரித்து நான் குரல் கொடுத்தேன். ஆட்சி மாறியது. நான் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றதும்,

மேலும், தமிழகத்தில் உள்ள விவசாயிகள் வாங்கிய கடனுக்கான வட்டி, அபராத வட்டித் தொகை ஏறத்தாழ 311 கோடி ரூபாயை உங்கள் அன்பு சகோதரியின் அரசு தள்ளுபடி செய்தது. இதனால், ஏறத்தாழ 6 இலட்சத்து 11 ஆயிரம் விவசாயிகள் பயன் அடைந்தார்கள்.

விவசாயிகளின் வாட்டம் போக்கிட தொடர்ந்து நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். காவிரி டெல்டா விவசாயிகள் முன்பு ஒரு முறை பெரும் மழையால் பாதிக்கப்பட்ட போதும், தற்போது நீரின்றி வாடும் போதும், அவர்களின் துயர் துடைக்க ஓடோடி சென்று உதவிகளை செய்தது எனது தலைமையிலான இந்த அரசு.

ஏனென்றால் எங்களுக்குத்தான் மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி நன்கு தெரியும் – புரியும். ஆக்வேதான் 1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை எதை எதையோ காட்டி, இட்டுக் கட்டிய கதைகள் பலவற்றை சொல்லி என்னை உங்களிடமிருந்து பிரிக்க சதி செய்தார்கள் எதிரிகள். ஆனால் நீங்கள் அவர்களுக்குச் சரியான பாடம் புகட்டி விட்டீர்கள். நீங்கள் தான் அவர்களை முழுக்கத் தோற்கடித்து மூலையில் அமர்த்திவிட்டீர்களே!

என்னை ஒரு போதும் உங்களிடமிருந்து பிரிக்க முடியாது என்பதற்கு இங்கே கடலென கூடியிருக்கும் நீங்களே சாட்சி!

உங்களுக்கெல்லாம் சேவை புரியத்தான் நான் இருக்கிறேன்! எங்கள் அரசு இருக்கிறது.

③

2001ஆம் ஆண்டு உங்கள் அமோக ஆதரவுடன் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு மக்களுக்கு ஆற்றியுள்ள பணிகள் சிலவற்றை வரிசைப்படுத்த விரும்புகிறேன்.

தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் நிலவி வரும் பெண் சிசு வதையை கட்டுப்படுத்தி தடுப்பதற்காக, "தொட்டில் குழந்தைத் திட்டம்" என்ற புரட்சிகரமான திட்டத்தை, நான் முன்பு ஆட்சியில் இருந்தபோது 1992ஆம் ஆண்டில், இந்தியாவிலேயே ஒரு முன்னோடி திட்டமாக தமிழகத்தில் தொடங்கி வைத்தேன். இந்தத் திட்டம் நல்ல பலனைத் தந்தது.

ஈன்றெடுத்த பெண் குழந்தைகளை "வேண்டாம்" என்று அழிப்பதற்கு பதிலாக, அரசின் பாதுகாப்பிற்கு



கொண்டு வந்து கொடுத்து தாய்மார்கள் அந்தக் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு தேடினார்கள்.

1992ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை மாநிலம் முழுவதும் இந்தத் திட்டத்தின்கீழ், 140 குழந்தைகள் கிடைக்கப் பெற்றார்கள். ஆனால், 1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு மே மாதம் வரை, இந்தத் திட்டத்தின் கீழ், 10 குழந்தைகளை மட்டுமே தாய்மார்கள் ஒப்படைத்தார்கள் என்று அறிகிறேன். ஆனால் மீண்டும் கடந்த ஆண்டு 2001இல் உங்கள் அன்பு சகோதரியின் ஆட்சி வந்த பின்னர், 14-5-2001 முதல் 15-7-2002வரை 199 பெண் குழந்தைகள் கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் தாய்மார்களால் அரசிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். இது எதனைக் காட்டுகிறது? தமிழக தாய்மார்களுக்கு எந்த அரசிடம் நம்பிக்கை வைத்து தங்களுடைய குழந்தைகளை ஒப்படைக்க வேண்டும், எந்த அரசிடம் தங்கள் குழந்தைகள் பாதுகாப்பாக இருக்கும் என்பது பற்றியெல்லாம் நன்கு தெரியும், புரியும். அதே நேரத்தில், முந்தைய ஆட்சியின் மீது தமிழக தாய்மார்கள் வைத்திருந்த அவநம்பிக்கையை, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அளிக்கப்பட்ட பெண் குழந்தைகளின் குறைந்த எண்ணிக்கையே தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.

பெண் சிசுவதை என்பது ஒரு சமூகக் கேடு. பெண் குழந்தைகளைப் பிறந்தவுடன் கொல்லும் போக்கை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், நிறைய குழந்தைகள் அரசுக்கு வர வேண்டும் என்பது அரசின் நோக்கம் அல்ல.

காலப் போக்கில், சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்பட்டு, பெண் குழந்தைகளையும் ஆண் குழந்தைகளைப் போலவே கருதிப் போற்றும் நிலை ஏற்பட்டு, இந்தத் திட்டத்திற்கு தேவையே இல்லாமல் போக வேண்டும் என்பது தான் இந்த அரசின் விருப்பம்.

★ 11 மற்றும் 12-ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவியர்களுக்கு இலவச மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தை அமல்படுத்தி உள்ளோம். கடந்த ஆண்டு ஏறத்தாழ 56 ஆயிரம் மாணவியர்கள் இந்த திட்டத்தினால் பயன் பெற்றுள்ளார்கள். இந்த ஆண்டும் ஏறத்தாழ 37 ஆயிரம் மாணவியர்கள் பயன் பெறுவார்கள்.

★ கடந்த ஆட்சியில் செயற்கையான விலையேற்றத்தால் கட்டுக்கடங்காமல் மூட்டை ஒன்றுக்கு 200 ரூபாய் வரை போன சிமெண்ட் விற்பனை விலையை, மூட்டை ஒன்றுக்கு அதிகபட்சம் 145 ரூபாய் மற்றும் 135 ரூபாய் என நிர்ணயம் செய்து, சிமெண்ட் விற்பனை விலையை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம். 2001-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மார்க்கெட்டில் நிலவி வந்த சிமெண்ட் விலையை, இன்றைய விலையான மூட்டை ஒன்றுக்கு 120 ரூபாய் என்பதுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, மூட்டை ஒன்றுக்கு சுமார் 80 ரூபாய் வரை தற்போது விலை குறைந்துள்ளது என்பதை தமிழக மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றுள்ளார்கள்.



★ சிறந்த மருத்துவ வசதி பெரும்பாலும் நகர்ப்புறங்களில் வாழும் மக்களுக்கு மட்டுமே கிடைத்து வருகிறது. கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கும் இது போன்ற மருத்துவ வசதிகள் கிடைத்திட, அறுவை சிகிச்சை அரங்கம், எக்ஸ்ரே வசதி, ஆம்புலன்ஸ் வசதி, ரத்தம் மாற்றும் வசதி, சோனாகிராம் மற்றும் சிறந்த மருத்துவ நிபுணர்களின் கவனிப்பு ஆகியவை கிராமப்புறங்களில் கிடைக்கச் செய்ய தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும், ஏற்கெனவே இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனைகளாக தரம் உயர்த்த திட்டமிடப்பட்டு, அதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த ஆண்டு 20 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனைகளாக மாற்றப்பட்டு உள்ளன. 2005-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் தமிழகத்தில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனையாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் நிச்சயமாக செயல்படும்.



★ வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதிகள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர் விடுதிகள் அனைத்தும் சொந்த கட்டடங்களில் இயங்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு பெரும் எண்ணிக்கையிலான விடுதிக் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ அனைவருக்கும் கல்வி இயக்கம் தமிழகத்தில் வெகு சிறப்பாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. எதிர்வரும் 10 ஆண்டுகளில் ஏறத்தாழ 3600 கோடி ரூபாய் மதிப்பிலான பள்ளிக் கட்டடங்கள், ஆய்வுக்கூட கட்டடங்கள், வகுப்பறைகள், பரிசோதனை உபகரணங்கள், ஆசிரியர் கல்வி பயிற்சி, புதிய மேல்நிலை, உயர்நிலை, நடுநிலை மற்றும் ஆரம்பப்பள்ளிகளை துவக்கும் பணி ஆகியவை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

★ முந்தைய ஆட்சியின் அக்கறையின்மை காரணமாக, பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி மாணவ மாணவியர்க்கு சிறப்பு ஆசிரியர் பட்டயப் பயிற்சி அளிக்கும் திட்டம் தற்போது வெகு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் பெண் மருத்துவர்களின் சேவையின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 350 பெண் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் செவிலியர் பணியிடங்களும், பிற மருத்துவ ஊழியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

★ 5 ஆண்டுகளில் 5 இலட்சம் மகளிருக்கு தொழில் முனைவோருக்கான பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கான தனி தொழில் பூங்காக்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

★ தமிழகம் தொழில் துறையில் மேலும் முன்னேற்றம் அடைய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்ப மென்பொருள் பூங்கா Xansa என்ற வெளிநாட்டு நிறுவனத்தால் நிறுவப்பட உள்ளது.

★ உயிர் தொழில்நுட்ப பூங்கா – Bio-Technology Park தொடங்குவதற்கு அமெரிக்காவின் கார்னல் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டு உள்ளது.

★ தருமபுரி மாவட்டத்தில் மலர் ஏற்றுமதிக்கான மண்டலம்.

★ சென்னை,தரமணிக்கு அருகே சிங்கப்பூர் Ascendas நிறுவனத்தின் உதவியோடு 400 கோடி ரூபாய் மதிப்பில் தகவல் தொழில்நுட்ப பூங்கா–

★ திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் Tata Steel நிறுவனம் ஆரம்பிக்க உள்ள Titanium Dioxide தொழிற்சாலை–

★ தேசிய அனல் மின் கழகத்தின் கூட்டு முயற்சியோடு சென்னை, எண்ணூரில் 5000 கோடி ரூபாய் மதிப்பில்



1000 மெகாவாட் அனல் மின் நிலையம்– இப்படி முன்னேற்றத்திற்கான பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை, 21 அரசு போக்குவரத்து கழகங்களை, 7 போக்குவரத்து கழகங்களாக ஒருங்கிணைப்பதன் மூலம் இயக்கச் செலவு குறைக்கப்பட்டு அரசு போக்குவரத்து கழகங்கள் இலாபத்தில் இயங்க தொடங்கி உள்ளன. மேலும் ஓட்டை உடைசல்களாக ஓடிக் கொண்டிருந்த பழைய பேருந்துகள் அகற்றப்பட்டு, புதிய பேருந்துகள் வாங்கி வழங்கப்பட்டு வருகின்றன.

பல ஆண்டுகளாக தேங்கிக் கிடந்த வழக்குகளை துரிதமாக விசாரிக்க 30 விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 19 விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட உள்ளன.

தமிழகத்தின் ஊரக பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் மகளிருக்கென ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மொத்தம் 6369 ஒருங்கிணைந்த மகளிர் துப்புரவு வளாகங்கள் ஏறத்தாழ 126 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டு வருகின்றன.

குடிநீருக்காக தாய்மார்கள் படும் இடர்பாடுகளைக் களைய பல பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆண்டிபட்டி – சேடப்பட்டி கூட்டு குடிநீர்த் திட்டம், சென்னைக்கு வீராணம் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இராமநாதபுரத்திற்கு காவிரியிலிருந்து நீர் கொண்டு செல்லும் திட்டம் – தருமபுரி, வேலூர் மாவட்டங்களுக்கு ஒகேனக்கல்லிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் ஆகியவை அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

★ தமிழகத்தில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை இதுவரை சரிவர பெய்யாத காரணத்தினால், பல்வேறு மாவட்டங்களில் உருவாகியுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கவும், இதர வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், இயற்கை இடர்பாடுகளால் நேர்ந்த சேதங்களை சரிப்படுத்தவும், சீர்படுத்தவும், மொத்தம் 55 கோடியே 90 இலட்சம் ரூபாய் இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மதுரை மாவட்டத்திற்கு மட்டும் 3 கோடியே 99 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, கிராம பஞ்சாயத்துக்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மதுரை மாநகராட்சி ஆகிய பகுதிகளில், குடிநீர்த் தட்டுப்பாடு மற்றும் வறட்சி நிவாரணப் பணிகளை, போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ தமிழகத்தில் இதுவரை எந்த அரசுமே செய்யாத ஒரு சாதனையாக, தமிழ்நாட்டில் உள்ள ஏறத்தாழ 20 இலட்சம் ஹெக்டேர் அதாவது 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை ஐந்தாண்டு காலத்தில் விளைநிலமாக மாற்ற, சென்ற ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரில் மாபெரும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை நான் அறிவித்திருந்தேன். முதல் கட்டமாக, கட்டாந் தரையாக இருந்த நிலத்தை தரம் உயர்ந்த விளைநிலமாக மாற்ற இந்த ஆண்டு மொத்தம் 3 இலட்சத்து 33 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இம்முயற்சியில் தனியார் துறையினரும் ஈடுபடலாம் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். அதன் அடிப்படையில் தற்போது 1038 விண்ணப்பங்கள் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன என்பதையும், இவற்றின் பரிசீலனைக்குப் பின்னர் அனுமதி வழங்கப்பட்டு, தரிசு நிலங்கள் உபயோகத்திற்கு கொண்டு வரப்படும் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

★ கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை உருவாக்க ஒவ்வொரு ஒன்றியத்திலும் குறைந்த பட்சம் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் ஒரு தொழில் தொடங்குவதை ஊக்குவிப்பதற்காக புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு வேளாண் சார் தொழிற்சாலைகளை



தமிழ்நாட்டிலுள்ள 385 ஒன்றியங்களிலும் தொடங்குவதற்கு அரசு பல சலுகைகளை வழங்கும். இதுவரை 251 ஒன்றியங்களில் தொழில் தொடங்குவதற்கு ஆர்வம் தெரிவித்து, 841 தொழில் முனைவோர்கள் விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ நிலத்தடி நீர் குறைந்து வருவதை தடுத்து நிறுத்தி மழை நீரை சேகரித்து அதன் மூலம் நிலத்தடி நீர்வளத்தை அதிகரிக்க மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை மிகப் பெரிய அளவில் எங்களது அரசு செயல்படுத்தி வருகிறது. இனிமேல் தமிழகத்தில் எந்த பகுதியில் கட்டடம் கட்டினாலும் அந்தக் கட்டடத்தில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துவதைக் கட்டாயமாக்க அரசு உத்தரவிட உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

★ தமிழகம் முழுமையும் உள்ள 63 திருக்கோயில்களில் பக்தர்கள் பசியாறும் வகையில் இலவசமாக அன்னதானம் வழங்கும் அன்னதானத் திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. படிப்படியாக, தமிழகத்தில் உள்ள அனைத்து திருக்கோயில்களிலும், இத்திட்டத்தை செயல்படுத்த எண்ணியுள்ளோம்.

★ சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த குடும்பங்களிலும், ஏழை எளிய குடும்பங்களிலும், திருமணப் பருவத்தை எய்திய பெண்களுக்கு திருமணம் செய்து வைப்பது என்பது இன்னும் கூட ஒரு சிரமமான காரியமாக இருக்கிறது. அவர்களுக்கு உதவிட வேண்டும் என்ற நோக்கத்துடனும், வசதி இல்லையே என்ற ஒரே காரணத்தினால் அத்தகைய திருமணங்கள் நின்று போவதை தவிர்த்திட வேண்டும் என்ற எண்ணத்துடனும், அண்மையில் சென்னை அருகே, திருவேற்காடு அருள்மிகு கருமாரியம்மன் ஆலயத்தில் அரசு சார்பில் 1008 திருமணங்களை வெகு விமரிசையாகவும், அதே நேரத்தில் எளிமையாகவும் நடத்தினோம். மணமக்கள் எந்த ஜாதி, எந்த இனம் என்று பார்க்காமல், அவர்கள் அனைவரும் மனித ஜாதி என்ற வகையில் ஒருங்கிணைக்கப்பட்டு, 1008 திருமணங்களை ஒரு சேர வண்ணமிகு நிகழ்ச்சியாக நடத்திக் காட்டினோம்.

ஒவ்வொரு ஜோடி மணமக்களுடனும் 10 உறவினர்கள் வர அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் அந்தந்த மாவட்டங்களில் இருந்து தனிப் பேருந்துகளில் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் தங்குவதற்கு திருவேற்காடு அருகே தங்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஜோடி மணமக்களுக்கும் பட்டுப் புடவை, பட்டு வேஷ்டி, சட்டை, தங்கத்தினால் ஆன தாலி, வெள்ளியால் ஆன மெட்டி ஆகியவை வழங்கப்பட்டன. அத்துடன் பித்தளை காமாட்சி விளக்கு, எவர்சில்வர் குடம் உட்பட 19 சீர்வரிசை பொருட்களும் ஒவ்வொரு ஜோடி மணமக்களுக்கும் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

மணமக்களும், மணமக்களது உறவினர்களும், சென்னைக்கு வந்து தங்கிய நாள் முதல் திருமண நாளன்று மதியம் வரை விருந்தளித்து உபசரிக்கப்பட்டனர்.

ஒரே பந்தலில் 1008 ஜோடி மணமக்கள் திருமணம் செய்து கொண்ட நிகழ்ச்சி கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

எங்கள் அரசின் சாதனைகளை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். அத்தனை சாதனைகளையும் இங்கே கூறுவது என்பது இயலாத காரியம். ஆனால், தமிழகம் அடுத்த ஒன்பது, பத்து ஆண்டுகளில் எப்படி இருக்க வேண்டும் என்னென்ன சாதிக்க வேண்டும் என்பது பற்றி எனக்கு ஒரு கனவு இருக்கிறது.

கிராமங்களுக்கெல்லாம் கம்ப்யூட்டர் வந்து என்ன சாதிக்கப் போகிறோம், என்று சிலர் கேட்கலாம்! தகவல் தொழில் நுட்பத் துறையில், தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக திகழ்ந்து வருகின்ற நிலையில், நிச்சயமாக கம்ப்யூட்டர் மற்றும் இன்டர்நெட் போன்றவை, கிராமந்தோறும் நிறுவப்பட வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை. இப்படி கம்ப்யூட்டரையும், இன்டர்நெட்டையும், நமது கிராமங்களில் உள்ள மக்களெல்லாம் பயன்படுத்த தொடங்கினால், நமது தமிழ்நாட்டில், ஒரு தகவல் தொழில்நுட்ப, புரட்சியே உருவாகும் என்பதற்கு இந்த மதுரை மாவட்டத்திலேயே நடந்த ஒரு சிறு உண்மைச் சம்பவத்தை, இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இந்த மேலூர் வட்டத்திலே, T. உலகுபிச்சான்பட்டி என்று ஓர் அழகிய கிராமம் உண்டு. கிராம மக்களுக்கும் இணையதள வசதி, அதாவது இண்டர்நெட் வசதி, அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன், இன்டர்நெட் வசதி அடங்கிய கம்ப்யூட்டர் மையம் ஒன்று, அங்கே இயங்கி வருகிறது. அங்கே அதனை இயக்குகின்றவர், அந்தப் பகுதியிலேயே கம்ப்யூட்டர் படித்த ஓர் இளம் பெண். அவர் தன்னுடைய கிராமத்தில் பயிர் செய்யப்பட்ட வெண்டைக்காய் பயிர், கடுமையான நோயினால் தாக்கப்பட்டுள்ளதை பார்த்தார். உடனே அவர், தமிழ்நாடு வேளாண்மை கல்லூரிக்கு, இன்டர்நெட்டில் E-Mail (Electronic Mail) மூலமாக அங்குள்ள விஞ்ஞானிகளோடு தொடர்பு கொண்டு, இந்தப் பயிரை தாக்கிய நோயின் இயல்புகளை, அவர்களுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார். உடனே வேளாண்மை பல்கலைக் கழக விஞ்ஞானிகள் தாக்கிய நோய் என்ன என்பதை E-Mail வாயிலாக அறிந்து கொண்டு T. உலகுபிச்சான்பட்டி கிராமத்தில், கம்ப்யூட்டரை இயக்குகின்ற இளம் பெண்ணுக்கு, உடனடியாக எந்த பூச்சுக்கொல்லி மருந்தினை, பயன்படுத்த வேண்டுமென்று, E-Mail வாயிலாகவே தெரிவித்துள்ளனர். உடனே, விஞ்ஞானிகள் குறிப்பிட்ட பூச்சிக்கொல்லி, மருந்தை, வாங்கி வரச் செய்து, கிராமத்து விவசாயிகள் இதனை பயன்படுத்தி, சுமார் 2 லட்சம் ரூபாய் மதிப்புள்ள, வெண்டைக்காய் பயிரை, காப்பாற்றியுள்ளனர்.


இது மட்டுமல்ல– இதே கிராமத்தில் இயங்கிக் கொண்டிருக்கும், கம்ப்யூட்டர் உதவியோடு, மதுரையில் உள்ள அரவிந்த கண் மருத்துவமனைக்கு இங்கிருந்தே கம்ப்யூட்டர் மையத்தில் உள்ள இணையதள Camera அதாவது Web Camera மூலமாக, இந்த கிராமத்தில்

சிலருக்கு ஏற்பட்டுள்ள, கண் நோய்களை பற்றி எடுத்துச் சொல்லி, மருத்துவர்கள் அவற்றை பரிசோதித்து அதற்கு இன்டர்நெட் மூலமாகவே, மருத்துவ ஆலோசனையை இந்த கிராமத்து மக்களுக்கு வழங்கி வருகிறார்கள்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும், தமிழ்நாட்டில், ஒரு கம்ப்யூட்டர் புரட்சியே நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகள் என்பதைக் கூறி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களிலும், இத்தகைய கம்ப்யூட்டர் புரட்சியை எங்கள் அரசு கொண்டு வருவது நிச்சயம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தர்மம் தலை காக்கும் தக்க சமயத்தில் உயிர் காக்கும் இது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய பிரபலமான பாடல். நீங்கள் எல்லாம் எண்ணற்ற முறை இதைக் கேட்டு இருப்பீர்கள். இது எவ்வளவு உண்மை என்பதற்கு எடுத்துக் காட்டாக ஒரு கதையை இப்போது உங்களுக்கு கூற விரும்புகிறேன்.

பழைய ரோம் நாட்டில், ரோம் நாட்டு சாம்ராஜ்யத்தில் ஆன்ட்ரோகிளிஸ் என்ற ஒரு சாதாரண மனிதன்



இருந்தான். ஒரு நாள் அவன் காட்டு வழியாக போய்க் கொண்டு இருந்தான். அப்போது ஒரு சிங்கத்தின் குரல் ஒலிப்பது கேட்டது. முதலில் பயந்தான். சுற்றிப் பார்த்தான். எங்கே சிங்கம் தன் மீது பாய்ந்து விடுமோ என்று பயந்தான். ஆனால் எங்கேயும் சிங்கம் தென்படவில்லை. சற்று உற்று கவனித்து கேட்டான். சிங்கம் கம்பீரமாக கர்ஜிக்கவில்லை. அது ஏதோ வலியில் வேதனையில் ஓலமிடுவது போல் சத்தம் கேட்டது. பார்த்தான். அருகில் ஒரு குகை இருந்தது. அதற்குள் எட்டிப் பார்த்தான். அங்கே ஒரு சிங்கம் படுத்து இருந்தது. அது வலியால் தவித்து போய் துடிதுடித்துப் போய் தாங்க முடியாத வலியில் ஓலமிட்டுக் கொண்டிருந்தது. அங்கே செல்லலாமா வேண்டாமா என்று ஆன்ட்ரோகிளிஸ்ஸிக்கு சற்று தயக்கம். என்ன இருந்தாலும் சிங்கம் அல்லவா பயமாக இருக்குமல்லவா ? அதே நேரத்தில் வேதனையில் இருக்கின்ற ஒரு ஜீவனுக்கு நம்மால் ஆன உதவியைச் செய்ய வேண்டும் என்று கருதி, தைரியமாக அருகில் சென்றான். சென்று பார்த்தால் அந்த சிங்கத்தின் காலில் ஒரு முள் ஏறி இருந்ததைப் பார்த்தான். அந்த பெரிய முள் குத்தியதால் வலி தாங்காமல் சிங்கம் ஓலமிட்டுக் கொண்டிருந்தது. ஆன்ட்ரோகிளிஸ் அந்த முள்ளை எடுத்துவிட்டான். உடனே அந்த சிங்கத்திற்கு நிவாரணம் கிடைத்தது. அவனுடைய முகத்தை நன்றியோடு உற்றுப் பார்த்தது. பின்னர் களைப்பில் படுத்துக் கொண்டு உறங்கிவிட்டது. அதன் பிறகு ஆன்ட்ரோகிளிஸ் அங்கிருந்து சென்று விட்டான். அதன் பிறகு பல ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆன்ட்ரோகிளிஸ் அந்த சம்பவத்தை மறந்து விட்டான். ஆன்ட்ரோகிளிஸ் வசித்து வந்த ஊரில் அவனுடைய எதிரிகள் சிலர் அவன் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு அவன் மீது பொய் குற்றச்சாட்டுகளை கூறி அவன் மீது இல்லாத பொல்லாத பழி எல்லாம் போட்டு அவன் திருடிவிட்டான்,கொலை செய்து விட்டான் என்றெல்லாம் குற்றம் சாட்டி அவனைக் கொண்டு போய் மன்னருக்கு முன்னால் நிறுத்தினார்கள். அப்போதெல்லாம் மன்னர்தான் விசாரணை நடத்துவார். தீர்ப்பும் கூறுவார். ஆன்ட்ரோகிளிஸ் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் எல்லாம் உண்மை என்று நம்பி மன்னர் அவனுக்கு மரண தண்டனை விதித்துவிட்டார். அந்த காலத்தில் ரோம் நாட்டு சாம்ராஜ்யத்தில் மரண தண்டனையை மிகவும் கொடூரமான வழிகளில் நிறைவேற்றுவார்கள். அதில் ஒரு வகை ஒரு பெரிய விளையாட்டரங்கம் இருக்கும். சுற்றி பல படிக்கட்டுகள் இருக்கும். நாட்டு மக்கள் எல்லாம் அங்கே அமர்ந்திருப்பார்கள். உயரே ஒரு இடத்தில் மன்னரும் அமர்ந்திருப்பார். எல்லோரும் வேடிக்கைப் பார்ப்பார்கள். அப்போது அந்த விளையாட்டரங்கத்திற்குள் பசியோடு இருக்கக்கூடிய ஒரு சிங்கத்தை கட்டவிழ்த்துவிடுவார்கள். யார் மரண தண்டனை பெற்றிருக்கிறாரோ அவரை அந்த சிங்கத்திடம் தள்ளி விட்டுவிடுவார்கள். நிராயுதபாணியாக அந்த மனிதன் அந்த சிங்கத்தோடு போராட வேண்டும். வெறும் கையால் அந்த சிங்கத்தை கொன்றுவிட்டால் அதனை வென்றுவிட்டால் அவனுக்கு விடுதலை. ஆனால் வெறும் கையால் நிராயுதபாணியாக யாரால்சிங்கத்தை வெல்ல முடியும். ஆனால் அத்தகைய மரண தண்டனை பெற்றவர்களை எல்லாம் அந்த சிங்கத்திடம் தள்ளி விட்டால் அவர்கள் சிங்கத்திற்கு இரையாகிவிடுவார்கள், பலியாகிவிடுவார்கள். இது தான் வாடிக்கை. அப்படி மரண தண்டனை பெற்ற இந்த ஆன்ட்ரோகிளிஸை அழைத்து சென்று அந்த விளையாட்டரங்கத்திற்குள் தள்ளி விட்டார்கள். மறு முனையில் இருந்து பசியோடு இருக்கின்ற ஒரு சிங்கத்தை அவிழ்த்துவிட்டார்கள். அந்த சிங்கம் ஆன்ட்ரோகிளிஸைப் பார்த்து வேகமாக ஓடி வந்தது. ஆன்ட்ரோகிளிஸ் கண்ணை மூடிக் கொண்டான். சரி இவ்வளவு தான் நம் கதை முடிந்துவிட்டது என்று கருதி, இறைவனை வேண்டிக் கொண்டு இறைவா என் ஆயுள் இதோடு முடியப் போகிறது என்னை உன் திருவடியில் சேர்த்துக் கொள் என்று வேண்டிக் கொண்டான். சில வினாடிகள் கழிந்தன. எதுவுமே நடக்கவில்லை. கண்ணை திறந்து பார்த்தான். அந்த சிங்கம் அப்படியே அவன் அருகில் நின்று அவனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. ஆன்ட்ரோகிளிஸ்க்கு ஒன்றும் புரியவில்லை. பின்னர் சிங்கம் அவன் அருகில் வந்து, அவன் முன்னால் மண்டியிட்டு உட்கார்ந்தது. அப்போதும் ஆன்ட்ரோகிளிஸ்க்கு ஒன்றும் புரியவில்லை. அந்த சிங்கம் ஒரு காலை நீட்டி என்னைத் தெரியவில்லையா என்பது போல் அந்த காலை அவனிடம் காட்டியது. அப்போதுதான் ஆன்ட்ரோகிளிஸ்க்கு புரிந்தது. ஓஹோ முன்பு ஒரு நாள் முள் குத்தி அவதிப்பட்டு நான் உதவி செய்தேனே அந்த சிங்கம் தான் இது என்பதை புரிந்து கொண்டு, அதன் தலையை தடவி கொடுத்து நீ நன்றாக இருக்கிறாயா ? என்று கேட்டான். அந்த சிங்கம் அப்படியே அவன் கால் மீது தலையை வைத்து, செல்லப் பிராணியைப் போல் படுத்துக் கொண்டது. இந்த காட்சியைப் பார்த்ததும் ரோம் நாட்டு பொது மக்கள் எல்லாம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். ஆன்ட்ரோகிளிஸ்ஸை மன்னித்து விடுதலை செய்ய வேண்டும் என்று மன்னனிடம் கோரிக்கை வைத்தார்கள். மன்னரும் அந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஆன்ட்ரோகிளிஸ்ஸை விடுதலை செய்து விட்டார்.

ஆகவே, எந்த கைமாறும் கருதாமல் எந்த பிரதிபலனும் கருதாமல் ஒரு நாள் ஆன்ட்ரோகிளிஸ் செய்த தருமம் அவன் உயிரைக் காத்தது; அவன் தலை காத்தது. தர்மம் தலை காக்கும் தக்க சமயத்தில் உயிர் காக்கும் என்று

**துயர் உறும் மாந்தர்களைக்**
**கண்ட போதெல்லாம்,**
**அவர்தம் துயர் களைய**
**உள்ளம் துணிய வேண்டும்**
**இதுதான் மனித இயல்பு.**
**இதைத்தான் எனது**
**வாழ்க்கையின் தாரக**
**மந்திரமாக நாளும்**
**கடைப்பிடித்து வருகிறேன்.**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அடிக்கடி கூறுவாரே அதற்கு சிறந்த எடுத்துக் காட்டுதான் இது. தர்மம் என்றால் பொருள் வழங்குவது, பணம் வழங்குவது என்று மட்டும் பொருள் அல்ல. நம்மால் இயன்ற உதவியை ஒருவருக்கு தேவைப்படுகிற நேரத்தில் செய்தால் அது கூட தர்மம் தான். அதைப் போலே நான் பொது வாழ்விற்கு வந்த பிறகு எத்தனையோ ஆண்டு காலமாக எந்த பிரதிபலனும் கருதாமல் எந்த கைமாறும் கருதாமல் நான் பதவியில் இருந்தாலும் சரி பதவியில் இல்லாவிட்டாலும் சரி என்னால் ஆன உதவிகளை எப்போதுமே தமிழக மக்களுக்கு நான் செய்து கொண்டே இருக்கிறேன். எந்த கைமாறையும் கருதி நான் இதை செய்யவில்லை. அதனால் எனக்கு ஒரு நெருக்கடி வந்தபோது அரசியல் எதிரிகள் சதித் திட்டம் தீட்டி என்னை அரசியலை விட்டே விரட்ட வேண்டும் என்று சதித் திட்டம் தீட்டியபோது என்னை தேர்தலிலேயே நிற்க விடாமல் என்னை பழி வாங்கியபோது தமிழக மக்கள் எனக்கு தேர்தலில் வெற்றியைக் கொடுத்தார்கள். என்னை முதலமைச்சராக தேர்ந்தெடுத்தார்கள். மீண்டும் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்தார்கள். ஆகவே, தமிழக மக்கள் என் தலை காத்தார்கள். என் உயிர் காத்தார்கள். அதனால் தான் மீண்டும் இன்று முதலமைச்சராக இந்த பதவியில் இருந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன். அதனால்தான் எனக்கு உதவி செய்த தமிழக மக்களுக்கு பல நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள உதவிகளை இன்று செய்யக் கூடிய நிலையில் தமிழக மக்கள் என்னை வைத்திருக்கிறார்கள். ஆகவே, புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னாரே தர்மம் தலை காக்கும் தக்க சமயத்தில் உயிர் காக்கும் அது நூற்றுக்கு நூறு உண்மை என்று இந்த சம்பவமே இந்த நிகழ்ச்சியே மக்களுக்கு எடுத்துக்காட்டுகிறது.

இன்றைய தினம் சீர்மிகு இவ்விழாவில் 127 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பல்வேறு அரசுத்

திட்டங்களை உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் உங்கள் மதுரை மாவட்டத்திற்காக கொண்டு வந்திருக்கிறேன்.

முதலாவதாக, 36 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு துறைகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 26 கட்டடங்கள், பாலங்கள், சாலைகள், குடிநீர் திட்டங்கள் போன்றவற்றை திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

குறிப்பாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் நிறைவு செய்யப்பட்டுள்ள 8 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆவனியாபுரம் பேரூராட்சி குடிநீர் திட்டம் – 2 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்புள்ள திருப்பரங்குன்றம் பேரூராட்சி குடிநீர் திட்டம் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு குடிநீர் திட்டங்களை இன்று நான் திறந்து வைத்துள்ளேன்.

மேலும், 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மேல்மட்ட பாலம் உள்ளிட்ட, 7 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் அமைந்துள்ள பல்வேறு நெடுஞ்சாலைத்துறை பணிகளையும்– 12 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்வேறு கட்டமைப்பு வசதிகளையும் மற்றும் பொதுப்பணித்துறை, TAHDCO உள்ளாட்சித் துறை, இந்து சமய அறநிலையத் துறை, கூட்டுறவுத் துறை ஆகிய துறைகளினால் கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களையும் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மதுரை மாவட்ட மக்களின் அனைத்துத் தேவைகளும் உடனுக்குடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் நான் இன்றைய தினம் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டியுள்ளேன்.

மொத்தம் 88 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் அமைய உள்ள பல்வேறு கட்டமைப்பு வசதிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு சில முக்கிய பணிகளைப் பற்றி மட்டும் நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

குறிப்பாக இந்த மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினை முழுமையாக தீர்க்கப்பட வேண்டும் என்பதில் நான் தீவிர கவனம் செலுத்தி வருகிறேன். அதற்காகத் தான் இன்று 17 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் 164 விசைப் பம்புகள், 550 சிறு விசைப் பம்புகள்,268 பள்ளிகளுக்கு குடிநீர் வசதி மற்றும் 9 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குடிநீர் வசதி ஆகியவற்றிற்கு நான் அடிக்கற்கள் நாட்டியுள்ளேன். மேலும் , 7 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் அமைய உள்ள திருமங்கலம் நகராட்சி குடிநீர் திட்டம்– மற்றும் 4 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் அமைய உள்ள திருநகர் பேரூராட்சி குடிநீர் திட்டம் ஆகியவற்றிற்கு அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இவை மட்டுமன்றி 21 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக கட்டப்பட உள்ள பல்வேறு கட்டடங்களுக்கும்– 9 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் அமைய உள்ள பல்வேறு நெடுஞ்சாலைத்துறை பணிகளுக்கும்– உள்ளாட்சித் துறை, பொதுப்பணித்துறை TAHDCO , சுற்றுலாத்துறை, இந்து சமய அறநிலையத் துறை, மின் துறை ஆகிய பல்வேறு துறைகளின் சார்பாக 25 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட உள்ள பல்வேறு கட்டமைப்பு வசதிகளுக்கும் அடிக்கற்கள் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நான் திறந்து வைத்துள்ள மற்றும் அடிக்கல் நாட்டியுள்ள பல்வேறு திட்டங்களும், கட்டமைப்பு வசதிகளும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்ற எனது நம்பிக்கையை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே விழாவில், ஏறத்தாழ 7,155 பயனாளிகளுக்கு மொத்தம் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்குவதில் நான் மிக்க மனநிறைவு அடைகிறேன்.

இந்த நலத்திட்ட உதவிகளை உங்கள் அனைவருக்கும் நானே வழங்க வேண்டும் என்று விரும்பினாலும், அதற்கு நேரம் போதாது என்ற காரணத்தினால் 24 பயனாளிகளுக்கு மட்டும் அவற்றை நான் இங்கே வழங்க உள்ளேன். மற்ற அனைத்து பயனாளிகளுக்கும் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் இதே விழாவில் இப்போதே வழங்குவார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பழமை வாய்ந்த நமது பண்பாட்டின் சிறப்புகளையும், புதுமையில் மலர்ந்திடும் பொலிவையும் ஒன்று சேர்த்து, புதியதோர் பொற்காலத்தை தமிழகத்தில் உருவாக்க உங்கள் அன்புச் சகோதரி எடுத்து வரும் அனைத்து முயற்சிகளுக்கும் மதுரை மாவட்டத்து மக்களாகிய நீங்கள் அனைவரும் உறுதுணையாக இருப்பீர்கள் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

இந்த வண்ணமிகு விழாவை மிகவும் நேர்த்தியாக நடத்திட திட்டமிட்டு பணியாற்றிய மாண்புமிகு அமைச்சர் திரு .துரைராஜ் அவர்கள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்ற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் காவல்துறையினர் எனது பாராட்டுக்குரியவர்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது இலட்சியம் உயர்வானது! நமது பார்வை தெளிவானது! நமது வெற்றி முடிவானது! –– என்பதை உங்கள் அனைவருக்கும் எடுத்துக் கூறி, சீரோடும் சிறப்போடும் நடந்தேறிய இந்த விழாவிற்கு வருகை தந்து உற்சாகத்தோடு கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்''. ★



# உழைத்து உரமேறிய இராமநாதபுரம் மாவட்ட மக்கள் வாழ்வில் வளங்கள் நிறைய வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா

எழுச்சிமிகு இந்த விழா பல்வேறு விழாக்களின் கூட்டுத் தொகையாக அமைந்துள்ளது. சுற்றுச்சூழலை கட்டிக் காக்க வேண்டும் என்ற வேட்கையுடன் Gulf of Mannar Project – மன்னார் வளைகுடாத் திட்டம் என்று சுருக்கமாக அழைக்கப்படும் மன்னார் வளைகுடாப் பகுதி கடல்வாழ் உயிரினப் பாதுகாப்பு மற்றும் கடல்சார் மக்களின் மேம்பாட்டுத் திட்டம் இன்று இங்கு என்னால் துவக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் கடலோர மற்றும் உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்த Fisheries Development Mission மீனள மேம்பாட்டு இயக்கத்தை நான் இங்கு தொடங்கி வைத்துள்ளேன்.

கடந்த ஆண்டு அரசின் பல்வேறு துறைகளால் கட்டப்பட்ட கட்டடங்களின் திறப்பு விழா, இந்த ஆண்டு அரசுப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, மற்றும் பல்வேறு துறைகளின் சார்பில் வழங்கப்படும் அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா என்று விழாக்களின் தொகுப்பாக இது அமைந்துள்ளது.

அதுமட்டுமன்றி, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், இந்த மாவட்டத்தில் தொடங்கப்படவுள்ளBird Centre in Gulf of Mannar for Education and Research என்ற "பறவை மையத்தின்" தொடக்கவிழாவும், அந்த நிறுவனத்தின் ஆதரவில் Pulses Villages என்று பெயர் சூட்டப்பட்டுள்ள பயறு விளைவிக்கும் கிராமங்கள் திட்டத்தின் தொடக்க விழாவும் இந்த அரசு விழாக்களுடன் பாங்குற இணைக்கப்பட்டுள்ளது. அரசுத் திட்டங்களுடன் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்டங்களையும் இணைத்து தொடங்கி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அதோடு அந்த நிறுவனம் குறிப்பாக டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மன்னார் வளைகுடாப் பகுதியின் தன்மையை கருத்தில் கொண்டு International Year for Eco Tourism - பன்னாட்டு சுற்றுச்சூழல் சுற்றுலா ஆண்டான இந்த ஆண்டில் மன்னார் வளைகுடா பகுதிக்கு சுற்றுச் சூழலைப் பாதிக்காத வகையில் சுற்றுலா சென்று வர Glass Bottomed Boat - அதாவது அடிப்பகுதி கண்ணாடியால் ஆன படகு போன்ற வசதிகள் இந்த விழாவில் அறிமுகம் செய்வது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு திட்டங்களை துவக்கி வைத்து, பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, இன்று நடைபெற்று கொண்டிருக்கும் இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு பெருந்திரளாகக் கூடியிருக்கும் உங்கள் அனைவரையும் காண்பதில் நான் மிக்க மகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன். குறிப்பாக, நான் தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு முதன் முதலாக வருகை தந்து,





எனது அன்பிற்குரிய உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிக்க மன நிறைவை எய்துகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், வீரத்தின் விளைநிலம், வெற்றியின் உறைவிடம், விவேகத்தின் இருப்பிடம், சமுத்திரத்தின் கரையில் தவழும் இந்த மாவட்டம், சரித்திரத்தின் வரிகளில் இன்றும் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. வரலாற்றுச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, இதிகாசச் சிறப்பு ஆகிய அனைத்தும் நிறைந்த இந்த மாவட்ட மக்களின் பேராண்மை, வேளாண்மை, தோழமை ஆகியவை இன்றும் போற்றிப் புகழப்படும் பெருமை உடையவை. சங்கத் தமிழையும், அழியாத ஆன்மீகத்தையும், கண்ணெனப் போற்றிக் காத்தவர்கள் இந்த புண்ணிய பூமியை ஆண்ட மன்னர்களும், மக்களும் தான்.

இந்த மாவட்டத்தில் அமைந்துள்ள கோபுரங்களும், மசூதிகளும், தேவாலயங்களும், சேதுபதி மன்னர்களின் சரித்திர சிறப்புகளுக்கு சான்றாக, சின்னங்களாக இருந்து வருகின்றன.

உலகிலேயே மிகப் பெரிய கோயில் பிரகாரத்தைக் கொண்டது இராமேஸ்வர திருத்தலம். இந்தத் திருக்கோவிலின் சிறப்புகளை உலகமே நன்கு அறியும். இந்தத் திருத்தலம் ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்குகிறது. மேலும், இந்தத் திருத்தலத்தில் 125 வருடங்களாக பாழடைந்து கிடந்த இரண்டாம் பிரகாரத்தின் தெற்குப் பகுதி என்னுடைய ஆட்சி காலத்தில் தான் செப்பனிடப்பட்டது.

இந்த மாவட்டத்தில் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஏர்வாடி தர்கா, மத நல்லிணக்கத்தின் சின்னமாகத் திகழ்கிறது. ஆண்டு தோறும் இங்கு கொண்டாடப்படும் சந்தனக் கூடு விழாவில் அனைத்து சமயத்தவரும் கலந்து கொண்டு சகோதர மனப்பான்மையுடன் கூடி மகிழ்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இத்தனை சிறப்புகள் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம் எனக்கு புதிது அல்ல. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தோற்றுவித்த இயக்கத்தில் என்னை இணைத்துக் கொண்டு மக்கள்பணி புரியத் தொடங்கிய நாள் முதல் நான் பல முறை இராமநாதபுரத்துக்கு பல்வேறு தருணங்களில் வந்து சென்றுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள். என்னைப் பொறுத்தவரை ஏறத்தாழ 18 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறை இதே இராமநாதபுரம் மாவட்டத்துக்கு நான் வந்து சென்றது என் மனதில் இன்றும் பசுமையாக உள்ளது. 1984–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8–ஆம் தேதி அன்று நான் அனுதினமும் வணங்கும் எனது தாயாரின் நினைவாக தேவிப்பட்டினம் வாழ் குழந்தைகளுக்காக எனது சொந்த செலவில் ''அன்னை சத்தியா சத்துணவுக்கூடம்'' என்ற சத்துணவுக் கூடத்தினை தேவிப்பட்டினத்தில் நான் துவக்கி வைத்தது இன்றும் என் மனதை விட்டு நீங்காமல் உள்ளது. இந்த மாவட்டத்து மழலைச் செல்வங்களுடன் ஒன்றாய் கூடி உணவருந்தி மகிழும் நல்வாய்ப்பினை இந்த மாவட்டம் அன்றைய தினம் எனக்கு வழங்கியதை நான் இன்று அன்போடு நினைவு கூர்கிறேன்.

அதன் முன்னரும், பின்னரும், தேர்தல் பணிக்காகவும், இயக்கப் பணிகளுக்காகவும், இந்த மாவட்டத்திற்கு பல முறை வந்து, உங்கள் அனைவரின் அன்பு மழையில் நான் நனைந்திருக்கிறேன். அப்படி நான் ஒவ்வொரு முறையும் இந்தப் பகுதிக்கு வருகை தந்த போதெல்லாம் தங்கள் வீட்டுப் பிள்ளையை வரவேற்பது போல நீங்கள் உள்ளார்ந்த அன்போடு என்னை வரவேற்று மகிழ்ந்திருக்கிறீர்கள்.

அன்று போலவே அதே பாச உணர்வை இன்றும் நீங்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை உங்களுடைய உணர்ச்சி பொங்கும் முகங்கள் எனக்குத் தெள்ளத் தெளிவாக காட்டிக் கொண்டிருக்கின்றன. உங்களுடைய ஈடு இணையற்ற பாசத்திற்கும் அளவிட முடியாத நேசத்திற்கும் நான் எனது உளப்பூர்வமான நன்றியினை உங்கள் அனைவருக்கும் இந்த விழாவின் வாயிலாக தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.



இன்று இந்த மாவட்டத்து மக்கள் அனைவரும் பயன் பெறும் வண்ணம் 267 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அடிக்கல் நாட்டி வைக்கப்படும் திட்டங்கள் – 23 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திறந்து வைக்கப்படும் திட்டங்கள் – 2 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத் திட்ட உதவிகள் – என்று மொத்தம் 293 கோடியே 85 இலட்சம் ரூபாய்க்கான திட்டங்களை எனது அன்புக் காணிக்கையாக உங்களுக்கு நான் வழங்க வந்துள்ளேன்.

தமிழக மக்கள் நல்லவர்கள் வல்லவர்கள்.

ஆம்! நல்லவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை வழங்குவதில் வல்லவர்கள். எங்கள் அரசின் செயல்பாடுகளை முழுமையாக ஆதரிக்கும் வண்ணமும் மக்கள் விரோத சக்திகளை முற்றிலும் புறக்கணிக்கும் வண்ணமும் அண்மையில் நடைபெற்ற நான்கு இடைத் தேர்தல்களிலும் தங்கள் அரசியல் முடிவுகளை தெளிவாகவே தமிழக மக்கள் தெரிவித்திருந்தார்கள்.

எனது அன்பிற்குரிய தமிழகப் பெருமக்களின் தன்னிகரில்லா தீர்ப்புக்குத் தலைவணங்கி போற்றுதலுக்கும் புகழுரைகளுக்கும் மயங்காமல் தூற்றுபவர்களையும் துயர் விளைவிப்பவர்களையும் பொருட்படுத்தாமல் எங்கள் மீது நம்பிக்கை வைத்து இருக்கும் உங்களுக்காக பணியாற்றுவதையே முழுமுதற்கடமை என்று கருதி நானும் எனது சக அமைச்சர்களும் செயல்பட்டு வருகிறோம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இரண்டு பிரச்சினைகள் எப்போதுமே என் மனதை உறுத்திக் கொண்டு இருக்கின்றன.

ஒன்று, இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் குடிநீர் கிடைக்காமல் தவிக்கும் மக்களுக்கு நல்ல குடிநீர் வழங்க வேண்டும் என்கின்ற ஓர் ஆதங்கம்.

ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவ பெருமக்கள் யாருடைய அச்சுறுத்தலுக்கும் தொல்லைக்கும் ஆளாகாமல் நிம்மதியாக மீன் பிடித்து அமைதியாக தொழில் புரிவதற்கு உகந்த சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இலங்கை கடற்படையினரின் தாக்குதல்களையும் அத்துமீறல்களையும் கட்டுப்படுத்த வேண்டும் என்பது மற்றொன்று.

***இராமநாதபுரம் மாவட்டத்தின் குடிநீர் தட்டுப்பாட்டை அடியோடு போக்கும் வகையில் 850 கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கான காவிரி நதியிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டத்திற்கு Ramanathapuram Bulk Water Supply Scheme–ற்கு உங்கள் அன்புச் சகோதரியின் அரசு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கைகள் எடுத்து வருகிறது .***

கடந்த ஓராண்டு காலமாக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள எண்ணற்ற கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுத்துள்ளோம். இராமநாதபுரம் மாவட்டத்தின் குடிநீர் தட்டுப்பாட்டை அடியோடு போக்கும் வகையில் 850 கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கான காவிரி நதியிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டத்திற்கு Ramanathapuram Bulk Water Supply Scheme–ற்கு உங்கள் அன்புச் சகோதரியின் அரசு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது அன்பிற்குரிய தாய்மார்களும், சகோதரிகளும், குடிநீரைத் தேடி வெகு தூரம் நடந்து சென்று அல்லல்படுகின்ற நிலைமை நிரந்தரமாக மாறும் என்று நான் நம்புகிறேன்.

கடலோர மாவட்டமாக விளங்கும் இந்த மாவட்டத்தின் தன்மையைக் கருதி நரிப்பையூரில், 10 கோடி ரூபாய் செலவில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தை நான் இங்கு கொண்டு வந்தேன். இந்த மாவட்ட மக்களுக்கு எந்த வகையிலாவது நல்ல குடிநீரை வழங்க வேண்டும் என்ற எனது உறுதியின் வெளிப்பாடு தான் இந்தத் திட்டம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பல்லாயிரக் கணக்கான கண்மாய்கள் காய்ந்து கிடக்கின்றன. ஊரணிகள் உலர்ந்து விட்டன. வரத்துக் கால்கள் வறண்டு விட்டன.இந்தக் கண்மாய்களும், ஊரணிகளும் தான், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரையில், மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கின. காலப் போக்கில், இந்த கண்மாய்களும், ஊரணிகளும், கவனிப்பார் இன்றி பாழ்பட்டு போய்விட்டன. மற்ற மாவட்டங்களோடு ஒப்பிடும் போது, இந்த மாவட்டத்தில் பெய்யும் மழையின் அளவு மாநிலத்தின் சராசரி மழை அளவைப் போன்று உள்ளது என்றாலும் மழை நீரைச் சேமிக்க வழியில்லாமல் இந்த மாவட்ட மக்கள் திண்டாடிக் கொண்டிருப்பதை நான் நன்கு அறிவேன்.

இது தவிர இந்த மாவட்டத்தின் ஆற்று நீர் ஆதாரம் வைகை நதி ஒன்று தான். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வைகை ஆறு வறண்டு விடுவதால் பாசனத்திற்கு தண்ணீர் வருவதில் தட்டுப்பாடு ஏற்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு, வைகை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது, இராமநாதபுரம் மாவட்டமே வெள்ளக் காடாகி தேக்கி வைக்க வசதியில்லாத காரணத்தால் நீரெல்லாம் கடலில் கலந்து வீணாகிவிட்டது என்பதை நான் அறிந்தேன்.

எனவே, இந்தக் கண்மாய்களை தூர் வாரவும், அவற்றின் வரத்துக் கால்களை சீரமைக்கவும், முன்னுரிமை கொடுத்து 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த தூர்வாரும் திட்டம் தீட்டப்பட்டு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. திட்டம் நிறைவேற்றப்படும் போது இந்த மாவட்டம் தண்ணீர் தட்டுப்பாடற்ற மாவட்டமாக மாறுவது உறுதி.

இராமநாதபுரம் மாவட்டத்தில், உலர்ந்து விட்ட ஊரணிகள், உயிர்ப்பு பெற தமிழக அரசு 9 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. மேலும் தமிழக அரசு இந்த ஊரணிகளை சீரமைத்து குடிநீரைத் தேக்கி வைக்க 40 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் திட்டம் ஒன்றை செயல்படுத்த உள்ளது. இத்தகைய நல்ல பல திட்டங்கள் நாளும் தொடரும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியையும், தமிழக மக்களின் நலனையும் மட்டுமே, தாரக மந்திரமாகக் கருதி நாங்கள் செயல்படுகின்ற காரணத்தினால் தான் இயற்கை அன்னை கூட அவ்வப்போது நம் மீது கருணை காட்டி வருகிறாள். நமது பூமியும் வானம் பார்த்த பூமியாக வறண்ட பூமியாக இல்லாமல் வளமான பூமியாக மாற வேண்டும் என்ற நமது வேண்டுகோளுக்கு இயற்கை அன்னை தொடர்ந்து செவி சாய்ப்பாள் என்பதில் எனக்கு பூரண நம்பிக்கை உண்டு.

மண் வளம் நிறைந்த இந்த மாவட்டத்தில் கண்மாய்கள் நிறைந்தால் பஞ்சப்பகுதி என்ற சொல்லே மாறிவிடும். ஊரணிகள் நிரம்பி விட்டால் தண்ணீர் தட்டுப்பாடு அற்றுப் போய்விடும்.

நீர்பாசன திட்டங்கள் பலவற்றை இந்த மாவட்டத்தில் செயல்படுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கமுதி மலட்டாறின் குறுக்கே பாலம் கட்ட 17.2.1994 அன்று நான் அடிக்கல் நாட்டினேன். இன்று 8 ஆண்டுகளுக்குப் பின்னர் நானே அந்தப் பாலத்தை திறந்து வைப்பதில் மன நிறைவு அடைகிறேன்.

பரமக்குடியில் இயங்கி வந்த ஆவின் பால் நிலையம் கடந்த ஆட்சிக் காலத்தில இழுத்து மூடப்பட்டது. ஆனால் இன்று உங்கள் அன்பு சகோதரியின் ஆட்சியில் 48 இலட்சம் ரூபாய் செலவில் அந்த திட்டம் புதிய உயிர்ப்பு மலர்ச்சியும் பெற்று செயல்பட தயாராக உள்ளது.

ஒரு காலத்தில் கலவர பூமி என்று வர்ணிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று அமைதி நிலவுகிறது. கலவரத்தை தூண்டி விட்டவர்கள் எல்லாம் இந்த ஆட்சித் திறத்தால் காணாமலேயே போய்விட்டனர். அனைத்து தரப்பு மக்களும் அமைதியையும் நல்லிணக்கத்தையும் விரும்புகின்றனர். அதனால் தான் கடந்த ஆட்சிக் காலத்தில் சாதி கலவரங்களுக்கு வித்திட்டவர்களை மக்கள் ஒதுக்கி ஓரங்கட்டி விட்டார்கள். அது தான் உண்மை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இஸ்லாமிய புண்ணியத் தலமான ஏர்வாடியில் ஏற்பட்ட தீ விபத்தில் 28 மன நோயாளிகள் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து, இந்த அரசு, உறுதியான, சரியான நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக மனநோயாளிகள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. அரசின் தொடர் நடவடிக்கைகளின் காரணமாக, மாவட்டம் முழுவதும் நடத்தப்பட்ட உடல் ஊனமுற்றோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு முகாம்கள் மூலம் கண்டறியப்பட்ட தகுதி படைத்த 7,912 நபர்களுக்கு, அரசின் உதவித் தொகைகளும், உபகரணங்களும் வழங்கப்பட்டு உள்ளன. மேலும், ஐதராபாத்தில் உள்ள தேசிய மன வளர்ச்சி மையம், இந்தத் திட்டத்தை, ஒரு மாதிரித் திட்டமாக ஏற்றுக் கொண்டு இந்தத் திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நபர்களுக்கு, மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் மற்றும் இதர உபகரணங்கள் வழங்குவதற்காக, 30 இலட்சம் ரூபாய் ஒதுக்க முன் வந்துள்ளது. மனநோயாளிகளுக்கான மறுவாழ்வு, ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு, ஆகிய இரண்டு பணிகளிலும் இந்த மாவட்டம் புதியதோர் சாதனை படைத்து, சரித்திரமாக்கி வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இதே போல, ஒவ்வொரு துறையிலும், இந்த அரசு கண்ணும் கருத்துமாக செயல்பட்டு வருகிறது.

மகிழ்ச்சியான இந்த நன்னாளில், உங்கள் அன்புச் சகோதரி இந்த மாவட்ட மக்களின் நலன் கருதி மன்னார் வளைகுடா பகுதியில் கடல் வாழ் உயிரினங்களை பாதுகாக்கவும், கடல் சார் மக்களின் மேம்பாட்டிற்காகவும், 140 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்டம் ஒன்றை தொடங்கி வைத்துள்ளேன்.

மன்னார் வளைகுடா பகுதி, உலகத்திலேயே மாசுபடாத, சுத்தமான, பவித்திரமான கடல் பரப்பை கொண்ட பகுதியாகும். இந்த கடல் பரப்பில் உலகில் வேறு எங்கும் இல்லாத அரிய கடல் வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன. ஆவுலியா என்று இப்பகுதி மக்களால் அழைக்கப்படும் கடற்கன்னி மீன்கள் மற்றும் பச்சை ஆமைகள், டால்ஃபின்கள், சுறாக்கள் உள்ளிட்ட 137 வகை அபூர்வ கடல் வாழ் உயிரினங்கள் இந்தக் கடலில் வாழ்கின்றன. இது தவிர, ஆஸ்திரேலியாவிற்கு அடுத்தபடியாக, பவழப் பாறைகள் இங்கு அடர்ந்து செறிந்து வளர்கின்றன. மிகவும் நுண்ணிய அணுக்களால் இங்கு உருவாகும் எண்ணற்ற வகை பவழப் பாறைகள் உலகளவில் பெரும் சிறப்பைப் பெற்றவை. இது தவிர, மன்னார் வளைகுடா கடலில் எண்ணற்ற வகை கடல் தாவரங்கள், பல்வேறு வகைப் புல் பூண்டுகள் அடங்கிய Mangrove காடுகள் செழித்து வளர்ந்து கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. கடல்வாழ் உயிரினங்களைப் பற்றி,ஆய்வு நடத்தும் ஆராய்ச்சியாளர்களின் சொர்க்கம் என்று வர்ணிக்கப்படும், மன்னார் வளைகுடா கடலில், 21 சின்னஞ்சிறிய அழகிய தீவுகள் உள்ளன. இந்த அழகிய கடலையும், இந்த தீவுகளையும் கட்டிக் காத்து பராமரிக்க, கடல் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இது தான் முதலாவது கடல் பூங்கா. இது ஆசியாவிலேயே முதன்மையானது. இந்த மன்னார் வளைகுடா, கடல் வாழ் உயிரினங்களை பாதுகாக்கவும், கடல் பகுதி மக்களின் வாழ்வு ஏற்றம் பெறவும், தலைசிறந்த விஞ்ஞானிகளால் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அறக்கட்டளை உதவியுடன் திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட உள்ளதை எண்ணி நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆதரவில், Bird Centre in Gulf of Mannar for Education and Research என்ற மன்னார் வளைகுடா பறவைகள் மையத்தை இன்று நான் தொடங்கி வைத்துள்ளேன். Gulf of Mannar Project – உடன் தொடர்புடைய இந்த மையம் மன்னார் வளைகுடாவில் காணப்படும் அரிய பறவைகளை பார்த்து ஆராய்ச்சி செய்யவும் அவற்றைப் பாதுகாக்க புதிய வழிமுறைகளைக் கண்டுபிடிக்கவும் உதவும் என்று நான் நம்புகிறேன்.

Eco Tourism – அதாவது சுற்றுச் சூழலை பாதிக்காத சுற்றுலா – என்ற கோட்பாடு உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து வருகிறது. இதைச் செயல்படுத்தும் முகத்தான் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் International Year for Eco Tourism- பன்னாட்டு சுற்றுச் சூழல் சுற்றுலா ஆண்டு– என இவ்வாண்டு அறிவிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து, அதற்கேற்ப இந்தப் பகுதியை சுற்றுலா மையமாக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டார்கள். சுற்றுச் சூழலை பாதிக்காத சுற்றுலாவை வளர்க்க இந்த நல்ல நேரத்தில் நாம் உறுதி கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறைந்த அளவு மழை பெய்யும் பகுதிகளுக்கு என நேர்த்தியான பல திட்டங்களை உருவாக்குவதில் டாக்டர்



எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் வல்லமை பெற்று அந்த வகையில், Pulses Villages- அதாவது, பயறு கிராமங்கள் என்று அழைக்கப்படும் பயறு விளைவிக்கும் கிராமங்களை உருவாக்க அந்த ஆராய்ச்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. மழை நீரை சேகரித்து மானாவாரி பயிராக பயறு வகைகளை விளைவிக்க அந்த நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்தப் பகுதி விவசாயிகளுக்கு ஊக்கமளித்து வருகிறார்கள். அவர்களுடைய திட்டம் வெற்றி அடைய என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை நமக்கு அளித்துள்ள பல செல்வங்களில் ஒன்று நமது நாட்டில் காணப்படும் பலவகைப்பட்ட மீன் இனங்களாகும்.

தமிழகத்தில் மீன் வளமும் மீன் பிடி தொழிலின் முக்கியத்துவமும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சிறந்து விளங்கியது என்று சரித்திரம் கூறுகிறது. உலகப் பிரச்சித்தி பெற்ற தமிழகத்தின் முத்து வணிகமே ஆங்கிலேயர் டச்சு மற்றும் போர்ச்சுகீசியர் உட்பட பல வெளிநாட்டு வர்த்தகர்களை இந்தியாவின் பக்கம் ஈர்த்தது.

மற்றும் ஏற்றுமதி தேவைகளைப் பூர்த்தி செய்ய மீன் உற்பத்தியை பெருக்குதல் போன்றவற்றை அடிப்படை கோட்பாடுகளாகக் கொண்ட Fisheries Development Mission - மீனள மேம்பாட்டு இயக்கம் இன்று துவக்கப்பட்டுள்ளது.

இனி தமிழகத்தில் மீனள மேம்பாடு, மக்கள் இயக்கமாக மாறும். இந்த மீனள மேம்பாட்டு இயக்கத்தின் முக்கிய அம்சமாக, நமது கடற்கரைப் பகுதிகளில் சமீப காலமாக குறைந்து வரும் மீன்வளத்தைப் பெருக்கிட பொரிப்பகங்களில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளை கடலில் விட்டு Sea Ranching என்று சொல்லப்படும் மீன்களின் எண்ணிக்கையை கடலில் அதிகரிக்கச் செய்யும் திட்டம் நிறைவேற்றப்படும். மீன்வளத்தில் சிறந்து விளங்கும் நாடுகளாக ஜப்பான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் இது போன்ற திட்டத்தைச் செயல்படுத்தி, மீனள ஆதாரங்களை பெருக்கியுள்ளன. இந்த Sea Ranching திட்டம் மீனவர்களுக்கு வருவாயை அதிகரிக்க உதவிடும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இத்தகைய பெருமையுடைய தமிழக மீன் வளத்தை மென்மேலும் மேம்படுத்தவும் பல்வகை மீன் இனங்களைப் பெருக்கவும் அதன் மூலம் மீன் வளத்தை அதிகரிக்கவும், தமிழக அரசின் 15 அம்சத் திட்டத்தில் உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பு என்பதை ஒரு அம்சமாக நான் ஏற்கெனவே அறிவித்துள்ளேன்.

மீனவர்கள், மீன் வளர்ப்போர் ஆகியோரின் மீன் பிடித் தொழிலின் உற்பத்தித் திறனைப் பெருக்குதல், கடற்கரை ஓரமாக வாழும் கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் தொழில்களை அமைத்தல், கூடுதல் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், பாரம்பரிய மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போரின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துதல், அவர்களது நலன்களை பாதுகாத்தல், மற்றும் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துதல், உள்நாட்டுத் தேவை

இந்த ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏழு இடங்களில், 7 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பயன்பாட்டிற்காகவும், பொது சுகாதாரத்தை மேம்படுத்தவும், 1 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் 30 துணை சுகாதார மையங்கள் கட்டுவதற்கும் – 40 இலட்சம் ரூபாய் செலவில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுவதற்கும் இங்கே இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் ஆதிதிராவிட மாணவ மாணவியர் தங்கி முறையான கல்வி பெறுவதற்கு வசதியாக 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 5 ஆதிதிராவிட மாணவர் நல



விடுதிகள் கட்டவும் – இந்த மாவட்டத்தில் பெருவாரியாக உள்ள பிற்படுத்தபட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர் தங்குவதற்கு வசதியாகவும் அவர்களது கல்வி மேம்பாட்டிற்காகவும், 95 இலட்சம் ரூபாய் செலவில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள் கட்டுவதற்கும் – அனைவருக்கும் கல்வி என்பதனை உறுதி செய்வதற்காக, 17 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் "அனைவருக்கும் கல்வி இயக்கம்'' என்னும் திட்டத்தை இந்த மாவட்டத்தில் தொடங்குவதற்கும் –

போக்குவரத்து வசதியினை பெருக்குவதற்காக 2 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு மேம்பாலங்கள் கட்டுவதற்கும் –

4 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கும் –

வறட்சி மிகுந்த பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் தரிசு நிலங்களை மேம்பாடு செய்வதற்கும் –

இராமநாதபுரம் மாவட்ட இளைஞர்களின் விளையாட்டுத் திறமையை மேம்படுத்தும் வகையில் 60 இலட்சம் ரூபாய் செலவில் நீச்சல் குளம் ஒன்றை அமைக்கவும் –

உலகப் புகழ் பெற்ற புண்ணியத் தலமாகவும் சுற்றுலா தலமாகவும் விளங்கும் இராமேஸ்வரத்திற்கு வருகை தரக்கூடிய சுற்றுலா பயணிகள் மற்றும் யாத்திரிகர்கள் வசதிக்காக, 35 இலட்சம் ரூபாய் செலவில் தங்கும் விடுதி அமைக்கவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சுற்றுலா தலமாக விளங்கக்கூடிய இராமேஸ்வரத்தை, மேலும் அழகுபடுத்தவும், சுற்றுலா பயணிகளின் பொழுது போக்கு வசதிக்காகவும், 22 இலட்சம் ரூபாய் செலவில் கடற்கரை பூங்கா ஒன்றை அமைக்கவும், பணிகள் நடைபெற்று வருகின்றன.

மன்னார் வளைகுடா பகுதியில், கடல் வாழ் உயிரினங்களையும், சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாப்பதற்கு, முன்னோடித் திட்டமாக, இராமேஸ்வரம் தீவில் சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்காக பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகத்தைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் சுற்றுப்புறச் சூழல் இனி மேம்படும் என்றே நான் கருதுகிறேன்.

சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், பாம்பன் – இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி 5 இலட்சம் ரூபாய் செலவில் மரக் கன்றுகள் நடவும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக, இராமேஸ்வரம் கோயிலில் இருந்து அக்னி தீர்த்தம் வழியாக கடற்கரையை ஒட்டி, 14 இலட்சம் ரூபாய் செலவில் சாலைகள் அமைக்கப்படுவதற்கும் –

84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், காவலர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்காகவும், காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்காகவும், காவலர்களுக்காக புதிய குடியிருப்புகள் கட்டுவதற்காகவும் என்னால் இன்று அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்கள் அனைத்தும் குறிப்பிட்ட காலத்தில் மக்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

பல்வேறு துறைகள் சார்பாக 23 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள துணை சுகாதார நிலையங்கள், ஆதிதிராவிட மாணவ மாணவியர் விடுதிகள், மகளிர் கழிப்பறை வளாகங்கள், பொது விநியோக கட்டடங்கள், தடுப்புச் சுவர்கள், கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள், மின் வாரிய கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்கள், இன்று என்னால் பொதுமக்கள் உபயோகத்திற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.



இன்று 2 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, அரசு நலத்திட்ட உதவிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளன. இந்த விழாப் பந்தலில் ஏறத்தாழ, 8,883 பயனாளிகளுக்கு, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட



உள்ளன என்பதை அறியும் போது நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். எல்லோருக்கும் என் கையால் உதவிகளை வழங்க வேண்டும் என்ற பேரவா என் உள்ளத்தில் இருந்தாலும் அதற்கு காலம் இடம் தராது என்றே கருதுகிறேன். எனவே, நான் இந்த விழா மேடையில், 18 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன். நான் அந்த உதவிகளை வழங்கி முடித்ததும், அமைச்சர் பெருமக்கள் மற்றும் அலுவலர்கள் பந்தலில் அமர்ந்திருக்கும் பிற பயனாளிகளுக்கு, நலத்திட்ட உதவிகளை வழங்க இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு நலத்திட்ட உதவிகளை பெறுகின்ற பயனாளிகள் அனைவரும் அவற்றை வாழ்க்கையின் முன்னேற்றத் திற்கான அடிப்படையாகக் கருதி மென்மேலும் உழைத்து, வாழ்க்கையில் முன்னேறி, எல்லா நலன்களையும் பெற வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவை, சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக, அமைத்திட பணியாற்றிய, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்த தென்பாண்டிச் சீமைக்கு வருகை தந்துள்ள எனக்கு ஓர் எழுச்சிமிக்க வரவேற்பினையும், மனமார்ந்த பாராட்டுதல்களையும் அளித்து மக்கள் பணியை நாங்கள் அயராது மேற்கொள்வதற்கான உற்சாகத்தை வழங்கும் உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

உழைத்து உரமேறிய இந்த இராமநாதபுரம் மாவட்ட மக்களின் வாழ்வில் எல்லா நலன்களும், வளங்களும் நிறைய வேண்டும் என்ற மனம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படும் புதிய திட்டப் பணிகள் விவரம்

| | | |
|---|---|---|
| அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் மதிப்பீடு | = | ரூ.23.88 கோடி |

நலத்திட்ட உதவிகள் பெற்ற பயனாளிகள் விவரம் :

| | | |
|---|---|---|
| பயனாளிகள் | = | 8,883 |
| மதிப்பீடு | = | ரூ.2.82 கோடி |

*– இராமநாதபுரம் மாவட்டத்தில்*
*18–7–2002 அன்று நடைபெற்ற அரசு விழாவில்*
***மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள்*
*ஆற்றிய உரை.*

★ ★ ★

# பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 12.7.2002 அன்று தலைமைச் செயலகத்தில், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 20 பெண் குழந்தைகளுக்கு தலா ரூபாய் 15,200 வீதம் மொத்தம் ரூபாய் 3 இலட்சத்து 4 ஆயிரத்திற்கு முதலீடு செய்யப்பட்ட சான்றிதழ்களை வழங்கினார்கள்.

பெண் சிசு கொலையை ஒழிப்பதற்காகவும், குடும்ப கட்டுப்பாட்டிற்கு ஊக்கமளிக்கவும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிமுகப்படுத்தி மீண்டும் தற்போது இந்த திட்டத்திற்கு தற்போது புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், பெண் குழந்தைகளை மட்டும் பெற்று கொண்ட ஏழை குடும்பங்கள் பயன் பெறும் வகையில் அந்த குழந்தைகளின் பெயரில் தலா ரூபாய் 15,200/– வீதம் தமிழ்நாடு மின்சக்தி நிதி நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. அந்த குழந்தை பள்ளி செல்ல தொடங்கியதும் முதலீட்டுத் தொகையின் வட்டியிலிருந்து குழந்தையின் கல்விச் செலவுகளுக்காக 15 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் ரூபாய் 150 வழங்கப்படும். குழந்தை பிறந்து 20 ஆண்டுகளுக்கு பின்னர் ஒட்டுமொத்தமாக சேருகின்ற வட்டித் தொகை சேர்த்து அந்த பெண்ணிடம் வழங்கப்படும்.

பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்படி, காஞ்சீபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தேவிகா–முருகன் தம்பதியினரின் குழந்தைகள் சங்கீதா, பூர்ணிமா, வசந்தி–கமலக்கண்ணன் தம்பதியினரின் குழந்தைகள் ஷோபனா, நிர்மலா, லஷ்மி–செல்வகுமார் தம்பதியினரின் குழந்தைகள் பிரியங்கா, ஜீவிதா, லஷ்மி–குமார் தம்பதியினரின் குழந்தைகள் நந்தினி–தரணி, செல்வி–பாஸ்கர் தம்பதியினரின் குழந்தைகள் சங்கீதா, சந்தியா, வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த லட்சுமி–செல்வம் தம்பதியினரின் குழந்தைகள் பிரியங்கா–பிருந்தா, சித்ரா–குணசேகரன் தம்பதியினரின் குழந்தைகள் சூர்யா–சந்திரா, தேன்மொழி–கதிர்வேல் தம்பதியினரின் குழந்தைகள் தேவிப்பிரியா–சங்கீதப்பிரியா, லதா–பிரபாகரன் தம்பதியினரின் குழந்தைகள் சந்தியா, ரம்யா, ராணி–சௌந்திரராஜன் தம்பதியினரின் குழந்கைள் வனிதா–விநோதினி ஆகிய 20 குழந்தைகளுக்கும் தலா ரூபாய் 15,200/– வீதம் மொத்தம் 3 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாயை தமிழ்நாடு மின்சக்தி நிதி நிறுவனத்தில் முதலீடு செய்து அதற்கான சான்றிதழ்களை குழந்தைகளின் பெற்றோர்களிடம் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

தங்கள் குழந்தைகளின் பெயரில் முதலீடு செய்யப்பட்டதற்கான சான்றிதழ்களை பெற்று கொண்ட குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது பெண் குழந்தைகளின் வளமான எதிர்காலத்தை கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு வழங்கி உள்ள இந்த உதவிக்கு தங்களின் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொண்டார்கள். ★





# உடல் ஊனமுற்றோருக்கு உதவி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.7.2002 அன்று தலைமைச்செயலகத்தில், செல்வி. சரிதா, புவனேஸ்வரி ஆகியோருக்கு மூன்று சக்கர சைக்கிள்களையும்,திருவாளர்கள். கே.சீனிவாசன், பி.பெருமாள், ஜே.விக்னேஷ், ஆர்.ரவீந்திரன், எஸ்.சுப்பிரமணி, மஞ்சப்பன் மற்றும் திருமதி. ஜெயம்மாள் ஆகியோருக்கு காதொலி கருவிகளையும் வழங்கினார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம், சிறுவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த செல்வி.சரிதா மற்றும் சென்னையை அடுத்துள்ள காஞ்சிபுரம் மாவட்டம், அனகாபுத்தூரைச் சேர்ந்த செல்வி.புவனேஸ்வரி ஆகியோர் முதலமைச்சரின் தனிபிரிவிற்கு அனுப்பியிருந்த மனுவில் தங்களுக்கு உதவி புரியுமாறு வேண்டியிருந்தார்கள். மேலும், சென்னையை அடுத்துள்ள திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பாடி திரு.கே.சீனிவாசன், கொளத்தூர் திரு.பி.பெருமாள், எண்ணூர் திரு.ஜே.விக்னேஷ் ஆகியோரும், சென்னையை அடுத்துள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அஸ்தினாபுரம் திரு.ஆர்.ரவீந்திரன், பள்ளிக்கரணை திருமதி. ஜெயம்மாள், நங்கநல்லூர் திரு.எம்.மஞ்சப்பன், சென்னை மைலாப்பூரைச் சேர்ந்த திரு.எஸ்.சுப்பிரமணி ஆகியோரும் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு அனுப்பி இருந்த மனுவில் உதவி செய்யுமாறு கோரியிருந்தனர்.

இவர்களது மனுவினை, பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செல்வி.சரிதா, செல்வி.புவனேஸ்வரி ஆகியோருக்கு மூன்று சக்கர சைக்கிள்களையும், திருவாளர்கள் கே.சீனிவாசன், பி.பெருமாள், ஜே.விக்னேஷ், ஆர்.ரவீந்திரன், எம்.மஞ்சப்பன், எஸ்.சுப்பிரமணி மற்றும் திருமதி. ஜெயம்மாள் ஆகியோருக்கு காதொலி கருவிகளையும் வழங்க உத்தரவிட்டிருந்தார்கள். அதன்படி, இவர்களுக்குரிய மூன்று சக்கர சைக்கிள்கள் மற்றும் காதொலி கருவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8.7.2002 அன்று தலைமைச்செயலகத்தில் வழங்கினார்கள்.

மூன்று சக்கர சைக்கிள்கள் மற்றும் காதொலி கருவிகளை பெற்று கொண்ட இவர்கள், தங்களது நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்து கொண்டனர். ★

# ஏழை எளிய மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற நான் ஒருபோதும் தவறியதில்லை

சேலம் மாவட்டத்தில் 22–7–2002 அன்று நடைபெற்ற வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடக்க விழா, புதிய திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டு விழா – அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...

"**உ**ங்களை இன்று காண, நான் வந்திருக்கிறேன். உங்கள் அன்பு முகங்களை எல்லாம் பார்ப்பதற்காக, நான் வந்திருக்கிறேன்.

சேலம் என்னும் சொல்லுக்கு என்ன பொருள் ? என்று எனக்குத் தெரியாது. ஆனால், என்னுடைய அகராதியில், சேலம் என்பதற்குப் பொருள் உண்டு. சேலம் என்றால் – நம்பிக்கை! அதுதான் உங்கள் அன்புச் சகோதரியாகிய, என்னுடைய அகராதியில் காணப்படும் பொருள் !

சேலம் மாவட்ட சட்டமன்றத் தொகுதிகள், மொத்தம் பதினொன்று, அந்தத் தொகுதிகள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், அதன் கூட்டணியில் இருந்த தோழமைக் கட்சிகளுக்குமாக, வாரி வழங்கிய வள்ளல்கள் நீங்கள் !

உள்ள தொகுதிகள் அனைத்தும் உங்களுக்காகவே! என்று உங்கள் அன்புச் சகோதரியாகிய, எனக்கே நீங்கள் அளித்தீர்களே –

என் மீது நீங்கள் வைத்த நம்பிக்கை தானே அதற்கு காரணம் ? ஆகவேதான் உங்கள் அன்புச் சகோதரியின் அகராதியில், 'சேலம்' என்றால் 'நம்பிக்கை' என்று எழுதப்பட்டிருக்கிறது.

நீங்கள் என் மீது வைத்த நம்பிக்கை, முழுமையானது.

நான் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும், முழுமையானது.

என்னிடம் உங்கள் அன்பு நூறு சதவீதம் ! என்னிடம் உங்கள் பாசம் நூறு சதவீதம் !

என்னிடம் உங்கள் நம்பிக்கை நூறு சதவீதம் ! அதனால் நான் உங்களுக்குத் தெரிவிக்க வந்த நன்றியும் நூறு சதவீதம் !

தேர்தல் என்னும் ஜனநாயகத் தேர்வில், எனக்கு நூற்றுக்கு நூறு மதிப்பெண் அளித்த தேர்வாளர்கள் நீங்கள். ஆகவே, உங்களுக்கு நான் காட்டுகின்ற நன்றியும் நூற்றுக்கு நூறு என்றுதானே இருக்க முடியும் ?







இது வெறும் அரசு விழாக் கூட்டமல்ல! உங்கள் அன்புச் சகோதரி, தன் நன்றியைத் தெரிவிக்கும் நன்றி அறிவிப்புக் கூட்டம்!

நன்றியை வார்த்தையிலே மட்டும் வைத்துவிடாமல், நலத்திட்ட உதவிகள் வடிவிலும், வேறு பல திட்டங்கள் வடிவிலும், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் கொண்டு வந்திருக்கிறேன்.

நம்பிக்கை ஒருபோதும் வீண் போவது இல்லை.

'நம்பினோர் கெடுவதில்லை; இது நான்கு மறை தீர்ப்பு'

கண்டிப்பாக என்னை நம்பி வந்தவர்களை, நான் ஒரு போதும் கைவிட்டதே இல்லை. என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே, என்னுடைய புனிதக் கடமையாகக் கருதுகிறேன். ஏழை, எளிய மக்களின் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை.

எங்கள் அரசின் சாதனைகளைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். அத்தனை சாதனைகளையும், இங்கே கூறுவது என்பது, இயலாத காரியம். ஆனால், தமிழகம், அடுத்த ஒன்பது, பத்து ஆண்டுகளில், எப்படி இருக்க வேண்டும், என்னென்ன சாதிக்க வேண்டும் என்பது பற்றி எனக்கு ஒரு கனவு இருக்கிறது.

அதை உங்களிடையே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

2010 ஆம் ஆண்டு வாக்கில், தமிழ்நாட்டு மக்களின், தனி நபர் வருமானம், இப்போதுள்ள வருமானத்தை விட, இரு மடங்காக உயர வேண்டும்.

2005 ஆம் ஆண்டு வாக்கில், 5–ஆம் வகுப்பு வரை, எல்லோருக்கும் கட்டாயக் கல்வி வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, பெண்கள் மற்றும் நலிவடைந்த பிரிவுகளுக்காக, சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டு, இந்த இலக்கு எய்தப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டு வாக்கில், இந்தியாவில் தகவல் தொழில்நுட்பத் துறையில், தமிழகம், முதலாவது இடத்தைப் பிடிக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், மனிதகுலத்தின் சரி பாதியினர் வசிக்கும், ஆசிய கண்டத்தின் நுழைவு வாயிலாக விளங்கும் வகையில், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத்துறையில் உயர வேண்டும்.

2008 ஆம் ஆண்டு வாக்கில், இந்தியாவில் உற்பத்தியாகும், பொருட்களின் ஏற்றுமதியில், தமிழகம் முதல் இடம் வகிக்க வேண்டும். அதோடு மட்டுமின்றி, தமிழகத்திற்கு ஏற்றுமதியால் கிடைக்கும் வருமானம், இருமடங்காக உயரவேண்டும்.

2010 ஆம் ஆண்டு வாக்கில், தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும், தங்கு தடையற்ற மின்வசதி, நல்ல தார் சாலை, தொலைபேசி மற்றும் இணையதள, Internet வசதிகள், சிறந்த பள்ளிக் கூடம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், நல்ல சுகாதார வசதிகள், கிராமந்தோறும் 'மக்கள் நல்வாழ்வு பணியாளர்' மற்றும் 'பொறுப்பு வாய்ந்த உள்ளாட்சி மன்றம்' ஆகியவை அமைந்திட வேண்டும்.

இந்தக் கனவுகள், வெறும் கனவுகள் மட்டுமல்ல. இந்தக் கனவுகள் நனவாகும் நாளை, நீங்கள் வெகு சீக்கிரம் பார்க்கத்தான் போகிறீர்கள்.

இதற்காகத்தான், உங்கள் சகோதரியின் அரசு, அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த வண்ணமிகு விழாவில், சேலம் மாவட்டத்திற்கு மொத்தம் 231 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் துவக்கி வைக்கப்படும் வளர்ச்சி திட்டப் பணிகள், அடிக்கல் நாட்டப்படும் பணிகள், அரசு நலத்திட்ட உதவிகள், உங்களுக்காகவே வழங்கப்படுகின்றன.

50 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட 3,735 வளர்ச்சித் திட்டப் பணிகள், இன்று என்னால் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

"கண்டிப்பாக என்னை நம்பி வந்தவர்களை, நான் ஒரு போதும் கைவிட்டதே இல்லை. என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே, என்னுடைய புனிதக் கடமையாகக் கருதுகிறேன். ஏழை, எளிய மக்களின் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை."

ஊரக வளர்ச்சித் துறையின் கீழ், இந்த ஆண்டு கட்டப்பட்ட 1994 கட்டடங்கள், 1666 பணிகள், 199 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள், 120 கிராம நிர்வாக அலுவலகங்கள், 42 சாலைப் பணிகள், நபார்டு வங்கியின் ஊரகச் சாலைகள் உதவித் திட்டத்தின்கீழ், 16 சாலைப்பணிகள் முதலானவை இவற்றில் அடங்கும்.

அதேபோன்று, 168 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இனிமேல் உருவாக்கப்பட உள்ள 2,439 பணிகளுக்கு இன்று அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால், 78 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட உள்ள 6 புதிய குடிநீர் திட்டங்களும், நெடுஞ்சாலைத்துறை மூலமாக 23 கோடியே 46 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள பாலங்கள் –

20 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1584 தொகுப்பு வீடுகள் உட்பட, பல ஊரக வளர்ச்சிப் பணிகளும் –

பொதுப்பணித்துறை மூலமாக, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில், புதிய Auditorium, விரிவுரையாளர் அறைகள், மாணவர்களுக்காக விடுதிக் கட்டடங்கள் அமைக்கும் பணி, பெண்களுக்கென சிறப்புத் தொழிற்பேட்டை அமைக்கும் பணி ஆகியவை அடங்கும். அதுமட்டுமல்ல, சேலம் மாவட்டத்தில் 10683 பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்டங்களின் வாயிலாக, 12 கோடியே 51 இலட்சம் மதிப்புடைய உதவிகள், உபகரணங்கள் ஆகியவை இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன. எல்லோருக்கும் என் கையால், இந்த உதவிகளை வழங்க வேண்டும் என்ற பேரவா என் உள்ளத்தில் இருந்தாலும், அதற்கு காலம் இடம் தராது என்றே கருதுகிறேன். எனவே, நான் இந்த விழா மேடையில் 24 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன். நான் அந்த உதவிகளை வழங்கி முடித்ததும், அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள், பந்தலில் அமர்ந்திருக்கும் பிற பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு நலத்திட்ட உதவிகளை, பெறுகின்ற பயனாளிகள் அனைவரும், அவற்றை வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான, அடிப்படையாகக் கருதி, மென்மேலும் உழைத்து வாழ்க்கையில் முன்னேறி, எல்லா நலன்களையும் பெறவேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிப் பற்றாக்குறை போன்ற எத்தனை தடைகள் வந்தாலும், அவை மக்கள் நலத் திட்டங்களுக்கு இடையூறாக இருந்துவிடக்கூடாது என்று சிந்தித்து, தொலைநோக்குத் திட்டங்களையும், அதே நேரத்தில், உடனடி நிவாரணம் வழங்கக்கூடிய, நலத்திட்ட உதவிகளையும், ஒரே நேரத்தில் வழங்கி வருகிறது உங்கள் அரசு – உங்கள் அன்புச் சகோதரியின் அரசு''.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்ட வளர்ச்சித் திட்டப்பணிகள்**

**விவரம் :**

| | | |
|---|---|---|
| பணிகள் முடிக்கப்பட்டவை | = | 3,735 |
| மதிப்பீடு | = | ரூ.50.91 கோடி |

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட புதிய திட்டப்பணிகள்**

**விவரம் :**

| | | |
|---|---|---|
| அடிக்கல் நாட்டப்படும் பணிகள் எண்ணிக்கை | = | 2,439 |
| மதிப்பீடு | = | ரூ.168.33 கோடி |

**மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் பெற்ற பயனாளிகள்**

**விவரம் :**

| | | |
|---|---|---|
| பயனாளிகள் | = | 10,683 |
| மதிப்பீடு | = | ரூ.12.51 கோடி |



## புதிய குடியரசுத் தலைவர்

# டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம்

தமிழ்நாட்டைச் சேர்ந்த அணு விஞ்ஞானி டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் இந்தியத் திருநாட்டின் புதிய குடியரசுத் தலைவராக 25–7–2002 அன்று பதவியேற்றுக் கொண்டார்.

புதிய குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் அணு விஞ்ஞானி டாக்டர் அப்துல்கலாம் தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்த மாமனிதர்களில் ஒருவர் என்றாலும் அது மிகையில்லை.

பிரபல ஏவுகணை விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம் தமிழ்நாட்டின் கிழக்கு கோடியான இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் பிறந்தவர்.

1931–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15–ஆம் தேதி எளிய குடும்பத்தில் பிறந்தார்.

இளம் வயதிலேயே படிப்பில் கவனம் செலுத்தி கருத்தூன்றி கற்று வந்த திரு.அப்துல்கலாம், இந்தியாவை தலைசிறந்த நாடாக்கும் தொலைநோக்குப் பார்வையை சிறுவயதிலேயே கொண்டிருந்தார்.

பள்ளிப்படிப்பை இராமநாதபுரம் ஸ்சுவார்ட்ஸ் உயர்நிலைப்பள்ளியில் முடித்த அவர், திருச்சி புனித ஜோசப் கல்லூரியில் பி.எஸ்.சி. பட்டம் பெற்றார்.

பின்னர் சென்னையில் உள்ள எம்.ஐ.டி யில் வானூர்தி பொறியியல் எனப்படும் ஏரோ நாட்டிக்ஸ் படிப்பில் மாநிலத்திலேயே முதலாவதாக வந்தார்.

1958–ஆம் ஆண்டு இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் சேர்ந்து பணியாற்றினார். 1963ம் ஆண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் இஸ்ரோவில் சேர்ந்தார்.

அப்போது முழுக்க முழுக்க இந்திய அறிவியல் தொழில்நுட்பத்துடன் கூடிய ராக்கெட் மற்றும் ஏவுகணைகளை தயாரிக்கும் திட்டத்தை உருவாக்கினார்.

உயர்தொழில்நுட்பங்களை புகுத்தி, ப்ருத்வி, திருசூல், ஆகாஷ், நாக், அக்னி, போன்ற ஏவுகணைகளையும், ரோகிணி, எஸ்.எல்.வி 3 போன்ற விண்கலன்களையும் தயாரிப்பதில் முக்கிய பங்காற்றினார்.

ஏவுகணைத் தொழில்நுட்பத்தின் தந்தை என்றழைக்கப்படும் டாக்டர் அப்துல்கலாம் ஆற்றிய சேவையை பாராட்டி 1997–ஆம் ஆண்டு அவருக்கு நாட்டின் மிக உயரிய விருதான "பாரத ரத்னா" விருது வழங்கப்பட்டது.

கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி ஏவுகணையை கண்டுபிடித்ததன் மூலம் உலகப் புகழ்பெற்ற அணு விஞ்ஞானியாக அவர் திகழ்ந்தார்.

பாதுகாப்பு அமைச்சரின் ஆலோசகராகவும், பின்னர் பிரதமரின் முதன்மை அறிவியல் ஆலோசகராகவும் அவர் திறம்பட பணியாற்றினார்.



பத்மபூஷன், பத்மவிபூஷன் ஆகிய விருதுகளுடன் ஏராளமான அறிவியல் விருதுகளையும் அவர் பெற்றுள்ளார். 71 வயது நிரம்பிய விஞ்ஞானி டாக்டர் அப்துல்கலாம், திருமணம் ஆகாதவர் என்பதும், குடியரசுத் தலைவர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட மூன்றாவது தமிழர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்த மாமனிதர்களில் இவரும் ஒருவர் என்றால் அது மிகையில்லை. டாக்டர் அப்துல்கலாம் அவர்கள், மாணவர்கள் மத்தியில் உரையாடுவதில் மிகவும் ஆர்வம் உள்ளவர். சமீபத்தில் கூட தனது சொந்த ஊரான இராமேஸ்வரம் சென்று அங்கு பள்ளி மாணவர்களை சந்தித்து அவர்களுக்கு அறிவுரை வழங்கினார். மாணவர்களை ஊக்கப்படுத்தினார். குடியரசுத் தலைவர் தேர்தலுக்காக டெல்லி செல்லும் வழியில் கூட பெங்களூரில் கல்லூரி மாணவர்கள் மத்தியில் உரையாடி விட்டுச் சென்றார். கற்பிப்பதில் இவருக்கு அலாதி ஆர்வம் உண்டு. பல நூல்களை இவர் எழுதி இருக்கிறார்.

சமீபத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இவரைச் சந்திக்க சென்ற போது, தான் எழுதிய நூலை முதல்வரிடம் காட்டி மகிழ்ந்தார்.

## மேதகு குடியரசுத் தலைவர் திரு.ஏ.பி.ஜே.அப்துல்கலாம் தமது பதவியேற்பின் போது ஆற்றிய உரை :

“மரியாதைக்குரிய திரு.நாராயணன் அவர்களே, குடியரசுத் துணைத் தலைவர் அவர்களே, பிரதமர் அவர்களே, துணைப் பிரதமர் அவர்களே, இந்தியத் தலைமை நீதிபதி அவர்களே, மக்களவை சபாநாயகர் அவர்களே, அமைச்சரவை உறுப்பினர்களே, ஆளுநர்களே, மாநில முதல்வர்களே, மாநிலங்களவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களவை துணை சபாநாயகர் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களே, வெளிநாட்டுத் தூதர்களே, நண்பர்களே, குழந்தைகளே, உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

அதிக எண்ணிக்கையில் மூத்த வெளிநாட்டுத் தூதர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் அடங்கிய பெரிய மனிதர்களை என் முன்னே காணும்போது ஸ்ரீ ராகத்தில் அமைந்த தியாகராஜ சுவாமிகளின் அழகிய கீர்த்தனை தான் என் இதயத்தில் எதிரொலிக்கிறது. ‘**எந்தரோ மகானுபாவுலு, அந்தரிகி வந்தனமுலு**’ என்னும் அந்தக் கீர்த்தனையின் பொருள் “சீர்மிக்க இதயம் கொண்ட பெரிய மனிதர்கள் அனைவருக்கும் நான் வந்தனம் செலுத்துகிறேன்`` என்பதாகும்.

என்னைத் தேர்ந்தெடுத்தமைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும் நான் நன்றி செலுத்துகிறேன். வளம், ஒற்றுமை, வலிமை ஆகியவை கொண்ட இந்தியா என்னும் கனவை நனவாக்கும் பொறுப்பை என்னிடம் வழங்குவதில் இந்த நாடு எனக்கு அளித்த பேராதரவு உண்மையில் நெகிழ வைக்கிறது. குடியரசுத் தலைவர் என்னும் இந்தப் பதவியை பத்து மாபெரும் மனிதர்கள் அலங்கரித்துள்ளனர். அவர்களது சிறப்பான தனிப்பட்ட குணாதிசயங்கள் மூலம் தேச நிர்மாணத்தில் அவர்கள் நல்ல பங்காற்றியுள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் நான் வணக்கம் செலுத்துகிறேன். இந்தியக் குடியரசின் தலைவர் என்ற பதவியை ஏற்கும் இவ்வேளையில் மக்களும் அரசியல் கட்சிகளும் என்மீது வைத்துள்ள நம்பிக்கையை நன்றியுடன் நினைவு கூருகிறேன். நமது மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றப் பாடுபடுவேன் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

உலகளாவிய உணர்வு என்னும் அடித்தளத்தின் மீதுதான் இந்திய நாகரீகத்தின் பாரம்பரியம் எழுப்பப்பட்டுள்ளது. இந்தியா எப்போதுமே நட்பை விரும்புகிறது. உலகிற்கு தனது நேசக் கரங்களை நீட்டுகிறது.

நாம் கடந்த 50 ஆண்டுகளில் உணவு உற்பத்தி, சுகாதாரம், உயர் கல்வி, பத்திரிகைத் துறை, பொது மக்கள் தொடர்பு, தொழில் கட்டமைப்பு, தகவல் தொழில் நுட்பம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் பாதுகாப்பு ஆகிய துறைகளில் மாபெரும் சாதனைகளை படைத்துள்ளோம். நமது நாடு இயற்கை வளங்களையும் துடிப்புமிக்க மக்களையும் பாரம்பரிய நெறிமுறைகளையும் கொண்டுள்ளது. இருந்தும் நமது மக்களில் பலர் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளனர். போதிய சத்து இன்றி காணப்படுகிறார்கள். ஆரம்பக் கல்வி கூட கிடைக்காமல் இருக்கிறார்கள். நமது இலக்கு அவர்கள் ஏழ்மையிலிருந்து விடுபட்டு, ஆரோக்கியம், கல்வி ஆகியவற்றை பெறுமளவிற்கு அவர்களை வலுப்படுத்துவதே.

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து

– என்ற இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட திருக்குறளுக்கு ஏற்ப ஒரு நாடு நோயிலிருந்து விடுதலை, செல்வம், உயர் உற்பத்தித் திறன், அமைதியான வாழ்வு, வலிமை செறிந்த பாதுகாப்பு ஆகிய ஐந்து அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும். இசைவான, ஒருங்கிணைந்த முறையில் பல்வேறு நிலைகளில் இந்த ஐந்து அம்சங்களையும் கட்டியெழுப்புவது நமது முயற்சியாகும். இவற்றை அடைவதற்கு 100 கோடிக்கும் அதிகமான துடிப்புமிக்க வலிமையான மக்கள் தமது பங்களிப்பை ஆற்ற இயலும் என்பதில் ஐயமில்லை.

இப்போது நமது நாடு எல்லை தாண்டிய பயங்கரவாதம், சில உள்நாட்டு பூசல்கள், வேலையின்மை ஆகிய சவால்களை சந்தித்து வருகிறது. இவற்றை எதிர்கொள்வதற்கு, பல்வேறு திறன் கொண்ட 100 கோடி குடிமக்களைக் கொண்ட இந்த பெரிய நாடு, ஒருங்கிணைந்த செயல் ஆற்றுவதை உறுதி செய்யும் வகையில், ஒரு பார்வை அவசியமாகும். அந்தப் பார்வை என்ன? அது வேறொன்றும் அல்ல, இந்தியாவை ஒரு முன்னேறிய நாடாக மாற்றுவதுதான் அப்பார்வை. அரசால் மட்டுமே இந்த இலக்கை எட்டிவிட முடியுமா? இப்போது நமது நாட்டில் ஒரு இயக்கம் தேவை. இந்த இயக்கத்திற்கு ஏற்ப மக்களின் மனங்களில் கனல் கொள்ளச் செய்வதற்குரிய நேரமிதுவே. நாம் அதற்காகப் பணியாற்றுவோம். வேகத்துடன் பணியாற்ற நாம் கற்றுக் கொள்ளாவிடில் நம்மால் வளர்ந்த நாடாக உருவாக இயலாது. ஞானம் நிறைந்த புனிதக் கவி கபீரின்

கல் கரே ஸோ ஆஜ் கர்
ஆஜ் கரே ஸோ அப்





என்னும் கவிதை என் நினைவிற்கு வருகிறது. ‘நாளை என்ன செய்ய வேண்டுமென்று நீ நினைக்கிறாயோ அதை இன்றே செய். இன்று என்ன செய்யவேண்டுமென்று நினைக்கிறாயோ அதை இப்போதே செய்` என்பதுதான் அதன் பொருள்.

நமது அரசாளும் முறையின் இதயமாகிய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மூலமே வளர்ந்த நாடு என்ற நமது இலட்சியத்தை அடைவது அவசியம். காலத்தின் சோதனையைச் சந்தித்து நமது அரசியல் அமைப்பின் அடிப்படை நிலைத்து நின்றுள்ளது. மாறிவரும் சூழ்நிலைகளின் தேவைகளைச் சந்திக்கும் அளவுக்கு அது தொடர்ந்து நிலைநிற்கும் என்று நான் நம்புகிறேன். நமது நாடு மற்றும் மக்களின் நலனுக்கு ஏற்ப, அச்சமோ, ஒரு பக்கம் சாய்தலோ இல்லாமல் உறுதியுடனும், நீதியுடனும், அரசியல் அமைப்பின் செயல்முறைகளுக்கு மரியாதை செலுத்துவது நமது முதன்மையான, முக்கியமான பணியாகும். கூட்டாட்சித் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய இந்தியா திகழ்கிறது. இந்தக் கூட்டாட்சி நெறிமுறைக்கு உள்ளேயே மாநிலங்கள் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் சாதனை நிகழ்த்தும் அளவுக்கு போட்டிக்கேற்ற வலிமை பெற வைப்பது தேவையாக உள்ளது. போட்டிக்கேற்ற திறன், புதிய சவால்களை திறம்பட சமாளிப்பதற்கும் பொருளாதார மற்றும் நிர்வாகத் திறனை உறுதி செய்வதற்கும் அவசியம். மிக வேகமாக மாறிவரும் இன்றைய உலக சூழலில் நிலைத்து நிற்பதற்கு இவை முக்கியம். அத்துடன், ஜனநாயக செயல்பாடுகள் மற்றும் அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு பெருமளவில் அதிகாரப் பரவல் அளிக்க நாம் உண்மையிலேயே பாடுபட வேண்டும்.

எனக்கு மதச்சார்பற்ற கொள்கையில் உறுதியான நம்பிக்கை உண்டு என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஏனென்றால் மதச்சார்பற்ற கொள்கைதான் நமது தேசத்தின் அடித்தளமாகும். அதுவே நமது நாகரீகத்தின் வலிமைக்கு முக்கிய காரணமாகவும் உள்ளது. கடந்த ஓராண்டு காலமாக நான் பல்வேறு மதத் தலைவர்களைச் சந்தித்துள்ளேன். அவர்கள் அனைவரும் ஒரே செய்தியைத் தான் பிரதிபலித்தனர். நமது மக்களின் எண்ணங்களும் மனதும் ஒன்றுபடும் நேரம் வரும். அதுபோன்ற ஒரு பொன்னாளை நமது நாடு வெகுவிரைவில் காணும் என்பதுதான் அந்த செய்தியாகும். பல்வேறு மரபுகளையும் கலாச்சாரங்களைக் கொண்ட நமது நாட்டு மக்களின் மனதில் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொள்வேன்.

வேலை வாய்ப்பின்மை, வறுமை ஒழிப்பை இலக்காகக் கொண்ட வேகமான வளர்ச்சியுடன், தேசிய பாதுகாப்பையும் ஒவ்வொரு இந்தியனும் உணரும்படி செய்ய வேண்டும். இதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். சமூகம், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் இந்தியா தன்னிறைவு பெற்றதாகவும் வலிமை மிக்க நாடாகவும் செய்வதே நமது நாட்டிற்கும், நமக்கும் நமது சந்ததியினருக்கும் நாம் செய்யும் தலையாய கடமையாகும்.

ஒரு குழந்தை பல்வேறு பருவங்களில் பெற்றோர்களால் ஊக்குவித்து வளர்க்கப்படும் போது அந்தக் குழந்தையும் ஒரு பொறுப்புள்ள குடிமகனாகிறான். அதேபோன்று ஆசிரியர் தனது அனுபவங்களையும் அறிவையும் அவனுக்கு வழங்கும் போது ஒரு நல்ல நேயமுள்ள மனிதன் உருவாகிறான். தனிப்பட்ட மனிதன் அல்லது ஒரு குழுவுக்கு தொழில் நுட்ப உதவிகள் அளிக்கப்படும் போதும், உயர்ந்த தொழில்நுட்ப மாற்றங்களும் சாதனைகளும் உருவாகின்றன. ஒரு அமைப்பின் தலைவன் தனது மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கும் போது பல்வேறு துறைகளில் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் தலைவர்கள் உருவாகிறார்கள். பெண்கள் அதிகாரம் பெறும்போது நிலையான ஒரு சமூகம் உருவாகிறது. நாட்டில் உள்ள அரசியல் தலைவர்கள் மக்களிடையே தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய கொள்கைகளை அளிக்கும்போது நாட்டின் செழுமை உறுதியாகிறது. பல்வேறு நிலைகளில் அறிவை ஆற்றலை வழங்கும் போது வளர்ச்சி பெற்ற இந்தியாவை நாம் காண முடியும். இதற்கான தெளிவான வரைபடம் நம்முன் உள்ளது.

இந்த நிலையில் வடகிழக்கைச் சேர்ந்த மாபெரும் தலைவர் டாக்டர் ஜி.ஜி. ஸ்வெல்லின் அருமையான சிந்தனையை இங்கு நினைவு கூர்கிறேன். நமக்கு எண்ணங்களின் உள்கட்டமைப்பு தேவை. செயலிலும் தொலைநோக்கிலும் தூய்மை, எண்ணத்திலும் சிந்தனையிலும் தூய்மை என்பதே எண்ணங்களின் உள் கட்டமைப்பாகும் என்கிறார் ஸ்வெல்.

நாடு முழுவதும் நான் பயணம் செய்தபோது, நமது நாட்டின் முக்கடல் அலைகளின் ஆர்ப்பரிக்கும் ஒலியினைக் கேட்டேன். இமயத்தின் தென்றல் காற்றை நான் உணர்ந்தேன். வடகிழக்குப் பகுதிகளிலும் நமது தீவுகளிலிருந்தும் பல்லுயிர் பெருக்கத்தைக் கண்டேன். சூடான காற்றை மேற்கே உள்ள பாலைவனத்தில் உணர்ந்தேன். இந்தியாவின் தேசிய கீதத்தை எங்களால் எப்போது பாட முடியும் எனும் இளைஞர்களின் குரலை நான் கேட்டேன். இதற்கு என்ன விடை ? கடந்த ஓராண்டில் **50,000** பள்ளிக் குழந்தைகளுடன் உரையாடியுள்ளேன். எனது பதிலை இந்தக் குழந்தைகளுக்கு வலியுறுத்தும் வகையில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன். இந்தியாவின் தேசியப் பாடலை ஒரு இளைஞன் பாட வேண்டுமானால், இந்தியா ஒரு வளர்ச்சி மிக்க நாடாக வறுமையில்லாத கல்வியறிவு பெற்ற தாராளமான வேலைவாய்ப்புகள் உள்ள ஒரு முன்னோடி நாடாக விளங்க வேண்டும். அத்துடன் பொருளாதார முன்னேற்றம், தேசிய பாதுகாப்பு சகோதரத்துவம் ஆகியவற்றிலும் சிறந்து விளங்க வேண்டும். இது போன்ற மாற்றத்தை உருவாக்க நாம் அனைவரும் மனமகிழ்ச்சியுடன் நாட்டு வளர்ச்சிக்காக இணைந்து செயல்பட வேண்டும். இந்த நேரத்தில் அந்த இளைஞனின் பாடலை பள்ளிக் குழந்தைகளுடன் இணைந்து நான் பாட விரும்புகிறேன். எதிர்கால சந்ததிகளான, என்முன்னால் அமர்ந்துள்ள குழந்தைகளைப் பார்க்கும் போது நான் பெருமிதம் கொள்கிறேன். இவர்கள் மூலம் நாடு முழுவதுமுள்ள மக்களுக்கும் குழந்தைகளுக்கும் ஒரு இளைஞனின் குரலாக பாடலை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

இந்தியாவின் இளைய குடிமகன் என்ற முறையில் தொழில்நுட்பம், அறிவு, தேசப்பற்று கொண்ட நான் குறுகிய இலக்கினை ஒரு குற்றம் என்று உணர்கிறேன்.

மிகப் பெரிய தொலை நோக்குக்காக நான் மகிழ்ச்சியுடன் பாடுபடுவேன்.

அந்தத் தொலை நோக்குப் பார்வை இந்தியாவை ஒரு வளர்ந்த நாடாகவும் பொருளாதாரத்தில் வலிமை மிக்கதாகவும் நோக்கும் கோடானுகோடி மக்களில் நானும் ஒரு குடிமகன்.

கோடானுகோடி மக்களின் மனதில் இந்த தொலைநோக்குப் பார்வை ஒளிவிட்டுப் பிரகாசிக்க வேண்டும்.

இது என்னுள் இருக்கிறது
என்னுள் நிறைந்திருக்கும்
அந்த ஒளிமிக்க ஆன்மா
பூமியிலும் பூமிக்கும் மேலும் உள்ளும்
அதிக சக்தி வாய்ந்ததாகும்
வளர்ச்சியுற்ற இந்தியா என்னும்
தொலைநோக்கு இலக்கை எட்ட
அறிவு எனும் விளக்கை நான் ஏந்தியுள்ளேன்.
இந்த ஒளிவிட்டு பிரகாசிக்கும்
தொலைநோக்கு எண்ணங்களுடன் நாம்
தொடர்ந்து பாடுபட்டால்
வளர்ச்சிமிகு இந்தியா உருவாகும்.

இந்தப் பாடல் நமது சொந்த மொழிகளில் பாடப்படும் போது, நமது மனதில் செயல்படுவதற்கான ஒன்றிணைப்பு உருவாகும்.

நான் கடவுளை வேண்டிக் கொள்கிறேன். ஆன்மிக அமைதியும் அழகும் நமது மக்களின் மனதில் நிறைந்திருக்கட்டும். நமது ஆன்மாவில், எண்ணத்தில், உடலில் மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் செழிக்கட்டும்.

ஜெய் ஹிந்த்''.



# அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்ட தொடக்க விழா



"இன்றைய தினம் **3,600** கோடி ரூபாய் மதிப்பில் **2002–ஆம் ஆண்டு முதல் 2010–ஆம் ஆண்டு வரை 8 ஆண்டு காலத்திற்கு தமிழகத்தில் செயல்படுத்தப்பட உள்ள "அனைவருக்கும் கல்வி இயக்கம்'' என்ற மாபெரும் திட்டத்திற்கான தொடக்க விழாவில் கலந்து கொண்டு, இங்கே திரளாக குழுமியுள்ள, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.**

நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற உடன், தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்கிக் காட்டுவேன் என்ற சபதத்தை மேற்கொண்டேன். உங்கள் அனைவருடைய நல்வாழ்த்துக்களுடன் கடந்த ஓராண்டு காலத்திற்குள்ளாக தமிழகத்தின் அனைத்துத் துறைகளிலும் பல்வேறு சாதனைகளை எனது தலைமையில் அமைந்த அரசு நிகழ்த்தி வருவதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். குறிப்பாக, தமிழகக் கல்வித் துறையில் முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு மிகப் பெரிய மாற்றங்களை, மிகப் பெரிய சாதனைகளைத் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றோம் என்பதை இந்த நல்ல நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எல்லோர்க்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்ற இலட்சியத்தை நோக்கி விரைந்து முன்னேறுகின்ற எங்கள் ஆட்சியில், கல்லாதவர்களே இல்லை என்ற நிலையை உருவாக்க சீர்மிகுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகளின் ஒரு பகுதியாகத்தான், இன்றைய தினம் "அனைவருக்கும் கல்வி இயக்கம்'' என்ற மிகப் பெரிய அடிப்படை கல்வித் திட்டத்திற்கான தொடக்கவிழா இனிதே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கல்வித்துறையைப் பொறுத்தவரையில் கல்வி மேம்பாடு என்பது கற்போர், கற்பிப்போர் ஆகிய இரு தரப்பினரின் நலனைப் பொறுத்தது என்பதையும், அந்த இரு தரப்பினரின் நலனைப் பேணுவதிலும், எங்கள் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனது தலைமையிலான அரசு கடந்த ஓராண்டு காலத்திற்குள் தமிழகக் கல்வித்துறையில் வியத்தகு முன்னேற்றங்களை ஏற்படுத்தி உள்ளது. ஆசிரியர் பணிக்கு படித்து, பட்டம் பெற்று, பல ஆண்டுகளாக வேலை இன்றி இருந்தோருக்கு, வேலை வாய்ப்பை உருவாக்க, காலியாக உள்ள அனைத்து ஆசிரியர் பணி இடங்களையும், உடனடியாக நிரப்புவதற்கு நான் முதலமைச்சராகப் பெறுப்பேற்ற உடன் ஆணை பிறப்பித்தேன். மேலும், ஆசிரியர் நியமனங்களில் தவறுகளோ, முறைகேடுகளோ, நடக்கக் கூடாது என்பதற்காக தகுதி, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே ஆசிரியர் நியமனங்கள் நடைபெற நான் உத்தரவிட்டேன். எங்கள் அரசின் இந்த முயற்சியால், ஆசிரியர் பயிற்சி படிப்பு முடித்து, வேலை இன்றி இருந்த, பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் பெருமக்களுக்கு, தொடக்க, நடு நிலைப் பள்ளிகளில் **3,600** ஆசிரியர் பணி நியமனங்களும், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் **3,000** ஆசிரியர் பணி நியமனங்களும், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களில் **400** ஆசிரியர் பணி நியமனங்களும் வழங்கப்பட்டு, அவர்கள் அனைவர்க்கும் ஒளிமயமான எதிர்காலம் உருவாக்கப்பட்டு இருக்கிறது என்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒட்டு மொத்த தமிழக ஆசிரியர் சமுதாயமே வரவேற்று, பாராட்டி மகிழும் வண்ணம் எங்கள் அரசு சென்ற ஆண்டு அறிமுகப்படுத்திய (Counselling) அதாவது கலந்தாய்வு முறையில் இட மாற்றம் என்ற புரட்சிகரமான ஆசிரியர் பணி இடமாறுதல் தமிழக கல்வித்துறை வரலாற்றில் ஓர் மைல் கல் என்று நாடே போற்றுகின்றது. ஒளிவு மறைவற்ற வெளிப்படையான இட மாறுதல் முறையினால் தொடக்கக் கல்வி நிலையிலிருந்து, கல்லூரி நிலை வரை பணி புரியும் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் பெருமக்கள் பயன் அடைந்துள்ளனர் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கிராம மற்றும் நகர்ப் புறங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணவிகள் மேல்நிலைக் கல்வி பெறுவதில் எத்தனையோ இன்னல்கள் இருந்தன என்பதை நான் நன்கு அறிவேன். குறிப்பாக, தங்களுடைய வசிக்கும் இருப்பிடத்தில் இருந்து நடந்தோ, பல கிலோ மீட்டர் தூரம் பேருந்துகளில் சென்றோ மேல்நிலைக் கல்வி பெற வேண்டிய நிலை அவர்களுக்கு இருந்ததையும் நான் அறிவேன். இந்த இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு தான், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த மாணவிகள் மேல்நிலைப் பள்ளிகளுக்கு எளிதாக செல்லும் வகையில், அவர்களுக்கு இலவச மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தை அமல்படுத்தினேன். இந்தத் திட்டத்தின் வாயிலாக, தங்கள் பெண் குழந்தைகளும், மேல் நிலைப் பள்ளி கல்வியை முடித்து, கல்லூரி படிப்பை மேற்கொண்டு சிறந்ததோர் எதிர்காலத்தை பெற உள்ளார்கள் என்பதை எண்ணி இலவச மிதி வண்டிகள் பெற்ற பல்லாயிரக் கணக்கான மாணவிகளின் பெற்றோர்கள் எந்த அளவுக்கு இந்தத் திட்டத்தையும், எங்கள் அரசையும், வாழ்த்தி பாராட்டியிருப்பார்கள் என்பதை நினைத்து நான் மிக்க மனநிறைவு அடைகின்றேன்.

மேலும், எங்கள் அரசு தமிழகக் கல்வித் துறையில் கொண்டு வந்த, சீரிய திட்டங்கள் சிலவற்றை மட்டும் இங்கே நான் கோடிட்டு காட்ட விரும்புகின்றேன். குறிப்பாக, மெட்ரிக்குலேஷன் பள்ளிகளின் நிர்வாகத்தை சிறப்பாக நடத்துவதற்காக மெட்ரிக்குலேஷன் பள்ளிகளுக்கு என புதிய இயக்ககம் அதாவது Matriculation Directorate ஒன்றை உருவாக்கியது எங்கள் அரசு தான். தேர்தல் காலத்தில் நான் வழங்கிய வாக்குறுதியின்படி நீதிமன்ற ஆணையினால் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று வந்த, இருளில் மூழ்கிய பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவிகளின் எதிர்காலம் ஒளிமயமானதாக மாற, பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் ஒரே நேரத்தில் ஆசிரியர் பயிற்சி சிறப்புத் திட்டத்தை கடந்த 10.4.2002 அன்று நான் தான் தொடங்கி வைத்தேன். இதற்கு முன்பு தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஐந்தாண்டு காலத்திற்கு வகித்தவர்கள், பாதிக்கப்பட்ட இந்த மாணவ மாணவிகளின் நலன் குறித்து, ஒரு போதும் கவலைப்பட்டதில்லை!

மேலும், அடித் தளத்து மக்களும், நடுத்தர வர்க்கத்து மக்களும், பெரிதும் விரும்பி சேருகின்ற ஆசிரியர் பயிற்சி படிப்புக்கு தனியார் நிறுவனங்கள் உட்பட, அனைத்து ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும், மாணவ மாணவிகள் சேர்க்கையை ஒற்றைச் சாளர முறையில் அதாவது Single Window System–ற்கு கொண்டு வந்து அனைவரும் சம வாய்ப்பு பெற வழி வகுத்தது எங்கள் அரசு தான் என்பதை இங்கே சுட்டிக் காட்டுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவை மட்டுமல்ல, இன்னும் தமிழகக் கல்வித் துறையில் எங்கள் அரசு எடுத்துள்ள ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகள், ஏராளம். 10, 12–ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் ஓர், இரு பாடங்களில் தோல்வி அடைந்தவர்களுக்கு, அவர்கள் அந்த ஆண்டே மேற்படிப்பு படிக்க கொண்டு வரப்பட்டுள்ள 'உடனடி தேர்வு முறை' – அனைத்துப் பிரிவு மாணவ, மாணவிகளும், பொறியியல் கல்வி பெற்றிட, பொறியியல் கல்வி சேர்க்கைக்கான தகுதி மதிப்பெண் குறைக்கப்பட்டது –

தொழில் கல்வி நுழைவுத் தேர்வுக்கான அனுமதி சீட்டை, கணினி மூலமாக அதாவது On-line Internet மூலம் மாணவ மாணவிகள் பெறும் புரட்சிகரமான திட்டம் –

தொழில் கல்வி பயில மாணவ மாணவியர் தங்கள் விருப்பப்படி பொறியியல் பிரிவையும், கல்லூரியையும் தேர்ந்து எடுக்கும் இது வரை சென்னையில் மட்டுமே இருந்த Counselling முறை, தற்போது, சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இப்படி தமிழக மாணவ மாணவிகள் நலன் காக்கும் வண்ணம் எங்கள் அரசு பல்வேறு புதிய திட்டங்களையும், புதிய நடைமுறைகளையும் அமல்படுத்தி உள்ளது என்பதை இங்கே உங்கள் அனைவர்க்கும் எடுத்துரைப்பதில் நான் பேருவகையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.


இத்தனை சாதனைகளுக்கும், மகுடம் சூட்டுவதைப் போல இன்றைய தினம் நான் தொடங்கி வைத்துள்ள, "அனைவர்க்கும் கல்வி இயக்கம்'' திட்டம் மகத்தான ஒரு திட்டமாக மலர்ந்து, நறுமணம் வீசி, தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மாணவ செல்வங்களுக்கும் பெரும் பயனை தர இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துக் கூற கடமைப்பட்டு இருக்கின்றேன். "அனைவர்க்கும் கல்வி இயக்கம்'' என்ற இந்தத் திட்டத்தின் கீழ் பத்தாவது ஐந்தாண்டு திட்டக் காலமான 2002–லிருந்து 2007 வரையிலான ஆண்டுகளுக்கு மட்டும், மொத்தம் 1802 கோடி ரூபாய் மதிப்பில், தமிழகம் முழுவதும் நிறைவேற்றப்பட உள்ள பல்வேறு திட்டப் பணிகளை இன்றைய தினம், இந்த இனிய விழாவில் துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

முதலாவதாக, 573 கோடி ரூபாய் மதிப்பில் 306 ஒன்றிய பயிற்சி மையக் கட்டடங்கள் – 4,230 பள்ளி கருத்தாய்வு மைய கட்டடங்கள் – 9,391 வகுப்பறை கட்டடங்கள் ஆகியவற்றுக்கும், 3 கோடி ரூபாய் மதிப்பில் மாநில கல்வி நிர்வாக மேலாண்மை பயிற்சி கட்டடத்திற்கும் அடிக்கல் நாட்டுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இரண்டாவதாக, 215 கோடி ரூபாய் செலவில் 1,656 இடைநிலை ஆசிரியர் – 18,000 இளநிலை பட்டதாரி ஆசிரியர் – மற்றும் 58 கோடி ரூபாய் செலவில், 4,120 பட்டதாரி ஆசிரியர் பயிற்றுனர் ஆகிய பணி இடங்களுக்கு பணி நியமனம் செய்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மூன்றாவதாக, 62 கோடி ரூபாய் மதிப்பில், ஆசிரியர்கள் தயார் செய்து பயன்படுத்தும், கற்றல் மற்றும் கற்பித்தல் பொருள்களுக்கான மானியம் – 42 கோடி ரூபாய் மதிப்பில், பள்ளிகளுக்கான தளவாட சாமான்களுக்கு உரிய மானியம் – 57 கோடி ரூபாய் மதிப்பில், பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் கருவிகளுக்கான மானியம் ஆகியவற்றை இன்றைய தினம், இந்த இனிய விழாவில் வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

அடுத்து, 72 கோடி ரூபாய் மதிப்பில் வாழ்க்கைக் கல்வி வழங்க மாவட்டங்களுக்கான நவீன செயல் திட்டம் – 11 கோடி ரூபாய் மதிப்பில், ஒன்றிய பயிற்சி மையங்களுக்கும், கருத்தாய்வு மையங்களுக்கும், தளவாட சாமான்கள் மற்றும் கருவிகள் வழங்கும் திட்டம் – 5 கோடி ரூபாய் மதிப்பில் மாவட்ட திட்ட அலுவலகங்களுக்கும், ஒன்றிய அலுவலகங்களுக்கும் கணிப்பொறி வழங்கும் திட்டம் 202 கோடி ரூபாய் மதிப்பில் ஆசிரியர்கள், பயிற்றுநர்கள், மேற்பார்வையாளர்கள், கிராமக் கல்விக்குழுவினர் ஆகியோருக்கு பயிற்சி வழங்கும் திட்டம் –295 கோடி ரூபாய் மதிப்பில் மழலைகள், பெண் குழந்தைகள் ஆகியோருக்கான சிறப்பு கல்வித் திட்டம் – மற்றும் 33 கோடி ரூபாய் மதிப்பில் ஆரம்ப கல்வி தர மேம்பாட்டுக்கான ஆராய்ச்சி மேற்பார்வை மற்றும் கண்காணிப்புத் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்களை இன்றைய தினம் துவக்கி வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.



இறுதியாக இந்த இனிய விழாவில் 29 கோடி ரூபாய் மதிப்பில், கல்வி விழிப்புணர்வு முகாம்கள், 843 புதிய தொடக்கப் பள்ளிகள், 1,111 நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 40 கோடி ரூபாய் மதிப்பில் கல்வி உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ், 5,558 மாற்றுப் பள்ளிகள், 2,786 இணைப்புப் பள்ளிகள், 363 உள்ளுறை பள்ளிகள் – 27 கோடி ரூபாய் மதிப்பில், பள்ளிகளில் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் – 15 கோடி ரூபாய் செலவில், பள்ளிக் கட்டடம் பழுது பார்த்தல் பணிகள் – 63 கோடி ரூபாய் செலவில், 29 மாவட்டங்களில், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலகங்கள் – ஆகிய பல்வேறு கட்டமைப்பு வசதிகளை துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அனைத்துத் துறைகளிலும் எண்ணற்ற வளர்ச்சிப் பணிகளை, எனது தலைமையிலான இந்த அரசு செய்து வந்த போதிலும்,

"அன்னையாவினும் புண்ணியம் கோடி –
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

– என்ற பாரதியார் வாக்கிற்கு ஏற்ப, ஏழை எளிய மக்களுக்கும், நடுத்தர வர்க்கத்து மக்களுக்கும் தேவைப்படுகின்ற அனைத்து கல்வி வசதிகளையும், செய்து தருவதில் உங்கள் அன்பு சகோதரியின் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது.

"அனைவருக்கும் கல்வி இயக்கம்'' அத்தகைய சீரிய பணிகளில் முக்கியமான ஒரு திட்டப் பணியாகும். இந்தப் பணியில் அனைத்துத் தரப்பு மக்களும், மக்கள் பிரதிநிதிகளும், நன்முறையில் பங்கேற்று, இந்தத் திட்டத்தினை வெற்றி பெற செய்து, 2010–ஆம் ஆண்டில் பள்ளிக்குச் செல்லாத குழந்தை ஒன்று கூட தமிழ்நாட்டில் இல்லை என்று அனைவரும் போற்றத்தக்க நிலையை நாம் எய்த வேண்டும் என்ற எனது பேரவாவினை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த இனிய மாலைப் பொழுதில் எனது அன்புக்குரிய மாணவச் செல்வங்கள் பங்கேற்கவுள்ள பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இங்கே நடைபெற உள்ளன என்பதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இங்கு குழுமியுள்ள அத்துணை மாணவச் செல்வங்களுக்கும், ஆசிரியர் பெருமக்களுக்கும், தமிழக கல்வித் துறையைச் சார்ந்த அனைவர்க்கும் எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இத்தனை மாணவ செல்வங்களை ஒருசேர இங்கே பார்க்கின்றபோது ஒருசில கருத்துக்களை உங்களுக்கு

நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாணவ செல்வங்களே உங்கள் வாழ்க்கையில் இந்த பருவம் தான் மிகவும் இனிய பருவம் ஆகும். இதை நீங்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த வயதில் தான் உங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை, எந்தப் பொறுப்பும் இல்லை. உங்களுக்கு வீட்டில் பெற்றோர்கள் இருக்கிறார்கள். உங்கள் தேவைகளை எல்லாம் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். உங்களுக்கு நல்ல கல்வியைப் புகட்டுவதற்கு இந்த அரசு இருக்கிறது. எல்லாவிதமான வசதிகளையும் இந்த அரசு உங்களுக்கு செய்து கொடுக்கிறது. நீங்கள் இந்த நேரத்தில் இந்த வயதில் ஆற்ற வேண்டிய கடமை ஒன்றுதான். படிப்பில் நீங்கள் முழு கவனமும், செலுத்த வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதை நீங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது உங்களிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள்? வயதான காலத்தில் நீங்கள் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பீர்கள். அவர்களிடம் அன்பு காட்டுவீர்கள், அவர்களை மரியாதையோடும் மதிப்போடும் நடத்துவீர்கள் என்ற ஒரே எதிர்ப்பார்போடு தான் பெற்றோர்கள் உங்களை வளர்த்து, ஆளாக்கி, படிக்க வைத்து உங்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கிறார்கள். அதைப் போலவே உங்களுக்கு கல்வியைப் புகட்டும் ஆசிரியர்கள் தெய்வத்திற்கு சமம் ஆவார்கள். தெய்வத்தை எப்படி வணங்குவீர்களோ! அதைப்போல உங்களுக்கு கல்வி புகட்டும் ஆசிரியர்களை என்றைக்கும் மதிக்க வேண்டும், போற்ற வேண்டும், வணங்க வேண்டும் இது என்றைக்கும் உங்களுக்கு உயர்வு தரும்.



அதோடு பிறந்த நாட்டிற்கு நீங்கள் ஆற்ற வேண்டிய கடமையை நீங்கள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். மாணவச் செல்வங்களே உங்களில் எத்தனையோ பேர்களுக்கு உயர் கல்வி பெறுவதற்காக வெளிநாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு கிடைக்கலாம். கிடைக்கும், கிடைக்க வேண்டும் என்று உங்களை வாழ்த் துகிறேன். ஆனால் வெளிநாடுகளுக்கு சென்று நீங்கள் கல்வி கற்ற பிறகு அங்கேயே தங்கிவிடக்கூடாது. நீங்கள் திரும்ப தாய் நாட்டிற்கு வந்து நீங்கள் கற்ற கல்வியை நீங்கள் உங்கள் பிறந்த மண்ணிற்காக பயன்படுத்த வேண்டும். பிறந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக, வளர்ச்சிக் காக பயன்படுத்த வேண்டும், என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு உயிர் கொடுத்தவர்கள் உங்கள் பெற்றோர்கள். உங்களை படிக்க வைப்பவர்கள் உங்கள் பெற்றோர்கள். ஆகவே இறுதி வரை நீங்கள் உங்கள் பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமையை மறக்காமல் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களை கேட்டுக் கொள்கிறேன். இந்த நவீன காலத்தில், எத்தனையோ பேர் தங்களுக்காக பல தியாகங்களை செய்து தங்களை படிக்க வைத்து ஆளாக்கிவிட்ட பெற்றோர்களை மறந்துவிடுகிறார்கள். எத்தனையோ இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கேயே தங்கி விடுகிறார்கள். வயதான பெற்றோர்களை வயதான காலத்தில் இங்கே தனியாக தவிக்க விட்டுவிடுகிறார்கள். வெளிநாட்டுக்கு செல்லாவிட்டாலும் கூட, இங்கேயே இந்த நாட்டிலேயே, எத்தனையோ பேர் பெற்றோர்களை மறந்து தனியாக குடும்பம் நடத்துகிறார்கள். ஆகவே இங்கே குழுமி இருக்கிற மாணவச் செல்வங்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்வது, என்றைக்குமே உங்கள் பெற்றோர்களை நீங்கள் மறந்து விடக்கூடாது. பெற்றோர்கள்



நிச்சயமாக நீங்கள் இதை எல்லாம் செய்து முடிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு **100க்கு 100** இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொண்டு, உங்களுக்கு எல்லாம் ஒளிமயமான பிரகாசமான எதிர்காலம் அமைய வேண்டும் என்று வாழ்த்தி, சீரோடும் சிறப்போடும் வண்ணமிகு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த கல்வித் துறை அமைச்சர் டாக்டர் தம்பித்துரை அவர்களுக்கும், கல்வித்துறை செயலர், திரு.சுப்புராஜ்அவர்களுக்கும், கல்வித்துறையைச் சார்ந்த அலுவலகப் பெருமக்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு, மாணவச் செல்வங்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் மீண்டும் ஒருமுறை என் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்``.

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைவருக்கும் கல்வி இயக்கம் (Sarva Siksha Abhiyan) திட்ட தொடக்க விழாவில் 16-7-2002 அன்று ஆற்றிய உரை.*

# கல்விப் பயிர் வளர

## – கல்வி பயில உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 19.7.2002 அன்று தலைமைச்செயலகத்தில், எம்.பி.பி.எஸ் மருத்துவக் கல்வி பயிலவும், பி.இ. பொறியியல் கல்வி பயிலவும், நன்கு மதிப்பெண்கள் பெற்று, கல்லூரிகளில் இடம் கிடைத்தும் போதிய நிதிவசதி இல்லாததால் ஆரம்ப நிலைக் கட்டணம் கூட கட்ட இயலாத நிலையில் உள்ள 16 ஏழை மாணவ மாணவியர்களுக்கு, 'முதலமைச்சர் பொது நிவாரண நிதி' யிலிருந்து தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம், மொத்தம் 4 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கினார்கள்.

தமிழகத்தில் உள்ள, மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். பயிலவும், சென்னை அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் தமிழபத்தில் உள்ள வெவ்வேறு பொறியியல் கல்லூரிகளில் பி.இ. பொறியியல் கல்வி பயிலவும் படிக்க இடம் கிடைத்தும் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் ஆரம்ப நிலைக் கட்டணத்தைக் கூட கட்ட முடியாமல் தவிக்கின்ற மாணவ-மாணவியர்கள், தாங்கள் சேர அனுமதி பெற்ற கல்லூரிகளில் கட்டாயம் சேர்ந்து, இந்த உயர்கல்வி பயில 'முதலமைச்சர் பொது நிவாரண நிதி' யிலிருந்து நிதியுதவி செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இதனைத் தொடர்ந்து மருத்துவக் கல்லூரியில் சேர இடம் கிடைத்துள்ள 6 பேர்களுக்கும், பொறியியல் கல்லூரியில் சேர இடம் கிடைத்துள்ள 10 பேர்களுக்கும் தலா ரூபாய் 25 ஆயிரம் நிதியுதவியினை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி உள்ளார்கள்.



இதன்படி, கடலூர் செல்வி வி.அருள்ஜோதி, செல்வி எஸ்.வெண்ணிலா, திண்டுக்கல் செல்வி.ஏ.தெரசா வளர்மதி, சென்னை செல்வி ஆர்.கீதாலஷ்மி, மதுரை திரு.பி.பெரியசாமி, இராமநாதபுரம் திரு.கே.சோனைமுத்து ஆகிய 6 பேர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பு பயிலவும், சென்னை திரு ஏ.சுயம்பு, செல்வி, எஸ். மாதவி, திரு எஸ். வீரராகவன், திருப்பூர் திரு. ஆர். தட்சிணாமூர்த்தி, கரூர் திரு. ஆர் லிங்கராஜன், நாமக்கல் மாவட்டம் திரு ஆர். ரமே.ஷ். திருநெல்வேலி செல்வி டி. காந்தா, திரு, எம். செல்வகுமார், திருவண்ணாமலை திரு ஆர். வீரமணி, விழுப்புரம் திரு, என். மகேஷ் ஆகிய 10 பேர்களுக்கு பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து "பி,இ." பட்டப்படிப்பு பயிலவும், மொத்தம் 16 மாணவ மாணவிகள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 25 ஆயிரத்திற்கான காசோலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19.7.2002 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

நிதியுதவியைப் பெற்றுக் கொண்ட மாணவ-மாணவியர்கள் அனைவரும், தங்களது குடும்பத்தின் வறுமையான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தக்க நேரத்தில் நிதியுதவி அளித்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து கொண்டார்கள்.

❖ ❖ ❖

# சரித்திரம் படைக்கும் சர்வதேச வீரர்கள் உருவாக

எந்த மாநிலத்திலும் இல்லாதபடி விளையாட்டுத் துறையில் சர்வதேச வீரர்களை உருவாக்க மாண்புமிகு முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்.

இதற்கு அனுகூலமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அற்புதமான திட்டங்களை அவ்வப்போது உருவாக்கி வருகிறது. அதில் ஒன்று தான், "சர்வதேச விளையாட்டு வீரர் வளர்ச்சித் திட்டமாகும்.'' இந்தத் திட்டத்தில் பல்வேறு சிறப்புகள் உள்ளன. இத்திட்டத்தின்படி சர்வதேச அளவில் பதக்கங்களை வாங்கிக் குவிக்கும் அசாதாரணத் திறமை படைத்த விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டுபிடித்து அவர்களுக்கு உதவுவதாகும். சர்வதேசப் போட்டிகளில் விளையாடி வென்று வருகிற வரையில் விளையாட்டு வீரர்களை உருவாக்கி, தாய் மண்ணுக்குப் புகழ் சேர்க்கும் ஒரு திட்டமிட்ட அணுகுமுறை தேவை.

தேசிய அளவில் சாதனைகளை நிகழ்த்தி, சர்வதேச அளவிலும், போட்டியிடத் தகுதி வாய்ந்த வீரர்களை அடையாளம் காண தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் எதிர்கால சாம்பியன் ஆகும். சர்வதேச அளவில் தகுதி உள்ள இளைஞர்களைக் கண்டுபிடித்து உள்ளது. இவர்களுக்குச் சரியான முறையில் தேவைப்படுகிற உதவிகளைச் செய்தால் இவர்கள் எதிர்காலத்தில் சிறப்பான முறையில் விளையாட்டு வீரர்களாகத் தகுதி பெறுவார்கள். இந்த ஆணையம் அடையாளம் கண்டுபிடித்த ஒவ்வொருவரும் கடந்த ஓராண்டுக் காலத்தில் அற்புதமாகத் தேசிய அளவில் விளையாடிப் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று, பலருடைய கவனத்தைக் கவர்ந்தவர்கள். இப்படி அடையாளம் காணப்பட்டவர்களின் வயது 20க்கும் குறைவானது. எனவே, ஏறத்தாழ இன்னும் 5 ஆண்டுகளுக்குக் கடுமையான போட்டிகளில், கலந்து கொள்ளும் திறன் பெற்றவர்களாக இருப்பார்கள். ஒவ்வொரு விளையாட்டு வீரர் பற்றிய முழுத் தகவல்களும் சேகரிக்கப்பட்டன. ஒவ்வொரு விளையாட்டு வீரரும் ஒரு திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட வசதியாக இருக்கும் என்ற கருத்தில் (One Person, One Sport) இவ்வாறு செய்யப்பட்டது.

பயிற்சியாளர்களிடமும் கலந்து பேசி இந்த விளையாட்டு வீரர்கள் பற்றிய ஒரு முழுமையான தகவலை இந்த மேம்பாட்டு ஆணையம் பெற்றுக் கொண்டது.

நடைமுறையில் தற்சமயம் 21 விளையாட்டு வீரர்கள் இத் திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தொடக்கத்தில் அவர்களுக்கு 2 ஆண்டு காலத்துக்கு தேவைக்கேற்ப உதவிகள் வழங்கப்படும். முதற்கட்டமாக இவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை பெங்களூரில் நடத்தப்படுகிறது. மனநலம், உடல்கூறு பரிசோதனை (Anthropometric), இரத்தப் பரிசோதனை, எடை,உயரம் போன்ற பல்வேறு சோதனைகள் நடத்தப்படுகின்றன. பெங்களூரில் 3 நாட்கள் தங்கி மேம்பாட்டு ஆணையத்தின் செலவிலேயே இந்த பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டவர்களுக்கு 4 மாதத்திற்கு ஒரு முறை இந்தப் பரிசோதனைகள் இந்த ஆணையத்தின் மூலம் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

இத் திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

1. படிப்பதற்குக் கல்வி உதவி.
2. விளையாட்டு வீரர்களுக்கு தேவைப்படும் விளையாட்டு உபகரணங்கள் .
3. அவர்களது முயற்சிகளை ஊக்குவிக்க – சர்வதேச அளவில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆரோக்கிய உணவுகள் வழங்குதல்.
4. அவர்களுடைய விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில், சிறப்பான கருவிளை வாங்கிக் கொடுத்தல்.
5. ஒவ்வொரு விளையாட்டு வீரரின் தேவைக்கேற்ப உடலைக் கட்டுக் கோப்பாக வைத்துக் கொள்ள இத் துறை சார்ந்த நிபுணர்களுடைய அறிவுரைகள் பெற உதவி செய்தல்.
6. பல்வேறு விளையாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசின் நிதி உதவி கிடைக்காத போது அங்கீகாரம் பெற்ற சர்வதேச அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்கு உதவி செய்தல்.
7. மனோரீதியான திடம் பெற இவர்களுக்கு மனோதத்துவ நிபுணர்களின் ஆலோசனை கிடைக்கச் செய்தல்.
8. நாட்டிலுள்ள மிகச் சிறந்த விளையாட்டு நிறுவனங்களில் உள்ள நிபுணர்களின் உதவியோடு இவர்களுக்கு உடல், உள ரீதியான தேர்வுகளை நடத்துதல், சர்வதேச அளவில் வெற்றி பெற ஏதாவது உதவி தேவைப்பட்டால் அதனைச் செய்தல்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தேவைக்கேற்ப நிதி உதவி மற்றும் இதர உதவிகளைச் செய்து இந்த விளையாட்டு வீரர்கள் சர்வதேச அளவிலான திறன்களைப் பெறச் சகல உதவிகளும் செய்கிறது. இந்தத் திட்டத்தில்ரூ.11 இலட்சம் வரை செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்களைப் பெரிதும் வரவேற்று வாழ்த்தி உள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் உதவிகளைப் பெறவும்,
மேலும் விவரங்களை அறிந்து கொள்ளவும் :

**"உறுப்பினர் செயலர்**
**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்''**
**ஈ.வெ.ரா.பெரியார் நெடுஞ்சாலை,**
**சென்னை–600 084''**

நேரு பூங்கா முகவரியில் இயங்கிக்
கொண்டிருக்கும் உயர் அதிகாரிகளையோ, உரிய
பிரிவுகளையோ தொடர்பு கொள்ளவும்.

இந்த அலுவலகத்தின்
தொலைபேசி எண் : 8255322

## சர்வதேச விளையாட்டு வீரர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆணைகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 10.7.2002 அன்று, தலைமைச்செயலகத்தில், இத்திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்பட்டு தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 12 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ஆணை வழங்கினார்.

தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், இந்திய மற்றும் சர்வதேச அளவில் பங்கேற்று விருதுகளைப் பெற்று வெற்றி தேடித் தருவதற்காக விளையாட்டு வீரர்களை அடையாளம் காணும் ஒருங்கிணைந்த இந்தத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு, 1991–96ம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது.

## விளையாட்டு வீரர் - வீராங்கனைகள் தேர்ந்தெடுப்பு

திட்டமிடப்பட்ட பயிற்சி மற்றும் அணுகுமுறையுடன் வருங்காலத்தில் பல்வேறு சாதனைகளை சர்வதேச அளவில் நிகழ்த்துவதற்காக திறமை வாய்ந்த பயிற்றுநர்கள் மூலம் 21 இளம் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் அடையாளம் காணப்பட்டு, இதில், 7 விளையாட்டு வீராங்கனைகளுக்கு கடந்த 17.4.2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான ஆணைகளை வழங்கினார். தற்போது, மேலும் 12 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டோர்

இதில், சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் திரு.லஷ்மி நாராயணன் (Triple Jump), திரு.எம்.பிரசன்னா (100மீ மற்றும் 200 மீ தடகளப் போட்டி), திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி மாணவர் திரு.ராஜேஷ் பிரான் மத்தியாஸ் (100மீ மற்றும் 200 மீ தடகளப் போட்டி), செட்டிநாடு வித்யாலயா மாணவி செல்வி.ரோகிணி ராவ் மற்றும் குட்ஷெப்பர்டு கான்வெண்ட் மாணவி செல்வி.நீலோஃபர் ஜமால் (420 Class Sailing), சிஷ்யா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி செல்வி.சபாசேட் (Swimming), எஸ்.ஐ.இ.டி.கல்லூரி மாணவி செல்வி.வி.எஸ்.சுரேகா (Pole Vault), கோவை அமிர்தா தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர் திரு.ஏ.அவினாஷ் (110 Hurdles), சென்னை அடையாறு செயின்ட் மைக்கேல் பள்ளி மாணவர் திரு.ஜீவன் நெடுஞ்செழியன் (Tennis), சென்னை லயோலா கல்லூரி மாணவர் விக்டர் ஜெப சிங் (High Jump) மற்றும் செயின்ட் பால்ஸ் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் திரு.கிருபா, திரு.ஜி.சிவகுமார் (Boxing) ஆகியோர் இந்த திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு உரிய ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 10.7.2002 அன்று வழங்கினார்கள்.

இந்த ஆணைகள் வழங்கப்பட்டதால் திரு.லஷ்மி நாராயணன், திரு.பிரசன்னா மற்றும் திரு.ராஜேஷ் பிரான் மத்தியாஸ் ஆகியோர் ஈரான் நாட்டில் உள்ள ஃபேஜர் உள்விளையாட்டரங்கு போட்டியில்(Fajer Indoor Athletic Championship at Iran) பங்கேற்பதற்கான நிதிஉதவியினையும், விளையாட்டு வீரர்களுக்கான காலணிகளை பெறவும், செல்வி ரோகிணி ராவ், செல்வி.நீலோஃபர் ஜமால் ஆகியோர் சென்னையிலிருந்து கோலாலம்பூர் சென்று அங்கு முனைப்பான விளையாட்டுப் பயிற்சி திட்டத்தில் (Intensive Training Programme) கலந்து கொண்டு பயிற்சி பெற்று வருவதற்கான விமான பயண செலவினையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் தமிழக அரசு ஏற்கும். இதுபோல, செல்வி.சபா சேட் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட நவீன நீச்சல் உடைகளை பெறவும், செல்வி வி.எஸ்.சுரேகாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட கம்பு (Vaulting Pole), விளையாட்டு காலணிகள், பயிற்சி பெறுவதற்கான வசதிகள், உபகரணங்கள் மற்றும் பெங்களூரில் உள்ள இந்திய மேம்பாட்டு ஆணையத்தில் உடற்கூறு பரிசோதனை போன்றவை மேற்கொள்ளவும், திரு.அவினாஷ் உயரத் தாண்டுதல் பயிற்சி பெறுவதற்கான வசதிகள், உபகரணங்கள் மற்றும் கோவையில் உள்ள நேரு விளையாட்டரங்கில் நவீன பயிற்சி பெறவும், திரு.எம்.ஜீவன் நெடுஞ்செழியன் வெளிநாட்டிற்கு சென்று நவீன முறையில் டென்னிஸ் பயிற்சி பெறவும், திரு.விக்டர் ஜெபசிங் .சென்னையில் உள்ள விளையாட்டு விடுதியில் தங்கி ஜவஹர்லால் விளையாட்டு அரங்கில் பயிற்சி பெறவும் வழிவகை ஏற்பட்டுள்ளது. மேலும், திரு.எஸ்.கிருபா மற்றும் திரு.எஸ்.சிவகுமார் ஆகிய குத்து சண்டை வீரர்கள் சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கில் இலவசமாக தங்கி கொள்ளவும், உணவு மற்றும் உபகரணங்கள் வழங்கவும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.



முதலமைச்சர் அவர்கள் இந்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான ஆணைகளை வழங்கி, பன்னாட்டு போட்டிகளில் வெற்றி பெற மனம் உவந்து பாராட்டி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

### விளையாட்டு வீராங்கனைக்குச் சிறப்பு நிதி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30.7.2002 அன்று தலைமைச் செயலகத்தில், மதுரையைச் சேர்ந்த விளையாட்டு வீராங்கனை செல்வி.கே.சோலைமதிக்கு இரண்டு இலட்ச ரூபாய்க்கான காசோலை வழங்கினார்.

தமிழக விளையாட்டு வீராங்கனையான செல்வி கே.சோலைமதி 1994–95ம் ஆண்டில் தனது திறமையை சிறப்பாக வெளிப்படுத்தி முதலில் பூனாவில் நடைபெற்ற அனைத்துலக விளையாட்டுப் போட்டிகளிலும், பின்னர் ஜாகர்தாவில் நடந்த விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்று சாதனைப் படைத்தார். 100 மீட்டர் மற்றும் 200 மீட்டர் தடகள போட்டிகளில் சிறப்பாக விளையாடி தமிழகத்திற்கு பெருமை சேர்த்தார். பின்னர், 1995ஆம் ஆண்டில் பெங்களூரில் நடைபெற்ற முதுநிலை சம்மேளன விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர் தடகளப் போட்டிகளில் தங்கம் வென்றார். மாநில, தேசிய மற்றும் அனைத்துலக அளவிலான போட்டிகளில் பங்கேற்று செல்வி.சோலைமதி தங்கம் வென்று தமிழகத்திற்கு மட்டுமின்றி இந்தியாவிற்கே பெருமை சேர்த்தவர் ஆவார். இதன் அடிப்படையில், சிறந்த விளையாட்டு வீராங்கனையாக திகழ்ந்த செல்வி.கே.சோலைமதிக்கு ஊக்கமளித்து மேலும் பல சாதனைகளைப் படைக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்துடன் 1995 மார்ச் மாதம் ரூபாய் 2 இலட்சம் வைப்பு நிதியாக முதலீடு செய்யப்பட்டு அதில் இருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் செல்வி சோலைமதிக்கு தேவைப்படும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குதல், தங்குமிட வசதி, உணவு வசதி, சிறப்பு பயிற்றுநர் ஊதியம் ஆகியவற்றிற்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சலுகை வழங்கினார்.

ஆனால், பின்னர் ஆட்சிக்கு வந்த அரசு விளையாட்டு வீராங்கனை செல்வி கே.சோலைமதிக்கு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய சலுகையை ரத்து செய்து அந்த வைப்பு நிதியை திரும்ப பெற்று கொண்டது. இதனால், கடும் துன்பத்திற்கும், மனஉளைச்சலுக்கும் ஆளான செல்வி கே.சோலைமதிக்கு நியாயம் வழங்கும் வகையிலும் அவர் தற்போது விளையாட்டுப் போட்டிகளில் தீவிரமாக இடம் பெறாத போதிலும் அவரது கடந்த கால சாதனைகளைக் கருத்தில் கொண்டும் அவர் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதை கவனத்தில் கொண்டும் முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 2 லட்சம் தொகையினை கொடையாக வழங்க ஆணையிட்டார்.

இதன்படி, முதலமைச்சர் அவர்கள் 30.7.2002 அன்று தலைமைச்செயலகத்தில், செல்வி.கே.சோலைமதியிடம் ரூபாய் இரண்டு லட்சத்திற்கான காசோலையை நேரில் வழங்கினார். நிதி உதவியைப் பெற்று கொண்ட செல்வி.கே.சோலைமதி தனது நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து கொண்டார். ★



# ஓராண்டுச் சாதனை

## திருவள்ளூர் மாவட்டம்

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் ரூ.2.58 கோடி மதிப்பீட்டில் 806 தொகுப்பு வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயித்து 787 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் கச்சா வீடுகள் புதுப்பிக்கும் திட்டத்தில் ரூ.40.8 இலட்சம் மதிப்பீட்டில் 408 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டத்தில் ரூ.4.02 கோடி மதிப்பீட்டில் 1,245 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டன.

வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் ரூ.3.74 கோடி மதிப்பீட்டில் 232 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 210 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.5.69 கோடி மதிப்பீட்டில் 150 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 69 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.6.56 கோடி மதிப்பீட்டில் 276 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 40 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ரூ.2.86 கோடி மதிப்பீட்டில் 212 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டன.

சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா திட்டத்தில் ரூ.2.16 கோடி மதிப்பீட்டில் 620 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 550 பணிகள் முடிக்கப்பட்டன.

ஒருங்கிணைந்த ஊரக மகளிர் சுகாதார கழிப்பிட வளாகம் கட்டும் திட்டத்தில் ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் 190 கழிப்பிடங்கள் கட்ட திட்டமிட்டு, 30 கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.1.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 152 சுய உதவி குழுக்களுக்கு சுழல்நிதி ரூ.15.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 75 சுய உதவி குழுக்களுக்கு, சுய தொழில் தொடங்க ரூ.40.2 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. 1265 ஊரக மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளித்து மாநிலத்தில் மூன்றாவது இடத்தை பெற்று, இம்மாவட்டம் சாதனை படைத்துள்ளது.



கிராம தன்னிறைவுத் திட்டத்தில் ரூ.68.85 மதிப்பீட்டில் 66 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 20 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்ட ரூ.44.4 இலட்சம் மதிப்பீட்டில் 74 கட்டடங்கள் கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு 10 கட்டடங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி கிராம குடியிருப்புத் திட்டத்தில் ரூ.32.30 இலட்சம் மதிப்பீட்டில் 160 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு 145 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கடன் மற்றும் மானிய வசதியுடன் வீடுகள் கட்டும் திட்டம்; கரும் பலகை திட்டம்; மறுசீரமைக்கப்பட்ட மத்திய சுகாதார கழிப்பிட திட்டம், தேசிய சாண எரிவாயுத் திட்டம், தேசிய சூளை திட்டம் போன்ற திட்டங்கள் ரூ.42.70 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மொத்தத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ரூ.35 கோடி மதிப்பீட்டில் 8,353 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 7,348 பணிகள் முடிக்கப்பட்டன.

## வருவாய்த்துறை

மாவட்டத்தில் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனை பட்டாக்களின் எண்ணிக்கை 2,082.

தகுதியான நபர்களுக்கு இலவசமாக நில ஒப்படைப்பு செய்த புறம்போக்கு நில அளவு 39.02 ஏக்கர்.

மாண்புமிகு தமிழக முதல்வரின் நிவாரண உதவித் திட்டம், நலிந்தோர் உதவித் திட்டம், விபத்து நிவாரணத் திட்டம், சாலை விபத்து நிவாரணத் திட்டம் ஆகிய திட்டங்களில் வழங்கப்பட்ட உதவித்தொகை ரூ.71.30 இலட்சம். மொத்த பயனாளிகள் 631.

## மக்கள் குறைதீர்க்கும் குழுமம்

கடந்த ஓராண்டில் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மக்கள் குறைதீர்க்கும் நாட்களில் கொடுக்கப்பட்ட மொத்த மனுக்கள் 2,924. இதில் 2,554 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

மனுநீதி நாட்களில் பெறப்பட்ட மொத்த மனுக்கள் 5,686. இதில் 4,063 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள் கடந்த ஓராண்டில் 4,085 மனுக்கள் வரப்பெற்று, 3,494 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோருக்கான உதவித்தொகை, ஆதரவற்ற விவசாய கூலி உதவித்தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித்தொகை போன்ற திட்டங்களில் 3,270 நபர்களுக்கு மொத்தம் ரூ.6,54,000 வழங்கப்பட்டுள்ளது.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

திருவள்ளூர் மாவட்டத்தில் 11ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.38.78 இலட்சம் மதிப்பில் 2852 மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் 676.

ஆதிதிராவிடர் மக்களுக்கு மயான பாதை அமைக்க செலவிடப்பட்ட தொகை ரூ.1.76 இலட்சம்.

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகம் மூலமாக விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளின் எண்ணிக்கை 38.

கல்வி உதவித் தொகையாக வழங்கிய மொத்த தொகை சுமார் 1.86 கோடி ரூபாய். பயனடைந்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை 55,476.

ஆதிதிராவிடர் மகளிர் கல்வி உதவித் தொகை திட்டத்தில் பயன் அடைந்த மாணவிகளின் எண்ணிக்கை 6653. வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.41 இலட்சம்.

இலவச பாடநூல்கள், சீருடைகள், சிலேட்டுகள் பெற்ற மாணவ, மாணவியரின் எண்ணிக்கை 59,144.

ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கு மேம்பாடு, மயானப்பாதை சீரமைத்தல் விடுதிகளுக்கு குடிநீர் வசதி ஆகிய திட்ட பணிகளுக்காக செலவிடப்பட்ட மொத்த தொகை சுமார் ரூ.12 இலட்சம்.

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் இருளர் இனத்தவர்களுக்கு 50 தொகுப்பு வீடுகள் ரூ.16 இலட்சம் செலவில் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன.





## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

கடந்த நிதி ஆண்டில் விடுதிகளில் தங்கி பயிலும் மாணவர்களுக்கு உணவு அளிக்க செலவிடப்பட்ட தொகை ரூ.90 இலட்சம்.

கல்வி உதவித் தொகை பெற்று பயன்பெற்ற மாணவ/மாணவிகளின் எண்ணிக்கை 20,606. வழங்கப்பட்ட உதவித்தொகை ரூ.78.84 இலட்சம்.

பொதுப்பள்ளிகளில் 9 மற்றும் 10ஆம் வகுப்பு படித்த 28,000 மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட இலவச பாடநூல்களின் மதிப்பு ரூ. 42 இலட்சம்.

10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 24 மாணவ/மாணவியருக்கு வழங்கப்பட்ட ஊக்கத் தொகை ரூ.50,000.

மகளிர் சுயதொழில் திட்டத்தின் கீழ் 150 மாணவிகளுக்கு ரூ.58,000 செலவில் சுயதொழில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை

கடந்த ஓராண்டில், பட்டா பாஸ் புத்தகங்கள் பெறுவதற்கு படிவம்–2 வழங்கப்பட்ட நில உரிமையாளர்கள் எண்ணிக்கை 2,60,872. பூர்த்தி செய்த விண்ணப்பங்களை வழங்கிய நில உரிமையாளர்கள் 1,19,518. ஆய்வு செய்யப்பட்ட புகைப் படத்துடன் பட்டா பாஸ் புத்தகங்கள் வழங்க தயார் நிலையில் உள்ள விண்ணப்பங்கள் 85,713.

## சமூக நலத்துறை

இம்மாவட்டத்தில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் 184 பேர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.18.40 இலட்சம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் 42 பேர்களுக்கு ரூ.3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தில் 16 பேர்களுக்கு ரூ.2.80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டத்தில் 5 பேர்களுக்கு ரூ.35,000மும் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டத்தில் ஒருவருக்கு ரூ.10,000மும் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள மகளிர் நலத் திட்டங்களுக்கு இம்மாவட்டத்தில் அரசு செலவிட்டுள்ள மொத்த தொகை ரூ.24.65 இலட்சம் இத்திட்டங்களினால் பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை–248.

## சிறுசேமிப்புத்துறை

கடந்த நிதியாண்டில் அரசால் சிறுசேமிப்பு வசூல் குறியீடு ரூ.72 கோடி என நிர்ணயிக்கப்பட்டதை மிஞ்சி அதிக அளவில் ரூ.79 கோடி வசூல் செய்து சாதனை புரியப்பட்டது.

கடந்த நிதியாண்டில் 481 மகளிர் முகவர்களும், 531 எஸ்.ஏ.எஸ். முகவர்களும், சிறு சேமிப்பு, முகவர்களாக சேர்க்கப்பட்டனர். முகவர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்கத்தொகை ரூ.1.20 கோடி.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### கிராமக் குடிநீர் திட்டம் :

இம்மாவட்டத்தில் ஊரக குடிநீர் திட்டத்தின் கீழ் 157 குடியிருப்புகளில் ரூ.11.51 கோடி செலவில் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இதனால் பயனடைவோர் எண்ணிக்கை 2,87,285.

மீஞ்சூர் ஒன்றியத்தில், பழவேற்காடு மற்றும் 22 குடியிருப்புகளுக்கு ரூ.1.10 கோடி செலவில் கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பயன்பெறுவோர் எண்ணிக்கை 27,025 பேர். அனுப்பம்பட்டு மற்றும் 62 குடியிருப்புகளுக்கு ரூ.2.93 கோடி செலவில் கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் விரைவில் முடிவு பெறவுள்ளது. பயனடைவோரின் எண்ணிக்கை 34,812.

இம்மாவட்டத்தில் 1000 லிட்டர் கொள்ளளவு உள்ள நீர்தேக்கத் தொட்டிகள் 105 குடியிருப்புகளிலும், 218 பள்ளிகளிலும், 38 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 106 சத்துணவு நிலையங்களிலும் அமைக்கப்பட்டு உள்ளது. நன்னீர் கிடைக்காத 105 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு முதற்கட்டமாக 50 இடங்களில் நன்னீர் கிடைக்க திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 8 சட்டமன்ற தொகுதிகளில் குடிநீர் வசதி இல்லாத 20 குடியிருப்புகள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.90 இலட்சம் செலவில் குடிநீர் திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு 11 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### நகர குடிநீர் திட்டம் :

இம்மாவட்டத்தில் திருத்தணியில் 35,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.4.10 கோடி செலவிலும், ஆரணியில் 19,000 மக்கள் பயன்பெறும் ரூ.97 இலட்சம் செலவிலும் குடிநீர் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

திருவள்ளூரில் 65,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.11 கோடி மதிப்பீட்டிலும், பொதட்டூர் பேட்டையில் 23,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.1.59 கோடி மதிப்பீட்டிலும் குடிநீர் திட்டப் பணிகள் விரைவில் முடிவு பெற உள்ளன.

## வனத்துறை

மாவட்டத்தில் வனத்துறையின் சார்பில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், சமூகக்காடுகள் வளர்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களில் ரூ.3.14 கோடி செலவிடப்பட்டு மாவட்ட அளவில் 10 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

கருவேல மரங்கள் விற்பனை மற்றும் முந்திரி விற்பனை மூலம் அரசுக்கு ஈட்டிய வருவாய் ரூ.16.89 இலட்சம்.

7 திட்ட கிராமங்களில், ஒவ்வொரு கிராமத்திலும் 4 முதல் 5 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ரூ.2 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## பொதுப்பணித்துறை

### 2001-2002 ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள்

| | ரூ.இலட்சம் |
|---|---|
| பொன்னேரி வருவாய் கோட்ட அலுவலர் அலுவலகக் கட்டடம் | 22.50 |
| பள்ளிப்பட்டு ஆய்வு மாளிகை சுற்றுப்புற சுவர் கட்டும் பணி | 7.23 |
| கடம்பத்தூரில் காவல்நிலையக் கட்டடம் | 20.31 |
| பூந்தமல்லியில் காவல்நிலையக் கட்டடம் | 20.31 |
| திருவள்ளூரில் நிலத்தடி நீர் உபகோட்ட அலுவலகக் கட்டடம் | 9.70 |
| திருவள்ளூரில் மண்டல போக்குவரத்துத் துறைக்காக வாகனங்களை ஓட்டி சோதனை செய்யும் தளம் அமைத்தல் | 15.00 |
| மொத்தம் | 95.05 |



### 2001-2002 ஆண்டு பணி முன்னேற்றத்தில் உள்ளவை

| | ரூ. இலட்சத்தில் |
|---|---|
| திருவள்ளூர், மணவாள நகரில் காவல்நிலையக் கட்டடம் | 12.50 |
| பொன்னேரியில் தீ அணைப்பு நிலையக் கட்டடம் | 16.50 |
| ஆர்.கே.பேட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய 30 படுக்கை வசதிகள் கட்டடம் | 40.00 |
| நபார்டு உதவியுடன் தாலுக்கா அல்லாத அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் | 202.00 |
| பாலாபுரத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டடம் | 31.50 |
| திருத்தணியில் சுவர்ண செயந்தி சுவரோஸ்கார் யோஜனா திட்டத்தின் கீழ் வணிக வளாகம் | 12.00 |
| பூந்தமல்லியில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் | 126.00 |
| பள்ளிப்பட்டில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் | 110.00 |
| எரும்பி, பெரியபாளையம், பொன்னலூர்பேட்டை வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள் | 16.50 |
| திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் குடியிருப்புடன் கூடிய அலுவலகம் | 55.00 |
| திருத்தணி, பொன்னேரியில் வருவாய் கோட்ட அலுவலர்களுக்கான குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடம் | 22.00 |
| திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கான குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடம் | 24.40 |
| பூந்தமல்லி, அம்பத்தூரில் வட்டாட்சியர் குடியிருப்பு | 20.00 |
| பொதுப்பணித்துறை கட்டடம் (கோட்டம்) கட்டும் பணி | 38.50 |
| திருத்தணியில் சுற்றுலாத்துறைக்காக வாகனங்கள் நிறுத்த தளம் அமைத்தல் | 25.00 |
| திருத்தணியில் சுற்றுலாத்துறைக்காக பயணிகள் தங்க கூடுதல் அறைகள் கட்டும் பணி | 25.00 |
| பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுப் பணிகள் | 103.00 |
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுப் பணிகள் | 74.00 |
| மொத்தம் | 953.90 |

ரூ.9.539 கோடி மதிப்புள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படவுள்ளன.

## தமிழ்நாடு மகளிர் மேம்பாடு திட்டம்

திருவள்ளூர் மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் கீழ் 3728 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. மொத்த உறுப்பினர்கள் 58,720. இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் 38,624 பேர்.

1,381 குழுக்களுக்கு வங்கிகள் மூலம் தொழில் செய்ய ரூ.3.90 கோடி கடன் வசதி செய்யப்பட்டுள்ளது.

4,275 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பூந்தமல்லி, வெள்ளவேடு ஊராட்சியில் மகளிர் குழுக்களால் கணினி மையம் இயக்கப்படுகிறது.

பள்ளிப்பட்டு பொதட்டூர் பேட்டையில் இயங்கும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பால் பொருட்கள் தயாரிப்பதில் முன்னோடியாக திகழ்ந்து நாள்தோறும் 500 லிட்டர் பால் உற்பத்தி செய்து ஆவின் பால் பண்ணைக்கு நேரடியாக விநியோகம் செய்கின்றனர்.

25 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் 20 ஏக்கர் தரிசு நிலத்தினை மேம்படுத்த பசு தீவன புல் வளர்ப்பதற்கு முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்கள்.

## ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை

மாவட்ட மறுவாழ்வு அலுவலகத்தின் மூலம் மொத்த 1,345 ஊனமுற்ற பயனாளிகளுக்கு, திருமண நிதி உதவி வழங்கும் திட்டம், சுய வேலைவாய்ப்பு திட்டம், இலவச உபகரணங்கள் வழங்கும் திட்டம், இலவச பேருந்து பயண அட்டை கல்வி உதவித்தொகை போன்ற பல்வேறு திட்டங்களில் ரூ.6.65 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

## சுகாதாரத்துறை

திருவள்ளூர் தலைமை மருத்துவமனையில் தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகத்தால் சி.டி.ஸ்கேன் நிறுவப்பட்டு விரைவில் செயல்பட உள்ளது.

இங்கு எய்ட்ஸ் நோயாளிகள் நலனுக்காக தன்னார்வ ஆலோசனை மற்றும் சோதனை மையம் தொடங்கப்பட்டுள்ளது.

அரசினர் தலைமை மருத்துவமனை திருவள்ளூர், திருத்தணி, பொன்னேரி ஆகியவற்றில் இரத்த வங்கி கட்டி முடிக்கப்பட்டு செயல்பட உள்ளது.

குழந்தைகள் நலத்தை கருத்தில் கொண்டு சுமார் 1,60,000 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 2,52,590.

## கல்வித்துறை

2001–2002 ஆண்டில் 180 இடைநிலை ஆசிரியர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டனர்.



மாவட்டத்தில் பொன்னலூர்பேட்டை, கனகம்மாசத்திரம், பொன்னேரி, ஆர்.கே.பேட்டை, திருநின்றவூர் ஆகிய ஐந்து இடங்களில் தமிழக அரசின் இலவச சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு சுமார் 12,000 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

வைட்டமின் மாத்திரைகள், 4,36,853 நபர்களுக்கு வழங்கப்பட்டது.

யானைக்கால் தடுப்பு மாத்திரைகள் 12,31,802 பேர்களுக்கு வழங்கப்பட்டது.

மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் முதல் மூன்று இடம் பெற்ற மாணவர்களுக்கு உயர் கல்வி செலவிற்காக ரூ.3.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பயனடைந்துள்ளனர்.

ஊரக திறனாய்வுத் தேர்வில் தேர்வு பெற்ற ஒன்பதாம் வகுப்பு பயிலும் 50 மாணவர்களுக்கும், 50 மாணவியருக்கும் (தலா ரூ.1000 வீதம்) பன்னிரெண்டாம் வகுப்பு வரை ரூ.4 இலட்சம் வழங்கப்பட்டது.

இம்மாவட்டத்தில் மொத்தம் 45 மேல்நிலைப் பள்ளிகளில் கணினி பாடப்பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சரின் இலவச சத்துணவு பெறும் 6 முதல் 8 ஆம்



வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச பாடப் புத்தகங்களின் எண்ணிக்கை 56,550. வழங்கப்பட்ட இலவச சீருடைகள் எண்ணிக்கை 44,341.

## அறிவொளி தொடர் கல்வித் திட்டம்

539 ஊராட்சிகளில் கிராம நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு, வழங்கப்பட்ட புத்தகங்களின் மதிப்பு ரூ.18 இலட்சம்.

மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களிலும், 67 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 6,000 தன்னார்வ ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

## கூட்டுறவுத்துறை

தமிழக அரசு பதவியேற்றவுடன் விவசாயிகளின் நலன் கருதி தவணை கடந்த கடன்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் 11,184 பேர். தள்ளுபடி செய்த மொத்த தொகை ரூ.5.67 கோடி.

கூட்டுறவு நியாய விலைக்கடைகள் மூலம் 37.15 மெடன் ஊட்டி தேயிலைத் தூள் விற்பனை செய்து இம்மாவட்டம் மாநில அளவில் 3வது இடம் பெற்றுள்ளது.

சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தின்கீழ் பயனடைந்த மகளிர்–285.

கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் விற்கப்பட்ட அரசு உப்பு–368 மெ.டன். கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் ரூ.4.79 கோடி மதிப்பில் கட்டுப்பாடற்ற பொருட்களை விற்பனை செய்து, இந்த மாவட்டம் மாநில அளவில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. விற்பனை செய்த வேளாண்மை விளைப் பொருட்கள் மதிப்பு ரூ.75.75 இலட்சம்.

## பேரூராட்சிகள் நிர்வாகம்

தேசிய குடிசை மேம்பாடு திட்டம், 11–வது நிதிக்குழு மான்ய திட்டம், பகுதி–2 திட்டம், இயற்கையின் சீற்றம் மானிய திட்டம், குடிசை மேம்பாடு திட்டம், அடிப்படை வசதிகள் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களில் ரூ.2.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 558 பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

பாலிகா சம்ரித்தி யோஜனா திட்டத்தின் கீழ் மானியமாக ரூ.1.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 254 பயனாளிகள் மானியம் வழங்க தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மழைநீர் சேகரிக்கும் திட்டம் 397 கட்டடங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## நெடுஞ்சாலைத்துறை

மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் மூன்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.1.95 கோடி செலவில் 30.60 கிலோ மீட்டர் சாலைகள் புதுப்பிக்கப்பட்டது.

இதர மாவட்ட சாலைகள் மேம்பாடு செய்தல் திட்டத்தின் கீழ் 89 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ரூ.6.80 கோடி மதிப்பீட்டில் 178.09 கிலோ மீட்டர் சாலைகள் புதுப்பிக்கப்பட்டது.

தனிச்சீர் வேலைகள் மூலம் மேம்பாடு செய்தல் திட்டத்தில் 78 பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.3.68 கோடி செலவில் 55.70 கிலோ மீட்டர் சாலைகள் புதுப்பிக்கப்பட்டது.

தாளவேடு, பூனிமாங்காடு சாலையில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டப்பட்டுள்ளது.

மெதூர் கும்மிடிபூண்டி சாலையில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.66.50 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டப்பட்டது.

## நகராட்சி நிர்வாகம்

திருவள்ளூர் நகராட்சியில் ரூ.53.75 இலட்சம் மதிப்பீட்டில் 30 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

அம்பத்தூர் நகராட்சியில் ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் 41 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஆவடி நகராட்சியில் ரூ.2.05 கோடி மதிப்பீட்டில் 80 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கத்திவாக்கம் நகராட்சியில் ரூ.50.55 இலட்சம் மதிப்பீட்டில் 11 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மாதவரம் நகராட்சியில் ரூ.94.93 இலட்சம் மதிப்பீட்டில் 32 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

திருவொற்றியூர் நகராட்சியில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் 103 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## கைத்தறித்துறை

### சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் 507 உறுப்பினர்களுக்கு 2001–02ஆம் ஆண்டில் 4% அரசு மானியமாக ரூ.2,62,628 வழங்கப்பட்டுள்ளது.

## காப்பீடு திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் இறந்த ஒரு நெசவாளர் குடும்பத்திற்கு ரூ.50,000 இன்சூரன்ஸ் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திலிருந்து ரூ.20,000 வழங்கப்பட்டுள்ளது.

## நல்வாழ்வு திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் 2001–02ஆம் ஆண்டில் ஆழ்துளை கிணறுகள் அமைக்க ரூ.1,05,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆஸ்துமா நிவாரணத்திற்காக ரூ.1,500 வழங்கப்பட்டுள்ளது. மேலும் 94 நெசவாளருக்கு மூக்கு கண்ணாடி வாங்கவும், 220 நெசவாளர்களுக்கு ஆஸ்துமா சிகிச்சைக்கு வைத்திய வசதி பெற ரூ.1.33 இலட்சத்திற்கு அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## மாவட்ட தொழில் மையம் :

இம்மாவட்டத்தில், சென்ற நிதியாண்டில், தற்காலிக சிறுதொழில்கள், நிரந்தர சிறுதொழில்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு நிரந்தர சிறு தொழில்கள், கைவினைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றில் விண்ணப்பங்கள் பதிவு செய்ய அரசால் நிர்ணயித்த குறியீடான 6189 என்ற அளவை மிஞ்சி மொத்தம் 7238 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு, தொழில்கள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டன. மேலும் மாநில முதலீட்டு மான்யம், ஜெனரேட்டர் மானியம், மின் மானியம் வகையில் மொத்தம் ரூ.17.43 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

## வேளாண்மைத்துறை

கடந்த ஆண்டு முக்கிய பயிராகிய நெல் சாகுபடி செய்யப்பட்ட பரப்பு 95.059 எக்டேர்.

அரிசி உற்பத்தி 3.45 இலட்சம் மெ.டன்.

விவசாயிகளால் விரும்பப்படும் ஏடிடி43 என்ற சன்னரக நெல் விதைகள் 714.3 மெ.டன் உற்பத்தி செய்யப்பட்டு 514.3 மெ.டன் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு மாநில அரசு திட்டங்களின் கீழ் செலவிடப்பட்ட மொத்த நிதி ரூ.1.88 கோடி.

வீரிய ஒட்டு நெல் செயல் விளக்கம் அமைத்தல் போன்ற பகுதி இரண்டு திட்டத்தில் ரூ.3.100 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

டான்வா பண்ணை மகளிர் திட்டத்தில் செலவிடப்பட்ட நிதி ரூ.6.88 இலட்சம். பயனாளிகள் மொத்தம் 2,269 பெண் விவசாயிகள்.

மாநில/மத்திய அரசு மானியத் திட்டங்களில் செலவிடப்பட்ட மொத்த மானியத் தொகை 59.84 இலட்சம் ரூபாய்.

மத்திய அரசு திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட மொத்த மானியத் தொகை 9.15 இலட்சம் ரூபாய்.

## கால்நடை பராமரிப்புத்துறை

திருத்தணி வட்டம் கே.ஜி.கண்டிகையில் புதிய கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தரம் உயர்த்தப்பட்ட கிடேரிக்கன்றுகள் வழங்கும் திட்டத்தில் 70 பேர்களுக்கு மானியத்துடன் ரூ.2.45 இலட்சம் நிதி உதவி செய்து எருமைக் கிடேரிகள் வழங்கப்பட்டன.

கோழிகள் வழங்கும் திட்டத்தில் மொத்தம் 170 பேர்களுக்கு மானியத்துடன் ரூ.1.26 இலட்சம் நிதி உதவி செய்து 1,700 கோழிகள் வழங்கப்பட்டன.

கால்நடை பாதுகாப்புத் திட்டத்தில் கடந்த நிதியாண்டில் நடத்தப்பட்ட மருத்துவ முகாம்கள்–227.

மருத்துவ முகாம்களில் வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு – ரூ.6.81 இலட்சம்.

பயனடைந்த மொத்த கால்நடைகள் – 4,59,445.

## தாட்கோ

கடந்த நிதியாண்டில் தாட்கோ மூலம் கீழ் குறிப்பிட்டுள்ள திட்டங்களில் மானியம் பெற்று பயன்பெற்றவர்களின் விவரம்:

| | இலக்கு | நிதி (ரூபாய் இலட்சம்) |
|---|---|---|
| 1. தனி நபர் தொழில் முனைவோர் திட்டம் | 160 | 83.26 |
| 2. வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்கள் | 221 | 24.63 |
| 3. சுயதொழில் வர்த்தகம் மற்றும் வேளாண் திட்டம் | 124 | 12.53 |
| 4. தேசிய துப்புரவு தொழிலாளர் குழு திட்டம் | 9 | 2.60 |
| 5. தேசிய துப்புரவு தொழிலாளர் திட்டம் தனிநபர் | 13 | 3.00 |
| 6. கணினி மென்பொருள் பயிற்சி | 103 | 4.95 |
| 7. தொழில்நுட்ப பயிற்சி திட்டங்கள் | 292 | 5.19 |
| 8. சுயஉதவி மகளிர் குழு பயிற்சி | 1240 | – |
| மொத்தம் | 2162 | 137.16 |

மொத்தம் 2,162 பேர்களுக்கு ரூ.1.3716 கோடி மானியமாக வழங்கப்பட்டது.

• • •



# காவல் துறையினர் கடமைகளை சிறப்புடன் ஆற்றி பொதுமக்களுக்கு உற்ற நண்பனாக விளங்க வேண்டும்

– மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா

9.7.2002 அன்று நடைபெற்ற
காவல்துறையினருக்கு
**தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம்**
வழங்கும் விழாவில்
**மாண்புமிகு முதலமைச்சர்** ஆற்றிய உரை.

காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை, சிறைத் துறை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, ஊர்க்காவல் படை ஆகியவற்றில் பணியாற்றும் போது வீரதீரச் செயல்கள் புரிந்ததற்காகவும், கடமை தவறாது பணியாற்றியதற்காகவும், முதலமைச்சரின் பதக்கம் பெற்று அமர்ந்திருக்கும் வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே வழங்கப்பட்ட பதக்கங்கள் மூன்று ஆண்டுகளுக்கு உரியவை 1999, 2000 மற்றும் 2001– ஆம் ஆண்டுகளில் முதலமைச்சரின் பதக்கம் பெறத் தகுதி படைத்தவர்கள் எனக் கண்டறிப்பட்ட 376 வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் இன்று இந்த இனிய விழாவில் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. எல்லோருக்கும் நானே பதக்கங்களை அணிவிக்க வேண்டும் என்று விருப்பம் இருந்தாலும், காலத்தின் அருமைக் கருதி, எல்லா நிலைகளிலும் உள்ள 72 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மட்டும் பதக்கங்களை அணிவித்துள்ளேன்.

காலம் தாழ்த்தி விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதால்,சிலர் பதக்கங்களை நேரடியாக பெற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதைநான் அறிவேன். அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக காவல் துறையில் பணியாற்றும் அலுவலர்களும், பணியாளர்களும் புரியும் வீர தீரச் செயல்களுக்காகவும், ஆற்றும் தன்னிகரற்ற சேவைக்காகவும், தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்குவது, 1969–ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தின் முதலமைச்சரோ அல்லது காவல் துறைக்கு பொறுப்பு வகிக்கும் பிற அமைச்சரோ காவல்துறையினருக்கு பதக்கம் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு காவல் துறையினருக்கு பதக்கங்களை வழங்கி சிறப்பிப்பது. ஆண்டாண்டு காலமாக நடைபெற்று வருகிறது. ஆனால் இப்போது மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து அதாவது 1999, 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளுக்கும் சேர்த்து ஒரேயடியாக பதக்கம் வழங்கும் விழா நடைபெறுவது இதுதான் முதல் தடவை, எங்களுக்கு முன்னால் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களுக்கு, காவல் துறையினரை ஊக்குவிக்கும் இந்த பதக்கம் வழங்கும் விழாவை நடத்த வேண்டுமென்று தோன்றவில்லையா ? அல்லது வேண்டுமென்றே காவல் துறையை உதாசீனப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டார்களா என்று தெரியவில்லை. ஏனென்றால் முன்பு ஒரு முறை தமிழகக் காவல்துறையை "ஈரல் கெட்டுப்போச்சு" என்ற பேச்சு பேசி பின்னர் ஓராண்டில் "ஈரல் சரியாகிவிட்டது" என்றும் பேசியவர்கள் யார் என்று உங்களுக்கு எல்லாம் நன்கு தெரியும். எனக்கு முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள்தான் கடைசி இரண்டு



ஆண்டுகளில் இம்மாதிரியான விழாக்களை நடத்தாமல் விட்டுவிட்டுச் சென்றார்கள். இப்போது அந்தக் குறையை நிறைவு செய்யும் வகையில் இந்த விழாவை மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து மாபெரும் விழாவாக நடத்திக்கொண்டிருக்கிறோம்.

தன்னலம் கருதாது பாடுபடுவோரைப் போற்ற வேண்டும்; கடமையைக் கண்ணெனக் கருதுவோரை விருது வழங்கி கௌரவிக்க வேண்டும் என்ற கோட்பாடு காலங்காலமாக அரசினால் கடைபிடித்து வரப்படுகின்ற ஓர் உயரிய மரபு ஆகும். அந்த வகையில் இந்த இனிய நிகழ்ச்சியில் பங்கு பெறுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.


சீருடைப்பணியாளர்கள் பணியாற்றும் துறைகளுக்கெல்லாம் தாய்த் துறையாக விளங்கும் காவல் துறையிலும்,அதற்கு இணையான பிரிவுகளான ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் படை ஆகியவற்றிலும் பணியாற்றுகின்ற அலுவலர்களும், வீரர்களும், வீராங்கனைகளும் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு நற்பணியாற்றுவதால் தான் நாட்டில் இன்று அமைதி நிலவுகின்றது. ஆகவே, இந்த நல்ல நேரத்தில் ஒட்டுமொத்த சீருடைப் பணியாளர்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருதுகளும், வாழ்த்துக்களும் தேடி வரும் • அதே நேரத்தில், காவல் துறையினர் பல்வேறு விமர்சனங்களுக்கும், கண்டனங்களுக்கும் ஆளாகிறார்கள் என்ற உண்மையையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். காவல் துறையினர் சிறப்பாக பணியாற்றும்வேளையில், பாதிப்புக்குள்ளாகும் சிலரால் விமர்சனமும் வரத்தானே செய்யும். சிறப்பு என்பது ஒரு தற்செயல் விளைவாக திடீரென நிகழ்ந்து விடாது. அதற்குத் திட்டமிடுதல், இணைந்து செயல்படுதல், அர்ப்பணிப்பு உணர்வு ஆகிய மூன்று அம்சங்களும் தேவை. இவை இணைந்து தான் எத்தகைய சிறப்பையும் உருவாக்க முடியும். அந்த வகையில் தமிழ்நாடு காவல்துறை சிறப்பாக செயல்பட்டு புதிய சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும்.

**2001** ஆம் ஆண்டு, நான் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல், தமிழ்நாட்டில் பெரிய அளவில் சட்டம்– ஒழுங்கு பிரச்சனை எதுவும் எழவில்லை என்பதை பெருமிதத்தோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சமூக நல்லிணக்கத்தைக் குலைக்கும் வகையில் ஜாதி மோதல்கள் ஏதும் நிகழவில்லை. இதற்கெல்லாம் என்னுடைய அரசின் வழிகாட்டுதல்களின் கீழ், காவல்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பது தான் பொருள்.

சிறிய அளவிலான ஜாதிச் சச்சரவுகளை அவை தோன்றிய நிலையிலேயே எங்கள் அரசு திறந்த மனதோடு அணுகியதாலும் காவல்துறை அதற்கேற்ப எச்சரிக்கையோடு செயல்பட்டதாலும் அந்தச் சச்சரவுகள், தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு பரவாமல் தடுக்கப்பட்டிருக்கின்றன. அதன் விளைவாக பெரிய கலவரங்கள் ஏதும் நிகழாமல் தடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு, 4 ஆண்டுகளாக ஓடாமல் இருந்த சிவகங்கை மாவட்டம், கண்டதேவி கோவில் தேரோட்டம் அண்மையில் அமைதியான முறையில் நடைபெற்றது இந்த அரசின் குறிப்பாக காவல்துறையின் சாதனை ஆகும்.

**2001**–ஆம் ஆண்டு தமிழகத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களின் போதும், தமிழகத்தில் கடந்த ஆண்டில் ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகளின் போதும், பரபரப்பாக நடந்து முடிந்த நான்கு இடைத்தேர்தல்களின் போதும் அமைதி காக்க அரும்பணி ஆற்றிய காவல் துறையை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.



சிறுசிறு சம்பவங்கள் கட்சி வேறுபாடின்றி எல்லோருடைய ஆட்சிக் காலத்திலும் நிகழ்ந்துள்ளன. அவற்றை வைத்து தமிழகத்தின் ஒட்டுமொத்த சட்டம் – ஒழுங்கு நிலையை நிர்ணயித்து விட முடியாது. அந்த சம்பவங்களை கையாளுகின்ற அரசின் வழிகாட்டுதல்கள் எப்படிபட்டவையாக உள்ளன என்பதையும் அவற்றை ஏற்று காவல்துறை எப்படி செயல்படுகிறது என்பதையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அந்த வகையில் என்னுடைய வழிகாட்டுதலின் பேரில் தமிழக காவல்துறை சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. அதற்கு வேறு எங்கும் சாட்சியம் தேடி செல்ல வேண்டிய அவசியமில்லை. உலக வங்கி Cornel University, ABN Amro Bank, Standard Chartered Bank உட்பட வெளிநாட்டு நிதி தொழில்நுட்ப மற்றும் அறிவியல் நிறுவனங்களும், தனியார் துறை அமைப்புகளும், அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழ்நாட்டை நோக்கி வந்த வண்ணம் உள்ளதே இதற்கு சரியான சான்று. இது நமக்கெல்லாம் பெருமை தரும் ஒரு விஷயமாகும்.

ஆறரைக் கோடி மக்கள் வாழும் இந்த மாநிலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழும் கொலை கொள்ளைகளைப் பட்டியலிட்டு ஒட்டுமொத்த சட்டம் ஒழுங்கே சீர்குலைந்து விட்டது என்று குறை கூறிக் கொண்டிருக்கின்றனர் ஒரு சிலர். ஆனால் அந்தக் குற்றங்களை முனைப்போடு கண்டுபிடித்த குற்றவாளிகளுக்கு நீதிமன்றத்தில் தண்டனை வாங்கி கொடுக்கும் காவல் துறையின் பணியை, அத்தகையோர் மறுபக்கம் இருட்டடிப்பு செய்து விடுகின்றனர். ஏனென்றால் அவர்கள் இந்த கொலை கொள்ளைகளை வைத்து தான் அரசியல் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளார்கள். அவர்களைப் பற்றி யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ள தேவையில்லை. ஏனென்றால் ஏற்கெனவே அவர்கள் மக்களிடையே செல்வாக்கு இழந்து கடைநிலைக்கு ஒதுக்கி தள்ளப்பட்டு விட்டார்கள். இனி அவர்களை அப்படியே விட்டுவிட வேண்டியதுதான்.

நமது கவனம் முழுவதும் இப்போது தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டியதன் அவசியத்தின் பால் திரும்பியுள்ளது. அதற்கு அமைதி நிலவும் தமிழகம் ஓர் அத்தியாவசியத் தேவை. முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு இந்தியாவில் பயங்கரவாதமும் தீவிரவாதமும் தலைதூக்கியுள்ளன. ஆனால் கடைக்கோடியில் இருக்கும் தமிழகத்தின் குரல் எப்போதும், இந்தியாவின் சுதந்திரத்திற்காகவும் இறையாண்மைக்காகவும், உரக்க ஒலித்துக் கொண்டே இருக்கும், இந்தக் குரலில் சில நேரங்களில் தொய்வு

ஏற்பட்ட துண்டு, ஆனால் அது நிரந்தரமல்ல என்று மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு உள்ளது. 2002 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீவிரவாத தடுப்புச் சட்டத்திற்கு எங்கள் உறுதியான ஆதரவை தெரிவித்தோம். தமிழ்நாட்டில் இருந்து இயங்கி வந்த தீவிரவாத அமைப்புகளுக்கு தடை போடுமாறு மத்திய அரசை வற்புறுத்தி அதில் வெற்றியும் பெற்றுள்ளோம். பன்னாட்டு குற்றவாளிகள் தமிழ்நாட்டில் காலடி வைக்கும் போது அவர்களை கைது செய்ய உதவி புரிந்துள்ளோம். தீவிரவாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விரைவாக நடத்திட தக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இப்படி தமிழகம் முழுமையும் ஏன், இந்தியா முழுமையும் அமைதி நிலவி செழுமை பொங்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். என்னுடைய இந்த முயற்சிகளுக்கு உறுதுணையாக தமிழக காவல்துறை செயலாற்றி வருகிறது என்பதை நான் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.



தமிழக காவல்துறை காலத்தின் மாறுதல்களுக்கேற்ப தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. மகளிருக்கு எதிரான குற்றங்களை முற்றிலும் களைய நான் தொடங்கி வைத்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தமிழகத்திலுள்ள 188 காவல் துறை உட்கோட்டங்களிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. Childline, Helpline போன்ற கட்டணமில்லா தொலைபேசி வசதிகள் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களையும், சிறார்களுக்கு எதிரான குற்றங்களையும் களைந்து வருகின்றன.

காவல்துறை அலுவலர்கள் மற்றும் காவலர்கள் இடையே பாலின நேர்மை நெறி பயிற்சி வழங்குவதற்காக, Gender Sensitization வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மகளிர் காவலர்கள் தமிழகத்திலுள்ள 1218 காவல் நிலையங்களிலும் பணியாற்ற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக, மகளிர் காவல் துறையின் பணி செம்மையாக இருக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நான் எடுத்து வருகிறேன்.

மேலும், தமிழக காவல் துறையை நவீனப்படுத்துவதில் எனது அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. காவல்துறை பணியாளர்களின் திறமைகளை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல் உள்கட்டமைப்பு வசதிகளை பெருக்குவதும் மிக முக்கியமான பணி என்று நான் கருதுகிறேன். கட்டடங்கள், வீட்டுவசதி, வாகனங்கள், ஆயுதங்கள், தொலை தொடர்பு கருவிகள், கணினிமயமாக்குதல், தடய அறிவியல் துறை மற்றும் விரல் ரேகைப் பிரிவு ஆகியவற்றின் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கு மத்திய அரசின் நிதியைப் பெற்று, பல்வேறு திட்டங்களை நாங்கள் 244.82 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவேற்றி வருகிறோம்.

பல்வேறு இடர்பாடுகளுக்கு இடையே பணியாற்றி வருகின்ற காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை, சிறைத்துறை ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் நலனைப் பேணுவது ஓர் அரசின் முக்கிய கடமை என்றே நான் கருதுகின்றேன்.

எனது தலைமையிலான அரசு தமிழகத்தில் பதவியேற்ற பின்னர், காவலர்களின் பல்வேறு குறைகள் களையப்பட்டுள்ளன. விரைவான முறையான பணி உயர்வு, சலுகைகள், மருத்துவ வசதி, வீட்டு வசதி எனப் பலப் பல காவலர் நலம் நாடும் நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து உள்ளோம். செயலற்றுப் போன தமிழ் நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தை மீண்டும் இயங்கச் செய்து காவலர்களுக்கான வீட்டுவசதிகள் பெருமளவில் உருவாக்கப்பட்டு வருகின்றன. Police Housing Satisfaction தமிழ்நாட்டை பொறுத்தவரை ரூ.39. அதுவே அகில இந்திய அளவில் ரூ.31 மட்டுமே. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் தற்போது கட்டி வரும் காவலர் மற்றும்



தலைமைக் காவலர்களுக்கான குடியிருப்புகளில் உள்ள கட்டடப் பரப்பு 450 சதுர அடி மட்டுமே ஆகும். இவற்றின் பரப்பளவை ஓரளவிற்கு அதிகரித்தால் அங்கு வசிக்கின்ற காவலர்களின் குடும்பத்தினருக்கு மிகுந்த வசதியாக இருக்கும் என்று கருதி இனிமேல் கட்ட இருக்கும் காவலர் மற்றும் தலைமைக் காவலர்களுக்கான குடியிருப்புகளின் கட்டடப் பரப்பை தற்போது உள்ள 450 சதுர அடியிலிருந்து 550 சதுர அடியாக உயர்த்திக் கட்ட ஆணையிட்டுள்ளேன். இதற்காக 2002–2003–ஆம் நிதி ஆண்டில் கட்டப்பட உள்ள அனைத்து வீடுகளும் கூடுதல் பரப்பளவில் அமையும். இதனால் வீடு ஒன்றிற்கு 55,750 ரூபாய் வீதம் மொத்தம் 16.72 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



Police Hospital–களின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. Tamil Nadu Police Benevolent Fund தமிழ்நாடு காவலர் நல நிதிக்கு வழங்கப்படும் ஆண்டு மானியம் 25 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 2002–2003–ஆம் ஆண்டில் கூடுதலாக 1056 ஊர் காவலர் பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதிகரித்து வருகின்ற அன்றாட செலவை கருத்தில் கொண்டு காவல்துறை பணியாளர்களுக்கு வழங்கப்படும் Extra Time Remuneration மிகை நேர பணி ஊதியம் தற்போதுள்ள 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டுள்ளேன். இந்த உயர்வினால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு 20.13 கோடி ரூபாய் செலவு பிடிக்கும். காவல்துறை பணியாளர்களுக்கு அளிக்கப்படும் மிகை நேர ஊதிய உயர்வு சிறைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை பணியாளர்களுக்கும் பொருந்தும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், சென்னை மாநகரத்தில பணியாற்றும் காவல்துறை ஆய்வாளர்கள் மற்றும் சார் ஆய்வாளர்களுக்கான உணவுக் கட்டணம் – Diet Charges – உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளேன். இந்த ஆணை சென்னையில் பணியாற்றும் சிறைத்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை பணியாளர்களுக்கும் பொருந்துமாறு உத்திரவிட்டுள்ளேன்.

காவல்துறைக்கும் அதனைச் சார்ந்த மற்ற துறைகளுக்கும் வழங்கப்பட்ட ஒரு சில சலுகைகளைப் பற்றி மட்டும் இங்கே நான் குறிப்பிட்டுள்ளேன். காவலர் நலம் பேணும் புதிய திட்டங்களை எனது தலைமையிலான இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும் என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

காவல்துறையில் பணியாற்றுகின்ற அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோருடைய குறைகளை துறையின் அமைச்சர் என்ற முறையில் நானே நேரில் கேட்டறிந்து அவர்களுடைய குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விரும்பியுள்ளேன். இந்த மாதம் 26–ஆம் தேதி காவல்துறை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை ,சிறைத்துறை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை முதலிய துறைகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் எனது அறையில் என்னைச் சந்தித்து நேரடியாக மனுக்களை என்னிடம் வழங்கலாம் என்பதை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய இந்த முயற்சியினால் காவல் துறையில் வெகு நாட்களாக தீர்க்கப்படாமல் இருக்கின்ற தனிப்பட்ட குறைகளுக்கு வெகு விரைவில் தீர்வு காண முடியும் என்று நான் நம்புகிறேன்.

தமிழகத்தை என்றென்றும், அமைதி பூங்காவாக விளங்கச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு காவல்துறைக்கு உண்டு என்பதை நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளேன். அதே நேரத்தில் இந்தத் துறையில் உள்ள ஒரு சிலரின் செயல்பாடுகள் அரசுக்கு கெட்டப் பெயரை ஏற்படுத்துகின்றன என்பதையும் வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். காவல்நிலையங்களுக்கு புகார் கொடுக்க வரும் பொதுமக்களிடம் கண்ணியத்துடன் நடந்து கொள்ளுதல், எந்த சூழ்நிலையிலும் பொது



மக்களுக்கு உற்ற நண்பனாக விளங்குதல் குற்றங்களை விரைவாகக் கண்டு பிடித்து, பாதிக்கப்பட்ட பொது மக்களின் மனம் நோகாமல் அவர்களின் துயர் துடைத்தல் ஆகியவற்றை காவல்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் எப்போதும் தவறாது கடைபிடிக்க வேண்டும் என்பதை நான் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சிலர் செய்யும் தவறுகளால், காவல் துறையே சரியில்லை என்று சித்தரிக்கப்படுவதற்கு நீங்கள் ஒரு போதும் இடம் தரக் கூடாது. கடமைகளை சிறப்புற ஆற்றி பொதுமக்களுக்கு உற்ற நண்பனாக விளங்குவோம் என்று சூளுரைத்து செயல்பட, காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை, ஊர்காவல் படை ஆகியவற்றில் பணியாற்றும் உங்கள் அனைவரையும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

உலக நாடுகளில் உள்ள காவல் துறைகளில், இங்கிலாந்து நாட்டின் Scotland Yard -தான் உலகத்திலேயே சிறந்த காவல் துறை என்று பொதுவாக எல்லோரும் கூறுவார்கள். நம்முடைய தமிழகக் காவல்துறையும் அத்தகைய சிறப்பு வாய்ந்த Scotland Yard –க்கு நிகரானது என்று நான் அடிக்கடி கூறுவது உண்டு. அது உண்மை தான் என்பதை மீண்டும் நிரூபிக்கும் வண்ணம் நம்முடைய தமிழக காவல்துறையைச் சேர்ந்த இரண்டு இளம் அதிகாரிகள் இங்கிலாந்து நாட்டின் Queen's Award என்ற உயரிய விருதினை வென்று இருக்கிறார்கள்.

அதாவது,நவீன அறிவியல் உத்திகளைப் பயன்படுத்தி குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், தடய அறிவியல் துணையோடு குற்றங்களை நீதிமன்றங்களில் நிரூபணம் செய்வதிலும் இந்தியாவில் உள்ள ஏனைய காவல் அமைப்புகளைக் காட்டிலும் தமிழக காவல் துறை முதன்மை வகிக்கிறது என்பது நமக்கு எல்லாம் பெருமை தரும் செய்தியாகும். தமிழக காவல் துறையினரின் திறமைகளைப் பாராட்டி பதக்கம் வழங்கி சிறப்பு செய்வது நம்மோடு மட்டும் நின்றுவிடவில்லை. நவீன உத்திகளைப் பயன்படுத்தி காவல் துறையினருக்கு பயிற்சி அளிப்பது மற்றும்மேம்படுத்துவது ஆகியவற்றிற்காக அறிவிக்கப்பட்ட `Queen's Award'–க்கு 'இங்கிலாந்து ராணி விருதுக்கு', தமிழக காவல் துறையைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் IG – திரு கே.ராதாகிருஷ்ணன் மற்றும் DIG – திரு.பிரதீப் வி. பிலிப் ஆகியோர் இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது நமக்கெல்லாம் பெருமை தரும் செய்தியாகும். வெளிநாட்டவரும் நம்முடைய காவல்துறையினரின் பெருமைகளை அறிந்து விருது வழங்கியிருப்பதைக் கண்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

பதக்கங்கள் பெற்றவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவிப்பதோடு, காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை, ஆகியவற்றில் பணிபுரிவோர் அனைவரும் வருகின்ற ஆண்டுகளில் பதக்கம் பெறும் அளவிற்கு சிறப்பாக பணியாற்ற வேண்டும்.



# புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ள திட்டங்களில் கிராமப் புறங்களில் புதிய தொழில் உத்வேகத்தை அளிக்கக் கூடியதுமான ''ஒரு ஒன்றியத்திற்கு குறைந்தபட்சம் ஒரு தொழில்'' என்ற வகையில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் தொழில் முனைவோர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன. அதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு இந்தத் திட்டம் பற்றிய அறிவிப்பு நாளிதழ்களில் வெளியிடப் பட்டுள்ளது.

கடந்த **9.3.2002** அன்று மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தமிழக சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையில் வேளாண்மை, தொழில் மற்றும் சேவைத் துறைகள் நவீனமயமாக்கப்படும் என்றும், நீடித்த திறன் வாய்ந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கவல்ல வேளாண் தொழிற் பிரிவு, இம்மாநிலத்தில் உள்ள **385** வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றாவது, குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் ஏற்படுத்தப்படும் என்றும் அறிவித்திருந்தார்.

**2002–2003** ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தமிழக சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட போதும், இம்மாநிலத்தின் வேளாண் அடிப்படை யிலான ஊரகத் தொழில் களுக்குத் தனி முக்கியத்துவம் அளிக்கும் நோக்குடன் தற்போதுள்ள அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை மாற்றியமைக்க அரசின் முடிவு அறிவிக்கப்பட்டது.

இதற்கான நடைமுறைகள் உருவாக்கப்பட்டு,'' புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'' என்ற பெயரைத் தாங்கி இந்த திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் வேளாண் சார்ந்த தொழில் அமைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விண்ணப்பிக்கும் தொழில் முனைவோர்கள் ஒரு வளர்ச்சி வட்டாரத்தில் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் தனியாக தொழில் தொடங்கலாம், அல்லது அதிகபட்சமாக மூன்று தொழில் முனைவோர்கள் தனித்தனியாக அவர்களின் மொத்த முதலீடு ஒரு கோடி ரூபாய் இருக்குமாறும் இந்தத் திட்டத்தின் கீழ் தொழில்களைத் தொடங்கலாம்.

இந்த புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்படவிருக்கும் சிறப்பு ஊக்குவிப்புச் சலுகைகள் பின்வருமாறு:–

★ சிறப்பு முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ், ஒரு ஒன்றியத்திற்கு முதலீட்டில் 15 சதவிகிதம் என்ற அளவில் ரூ.15 இலட்சம் வரை மானியம் **385** ஒன்றியங்களுக்கும் அளிக்கப்படும்.

★ இந்த திட்டத்தின் கீழ் புதிய தொழில் தொடங்குவோர் உற்பத்தி தொடங்கியது முதலோ, அல்லது மின் இணைப்பு கொடுத்த நாளிலிருந்தோ அல்லது இவற்றில் எது முன்னரோ அன்றைய தினத்திலிருந்து மூன்றாண்டுகளுக்கு முறையே **30** சதவிகிதம், **20** சதவிகிதம் ,**10** சதவிகிதம் என்ற அளவில் குறைந்த மின் கட்டண மானியம் (Low Power Tariff Subsidy) பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

★ மின் ஆக்கியின் விலையில் 15 சதவீதம் என்ற அளவில் ரூ.5 இலட்சம் வரை மின் ஆக்கி

தமிழக முதலமைச்சர் அவர்கள்
அறிவித்துள்ள
"புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்"
கிராமப் பகுதிகளில் புதிய தொழில்
உத்வேகத்தை அளிக்கும் வகையில்,
"ஒரு ஒன்றியத்திற்கு குறைந்தபட்சம்
ஒரு தொழில்"
என்ற உயரிய நோக்கத்துடன்
உருவாக்கப்பட்டுள்ள திட்டமாகும்.

மானியம் (Generator Subsidy) தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்படும்.

★ 50 சதவிகிதத்திற்கு மேல் பெண்களை வேலைக்கு அமர்த்தும் தொழிற்சாலைகளுக்கு கூடுதல் முதலீட்டு மானியமாக 5 சதவிகிதம் என்ற அளவில் ரூ.5 இலட்சம் வரை வழங்கப்படும்.

★ பிரதான வட்டி விதம் (Prime Lending Rate) – 4 சதவிகிதம் என்ற வட்டி விதத்தில் கடன் பெற தொழில் முனைவோர்கள் தகுதியுடையவர்கள் ஆவர். (தற்போதைய பிரதான வட்டி விகிதம் 11.25 சதவிகிதம் ஆகும்)

★ இந்தத் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க முன்வருவோர், மின் இணைப்பில் முன்னுரிமை, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT), தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO), அரசு/கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் நிலம்/தொழிற்கூடம் ஒதுக்கீடு செய்வதில் முன்னுரிமை பெற தகுதி உடையவர்கள் ஆவர்.

★ இந்திய அரசு நிறுவனங்களில் ஈடுசெய்யப்படக் கூடிய (Government of India Agencies)தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் அனுமதி அளிக்கப்படும் உற்பத்தி பொருள்களுக்கான வணிக வளர்ச்சி உதவிகள் வழங்கப்படும் (ரூபாய் 25 இலட்சம் என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டு 50 சதவிகிதம் வரை சந்தைப்படுத்த ஆகும் செலவு)

★ விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், நிபுணரின் ஆலோசனை பெறுதல் முதலியவற்றிற்காக ஆகும் செலவில் ரூ.1 இலட்சம் என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு கடன் தொகையில் 1 சதவிகிதம் தொழில் முனைவோர்களுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் வழங்கப்படும்.

★ இந்த திட்டத்தின் கீழ் சிறப்புச் சலுகைகளை பயன்படுத்திக் கொள்ள முன் வரும் தொழில் முனைவோர்களுக்கு மானியம் மற்றும் ஊக்கத் தொகைகளை வழங்குவதில் மற்ற திட்டங்களை காட்டிலும் முன்னுரிமை வழங்கப்படும்.

★ உணவு சம்பந்தப்பட்ட தொழில்களுக்காக ரூ.25 இலட்சம் உச்ச வரம்பிற்கு உட்பட்டு அசையா உடைமைகளில் (Fixed Assets) 20 சதவிகிதம் என்ற அளவிலும், ரூ.50 இலட்சம் உச்ச வரம்பிற்கு உட்பட்டு அசையா உடைமைகளில் (Fixed Assets) 25 சதவிகிதம் என்ற அளவிலும் மத்திய அரசு வழங்கும் மானியத்தை பயன்படுத்தும் வகையில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மலர் வளர்ப்பு தோட்டங்களை (Floriculture Units) அமைக்க குறுகிய கால மானியத்துடன் கூடிய கடன் (Subsidy bridge loan) வழங்கப்படும்.



★ மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஒன்றியங்களில் தொழில் துவங்கப்படும் இடத்திற்கு தண்ணீர் செல்வதற்கான வழி, சாலைகள் மற்றும் மின் இணைப்பு ஆகிய கட்டமைப்பு வசதிகளை முறையான திட்ட வேலைகளின் (Regular Plan Schemes) கீழ் உறுதி செய்து தருவார்கள்.

தொழில் முனைவோர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்டுள்ள குழுவினால் பரிசீலிக்கப்பட்டு, ஊக்குவிப்புச் சலுகைகள் வழங்கப்பட்டு தொழில் தொடங்க உடனடியாக அனுமதி வழங்கப்படும். இந்த மாவட்ட அளவிலான குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர்,ஒருங்கிணைப்பு அலுவலராகப் பணியாற்றுவார்.

மாவட்டங்களில் அமைக்கப்படும் இந்த குழுக்கள்,

1. அந்தந்த மாவட்டங்களில் உள்ள பல்வேறு வளர்ச்சி வட்டாரங்களில் எந்தெந்த வேளாண் சார் தொழில்களை ஊக்குவிக்க முடியும் என்பதை கண்டறியும்.

2. தொழில் முனைவோருக்கு வழி நடத்தும் உதவியை வழங்குவதுடன், திட்ட அறிக்கை தயார் செய்யவும், உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு சந்தை பற்றிய ஆய்வை மேற்கொள்ளவும், திட்டத்திற்கு தேவைப்படும் நிதியைப் பெறுவதற்கும், இந்தக் குழுக்கள் உதவி செய்யும்.

3. எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் இந்த திட்டத்துடன் தரிசு நில மேம்பாடு திட்டமும் இணைக்கப்பட்டு ஒப்பந்த முறையில் வேளாண்மை தொழில் நடைபெறுவதற்கு வழி வகை செய்யப்படும்.

4. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் ஆதரவில் இயங்கும் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்விற்கான மையம் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் வாய்ப்பு இருப்பதாக தெரிவு செய்துள்ள வேளாண் சார் தொழில்களைத் தொடங்க இந்த மாவட்டக் குழுக்கள் ஊக்குவிக்கும். அதேபோன்று தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மாவட்ட தொழில் மையம், மாவட்ட அளவிலான சிறுதொழில் மேம்பாட்டு சங்கம், மாநில அளவிலான சிறுதொழில் சங்கங்கள், இந்திய அரசின் சிறுதொழில் சேவை நிலையம் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள், அந்தந்த வட்டாரங்களில் தெரிவு செய்துள்ள வேளாண் சார் தொழில்களை தொடங்க இந்த மாவட்டக் குழுக்கள் முயற்சி எடுக்கும். ★

# ரூபாய் 18 கோடியில் தூத்துக்குடி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்

தூத்துக்குடி என்றால் முத்துக்குளிப்பது தான் நினைவில் வரும். தூத்துக்குடியில் முத்துக்குளிப்பது தொழில். முத்து வணிகம் சிறப்புற நடைபெற்ற நகரம். இங்கு பழைய துறைமுகம் உண்டு. மீன்பிடிக்கும் தொழில் இங்கு பிரதான தொழில். தூத்துக்குடி நகரில் சுற்று வட்டாரங்களில் உப்பளங்கள் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் இங்கு வாழும் மக்களின் பிரதான தொழில்



மீன்பிடிப்பது, உப்பளங்களில் வேலை செய்வது. இம்மக்களின் பிரதான உணவு மீனாகும்.

**தொழில் வளம் :**

அரசின் நிறுவனமாக, அனல் மின்சார நிலையம், தமிழ்நாடு அல்காலிக் நிறுவனம், ஸ்பிக் உரத்தொழிற்சாலை, கனநீர் உற்பத்தி நிறுவனம், ஸ்டெர்லைட் காப்பர் போன்ற தனியார் நிறுவனங்களும், இத்தொழில்களுக்கு துணைத் தொழில்களாக உருவாகி உள்ள ஏராளமான உபதொழில்கள். இவற்றில் வேலைத் தேடி, வெளியூர்களிலிருந்து வந்து குடியேறி உள்ள மக்கள் ஆக தூத்துக்குடி மக்கள் தொகை அதிகரிப்பின் காரணமாக குடிநீர் தேவை அதிகரித்துள்ளது. இதை கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தூத்துக்குடி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தை 1991-1996-ஆம் ஆண்டுகளில் உருவாக்க முடிவு எடுத்தார்கள்.

**மக்கள் பெருக்கமும், குடிநீர் பற்றாக்குறையும் :**

மக்களின் குடிநீர்த் தேவையை தீர்க்கும் பணியில் தூத்துக்குடி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடாக ரூ.18 கோடி தொழில் நுட்ப அங்கீகாரம் பெற்று 3வது குடிநீர்க் குழாய் அமைக்கும் பணி தற்போது வேகமாக நடைபெற்று வருகிறது. 2002 ஆகஸ்ட் இறுதிக்குள் இத்திட்டம் செயல்பட துவங்கும்.

**தலைமை நீர் சேகரிப்பு மையம் :**

வல்லநாடு அருகே தாமிரபரணி ஆற்றில் அமைந்துள்ள இரண்டு நீர் உறிஞ்சும் கிணறுகளில்

இருந்தும் மற்றும் புதிதாக அமைக்கபபடவுள்ள நீர் சேகரிக்கும் கிணறு ஆக மூன்று இடங்களிலிருந்து தகுந்த மின் இறைப்பான் மூலம் நீர் 3230 மீட்டர் நீளமுள்ள 700 மி.மீ. அளவு இணைக்குழாய் மூலம் ஆற்றின் கரையில் அமையப் பெற உள்ள 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவு நீர் சேகரிக்கும் தரைமட்ட தொட்டியில் சேகரிக்கப்பட உள்ளது.



தன்னோட்டக் குழாய் :

இங்கிருந்து 28620 மீட்டர் நீளம் கொண்ட இரு தன்னோட்ட குழாய்கள் மூலம் தூத்துக்குடி நகரின் மையப் பகுதியிலுள்ள இராஜாஜி பூங்கா அடைகிறது.

**நீர் உந்து நிலையம் :**

இராஜாஜி பூங்காவில் ஏற்கெனவே 2 மின் இறைப்பான்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும், புதிதாக 2 மின் இறைப்பான் அறைகள் அமையப் பெறவுள்ளது.

**புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் :**

1. மில்லர்புரம் பகுதி-1 இங்கு 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு நீர் தேங்கும் தொட்டியும்,
2. சுப்பையா பூங்கா பகுதி-3 இங்கு 20 இலட்சம் லிட்டர் கொள்ளளவு நீர் தேங்கும் தொட்டியும்,
3. குருஸ்புரம் பகுதி-4 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு நீர் தேங்கும் தொட்டியும்,
4. லெவஞ்சிபுரம் பகுதி-7 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு நீர் தேங்கும் தொட்டியும், புதிதாக அமைக்கப்பட்டு வருவதுடன் ஏற்கெனவே உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளையும் சேர்த்து, தூத்துக்குடி நகராட்சியில் 8 பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு தகுந்த மின் இறைப்பான் மூலம் நீர் உந்தப்பட்டு பழைய 117.879 கி.மீ. நீளம் கொண்ட குழாய்கள் மற்றும் புதியதாக போடப்பட உள்ள 29 கி.மீ. நீளம் கொண்ட குழாய்கள் மூலமும், குடிநீர் விநியோகம் செய்யப்பட உள்ளது.

குடிநீர் விநியோக திட்டப் பயன் :

நாள் ஒன்றுக்கு தற்போது 160 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப் படுகிறது. இத்திட்டம் செயல்படத் தொடங்கும் போது மேலும் கூடுதலாக 100 இலட்சம் லிட்டர் தண்ணீர் (கூடுதலாக 6000 புதிய குழாய் இணைப்பு மூலம்) விநியோகம் செய்யப்படும் பொழுது, அக மொத்தம் 260 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கிட வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 90 இலட்சம் குடிநீர் விநியோகம் வீட்டுக்குழாய் இணைப்புகள் மூலமும், நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 25 லிட்டர் குடிநீர் விநியோகம் பொதுக் குழாய்கள் மூலமும் வழங்கப்படும். இடைப்பட்ட 10 ஆண்டுகளுக்குப் பின்புள்ள மக்கள் தொகையாக 3,30,000க்கு நாளொன்றுக்கு 28.87 இலட்சம் லிட்டர் குடிநீரும், உச்சகட்ட மக்கள் தொகையான (2026-ஆம் ஆண்டில்) 4.50 இலட்சம் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 36.64 இலட்சம் லிட்டரும் வழங்குவதற்கு இத்திட்டத்தின் மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தூத்துக்குடி*

• • •



# ஈரோடு மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் செயல்பாடு பற்றிய பயனாளிகள் பேட்டி

ஈரோடு மாவட்டத்தில் அரசின் மக்கள் நல்வாழ்வுத் திட்டப் பணிகளும் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை மகளிர் சுய உதவிக்குழுக்கள் யாவும் போற்றும் வகையில் செயல்படுகின்றன. ஈரோடு மாவட்டத்தில் இதுவரை 4633 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் 66 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களின் கடந்த மூன்றாண்டு மொத்த சேமிப்பு ரூ.4.50 கோடியாகும். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு குழு உறுப்பினர் பயிற்சியும் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களில் 2316 குழுக்கள் கூட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டு, 983 குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் சுயமாக தொழில் தொடங்கி தங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் வகையில் 132 குழுக்களுக்கு வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் பவானி ஊராட்சி ஒன்றியம் கவுந்தப்பாடிபுதூரில் வங்கிக்கடன் பெற்று சுயமாக தொழில் தொடங்கி பயன் அடைந்து தற்போது கிராமப் பொருளாதாரத்தில் ஏற்றம் பெற்ற உதயம் மகளிர் சுய உதவிக் குழுவின் ஊக்குநர் திருமதி பி.ஆர்.பாக்கியலட்சுமி அவர்களை நேரில் சந்தித்த போது கூறியதாவது:

கடந்த இரண்டாண்டு களுக்கு முன்பாக பவானி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தெரிவித்த ஆலோசனையின் அடிப்படையில் தான் நாங்கள் உதயம் மகளிர் சுய உதவிக்குழுக்களை ஆரம்பித் தோம். இதில் 15 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். மகளிர் சுய உதவிக்குழு ஆரம்பிப்பதற்கு முன்பாக தினந்தோறும் கூலி வேலைக்கு சென்று வந்தோம். அப்போது எங்களுக்கு தினக்கூலியாக ரூ.20 மட்டுமே கிடைத்து வந்தது. ஆனால் தற்போது குழுவாக ஆரம்பித்து 15 உறுப்பினர்கள் ஒன்றாக கூடி ஒயர் கூடை பின்னுதல், கால் மிதியடி, டைனிங் டேபிள் மேட், டவல்,துண்டு, மகளிர் பர்ஸ், எம்ப்ராயிடிங், ஜன்னல் திரைச்சீலை தயாரிக்கப்பட்டு வருகிறது. எங்களுக்கு சுழல் நிதியாக அரசிடமிருந்து ரூ.25 ஆயிரம் வழங்கப்பட்டது. அதில் ஒவ்வொருவரும் ரூ.2000 பிரித்துக் கொண்டு அதன் மூலம் இந்த தொழில் செய்து வருகிறோம். வாரந்தோறும் வங்கியில் அசல் மற்றும் வட்டியை செலுத்தி வருகிறோம். இதன் காரணமாக எங்களுக்கு சுயமாகவும், சுதந்திரமாகவும் தொழில் செய்ய முடிகிறது.

எங்கள் குழுக்கள் செயல்பாடு பற்றி அறிந்தவுடன் எங்களுக்கு வங்கி கடன் வழங்க முன்வந்தது. இதன் அடிப்படையில் கவுந்தப்பாடி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் ரூ.2.40 இலட்சம் கடனாக பெறப்பட்டது. இதில் ரூ.1 இலட்சம் மான்யமாகும். மீதமுள்ள தொகையை நாங்கள் செய்யும் தொழில்கள் மூலம் கட்டி வருகிறோம். மேலும் நாங்கள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு வணிக வளாகத்தில் ஒரு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், விற்பனை மிகவும் எளிதாக உள்ளது.

நாங்கள் ஒரு குழுவாக சேர்ந்துசெயல்பட்டு வருவதால் தினந்தோறும் நபர் ஒருவருக்கு ரூ.60 கூலியாக கிடைக்கிறது. இதனால் எங்கள் பொருளாதார வாழ்க்கை மிகவும் ஏற்றம் பெற்றிருக்கிறது. மேலும் எங்கள் குழுவின்



மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு, டம்ளர் வாங்கிக் கொடுத்துள்ளோம். இப்பகுதியில் உள்ள மகளிர் மற்றும் குழந்தைகள் சுகாதார வளாகத்தை பராமரித்து வருகிறோம்.

ஏதும் அறியாது மற்றவர்களைச் சார்ந்து கூலிவேலை செய்து வறுமையில் வாடிய எங்களின் குடும்பத்தில் ஒளிவிளக்கு ஏற்றி வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

• • •

## வ.உ.சிக்கு மணி மண்டபம்

சுதந்திரப் போராட்ட தியாகியும், 'கப்பலோட்டிய தமிழன்' என்று அனைவராலும் போற்றப்படும் 'செக்கிழுத்த செம்மல்' மறைந்த திரு. வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு திருநெல்வேலி நகரில் மணிமண்டபம் ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தார். அதனடிப்படையில் தற்போது, திருநெல்வேலி நகரில் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களின் நினைவாக மணி மண்டபம் மற்றும் அவரது முழு உருவச் சிலையும் அமைப்பதற்காக 75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

மேலும், திருநெல்வேலி நகரில் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு மணி மண்டபம் மற்றும் முழு உருவச் சிலை ஆகியவற்றை அமைக்கும் பணி உடன் தொடங்கப்பட்டு, விரைந்து முடிக்கப் பெற வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் பொதுப் பணித்துறைக்கு உத்திரவிட்டுள்ளார்.




பாரம்பரிய பெருமை மிக்க விலையுயர்ந்த தரமிக்க
அசல் காஞ்சிபுரம் திருமணப்பட்டுச் சேலைகள்

காஞ்சிபுரத்தில், உத்திரவாதத்துடன்
சொசைட்டி சேலைகளுக்கு நிகராக,
ஒரிஜினல் வெள்ளி ஜரிகை அசல் பட்டுச் சேலைகள்
நம்பிக்கையுடன் வாங்க காஞ்சிபுரத்தில் மிகப்பெரிய
பட்டு சாம்ராஜ்யம்

காஞ்சிபுரம்

**S.M. சில்க்ஸ்**

146, காந்தி ரோடு, ஹோட்டல் சரவண பவன் அருகில்,
காஞ்சிபுரம் ☎ 04112–226586, 227686

தி.நகர் : 10, நாகேஸ்வரன் சாலை, பனகல் பார்க் ☎ 4346190
வண்ணாரபேட்டை : 103, ஜி.ஏ.ரோடு, டெலிபோன் எக்ஸ்சேன்ஜ் எதிரில் ☎ 5980151
புரசைவாக்கம் : பிரின்ஸ் டவர்ஸ், 94, புரசைவாக்கம் நெடுஞ்சாலை ☎ 6433145
ஈரோடு : சுப்ரீம் டவர் உட்புறம், முனிசிபல் பார்கிங் எதிரில் ☎ 0424–222659

ஞாயிறும் விற்பனை உண்டு
அனைத்து மேஜர் கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.




# கன்னியாகுமரி
## — சுற்றுலா மேம்பாடு


பாரதத் திருநாட்டின் தென் கோடியில், முக்கடலும், சங்கமிக்கும் புண்ணியஸ் தலம் கன்னியாகுமரி, அரபிக்கடல், வங்காள விரிகுடா, இந்து மகா சமுத்திரம் ஆகிய மூன்று கடல்களும் சங்கமித்த, நீலத்திரைகடல் ஒரத்திலே நித்தம் தவம் செய்யும் குமரி அன்னையின் திருப்பெயரால் அமைந்த 'கன்னியாகுமரி' நம் நாட்டவர் மட்டுமின்றி அயல் நாட்டவரையும் கவர்ந்திழுக்கும் சுற்றுலா ஸ்தலம் ஆகும்.

குமரித்துறையில் தவக்கோலத்தில் நின்று அருள் பாலிக்கும் குமரி அம்மனின் திருக்கோயில் மட்டுமன்றி வீரத்துறவிகளின் நினைவாலயங்களும், பெருந் தலைவர்களின் நினைவு மண்டபங்களும் இடம் பெற்றுள்ளன. ஆன்மீகப் பணியாற்றிய "ஆதிசங்கரர்" அனைவர் வணங்கும் தெய்வமாக நிலைத்து நிற்கிறார். சிகாகோ அனைத்துலக சமய மாநாட்டில் கலந்து கொண்ட ஞானி, வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் – முக்கடலின் நடுவே கலை நயமிக்க மண்டபத்துடன் காட்சித்தருகிறது. சுவாமி விவேகானந்தர் மண்டபத்தில் உள்ள தியான மண்டபம், உலக புகழ் பெற்றது. கடல் நடுவே அமைந்துள்ள இம்மண்டபத்திற்கு சென்றுவர அரசு நிறுவனமாக பூம்புகார் நிறுவனம் படகு வசதி செய்துள்ளது.

தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு 133 அடி உயர திருவுருவச்சிலை அரசால் நிறுவப்பட்டு தற்போது சுற்றுலாப் பயணிகள் சென்று பார்வையிட வசதி செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பாரத பிதா அண்ணல் காந்தியடிகளை போற்றி புகழும் வகையில் அண்ணல் காந்தியடிகளின் 'அஸ்தி கலசம்' வைக்கப்பட்ட இடத்தில் சமய நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் கலையம்சத்துடன் நினைவு மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் மையப் பகுதியின் மேல் பகுதியில் உள்ள அஸ்தி துவாரம் வழியாக அஸ்தி மண்டபத்தில் (அக்டோபர் 2–ஆம் நாள்) காந்தி ஜெயந்தி அன்று நண்பகல் 12 மணிக்கு சூரிய ஒளி நேராக விழுமாறு கட்டட கலை நுணுக்கத்துடன் கட்டப்பட்டுள்ளது. காந்திமண்டபத்தின் அருகே பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் அரசால் நிறுவப்பட்டுள்ளது.


குமரிக் கடலில் நீராடினால் புண்ணியம் கிடைக்கும் என குமரிக்கு வரும் யாத்ரீகர்களும், கன்னியாகுமரியின் கடலழகுடன் ஆதவன் எழும் காட்சியையும், மறையும் காட்சியையும் கண்டு களிக்க வரும் சுற்றுலாப் பயணிகளும் நாள்தோறும் பல்லாயிரக் கணக்கில் வந்து செல்கின்றனர். சுற்றுலாப் பயணிகளின் பொழுது போக்கிற்காக தமிழ் அன்னை பூங்கா கன்னியாகுமரி பேரூராட்சி சார்பில் ரூ.25 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரியில் பயணிகளுக்கு வசதிகளை அளித்திடும் வகையில் மத்திய மாநில அரசுகள் இணைந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. பார்வையாளர்கள் ஆதவன் உதயம், ஆதவன் மறைவு மற்றும் நினைவகங்களை ஒருசேர பார்ப்பதற்கு ஏதுவாக மத்திய அரசு நிதியுதவியுடன் ரூ.38 இலட்சத்தில் காட்சிக் கோபுரப் பணிகள்



நிறைவடைந்துள்ளன. இந்த காட்சி கோபுரத்தில் ஒரே நேரத்தில் 1000 சுற்றுலாப் பயணிகள் அமர இயலும். சுற்றுலா வாகனம் நிறுத்துமிடம் நவீன வசதிகளுடன் ரூ.1 கோடியில் கட்டும் பணியும், குடிநீர் பற்றாக் குறையை தீர்க்க ரூ.30 இலட்சத்தில் குடிநீர் வசதி செய்யும் பணி, சுற்றுலா வரவேற்பு மையம் ரூ.60 இலட்சத்தில் கட்டும் பணி, ரூ.30 இலட்சத்தில் மின் கேபிள் வசதி செய்யும் பணி மத்திய மாநில அரசுகளால் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கன்னியாகுமரியில் காந்திமண்டபம் முதல் நீச்சல் குளம் வரை நடைபாதை அமைக்கும் திட்டம் ரூ.50 இலட்சத்தில் முடிக்கப் பட்டுள்ளது.





கன்னியாகுமரியில் நடைபெற்று வரும் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப. அவர்கள்,

பாரத நாட்டின் புண்ணியத் தலமாக விளங்கும் கன்னியாகுமரி, சிறந்த சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது. இங்கு வருடத்திற்கு சுமார் 36 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். சுமார் 14 இலட்சம் பயணிகள் 24 மணி நேரத்திற்கு மேல் தங்கி செல்கின்றனர். வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்து தர வேண்டும் என்ற அடிப்படையில் மத்திய மாநில அரசுகள் இணைந்து சுமார் 3.5 கோடி ரூபாய் அளவிலான சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இவை தவிர மாவட்ட நிர்வாகமும், பேரூராட்சியும் பல்வேறு அழகுபடுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. திருவள்ளுவர் சிலை, விவேகானந்தர் மண்டபம் ஆகியவற்றின் அழகை கடற்கரையில் அமர்ந்து கண்டு களிக்க ரூ.5 இலட்சத்தில் பார்வையாளர் மாடம் கட்டும் பணி மற்றும் உருக்குலைந்து போன கடற்கரை தடுப்பு சுவர் புதுப்பித்து டைல்ஸ் பதிக்கும் பணியும், ரூ.3.5 இலட்சத்தில் சுற்றுலாப் பயணிகள் குளிக்கும் 2 இடங்களில் துரு பிடிக்காத ஸ்டீல் கம்பிகளாலான தடுப்பு வேலி அமைக்கும் பணியும், சுற்றுலாப் பயணிகள் அமர்ந்து கடலழகை கண்டு களிக்க கடற்கரையை சீரமைத்து புல்தரை அமைத்து அழகுபடுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ.5 இலட்சத்தில் அலங்கார நீரூற்றும் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ரூ.20 இலட்சத்தில் சூரியன் மறைவதை கண்டு களிக்கும் 'மணல் தேரி'யில் கலை நயத்துடன் குடில்கள், சாய்வு இருக்கைகள், பாதை வசதி மற்றும் அழகுபடுத்தும் பணிகளும்,கிராம தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ.5 இலட்சத்தில் தோரண நுழைவு வாயில் கட்டும் பணியும் நடவடிக்கையில் உள்ளது என கூறினார்.

கன்னியாகுமரி பேரூராட்சித் தலைவர் திரு.குமரி ஸ்டீபன் அவர்கள் குமரிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தும் திட்டங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சுற்றுலாப் பயணிகள் வரும் வாகனங்களின் நுழைவு கட்டணமாக மட்டும் பேரூராட்சிக்கு 25 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. சுற்றுலாப் பயணிகளின் வசதியை அதிகரிக்கும் வகையில் மத்திய மாநில நிதியுதவி் பெற்று 25 இலட்சம் ரூபாய் செலவில் பூங்கா, 75 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வணிக வளாகம் கட்டும் பணிகளை செய்ய பேரூராட்சி திட்டமிட்டுள்ளது என கூறினார்.

கன்னியாகுமரியின் பெருமைக்கு மெருகூட்டும் வகையில் அரசு சார்பில் 1994-ஆம் ஆண்டு முதலாவதாக 'கன்னியாகுமரி விழா' எடுத்து பெருமை சேர்த்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்*
*கன்னியாகுமரி மாவட்டம்.*

# வறட்சி நிலைமையை சமாளிக்க அவசர காலத் திட்டம்

## முதலமைச்சர் அறிவிப்பு

தமிழகத்தில் தென்மேற்குப் பருவ மழை பொய்த்துப் போனதை அடுத்து ஏற்பட்டுள்ள வறட்சியான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, மாவட்டங்களில் நிலவும் குடிநீர் பிரச்சினையை சமாளிப்பது, விவசாயப் பணிகள் இல்லாமல் போனதால் மாற்று வேலைகளை மேற்கொள்வது, கால்நடைகளை பாதுகாப்பது ஆகியவை குறித்து விரிவாக ஆலோசனை நடத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தப்படும் என்று 29-7-2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்.

ஏற்கெனவே 2002-2003 ஆம் ஆண்டில் தமிழகத்தில் வறட்சி நிலைமையை சமாளிக்க ரூ.113.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில், வறட்சி நிவாரணத்திற்கென்று ரூ.47.9 கோடியும், புயலால் பாதிக்கப்பட்ட சாலைகளை சீரமைக்க ரூ.3 கோடியும், தூர் வாரும் பணிகளுக்காக ரூ.5 கோடியும், ஆக மொத்தம் ரூ.55.9 கோடி தமிழக அரசு விடுவித்துள்ளது. மேலும், அண்மையில் புது டெல்லியில் பல்வேறு மாநிலங்களில் நிலவும் வறட்சி நிலைமையை சமாளிப்பதற்காக மத்திய அரசு கூட்டிய கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழக வருவாய்த் துறை மற்றும் தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர்கள் தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ.300 கோடியை தமிழகத்திற்கு உடனடியாக வழங்க வேண்டும் என்றும், வேலைக்கு உணவு அளிக்கும் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் டன் அரிசியை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு இலவசமாக விநியோகம் செய்ய வேண்டும் என்றும், குடிநீர் தட்டுப்பாடு நிலவும் இடங்களுக்கு ரயில் மூலம் தண்ணீர் எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்படும் ரயில் கட்டணத்தில் சலுகை வழங்க வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு தமிழக அரசின் சார்பாக கோரிக்கை விடுத்தனர்.





ஏற்கெனவே வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ.55.9 கோடி விடுவிக்கப்பட்டது போக, தற்போது இயற்கை இன்னல் துயர் துடைப்பு நிதியில் ரூ.75 கோடி மாநில அரசின் வசம் உள்ளது. எனவே, தமிழகத்தில் நிலவும் வறட்சி சூழ்நிலையை சமாளிக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருந்தார்.

30.7.2002 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கூட்டத்தில் உரையாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தம்முடைய மாவட்டங்களில் உள்ள குடிநீர் பிரச்சனை, வேளாண் பயிர்களின் நிலைமை, கால்நடைப் பாதுகாப்பு பற்றிய நிலைமை முதலியவை குறித்து எடுத்துரைத்தார்கள். மழை பொய்த்ததன் காரணமாக விவசாயத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலைகள், வறட்சி நிவாரணப் பணிகள் முதலானவற்றிற்கு தேவைப்படும் நிதி குறித்து எடுத்துரைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் நடத்திய ஆலோசனைகளின் அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கீழ்க்கண்ட முடிவுகளை அறிவித்துள்ளார்.

1. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தொகுதியில் குடிநீர் வசதி செய்வதற்காக ரூ.15 இலட்சத்தை ஒதுக்கீடு செய்ய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் தமிழ்நாடு முழுவதும் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக கூடுதலாக ரூ.30 கோடி கிடைக்கும்.



மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கோரிய வறட்சி நிவாரணப் பணிகளுக்கென கூடுதலாக இயற்கை இன்னல் துயர்துடைப்பு நிதியிலிருந்து ரூ.20 கோடி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம் 6000 குடியிருப்பு பகுதிகளில் நீர் வள ஆதாரங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. தற்காலிக ஏற்பாடாக அந்த நீர் வள ஆதாரங்களில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் கைப்பம்புகள் பொருத்தி அந்தந்த பகுதிகளுக்கு குடிநீர் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின்படி, அடுத்த இரு வாரங்களில் 2000 குடியிருப்பு பகுதிகளில் கைப்பம்புகள் இயக்கப்பட்டு குடிநீர் வசதி ஏற்படும்.

தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நகர்ப்புறங்களில் கடுமையான குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளை கண்டறிந்து அதனை சமாளிக்க அவசரகால திட்டம் ஒன்றை உடனடியாக தயாரித்து அரசுக்கு சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப் பட்டுள்ளது.

எங்கெல்லாம் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறதோ அந்த இடங்களுக்கு உடனடியாக தண்ணீர் எடுத்துச் செல்லும் வகையில் போதுமான அளவு பெட்டகங்களை (Tanker) தயார் நிலையில் வைத்திருக்கும்படி தென்னக ரயில்வேயை கேட்டுக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறுவைப் பயிர் பாதிக்கப்பட்டுள்ள காவிரி டெல்டா பகுதி மாவட்டங்களில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் துயர்துடைப்புப் பணிகளுக்கான திட்டத்தைப் போலவே, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, திண்டுக்கல், கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் வேலைவாய்ப்பை இழந்துள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு பலன் அளிக்கும் வகையில், வேலைவாய்ப்புகளை உருவாக்க, மிகப் பெரிய வேலைவாய்ப்புத் திட்டத்தை செயல்படுத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் அடுத்த இரண்டு மாதங்களில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.53.33கோடியும், பிரதம மந்திரி கிராம சதக் போஜனா திட்டத்தின் கீழ் ரூ.18.6 கோடியும் ஆக மொத்தம் ரூ.71.93 கோடி செலவிடப்படும். மேலும்,கூடுதலாக ஒரு லட்சம் டன் உணவு தானியங்களை இலவசமாக விடுவிக்க வேண்டும் எனவும், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கூடுதலாக வேலைவாய்ப்புகளை உருவாக்கிட, அதற்குகூலி வழங்கிட ஏற்கெனவே கோரப்பட்டுள்ள ரூ.300 கோடிக்கு மேலாக ரூ.123 கோடி நிதி உதவி வழங்க வேண்டும் எனவும் மத்திய அரசை கோருவது எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்,கூடுதலாக ரூ.100 கோடி வழங்கவும், மத்திய அரசால் அமல்படுத்தப்படும் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கும் திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவும் மத்திய அரசை கேட்டுக் கொள்வதெனவும் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

8. கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் அவற்றை ஒட்டியுள்ள மாவட்டங்களில் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தென்னை மர விவசாயிகளுக்கு மரம் ஒன்றுக்கு ரூ.250 வீதம் நிவாரணம் அளிக்க தென்னை மேம்பாட்டு வாரியத்தை வலியுறுத்துவது எனவும் தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

9. சம்பா சாகுபடிக்கு முன்கூட்டியே தேவைப்படும் விதைகளை மானிய விலையில் வழங்கும் பொருட்டு, 2,255 மெட்ரிக் டன் நெல், 390 மெட்ரிக் டன் வேர்க்கடலை மற்றும் 40 மெட்ரிக் டன் இதர விதைகளை வேளாண்மைத் துறை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

10. தற்போது தமிழகத்தில் நிலவும் வறட்சி நிலைமை சீராகும் வரை கூட்டுறவுப் பயிர் கடன்களை விவசாயிகளிடமிருந்து திரும்ப வசூலிப்பது உடனடியாக தள்ளி வைக்கப்படும். கடன்மீதான வட்டி மற்றும் அபராத வட்டி வசூலிப்பதும் ஒத்தி வைக்கப்படும்.

11. சென்னை சேப்பாக்கம் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாடு அறை (Control Room) 24 மணி நேரமும் செயல்படுமாறு அமைக்குமாறும், மாவட்டங்களில் இருந்து வறட்சி நிலவரம் குறித்த அவசரத் தகவல்கள் உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டு, விரைவான நடவடிக்கை எடுக்குமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

12. தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும் இதே போன்று வறட்சி நிலவரம்குறித்து கண்காணிக்க சிறப்பு கட்டுப்பாட்டு அறை (Special Cell) அமைக்க வேண்டும் எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். இந்த சிறப்பு கட்டுப்பாட்டு அறையில் ஒரு ஒருங்கிணைப்பு அலுவலர் 24 மணி நேரமும் பணியில் இருந்து வறட்சி நிவாரணப் பணிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

பருவ மழை தவறியதை அடுத்து ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமையால் உருவாகியிருக்கும் பிரச்சினைகளை சமாளிக்க அவசர கால திட்டத்தினை ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் உருவாக்கி, அந்தந்த மாவட்டங்களில் செயல்படுத்த வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், மாவட்டங்களின் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள அரசுத் துறை செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். ❖

TNGST No.1640202/95-96
CST-No.64918/22-1-98

Area Code 0/8/3

**A.S. BABU SAH**

*(Aircondition Show Room)*

Silk Lace Cloth Manufacturers

**Old No.83-B, New No.36, Nadu Street, Sheikpet, (Opposite to Taluk Office), KANCHEEPURAM - 631 501.**

**☎ 222058 / 222891**

**- No Branches -**

**100% FIXED PRICE** ***Sunday Holiday***

**HOTEL BABOO SOORYA**

85, East Raja Street, Kancheepuram. Fax / Tel : 222555/222556

*Distance from Chennai - 70 kms.*

*Services : A/c. Restaurant*

*Thank you for your visit*

## உங்களுக்கு இடம் இல்லை

பென்சிலின் என்ற மருந்தைக் கண்டுபிடித்து எண்ணற்றவர்களுடைய உயிர்களைக் காப்பாற்றிய அலெக்ஸாண்டர் ஃப்ளெமிங் (Sir Alexander Fleming) பெல்ஃபாஸ்ட் (Belfast) என்னும் இடத்தில் சொற்பொழிவு செய்ய ஒத்துக் கொண்டார்.

சுகாதார இலாகாவைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் அவருடைய பேச்சைக் கேட்க விரும்பினார்கள். அவர்கள் லண்டனிலிருந்து பெல்ஃபாஸ்ட் செல்லும் விமானத்தில் உள்ள இருக்கைகள் அனைத்திற்கும் பணம் கட்டி முன் பதிவு செய்துகொண்டு விட்டார்கள்.

ஃப்ளெமிங் லண்டன் விமான நிலையத்திற்கு சென்று பெல்ஃபாஸ்ட் செல்லுவதற்கு பயணச் சீட்டு கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்.

விமான நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி, "ஃப்ளெமிங் என்பவருடைய பேச்சைக் கேட்க சுகாதார இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் அனைத்து டிக்கெட்டுகளையும் வாங்கி பதிவு செய்து கொண்டு விட்டார்கள். இடம் காலியில்லை" என்று கூறி விட்டார்.

*– பி.எஸ்.ஆர்.ராவ் எழுதிய 'பிரமிப்பூட்டும் அரிய தகவல்கள்' நூலிலிருந்து...*





## மலேசிய நாட்டு அமைச்சர் - முதலமைச்சர் சந்திப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 29.7.2002 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு மலேசிய நாட்டின் பணிகள் துறை அமைச்சர் திரு.டத்தோ ஸ்ரீ எஸ்.சாமிவேலு அவர்கள் தலைமையில் 12 உறுப்பினர்கள் கொண்ட குழுவினர் சந்தித்துப் பேசினார்கள்.

தமிழக அரசுடன் இணைந்து, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்துவது, பெரிய கப்பல்கள் வந்து செல்லும் வகையில் அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்குவது, குளச்சல் துறைமுகத்திலிருந்து கொழும்பு, சிங்கப்பூர், துபாய் போன்ற நாடுகளின் துறைமுகங்களுக்கு செல்லும் கப்பல்கள் குளச்சல் துறைமுகத்திற்கு வந்து, சரக்கு பெட்டகங்களை (Containers) கையாளும் வகையில் புதிய திட்டத்தை செயல்படுத்துதல் ஆகியவை குறித்து மாண்புமிகு மலேசிய அமைச்சர் டத்தோ எஸ். சாமிவேலு அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

மேலும், மகாபலிபுரம் சாலையில் தமிழக அரசின் நிர்வாக நகரம் (New Administrative City) அமைப்பது தொடர்பாகவும், மெரினா கடற்கரை பகுதி மேம்பாடு திட்டம் (Marina Seashore Development Project) தொடர்பாகவும் ஆலோசனை செய்யப்பட்டது.

இந்த ஆலோசனைக் குழு கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு.ஓ.பன்னீர்செல்வம், (பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை) திரு.சி.பொன்னையன் (நிதித்துறை) திரு.நயினார் நாகேந்திரன் (மின்சாரம் மற்றும் தொழில்துறை) திரு.எம்.சி.சம்பத், (வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை), அரசு தலைமைச் செயலாளர் திரு. சுகவனேஸ்வர், நிதித்துறை செயலாளர் திரு.என்.நாராயணன், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும துணைத் தலைவர் திருமதி ஜெயந்தி, நெடுஞ்சாலைத்துறை செயலாளர் திரு.ஏ.நாகராஜன், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு.லால்ரானா செய்லோ, பொதுப்பணித்துறை செயலாளர் திரு.எம்.குற்றாலிங்கம், பொதுத்துறை செயலாளர் திரு.டி.பிச்சாண்டி, தொழில்துறை செயலாளர் (பொறுப்பு) திரு.கே.ஸ்கந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மலேசிய தூதுக்குழுவின் சார்பில் சென்னையில் உள்ள மலேசிய உதவி தூதர் திரு.ராஜா அகமது ராஜாதாவூத், (Assistant High Commissioner for Malaysia in Chennai), மலேசிய நாட்டின் பணிகள் துறை அமைச்சகத்தின் துணை பொதுச் செயலாளர் டத்தோ திரு அலிபின் பஹாரி (Mr.Ali bin Bahari, Deputy Secretary General) மலேசிய நாட்டின் கட்டுமான தொழில் மேம்பாட்டுக் கழக தலைமை செயல் அலுவலர் திரு.அப்துல் ரஹமத் யாகோப், (Mr.Abdul Rahmad Yaacob, Chief Executive, Construction Industry Development Board, Malaysia) மலேசிய நெடுஞ்சாலை குழுமத்தின் தலைமை இயக்குநர் திரு.ஜார்ஜ் ஜார்ஜ் (Mr.George George, Director General Malaysian Highway Authority), ககாசன் மேக்மர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஹலிம் சாத் (Mr.Halim Saad, Managing Director, Gagasan Makmur), எச்.எஸ்.எஸ்.-ன் மேலாண்மை இயக்குநர் டத்தோ திரு. எஸ்.சாந்தகுமார் (Mr.S.Shantakumar, Managing Director, H.S.S.) திரு.ராமு ஆண்டி, திரு.ஹெல்மி ஜாபர், திருமதி.நூர்லிசா ஹாசிம், திரு.அன்வர் மமுது, திரு.பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர். ★

# காவலர்கள் குறைகேட்கும் நிகழ்ச்சி

"இன்று தெற்கு மண்டலத்திலிருந்து இங்கே வருகை புரிந்துள்ள காவல்துறையினர் அனைவரையும் இங்கே சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நம் சமுதாயம் அமைதியான முறையில், ஒழுங்கான முறையில் நடைபெற வேண்டுமானால் அதற்குக் காவல்துறையின் பணி மிகவும் முக்கியமானது, இன்றியமையாதது ஆகும். அதே சமயத்தில் காவல்துறையினரின் பணி மிகவும் கடினமானது சிரமமானது. காவல்துறையினர் தங்கள் உயிரையேகூட பணயம் வைத்து இந்த நாட்டிற்காக சேவை புரிகிறார்கள். ஆகவே காவல்துறையினரின் பணி ஆர்வத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் உற்சாகத்தோடு பணியாற்றக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காகவும் இந்த அரசு கடந்த ஆண்டு பொறுப்பேற்ற நாள் முதல் பல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது.

கடுமையான நிதி நெருக்கடிக்கு இடை யிலேயும் இந்த அரசு காவல்துறையினருக்காக பல சலுகைகளைச் செய்திருக்கிறது. இருந்த போதிலும், காவல்துறை யினருக்கும் பல குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. கடந்த முறை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாநாடு இங்கே தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற போது இதுபற்றி விவாதிக்கப்பட்டது. அப்போது காவல்துறையினருக்கு ஒரு பெரும் குறை இருந்து வருகிறது. குறிப்பாகக் காவலர்களுக்கு தங்கள் குறைகளை யாரிடம் போய்ச் சொல்லுவது, எப்படிச் சொல்லுவது என்ற கவலை இருந்து வருகிறது என்று அங்கே பேசப்பட்டது. அப்போது அந்த மாநாட்டில் ஒரு முடிவெடுக்கப்பட்டது. மாவட்ட அளவில் மாவட்ட கண்காணிப்பாளரும், ரேஞ்ச் டி.ஐ.ஜி.யும், மாதந்தோறும், ஒவ்வொரு மாதமும் ஒருநாள் தங்களுக்குக் கீழ் பணிபுரிகின்ற காவல்துறையினரின் குறைகளைக் கேட்பார்கள். அன்றையதினம் காவலர்கள் அவர்களைச் சந்தித்து தங்கள் மனுக்களை கோரிக்கை மனுக்களைக் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. காவல்துறை இயக்குநர்–டி.ஜி.பி. அவர்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை காவல்துறையினரைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்பார், மனுக்களைப் பெறுவார் என்று முடிவு செய்யப்பட்டது.

அதன்படி ஒவ்வொரு மாதமும் மாவட்டங்களிலுள்ள உயர் காவல்துறை அதிகாரிகள் காவலர்களைச் சந்தித்து அவர்களுடைய குறைகளைக் கேட்டு வருகிறார்கள். டி.ஜி.பி. அவர்களும் காவலர்களைச் சந்தித்து அவர்களுடைய கோரிக்கை மனுக்களைக் கேட்டு, பெற்று சிலவற்றின் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், காவலர்கள் மத்தியில், காவல் துறையினர் மத்தியில் இன்னும் ஓர் அதிருப்தி இருப்ப தாகவும், அவர்களுக்கு இன்னும் தீர்க்கப்படாத பல குறைகள் இருப்பதாகவும், எனக்குத் தெரியவந்தது.

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
***செல்வி ஜெ ஜெயலலிதா* *அவர்கள்***
***26.7.2002 அன்று சென்னை***
***தலைமைச் செயலகத்தில நடைபெற்ற***
***தெற்கு மண்டலத்தைச் சேர்ந்த காவல், சிறை,***
***தீயணைப்பு மற்றும் மீட்பு பணி ஆகிய***
***துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும்***
***பணியாளர்களின் குறை தீர்க்கும் நிகழ்ச்சியில்***
***ஆற்றிய உரை.***

அதனால்தான் இன்றைக்கு இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறேன். இன்றைய தினம் இந்திய வரலாற்றிலேயே புதிய வரலாறு படைக்கும் தினமாகும். இதுவரை எந்த மாநிலத்திலும், எந்த மாநில முதலமைச்சரும், நேரில் காவல்துறையினரைச் சந்தித்து, காவலர்களைச் சந்தித்து அவர்களுடைய குறைகளைக் கேட்டதில்லை. முதலில் இதற்காக ஒருநாள் ஒதுக்கலாம் என்று எண்ணினேன். தமிழகம் முழுவதிலிருந்தும் வரக்கூடிய காவல்துறையினரின் குறைகளைக் கேட்க ஒரு நாள் ஒதுக்கலாம் என்று எண்ணினேன். காவல் துறை டி.ஜி.பி.யுடனும் மற்ற உயர் அதிகாரிகளுடனும் இதைப்பற்றி விவாதித்தபோது அவர்கள் சொன்னார்கள். ஒரு நாளில் குறைகளைக் கேட்டு முடிக்க முடியாது. தமிழகம் முழுமையில் இருந்தும் ஆயிரக்கணக் கானவர்கள் வந்து விடுவார்கள். ஆகவே மண்டலம் வாரியாகப் பிரித்துப் பார்க்கலாம் என்று ஆலோசனை கூறப்பட்டது. அந்த ஆலோசனையை நானும் ஏற்றேன். முதலில் தமிழகம் முழுமையில் இருந்தும் ஒரே நாளில் எல்லோரையும் சந்திப்பதென்றால், ஒரு இரண்டாயிரம் பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே மண்டலம் வாரியாக நான்கு மண்டலங்களாகப் பிரித்தால், ஒரு மண்டலத்திலிருந்து 250 முதல் 500 பேர்கள் வரை வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இன்றைய தினம் தெற்கு மண்டலத்திலிருந்து 1732 பேர் வந்திருப்பதாக எனக்குத் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது. உங்களை எல்லாம் சந்திப்பதில் எனக்குப் பெருமகிழ்ச்சி.





நீங்கள் அனைவரும் நிறைய எதிர்பார்ப்புகளோடு வந்திருப்பீர்கள். என்னைப் பொருத்த வரை திறந்த மனதுடன் இதயசுத்தியுடன் இந்த முயற்சியை நான் மேற்கொண்டிருக்கிறேன். என்னால் ஆன உதவியை உங்களுக்குச் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுதான் இந்த முயற்சியை நான் மேற்கொண்டிருக்கிறேன். உங்களில் பலருக்குப் பலவிதமான குறைகள் இருக்கலாம். சிலவற்றுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கலாம். சிலவற்றுக்கு உடனடியாகத் தீர்வு காணாமல், காணமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கலாம். இருந்தாலும் இங்கே வந்துள்ளவர்களுக்கு யாருக்கு எத்தகைய குறை இருந்தாலும், அந்தக் குறையைத் தீர்த்து வைப்பது என்னுடைய கடமை என்ற உணர்வோடுதான் இன்று இந்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்.

எண்ணிக்கையில் அதிகமாக நீங்கள் வந்திருப்பதால் ஒவ்வொருவரையும் தனியாகச் சந்தித்து குறை கேட்கவேண்டுமென்ற விருப்பம் என் மனதில் இருந்தாலும், காலம்,நேரம் அதற்குப் போதாது என்ற கருத்து இருப்பதால், ஒரே நாள் தான் இதற்காக ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதால், முடிந்தவரை உங்களை நான் தனியாகச் சந்திக்க முயற்சிக்கிறேன். ஆனால் ஒரே விதமான கோரிக்கை கொண்டுள்ளவர்கள் குழுக் களாகச் சந்திக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, நீங்கள் அனைவரும் இந்த ஏற்பாட்டோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது இன்னும் சில நிமிடங்களில் உங்களை அழைத்து நான் சந்திக்க இருக்கிறேன். நீங்கள் அனைவரும் உங்கள் குறைகள் தீர்க்கப்பட்டு உற்சாகத்தோடு பணியாற்ற வேண்டும். உங்கள் பணி ஆர்வம் அதிகரிக்க வேண்டும். அதற்கான சூழ்நிலையை உருவாக்க இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்து விடைபெறுகிறேன்''.

• • •

# திருக்குறள் முற்றோதல் திறமையைப் பாராட்டி முதல்வர் நிதியுதவி

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 4.7.2002 அன்று தலைமைச் செயலகத்தில் திருக்குறள் முற்றோதல் திறமையைப் பாராட்டி கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஊனமுற்ற செல்வி இரா.அருள்ஜோதி என்பவருக்கு குறள் பரிசாக ரூ.5 ஆயிரமும், ஊனமுற்றோர் நல நிதியிலிருந்து ரூ.5 ஆயிரமுமாக மொத்தம் ரூ.10 ஆயிரத்திற்கான காசோலைகளை நேரில் வழங்கினார்.

கடலூர் மாவட்டம், செம்மங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு.சி.ராமச்சந்திரன் – திருமதி.தேன்சுவை ஆகியோரின் மகள் செல்வி.இரா.அருள்ஜோதி முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு அனுப்பி இருந்த மனுவில், இளம்பிள்ளைவாத நோயினால் சிறுவயதிலேயே தான் பாதிக்கப்பட்டு கை–கால்கள் செயல்படாமல் உள்ளதாக குறிப்பிட்டிருந்தார். மேலும், தான் பள்ளிக்குச் சென்று படிக்க முடியாத நிலையில் இருந்தாலும், பெற்றோர், உடன்பிறந்தவர்கள் அளித்த ஊக்கம் மற்றும் தனது சொந்த முயற்சியாலும் உலகப் பொது மறையான திருக்குறளின் 1330 குறட்பாக்களையும் மனப்பாடமாக கூறும் திறமையைப் பெற்றுள்ளதாகவும், குறட்பாக்களின் எந்த எண்ணை குறிப்பிட்டு கேட்டாலும், அனைத்து குறட்பாக்களையும் பொருளுடன் கூறுவதாகவும் தெரிவித்து தனக்கு வாழ்நாளில் பயன்தரதக்க வகையில் நிதி உதவி அளிக்குமாறு வேண்டியிருந்தார்.



இவரது மனுவினை பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இவரது திருக்குறள் முற்றோதல் திறமையைப் பாராட்டி, இதனைத் தனிநேர்வாகக் கருதி குறள் பரிசாக ரூ.5 ஆயிரம் வழங்க உத்தரவிட்டிருந்தார். மேலும், இவரது கை–கால்கள் செயல்படாமல் ஊனமுற்றவராக உள்ளதால், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் ஊனமுற்றோர் நல நிதியிலிருந்து ரூ.5 ஆயிரம் வழங்கும்படியும் ஆணை பிறப்பித்திருந்தார். இதன்படி, குறள் பரிசு ரூ.5 ஆயிரம் மற்றும் ஊனமுற்றோர் நல நிதியிலிருந்து ரூ.5 ஆயிரமுமாக மொத்தம் ரூ.10 ஆயிரத்திற்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் 4.7.2002 அன்று நேரில் செல்வி இரா.அருள் ஜோதியிடம் வழங்கி அவரது திருக்குறள் முற்றோதல் திறமையை வெகுவாகப் பாராட்டினார்.

இந்த குறள் பரிசு மற்றும் நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட செல்வி இரா.அருள்ஜோதி மற்றும் அவரது குடும்பத்தினர், முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.



# காதிப் பொருட்கள் கூட்டுறவுத் துறை நியாயவிலை கடைகளின் மூலம் விற்பனை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.7.2002 அன்று சென்னையில் காதி மூலமாக தயாரிக்கப்படுகின்ற குறிஞ்சி குளியல் சோப், கோபுரம் சலவை சோப் முதலான பொருட்களை கூட்டுறவுத் துறை நியாயவிலை கடைகளின் மூலம் விற்பனை செய்யும் புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.

## மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை

தமிழகத்தில் உள்ள கிராம மற்றும் கைத்தொழில்களை பாதுகாக்கவும், அந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும், தமிழ் நாடு அரசு காதி மற்றும் கிராம தொழில் வாரியம் மூலம் கடன் உதவி வழங்கி, உற்பத்தி பொருட்களை காதி கிராப்ட் விற்பனை நிலையங்கள் மூலம் தற்போது விற்பனை செய்து வருகிறது. இவ்வாறு தமிழ் நாடு காதி மற்றும் கிராம தொழில் வாரியம் மூலமாக தயாரிக்கப்படும் பொருட்களை கூட்டுறவுத் துறையின் நியாயவிலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்தால், காதி பொருட்களின் உற்பத்தியை மேலும் அதிகரிக்கச் செய்யலாம். வேலைவாய்ப்பைப் பெருக்கலாம் என்பதாலும், அந்த பொருட்கள் மக்கள் மத்தியில் எளிதில் சென்றடையும் என்பதாலும், கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் மூலம் அவை விற்பனை செய்யப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்.

இந்த ஆணையை ஏற்று சட்டப்பேரவையில் 2002–2003–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரின் போது, மாண்புமிகு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களும் இத்திட்டத்தை அறிவித்தார்கள்.

## புதிய திட்டம் தொடக்கம்

இதன்படி, 8.7.2002 அன்று, சென்னை அடையார், சாஸ்திரி நகர், டாக்டர் முத்துலட்சுமி சாலை, முதல் அவின்யூவில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வளாகத்தில் அமைந்துள்ள கூட்டுறவு நியாய விலைக் கடையில், தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்தத் திட்டம் தொடங்கப் படும் கூட்டுறவு நியாய விலைக் கடையான திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்க (T.U.C.S.) அங்காடியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னதாக சுற்றிப் பார்வையிட்டார்கள். பின்னர் மளிகை சாமான் பிரிவையும், காய்கறி பிரிவையும் மற்றும் விற்பனை செய்யப்படவுள்ள காதி பொருட்களையும் முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உப்பு, வாஷிங்சோப், டிஷ் வாஷ் பவுடர், தேன், தைலம் போன்ற பொருட்களை ரூ.259 மதிப்பளவில் பெற்றுக் கொண்டு அவற்றிற்கான தொகையை அளித்தார்கள். பின்னர், மண்ணெண்ணெய் விற்பனை பிரிவையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கூட்டுறவுக் கடைகள் மூலமாக காதி பொருட்கள் விற்பனை செய்யும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, முதலாவதாக தாமே குறிஞ்சி ரீம் சோப், குறிஞ்சி சந்தன சோப், கோபுரம் வாஷிங் சோப் மற்றும் கோபுரம் அல்ட்ரா டிடர்ஜண்ட் சோப் ஆகிய சோப்பு வகைகளில் ரூ.1005/– மதிப்பிலான சோப்புக் கட்டிகளை வாங்கினார். தொடர்ந்து, இந்த பொருட்களை இரண்டு நுகர்வோர்களுக்கு முதலமைச்சர் அவர்களே தமது கரங்களால் எடுத்துக் கொடுத்து விற்பனையை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது மாண்புமிகு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு.ப.தனபால், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.ஆர்.வில்வநாதன், காதி மற்றும் கிராமத்தொழில்கள் வாரியத்தின் தலைமை செயல் அலுவலர் திரு. கே.ஏ.மாத்யூ, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் செல்வி லீனா நாயர் ஆகியோர் பங்கேற்றனர்.

# போலி முத்திரைத் தாள்கள் -

## *ஓர் எச்சரிக்கை*

போலி முத்திரைத் தாள்கள் அச்சிடுவதோ, புழக்கத்தில விடுவதோ, அவற்றை வாங்கிப் பயன்படுத்துவதோ சட்டப்படி பெருங்குற்றமான செயல்களாகும். இக்குற்றங்களுக்கு அபராதம் தவிர சிறைத் தண்டனையும் வழங்கக்கூடும். இக்குற்றங்களைத் தடுக்க அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. இதில் முழு வெற்றி பெற பொதுமக்களின் ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது.

1. பொதுமக்கள், அரசால் நியமிக்கப்பட்டுள்ள பத்திர விற்பனையாளர்களிடமிருந்து மட்டுமே முத்திரைத் தாள்களை வாங்க வேண்டுமென அறிவுறுத்தப் படுகிறார்கள்.

2. பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, பத்திரம் பதிவு செய்யப்பட வேண்டிய அலுவலகத் திற்குட்பட்ட எல்லையில் செயல்படும் அங்கீகரிக்கப் பட்ட முத்திரைத்தாள் விற்பனையாளர்களிடமிருந்து முத்திரைத் தாள்களை வாங்கிப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மற்ற இடங்களில் உள்ள முத்திரைத்தாள் விற்பனையாளர்களிடமிருந்து முத்திரைத் தாள்களை வாங்கிப் பயன்படுத்து வதைத் தவிர்க்க வேண்டும். இவ்வாறு செய்வது பதிவு அலுவலர்கள் உண்மையான முத்திரைத் தாள்களை எளிதில் அடையாளம் காண ஏதுவாக இருக்கும்.

3. பொதுமக்கள் நலன் கருதி அனைத்துச் சார்பதிவாளர்கள் அலுவலகங்களிலும், சார் கருவூலங்களிலும் முத்திரைத் தாள்கள் விற்பனை செய்ய அரசு உத்தரவு இட்டு, அவ்வாறே முத்திரைத்தாள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பொது மக்கள் தங்களுக்குத் தேவையான முத்திரைத் தாள்களை இவ்வலுவல கங்களிலிருந்து எவ்விதத் தடையுமின்றி கூடுதல் கட்டணம் ஏதுமின்றி வாங்கிக் கொள்ளலாம்.

4. முத்திரைத் தாள் கிடைக்காத போது அல்லது பொதுமக்கள் விரும்பினால் முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக செலுத்த வேண்டிய கட்டணத்தை ரொக்கமாகவும் (Cash), கேட்புக் காசோலை (Demand Draft), முத்திரைத் தாள் அச்சிட்டு இயந்திரம் (Franking Machine), கருவூலத்தில பணம் செலுத்துதல் (payment in Sub-Treasury) ஆகிய முறைகளில் செலுத்தி சாதாரணத் தாளில் பத்திரம் எழுதி, பதிவு செய்யலாம். இது முத்திரைத்தாள்களில் எழுதிப் பதிவு செய்வதற்குச் சமமானதாகும். இம்முறையைப் பின்பற்ற பொதுமக்கள் தயக்கமோ, அச்சமோ கொள்ளத் தேவையில்லை.

5. இதுகுறித்த விவரங்களை பதிவுத்துறையின் இணைய தளமான (http://igregn.tn.nic.in)–இல் தெரிந்து கொள்ளலாம்.

போலி முத்திரைத் தாள் அச்சிடுவது, விற்பது, வாங்குவது போன்ற குற்றங்கள் தெரியவரின் அவற்றை, தங்கள் பகுதியில் உள்ள சார்பதிவாளர் அல்லது சென்னையில் உள்ள பதிவுத்துறைத் தலைவர் அல்லது அரசின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வருமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொதுமக்கள் இதுகுறித்த தங்கள் குறைகளை பதிவுத்துறைத் தலைவர், சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை–28 என்ற முகவரிக்குத் தெரிவிக்கலாம்.


• • •

ஆசிரியரும் வெளியிடுபவரும் : கே. செல்லமுத்து, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5364906 தொலையச்சு : 5368926

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.

## கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.




**உ**ங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலு 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் ம அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

**குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவ ஓர் அரிய வாய்ப்பு!**

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் | மாதச் சந்தா | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா | கூடுதல் தொகை (3+4) | அரசு தள்ளுபடி * | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள் ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் க வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, ப குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெ ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப் மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்க**





# தமிழரசு

செப்டம்பர் - 2002







# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2033
ஆவணி – புரட்டாசி
செப்டம்பர் 2002
மலர் : 34 இதழ் : 5 & 6
விலை ரூ.10

**இந்த இதழில்...**

★ சுதந்திரத் திருநாள் ..... 2
★ பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் ..... 9
★ அண்ணா பற்றி அறிஞர்கள் ..... 11
★ உயிரிதொழில்நுட்ப பசுமைக்குடில் ..... 13
★ மழை நீர் மையம் ..... 17
★ 12 ஏழை மாணவ–மாணவிகளுக்கு நிதியுதவி ..... 19
★ இந்தியாவில் முதன்முதலாக காவலர் குறைகேட்பு ..... 20
★ நியாய விலைக்கடைகளில் கைத்தறித்துணி விற்பனை ..... 25
★ தந்தை பெரியார் புரட்சி மொழிகள் ..... 26
★ பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள் ..... 27
★ பெரம்பலூர் மாவட்டத்தில் பள்ளிகளிலேயே சான்றிதழ் வழங்க சிறப்பு ஏற்பாடு ..... 30
★ பரமக்குடியில் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் ..... 33
★ தொப்பையாறு பாசன மேம்பாடு ..... 34
★ தொலைநோக்குப் பார்வையில் தகவல் தொழில்நுட்பம் ..... 37
★ இரண்டாம் கட்டமாக 63 ஆலயங்களில் அன்னதானத்திட்டம் ..... 40
★ நடமாடும் மருத்துவ சேவைக்குழுக்களுக்கு வாகன வசதி ..... 44
★ பிறவி இருதய நோய்கள் ..... 45
★ சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் ..... 49
★ கூடி வாழ்ந்தால் கோடி நன்மை ..... 61
★ தேசிய பெடரேஷன் கோப்பை போட்டியில் பதக்கம் வென்றவர்களுக்கு பாராட்டு ..... 63
★ பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை – அமைச்சர் ஆய்வு ..... 65
★ தட்சிண சித்ரா ..... 68
★ ஊரும் பேரும் ..... 74

முதல் பக்க அட்டையில்...

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 19–8–2002 அன்று டெல்லியில் மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர் **ஏ.பி.ஜே. அப்துல்கலாம்** அவர்களை சந்தித்தபோது முதலமைச்சர் அவர்களுக்கு குடியரசுத் தலைவர் அவர்கள் தாம் அண்மையில் எழுதிய IGNITED MINDS என்ற நூலினை வழங்கினார்.

இரண்டாம் பக்க அட்டையில்...


**தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா**

கடைசிப் பக்க அட்டையில்...

**சுதந்திரத் திருநாள் விழா**

# சுதந்திரத் திருநாள்

சென்னை புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில், 15.8.2002 அன்று காலை 8.30 மணியளவில் சுதந்திரத் திருநாள் விழாவையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார்.






மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.8.2002 அன்று காலை இராஜாஜி சாலையில் அமைக்கப்பட்டுள்ள அணி வணக்கம் ஏற்கும் மேடைக்கு அருகில் வந்து சேர்ந்தார். அரசு தலைமைச் செயலாளர் முதலமைச்சர் அவர்களை வரவேற்று அணி வணக்கம் ஏற்கும் மேடைக்கு அழைத்துச் சென்றார். ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் கோவா பகுதி ஜெனரல் ஆபீஸர் கமாண்டிங், சென்னை கடற்படை பொறுப்பு அதிகாரி, தாம்பரம் வான் படை அதிகாரி, காவல்துறை இயக்குநர், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) மற்றும் சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் ஆகியோரை தலைமைச் செயலாளர் முதலமைச்சர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அதன்பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

பின்னர், தலைமைச் செயலாளர், முதலமைச்சர் அவர்களை கோட்டை கொத்தளத்திலுள்ள கொடி






மேடை அருகே அழைத்துச் சென்றார். அங்கு முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அப்பொழுது காவல்துறையின் இசைக்குழுவினரால் நாட்டுப்பண் இசைக்கப்பட்டது. நாட்டுப்பண் இசை முடிந்தவுடன், முதலமைச்சர் அவர்கள் கோட்டை கொத்தளத்திலிருந்து சுதந்திர தின உரை நிகழ்த்தினார். அதன்பின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்.



சுதந்திரத் திருநாள்

அதன் பின், முதலமைச்சர் அவர்கள் இராஜாஜி சாலையின் இருமருங்கிலும் குழுமியிருந்த பொதுமக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். பின்னர் முதலமைச்சர் அவர்கள் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கி, அதைத் தொடர்ந்து உடல் ஊனமுற்றோர்களின் நலனுக்காக நற்பணியாற்றி யவர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

# சுதந்திரத் திருநாள் உரை

இந்த சுதந்திரத் திருநாள், வெளிச்ச திருநாளாக அமைந்துள்ளது. அகன்றது அந்தகாரம்! புலர்ந்தது புது விடியல்!

குழப்ப இருள் அகன்று போனது! கொள்கை வெளிச்சம் பரவலாயிற்று!

காலம் உண்மையைத் தெளிவுபடுத்தியது.

அந்தத் தெளிவுதந்த வெளிச்சத்தில், நமது பாதையும் பயணமும், தெள்ளத் தெளிவாக விளங்குகின்றன. இந்த ஒளிமிக்க புதுயுகத் தொடக்கத்தில், விழி மலர்ந்திருக்கின்ற இந்த சுதந்திரத் திருநாளில், தமிழகத்துச் சான்றோர்கள், பெரியோர்கள், தாய்மார்கள், எதிர்கால இந்தியாவின் கனவுகளாய் அமைந்துள்ள மாணவ, மாணவியர், குழந்தைகள் அனைவருக்கும், எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நாம் சுகமாக சுவாசிக்கும் சுதந்திரக் காற்றுக்காக, அன்று தன்னலம் கருதாது, நாட்டின் நலம் ஒன்றையே கண்ணெனக் கருதி, தங்கள் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் அர்ப்பணித்த தியாகச்சுடர்களை, நாம் நினைவுகூர்ந்து போற்றுவது, நமது தலையாய கடமையாகும்.

நான் சென்ற ஆண்டு, இதே நாளில், இங்கே தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றிய போது, தர்மத்தின்







பாதையில் சூது, தற்காலிகத் தடைகளை ஏற்படுத்தினாலும், அவற்றைத் தகர்த்து, தர்மம் தன் பயணத்தைத் தொடரும் எனக் குறிப்பிட்டேன்.

நான் இந்த ஆண்டு, இந்தக் கோட்டைக் கொத்தளத்தில் காலெடுத்து வைத்து, தேசியக் கொடியை ஏற்றி வைக்கின்ற வாய்ப்பை அடைந்து விடக் கூடாது என்பதற்காக, சிலர் திட்டமிட்டனர். அவர்கள் எண்ணம் தவிடு பொடியாகும் வகையில், தமிழக மக்களின் பேராதரவுடனும், நீதி தேவதையின் நல்லாசியுடனும், நான் மீண்டும் இன்று, உங்கள் முன்பு உரையாற்றிக் கொண்டிருக்கிறேன்.

கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையே, கடந்த ஓராண்டு காலத்தில், நாங்கள் தொலைநோக்குடன் தீட்டிய திட்டங்களும் செயல்படுத்திய பணிகளும், கணக்கிலடங்காது. அவற்றுள் முக்கியமானவற்றை, இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

★ தாகத்தால் தவித்துக் கிடந்த சென்னை மாநகர மக்களின், குடிநீர்த் தேவையினை பூர்த்தி செய்ய, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்ததோடு மட்டும் அல்லாமல், 720 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய வீராணம் திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

★ தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது.

★ மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் பேணிட, 18 அம்சத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மீண்டும் இயங்க, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டுக்குள், தமிழகத்தில் உள்ள அனைத்துக் காவல் உட்கோட்டங்களிலும், அதாவது 188 காவல் உட்கோட்டங்களிலும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயங்க, வழி வகை செய்யப்பட்டுள்ளது.

★ ஊரகப் பகுதிகளில் கைப்பம்புகளுக்கு பதிலாக, நீர்த்தேக்க தொட்டியுடன் கூடிய சிறு மின் விசை பம்புகள் அமைக்கும் திட்டம் –

★ மேல்நிலைக் கல்வி பயிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர்க்கு, இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் –

★ Counselling எனப்படும் கலந்தாய்வு முறையில், வெளிப்படையான ஆசிரியர்கள் பணி இடமாற்றம் –

★ கடந்த கால ஆட்சியாளர்களின் அக்கறையின்மை காரணமாக, பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கு, சிறப்பு ஆசிரியர் பட்டயப் பயிற்சி அளிக்கும் திட்டம்–

★ தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாபெரும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் –

★ தமிழக வேளாண் பெருமக்களுக்கு, வரப்பிரசாதமாக அமைந்த, 311 கோடி ரூபாய் அளவுக்கு, வட்டி, அபராத வட்டி தள்ளுபடி –

★ நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயிகளுக்கு, நன்மை பயக்கும் வகையில், 'ஊட்டி டீ' என்ற பெயரில், நியாய விலைக் கடைகளில் டீதூள் விற்பனை –

★ அரசின் அதிரடி நடவடிக்கையால், மார்க்கெட்டில் சிமெண்ட் விலைக் குறைப்பு –

★ கிராமப்புறங்களில் வேளாண் சார் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் முதலீட்டில், தொழில் துவங்க அரசின் சலுகைகள் –

★ தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் 30 படுக்கை வசதியுடன் அனைத்து நவீன வசதிகளையும் கொண்ட சிறிய மருத்துவ மனைகள்–

என்றவாறு, திட்டங்கள் பல பல்கிப் பெருகி, பயன் தந்த வண்ணம் இருக்கின்றன.

தமிழக திருக்கோயில்களில், அன்னதானம் வழங்கும் திட்டம், பொது மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களையும், ஆதரவையும் பெற்று வருவதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இத்திட்டம் 63 திருக்கோயில்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இன்று முதல் இந்த அன்னதான திட்டம் மேலும் 63 திருக்கோயில்களுக்கு விஸ்தரிக்கப்படுகிறது என்று அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இனி இத்திட்டம் 126 திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும்.

தமிழக மக்களில் எந்தப் பகுதியினர் துயருற்ற போதும், அவர்கள் கண்ணீரைத் துடைத்திட , இந்த அரசு ஒரு போதும் தவறியதில்லை.








காவிரி டெல்டா பகுதியில் இந்த ஆண்டு,குறுவைச் சாகுபடி செய்ய இயலாத நிலை ஏற்பட்டதை அடுத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் நலனுக்காக 164 கோடி ரூபாய் அளவில், திட்டப் பணிகளை, நான் தஞ்சாவூர் சென்று அறிவித்தேன்.

அந்தப் பணிகள் இப்போது முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

மேலும் தமிழகத்தில் இந்த ஆண்டு, தென்மேற்கு பருவ மழை பொய்த்து போனதை தொடர்ந்து ஏற்பட்ட, வறட்சியான சூழ்நிலையை சமாளிப்பதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்களின்கூட்டத்தைக் கூட்டி, நல்ல பல முடிவுகளை அறிவித்தேன்.

இந்திய தேசம் முழுவதும்ஏற்பட்டுள்ள,பொருளாதார பின்னடைவின் காரணமாக, கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, அவர்தம் துயர் துடைக்க, போர்க்கால அடிப்படையில், பல நடவடிக்கைகளை நான் மேற்கொண்டுள்ளேன்.

அனைத்துத் தரப்பினரின் நல்வாழ்விற்காக பாடுபடும், எனது தலைமையிலான தமிழக அரசுக்கு, நற்பெயர் வரக் கூடாது என்ற தீய நோக்கத்துடன், குந்தகம் விளைவிக்கும் செயல்களை, ஒரு சாரார் செய்து வருகின்றனர். அரசின் நடவடிக்கைகள் எதுவாயினும், அதைக் குறைகூறி, எதிர்ப் பிரச்சாரம் செய்வதையே குறிப்பாகக் கருதி, செயல்பட்டு வருகின்றனர். சில அரசியல்வாதிகளின் போக்கு இப்படி இருக்கிறது என்றால், சமூக விரோத சக்திகளின் நடவடிக்கைகள், கவலை அளிப்பதாக உள்ளன.

நம் நாட்டின் வலிமையைக் குலைத்திட வேண்டு மெனில், அதன் ஒருமைப்பாட்டை, கட்டுக்கோப்பை தகர்ப்பதே, எளிய வழி என்று உணர்ந்த, சில தீயசக்திகள், சர்வதேச பயங்கரவாத அமைப்புகளுடன் சேர்ந்து கொண்டு, நாச வேலைகளில் ஈடுபட்டு வருவதை, நாட்டு மக்கள் அறிவார்கள். அத்தகைய தீய சக்திகளை அடையாளம் கண்டு, அவற்றை சட்ட ரீதியாக தடை செய்து, அவற்றின் நடவடிக்கைகளை நாங்கள் கட்டுப்படுத்தி யுள்ளோம். ஆனாலும், மொழி, இன, வட்டார உணர்வு என்ற போர்வையில் அந்த சக்திகள் மீண்டும் தலைதூக்க முற்பட்டுள்ளன. சில அரசியல் கட்சிகள், அந்த முயற்சிகளுக்குத் தெரிந்தே துணைபோவது, துரதிருஷ்டவசமானது ஆகும். இது நாட்டின் இறையாண்மைக்கு, உலை வைக்கும் செயலாகும்.

அத்தகையவர்களை இனம் கண்டு, தீய சக்திகள் எந்த உருவில், தலைதூக்க முற்பட்டாலும், புறக்கணிக்க வேண்டுமென்று, இந்த நேரத்திலே, தமிழக மக்களைக் கேட்டுக் கொள்ள, நான் கடமைப்பட்டுள்ளேன்.

அந்த பிற்போக்கு சக்திகளுக்குப் பாடம் புகட்ட, என் அன்பிற்குரிய பொது மக்களாகிய நீங்கள் இருப்பதால், இங்கு தடைக்கற்கள் உண்டென்றாலும், அவற்றைத் தகர்க்கும் தடந்தோள்களும் இங்கே உண்டு, என்ற பெருமிதம் எனக்கு உண்டு.

அதனால் தான், வெற்றிப் பாதையில் இருந்து, சற்றும் பார்வையை விலக்காமல், ஆட்சித் தேரை, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், இயக்கிச் செல்ல முடிகிறது

அந்த மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே– எதிர்பார்ப்புகளை ஈடேற்றுவதே– எனது வாழ்க்கையின் கடமையாகக் கொண்டு, செயலாற்றி வருகிறேன்.

எந்த இலட்சியங்களுக்காக, சுதந்திரப்போராட்ட வீரர்களும், வீராங்கனைகளும் பாடுபட்டார்களோ, அந்த இலட்சியங்களை நிறைவேற்றுவதே – அந்த தியாக தீபங்களுக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடன் ஆகும்!

நாம் சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதற்காக, அன்று செக்கிழுத்தும், சித்திரவதைப் பட்டும், ரத்தம் சிந்தியும், நாட்டுக்கு உழைத்த நல்லோர்களாகிய, தியாக சீலர்களுக்கு, எனது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டு –



என்பதை, நன்றிப் பெருக்கோடு நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்கள், மக்கள் தான் என்று சொல்லுவதுண்டு.

என்னைப் பொறுத்த வரையில், ஜனநாயகத்தின் முதல் எஜமானர்களும் மக்கள் தான்.

தமிழக மக்களின், தாய்மார்களின், ஏழை எளியோரின், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நல்லாதரவோடு, எங்கள் சேவைப் பயணம் தொடரும் –

இதய சுத்தியோடு, நாங்கள் மக்களுக்கு நலம் பயக்கும் திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொள்ளுவோம் என்று உறுதியுடன் தெரிவித்து விடைபெறுகிறேன். ❖

சுதந்திரத் திருநாள்



# பெருந்தகையர் பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும்

□ டாக்டர் நாவலர் **இரா. நெடுஞ்செழியன்**

அறியாமை என்னும் காரிருள் கப்பிக் கொண்டு, சாதிவெறி – சமயவெறி – கடவுள் பக்திவெறி – மூடப் பழக்கவழக்கம் – குருட்டு நம்பிக்கை போன்ற நச்சுக் கிருமிகள் நடமாடிக் கொண்டிருந்த தமிழகத்தில் – பகுத்தறிவொளி பரப்பி அறியாமையிருளை அகற்றிடவும், நலிவு பயக்கும் நச்சுக் கிருமிகளை நசுக்கிடவும், செஞ்ஞாயிறு போன்ற பெருந்தகையர் பெரியாரும், முழு வெண்ணிலவு போன்று பேரறிஞர் அண்ணாவும் தோன்றினார்கள்.

ஞாயிற்றின் கடுமையான கதிர்களை வாங்கி, அவற்றைத் தண்ணொளி நிலவாகத் தருவது திங்களது இயல்பு. அதுபோன்று பெரியாரின் கடுமையான பகுத்தறிவு நெறிக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் கருத்துக்களையும் வாங்கி, அவற்றை எளிய – அழகிய – இனிய – மென்மையான – நல்ல தமிழில் நாட்டு மக்களுக்கு வழங்கிய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களைச் சாரும்.

ஞாயிற்றுக்கிழமையை அடுத்துத் திங்கட்கிழமை நிற்பதைப்போல், பெரியாரை அடுத்து அறிஞர் அண்ணா எப்பொழுதும் திகழ்ந்து வந்தார்.

தமிழின மக்கள் அறிவுடையவர்களாக, ஆற்றலுடையவர்களாக, மானமுடையவர்களாக, இனப்பற்றுக் கொண்டவர்களாக, மொழிப்பற்று மிகுந்தவர்களாக, பகுத்தறிவு நெறியைப் பின்பற்றுபவர்களாக, சிந்தனை செய்பவர்களாக, சீர்தூக்கிப் பார்ப்பவர்களாக, உண்மை – ஒழுக்கம் – நாணயம் – நேர்மை ஆகியவற்றினிடத்து மதிப்புக்காட்டுபவர்களாக, பண்பாடுகளிலே அக்கறை கொண்டவர்களாக, பொதுத் தொண்டுகளில் நாட்டங் கொண்டவர்களாக ஆவதற்கு இருபதாம் நூற்றாண்டிலே அடிப்படையாக விளங்கியவர்களும், உறுதுணையாக நின்றவர்களும் பெரியாரும் அவர் வழி வந்த அறிஞர் அண்ணா அவர்களுமே ஆவார்கள்.

சாக்ரடீசுக்குப் பிளேட்டோ எப்படித் தலை மாணாக்கரோ, காரல் மார்க்ஸுக்கு மாவீரன் லெனின் எப்படியோ, அண்ணல் காந்தியடிகளுக்குப் பண்டித நேரு எப்படியோ, அப்படியே பகுத்தறிவுப் பெருந்தகையர் பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்களுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களும் விளங்கினார்கள்.

''சீரிய முதியோர்கள் சிந்திக்கிறார்கள், சிறிய இளையோர் செய்து முடிக்கிறார்கள்'' என்பது பழமொழி. காரல்மார்க்ஸ் சிந்தித்தார்; மாவீரன் லெனின் செயல்படுத்தினார். அதுபோல பெரியார் சிந்தித்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் செயல்படுத்தினார்கள்.



வேண்டத்தகாத கருத்துக்களையும், செயல்களையும், போக்குகளையும், நிகழ்ச்சிகளையும் பெரியார் அவர்கள் கடுமையாகத் தாக்கி, வன்மையாகச் சாடினார்கள். அறிஞர் அண்ணா அவற்றையெல்லாம் எளிமையாகச் சொல்லி, அவற்றிலிருந்து விலகும்படி மென்மையாகக் கூறினார்கள்.

பெரியார் அவர்கள் விரும்பத்தகாத பழமை என்னும் பாறைகளைப் பீரங்கி வைத்துப் பிளந்து எறிந்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் பிளவுபட்டு விழுந்த கற்களையெடுத்து அவற்றைப் பயன்படும் அழகான பதுமைகளாகச் செதுக்கிக் காட்டினார்கள்.

(2)

பெரியார் அவர்கள் பெருங்கடப்பாறை கொண்டு குருட்டு நம்பிக்கைகளையும், மூடப் பழக்க வழக்கங் களையும் உடைத் தெறிந்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் சிற்றுளி கொண்டு செதுக்கினார்கள்.

பெரியார் அவர்கள் பசும்பாலைப் பச்சையாகக் கறந்து தந்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அதனைக் காய்ச்சி தயிராக்கிக் கடைந்து வெண்ணெய் எடுத்து நெய்யாக உருக்கித் தந்தார்கள்.

பெரியார் அவர்கள் பகுத்தறிவு மலர்களைச் சுட்டிக் காட்டினார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அவற்றிலிருந்து தேனை எடுத்துக் கொடுத்தார்கள்.

பெரியார் அவர்கள் பகுத்தறிவு விதைகளை ஊன்றிச் செடிகளாக வளர்த்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அவற்றை மரங்களாக்கி கனிகளைக் குலுங்கச் செய்தார்கள்.

பயன்படாத பழமை உலகை வேரொடும் வேரடி மண்ணோடும் அழித்தொழிக்கத் தலைப்பட்டவர் பகுத்தறிவுப் பெருந்தகையர் பெரியார் ஆவார்; பயன்படக்கூடிய புதிய உலகை அழுத்தந்திருத்தமாக அமைக்க முற்பட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பெரியார் துவக்கப்பள்ளியோடு படிப்பை நிறுத்தியவர். அறிஞர் அண்ணா பல்கலைக்கழகப் படிப்பை முடித்தவர். ஆனால் இருவரும் அறிவின் ஊற்றுக் கண்களாக விளங்கியவர்கள். ஐந்தாவது வரை படித்த பெரியாரை, எம்.ஏ. வரையில் படித்த அறிஞர் அண்ணா அவர்கள் ஈடும் எடுப்புமற்ற ஒரு பெருந்தலைவராகக் கொண்டாரென்றால், அந்த அளவுக்குப் பெரியாரின் அறிவாற்றல் திறனை அறிஞர் அண்ணா போற்றிப் பாராட்டி, வரவேற்று, வழிபட்டு நின்றார். "நான் என் வாழ்நாளில் ஒரே ஒரு தலைவரைத்தான் கண்டேன்; அவரைத்தான் என் தலைவராகவும் கொண்டேன்; அவர்தான் பெரியார்'' என்று அறிஞர் அண்ணா குறிப்பிட்டுள்ளதிலிருந்து, பெரியாரிடத்தில் அறிஞர் அண்ணா எத்துணையளவு மதிப்பு வைத்திருந்தார் என்பதை அறியலாம்.

பெரியாரை அறிஞர் அண்ணா அவர்கள் இறுதி வரையில் தம்முடைய வளர்ப்புத் தந்தையாகவே கருதிவந்தார். அதுபோல அறிஞர் அண்ணா அவர்களைப் பெரியார் அவர்கள் தம்முடைய வளர்ப்பு மகனாகவே கருதினார்கள்.

பெரியார் பெரும் பணக்காரராக இருந்தபோதிலும், அந்தப் பணத்தைக் கொண்டு பெருஞ்சொத்துச் சேர்க்கும் நோக்கத்தைக் கொள்ளாமல் பொதுநலத் தொண்டே உயிரெனப் பாடுபட்டு வந்தார். அதுபோலவே அறிஞர் அண்ணா பெரும் படிப்பாளியாக இருந்தபோதிலும், பெருஞ்சொத்துத்திரட்ட வேண்டும் என்ற எண்ணமில்லாமல், பொதுநலத் தொண்டு புரிவதே தம் வாழ்க்கையின் குறிக்கோள் என்று கருதினார்.

பெரியாரின் கனவுகள் பலவற்றை நனவாக்கிய பெருமை அறிஞர் அண்ணா அவர்களுக்கு உண்டு. பெரியாருக்கு இருந்த எல்லாவித எதிர்ப்புக்களையும் தகர்த்தெறிந்து, பொதுமக்களின் ஆதரவையும், அரவணைப்பையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெரியாரின் கொள்கைகளின் பக்கம் ஈர்த்து, கொள்கைக்கும் கட்சிக்கும் வெற்றி தேடித்தந்து, பெரியாரின் கொள்கைகளை ஆட்சிமனை ஏற்றிப் பெரியாருக்குப் பெருமையையும், பெரும் புகழையும் ஈட்டித் தந்தவர் அறிஞர் அண்ணா.

பெரியார் – அறிஞர் அண்ணா ஆகிய இருவருமே ஆடம்பரத்தை, பகட்டை, படாடோபத்தை, ஆரவாரத்தை, போலித்தன்மையை, வன்முறைப்போக்கை, அடிமைத் தன்மையை, அடக்கும் தன்மையை, சூது – சூழ்ச்சியை எப்பொழுதுமே விரும்பியதில்லை.

பெரியாரிடத்தில் பணம் உண்டு; அறிஞர் அண்ணாவிடத்தில் பணம் இல்லை. ஆனால் இருவருமே போற்றத் தகுந்த சிக்கனக்காரர்கள். இருவருமே பாராட்டுதலுக்குரிய பண்பாடுகள் நிறைந்தவர்கள்.

இவற்றைக் கால – வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பகுத்தறிவுப் பெருந்தகையர் பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆகிய இருவருமே இணைபிரிக்க முடியாத எடுத்துக்காட்டு களாவர்; வழிகாட்டிகளாவர்; வழிபடத்தக்கவர்களாவர்.

• • •

## காமராஜர் ஒரு வைரமணி

**கா**மராஜர் தமது பணிகளின் மூலம் நாட்டின் தரத்தை உயர்த்த முயன்றார்; தமிழர்களுக்கு நற்பணி ஆற்றினார்; தமிழர்கள் பெருமைப்படத்தக்க நல்ல காரியங்களைச் செய்தார்.

காமராஜர் கல்லூரியில் படிக்கவில்லையே தவிர வாழ்க்கைப் பாடத்தைப் படித்தார்.

மக்களின் புன்னகையை – பெருமூச்சை – கண்ணீரைப் படித்துப் பாடம் பெற்றார்.

முப்பது வருடம், நாற்பது வருடம் என்று மக்களிடம் தொண்டாற்றினால்தான் இந்தப் பாடத்தைப் பெற முடியும்.

வைரம் என்பது நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பு பூமியின் அழுத்தத்தால் கீழே அடங்கி ஒடுங்கிக் கிடந்த கரித்துண்டுகள்.

அதுபோல, நெடுங்காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் இருந்து தோன்றிய வைரமணிகளில் ஒருவர் தான் காமராஜர்.

**- பேரறிஞர் அண்ணா**



# பேரறிஞர் அண்ணா பற்றி அறிஞர்கள்

**த**ண்ணார் தமிழ்தழைக்கச் சாந்திச் சிறைசார்ந்த பண்ணார் தமிழ்சோலைப் பைங்கிளியாம் "அண்ணா'' மறைந்தாரிலையே இம்மாந்ததருளம் எல்லாம் நிறைந்தாரே என்றும் நிலைத்து.

*– திருமுருக கிருபானந்தவாரியார்*

★ ★ ★

**அ**ண்ணா துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழியில் –
பண்ணாவன்
சிற்பனெழுத் தோவியத்தில் செவ்வரசு நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமியென் றாடு,

*– திரு.வி.க.*

★ ★ ★

**தி**ருவாளர் சி.என்.அண்ணாதுரை அவர்களை அறியாத தமிழர் இரார். தென்னாட்டில் அவர்களைத் தெரியாதவர் யாரும் இரார்.

இவர் ஆங்கிலத்தில் பண்டிதர். பட்டத்தால் மட்டும் பண்டிதராய்த் திரிபவர் பலர் உளர். எனில், எழுத்திலும், பேச்சிலும் பழுத்த மொழி ஆட்சியிலும் திறனுடையார் மிகச் சிலரே! அத்தகைய நல்ல நடை வல்லார் தம் வரிசையிலே முன் அணியில் இடம் உடையார் இவர். தமிழினிலோ, அமிழ்துமிழும் சொல்வளமும், உணர்வெழுப்பும் தொடர்ச் செறிவும், குரவரிடம் கல்லாமல் தான் பயின்று திறம் பெற்ற சொல்லின் செல்வர்.

தமிழ் உயர்வும், தமிழர் தமது உரிமையையும் பெற உற்றும் மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவராவார். முடிசூடா மன்னனென இளந்தமிழர், எழுத்தாளர் புகழ் புலவர்.

*– நாவலர் ச.சோமசுந்தரபாரதியார்*

★ ★ ★

**இ**ளந்தமிழகத்தில் – எழுகின்ற தமிழகத்தில் – இன்று 'அண்ணா' என்று அருமையாக அழைக்கப் படுகின்றவர் தோழர் திரு அண்ணாதுரை. அவர் திராவிட நாட்டின் ஆசிரியர். ஆயிரம் மேடையேறிய அறிஞர்; பல்லாயிரம் மக்களின் உள்ளத்தை ஒருங்கே கவரும் சீரிய கூரிய சொல்லாளர்; கண்ணின்று கண்ணறச் சொல்லும் திண்ணியர்.

அண்ணாதுரை கலையறிந்தவர். தமிழ் நாட்டின் பழைய நிலையறிந்தவர். "மன்னும் இமயமலை எங்கள் மலையே'' என்று மார்தட்டிக் கூறிய வீரர் வாழ்ந்த தமிழகத்தில் இன்று கோழைகளாய், மோழைகளாய் நாம் குன்றலாகாது; காளைகளாய்க் களிறுகளாய் வாழ்தல் வேண்டும் என்று ஆசைப்படுகின்றவர் அவர்.

தமிழர் வாழவேண்டும், தமிழர் பண்பாடு சிறக்க வேண்டும் என்ற அரும் பெரும் குறிக்கோளுடைய 'அண்ணா அவர்கள் நீடுழி வாழ்க' என வாழ்த்துகிறேன்.

*– சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை*

★ ★ ★





மக்களுடைய எண்ணத்தை அவர் புறக்கணிக்காமல் ஒரு விதத்தில் அதிலும் உண்மைகள் இருக்குமென்றும் அதையும் கேட்டு எண்ணிப் பார்த்தார். அவர்களையும் மதித்தார். அதனால் தான் அவர்களும் மரியாதை செலுத்துகிறார்கள்.

*– காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப்*

★ ★ ★

இளைஞர்களிடையில் அண்ணாதுரைக்குச் செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாதுரையின் சொல்வன்மையும் எழுத்து வன்மையும் இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே இதற்குக் காரணம்.

அண்ணாதுரையின் பேச்சிலும் எழுத்திலும் புத்துணர்ச்சிக்கு ஒருவிதக் கவர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது. அண்ணாதுரையை மாணவர்கள் விரும்பினர், வாலிபர்கள் சூழ்ந்தனர்.

*– ப.ஜீவானந்தம்*

★ ★ ★

அரசியலோடு நாகரிகத்தை – அரசியலோடு நாணயத்தை – அரசியலோடு நல்ல நோக்கத்தை – அரசியலோடு ஜனநாயகத்தை அரசியலோடு உயர்ந்த பண்பாட்டை இணைத்துத் தந்த நல்ல ஜனநாயகவாதி அண்ணா அவர்கள்.

அன்பு அரவணைப்பு – பாசத்தினால் தம்மோடு இணைந்தவர்களையெல்லாம் உடன் பிறப்புக்களாக மாற்றிய தலைவர் அண்ணா அவர்கள் தான் என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

*– டாக்டர் எம்.ஜி.ஆர்.*

★ ★ ★

திருச்சிராப்பள்ளியில் 'ஓர் இரவு' என்னும் நாடகத்தைப் பார்த்தேன். பார்த்ததன் பயனாக, "இதோ ஒரு பெர்னாட்ஷா தமிழ் நாட்டில் இருக்கிறார். இப்ஸனும் இருக்கிறார். இன்னும் கால்ஸ்வொர்த்தியும் கூட இருக்கிறார்" என்று தோன்றியது.

*– 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி*

★ ★ ★

உருவத்தில் தமிழன், உயர்குணத்தில் தமிழன். அன்பு எனும் பண்பில் தமிழன், அடக்கத்தில் தமிழன். ஆண்மையில் தமிழன், நம் அண்ணா. பரந்த நெற்றி, குறுக்கான மெல்லிய மீசை, விசாலமான முகம், கட்டுமஸ்தான உடற்கட்டு, பந்தயக் குதிரை போன்ற விறுவிறுப்பான நடை, பணிவான நடவடிக்கை, வீர உள்ளம் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர் நம் அண்ணா.

*– கலைவாணர் என்.எஸ்.கே.*

★ ★ ★

தோழர் அண்ணாதுரை தனித் தமிழ்க் கனல்; திட்ப நுட்பமான சொல்லாளர். வீறு மிக்க செயலாளர், அவர் உள்ளம் தமிழர் உள்ளம், உணர்ச்சி வெள்ளம். அவர் உரைகள் தமிழர் மதிப்பையும், அம்மதிப்பைக் காக்கும் கொதிப்பையும் உண்டாக்கும் தீப்பொறிகள்.

*– சுத்தானந்தபாரதி*

★ ★ ★



## விழியிழந்தோர்க்கான தொடுதல் - முகர்ந்துணர்தல் தோட்டம் - ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி மையம் - உயிரி தொழில் நுட்ப பசுமைக்குடில் திட்டம் - தொடக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 7.8.2002 அன்று சென்னை தரமணியில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ள விழியிழந்தோர்க்கான தொடுதல் மற்றும் முகர்ந்துணர்தல் தோட்டம் (Touch and Smell Garden for visually impaired children) ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி மையம் (Every Child a Scientist Centre for children from the economically under priviledged section of the society), மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களை வளர்க்க உதவும் உயிரி தொழில்நுட்ப பசுமைக் குடில் திட்டம் (Bio-technology Green House) ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.

சென்னை தரமணியில் அமைந்துள்ள வேளாண் விஞ்ஞானியான டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் இயங்கும் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு புதிய பணிகளைத் தொடங்கி வைக்க மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 7.8.2002 அன்று இந்த நிறுவனத்திற்கு வருகை தந்தார். நிறுவனத்தின் தலைவர் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களும் அவரது துணைவியார் திருமதி மீனா சுவாமிநாதன் அவர்களும் மலர்க்கொத்து வழங்கி முதலமைச்சர் அவர்களை வரவேற்றனர்.பின்னர், முதலமைச்சர் அவர்கள் இந்த நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ள புதிய பணிகளான விழியிழந்தோர்க்கான தொடுதல் மற்றும் முகர்ந்துணர்தல் தோட்டம், ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி மையம், மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களை வளர்க்க உதவும் உயிரி தொழில்நுட்ப பசுமைக் குடில் திட்டம் ஆகியவற்றைத் தொடங்கி வைத்து ஒவ்வொன்றாக பார்வையிட்டார்.

முதலாவதாக, நறுமணம் உடைய விரைப்பான இலைகளைக் கொண்ட முட்களற்ற, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த, துளசி, ரோசஸ்மேரி, புதினா, தைம், தாவனா, கற்பூரவல்லி, கஸ்தூரி முதலான தாவரங்களுடன் ஒரு தோட்டம் உருவாக்கப் பட்டு இடையில் நடைபாதை அமைக்கப்பட்டு அதனையொட்டி இருபக்கங்களிலும் ஆங்காங்கே அருகே உள்ள தாவரங்கள் பற்றி கண்பார்வையற்றோர் படித்து தெரிந்து கொள்ள வசதியாக குறிப்புகள் உடைய பிரெயில் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தோட்டத்திற்கு வருகை தரும் பார்வையற்றோர் இந்த செடிகளை அதன் இலைகளைத் தொட்டு தடவி பார்த்தும், அதனுடைய மணத்தை முகர்ந்தும் அதுபற்றிய குறிப்புகளை பிரெயில் பலகையில் தடவி பார்த்து படித்தும் அறிய முடியும்.இந்த தோட்டத்தைச் சுற்றி பார்வையிட்ட





முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த பிரெயில் பலகைக்கு அருகே நின்று அந்த குறிப்புகளைப் பார்வையற்ற மாணவர்களும், மாணவியர்களும் படித்து தெரிந்து கொள்வதை பரிவோடு விசாரித்து அறிந்தார்கள். அடையாறு செயின்ட் லூயிஸ் பள்ளியில் படிக்கும் செல்வன் ராஜேஷ் மற்றும் செல்வன் வினோத் ஆகிய மாணவர்களிடம் முதல்மைச்சர் அவர்கள் அருகில் இருந்த தாவரமான ரோசஸ்மேரி மற்றும் வேறு தாவரங்களைப் பற்றி படித்தறிந்து கூறியதைக் கேட்டு வெகுவாகப் பாராட்டினார்.

பின்னர், ஒவ்வொரு குழந்தைக்குள்ளும் ஒரு விஞ்ஞானி தோன்றுகிறான் என்பதன் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள ''ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி மைய''த்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்த மையத்தின் செயல்பாடுகளைப் பற்றி பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் விளக்கி கூறினார். அப்போது, சுகந்தி என்ற மாணவி தன் கைப்பட வரைந்த ஓவியத்தை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார். ஓவியம் மிக அழகாக இருக்கிறது என்று பாராட்டிய முதலமைச்சர் அவர்கள் அதனை பத்திரமாக வைத்திருப்பேன் என்று அன்போடு தெரிவித்தார்கள்.

அடுத்து, மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களை வளர்க்க உதவும் பசுமைக்குடிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். இதன் பொறுப்பாளரான விஞ்ஞானி டாக்டர் அஜய் பரிடா மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இத்திட்டம் பற்றி விளக்கிக் கூறினார். இந்தத் திட்டத்தின் மூலம் வேளாண் பயிர்களை உவர் தன்மையைத் தாங்கி வளரச் செய்வதற்கு மேற்கொள்கின்ற முயற்சிகளைப் பற்றி கேட்டறிந்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த முறையினை பின்பற்றி வளர்க்கப்பட்ட தாவரங்களைப் பார்வையிட்டு, இந்த பெருமுயற்சிக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள், இந்த நிறுவனத்தின் 12–வது நிறுவன நாளையொட்டி நடைபெற்ற விழாவில் பங்கேற்று, நிறுவன ஆண்டு அறிக்கையை வெளியிட்டு உரையாற்றினார். அப்போது, வரவேற்புரை ஆற்றிய டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 14.4.1993 அன்று அந்த மையத்திற்கு வருகை புரிந்த போது ரூபாய் 5 இலட்சம் நிதி உதவி வழங்கியதை நினைவு கூர்ந்து, அந்த தொகையை வைப்பு நிதியாக வங்கியில் செலுத்தி அதன் மூலம் கிடைக்கின்ற வட்டித் தொகையின் மூலம் தான் மையத்தின் ஆக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவித்தார்.

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தின் மூலம் இன்று தொடங்கப்பட்டுள்ள இந்த திட்டங்களின் சிறப்பையும், மேன்மையையும் கருத்தில் கொண்டு விழியிழந்தோர்க்கான தொடுதல் மற்றும் முகர்ந்துணர்தல் தோட்டத்திற்கு ரூ.5 இலட்சமும் ஆக மொத்தம் 10 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு அரசின் சார்பில் நிதி உதவி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

முன்னதாக, எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் 77–வது பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் அவர்கள் மலர்கொத்து வழங்கி பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

★ ★ ★



# புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகள் செயலாக்கம்

தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிந்தனையில் உதித்த ''பசுமைத் திட்டம்'' தான் தரிசுநில மேம்பாட்டுத் திட்டம். இத்திட்டத்தின் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளித்து அவர்களின் பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்வது குறிக்கோளாக உள்ளது.



புதுக்கோட்டை மாவட்டத்தில் 8 முதல் 40 எக்டேர் பரப்பிலான 240 எக்டேர் நிலங்கள் 16 இடங்களிலும், 40 எக்டேருக்கு மேல் உள்ள நிலங்கள் 99 எக்டேர் 2 இடங்களிலும், 634 இடங்களில் 7,175 எக்டேர் பரப்பில் 8 எக்டேருக்கு கீழ் உள்ள நிலங்கள் கண்டறியப்பட்டு இவை மாவட்டத்தில் உள்ள கூட்டாண்மை நிறுவனங்கள், சிறு நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு 30 ஆண்டுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. இந்த நிலங்களில் பருத்தி, பழத்தோட்டங்கள், காய்கறிகள், மாந்தோட்டங்கள், மூலிகை பண்ணை மருத்துவத் தாவரங்கள், வாசனைத் தைலச் செடிகள், நறுமணப் பயிர்கள், முந்திரி மரங்கள், தோட்டப் பயிர்கள், எரிச்சக்திக்கு உபயோகப்படுத்தப்படும் மரங்கள், வேளாண் காடுகள், பாரடைஸ் மரம், ஆமணக்கு போன்றவை பயிரிடவும், வேளாண் சார்ந்த தொழில்கள் அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. தனியாருக்கு அரசு நிலங்கள் குத்தகைக்கு வழங்கப்பட மாட்டாது. புதுக்கோட்டை மாவட்டத்தில் முதல் கட்டமாக இந்த ஆண்டு பொன்னமராவதி ஒன்றியத்தில் 15 ஊராட்சிகளிலும், அன்னவாசல் ஒன்றியத்தில் 9 ஊராட்சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ.90 இலட்சம் தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதனைப் பயன்படுத்தி புதுக்கோட்டை நகராட்சியில் நீரேற்றும் எந்திரங்கள் மாற்றிட ரூ.20 இலட்சமும், அரிமளம் ஒன்றியம் வேளாண்மை கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் 25 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கிட ரூ.15 இலட்சமும், 8 பேரூராட்சிகளில் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்திட 26 பணிகளுக்கு ரூ.10 இலட்சமும், அன்னவாசல், அரிமளம், குண்ணாண்டார்கோவில், பொன்னமராவதி, திருமயம், விராலிமலை ஆகிய 6 ஒன்றியங்களில் 60 கைப்பம்புகள், 21 மாற்று ஆழ்குழாய் கிணறுகள், 20 இடங்களில் குடிநீர் குழாய்கள் விஸ்தரிப்பு ஆகியப் பணிகளை மேற்கொள்ள ரூ.45 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இவ்விரு திட்டங்களுக்கும் முன்னுரிமை அளித்து பணிகளை விரைவுபடுத்தி வருகிறார்.

*– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.*

• • •


## ஈரோடு மாவட்டத்தில்

# ஒருங்கிணைந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் சுகாதார வளாகம்

கிராமப்புற பெண்கள் கழிப்பிட வசதியின்றி சிரமப்படுகின்ற நிலையை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஊரகப் பகுதிகளில் ஒருங்கிணைந்த ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதார வளாகம் அமைத்திட ஆணையிட்டார். ஈரோடு மாவட்டத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இதற்கான சிறப்புத் திட்டத்தின் மூலமும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும், இம்மாவட்டத்தில் உள்ள 343 ஊராட்சிகளில் 171 ஊராட்சிகளில் ஒருங்கிணைந்த ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதார வளாகம் கட்டப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது.

திறந்தவெளி கழிப்பிடங்களால் பெண்களுக்கு இடையூறுகளும், இடைஞ்சல்களும் ஏற்பட்டன. இதனை போக்கிட நவீன கழிப்பறைகள், குளிக்கும் அறைகள் மற்றும் துணி துவைப்பதற்கான வசதிகளுடன் கூடிய சுகாதார வளாகத்தை அரசு கட்டித் தந்துள்ளது. இதன் மூலம் கிராமப்புற பெண்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றனர். பவானி ஊராட்சி ஒன்றியம் கவுந்தப்பாடிபுதூரில் கட்டப்பட்டுள்ள சுகாதார வளாகம் நேரில் பார்வையிடப்பட்டது. இக்கிராமத்தில் வசிக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகள் இச்சுகாதார வளாகத்தை பயன்படுத்தி வருகின்றனர். திருமதி.பாட்டாயி, ராசம்மா, கலாம்மா ஆகியோரை நேரில் சந்தித்து மகளிர் சுகாதார வளாகத்தின் பயன்கள் குறித்து கேட்டபோது அந்த தாய்மார்கள் கூறியதாவது :

"'எங்கள் கிராமத்தில் இதுபோன்ற மகளிர் சுகாதார வளாகம், அரசு மூலம் கட்டித் தரப்பட்டுள்ளதால், நாங்கள் நல்லமுறையில் பயன்படுத்தி வருகிறோம். இரவு நேரங்களில் கழிப்பிடங்களை பயன்படுத்தும் வகையில் மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. தண்ணீர் வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. இந்த வளாகத்தில் கழிவறைகள், குளியலறைகள் மற்றும் தண்ணீர்



தொட்டியுடன் கூடிய துணி துவைக்குமிடங்கள் ஆகிய வசதிகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன. மகளிரின் இடர்நிலை போக்கவும், பல்வேறு நோய்கள் வருவதை தடுத்துக் கொள்ளவும், அஞ்சி, அஞ்சி சாலை ஓரங்களில் மறைவிடம் தேடி அலைந்து அல்லல்பட வேண்டிய கட்டாயத்திலிருந்து எங்களுக்கு தமிழக முதல்வர் அவர்களால் விடுதலை கிடைத்துள்ளது.

கிராமப்பகுதியில் சுகாதார வளாகம் ஏற்படுத்தப்பட்டதால், இரவு நேரமாயினும், பகல் நேரமாயினும் எவ்வித பய உணர்வுமின்றி எங்களால் கழிவறையை பயன்படுத்த முடிகிறது. அதோடு ஊர் பகுதியில் உள்ள தெருக்கள் மற்றும் மைதானம் அனைத்தும் சுத்தமாகவும், சுகாதாரமானதாகவும் உள்ளன.

தாய்மார்கள் மானம் காக்கப்படுகிறது. திறந்தவெளியில் ஏற்பட்ட வெட்கமும், கூச்சமும் இப்போது இல்லை. மேலும் தேவையான தண்ணீர் வசதியும் கிடைத்து வருகிறது. வசதி படைத்தவர்கள் மட்டுமே அனுபவித்து வந்த சுகாதார வசதிகள் அனைத்தும் எங்களைப் போன்ற ஏழைத் தாய்மார்களுக்கும் கிடைத்திட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடு கிராமங்கள்தோறும் இதுபோன்ற மகளிர் மற்றும் குழந்தைகள் சுகாதார வளாகத்தை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நாங்கள் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்''.

*– செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு மாவட்டம்.*

★ ★ ★



# மழை நீர் மையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 21.8.2002 அன்று சென்னையில் அறிவியல் சுற்றுச்சூழல் மையம் மற்றும் ஆகாஷ் கங்கா டிரஸ்ட் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மழை மையத்தை (Rain Centre) தொடங்கி வைத்து, சுற்றி பார்வையிட்டு, மழை நீர் சேமிப்பு குறித்து சிறப்பு மலர் மற்றும் "நம்மால் முடியும்'' என்ற மழை நீர் சேமிப்பு குறித்த நகைச்சுவை சி.டி. (Compact Disc) ஆகியவற்றை வெளியிட்டார்கள்.

இந்தியாவிலேயே முதன் முதலாக மழை நீரை சேமிப்பது குறித்து "மழை மையம்'' என்ற கண்காட்சி கட்டடத்தை சென்னை மாநகரத்தில் மந்தவெளிப் பாக்கத்தில் 21.8.2002 அன்று திறந்து வைக்க வந்த முதலமைச்சர் அவர்களை வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் மற்றும் புதுடெல்லியில் அமைந்துள்ள அறிவியல் மற்றும் சுற்றுச் சூழல் மையத்தின் இயக்குநர் திருமதி சுனிதா நாராயண் மற்றும் உறுப்பினர்கள் வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து, மழை மையத்திற்கு வெளியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மழை நீர் சேகரிப்பு அமைப்பினை இந்த திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. ஜே.சரவணன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

செயற்கை முறையில் மழை பெய்வதற்காக அங்கு அமைக்கப்பட்டிருந்த கருவியை முதலமைச்சர் அவர்கள் இயக்கி வைத்து, செயற்கை முறையில் மழை பொழிய, அந்த நீர் மழை நீர் சேகரிப்பு உபகரணங்களால்



③

சேகரிக்கப்பட்டது. இந்தியாவிலேயே புதிய முறையில் வடிவமைக்கப்பட்ட இந்த மழை மையத்தின் கட்டடத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரிப்பன் வெட்டியும், குத்துவிளக்கேற்றி வைத்தும் தொடங்கி வைத்து, அங்கு மழை நீர் சேமிப்பு குறித்து வைக்கப் பட்டிருந்த கண்காட்சி அரங்கினை பார்வை யிட்டார். சென்னைக்கு குடிநீர் வழங்குவதில் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள் குறித்து திரு.ஏ.வைத்தியநாதன் மற்றும் திரு.ஜே.சரவணன் ஆகியோர் எழுதிய புத்தகத் தினையும், இந்தியாவில் மழை நீர் சேகரிப்பு பற்றி புள்ளிவிவரங்கள் அடங்கிய குறுந்தகட்டை (Compact Disc)யும் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.




மழை நீர் சேகரிப்பதற் கான வழிமுறைகள் அடங்கிய குறுந்தகட்டை கணினியில் பார்வையிட்ட முதலமைச்சர் அவர்கள், பாமர மக்களுக்கு இந்த வழிமுறைகள் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தில், குறுந்தட்டில் உள்ள அனைத்து மழை நீர் சேகரிப்பு முறைகளும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டார்.



பொதுமக்களுக்கு மழை நீர் சேகரிப்பு பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அமைக்கப் பட்டிருந்த இந்த மழை மையத்திற்கு, சென்னை மாநகராட்சியின் பங்காக ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையை முதலமைச்சர் அவர்களிடம் சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.கலைவாணன் அவர்கள் வழங்கினார். மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக தமிழக அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலாளர் திருமதி.சாந்தா ஷீலா நாயர் அவர்கள் மழை மையத்திற்காக ரூ.50,000–க் கான காசோலையை முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார். சென்னை மாநகராட்சி ஒப்புதலுடன் திருவல்லிக் கேணியில் உள்ள சீனிவாசா யங்மென்ஸ் அசோசியேஷன் இணைந்து தயாரித்த திரைப்பட நடிகர்

திரு.எஸ்.வீ.சேகர், திரு.வரதராஜன் ஆகியோர், மழை நீர் சேகரிப்பு குறித்து நடித்து சுமார் 20 நிமிடங்கள் ஓடக்கூடிய "நம்மால் முடியும்'' என்ற நகைச்சுவை குறுந்தகட்டையும் வெளியிட்டு, மழை நீர் சேகரிப்பு குறித்து பொதுமக்களுக்கு விளக்குவதற்காக, சென்னை மாநகராட்சிக்கு பிரச்சார ஊர்திக்கான சாவியை அதன் ஆணையர் திரு.கலைவாணன் அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த விழாவில், மாண்புமிகு பொதுப்பணி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத், தலைமைச் செயலாளர் திரு.சுகவனேஸ்வர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திருமதி.சாந்தா ஷீலா நாயர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# 12 ஏழை மாணவ - மாணவிகளுக்கு கல்வி நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.8.2002 அன்று தலைமைச் செயலகத்தில், பொறியியல், எம்.பி.பி.எஸ். செவிலியர் பட்டப்படிப்பு பயில கல்லூரிகளில் இடம் கிடைத்தும் போதிய நிதிவசதி இல்லாததால் ஆரம்ப நிலைக் கட்டணம் கூட கட்ட இயலாத நிலையில் உள்ள 12 ஏழை மாணவ மாணவியர் களுக்கு "முதலமைச்சர் பொது நிவாரண நிதி'' யிலிருந்து தலா ரூபாய் 25 ஆயிரம் விதமும், கண்பார்வையற்ற செல்வி ஏ.ஈஸ்வரி என்ற மாணவிக்கு கண்பார்வையற்றோர் பயன்படுத்தும் கைகடிகாரம், கண்ணாடி மற்றும் பி.ஏ.( வரலாறு) படிப்பதற்காக கல்லூரி மற்றும் விடுதிக் கட்டணமாக ரூபாய் 12,200/–ம், உட்பட மொத்தம் 3 இலட்சத்து 12 ஆயிரத்து 200/– ரூபாய்க்கான நிதியுதவிகளை வழங்கினார்.

தமிழகத்தில் உள்ள, பொறியியல், மருத்துவம் மற்றும் செவிலியர் கல்லூரியில் பயில இடம் கிடைத்தும் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் ஆரம்ப நிலைக் கட்டணத்தைக் கூட கட்ட முடியாமல் தவிக்கின்ற 12 மாணவ–மாணவியர்கள், தாங்கள் சேர அனுமதி பெற்ற கல்லூரிகளில் சேர்ந்து கல்வி பயில உதவி செய்யும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் மனு அளித்திருந்தார்கள். அதன்படி, போதிய நிதிவசதி இல்லாமல் தவித்த இந்த மாணவர்களுக்கு "முதலமைச்சர் பொது நிவாரண நிதி'' யிலிருந்து தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்.



இதன்படி, நாமக்கல் மாவட்டம் பி.மாதேஸ்வரன், திருவண்ணாமலை மாவட்டம் கே. உதயகுமார் ஆகியோர் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து செவிலியர் பட்டப்படிப்பு பயிலவும், சென்னையைச் சேர்ந்த பி.மோகன்ராஜ், எஸ். கார்த்திக், கணேசன், என். மேகநாதன், சங்கீதா, சரண்யா, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த டி.யுவராஜ், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். வில்சன் ஞானசிங், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பி.ஆனந்தன் ஆகியோர் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து பி.இ. பயிலவும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொருவருக்கும் ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் 3 இலட்ச ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் 6.8.2002 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற செல்வி ஏ. ஈஸ்வரிக்கு திருச்சியில் உள்ள ஹோலி கிராஸ் கல்லூரியில் பி.ஏ. ( வரலாறு) பட்டப்படிப்பு பயில அனுமதி ஆணை, கல்லூரி கட்டணம் மற்றும் விடுதி கட்டணமாக மாவட்ட நல நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட ரூபாய் 12,000/–க்கான காசோலை, கண்பார்வையற்றோர் பயன்படுத்தும் கைகெடிகாரம் மற்றும் கண்ணாடி ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

நிதியுத்வியைப் பெற்றுக்கொண்ட மாணவ–மாணவியர்கள் அனைவரும், தங்களது குடும்பத்தின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தக்க நேரத்தில் நிதியுதவி அளித்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி. ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித் து கொண்டார்கள்.

**மா**ண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழகத்திலுள்ள நான்கு மண்டலங்களிலும், சென்னை மாநகரத்திலும் உள்ள காவல், தீயணைப்பு–மீட்புப் பணி மற்றும் சிறை ஆகிய மூன்று துறைகளையும் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்காக குறை தீர்க்கும் நாள் நிகழ்ச்சிகளை நடத்தினார்.

காவல், சிறை மற்றும் தீயணைப்பு–மீட்புப் பணி ஆகிய துறைகளைச் சார்ந்த சீருடைப் பணியாளர்களை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நேரடியாக சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து, அவற்றின் மீது நடைமுறை விதிமுறைகளுக் கேற்ப உடனடி நடவடிக்கை மேற்கொள்வதற்காக நிகழ்த்தப் பட்ட இத்தகைய நிகழ்ச்சி தமிழகத்திலேயே முதன் முறையானது மட்டுமின்றி, இதுவரை இந்தியாவிலேயே வேறு எந்த மாநில முதலமைச்சரும் மேற்கொள்ளாத, தனித்துவம் மிக்க செயலாகும்.

# இந்தியாவிலேயே முதன்முதலாக காவலர் குறைகேட்பு!


# நடைமுறை விதிமுறைகளுக்கேற்ப உடனடித் தீர்வு!

## முதலமைச்சர் அறிவிப்பு

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சீருடைப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களில் 26.7.2002 அன்று தெற்கு மண்டலத்தைச் சார்ந்தவர்களையும், 2.8.2002 அன்று மேற்கு மண்டலத்தைச் சார்ந்தவர்களையும், 5.8.2002 அன்று மத்திய மண்டலத்தைச் சார்ந்தவர்களையும், 7.8.2002 அன்று வடக்கு மண்டலத்தை சார்ந்தவர்களையும், 14.8.2002 அன்று சென்னை மாநகரத்தை சார்ந்தவர்களையும் சந்தித்து அவர்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தார்.

மேற்காணும் மூன்று துறைகளிலும் அனைத்து நிலைகளிலும், பணியாற்றும் மொத்தம் 8,152 சீருடைப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களை முதலமைச்சர் அவர்கள் நேரடியாக சந்தித்தார்.

முதலமைச்சர் அவர்கள் சீருடைப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களிடம் பெறப்பட்ட மனுக்களில் உள்ள பல்வேறு குறைகளை கருத்தில் கொண்டு அவற்றில் சிலவற்றை உடனடியாக தீர்த்து வைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். அவை :







பணியின்போது மரணமடைந்த பணியாளர்களது குடும்பங்களின் வாரிசுதாரர்கள் அதிக அளவில், கருணை அடிப்படையில் தமக்கு பணி நியமனம் வழங்கப்படும் என்று எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்கள், இத்தகையோர் அனைவருக்கும், காவல், சிறை, தீயணைப்பு மீட்புப் பணி ஆகிய துறைகளில் உரிய பணிகள் உடனடியாக வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். உடல் தகுதி மற்றும் கல்வித் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில், உரிய துறையில் சீருடைப் பணியிலோ அல்லது அமைச்சுப் பணியிலோ காலியாக உள்ள பணியிடங்களில் அத்தகையோர் பணியமர்த்தப்படுவார்கள். தமிழக காவல் துறை விரைவில் மிகப் பெரிய அளவில் கணினிமயமாக்கப்பட உள்ளதால், இதற்குரிய கல்வித் தகுதி படைத்த வாரிசுதாரர்கள் கணினிப் பிரிவிலும் தகுதிக்கேற்ப பயன் படுத்திக் கொள்ளப்படுவார்கள்.

காவல் துறையில் சீருடைப் பணியாளர்கள் குறைவாக உள்ளனர் என்ற நிலைமை தமிழக காவல் துறை தன்னுடைய கடமையை திறம்பட ஆற்றுவதற்கு ஒரு தடைக்கல்லாக அமைந்து விடக் கூடாது என்பதற்காக, ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ் சீருடைப் பணியாளர்கள் தேர்வு செய்யப் பட்டு, காவல் துறையிலுள்ள அனைத்து காலியிடங்களும் நிரப்பப்படும். தமிழகத் திலுள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் குறைந்த பட்சம் ஒரு மகளிர் சார் ஆய்வாளர் மற்றும் இரண்டு மகளிர் காவலர்கள் பணியாற்றுகின்ற வகையில், மகளிர் சார் – ஆய்வாளர்கள் மற்றும் மகளிர் காவலர்கள் பணியில் அமர்த்தப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

3. ஆபத்தும், அபாயமும் நிறைந்த சீருடைப் பணியாளர்களின் அலுவலகப்பணி சிறப்பாக அமைய வேண்டுமென்றால், அவர்களது குடும்ப வாழ்க்கை அதற்கேற்றவாறு நிம்மதியோடு இருந்திட வேண்டும். தமது கணவர் அல்லது மனைவி பணியாற்றும் இடத்திற்கு மாறுதல் வழங்கப்பட வேண்டுமென்றும், தமது வயதான தாய், தந்தையரை கவனிக்க வேறு யாருமில்லாத காரணத்தால் பெற்றோர்கள் வசிக்கும் இடத்திற்கு மாறுதல் வழங்கப்பட வேண்டுமென்றும் கோரி அதிக அளவிலான கோரிக்கை மனுக்கள் பெறப் பட்டுள்ளன. சீருடைப் பணியாளர்களின் நிம்மதியான குடும்ப வாழ்க்கையை உறுதி செய்யும் வகையிலும், நிறைவான மனதுடன் தனது அலுவலகப் பணியை அவர்கள் ஆற்ற ஏதுவாகவும், இத்தகைய பணியிட மாறுதல் கோரிக்கைகள் அனைத்தும் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். எதிர்வரும் காலங்களில் நியாயமான பணியிட மாறுதல் கோரிக்கைகள் மீது தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக காவல் துறை மண்டல, சரக மாவட்ட தலைமை அலுவலர்களுக்கு உரிய அதிகாரம் வழங்கப்படும்.

4. சீருடைப் பணியாளர்கள் ஆற்றுகின்ற பணி மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகவும், மிகுந்த கடினமான தாகவும் இருக்கின்ற காரணத்தால், வேறு எந்த அரசுத் துறை அலுவலர்களைக் காட்டிலும் காவல் துறையில் பணியாற்றும் சீருடைப் பணியாளர்கள்

எளிதில் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாகும் நிலை உள்ளது. மிகச் சிறிய அளவிலான தவறுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் விளைவாக பதவி உயர்வு தடைபட்டு, அதனால் ஏமாற்றமும், அதிருப்தியும் அடைந்து பணியில் ஊக்கமின்றி ஏராளமானோர் இருப்பது கண்டறியப்பட்டது. இத்தகைய சீருடைப் பணியாளர்கள் தங்களது பணியை ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் ஓர் ஆக்கப்பூர்வமான சிந்தனையுடன் மேற்கொள்ளவும், தங்களது பணியை மீண்டும் புத்துணர்ச்சியுடன் ஒரு புதிய அத்தியாயமாக தொடங்க வாய்ப்பு அளிக்கும் வகையில் "சிறிய தண்டனைகள்" அனைத்தையும் உடனடியாக ரத்து செய்யுமாறு மாண்புமிகு. முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார். மேலும், "பெரிய த்ண்டனைகள்" வழங்கப்பட்டுள்ள எல்லா நிகழ்வுகளிலும், அடுத்த நிலையில் உள்ள மேல்முறையீட்டு அதிகாரி, உடனடியாக மறு ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளார்கள்.

5. தாங்கள் இழைத்த சிறிய தவறுகளால் பாதிக்கப்பட்டு தமது பணிக்கால முழுமைக்கும் ஒரு பதவி உயர்வாவது அடைய முடியுமா என்ற மனச்சோர்வுடன் ஏராளமான சீருடைப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். மேலும், பலருக்கு ஒரு தண்டனை கூட பெறாத நிலையிலும், பதவி உயர்வு வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளவர்களுக்கு, குறிப்பாக பணி ஓய்வு பெறும் நிலையில் உள்ளவர்களுக்கு, அவர்கள் மீது உள்ள சிறிய தண்டனைகளை ரத்து செய்து, அவர்களது பணிமூப்பின் (Seniority) அடிப்படையில் அடுத்த நிலை பதவி உயர்வு வழங்குமாறு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். எவ்வித தண்டனையும் இல்லாது தகுதியுடையவர்களுக்கு அடுத்த நிலை பதவி உயர்வு உடனடியாக வழங்கப்படும்.

6. காவல் துறையில் பணியாற்றும் காவல் அலுவலர்கள் அனைவரும் காவல் துறையின் அனைத்து பிரிவுகளிலும் திறன் பெற்றிருக்க வேண்டும் என்னும் அடிப்படையில், நேரடியாக பணியில் சேரும் காவல் துறை அலுவலர்கள், சட்டம் – ஒழுங்கு, ஆயுதப்படை , தமிழ்நாடு சிறப்பு காவல்படை, போக்குவரத்து போன்ற அனைத்து பிரிவுகளிலும் பணியாற்றி தங்களது திறமையை வெளிப்படுத்த வேண்டுமென்றும், ஒரு குறிப்பிட்ட பிரிவில் மட்டுமே அவர்களது பணித்திறன் முடங்கிவிடக்கூடாது என்றும் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையை நிறைவேற்றும் வகையில் தற்போதுள்ள விதிகளில் தகுந்த மாற்றங்கள் செய்யப்படும்.

7. சிறப்பு சார் ஆய்வாளர்களை, "சிவப்பு ஊதுகுழல் பின்னல் கயிறு" (Red Braid Whistle Cord) அணியச் செய்து அவர்கள் தனிமைப்படுத்தப்படும் முறை உடனடியாக நிறுத்தப்படும். இவர்கள் அனைவரும் மற்ற காவல் துறையினர் போலவே "காக்கி வண்ண ஊதுகுழல் பின்னல் கயிறு" (Khadi Colour Braid Whistle Cord) அணியலாம் என்றும் முதலமைச்சர் உத்திரவிட்டுள்ளார்.





**காவல், சிறை மற்றும் தீயணைப்பு-மீட்புப் பணி ஆகிய துறைகளைச் சார்ந்த சீருடைப் பணியாளர்களை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நேரடியாக சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து, அவற்றின் மீது நடைமுறை விதிமுறைகளுக் கேற்ப உடனடி நடவடிக்கை மேற்கொள்வதற்காக நிகழ்த்தப் பட்ட இத்தகைய நிகழ்ச்சி தமிழகத்திலேயே முதன் முறையானது மட்டுமின்றி, இதுவரை இந்தியாவிலேயே வேறு எந்த மாநில முதலமைச்சரும் மேற்கொள்ளாத, தனித்துவம் மிக்க செயலாகும்.**

8. சீருடைப்பணியாளர்கள் ஆபத்து நிறைந்த, அபாயகரமான பணிகளை மேற்கொள்வதால், உடல் காயங்களுக்கும், நோய்களுக்கும் இலக்காகி பாதிப்புக்கு ஆளாகின்றனர். இவ்வாறு பாதிப்புக்குள்ளாகி மருத்துவ சிகிச்சைக்காக செலவு செய்த பணத்தை தமிழ்நாடு காவலர் நல நிதியிலிருந்து திரும்பத் தரவேண்டும் என்று கோரி பெருமளவில் கோரிக்கைகள் வரப்பெற்று அவை நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் அங்கீகரித்து வெளியிட்டுள்ள பட்டியலில் அவர்களுக்கு எற்பட்ட நோய் பட்டியலில் இடம் பெறவில்லை என்ற காரணத்தாலும், அவர்கள் சிகிச்சை பெற்ற மருத்துவமனை அரசால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெறவில்லை என்ற காரணத்தாலும் தாங்கள் செலவு செய்த பணத்தை அரசிடமிருந்து திரும்பப் பெற முடியாத நிலையில் சீருடைப் பணியாளர்கள் உள்ளனர் என்பது கண்டறியப்பட்டது. எனவே, தாங்கள் மருத்துவ சிகிச்சைக்காக செலவு செய்த பணத்தை காவலர்கள் திரும்பப் பெற ஏதுவாக, அத்தகைய நோய்களை ஏற்கெனவே வெளியிட்டுள்ள அரசு பட்டியலில் சேர்க்கவும், சிகிச்சை அளிக்கின்ற மருத்துவமனைகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்தி, அத்தகைய மருத்துவமனைகளையும் இந்தப்பட்டியலில் சேர்க்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தமிழக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் உதவியுடன், தற்போதுள்ள 11 காவல் மருத்துவமனைகளையும் மேம்படுத்திட மிகப் பெரிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இந்த மருத்துவமனைகளில் அனைத்து நவீன உபகரணங்களும் பொருத்தப்பட்டு, காவல் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 24 மணி நேரமும் மருத்துவ வசதி அளிப்பது உறுதி செய்யப்படும். பாதிக்கப்பட்ட காவலர்கள் சிகிச்சைக்கு 24 மணி நேரமும் அனுமதிக்கப் படுவார்கள்.

10. காவல் துறையில் தற்போது பெருமளவில் பெண்கள் பணிக்கு சேருகிறார்கள். இதன் விளைவாக, குடும்பத்தில் வேறு யாரும் கவனிக்க ஆளில்லாத நிலையில், சின்னஞ்சிறு கைக்குழந்தைகளுடன் மகளிர் காவலர்கள் அல்லல்படுகின்ற நிலையினை நீக்குகின்ற வகையில், இந்தக் குழந்தைகளை கவனித்துக்கொள்ள, பயிற்சி பெற்ற ஆயாக்களுடன் கூடிய குழந்தைகள் காப்பகங்கள் (Creches) தமிழகம் முழுவதும் அமைத்திட முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

11. துணிவுக்கும், வீரத்திற்கும் பெயர் பெற்றவை தமிழ்நாடு காவல் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்பு – மீட்புப் பணித் துறை ஆகிய துறைகள். இந்தத் துறைகளைச் சார்ந்த வீரர்களும், வீராங்கனைகளும் மிகவும் இக்கட்டானதும், ஆபத்து நிறைந்ததுமான சூழ்நிலைகளில் தங்களது வீரத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். இவ்வாறு வீரம் நிறைந்த வெற்றிச் செயல் புரிந்த பலர், அலுவலக நடைமுறை வார்ந்த தாமதம் காரணமாகவோ, விளக்கம் அளிக்கப்படாத வேறு காரணங்களாலோ, இதுவரை உரிய முறையில் அங்கீகரிக்கப் படாமலேயே உள்ளனர். இவர்களுக்கு உரிய முறையில் சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் விரைவுபடுத்தப்பட்ட பதவி உயர்வுகள் ஆகியவற்றை நடைமுறை விதிகளுக்குட்பட்டு வழங்கி, இவர்களது வீரச் செயல்களுக்கு அங்கீகாரம் அளித்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

12. ஒரே பணிக்கு மாறுபட்ட ஊதியம், பணியில் இளையவர் மூத்தவரைக் காட்டிலும் அதிக ஊதியம் பெறுதல், பதவி உயர்வில் தேக்கம் போன்ற குறைகள் தெரிவிக்கப்பட்டு, அவற்றை சரி செய்து உதவுமாறு பெருமளவில் கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு வழங்கப்பட்டுள்ள அனைத்து கோரிக்கைகளையும் அந்தந்த துறை சார்ந்த காவல்துறை தலைமை இயக்குநர், தீயணைப்பு – மீட்புப் பணித்துறை இயக்குநர், சிறைத்துறை கூடுதல் தலைமை இயக்குநர் ஆகியோர் ஆய்வு செய்து, மண்டல வாரியாக சிறப்புஅறிக்கையினை ஒரு மாத காலத்திற்குள்ளாக அரசுக்கு அளிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

13. காவலர் குடியிருப்புகளில் தங்கியுள்ள பல காவலர்களிடமிருந்து இடமாறுதலுக்கு பின்னும் அந்த அரசு குடியிருப்புகளில் அவர்கள் அதிக நாள் தங்கியிருந்தமைக்காக (Over-stayed) தண்ட வாடகை (Penal Rent) வசூலிக்கப்படுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் இவ்வாறு விதிக்கப்பட்டு நிலுவையிலுள்ள தண்ட வாடகையை இந்த ஒரு முறை மட்டும், one time measure – ஆக ரத்து செய்திட ஆணையிட்டதுடன் இனி வருங்காலங்களில் ஒரு குறிப்பிட்ட காவல் நிலையத்திலிருந்து மாறுதல் செய்யப்படும் காவலர்கள் உரிய கால அளவுக்குள்ளாக தங்கள்



குடியிருப்புகளை காலி செய்து விட வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளார்.

14. காவல், சிறை மற்றும் தீயணைப்பு – மீட்புப் பணித்துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள், தமக்கு கீழ் பணியாற்றும் ஊழியர்களின் குறைகளை கேட்டறிந்து, அவற்றை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆயுதப் படை அணி வகுப்பில் கலந்து கொண்டு, காவலர்களின் குறைகளை கேட்டறிய வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் குறை தீர்க்கும் நாள் – ஆக அறிவிக்கப்பட்டு மாவட்டத்திலுள்ள அனைத்து பிரிவுகளிலும் பணியாற்றும் காவல் துறை பணியாளர்கள், அலுவலர்கள் குறைகளை கேட்டறிய வேண்டும். துணை காவல்துறைத் தலைவர்கள் (DIGs) மாதத்திற்கு ஒரு முறை குறை தீர்க்கும் நாள் நிகழ்ச்சியை நடத்த வேண்டும். மண்டல காவல்துறை தலைவர்கள், சிறப்புப் பிரிவு காவல்துறை தலைவர்கள், கூடுதல் தலைமை இயக்குநர்கள் ஆகியோர் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை குறை தீர்க்கும் நாள் நிகழ்ச்சியை நடத்த வேண்டும். காவல்துறை தலைமை இயக்குநர் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குறை தீர்க்கும் நாள் நிகழ்ச்சியை நடத்தவேண்டும். சீருடைப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் தெரிவிக்கின்ற கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அவற்றின் மீது எடுக்கப்படும் முடிவுகள் குறித்து எழுத்துப்பூர்வமான ஆணை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

15. காவல்துறையில் கடைபிடிக்கப்படும் இதே நடைமுறை சிறைத் துறையிலும், தீயணைப்பு – மீட்புப் பணித்துறையிலும் பின்பற்றப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்.

★ ★ ★



# நியாயவிலைக் கடைகளில் மலிவு விலையில் கைத்தறித்துணி விற்பனை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுத் துறை மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் இயங்கி வரும் 27,000 நியாயவிலைக் கடைகள் மூலமாக மலிவு விலை கைத்தறி சேலைகள் மற்றும் வேட்டிகள் விற்பனை செய்யும் திட்டத்தை, 6.8.2002 அன்று சென்னை, அசோக் நகர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வளாகத்தில் உள்ள டி.யு.சி.எஸ். கடையில் தொடங்கி வைத்தார்கள். தமிழகத்திலுள்ள ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் அன்றே மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இந்தத் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

இலவச சேலை மற்றும் வேட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் மாநிலத்திலுள்ள 350 சங்கங்கள் மூலமாக 25,000–க்கும் மேலான நெசவாளர் குடும்பங்கள் ஈடுபடுத்தப்பட்டனர். விருதுநகர், காஞ்சிபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், திருச்செங்கோடு, வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், தேனி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள சங்கங்களைச் சார்ந்த கைத்தறி நெசவாளர்கள் மேற்படி உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டனர். 31.12.2001 முடிய இத்திட்டத்தின் கீழ் 45 இலட்சம் சேலைகள் மற்றும் 45 இலட்சம் வேட்டிகள் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்பட்டன.




நடப்பு நிதி ஆண்டில், 2001–2002–ஆம் ஆண்டுக்கான இலவச சேலை மற்றும் வேட்டி விநியோகத் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட 45 இலட்சம் சேலைகள் மற்றும் 45 இலட்சம் வேட்டிகளில், தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகையின் போது மாநிலத்திலுள்ள முதியோர் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு 20 இலட்சம் சேலைகள் மற்றும் 4 இலட்சம் வேட்டி வழங்குவதன் மூலம் உபயோகப்படுத்தப்படும் என தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதுவரை கொள்முதல் செய்யப்படாத, நடப்பாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 18 இலட்சம் சேலைகள் மற்றும் 9 இலட்சம் வேட்டிகளையும் உடனடியாக கோ–ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்டுள்ளதில் மீதமுள்ள 25 இலட்சம் சேலைகள் மற்றும் 41 இலட்சம் வேட்டிகளுடன் கொள்முதல் செய்யப்படவுள்ள 18 இலட்சம் சேலைகள் மற்றும் 9 இலட்சம் வேட்டிகளையும் சேர்த்து (ஆக மொத்தம் 43 இலட்சம் சேலைகள் மற்றும் 50 இலட்சம் வேட்டிகள்) சுமார் ரூ.80.14 கோடி பெறுமானம் உள்ளவற்றை நியாய விலைக்கடைகள் மூலம் ஒரு சேலை ரூ.40/– வீதமும் ஒரு வேட்டி ரூ.30/– வீதமும் விற்பனை செய்யப்படும். இம்மலிவு விலை சேலைகள் மற்றும் வேட்டிகள் விற்பனையின் காரணமாக அரசுக்கு சுமார் ரூ.47.94 கோடி மானியமாக செலவாகும். இது நெசவாளர்களுக்கு அரசால் அறிவிக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகளில் ஒரு பகுதியாகும்.

இலவச சேலை வேட்டி திட்டத்தின் கீழ் பணிபுரிந்த நெசவாளர்களின் துயரைக் கண்டு மனம் நெகிழ்ந்த தமிழக முதலமைச்சர் அவர்கள், கடந்த 29.7.2002 அன்று ஒவ்வொரு நெசவாளர் குடும்பத்துக்கும் தலா 20 கிலோ இலவச அரிசி வழங்கி உடனடி நிவாரணத்திற்கு உத்தரவிட்டார். இது ஜூலை மாதத்திற்காக வழங்கப்பட்ட நிவாரணம் ஆகும். மேலும், 2002–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கான 20 கிலோ இலவச அரிசி வழங்கும் நிகழ்ச்சி 21.8.2002 அன்று மீண்டும் வழங்கப்படும். 15.9.2002 அன்று மறுபடியும் மூன்றாவது முறையாக ஒவ்வொரு நெசவாளர் குடும்பத்துக்கும் 20 கிலோ இலவச அரிசி வழங்கப்படவுள்ளது.

கைத்தறி வேட்டி மற்றும் சேலையை கூட்டுறவு நியாய விலை கடைகளின் மூலம் விற்பனை செய்யும் இத்திட்டமானது, "கூட்டுறவுகளுக்கு இடையே கூட்டுறவு" என்ற கூட்டுறவு இயக்கத்தின் மிக சிறந்த கொள்கைகளுள் ஒன்றை நடைமுறைபடுத்தும் வண்ணம் அமைந்துள்ளது.

6.8.2002 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சேலை வேட்டி கொண்ட 3 செட்களை ரூ.210/– செலுத்தி வாங்கிக் கொண்டார்கள். மேலும் அங்கு வந்த நுகர்வோர் ஆறு பேர்கள் ஒவ்வொருவரும் ரூ.70/ – வழங்கி முதலமைச்சர் அவர்களிடமிருந்து **மலிவு விலை** சேலை வேட்டியை பெற்றுக் கொண்டார்கள். அந்தத் தொகை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரிடம் வழங்கப்பட்டது.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் திரளான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

● ● ●

4

# தந்தை பெரியாரின் புரட்சி மொழிகள்



உலக உயிர்களில் அறிவு நிரம்பப் பெற்ற உயிர் – பகுத்தறிவுள்ள உயிர் மனிதன்தான். அவன் தன் அறிவைப் பயன்படுத்தினால் மிகச் சிறந்த காரியங்களை எல்லாம் சாதிக்க முடியும்.

* * *

ஒரு சமூகமென்றிருந்தால் அச்சமூகத்தில் ஏழைகளில்லாமலும், மனச்சாட்சியை விற்றுப் பிழைப்பவர்கள் இல்லாமலும் செய்வதுதான் சரியான சமூகச் சீர்திருத்த வேலையாகும்.

* * *

சீர்திருத்தங்கள் – மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே அமைய வேண்டும்.

* * *

சக்கி முக்கிக் கல்லால் முதலில் நெருப்பை உண்டாக்கியவன் அந்தக் காலத்து "எடிசன்". அப்புறம் படிப்படியாக முன்னேற்றமாகி இப்பொழுது மின்சாரத்தில் நெருப்பைக் காண்கிறோம். எனவே, மாற்றம் இயற்கையானது. அதைத் தடுக்க யாராலும் முடியாது.

* * *

நாளைக்கு வேண்டும் என்று தேடும் தன்னம்பிக்கையற்ற தன்மையும், எவ்வளவு கிடைத்தாலும் போதாது என்கிற ஆசை அடிமைத் தன்மையும், மனிதனின் பிறப்புரிமையாகிய தன்மானத்திற்கு இயற்கைத் தடைகள்.

* * *

ஒரு நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமானாலும் அவரவர்கள் நாகரிகம் பெற்று உயர்ந்த நல்வாழ்க்கை நடத்தவேண்டுமானாலும் அரசியல், பொருளியல், தொழிலியல் ஆகிய துறைகளில் தகுந்த ஞானம் பெற வேண்டுமானாலும் அந்நாட்டு மக்களுக்கு முதலில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

* * *

வாசகசாலை என்பது பொது அறிவு விளக்கத்தையும் சகல துறைகளிலும் ஞானத்தையும் உண்டாக்கும்.

* * *

ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாயப் பற்று மொழிப்பற்றேயாகும். மொழிப்பற்று இராதவரிடத்து தேசப்பற்று இராதென்பது நிச்சயம். தேசம் என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது.

* * *

கூட்டுறவு என்கிற கொள்கை சரியான உயரிய முறையில் நம் நாட்டில் ஏற்பட்டுவிடுமோனால் மக்கள் சமூகமே சஞ்சலமற்று, நாளைக்கு என்ன செய்வதென்ற ஏக்கமின்றி, திருப்தியுடன் நிம்மதியாகக் குதூகலமாக வாழ வழி ஏற்பட்டுவிடும்.

* * *

மக்களுக்குள்ள சமுதாயக் கொடுமை தீர வேண்டியது எவ்வளவு அவசியமோ அது போலவே, மக்களுக்குள்ள பொருளாதாரக் கொடுமையும் தீரவேண்டியது அவசியமாகும்.

* * *

பெண்களுக்குப் பகுத்தறிவும், கல்வியும், உலக நடப்புக் கல்வியும், தாராளமாகக் கொடுத்து, மூடநம்பிக்கை, பயம் ஆகியவற்றை ஊட்டக்கூடிய கதைகளையோ, சாத்திரங்களையோ, இலக்கியங்களையோ, காணவும் கேட்கவும் சிறிதும் இடமில்லாமல் செய்ய வேண்டும்.

* * *

மனிதனுடைய ஒழுக்கம், நாணயம், நேர்மை முதலானவை அவற்றை உடைய மனிதனுக்குப் பெருமை அளிப்பது மாத்திரமல்லாமல், அவனைச் சுற்றியுள்ள எல்லா மக்களுக்கும் நன்மையும் அளிக்கும்.

வாலிபர்களுக்கு வெறும் உற்சாகமும், துணிவும், தியாகபுத்தியும் மாத்திரம் இருந்தால் போதாது. நன்மை தீமையை அறியும் குணமும், சாத்தியம் அசாத்தியம் அறியும் குணமும், ஆய்ந்து ஓய்ந்து பார்க்கும் தன்மையும் இருந்தால் தான் வாலிபர்கள் பொதுவில் பயன்படுக்கூடியவர்கள் ஆவார்கள்.

* * *





# பேரறிஞர் அண்ணாவின் பொன் மொழிகள்

மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானால் அவர்கள் மனத்திலே உள்ள மாசு, மதவெறி, சாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் அழிந்தாக வேண்டும்.

* * *

பொருள் பாடுபடுபவனுக்குப் போய்ச் சேரவேண்டும். போய்ச் சேரும் பொருளும் பயனுள்ள காரியத்துக்குச் செலவிடப்பட வேண்டும். இரண்டும் நமது கொள்கை, இரு விழிகளில் ஒன்றுக்கு மற்றொன்று பாழாகக் கூடாது.

* * *

மொழிப் பற்று இருப்பது எந்த வகையிலும் வருந்தத்தக்கதல்ல. போற்றத்தக்கது.

* * *

கலை ஓர் இன மக்களின் மனப்பண்பு, அவ்வின மக்களிடையே தோன்றும், தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே, கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும் விரிந்தும் வரும் என்பதே நுண்ணறிவினரின் துணிவு.

* * *

சாதிமுறை, சடங்கு என்பனவெல்லாம் தந்திரமாக அமைக்கப்பட்ட பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே, சாதி முறையை ஒழிப்பதும் சமதர்மத் திட்டம் தான்.

* * *

எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி, அது இந்தக் காலத்திற்குப் பொருந்துகிறதா, வாழ்க்கைக்குத் தேவையானதுதானா, அறிவுக்கு ஏற்றதா என்றுதான் நாம் பின்பற்ற வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு எதையும் அர்த்தமற்றும் பொருத்தமல்லாமலும் பின்பற்றக்கூடாது.

* * *

மனிதனின் மனம் எல்லா உலகங்களையும் விடப் பெரியது! அந்த இதயம் பண்புக்கேற்றபடி பெரியதாகத் தக்கது, நினைப்புக் கேற்றபடி குறுகத் தக்கது. ஆகவே, அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும்.

* * *

நாட்டில் கற்றறிவாளர்கள் எந்த அளவில் இருக்கின்றனரோ, அதைக் கொண்டுதான் நாட்டு முன்னேற்றத்தை மதிப்பிட இயலும்.

* * *

மறுமலர்ச்சி என்பது மாண்புகளை மாய்த்திடும் நஞ்சு அல்ல மாண்புகளை மாய்க்கும் நச்சுப் பூச்சிகளை அழித்திடும் முறை.

* * *

காலம் மாறக்கூடியது. மாறிக் கொண்டு தான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

* * *

பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் சோபிதத்தைக் காட்டிப் புத்துலகு அமைக்க வேண்டும் வாலிபர்கள்.

* * *

சமுதாயக் கொடுமைகள் ஒருபுறமும் சாதிப் பூசல்கள் வேறோர் புறமும் இருந்து கொண்டிருப்பதால் தான் இந்த நாட்டில் வீரர்கள் கோழைகளாகின்றனர். மக்கள் வாழ்வு வழுக்கு நிலமாகிறது.

ஒற்றுமை – கூட்டுறவு – ஒப்பந்தம் – கூடிவாழ்தல் – நட்பு – அன்பு என்றுள்ள எத்தனையோ பதங்களும் ஒவ்வோர் அளவு வரை மட்டுமே செல்லக்கூடியவை. முழுத்திருப்தி தருபவை அல்ல – தோழமை என்ற நிலையை அடையும் படிக்கட்டுகள் இவை. ஆனால் தோழமை இவ்வளவுக்கும் மேலான ஒரு நிலை, பேதம் நீக்கிய நிலை அல்ல – பேதம் ஏற்படாத நிலை – ஏற்பட முடியாத நிலை.

* * *

1928-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ஆம் தேதி ஜவஹர்லால் நேரு தன் மகள் இந்திரா பிரியதர்சினிக்கு எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதி :

"உனக்கு இந்தக் கதை தெரியுமா?

மன்னன் நெப்போலியன் ஒரு இரவில் தன் அரண்மனையில் உலாவிக் கொண்டிருக்கும் போது காவல் பணியில் இருக்கும் ஒரு வீரன் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

காவல் பணி செய்யும் போது தூங்குவது மிகப் பெரிய குற்றமாகும். மன்னன் தூங்கிக் கொண்டிருக்கும் காவலாளியை எழுப்பவில்லை. அதற்கு மாறாக மன்னன் அந்தக் காவலாளியின் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு அரண்மனையைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டார்."

### ஊதியம் மரணம்...

பிரிட்டிஷ்காரர்களின் ஆதிக்கத்திலிருந்து நமது நாட்டை விடுவிக்க நம் நாட்டு மக்கள் போராடிக் கொண்டிருக்கும் போது ஒரு பத்திரிகையில் கீழ்க்கண்ட விளம்பரம் வந்துள்ளது :

''பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்துப் போராட தைரியம் மிகுந்த போர் வீரர்கள் தேவை.

ஊதியம் – மரணம்

விலை – உயிர்த்தியாகம்

ஓய்வு ஊதியம் – சுதந்திரம்

போர்க்களம் – இந்தியா''.


## SRI AGATHIYAR NADI JOTHIDA NILAYAM

**189, Periyar Nagar, Chengalpet Road, Little Kanchipuram - 631 503.**
**Tamil Nadu, INDIA.**

உங்கள் வாழ்க்கையின் எதிர்கால பலன்களை

ஸ்ரீ அகத்திய மகரிஷியால் அருளப்பட்ட பழங்கால ஓலைச்சுவடிகள் மூலம்,

இந்நாட்டவர்க்கு மட்டுமல்லாமல் அனைத்துலக மக்களுக்கும்,

தமிழிலிருந்து அவரவர் மொழிக்கு ஏற்ப மாற்றி பலன்கூறும் சேவையை

பல ஆண்டுகளாக பெரியோர்களின் நட்பு, ஆசியோடு செய்து வருகிறோம்.

நீங்களும் உங்கள் வாழ்க்கையின் பலன்களை அறிந்து நலம்பெற


வேண்டுமென்பதே எங்கள் சேவையின் நோக்கம்.

இவண்

**D. பாலசுப்பிரமணியம்**

நாடி ஜோதிடர்
ஸ்ரீ அகத்தியர் நாடி ஜோதிட நிலையம்
189, பெரியார் நகர்
(செங்கற்பட்டு ரோடு)
காஞ்சிபுரம் – 631 501
தொலைபேசி : 04112–269283




# மெல்லும் புகையிலை மற்றும் புகையிலை அடங்கிய பான் மசாலா மற்றும் குட்கா விற்க தடை

பான்மசாலாவில் பெருமளவில் கலந்துள்ள கட்டச்சு என்ற பொருளுக்கு புற்று நோயை உண்டாக்கும் சக்தி உண்டு. நாட்டில் எல்லா வகையான புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் புகையிலை உண்ணும் பழக்கத்தினால் பாதிக்கப் பட்டவர்கள் ஆவர். இந்தியாவில் வாய் புற்றுநோய் அதிக அளவு ஏற்படுவதற்கு புகையிலை மெல்லும் பழக்கம் தான் காரணமாகும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பள்ளி மாணவர்கள் மற்றும் இளந்தலைமுறையினர் மத்தியில் குட்கா மற்றும் பான்மசாலாவை பயன்படுத்தும் பழக்கம் அதிகரித்துள்ளது என்பது ஆய்வுகளி லிருந்து தெரிய வருகிறது. அவர்களில் பலர் அவர்கள் உடல் நலத்திற்கு பாதகமாக உள்ள இப்பழக்கத்திற்கு அடிமையாகி விட்டனர்.

எனவே பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு **7.11.2001** நாளிட்ட அரசாணை நிலை எண்.301–இல் மெல்லும் புகையிலை, புகையிலை அடங்கிய பான் மசாலா மற்றும் குட்காவின் விற்பனையை தடை செய்து இவ்வரசு ஆணை பிறப்பித்தது. **19.11.2001** அன்று இதற்கான அறிக்கையை தமிழ்நாடு அரசு இதழில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்குநர் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக தடை செய்யப்பட்ட மெல்லும் புகையிலை, புகையிலை அடங்கிய பான் மசாலா மற்றும் குட்கா ஆகியவை பெருமளவில் கைப்பற்றப்பட்டன.

மேற்படி **19.11.2001** நாளிட்ட அறிவிக்கையை எதிர்த்து, பான் மசாலா, குட்கா மற்றும் மெல்லும் புகையிலை தயாரிப்பாளர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் தொடுத்தனர். ரிட் மனுதாரர்களுடைய வளாகங்களை சீல் வைக்கக்கூடாது. அவ்வாறு சீல் வைக்கப்பட்டிருந்தால் அவைகள் நீக்கப்பட வேண்டும் என்றும், ஆனால் பொது மக்களுக்கு ரிட் மனுதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களை விற்பனை செய்யக்கூடாது என்றும் உயர் நீதி மன்றம் இடைக்கால ஆணையிட்டது. **21.12.2001** அன்று ரிட் மனுக்களை முடிவு செய்த உயர்நீதிமன்றம், அதன் ஆணையில், சம்பந்தப்பட்ட நபர்கள் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட பொருட்களை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்காக அவைகளை உற்பத்தி செய்யவும், சேகரிக்கவும், கொண்டு செல்லவும் செய்யலாம் எனவும், ஆனால் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் மெல்லும் புகையிலை மற்றும் புகையிலை அடங்கிய பான் மசாலா மற்றும் குட்காவினை உண்பதற்காக இம்மாநிலத்திற்குள் விற்பனை செய்யக்கூடாது என்றும் உத்தரவிட்டது.

இம்மாநிலத்திற்குள் நடக்கும் சட்டத்திற்கு புறம்பான குட்கா விற்பைனயை தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஒழுங்கான முறைப்படி எடுக்கப்பட வேண்டும் எனவும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநருக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது. களப்பணியாளர்கள் விழிப்போடு பணியாற்றுவதிலும் மற்றும் சரிபார்த்தல் நடவடிக்கைகளை அவர்கள் முறையாக எடுப்பதனையும் உறுதி செய்யுமாறு இயக்குநர் மேலும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதுவரை **17,192,115** கிலோ எடையுள்ள மேலே குறிப்பிடப்பட்ட தடை செய்யப்பட்டுள்ள பொருட்கள் விற்பனை செய்பவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அவற்றின் மதிப்பு சமார் ரூ.75 இலட்சங்கள் ஆகும்.

அறிவிக்கையைத் தொடர்ந்து மெல்லும் புகையிலை, புகையிலை அடங்கியுள்ள பான் மசாலா மற்றும் குட்காவினை உண்பதற்காக இம்மாநிலத்திற்குள் விற்பனை செய்ய முழுமையாக தடை விதிக்கப்பட்டுள்ளது. மெல்லும் புகையிலை, புகையிலையை உள்ளடக்கிய பான் மசாலா மற்றும் குட்காவினை சட்டத்திற்கு புறம்பாக இம்மாநிலத்தில் உண்பதற்கரக விற்பனை செய்வதற்கு எதிரான தடையை திறம்பட அமல்படுத்த இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, தடையை மீறி சட்டவிரோதமாக எவரேனும் மேற்குறிப்பிட்ட தடை செய்யப்பட்ட் பொருட்களை இம்மாநிலத்திற்குள் விற்பன்ன செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ★

# பெரம்பலூர் மாவட்டத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பள்ளிகளிலேயே சான்றிதழ்கள் வழங்க சிறப்பு ஏற்பாடு

ஜூன், ஜூலை மாதங்களில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்குவது கிராம நிர்வாக அலுவலர்களுக்கு முக்கியப் பணிகள். பள்ளி மாணவ, மாணவிகள் புதிய வகுப்பு சேர்க்கை மற்றும் கல்வி உதவித்தொகை பெற்றிட இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்றவை கோருவார்கள்.

மாணவ, மாணவிகள் சான்றிதழ்கள் பெறுவதில் ஏற்படும் சிரமங்களை தவிர்த்திட, பெரம்பலூர் மாவட்டத்தில் பள்ளிகளிலேயே சான்றிதழ்கள் வழங்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சாதாரணமாக பள்ளி மாணவ,மாணவிகள் சான்றிதழ்கள் பெற்று கிராம நிர்வாக அலுவலர்களிடம் கையொப்பம் பெற்று கிராமத்திலிருந்து மற்றோர் இடத்தில் உள்ள வருவாய் ஆய்வாளரிடம் மேலொப்பம் பெற்று, அதன் பிறகு வட்டாட்சியர் அலுவலகத்தில் துணை வட்டாட்சியர் அல்லது வட்டாட்சியரிடம் கையொப்பம் பெறுவதில் அதிக நேரமும், செலவும் ஏற்படும்.

தமிழ்நாடு அரசு கல்வி உதவித் தொகையாக தாழ்த்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட 3–ம் வகுப்பு முதல் பயிலும் பெண் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகையினை பெற பள்ளி தலைமை யாசிரியர்கள் மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர், மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்கண்ட கல்வி உதவித்தொகையினை பெற்றிட பல பள்ளிகளில் தாமதமாகவே விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுகின்றன. சில பள்ளிகளில் கல்வி உதவித்தொகைக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதேயில்லை. இதற்கு கீழ்க்காணும் காரணங்களினால் தாமதம் ஏற்படுகின்றன. முக்கியமான காரணங்களாக

1. தலைமையாசிரியர்கள் காலதாமதமாக விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதும்.

2. மாணவ, மாணவிகள் தேவையான சான்றிதழ்களை பெற்று வழங்குவதில் ஏற்படும் காலதாமதமாகும்.

சான்றிதழ்கள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்த்திடவும், குறித்த காலத்தில் கல்வி உதவித்தொகை வழங்கிடவும் பள்ளிகளிலேயே சான்றிதழ்கள் விரைந்து வழங்க நடவடிக்கைககள் எடுக்கப்பட்டுள்ளன.

கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள் குறிப்பிட்ட நாட்களில் பள்ளிகளுக்கு நேரில் சென்று, பள்ளி மாணவ மாணவிகளுக்கான சான்றிதழ் கோரும் விண்ணப்பங்களைப் பெற்று, அடுத்த நாள் விண்ணப்பங்கள் மீது ஆய்வு மற்றும் விசாரணை மேற்கொண்டு, சான்றிதழ்களை விண்ணப்பம் பெற்ற மூன்றாம் நாள் பள்ளிகளுக்கு சென்று வழங்க வேண்டும். எடுத்துக்காட்டாக திங்கள்கிழமை பெறும் விண்ணப்பங்களை, செவ்வாய்கிழமை விசாரணை மேற்கொண்டு புதன்கிழமை சான்றிதழ்களை பள்ளிகளில் வழங்கிட வேண்டும்.

பின்னர் பூர்த்தி செய்யப்பட்ட கல்வி உதவித்தொகை கோரும் விண்ணப்பங்களை உரிய பரிந்துரைகளுடன் வட்டாட்சியரிடம் கையொப்பம் பெற்று கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மற்றும் மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலரிடம் கல்வி உதவித்தொகை அனுமதிக்காக



ஜூலை மாத இறுதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். கல்வி உதவித்தொகை மற்றும் படிப்புக் கட்டண சலுகைகள் ஆகஸ்டு மாதத்தில் அனுமதித்து வழங்கப்படும்.

இதற்கு முன்பு கல்வி உதவித்தொகைகள் மார்ச் மாத இறுதியிலும், அடுத்த கல்வி ஆண்டிலும் வழங்கப்பட்டது. இப்புதிய திட்டத்தினால் ஆகஸ்டு மாதத்தில் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகைகளும்,தேவையான அனைத்து சான்றிதழ்களும் பள்ளிகளிலேயே கிடைக்கப்பெறும்.



பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இராஜேஷ் லக்கானி அவர்களின் சிறப்பு முயற்சியால் பெரம்பலூர் மாவட்டத்தில் ஜூலை 2002 மாதத்தில் மட்டும் இதுவரை 75 ஆயிரம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## பெரம்பலூர் மாவட்டத்தில் 5-ம் வகுப்பில் தேறிய மாணவ,மாணவிகள் மேல்வகுப்புகளில் 100 சதவிகிதம் சேர்க்கை

பள்ளி படிப்பை இடையில் விடுவது குழந்தைகள் ஒரு பள்ளியிலிருந்து, அடுத்த பள்ளிக்கு மாறுதல் பெறும்பொழுதும், அதிக அளவாக 5–ம் வகுப்பிலிருந்து 6–ம் வகுப்பு செல்லும் பொழுதும், தொடக்கப் பள்ளியிலிருந்து, நடுநிலைக் கல்விக்கு செல்லும் பொழுதும்தான் ஏற்படுகிறது. இதனால் 8–ம் வகுப்பு வரை அனைத்து குழந்தைகளையும் விடுபடாமல் படிக்க வைத்திட இம்மாவட்டத்தில் பல்முனை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. அனைத்து தொடக்கப்பள்ளி தலைமை யாசிரியர்களும் 5–ம் வகுப்பு தேர்ச்சிபெற்ற மாணவ, மாணவிகளின் பட்டியலை அருகாமை யிலுள்ள நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் 100 சதவீதம் சேர்க்கைக்காக வழங்க தெரிவிக்கப் பட்டுள்ளது.

2. உயர்/மேல்நிலை/ நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் தனிக்கவனம் செலுத்தி, தொடக்கப் பள்ளியிலிருந்து தேர்ச்சிப் பெற்றவர்களின் சேர்க்கையை உறுதிப்படுத்திட வேண்டும்.

3. அனைத்து தொடக்கப்பள்ளி தலைமை யாசிரியர்களும் தங்களது பள்ளி எல்லைக்குட்பட்ட பகுதிகளின் பெற்றோர்களை தொடர்பு கொண்டு, அவர்களது பள்ளி சேர்க்கை வயதுள்ள குழந்தைகளை ஜூன் 30–க்குள் பள்ளிகளில் சேர்த்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. அனைத்து நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகள் மூலம் அனைவருக்கும் கல்வியின் அவசியம் குறித்த விழிப்புணர்வு பேரணிகள் நடத்தப்பட்டன.

5. அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், பள்ளி மாணவ, மாணவியர்களின் 100 சதவீதம் சேர்க்கை குறித்த ஆய்வு கூட்டங்கள் நடத்தப் பட்டுள்ளன.

6. அனைத்துபெற்றோர் ஆசிரியர் கழகங்கள் மூலமும் 100 சதவீதம் சேர்க்கையின் அவசியம் குறித்தும், தங்களது குழந்தைகளை பள்ளியில் சேர்த்திட விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட சிறப்பு ஏற்பாடுகள் மூலம் 99.76 சதவீதம் சேர்க்கை எய்தப்பட்டிருந்தது. 5 சதவீத குழந்தைகளின் அவர்களது பெற்றோர்களை தனிக்கவனம் செலுத்தி தொடர்பு கொண்டதன் மூலம், தற்பொழுது 6–ம் வகுப்பில் சேர்க்கை பெற்றுள்ளனர். பின்தங்கிய பகுதியான பெரம்பலூர் மாவட்டத்தில் 5–ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைத்து குழந்தைகளும் 6–ம் வகுப்பில் சேர்ந்துள்ளது தமிழகத்தில் முதலாவது மாவட்டமாகும்.

| வ. எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | 2001–2002ஆம் ஆண்டில் 5ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகள் | | | 6ஆம் வகுப்பில் சேர்க்கை பெற்ற மாணவ.மாணவிகள் | | | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | |
| 1. | அரியலூர் | 1042 | 1039 | 2081 | 1099 | 1027 | 2126 | 99.27 |
| 2 | பெரம்பலூர் | 1122 | 996 | 2118 | 1122 | 996 | 2118 | 100 |
| 3 | திருமானூர் | 1136 | 1101 | 2237 | 1128 | 1096 | 2224 | 99.4 |
| 4. | செந்துரை | 953 | 888 | 1841 | 934 | 873 | 1807 | 98.15 |
| 5. | ஜெயங்கொண்டம் | 1150 | 1113 | 2263 | 1150 | 1111 | 2261 | 99,9 |
| 6. | வேப்பூர் | 1219 | 1227 | 2446 | 1211 | 1217 | 2428 | 99.2 |
| 7. | ஆண்டிமடம் | 691 | 714 | 1405 | 678 | 709 | 1387 | 98.7 |
| 8. | தா.பழூர் | 923 | 964 | 1887 | 923 | 964 | 1887 | 100 |
| 9 . | ஆலந்துார் | 770 | 817 | 1587 | 767 | 813 | 1580 | 99.6 |
| 10. | வேப்பந்தட்டை | 1349 | 1223 | 2572 | 1348 | 1221 | | 99.9 |
| | கூடுதல் | 10355 | 10082 | 20437 | 10360 | 10022 | 703877 | 99.76 |

# பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு நகர வங்கி லிமிடெட் எண்.381

**90–91, அன்னை இந்திரா காந்தி சாலை, காஞ்சிபுரம் – 2.**

**வங்கியின் சிறப்பு அம்சங்கள்**

1. இந்தியாவில் துவக்கப்பட்ட முதல் கூட்டுறவு நகர வங்கி
2. காஞ்சிபுரம் வட்டம் முழுவதும் உள்ள மக்களுக்கு அனைத்து வகை கடன்களும் வழங்கும் வங்கி
3. வைப்புகளுக்கு பிற வணிக வங்கிகளைவிட கூடுதல் வட்டி வழங்கும் வங்கி
4. குறைந்த வட்டிவிகிதத்தில் சுலப தவணைகளில் கடன் வழங்கப்படுகிறது.
5. வழங்கப்படும் கடன்கள் விவரம்

| | |
|---|---|
| * அடமானக் கடன்கள் | ரூ.10 இலட்சம் வரை |
| * தொழில் முனைவோர்க்கான கடன் | ரூ.10 இலட்சம் வரை |
| * போக்குவரத்து வாகன கடன் | ரூ.10 இலட்சம் வரை |
| * வீடு வாங்க/கட்ட கடன் | ரூ.5 இலட்சம் வரை |
| * நல்வாழ்வுக்கடன் (வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் வாகனங்கள் வாங்க) | ரூ.15,000 வரை |
| * சம்பளகடன் (ஜாமீன்கடன்) | ரூ.10,000 வரை |
| * நகைகடன் | ரூ.1 இலட்சம் வரை |

**மகளிர் வளர்ச்சிக்கான பல்வேறு கடன் திட்டங்கள்**

1. மகளிர் சிறுவணிககடன் சீரமைக்கப்பட்டது ரூ.3,000 வரை
2. மாதச் சம்பளம் பெறும் மகளிர் வளர்ச்சி கடன் ரூ.20,000 வரை (குடும்ப செலவு, குடும்ப உபயோக பொருட்கள் வாங்க)
3. மகளிர் சுயதொழில் முனைவோர் கடன் ரூ.5,00,000 வரை

***காஞ்சிபுரம் வட்ட மக்கள் பயன்பெற தலைமை அலுவலகம் மற்றும் ஆறு கிளைகள்***

தலைமை அலுவலகம் : 90–91, அன்னை இந்திரா காந்தி சாலை, காஞ்சிபுரம்.

**கிளைகள்**

| | |
|---|---|
| 1. பிள்ளையார் பாளையம் கிளை | : 1, திருமல் ராஜா தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம். |
| 2. கங்கைகொண்டான் மண்டபம் கிளை | : 34 பி, மேற்கு ராஜவீதி, காஞ்சிபுரம். |
| 3. காந்திரோடு கிளை | : 20, காந்தி ரோடு, காஞ்சிபுரம். |
| 4. செவிலிமேடு கிளை | : 9, வந்தவாசி சாலை, செவிலிமேடு (மாவட்ட ஆட்சியர் இல்லம் அருகில்) |
| 5. ஒரிக்கை கிளை | : 38, உத்திரமேரூர் சாலை, முருவம்மாள் நகர், ஒரிக்கை, காஞ்சிபுரம். |
| 6. காரைப்பேட்டை கிளை | : தமிழரசி நகர் (வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகம் அருகில்) காஞ்சிபுரம். |

## பிக்காஸோ ஓவிய மதிப்பு

உலகப் புகழ் பெற்ற ஓவியர் பிக்காஸோ (Piccasso) என்பவரைப்பற்றி உலக மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

1967-ஆம் ஆண்டில் அவர் தீட்டிய ஒரு சித்திரம் மட்டுமே 36 இலட்சம் ரூபாய்க்கு விற்கப்பட்டது. (அந்தக் காலத்தில் ரூபாயின் மதிப்பு இன்றைய ரூபாயின் மதிப்பை விட பல மடங்குகள் அதிகமாக இருந்தது.)

அப்போது அவர் தீட்டிய ஆயிரத்துக்கும் அதிகமான சித்திரங்கள், அவரிடம் இருந்தன. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பண மதிப்பின்படி அவருடைய சித்திரங்களின் மதிப்பு 17 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டது.

## நோபல் பரிசு

ஆல்∴ப்ரெட் பெர்னார்ட் நோபெல் (Alfred Bernard Nobel) என்பவர் டைனமைட் என்ற வெடிப் பொருளை விற்று நிறைய பணம் சம்பாதித்தார்.

27-11-1895-ஆம் ஆண்டில் அவர் கீழ்க்கண்ட உயிலை எழுதி வைத்தார்.

"என்னுடைய சொத்துக்களை விற்று கிடைக்கும் பணத்தை, பாதுகாப்பு நிறைந்த கடன் பத்திரங்களில்(Safe Securities) முதலீடு செய்து, அதிலிருந்து கிடைக்கும் வட்டி பணத்தை, ஒவ்வொரு வருடமும் மனித இனத்திற்கு நன்மைகளைச் செய்பவர்களை தேர்ந்தெடுத்து, பிரித்து பரிசுகளாக வழங்க வேண்டும்."

பல துறைகளில் சாதனைகளைப் புரிந்த மாபெரும் அறிஞர்களுக்கு ஒவ்வொரு வருடமும் புகழ்பெற்ற நோபெல் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.




# பரமக்குடியில் ரூ. 42 இலட்சத்தில் ஆவின்பால் குளிரூட்டும் நிலையம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் காரைக்குடியில் ஆவின்பால் உற்பத்தியாளர் ஒன்றியம் கடந்த 1984–ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இதில் நாளொன்றுக்கு 20 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பால் சுமார் 17 ஆயிரம் லிட்டர் பொது மக்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. அதில் மீதம் உள்ள 3 ஆயிரம் லிட்டர் பால் மதுரைக்கு அனுப்பப்பட்டு, அங்கு நெய் மற்றும் பால்கோவா இனிப்பு வகையில் தயாரிக்கப்பட்டு அதனையும் விநியோகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

சுமார் 196 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் செயல்பாட்டில் உள்ளது.

குளிரூட்டும் நிலையங்கள் சிவகங்கை, கமுதி, பரமக்குடி ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வந்தது. இதில் பரமக்குடி பால் குளிரூட்டும் நிலையம் கழிவுநீர் சுத்திகரிப்பு வசதி இல்லாததால் அதனை பயன்படுத்தக் கூடாது என்று எதிர்ப்பு கிளம்பியதை தொடர்ந்து தமிழக மாசு கட்டுப்பாடு வாரியம் உத்தரவு மூலம் 1999–ல் பணிகள் நிறுத்தப்பட்டது. நாள் ஒன்றுக்கு இங்கு 10 ஆயிரம் லிட்டர் பால் குளிரூட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டது.




இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் அனைத்து பால்களும் இங்கிருந்து காரைக்குடிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பால் குளிரூட்டப்பட்டு அதன் பின்னர் கொழுப்பு சத்து நீக்கி பதப்படுத்தப்பட்டு பால் விநியோகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

பரமக்குடி பகுதியில் உள்ள பால் குளிரூட்டு நிலையம் மூடப்பட்டதால் சுமார் 45 பால் உற்பத்தியாளர் சங்கங்களிடம் இருந்து பெறப்படும் பால் காரைக்குடிக்கு கொண்டு செல்லப்படுவதால் பயண தூரம் மற்றும் கொள்முதல் செய்யப்பட்ட பால் சேதம் ஏற்படும் நிலையும் ஏற்பட்டு வந்தது.

தற்போது இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் எஸ். விஜயகுமார் முயற்சியின் பேரில் பரமக்குடி பால் குளிரூட்டு நிலையம் செயல்பட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கிராம சுயவேலைவாய்ப்பு திட்டம் மூலம் நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் வரை பால் குளிரூட்டும் வசதியுடன் இந்த நிலையம் மீண்டும் செயல்பட அரசு ரூ. 42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இந்த தொகை மூலம் பரமக்குடி பால் குளிரூட்டும் கட்டுமான பணிகளுக்கு ரூ. 8 லட்சம் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை கட்டுமான பணி ரூ.7.50 இலட்சம் செலவிலும் பால் குளிரூட்டும் எந்திரம், பாலை பாக்கெட் செய்யும் எந்திரம் ரூ. 15 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டு உள்ளது. மேலும், பரமக்குடியில் 5 இடங்களிலும், இராமநாதபுரம் பகுதியில் 4 இடங்களிலும் பால் வழங்கும் பூத் அமைக்கப்பட உள்ளது. மேலும் பெண்கள் சுயஉதவி குழுக்கள் மூலம் பரமக்குடி, பார்த்திபனூர், ஏர்வாடி மற்றும் தேவிபட்டினம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளது.

கறந்த பாலில் உள்ள பாக்டீரியாக்கள் சுத்தப்படுத்தப்பட்டு சுத்தமான கொழுப்பு சத்து நீக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட பால் காரைக்குடியில் உள்ள ஆவின் நிலையத்தில் மட்டும் தான் உள்ளது. பரமக்குடியில் இந்தக் கருவி அமைக்க வேண்டுமானால் ரூ. 50 இலட்சம் வரை செலவாகும். இதனால் பரமக்குடி, இராமநாதபுரம் ஒன்றிய பகுதியில் கொள்முதல் செய்யப்பட்ட பால் பரமக்குடி குளிரூட்டும் நிலையத்தில் சேகரிக்கப்பட்டு அதனை காரைக்குடியில் உள்ள ஆவின் நிலையத்தில் பதப்படுத்திய பின்னர் மீண்டும் பரமக்குடி பால் குளிரூட்டும் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு பாக்கெட் செய்யப்படும். இதன் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தேவையான ஆவின்பால் பாக்கெட் உடனுக்குடன் தேவைக்கு ஏற்றவரை வழங்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது.

தனியார் நிறுவனங்கள் வழங்கும் பாலை காட்டிலும் தரமானதாக ஆவின்பால் வழங்கப்படுகிறது. 1 லிட்டர் பால் நிலைப்படுத்தியது ரூ.14க்கும், ஒரு நிலைப்படுத்தியது லிட்டர் 1க்கு ரூ.13க்கும், நிலைப்படுத்திய பால் ரூ. 15.50க்கும் (விசேஷ பால்) வழங்கப்படுகிறது.

பரமக்குடி பால் குளிரூட்டும் நிலையம் திறக்க பெரிதும் உதவிய தமிழக அரசுக்கும், மாவட்ட ஆட்சியர் திரு. ச. விஜயகுமார் இ.ஆ.ப அவர்களுக்கும் பால் உற்பத்தியாளர் சங்கம் தங்களது நன்றியை தெரிவித்து உள்ளனர்.

*– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், இராமநாதபுரம்*



(5)

# சேலம் மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் தொப்பையாறு பாசனப்பகுதி மேன்மைத் திட்டப் பணிகள் ஒரு கண்ணோட்டம்

தொப்பையாறு நீர்த்தேக்கம் 1980–86 ஆம் ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் ரூ. 592 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. இந்த நீர்த் தேக்கத்தின் நீர்பிடிப்புப் பகுதி 276.79 சதுர கிலோ மீட்டர்களாகும். இந்த நீர்த் தேக்கத்தின் நீர்ப்பரப்புப் பகுதி 119.89 எக்டெர்களாகும். இதன் கொள்ளளவு 298.60 மில்லியன் கன அடி ஆகும். அணையின் உயரம் 15.3 மீட்டர்.

இந்த நீர்த் தேக்கம் தருமபுரி மாவட்டத்தில் அமைந்திருந்தாலும், அதன் பாசனப்பரப்பில் பெரும் பகுதி சேலம் மாவட்டத்தில் உள்ளது. தருமபுரி மாவட்டத்தில் 829.62 எக்டெர் நிலமும் , சேலம் மாவட்டத்தில் 1,327 எக்டெர் நிலமும் ஆக மொத்தம் 2,157 எக்டெர் பாசனம் பெறுகின்றன.

தொப்பையாறு அணையில் நீர் இடது, வலது என இரண்டு வாய்க்கால்களாக பிரிந்து, இடது வாய்க்கால் 24.20 கி.மீட்டர் நீளத்திற்கு பாய்ந்து 1327.42 எக்டெர் பரப்பு பாசனம் பெறுகிறது. இதேபோல் வலது வாய்க்கால் 17.35 கி.மீட்டர் நீளத்திற்கு பாய்ந்து 829.62 எக்டெர் பாசனம் பெறுகிறது. இடது வாய்க்காலில் 88 மதகுகளும், வலது வாய்க்காலில் 71 மதகுகளுமாக மொத்தம் 159 மதகுகள் உள்ளன.

தொப்பையாறு நீர்த் தேக்கத்தில் உள்ள 159 பாசன மதகுகளில் உள்ள நிலங்கள் மேடுபள்ளங்களாக உள்ளதால், தற்போது உள்ள பாசன முறைப்படி எல்லா நிலத்திற்கும் போதிய நீர் கிடைப்பதில்லை. சரியான நீர் பராமரிப்பு கடைபிடிக்காததால், தலைமடையில் உள்ள விவசாயிகள் பெரும் அளவில் தண்ணீரை உபயோகிப்பதும் , கடைமடையில் உள்ள நிலங்களுக்கு போதிய நீர் செல்லாமலும் விவசாயிகள் துன்பப்பட்டு வந்தனர்.

கிடைக்கின்ற நீரை சிக்கனமாக பயன்படுத்தி நீர் மேலாண்மை யுக்திகளை கைக்கொண்டு அந்த பாசனப் பகுதியில் உள்ள எல்லா நிலங்களுக்கும் உரிய தண்ணீர் கிடைக்கும் வகையில் திட்டத்தினை செயலாக்க ஒரு பிரேரனை மத்திய அரசிற்கு தமிழக அரசின் மூலம் 1999–ஆம் ஆண்டு சேலம் மாவட்டம் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அனுப்பப்பட்டு அதற்கான ஒப்புதலும், ரூ. 210.30 இலட்சம் நிதியும் பெறப்பட்டு 1.12.2001 முதல் ஓடலூரை தலைமையிடமாக கொண்டு ஒரு உபகோட்டம் செயல்பட ஆரம்பித்துள்ளது. இரண்டு ஆண்டுகளில் இத்திட்டம் செய்து முடிக்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2001–2002 – ஆம் ஆண்டில் முதல் கட்டமாக ரூ 21.00 இலட்சம் செலவில் 26 மதகுகளில் 350 எக்டெர் பரப்பளவில் பணிகள் நடைபெற்று முடிக்கப்பட்டன. மீதமுள்ள மதகுகளில் திட்டமிட்டவாறு 1–12–2003க்குள் பணிகள் முடிக்கப்படும்.





தொப்பையாறு பாசனப் பகுதியில் உள்ள நிலங்களுக்கு ஒரு எக்டெர் ரூ. 6,000/– வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி மூலம் அந்தந்த மதகுகளில் உள்ள பரப்பிற்கு தக்கவாறு காரை வாய்க் கால்களை வடிவமைத்து பணிகள் செய்யப்படுகின்றது. நீர் பங்கீட்டு தொட்டிகள், நீர் மடை திருப்பும் தொட்டிகள், நீர் விழும் தொட்டிகள் ஆகியவை நிலத்தின் மேடு பள்ளங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு நிலத்திற்கும் தண்ணீர் திருப்பும் வகையில் இரும்பு கதவுகள் அமைக்கப்படுகின்றன.

இப்பணிகளை ஆரம்பிக்கும் முன் ஒவ்வொரு மதகிலும் மதகு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு அந்தந்த மதகில் உள்ள எல்லா நிலச் சொந்தக்காரர்களும் உறுப்பினர்களாக்கப்படுகின்றனர். உறுப்பினர்கள் தங்களுக்குள் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை தேர்வு செய்து கொள்கின்றனர். பாசனப்பகுதி மேன்மைத் திட்டப் பணிகள் ஒப்பந்தக்காரர்களிடம் அளிக்கப்படாமல் , மதகு சங்கங்கள் மூலம் செய்யப்படுகின்றன. இதனால் பணிகள் செம்மையாக நடைபெறுவதோடு, விவசாயிகள் தங்கள் பொறுப்பை உணரவும், பணி முடிக்கப்பட்ட பிறகு பணிகளை பாதுகாக்க வேண்டுமென்ற பொறுப்பும் ஏற்படுகிறது.

பணிகள் முடிக்கப்பட்ட பிறகு, இரண்டு ஆண்டுகள் கழித்து, செலவிடப்பட்ட தொகையில் அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் மானியம் போக மீதமுள்ள தொகை விவசாயிகளிடமிருந்து ஐந்து ஆண்டுகள் சம தவணைகளில் வருவாய் துறை மூலம் பிடித்தம் செய்யப்படும்.

பணிகள் முடிக்கப்பட்ட பிறகு பணிகள் மதகு சங்கங்களிடம் பாராமரிப்புக்காக ஒப்படைக்கப்படுகிறது. ஆரம்பக் கட்டத்தில் பராமரிப்பு செலவுக்காக, சுழற்சி முறை பாசனத் திட்டத்திற்காக ஒரு எக்டெருக்கு ரூ 300/ – வீதம் மானியம் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இத்தொகையும், ஒரு எக்டெருக்கு ஒரு ஆண்டுக்கு இவ்வளவு என ஒரு தொகையை மதகு சங்கம் நிர்ணயம் செய்து அத்தொகையை வசூல் செய்து, காரை வாய்க்கால்கள், தொட்டிகள் ஆகியவற்றை பராமரிக்கும் பணியை மதகு சங்க நிர்வாகிகள் மேற்கொள்ள வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

தலை மடை, கடை மடை என்ற வித்தியாசம் இன்றி எல்லா விவசாயிகளும், தங்களது நிலத்தின் பரப்பளவிற்கு ஏற்ப தண்ணீரை நியாயமாக பெறவேண்டும் என்ற அடிப்படையில் நீர் பங்கீட்டு அட்டை தயார் செய்யப்பட்டு, அந்த அட்டையில் அந்த மதகில் உள்ள எல்லா விவசாயிகளின் பெயர், நில அளவை எண், பரப்பு, அவருக்கு உரிமையான தண்ணீரை பெறும் கால நேரம் ஆகியவை பூர்த்தி செய்யப்பட்டு, உதவி செயற் பொறியாளர் ( வே.பொ) அவர்களால் கையொப்பமிட்டு ஒவ்வொரு விவசாயிக்கும் நீர்ப்பங்கீட்டு அட்டை வேளாண்மைப் பொறியியல் துறையால் வழங்கப்படும் இந்த அட்டை ரேஷன் அட்டை போன்று பாதுகாக்கப்படவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் அணையிலிருந்து நீர்விடுவிக்கும் போது இந்த அட்டையில் உள்ளவாறு சுழற்சி முறையில் குறிப்பிட்ட கால அளவிற்கு ஒவ்வொரு விவசாயிக்கும் தண்ணீர் கிடைக்க உறுதி ஏற்படுத்தப்படுகிறது.

இந்த திட்டம் தருமபுரி மாவட்டத்தில் தொப்பூர், கம்மம்பட்டி ஆகிய பகுதிகளிலும், சேலம் மாவட்டம் மேச்சேரி பகுதியில் வெள்ளார், தெத்திகிரிப்பட்டி, மல்லிகுந்தம், செக்காரப்பட்டி ஆகிய பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பெரிதும் பயன்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

*– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சேலம் மாவட்டம்.*

• • •

## கதிரியக்கத்தினால் உயிர் நீத்த முதல் நபர்

மேடம் க்யூரி கதிரியக்கத்தை வெளிப்படுத்தும் ரேடியம் என்ற மூலப் பொருளைக் கண்டுபிடித்தார்.

இந்த மூலப் பொருளிலிருந்து வெளிப்படும் கதிர்கள் லுகேமியா போன்ற கொடிய நோய்களை உருவாக்கி மனித உயிரைப் பறிக்கும் சக்தியைக் கொண்டுள்ளன.

இந்தக் காலத்தில் ரேடியத்தை பயன்படுத்தி வருபவர்கள் நிறைய தற்காப்பு வழி முறைகளைக் கடைப்பிடித்து தங்களுடைய உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள்.

மேடம் க்யூரி காலத்தில் இப்படிப்பட்ட தற்காப்பு வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை. மேடம் க்யூரி 35 வருட காலம் ரேடியத்தைப்பற்றி நிறைய ஆராய்ச்சிகள் செய்து வந்தார். ரேடியம் வெளிப்படுத்தும் கதிரியக்கத்தினால் தொடர்ந்து தாக்கப்பட்டு வந்தார். ஒரு சாதாரண காய்ச்சலினால் தாக்கப்பட்ட அவர் உடனடியாக இறந்து போன முதல் நபர், இரண்டு முறைகள் நோபெல் பதக்கம் பெற்ற மேடம் க்யூரி தான் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.


**RURAL INSTITUTE FOR DEVELOPMENT EDUCATION**

**#48, Periyar Nagar, Little Kanchipuram, Kanchipuram - 631 503.**

☎ 04112-68223, 68393 e-mail : ride@md3.vsnl.net.in

கிராம கல்வி முன்னேற்ற நிலையம் (ரைடு சங்கம்), 1984ஆம் ஆண்டு உயர்திரு.எஸ்.ஜெயராஜ், எம்.ஏ.பி.எட்., அவர்களால் தொடங்கப்பட்டு பல்வேறு சாதனைகளையும், சோதனைகளையும் சந்தித்து வெற்றி நடைபோட்டு வருகின்றது.

**இந்த சங்கத்தின் செயல்பாடுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவைகளாக அமைந்துள்ளவை :**

- ★ குழந்தை தொழிலாளர் உழைப்பு ஒழிப்பு
- ★ கிராமப் பெண்கள் முன்னேற்றம்
- ★ குழந்தைக் கல்வி
- ★ பெண் குழந்தைகள் வதை தடுப்பு
- ★ தொழில் முனைவோருக்கான பயிற்சி
- ★ வாக்காளர் விழிப்புணர்வு முகாம்
- ★ எய்ட்ஸ் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு
- ★ இலவச மருத்துவ உதவி மற்றும் முகாம்கள்
- ★ சாலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு
- ★ சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- ★ மனித உரிமை பாதுகாப்பு மற்றும் ஊழல் எதிர்ப்பு
- ★ கிராமப்பெண்களுக்கு சுயஉதவிக் குழுக்கள்
- ★ இளைஞர் நலம் மற்றும் விழிப்புணர்வு
- ★ வெள்ளம் மற்றும் பேரழிவு தடுப்பு பணிகள்

இன்னும் பல.




## தொலைநோக்குப் பார்வையில் தகவல் தொழில்நுட்பம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில், ``தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பக் குழு``வின் முதல் கூட்டம் 22.8.2002 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பக் குழுவின் உறுப்பினர்களான துணைத் தலைவர்–சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், கல்வித் துறை அமைச்சர் டாக்டர் மு.தம்பிதுரை, தலைமைச் செயலாளர் திரு. சுகவனேஸ்வர், மென்பொருள் மற்றும் சேவை குழுமங்களின் தேசிய சங்கத்தின் தலைவர் திரு. கிரண் கார்னிக் (Thiru Kiran Karnik, President-National Association of Software and Services Companies-NASSCOM), தகவல் தொழில்நுட்ப உற்பத்தியாளர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் செல்வி. சுதா ராஜு (Selvi Sudha Raju,Vice Chairperson,Manufacturers Association of Information Technology-MAIT) இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு குழுத் தலைவர் திரு. பி. கே. மகாபாத்ரா (Thiru P.K.Mohapatra,Chairman,Confederation of Indian Industry-CII-Tamilnadu Council), சென்னை இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் எம்.எஸ். ஆனந்த் (Dr. M.S.Anand, Director Indian Institute of Technology-Chennai), அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் இ.பாலகுருசாமி, இந்திய மென்பொருள் பூங்காக்களின் இயக்குநர் செல்வி ஆர்.ராஜலட்சுமி (Selvi. R.Rajalakshmi, Director,Software Technology Parks of India-STPI), மத்திய அரசு தொலைபேசி BSNL நிறுவனத்தின் சென்னை தலைமைப் பொது மேலாளர் திரு. கே.மகாதேவன், VSNL நிறுவனத்தின் தலைமைப் பொது மேலாளர் திரு. என்.பரமேஸ்வரன், தகவல் தொழில்நுட்பத்துறை அரசு செயலாளர் திரு. விவேக் ஹரிநாராயணன், டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. மாதவன் நம்பியார், எல்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா ஆகியோர் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியின்போது முதலமைச்சர் அவர்கள் ''தகவல் தொழில் நுட்ப துறையில் தமிழகத்தின் சாதனைகள்'' என்னும் தலைப்பில் தயாரிக்கப்பட்டுள்ள சிறு நூலையும், குறுந்தகடு முதல் தொகுப்பையும் (Compact Disk-Volume-1) வெளியிட்டார். சாதனை நூலை NASSCOM நிறுவனத்தின் தலைவர் திரு. கிரண் கார்னிக் அவர்கள் பெற்றுக் கொண்டார். குறுந்தகட்டினை தகவல் தொழில்நுட்ப உற்பத்தியாளர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் செல்வி.சுதா ராஜூ அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மக்களுக்குப் பயன்படும் வகையில் தகவல் தொழில் நுட்பத்தை அரசின் அனைத்து துறைகளிலும் பயன்படுத்துவதில் தமிழ்நாடு புரிந்துள்ள வியத்தகு சாதனைகளை இந்த நூல் சிறப்பாக வெளிப்படுத்துகிறது. குறிப்பாக கூற வேண்டுமானால், தமிழ்நாடு அரசின் பத்திரப்பதிவு துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள கணினிமயமாக்கும் திட்டத்தை, ''மக்கள் சேவையில் தகவல் தொழில்நுட்பம்'' என்னும் தலைப்பில் குறுந்திரைப்படம் (Documentary) ஒன்றைத் தயாரிப்பதற்கு, மத்திய அரசு தேர்வு செய்துள்ளது. மேலும், வருவாய்த் துறையின் நில நிர்வாகம் மற்றும் மேலாண்மை முறைகளில் கணினிமயமாக்கம், போக்குவரத்துத் துறையில் கணினிப் பயன்பாடு, அண்ணா பல்கலைக்கழகத்தின் தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுகளுக்குரிய அனுமதி சீட்டுகளை கம்ப்யூட்டர் மூலம் மாணவர்களுக்கு வழங்கியது முதலான பல்வேறு சாதனைகள் இந்த நூலில் சிறப்புடன் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்றைய தமிழ்நாடு அரசின் புதிய வலை தளத்தை (Web site) தொடங்கி வைத்தார். இந்த வலைதளம் ஏராளமான தனித்தன்மை கொண்ட சிறப்புஅம்சங்களுடன் முற்றிலும் புதிதாக மறுவடிவமைக்கப்பட்டுள்ளது. மிக எளிமையாகவும், கருத்தை ஈர்க்கும் வகையிலும், சிறப்பாக இந்த வலைதளத்தை அணுகும் வகையில் புதிய உத்திகளுடன் உருவாக்கப் பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சர்கள், அரசின் பல்வேறு துறைகள் ஆகியவை பற்றிய முழு விவரங்களை அறியும் வகையிலான தொடர்பு வசதிகளை இந்த வலைதளத்தின் புதிய பக்கம் பெற்றுள்ளது. மக்களுக்குத் தேவைப்படும் தகவல் விவரங்களை அவ்வப்போது நிகழும் மாற்றங்களுடன் உடனுக்குடன் இந்த வலைதளத்தில் சேர்க்கப்பட்டு தொகுத்து தரப்படும்.



தமிழ்நாடு அரசின் இந்த புதிய வலை தளத்தின் சிறப்பு அம்சங்கள் வருமாறு :-

- ★ வலை தள தலைப்புப் பக்கத்தின் ஓரத்தில் அழகுமிளிர பறக்கும் தேசியக் கொடியின் பின்னணியுடன் நவீன தகவல் தொழில் நுட்ப பூங்காக்கள், புகழ் மிகுந்த கோயில்கள் ஆகியவை வடிவமைக்கப்பட்டுள்ளன.
- ★ தலைப்புப் பக்கத்தில் தமிழ்நாடு அரசு தொடங்குகின்ற புதிய திட்டங்கள் பற்றி நிழற்படங்களுடன் விளக்குகின்ற ''எது புதிது - What's New' பிரிவு இணைக்கப் பட்டுள்ளது.
- ★ "Drop Down Menu'' பட்டன்களை இயக்குவதன் மூலம்இந்த வலை தளத்தின்அனைத்து விவரங்களையும் எவ்வித குழப்பமும் இன்றி மிக எளிதாக அணுக முடியும்.
- ★ தேடுதல் வசதி "Search and Site Map facilities" இணைக்கப்பட்டுள்ளது.
- ★ தமிழ் பக்கங்கள்அனைத்தும் ஒரே தொகுப்பாக இணைக்கப்பட்டு ஒரே தொடர்பில் அணுக வகை செய்யப்பட்டுள்ளது.
- ★ அரசின்துறைகள் பற்றிய விவரங்கள் அறிய '' துறை பக்கம்'' Department Page சேர்க்கப்பட்டுள்ளது. ஒரு துறையைச் சார்ந்த அமைச்சர்கள், அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள்ஆகியோரை மின் அஞ்சல் மூலம் தொடர்பு கொள்வது பற்றிய விவரங்கள் இந்த பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், துறைத் திட்டங்களைப் பற்றிய மக்கள் சாசனம்,கொள்கை குறிப்பு ஆவணங்கள்ஆகியவற்றையும் அந்த துறை பற்றிய பிற வலை தளங்கள் குறித்தும் இந்தப் பக்கத்தில் காண முடியும்.
- ★ அரசு, பணிகள், ஆவணங்கள், தொடர்புகள் என தனித்தனியாக பக்கங்கள் தொகுக்கப்பட்டு ஒரு பக்கத்தில் இருந்து மற்றொன்றுக்கு எளிதில் அணுகும் வகையில் வலை தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பக் குழுவின் தலைவரான முதலமைச்சர் கூட்டத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். பின்னர், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் குழு தமிழ்நாட்டின் புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை குறித்து விரிவான ஆலோசனை மேற்கொண்டது.

''தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் வளமையின் புன்னகையை தங்களது முகங்களில் ஏந்தி நிற்கும் வகையில் தகவல் தொழில் நுட்பத் துறை மேம்படுத்தி அறிவார்ந்த மாநிலத்திற்குரிய மதிப்பையும், செல்வத்தையும் உருவாக்க வேண்டும்''


என்னும் தொலைநோக்கு பார்வையுடன் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கொள்கை-2002 உருவாக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கொள்கை-2002ன் நோக்கங்கள் வருமாறு:-

### ''தொலைநோக்குப் பார்வையில் தகவல் தொழில்நுட்பம்''

1. தகவல் தொழில்நுட்ப முதலீடுகளுக்கு ஏற்ற மாநிலம் தமிழகம் மட்டுமே என்னும் நிலையை உருவாக்குதல்.
2. தமிழகஅரசின் ஒவ்வொருதுறையிலும் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலமும், மின்னணு ஆட்சி Governance மூலமும் தமிழகத்து குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்துதல்.
3. கணினி அறிவுஇடைவெளி (Digital Divide)-ஐ இணைக்கும் பாலமாக இருந்து கிராமப் பகுதி மக்களுக்கு அதிகாரம் அளித்தல்.
4. ஆராய்ச்சி மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.
5. தகவல் தொழில் நுட்பத்தில் தமிழ் மொழியை பயன்படுத்துவதற்கு சிறப்பு அளித்து செயல்படுத்துதல்.

தமிழகத்தை மரபு வழியிலிருந்து உருமாற்றம் செய்து கணினிமயம் ஆக்குவதன் மூலம், தமிழ்நாட்டை இந்தியாவின் அறிவுத் தலைநகராக உருவாக்கிட IT முதலீடுகளுக்கு ஏற்ற ஒரே மாநிலமாக உருவாக்குதல், மேம்பாட்டு முனைப்பு நடவடிக்கைகள், மனித வள மேம்பாட்டு நடவடிக்கைகள், அரசின் தகவல் தொழில் நுட்ப பயன்பாடுகள், மின்னணு ஆட்சி, கணினி அறிவு இடைவெளி (Digital Divide)-ஐ இணைக்கும் பாலமாக செயல்படுதல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள், தகவல் தொழில்நுட்பத்தில் தமிழை பயன்படுத்துதல்ஆகியவற்றை உள்ளடக்கிய வரைவு கொள்கைக் குறிப்புகளின் மீது தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் குழு விரிவான ஆலோசனை மேற்கொண்டது.



# இரண்டாம் கட்டமாக மேலும் 63 ஆலயங்களில் அன்னதானத் திட்டம்

### □ முதலமைச்சர் அறிவிப்பு



தமிழகசட்டமன்றப் பேரவையில் 9.3.2002 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட திருக்கோயில் களில் நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கும் "அன்னதானத் திட்டம்" என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து சென்னை மைலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோவிலில் 23.3.2002 சனிக்கிழமை அன்று பகல் 12.15 மணி அளவில் பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் "அன்னதானத் திட்டம்" என்ற புதிய திட்டத்தினை நான் தொடங்கி வைத்தேன். இந்த திட்டத்தின்படி நாள்தோறும் இந்த திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

மேலும், முதற்கட்டமாக தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட 63 திருக்கோயில்களில் என்னுடைய அமைச்சரவை சகாக்கள் இத்திட்டத்தை 23.3.2002அன்று சனிக்கிழமை அன்று தொடங்கி வைத்தார்கள். இந்த திட்டத்தை அமல்படுத்த தேவைப்படும் நிதி நன்கொடையாளர்களிடமிருந்து திரட்டப்படுகிறது. இந்த திட்டத்திற்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. எனவே, இத்திட்டத்தினை தமிழ் நாட்டிலுள்ள மற்ற திருக்கோயில்களிலும் செயல்படுத்த வேண்டும் என கோரிக்கைகள் பல, வந்த வண்ணம் உள்ளன. எனவே, இரண்டாவது கட்டமாக, மேலும் 63 திருக்கோயில் களில் 15.8.2202 அன்று முதல் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக நிதி அளிக்க விரும்புவோர் இந்த திருக்கோயில்களில் வைக்கப்பட்டிருக்கும் தனியான உண்டியல்களில் செலுத்தலாம்.

தவிர, இந்த அன்னதானத் திட்டத்திற்கு உதவிட விரும்புவோர், தாங்கள் விரும்பும் திருக்கோயிலுக்கு தலா ரூ.15,000/– செலுத்தி கட்டளைகளை (Endowment) ஏற்படுத்தலாம். அந்தக் கட்டளைகளிலிருந்து பெறப்படும் வட்டி வருமானத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கட்டளைதாரர் விரும்பும் நாளன்று குறைந்தபட்சம் 120 நபர்களுக்கு அன்னதானம் செய்ய அந்தந்த திருக்கோயில் மூலம் ஏற்பாடு செய்யப்படும். எனவே, தமிழகத் திருக்கோயில்களில் அன்னதானக் கட்டளைகளை ஏற்படுத்த பொது மக்கள் பெரும் எண்ணிக்கையில் முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மேதகு தமிழக ஆளுநர் உரையில், இத்தகைய திருக்கோயில்கள் அனைத்திலும் குழந்தைகளுக்கு ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியைப் போதிப்பதற்காக ஞாயிறுதோறும் குறைந்தது ஒருமணிநேரம் வகுப்புகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்தொடர்ச்சியாக,ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியை போதிப்பதற்காக முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் அன்னதானத் திட்டம் துவங்கி வைக்கப்படும் 63 திருக்கோயில்களில், 24.3.2002 அன்று வகுப்புகளும் துவக்கி வைக்கப்படும் என்று தெரிவித்து இருந்தேன். அவ்வாறு இந்த வகுப்புகள் எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் மாலை 3.00 மணி முதல் 4.00 மணி வரையிலோ, அல்லது 4.00 மணி முதல் 5.00 மணி வரையிலோ நடத்தப்படுகின்றன. இந்த ஆன்மீக பயிற்சி வகுப்புகளை உள்ளூர் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் சமய சொற்பொழிவாளர்கள் நடத்துகிறார்கள். இரண்டாவது கட்டமாக, அன்னதானத் திட்டம் செயல்படும், மேலும் 63 திருக்கோயில்களில் ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியை போதிக்கும் வகுப்புகள் ஞாயிறு தோறும் குழந்தைகளுக்கு குறைந்தது ஒரு மணி நேரம் மாலை 3.00 மணி முதல் 4.00 மணி வரையிலோ அல்லது 4.00 மணி முதல் 5.00 மணி வரையிலோ நடத்தப்படும்.

தமிழக அரசு அமல்படுத்தும் இந்தத் திட்டங்களை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள தமிழக மக்களை கேட்டுக் கொள்கிறேன்.

## இணைப்பு

சுதந்திர நாளான 15.8.2002 முதல் தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் இரண்டாவது கட்டமாக அமல்படுத்தப்படும் திருக்கோயில்களின் பட்டியல் :



அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் கோயில், மடப்புரம், தஞ்சை மாவட்டம்.

**சென்னை மாவட்டம்**

1. அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில், தங்கசாலை,சென்னை.
2. அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயில், புரசைவாக்கம்,சென்னை.
3. அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர்,சென்னை.
4. அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில், பெசன்ட் நகர்,சென்னை.
5. அருள்மிகு முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர்,சென்னை.

**திருவள்ளூர் மாவட்டம்**

6. அருள்மிகு மகிஷாசூரமர்த்தினி திருக்கோயில், மத்தூர் (இணைப்பு அருள்மிகுசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்,திருத்தணி)

**வேலூர் மாவட்டம்**

7. அருள்மிகு எல்லையம்மன் திருக்கோயில்,வெட்டுவானம்.

**திருவண்ணாமலை மாவட்டம்**

8. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், புதூர் செங்கம்.

**காஞ்சிபுரம் மாவட்டம்**

9. அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், திருப்போரூர், செங்கல்பட்டு வட்டம்.
10. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், வல்லக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர் வட்டம்.

**விழுப்புரம் மாவட்டம்**

11. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மயிலம்.

**ஈரோடு மாவட்டம்**

12. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,சென்னிமலை.
13. அருள்மிகு பெரியமாரியம்மன் வகையறா திருக்கோயில்,ஈரோடு.
14. அருள்மிகு கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயில்,பாரியூர்.
15. அருள்மிகு மகுடேசுவரர் வகையறா திருக்கோயில்கள், கொடுமுடி.
16. அருள்மிகு வீரகுமாரசுவாமி திருக்கோயில்,வெள்ளகோயில்.

**கோயமுத்தூர் மாவட்டம்**

17. அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை.
18. அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில்,பேரூர்.
19. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்,காரமடை.
20. அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில்,கோவை.
21. அருள்மிகு விஸ்வேஸ்வரர் மற்றும் வீரராகவப்பெருமாள் திருக்கோயில், திருப்பூர்.
22. அருள்மிகு ஐயப்பசுவாமி திருக்கோயில், புதுசித்தாபுதூர்.
23. அருள்மிகு அவிநாசிலிங்கேஸ்வரர் திருக்கோயில், அவிநாசி.

**பெரம்பலூர் மாவட்டம்**

24. அருள்மிகு கலியுகவரதராஜ பெருமாள் திருக்கோயில், கல்லக்குறிச்சி.

**திருச்சி**

25. அருள்மிகு ஜெம்புகேசுவரர் அகிலாண்டேஸ்வரியம்மன் திருக்கோயில், திருவாணைக்காவல்.
26. அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில், குணசீலம்.

**கரூர் மாவட்டம்**

27. அருள்மிகு கல்யாணபசுபதீஸ்வரர் திருக்கோயில், கரூர் நகர்.

**தஞ்சாவூர் மாவட்டம்**

28. அருள்மிகு கோடியம்மன் திருகோயில், இணைப்பு அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர் நகர்.
29. அருள்மிகு முல்லைவனநாதசுவாமி திருக்கோயில், திருக்கருகாவூர்.
30. அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில், பட்டீஸ்வரம்.
31. அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம்.

**திருவாரூர்**

32. அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில், மன்னார்குடி.
33. அருள்மிகு மகாமாரியம்மன் திருக்கோயில், வலங்கைமான்.
34. அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், ஆலங்குடி, வலங்கைமான் வட்டம்.

**நாகப்பட்டினம்**

35. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், எட்டுக்குடி.
36. அருள்மிகு உத்வேகநாதசுவாமி திருக்கோயில், திருமணஞ்சேரி, மயிலாடுதுறை வட்டம்.

**கடலூர்**

37. அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில், விருத்தாசலம்.
38. அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், விருத்தாச்சலம்.

**சிவகங்கை**

39. அருள்மிகு கற்பகவிநாயகர் திருக்கோயில், பிள்ளையார்பட்டி.
40. அருள்மிகு கொப்புடை நாயகியம்மன்,காரைக்குடி.

**விருதுநகர்**

41. அருள்மிகு வன்னிவிநாயகர் திருக்கோயில், மடம் சின்ன ஓடைப்பட்டி.
42. அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயில், சிவகாசி.



அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், திருமயிலை.

**மதுரை**

43. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்,வண்டியூர், தெப்பக்குளம் இணைப்பு அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.
44. அருள்மிகு காளமேகப் பெருமாள் திருக்கோயில், திருமோகூர்.
45. அருள்மிகு சோலைமலை முருகன் திருக்கோயில், அழகர்கோயில்.

**திண்டுக்கல்**

46. அருள்மிகு கோபிநாதசுவாமி திருக்கோயில், ரெட்டியார்சத்திரம்.
47. அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல்.

**தேனி மாவட்டம்**

48. அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் மற்றும் அருள்மிகு தர்மசாஸ்தா திருக்கோயில், ஆண்டிபட்டி

**திருநெல்வேலி**

49. அருள்மிகு காசிவிசுவநாதசுவாமி திருக்கோயில், தென்காசி.

**தூத்துக்குடி**

50. அருள்மிகு பூவனநாதசுவாமி திருக்கோயில், கோவில்பட்டி.
51. அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோயில், குலசேகரப்பட்டிணம்.

**கன்னியாகுமரி**

52. அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், மண்டைக்காடு(கன்னியாகுமரி தேவஸ்தானத்துடன் இணைந்தது)

**சேலம்**

53. அருள்மிகு வெள்ளங்குடி முனியப்பசுவாமி திருக்கோயில், ஜாகிர் அம்மாபாளையம்
54. அருள்மிகு ஒருக்காமலை வரதாஜப்பெருமாள் திருக்கோயில்,சங்ககிரி நகர்
55. அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,செவ்வாய்பேட்டை
56. அருள்மிகு பிரசன்ன வெங்கட்ரமணசுவாமி திருக்கோயில்,காருவல்லி, ஓமலூர் வட்டம்.
57. அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில், மேச்சேரி.
58. அருள்மிகு சித்தேஸ்வரர் திருக்கோயில், கஞ்சமலை.

**தருமபுரி மாவட்டம்**

59. அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில்,ஒசூர்

**நாமக்கல் மாவட்டம்**

60. அருள்மிகு அத்தனூர் அம்மன் திருக்கோயில், அத்தனூர், ராசிபுரம்

**இராமநாதபுரம் மாவட்டம்**

61. அருள்மிகு பாகம் பிரியாள் சமேத வன்மீகநாத சுவாமி திருக்கோயில்.

**நீலகிரி மாவட்டம்**

62. அருள்மிகு விநாயகர் திருக்கோயில்,குன்னூர்.

**புதுக்கோட்டை மாவட்டம்**

63. அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில், பெரமூர்.

# நடமாடும் மருத்துவ சேவைக்குழுக்களுக்கு வாகன வசதி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 21.8.2002 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் உள்ள அனைத்து மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மூலமாக கிராமப்புற மக்களுக்கு, அவர்களின் இருப்பிடங்களுக்கே சென்று சேவை செய்யும் நோக்குடன் நடமாடும் மருத்துவ சேவைக் குழுவிற்கு 25 வாகனங்களை வழங்கினார்.

ஏழை எளிய மக்களின் நலன் காத்து, அவர்களுக்கு சுகாதார வசதி அளிக்க உறுதி பூண்டுள்ள தமிழக அரசு 2001–2002 முதல் கட்டமாக கீழ்க்கண்ட நடமாடும் மருத்துவக் குழு சேவையினை செயல்படுத்த ஆணை



யிட்டிருந்தது. மருத்துவ அலுவலர், சுகாதார செவிலியர், கிராமபுற சுகாதார செவிலியர், 'மருத்துவமனை பணியாளர், சுகாதார ஆய்வாளர், ஊர்தி ஓட்டுநர், கண்நோய் உதவியாளர் ஆகியோரைக் கொண்ட இந்த குழுவினர் ஞாயிற்றுக் கிழமை தவிர மற்ற நாட்களில் அந்த சுகாதார நிலையத்திற்குட்பட்ட கிராமங்களுக்குச் சென்று அப்பகுதிகளில் உள்ள பள்ளிகள், துணை சுகாதார நிலையங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு மையம் (ICDS) மற்றும் அப்பகுதியிலுள்ள தேர்வு செய்யப்பட்ட குறிப்பிட்ட இடங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை பொது மக்களுக்கு சேவைகளை வழங்குவார்கள்.

இதன்படி, விழுப்புரம் மாவட்டம் கரியலூர், மொட்டாம்பட்டி, தேனி மாவட்டம் டொம்புச்சேரி, கடமலைகுண்டு, தருமபுரி மாவட்டம் அன்சட்டி, சித்தேரி, பெரும்பாலை, இராமநாதபுரம் மாவட்டம் புதுமடம், திருப்புல்லானி, ஏர்வாடி, ஈரோடு மாவட்டம் குடியாலத்தூர், நாமக்கல் மாவட்டம் வாழவந்திநாடு, மதுரை மாவட்டம் சாப்டூர், கச்சக்கட்டி, ஏழுமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியாபுரம், டாப் செங்காட்டுப்பட்டி, பெரம்பலூர் மாவட்டம் மனக்குடையான், அரும்பாவூர், நீலகிரி மாவட்டம் கூக்கல்துறை மற்றும் சேலம் மாவட்டம் காடையாம்பட்டி, குளத்தூர், பச்சைமலை, நாகலூர், அருநூத்துமலை ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நடமாடும் மருத்துவ சேவை செயல்படுத்தப்படுகிறது.

25 நடமாடும் மருத்துவக் குழுவிற்காக ஒவ்வொரு நடமாடும் மருத்துவக் குழுவிற்கும் தலா ரூ.3.75 இலட்சம் மதிப்பிலான வாகனங்களை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 21.8.2002 அன்று வழங்கினார்கள். மேலும் இந்த மருத்துவக் குழு கிராமப் புறங்களுக்கு சென்று சேவை செய்வதற்காக ஆண்டிற்கு ரூ.2.25 இலட்சத்திற்குத் தேவையான மருந்து மாத்திரைகளை தமிழ்நாடு அரசு மருத்துவ சேவை கழகம் வழங்கும்.

எளிதில் சென்று அடைய முடியாத தொலை தூரத்தில் உள்ள கிராமப் புறங்களுக்குச் செல்லும் போது அங்கு வாழும் மக்களின் மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்படுபவர்களுக்கும் மருத்துவ வசதி செய்யப்படும். மேலும் கருவுற்ற தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான சிகிச்சையும் அளிக்கப்பட்டு, அவர்களுக்கு சத்துணவு, சுத்தம், சுற்றுப்புற சுகாதாரம் பற்றிய கல்வியும் அளிக்கப்பட்டு வருகின்றது.



# பிறவி இருதய நோய்கள்


- என்.ஸ்ரீநிவாசன்

கருவளரத் தொடங்கிய சில நாட்களில் பந்துபோல் உருண்டையாக இருந்த செல்திரட்சி 8 எனும் எண்ணின் வடிவைப் பெறுகிறது. இந்த 8 எனும் எண் மேலே ஒரு சுழி, கீழே ஒரு சுழி இரண்டும் இணைந்திருப்பது போல் தோற்றமளிக்கும். இந்த இணைப்புப் பகுதி ஒரு மெல்லிய தகடு போலிருக்கும். இந்தத் தகட்டிற்குக் கருவட்டு என்று பெயர். இதுதான் மனித உருவாக மாறுகிறது. முதலில் தோன்றுவது மூளையும் இருதயமும். கருதோன்றிய 17வது நாளில் முதல் சிறப்புச் செல்கள் தோன்றுகின்றன. இளம் இரத்த செல்களாக இவைகள் தொகுதிகளாகச் சேர்கின்றன. இந்தத் தொகுதிகள் இணைந்து குழல் வடிவம் பெறுகிறது. இருதய–குழல் என்று பெயர். இதயத்தின் முன்னோடி. பின்னர் நாளடைவில் பல மாறுதல்களைப் பெற்று இருதயமாக உருவாகிறது. கருவடைந்த 60 நாட்களில் துடிப்புடைய இருதயமாக உருப்பெறுகிறது. 90வது நாள் வாக்கில் கருவில் வளரும் குழந்தை இரத்த சுழற்சியைத் தானே நடத்துகிறது.

பிறவி இருதய நோய் உண்டாவதானால் இந்த 90 நாட்களுக்குள் ஏற்பட வேண்டும். வைரஸ்கள் குறிப்பாக ருபெல்லா எனும் ஜெர்மன் தட்டம்மை, கர்ப்பமடைந்த 90 நாட்களுக்குள் தாக்கினால் அந்தப் பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தை இருதய நோயுடனோ, மனவளர்ச்சி குன்றியோ அல்லது மற்ற அங்க வளர்ச்சி குன்றியோ பிறக்கும். கர்ப்ப காலத்தில் எக்ஸ்ரே எடுப்பது, குறிப்பிட்ட சில மருந்துகள் சாப்பிடுவது முதலியனவும் இருதய நோய் உட்பட்ட பல பிறவிக் கோளாறுகளுக்குக் காரணமாகி விடுகின்றன.

பிறவி இருதய நோய்கள் சிலவற்றை அறுவை சிகிச்சை மூலம் சீர் செய்து விடமுடியும். 1983 ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் தேதி புதன் கிழமை ரோம் நகரில் பாம்பினோ கெசு பேடியாட்ரிக் மருத்துவமனையில் டாக்டர் கார்லோ மார்செலெட் என்பவர், பிறந்த 48 மணி நேர குழந்தைக்கு இருதய அறுவை சிகிச்சை செய்தார். குழந்தை கருவிலே வளரும் போதே இடது வெண்ரிக்கிளிலில் ஒரு கழலை இருந்தது. குழந்தை பிறந்த உடன் அதைப் பரிசோதித்த டாக்டர் அதன் இருதயத்துடிப்பு 130–140க்குப் பதிலாக 100 ஆக இருந்ததைக் கண்டு கொண்டார். மேலும் இருதய முணுமுணுப்பு, வாள் ஓரத்திலும், விரல் முனைகளிலும் நீல நிறம் முதலியன குழந்தையின் இருதயத்தில் அடைப்பு உள்ளதை உணர்த்தியது. இதற்குக் காரணம் வெண்ரிக்கிள் தடுப்புச்சுவரில் பொதிந்து வளர்ந்துள்ள 2.2 செ.மீ. நீளமுள்ள கழலை. இருதயத்துடிப்பின் காரணமாக மேலும் கீழும் இறங்கி மகாதமனிக்குள் ஆக்ஸிஜனூட்டம் பெற்ற இரத்தம் செல்வதை அடைத்துக் கொண்டிருந்தது. பிறவிக் கோளாறான இதை அப்புறப்படுத்தாவிட்டால் குழந்தை இறந்துவிடும். இந்த நிலையில் டாக்டர் மார்செலேட், அந்தக் குழந்தைக்கு இருதய அறுவை சிகிச்சை செய்து அக் கழலையை அகற்றினார். அதன் பின் வாழ்விற்கும் – சாவிற்கும் பல நாட்கள் போராட்டம் நடத்தியது அக்குழந்தை. பின்னர் அறுவை சிகிச்சை நடந்த 19 நாட்களுக்கு பிறகு – பிறந்த 21 நாட்களுக்குப் பின் அக்குழந்தை மருத்துவமனையை விட்டு வெளியே வந்தது. இன்று மற்ற குழந்தைகளைப் போல் ஆரோக்கியமாக உள்ளது.

பிறவி இருதய நோய்கள் இதைப் போல் பல உண்டு. பொதுவான சில நோய்களைப் பற்றி இப்போது பார்ப்போம். அவைகளில்,



1. நீலக்குழந்தைகள்
2. வலதுபுற மகாதமனி
3. இருதயத் தடுப்புச் சுவரில் துவாரங்கள்
4. குறுகலான நுரையீரல் தமனி
5. வலது வெண்ரிக்கிள் பொருமல்
6. மூடாத தமனிக் குழாய்
7. வலது இருதயம் என்பன சில.

நீலக் குழந்தைகள் என்ற இந்த நோய்க்கு ஸைசியானோஸிஸ் என்று பெயர். இந்த நோயுள்ள குழந்தைகள் நீலநிறமாக இருப்பதில்லை. குழந்தையின் உதடுகள், கை, கால் நகங்கள், நாக்கு, கன்னப்பகுதி முதலிய பகுதிகள் நீல நிறமாக இருக்கும். உடற் பிரயாசை அதிகமாகும் போது இந்த நீல சாயலும் அதிகரிக்கிறது. சாதாரண இரத்த சுழற்சியில் சிரை இரத்தமும் தமனி இரத்தமும் கலப்பதில்லை. சிரை இரத்தம் என்பது ஆக்ஸிஜனற்ற இரத்தம் – ஊட்டச் சத்தற்ற கரிய மிலவாயு கலந்தது. கருநீல வண்ணத்தில் இருக்கும். தமனி இரத்தமோ ஆக்ஸிஜன் நிறைந்தது. நல்ல சிவப்பு நிறமுடையது.

சுவாதித்தலில் ஏற்படும் கோளாறு, பிறவி இருதய நோய், இருதயச் செயலிழப்பு ஆகிய உடற் சீர்கேட்டினால் சிரை இரத்தமும் தமனி இரத்தமும் கலந்துவிடுகிறது. இந்தக் கலப்பு இரத்தம் ஆக்ஸிஜனும் ஊட்டச்சத்தும் குறைந்தது. இது உடலெங்கும் பரவுகிறது. போதுமான ஆக்ஸிஜனூட்டம் இல்லாததால் உடலின் சில பகுதிகள் நீலநிறமடைகிறது. இதை ஸையானோடிக் நோய் என்று குறிப்பிடுவர்.

ஸையானோடிக் நோயின் முக்கிய காரணம் 'ஃபாலோட்டெட்ராலஜி' எட்டின் எல்.ஏ. ஃபாலோட் எனும் பிரஞ்சு நாட்டு உடலியங்கியலார் இந்நோய் உண்டாவதின் காரணத்தை விவரித்ததால் இந்த பெயர் வந்தது. "டெட்ரா'' என்ற சொல்லிற்கு "நான்கு'' என்று பொருள். ஸையானோடிக் நோயின் முக்கிய காரணிகள் நான்கு என்று குறிப்பிட்டுள்ளார். வலது புற மகாதமனி, இருதயத் தடுப்புச் சுவரில் துவாரங்கள், குறுகலான நுரையீரல் தமனி, வெண்ரிக்கிள், குறுகலான பொருமல் ஆகிய நான்கு குறைபாடுகள் இந்த நோயில் அடங்கும்.

மகாதமனி இடது வெண்ரிக்கிளிலிருந்து ஆரம்பமாகிறது. உடல் முழுவதும் சுத்தமான இரத்தத்தை எடுத்துச் செல்லும். இது எல்லோருக்கும் இடது புறம் அமைந்திருக்கும். பிறவிக் கோளாறு காரணமாக சிலருக்கு இது இடம் மாறி அமைந்துவிடும். மகாதமனி இடது வெண்ரிக்கிளிலிருந்து ஆரம்பமாவதற்குப் பதில் வலது வெண்ரிக்கிளிலிருந்து துவங்கும். நுரையீரல் தமனி இடது வெண்ரிக்கிளிலிருந்து துவங்கும். இதன் காரணமாக ஆக்ஸிஜனற்ற இரத்தம் மீண்டும் மீண்டும் உடலெங்கும் பரவிச் செல்லுகிறது. ஆக்ஸிஜனூட்டம் பெற்ற இரத்தம் மீண்டும் மீண்டும் நுரையீரலுக்குள் செல்லுகிறது.

பிறவி இருதய நோயில் இது மிகக் கடுமையானது, சிக்கலானது. இந்தக் கோளாறு உள்ள குழந்தைகளில் 25 சதவிகிதம் பிறந்த சில நாட்களிலேயே இறந்து விடும். இந்தக் குறை உடனடியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அறுவை சிகிச்சை மூலம் நிவர்த்தி செய்துவிடலாம்.

பிறவிக் கோளாறில் பொதுவாகக் காணப்படும் குறை இருதயத் தடுப்புச் சுவரில் ஏற்படும் துவாரங்கள் இருதயம் வலது இடது என இரு பகுதிகளாக இருப்பது தெரியும். இவைகள் இரண்டையும் ஒரு தடுப்புச் சுவர் பிரித்துள்ளது. இடது ஏட்ரியத்தையும் வலது ஏட்ரியத்தையும் பிரிப்பது ஏட்ரியங்களிடைத் தடுப்புச் சுவர். இடது வெண்ரிக்கிளையும் வலது வெண்ரிக்கிளையும் பிரிப்பது வெண்ரிக்கிளிடைத் தடுப்புச்சுவர். இந்தத் தடுப்புச் சுவர்கள் இருதயத்தின் இருபகுதிகளிலுள்ள இரத்தம் ஒன்றுடன் ஒன்று கலப்பதைத் தடுக்கிறது.

பிறவி இருதய நோயின் சில வகைகளில் வெண்ரிக்கிளிடைத் தடுப்புச் சுவரிலோ, ஏட்ரிய தடுப்புச் சுவரிலோ நைவோ துவாரமோ ஏற்பட்டு விடுகிறது. இருதயத்தின் இடது பகுதியில்,இரத்தம், வலது பகுதியை விட அழுத்தத்துடனும் விசையுடனும் வெளியேற்றப்படுவது தெரியும். இந்த துவாரம் காரணமாக இடது பகுதியிலிருந்து இரத்தம் வலது பகுதிக்குச்சென்று விடுகிறது. அங்கிருந்து நுரையீரலுக்குச் சென்று மீண்டும் இடது இருதயத்தை அடைகிறது. அதாவது இடது இருதயம் வலது இருதயம் நுரையீரல் என்று தனி இரத்த சுழற்சி கிளை சுழற்சி ஏற்பட்டு விடுகிறது.இதன் விளைவாக நுரையீரலுக்குள் வழக்கத்தை விட அதிக அளவு இரத்தம் செல்லுகிறது. சாதாரணமாக இரத்த சுழற்சியில் நுரையீரலுக்குள் செல்லும் இரத்தமும் உடலின் மற்ற பகுதிகளுக்குச் செல்லும் இரத்தமும் ஒரே அளவாக இருக்கும். நுரையீரலுக்குள் செல்லும் இரத்த அளவுஅதிகமாக இருந்தால் அது நுரையீரலை நிரந்தரமாகப் பாதித்துவிடும். குணப்படுத்த முடியாது. உடனடியாக இக்குறை கண்டுபிடிக்கப்பட்டால் அறுவை சிகிச்சை மூலம் இக்குறையை நீக்கிவிட முடியும்.

இரண்டு ஏட்ரியங்களிடையே தடுப்புச் சுவரில் நைவோ துவாரமோ இருந்தால் அதற்கு ஏட்ரிய தடுப்புச் சுவர் துவாரம் என்று பெயர். இரண்டு வெண்ரிக்கிளிடையே தடுப்புச் சுவரில் நைவோ, துவாரமோ இருந்தால் அதற்கு



வெண்ரிக்கிளிடை தடுப்புச் சுவர் துவாரம் என்று பெயர். நைவின் தன்மை அல்லது துவாரத்தின் அளவே இந்தக் கோளாறின் தீவிரத் தன்மையைப் புலப்படுத்தும்.

நுரையீரலுக்குள் போதுமான அளவு இரத்தம் செல்வதில் தடை ஏற்படுவதற்கும் இருதய நோயில் பிறவிக் கோளாறு ஒரு காரணம். வலது வெண்ரிக்கிளின் புனல் வடிவப் பகுதி குறுகலாக அமைந்திருந்தாலும், நுரையீரலுக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் நுரையீரல் தமனி குறுகலாக அமைந்திருந்தாலும் நுரையிரலுக்குள் குறைந்த அளவு இரத்தமே செல்லும். இதனால் நுரையீரலிலிருந்து ஆக்ஸிஜனூட்டம் பெற்ற இரத்தத்தின் வரவும் குறையும். வலது வெண்ரிக்கிள் பெரிதாக விரிவடைந்திருப்பதும் ஸையோனோடிக் நோய்க்கு ஒரு காரணம் தான்.

இருதயக் கோளாறில் பிறவியிலேயே ஏற்படும் இன்னொரு கோளாறு இருதய இடமாற்றம். எல்லோருக்கும் இருதயம் இடது புறம் அமைந்திருக்கும். அதாவது இருதயத்தில் மூன்றில் இரண்டு பகுதி இடது பக்கமும், மூன்றில் ஒரு பகுதி வலது பக்கமும் அமைந்திருக்கும். பிறவியிலேயே சிலருக்கு இருதயம் முழுவதும் வலது பக்கமே அமைந்திருக்கும்.அது ஒரு பிறவிக் குறையே தவிர பிறவி நோய் அல்ல. இதனால் எந்த வித பாதிப்பும் கிடையாது.

மகாதமனி இறுக்கம் அல்லது குறுகல் ஒரு வகைப் பிறவிக் கோளாறு இடது வெண்ரிக்களிலிருந்து மகாதமனி வெளிவரும்இடத்தில் இறுக்கமாகவோ, குறுகலாகவோ அமைந்திருக்கும். மகாதமனி மூலம்தான் உடலெங்கும் ஆக்ஸிஜனூட்டம் பெற்ற இரத்தம் செல்கிறது என்பது தெரியும். இது குறுகலாக இருந்தால் உடலெங்கும் பரவி செல்லத் தேவையான அளவு இரத்தம் இதன் வழியாக செல்ல முடியாமல் தடைபட்டுப் போய்விடுகிறது. குறுகிய வழியாக செல்லும் குறைந்த அளவு இரத்தம் அருகிலுள்ள தலை, கைகள் பகுதிக்குச் செல்கிறது. கால்கள் பகுதிக்குச் செல்ல முடிவதில்லை. போதுமான இரத்த ஊட்டம் இல்லாத கால்கள் பகுதி வளர்ச்சி குன்றி சூம்பிப்போய் விடுகிறது.

இந்தக் கோளாறை கவனிக்காமல் விட்டுவிட்டால் இரத்த நாளங்களில் இரத்த அழுத்தம் அதிகமாகி அவைகள் சேதமடைந்துவிடும். மரணமும் ஏற்படும். எனினும் இந்தக் கோளாறை டாக்டர்கள் எளிதில் கண்டு பிடித்து விடுவார்கள். அறுவை சிகிச்சை மூலம் குறுகலான பகுதியை அகற்றிவிட்டு செயற்கை தமனியைப் பொருத்தி விடுவார்கள்.

பிறவிக் கோளாறில் அடுத்த முரண்பாடு, தமனியின் மூடாத குழாய், கருவில் வளரும் குழந்தையில் மகாதமனியும் நுரையீரல் தமனியும் ஒரு சிறுநாளம் மூலம் இணைக்கப்பட்டிருக்கும். குழந்தை பிறந்த உடன் இந்த நாளம் சுருங்கி மறைந்துவிடும். சில குழந்தைகளுக்கு இந்த நாளம் எந்த காரணத்தினாலோ சுருங்கி மறைவதில்லை. பிறந்த பிறகும் இரு மகாதமனிடையே உள்ள இந்தத் தொடர்பு நீடிக்கிறது. இந்த நிலைக்கு மூடாத டக்டஸ் ஆர்ட்டரி யோஸிஸ் என்று பெயர்.

மகாதமனிக்கும் நுரையிரலுக்குமிடையே உள்ள இந்தத் தொடர்பு நீடித்திருப்பதின் விளைவு, மகா தமனியின் சுத்த இரத்தத்தின் ஒருபகுதி நுரையீரல் தமனிக்குச் செல்கிறது. அதன் வழியாக நுரையீரலை அடைகிறது. அங்கிருந்து நுரையீரல் கிளைகள் வழியாக இடது ஏட்ரியத்திற்கு வந்து இடது வெண்ரிக்களை சென்று அடைகிறது. இதனால் நுரையீரல் இடது ஏட்டிரியம் இடது வெண்ரிக்கிள் வேலைப்பளு அதிகரிக்கிறது. இடது வெண்ட்ரிக்கள் விரிவடைந்து பெரிதாகிறது. அதே சமயம் உடலெங்கும் பரவிச் செல்ல வேண்டிய சுத்த இரத்தத்தின் அளவும் குறைந்து போகிறது. போதிய சுத்தஇரத்தம் செல்லாததால் உடலிலுள்ள திசுக்களில் ஊட்டம் குறைகிறது. குழந்தையின் வளர்ச்சி குன்றிப் போய் மெலிந்து குட்டையாகக் காட்சி தருகிறது.

இந்தக் கோளாறை டாக்டர்கள் எளிதில் நிர்ணயம் செய்துவிடுவார்கள். இருதயம், டாக்டர்களின் ஸ்டெதஸ்கோப்பின் மூலமாக இந்த நோயைப் பற்றி "முணுமுணுக்கும்'' மற்ற பல இருதய வியாதிகளின் போது "முணுமுணுப்பு'' இருதயம் சுருங்கும் போதோ (சிஸ்டோலி) விரிவடையும் போதோ (டயஸ்டோலி) மட்டும் கேட்கும். ஆனால் தமனியின் மூடாத குழாய் கோளாறின் போது இருதய முணுமுணுப்பு இடைவிடாமல் இருக்கும். அதாவது சுருங்கும்போதும் முணுமுணுக்கும். விரிவடையும் போதும் முணுமுணுக்கும். இக்குறையை அறுவை சிகிச்சை மூலம் தீர்த்துவிடுவார்கள். மகாதமனியையும், நுரையீரல் தமனியையும் இணைக்கும் தமனி நாளத்தை அறுவை சிகிச்சையின் போது முடிச்சுப் போட்டு கட்டி விடுவதின் மூலமாகவோ அகற்றி விடுவதின் மூலமாகவோ சரி செய்து விடுவார்கள்.

பிறவி இருதய நோய்களின் அறிகுறிகள் நைவின் தீவிரத்தைப் பொறுத்தே வெளியே தெரியவரும். சில நேர்வுகளில் இந்த அறிகுறிகள் வெளிப்படையாக தெரிவதில்லை. டாக்டர்கள் குழந்தைகளை பரிசோதனை செய்யும்போதுதான் பிறவி இருதய நோய் இருப்பது தெரிய வரும். குழந்தைக்குப் பிறவி இருதய நோய் தீவிரமாக இருந்தால் சில பொதுவான அறிகுறிகள் காணப்படும். அவைகள் பின்வருவன:

1. மூச்சுவிடும் வீதம் வேகமாக இருக்கும்.
2. இருதயத் துடிப்பு வேகமாக இருக்கும்

3. குழந்தைக்குப் பால் குடித்த பின் மூச்சு விட திணறும்.

4. அளவுக்கு அதிகமாக வேர்த்துவிடும்.

5. இருமலும், ஜலதோஷமும் அடிக்கடி வந்து கொண்டிருக்கும்.

6. ஸையானோஸிஸ் உள்ள குழந்தைகளின் கால், கை நகங்கள் தடித்து இருக்கும்.

7. ஃபாலோட் டெட்ராலஜி உள்ள குழந்தைகளுக்கும் ஸையானோஸிஸ் அறிகுறிகள் ஏற்படும்.

8. இரத்த ஊட்டக் குறைவின் காரணமாக உடற்சோர்வு, மெலிவு, குன்றிய வளர்ச்சி முதலியன காணப்படும்.

பிறவி இருதய நோய் இருப்பதை சரியான நேரத்தில் கண்டுபிடிக்காவிட்டால் அது பல்வேறு சிக்கல்களை உண்டுபண்ணி உயிருக்கே உலை வைத்துவிடலாம். இருதய முணுமுணுப்பு, இருதயத்தில் கோளாறு இருப்பதைத் தெரிவிக்கும். நுரையீரலுக்குள் அதிக அளவு இரத்தம் சென்றாலும் இந்த முணுமுணுப்பு கேட்கும். இருதயத்தின் தடுக்கிதழ்கள் குறுகலாக இருந்தாலும், இந்த முணுமுணுப்பு கேட்கும். எக்ஸ்ரே, இருதய மின்னலை வரைபடம், இருதய தமனி வரைபடம் ஆகிய பரிசோதனைகளையும் செய்து பார்க்க வேண்டும்.

எக்ஸ்ரே, இருதய நோய்களை நிர்ணயிக்க உதவும் ஒரு சாதனம். இருதய மின்னலை வரைபடம் இருதய நோய்களை வரைபடமாகக் காட்டிவிடும். இருதய தமனி வரைபடம் தமனியிலுள்ள அடைப்புகளை சுட்டிக் காட்டும். நோயறுதி செப்பும் முறையில் இருதய எதிரொலி வரைபடமும் இப்போது பெருந்துணை புரிகிறது. இருதய எதிரொலி வரைபட முறையில் மீயொலி முறை பயன்படுத்தப்படுகிறது. சுமார் 90சதவீத பிறவி இருதய நோய்கள் இருபரிமாண இருதய எதிரொலி வரைபட மூலமாக நோயறுதி செய்யப்படுகிறது. இப்பரிசோதனையின் போது சில சமயங்களில் "டாப்ளர் விளைவு``களையும் இணைத்து ஆய்வுறுதி செய்வதுண்டு.

பிறவி இருதய நோயின் தீவிரம் கூறமைவு அதனால் இருதயத்தில் ஏற்படும் செயல்முறை மாறுதல்களை கண்டறிய ஆஞ்சியோகிராபி எனும் இருதய தமனி வரைபடம், கதீட்டர் எனும் சிறுகுழலை உட்செலுத்திப் பார்த்தல் முதலிய வழிகள் உள்ளார்ந்த நோயறுதி ஆய்வு முறையில் கையாளப்படுகின்றன. இந்த வழிமுறைகள் அறுவைச் சிகிச்சையாளர்களுக்கு பெரிதும் உதவுகின்றன.

பிறவி இருதய நோயை முழுமையாக குணப்படுத்தவோ அல்லது கோளாறுகளை நிவர்த்தி செய்யவோ சரியான தருணத்தில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். தமனிகள் மாற்றக் கோளாறு அதாவது வலது வெண்ட்ரிக்களின் மகாதமனியும், இடது வெண்ட்ரிக்களின் நுரையீரல் தமனியும் மாறி அமைந்திருக்கும் பிறவிக் கோளாறு போன்ற சில கோளாறுகளை நிவர்த்திக்க குழந்தைப் பிறந்த 3முதல் 6 மாதங்களுக்குள் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் குழந்தையின் உயிருக்கே ஆபத்து. மற்ற சில பிறவி இருதய கோளாறுகளை சரிசெய்ய 3 வயதுக்குள் அறுவை சிகிச்சை செய்யலாம். சில நேர்வுகளில் வெண்ரிக்களிடை தடுப்புச் சுவர் துவாரம் தானாகவே மூடிக்கொள்ளும். வெண்ரிக்களில் ஏற்பட்டுள்ள சில சிறிய பிறவிக் கோளாறுகளுக்கு அறுவை சிகிச்சை அவசியமில்லை. எனினும் தொடர்ந்து அந்த நலிவுகளை எக்ஸ்ரே, இருதய மின்னலை வரைபடம், இருதய எதிரொலி வரைபடம் ஆகியவற்றின் மூலம் சோதித்து கண்காணித்து வரவேண்டும். சிறு கோளாறே பின்னர் பெரும் விபரீதத்தை விளைத்துவிடும்.

வெண்ரிக்கிளிடையே தடுப்புச் சுவர் துவாரம், தமனியின் மூடாத குழாய், குறுகலான மகாதமனி, மகாதமனி இடமாற்றம் போன்ற சில பிறவி இருதய நோய்கள் இருதய செயலிழப்பு செய்து விடும். இதற்காக டாக்டர்கள் டிகோக்ஸின் (Digoxin) டையுரேட்டிக்ஸ் (Diuretics) மருந்து வகைகளை கொடுத்து சிகிச்சை அளிப்பதுண்டு. சில நேர்வுகளில் தமனியின் மூடாத குழாயை மருந்தின் மூலமாகவே மூடவைக்க அல்லது சுருங்க வைக்கிறார்கள். சில குறிப்பிட்ட நேர்வுகளில் கதீட்டர் எனும் சிறுகுழலை உள்ளே செலுத்தி தமனியின் மூடாத குழாயை அடைத்து விடுகிறார்கள். எனினும் பொதுவாக பெரும்பான்மையான நேர்வுகளில் அறுவை சிகிச்சை மூலமே இக்குறை நிவர்த்திக்கப்படுகிறது.

பிறவி இருதய நோய்களை அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்துவதில் இரு வழிமுறைகள் பொதுவாக கடைபிடிக்கப்படுகின்றன. அறுவை சிகிச்சை மூலம் நோயின் தீவிரத்தை ஆற்றுவிப்பது அதாவது தணிப்பது ஒருமுறை, முழுமையாக கோளாறுகளை நிவர்த்திப்பது இன்னொரு வழிமுறை. நோயின் தன்மைக்கேற்ப வழிமுறைகள் கையாளப்படும். முதலில் நோயின் தீவிரத்தைத் தணித்து பின்னர் சில ஆண்டுகள் கழித்து முழுமையாக குணப்படுத்தும் சிகிச்சை செய்வர். இருதய அறுவை சிகிச்சையில் பெரும் முன்னேற்றங்கள் இப்போது ஏற்பட்டுள்ளன. எனவே பிறவி இருதய நோய்களை இப்போது முழுமையாக குணப்படுத்த முடியும். கோளாறுகளை நிவர்த்திக்கவும் முடியும்.

*– 'உடலியல் கலைக் களஞ்சியம்' நூலிலிருந்து,*
*வெளியீடு: அல்லயன்ஸ்*

• • •





# சமூகநலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள்

## பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் : | பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் (ஒரே ஒரு பெண் குழந்தைக்கான திட்டம்–I, இரண்டு பெண் குழந்தைகளுக்கான திட்டம்–II) |
| திட்டத்தின் நோக்கம் : | குடும்பக்கட்டுப்பாட்டை ஊக்குவித்தல், பெண் சிசுவதையினை ஒழித்தல், ஏழை குடும்பங்களில் பெண் குழந்தைகளுக்கு நல்வாழ்வு வழங்குதல், பெண் குழந்தைகளின் மதிப்பை உயர்த்துதல். |
| 3. வழங்கப்படும் உதவி | குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் எனில் ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் ரூ.15,200/– நிலை வைப்புத் தொகையும், ஒரேவொரு பெண்குழந்தை எனில் ரூ.22,200/– நிலை வைப்புத் தொகையும் வழங்கப்படும்.<br>இத்திட்டத்தில் சேரும் குழந்தைக்கு மாதந்தோறும் ரூ.150 கல்வி உதவித் தொகையாக முதலாம் வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பு / மேற்படிப்பு வரையிலும் மற்றும் நிலை வைப்புத் தொகையின் 20–ஆம் ஆண்டின் முடிவு வரையிலும் வழங்கப்படும். |
| 4. பயன் பெறுவோர் : | ஏழை குடும்பங்களில் உள்ள பெண் குழந்தைகள் |
| 5. வழங்கப்படுவதற்கான கால அளவு : | நிலை வைப்புத் தொகையின் 20–ஆம் ஆண்டின் முடிவில் அதுவரை சேர்ந்த வட்டியுடனான விகித அடிப்படையில் முதிர்வுத் தொகையுடன் சேர்த்து வழங்கப்படும். |

**தகுதிகள் / நிபந்தனைகள்:**

| | |
|---|---|
| அ.கல்வித் தகுதி : | இல்லை |
| ஆ.குடும்ப வருமான வரம்பு : | **திட்டம் –I :** ஒரு பெண் குழந்தை எனில் பெற்றோருக்கு ஆண்டு வருமானம் ரூ.50000/–க்கு குறைவாக இருக்க வேண்டும்.<br>**திட்டம் –II :** இரண்டு பெண் குழந்தைகள் எனில் பெற்றோருக்கு ஆண்டு வருமானம் ரூ.12,000/–க்கு குறைவாக இருக்க வேண்டும். |
| இ. வயது வரம்பு : | 1. பதிவு செய்யப்படும் பெண் குழந்தைகளின் வயது ஓராண்டுக்குள் இருத்தல் வேண்டும். இரண்டு பெண் குழந்தைகள் எனில் இரண்டாவது பெண் குழந்தையின் வயது ஓராண்டுக்குள் இருத்தல் வேண்டும்.<br>2. கருத்தடை செய்து கொள்ளும் தாய்/தந்தையின் வயது கருத்தடை செய்து கொள்ளும் நாளன்று 35–க்குள் இருத்தல் வேண்டும். |
| ஈ. இதர நிபந்தனைகள் : | குடும்பத்தில் ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருக்க வேண்டும். ஆண் குழந்தை இருக்கக் கூடாது. பின்னாளில் ஆண் குழந்தையை தத்து எடுத்துக் கொள்ளவும் கூடாது. |
| உ. விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு : | விண்ணப்ப நாளன்று குழந்தைக்கு 1 வயது முடிவடைவதற்குள் விண்ணப்பிக்க வேண்டும். குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் எனில், இரண்டாவது பெண் குழந்தையின் வயது ஓராண்டுக்குள் இருத்தல் வேண்டும். |

7. அணுக வேண்டிய அலுவலர்கள் :
1. மகளிர் ஊர்நல அலுவலர்
2. விரிவாக்க அலுவலர் (சமூகநலம்)
3. சமுதாய ஊட்டச்சத்து திட்ட பயிற்றுநர்
4. மண்டல ஊட்டச்சத்து திட்ட அலுவலர்
5. குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்
6. மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர்
7. மாவட்ட சமூகநல அலுவலர்

8. விண்ணப்பங்களை பரிசீலிக்க உத்தேசிக்கப் பட்ட கால அளவு : ஒரு மாதம்.

9. குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர்கள் : மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட மாவட்ட சமூகநல அலுவலர், மாநில அளவில் சமூகநல ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 தொலைபேசி எண்.8523718

## புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

1. திட்டத்தின் பெயர் : புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (பள்ளி மையங்கள்)

2. திட்டத்தின் நோக்கங்கள் : 2 வயது முதல் 5 வயது வரை குழந்தைகள் நல மையங்களில் முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகளுக்கும், 5 வயதுக்கு மேற்பட்ட 1 முதல் 10 வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கும் உடல் நலம் பேணுதல் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல், உடல் மற்றும் மனவளர்ச்சியை மேம்படுத்த போதுமான அளவு சத்துணவு வழங்குதல்.

3. தகுதி : சத்துணவு மையம் ஆரம்பிப்பதற்கு குறைந்த பட்சம் 25 குழந்தைகள் இருக்க வேண்டும்.

4. தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள் :
1. மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்)
2. சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்.

5. குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர்கள் : சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்/ மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்(சத்துணவுத் திட்டம்)

## சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகங்கள்

1. திட்டத்தின் பெயர் : சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகம்.

2. திட்டத்தின் நோக்கங்கள் : ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு கல்வி அளித்தல்.

3. வழங்கப்படும் உதவி : உறைவிடம், கல்வி, மருத்துவ வசதி, சீருடை, பாடநூல்கள், காலணிகள் மற்றும் படுக்கை வசதி.

4. பயன் பெறுபவர் : பெற்றோரை இழந்த ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள்.



5. தகுதிகள்/ நிபந்தனைகள் :

அ. கல்வித் தகுதி :

ஆ. வருமான வரம்பு : வருட வருமானம் ரூ.12,000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இ. வயது வரம்பு : 5 வயது முதல் 18 வயது வரை.

ஈ. இதர தகுதிகள் : ஆண் குழந்தைகள் 5 ஆம் வகுப்பு வரை

உ. விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு : கல்வி ஆண்டு தொடக்கத்தில்

6. சிறப்பு சலுகைகள்/ முன்னுரிமை ஏதேனும்: பெற்றோர்கள்இருவரும் இல்லாத பெண் குழந்தைகள் மேல்படிப்புக்காக 21 வயது வரை அனுமதிக்கப்படுகிறார்கள்.

7. அணுக வேண்டிய அலுவலர்கள்:
1. மாவட்ட சமூகநல அலுவலர்
2. கண்காணிப்பாளர், அரசு குழந்தைகள் காப்பகம்.
3. சமூகநல விரிவாக்க அலுவலர்
4. மகளிர் ஊர்நல அலுவலர்.

8. குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர்கள்: மாவட்டங்களில்- மாவட்ட ஆட்சியர்/மாவட்ட சமூகநல அலுவலர் மாநில அளவில்- சமூகநல ஆணையர்,சென்னை-5 தொலைபேசி எண்.8523718.

## தத்தெடுத்தல்

1. திட்டத்தின் பெயர்: தத்தெடுத்தல்.

2. திட்டத்தின் நோக்கங்கள்: ஆதரவற்ற/ பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு குடும்ப சூழலில் வாழ வகை செய்தல்.

3. எந்த நிறுவனத்தால் தத்துக் கொடுக்க இயலும்: அரசால் அங்கீகாரம் பெற்ற 19 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மட்டுமே தத்து கொடுக்க இயலும்.

4. பயன் பெறுபவர்
1. ஆதரவற்ற / பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகள் வாழ வகை செய்தல்.
2. குழந்தைகள் இல்லாத பெற்றோர்.
3. தத்தெடுத்துக் கொள்ள விருப்பமுள்ள ஆண்/ பெண்.

5. தத்தெடுக்கும் பெற்றோருக்கான தகுதிகள்

அ. வயது
1. தத்தெடுக்கும் பெற்றோர்களின் மொத்த வயது 90-க்குள்ளும் அதில் ஒருவர் 45 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளை தத்தெடுத்துக் கொள்ளலாம்.
2. வயதான தம்பதியினருக்கு வயது அதிகமுள்ள குழந்தைகள் தான் தத்து கொடுக்கப்படும்.
3. தனிப்பட்ட ஆணோ / பெண்ணோ அல்லது விதவையோ அல்லது முறையாக விவாகரத்து செய்தவரே தத்து எடுக்க விரும்பினால் அவர்களின் வயது 30-ம் அதற்கு மேலும் இருக்க வேண்டும். மற்றும் தத்து எடுக்கும் பெற்றோருக்கும் குழந்தைக்கும் குறைந்தது 21 வயது வித்தியாசம் இருக்க வேண்டும்.

ஆ.கல்வித் தகுதி : ஏதுமில்லை.

இ. வருமான வரம்பு: ஒரு குழந்தையை நல்ல முறையில் வளர்க்கத் தேவையான வருமானம்.

ஈ. இதர நிபந்தனைகள்:

1. இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம் 1956–ன்படி (Hindu Adoption and Maintenance Act 1956) தத்தெடுக்கலாம்..

2. இந்து மதத்தைச் சார்ந்தவர்கள், பாதுகாப்பாளர் என்ற பெயரில் பாதுகாப்பாளர் மற்றும் முதுகணாளர் சட்டம் 1890 –ன்படி (Guardians and Wards Act 1890) குழந்தைகளுக்கு பாதுகாவலராகலாம்.

6. **அரசுப் பணியிலிருப்போருக்குச் சிறப்புச் சலுகைகள்:** தத்தெடுத்துக் கொள்ளும் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு ஓராண்டு கால அல்லது தத்து எடுக்கும் குழந்தையின் வயதினைப் பொறுத்து சிறப்பு தத்து விடுப்பு அளிக்கப்படுகிறது.

7. **தத்தெடுக்க அணுக வேண்டிய அலுவலர்கள்.நிறுவனங்கள்:**

1. தத்துக்குழு, சமூகநல ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை–5.

2. சம்பந்தப்பட்ட மாவட்ட சமூகநல அலுவலர் . 3. தன்னார்வத் தொண்டு நிறுவனம் (Voluntary Co-ordinating Agency (VCA) II 3–வது பிரதான சாலை, செனாய் நகர், சென்னை–600030. 4. .உரிமம் பெற்ற ஏதாவது ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம்.

**நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி :**

1. கில்டு ஆப் சர்வீஸ்,
32,காசா மேஜர் சாலை
சென்னை–600 008
தொலைபேசி 8268565

2. கர்ண பிரயாக் ட்ரஸ்ட்
7, ராஜா கிருஷ்ணாராவ் சாலை
ஆழ்வார்பேட்டை
சென்னை–600 018
தொலைபேசி 4355182

3. இன்ஸ்ட்டிட்யூட் ஆப் ப்ரான் சிஸ்கன்,
மிசினரிஸ் ஆப் மேரி சொசைட்டி நெ. 3 வேறாலி அப்பாசல்ஸ் கான்வெண்ட், செயின்ட் தாமஸ் மவுண்ட் சென்னை–6000 016,
தொலைப்பேசி 2345526

4. கான்காா்ட் ஹவுஸ் ஆப் ஜீசஸ், சி 23 அண்ணாநகர் கிழக்கு, சென்னை–600 102, தொலைப்பேசி எண் 6423251,

5. மலேசியன் சோசியல் சர்வீஸ் செங்குந்தர் நகர், சென்னை– 600 030, தொலைப்பேசி – 6273478 6267519,

6. கிரேஸ் கென்னட் பவுண்டேசன், 34 கென்னட் ரோடு மதுரை 625010
தொலைபேசி 601767

7. பேபிலீஸ் பார் சில்ட்ரன் 107, வள்ளலார் ரோடு போதனூர்
கோயம்புத்தூர் 641023 தொலைப்பேசி 8272397



8. கான்கிரிகேசன் ஆப் செவநாடு (சாக்ஸீட்) தபால் பை எண் 395
ஓல்டு குட்ஸ் செட் ரோடு, தெப்பக்குளம் திருச்சி 620002
தொலைப்பேசி 701514

9. கிரைஸ்ட் பெய்த் ஹோம் பார் சில்ட்ரன் 3/91, மேட்டு காலனி
மணப்பாக்கம் சென்னை– 600 016, தொலைப்பேசி 2330588

10. பாலமந்திர் காமராஜ் டிரஸ்ட் 126, ஜி.என்.செட்டி ரோடு.
தியாகராயர் நகர், சென்னை – 600 017. தொலைபேசி 8267921

11. கிளேரட்டியன் மெர்ஸிஹோம், அழகு சிறை, பொனனமங்கலம்,
திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம், தொலைபேசி– 21646

12. செயிண்ட் ஜோசப் சாரிடி இன்ஸ்டியூட், அடைக்கலபுரம், தூத்துக்குடி
மாவட்டம், தொலைபேசி – 44248.

13. மிசினரிஸ் ஆப் சாரிடி. நிர்மலா சிசுபவன். 79. மேற்கு மாதா சர்ச் சாலை,
ராயபுரம், சென்னை–13 தொலைப்பேசி – 5956928 .

14. ஆனந்த ஆஸ்ரமம், தென்கனிக்கோட்டை சாலை, எச்,சி,எப் போஸ்ட்,
மத்தகிரி, ஒசூர், தருமபுரி மாவட்டம், தொலைபேசி எண் 22007/22190.

15 கஸ்தூரிபா மருத்துவமனை, காந்திகிராமம், திண்டுக்கல்,
தொலைபேசி எண்452328

16. திருநெல்வேலி சோசியல் சர்வீஸ் சொசைட்டி. பாளையங்கோட்டை,
திருநெல்வேலி மாவட்டம்.

17 . அவ்வை கிராம நலச் சங்கம், கிழ்வேளூர், நாகப்பட்டினம் மாவட்டம்,

18 கலைச்செல்வி கருணாலயா சொசைட்டி, சென்னை.

19. லைப்லைன் டிரஸ்ட் சேலம்.

20. மாதர் நல தொண்டு நிறுவனம், கடலூர்.

21. எம்.ஏ.எஸ்.ஓ.எஸ். (M.A.S.O.S.) கில்டு, நெடுங்குன்றம், காஞ்சிபுரம்.

**குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர்** செயலாளர் தத்துக்குழு சமுகநல ஆணையரகம்,
சேப்பாக்கம் சென்னை – 600 005. தொலைப்பேசி எண் 8523718.

குறிப்பு : மருத்துவமனைகளிலோ, தெருவோரத்திலோ அல்லது பொது இடங்களிலோ ஆதரவற்ற நிலையில் கைவிடப்பட்ட குழந்தைகளை கண்டால் அருகில் உள்ள காவல் நிலையம், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட சமூகநல அலுவலர் அல்லது அரசால் அங்கீகாரம் பெற்ற 19 தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமோ தான் ஒப்படைக்க வேண்டும். இவர்கள் இக்குழந்தையை பராமரித்து சட்டப்பூர்வமாக குழந்தையில்லாத் தம்பதிகளுக்கு தத்துக்கொடுக்க ஆவனச் செய்வர். அங்கீகாரம் பெறாத நிறுவனத்திடமோ, குழந்தைகளை வளர்க்க முன்வரும் தனி நபர்களிடமோ குழந்தைகளை ஒப்படைப்பது சட்டப்படி தவறு.

## ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு, ஏழை விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டம்

1. **திட்டத்தின் பெயர்:** ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டம்

2. திட்டத்தின் நோக்கங்கள் : ஏழை விதவைகளின் மகள்களின் திருமணங்களை நடத்துவதில் போதிய நிதிவசதி இல்லாததால் காலதாமதம் ஏற்படுவதை தவிர்த்து திருமணத்திற்கு நிதி உதவி வழங்குதல்

3. வழங்கப்படும் உதவி: ரூ.10,000 கேட்பு வரைவோலை அல்லது காசோலை

4. பயன் பெறுபவர்: ஏழை விதவை தாய்மார்கள்.

5. தகுதிகள்/நிபந்தனைகள்

அ. கல்வித் தகுதி : இல்லை

ஆ. வருமான வரம்பு: ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

இ. வயது வரம்பு : 20 வயது முதல் 30 வயது வரை.

ஈ. இதர நிபந்தனைகள்: ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்படும்.

உ. விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு : திருமணத்திற்கு 45 நாட்களுக்கு முன்பிருந்து திருமண நாளுக்கு முதல் நாள் வரை.

6. அணுக வேண்டிய அலுவலர்கள் : 1. மாவட்ட சமூகநல அலுவலர்

2. சமூகநல விரிவாக்க அலுவலர்

7. விண்ணப்பங்களை பரிசீலக்க உத்தேசிக்கப்பட்ட கால அளவு: விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள்.

8. குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர்கள்: மாவட்டங்களில்– மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட சமூக அலுவலர் மாநில அளவில்– சமூகநல ஆணையர், சென்னை–5 தொலைபேசி எண்.8523718

## அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம்

1. திட்டத்தின் பெயர்: அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம்.

2. திட்டத்தின் நோக்கங்கள்: அனாதை பெண்களுக்கு பொருளாதார வகையில் திருமணத்திற்கு உதவுதல்.

3. வழங்கப்படும் உதவி: ரூ.10,000 கேட்பு வரைவோலை அல்லது காசோலை.

4. பயன் பெறுபவர்: ஆதரவற்ற பெண்கள்

5. தகுதிகள்/நிபந்தனைகள்:

அ. கல்வித் தகுதி: இல்லை

ஆ. வருமான வரம்பு: ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.



இ. வயது வரம்பு : 20 வயது முதல் 30 வயது வரை.

ஈ. இதர நிபந்தனைகள்: இல்லை.

உ. விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு: திருமணத்திற்கு 45 நாட்களுக்கு முன்பிருந்து திருமண நாளுக்கு முதல் நாள் வரை.

6. அணுக வேண்டிய அலுவலர்கள்: 1. மாவட்ட சமூகநல அலுவலர்

2. சமூகநல விரிவாக்க அலுவலர்.

7. விண்ணப்பங்களை பரிசீலிக்க உத்தேசிக்கப்பட்ட கால அளவு: விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள்.

8. குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர்கள்: மாவட்டங்களில்– மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட சமூகநல அலுவலர் மாநில அளவில் –சமூகநல ஆணையர், சென்னை–5 தொலைபேசி:8523718

## டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம்:

1. திட்டத்தின் பெயர்: டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம்.

2. திட்டத்தின் நோக்கங்கள்: விதவைகளுக்குப் புதுவாழ்வு அளிக்க அவர்களின் மறுமணத்திற்கு நிதியுதவி அளித்தல்.

3. வழங்கப்படும் உதவி : ரூ.10,000 ரூ.7,000 தேசிய சேமிப்பு பத்திரம், ரூ.3000 கேட்பு வரைவோலை அல்லது காசோலை)

4. பயன் பெறுபவர்: திருமணம் செய்து கொள்ளும் தம்பதியர்

5. தகுதிகள்/ நிபந்தனைகள்

அ. கல்வித் தகுதி : இல்லை

ஆ. வருமான வரம்பு : வருமான வரம்பு இல்லை.

இ. வயது வரம்பு: 20 வயது முதல் 30 வயது வரை.

ஈ. இதர நிபந்தனைகள்: இல்லை

உ. விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு : திருமண நாளிலிருந்து 6 மாதத்திற்குள்.

6. அணுக வேண்டிய அலுவலர்கள் : 1. மாவட்ட சமூகநல அலுவலர் 2. சமூகநல விரிவாக்க அலுவலர்.

7. விண்ணப்பங்களை பரிசீலிக்க உத்தேசிக்கப்பட்ட கால அளவு : விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள்.

8. குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர்கள்: மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட சமூகநல அலுவலர். மாநில அளவில் சமூகநல ஆணையர், சென்னை–5 (தொலைபேசி எண்.8523718)

# தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டம்

1. திட்டத்தின் பெயர் : தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டம்

2. திட்டத்தின் நோக்கங்கள் : பிறப்பு அடிப்படையிலான சாதி இன வேறுபாட்டை அகற்றி, தீண்டாமை எனும் கொடுமையை ஒழித்தல்.

3. வழங்கப்படும் உதவி :

அ) தம்பதியரில் ஒருவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினராக இருந்தால் ரூ 20,000 ( ரூ 10,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும், ரூ 10,000 கேட்பு வரைவோலை அல்லது காசோலையாகவும் வழங்கப்படுகிறது.

ஆ) முற்பட்ட இனத்தவர், பிற்படுத்தப்பட்ட அல்லது மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்தவரை மணத்தல், ரூ 10,000 (ரூ7,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும் ரூ 3,000 கேட்பு வரைவோலை அல்லது காசோலையாகவும்)

4. பயன் பெறுபவர் : கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியர்கள்.

5. தகுதிகள்/நிபந்தனைகள்

அ. கல்வித் தகுதி : இல்லை

ஆ. வருமான வரம்பு : இல்லை

இ. வயது வரம்பு : 20 வயது முதல் 30 வயதுக்குள் இருக்க வேண்டும்

ஈ. விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு : திருமணம் செய்து கொண்ட நாளிலிருந்து 2 வருடங்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

6. அணுக வேண்டிய அலுவலர்கள் :

1. மாவட்ட சமூக நல அலுவலர்கள்

2. சமூக நல விரிவாக்க அலுவலர்கள்

7. விண்ணப்பங்களை பரிசீலிக்க உத்தேசிக்கப்பட்ட கால அளவு : விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள்

8. குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர்கள் : மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் / மாவட்ட சமூக நல அலுவலர்

மாநில அளவில் சமூகநல ஆணையர், சென்னை–5 (தொலைபேசி எண்.8523718)

# அரசு சேவை இல்லங்கள்

1. திட்டத்தின் பெயர் : அரசு சேவை இல்லங்கள்

2. திட்டத்தின் நோக்கங்கள் : சமூகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின்தங்கியுள்ள மகளிர், விதவைகள், கைவிடப்பட்ட மனைவியர், உடல் ஊனமுற்ற பெண்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு அளித்து கல்வி மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி அளித்தல்.



3. வழங்கப்படும் உதவி : உணவு, உறைவிடம், கல்வி மற்றும் தொழிற்கல்வி, பாடப்புத்தகம், நோட்டுப்புத்தகம் மற்றும் சீருடை

4. பயன் பெறுபவர் : விதவைகள், ஆதரவற்ற மற்றும் உதவிக்கு யாருமற்ற பெண்கள்.

5. தகுதிகள்/நிபந்தனைகள் :

அ. வருமான வரம்பு: வருட வருமானம் ரூ.12,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்

ஆ. வயது : 18க்கு மேல் 40க்குள் இருக்க வேண்டும்

6. அணுக வேண்டிய அலுவலர்கள் :

1. உதவி இயக்குநர், சேவை இல்லம், தாம்பரம்

2. மாவட்ட சமூகநல அலுவலர்

3. கண்காணிப்பாளர், இதர சேவை இல்லங்கள்

4. சமூகநல விரிவாக்க அலுவலர்

7. குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர்கள் : மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் / மாவட்ட சமூகநல அலுவலர், மாநில அளவில் சமூகநல ஆணையர், சென்னை–5. தொலைபேசி எண்.8523718

# பணிபுரியும் மகளிர் விடுதி

1. திட்டத்தின் பெயர் : பணிபுரியும் மகளிர் விடுதி

2. திட்டத்தின் நோக்கங்கள் : குடும்பத்தை விட்டு வெளியூரில் பணிபுரியும் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பெறும் மகளிருக்கு உணவு வசதியுடன் பாதுகாப்பான தங்கும் வசதி அளிப்பது.

3. வழங்கப்படும் உதவிகள் : தங்கும் வசதிகள், அளிப்பது, உணவுச் செலவினம் மற்றும் மின்கட்டணம் ஆகியவை பகிர்மான அடிப்படையில் வசூல் செய்வது, உள்ளுறைவோர் வாடகையாக சென்னையில் மாதமொன்றுக்கு ரூ.200/–ம், இதர மாவட்டங்களில் ரூ.150/–ம் செலுத்த வேண்டும்.

4. பயன்பெறுவோர் : மாத ஊதியம் ரூ.10,000/–க்குள் பெறும் பணிபுரியும் மகளிர்

5. தகுதிகள் : குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பெறுபவர்கள்

6. தங்கியிருக்கும் கால அளவு : மூன்றாண்டுகள்

7. தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள் :

1. மாவட்ட சமூகநல அலுவலர்

2. கண்காணிப்பாளர், அரசு பணிபுரியும் மகளிர் விடுதி

3. விரிவாக்க அலுவலர் (சமூகநலம்)

8. குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர்கள் : மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட சமூகநல அலுவலர் – மாநில அளவில், சமூகநல ஆணையர், சென்னை–5, தொலைபேசி எண்.8523718

## சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்



| | |
|---|---|
| 1. திட்டத்தின் பெயர் : | சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு மகளிர் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் |
| 2. திட்டத்தின் நோக்கங்கள் : | விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழைமகளிர் மற்றும் உடல் ஊனமுற்ற ஆண், பெண் ஆகியோர் சுயதொழில் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கொள்ள உதவுதல். |
| 3. வழங்கப்படும் உதவி : | தையல் இயந்திரம் |
| 4. பயன்பெறுபவர் : | விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மகளிர் மற்றும் உடல் ஊனமுற்ற ஆண் மற்றும் பெண். |
| 5. தகுதிகள் | |
| அ. கல்வித் தகுதி : | இல்லை |
| ஆ. வருமான வரம்பு: | வருட வருமானம் ரூ.12,000 க்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| இ. வயது வரம்பு: | 20 முதல் 40 வயதுக்குள் இருக்க வேண்டும் |
| ஈ. இதர தகுதிகள்: | தையல் தைக்கத் தெரிந்திருக்க வேண்டும். |
| 6. அணுக வேண்டிய அலுவலர்கள்: | 1. மாவட்ட சமூகநல அலுவலர்<br>2. சமூகநல விரிவாக்க அலுவலர். |
| 7. குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர்கள் : | மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட சமூகநல அலுவலர், மாநில அளவில் சமூகநல ஆணையர், சென்னை–5 |




## காஞ்சிபுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம்

## (வ–து) எண்.ஜி.1099

**443, காந்தி சாலை – விற்பனை பிரிவு,**
**21, வழக்கறுத்தீஸ்வரர் கோயில் தெரு, அலுவலகம். காஞ்சிபுரம்.**

### கிளை நிலையங்களின் முகவரி

### தமிழ்நாடு

1. 12, 2வது அக்ரஹாரம், சேலம் –1.
2. 108, 1வது அக்ரஹாரம், சேலம் – 2.
3. எஸ் 4, ஆர்.கே.வி. ரோடு, முனிசிபல் காம்ப்ளக்ஸ், ஈரோடு.
4. 26/118, இராஜ வீதி, கோயம்புத்தூர்.
5. எம்.3, அண்ணாமலை சாலை, சாய்பாபா காலனி, கோயம்புத்தூர்.
6. 139, கீழவெளி வீதி, மதுரை.
7. 156/ஏ/3, கிழக்கு மாரட் வீதி, மதுரை.
8. டபுள்யூ, ஜி.சி.ரோடு, தூத்துக்குடி.
9. 913, டி.எம்.ஜி.ரோடு ஓசூர்.
10. 93–94, காமராஜர் சாலை, விழுப்புரம்.
11. 94ஏ, போலீஸ் ஸ்டேஷன் ரோடு, சிவகாசி.
12. காஞ்சி கூட்டுறவு பட்டு அங்காடி, 811, அண்ணாசாலை, சென்னை–2.
13. தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு விற்பனை வளாகம், அண்ணாநகர் பிளாசா, சி.47, 2வது அவின்யூ, டி.என்.எச்.பி.சென்னை–40.
14. கோ–ஆப்டெக்ஸ் காம்ப்ளக்ஸ் கடை எண்.13பி 350, பாந்தியன் ரோடு சென்னை.

### ஆந்திரா மாநிலம்

1. 7–3–317, முதல் மாடி மெயின் ரோடு இந்துப்பூர் –1.
2. 8–3–319, மெயின் பஜார், இந்துப்பூர் –2.
3. 11/418, தர்கா பஜார், பொரதட்டூர்–1.
4. 13/528. சிவாலயம் தெரு இரண்டாவது மாடி, பொரதட்டூர்–2.
5. 13/548, சிவாலயம் தெரு, பொரதட்டூர்–2.
6. 28–10–28, மசூதி தெரு அருண்டேல்பேட், விஜயவாடா.
7. 11,498, சர்ச்சு தெரு, சித்தூர்.

### கர்நாடக மாநிலம்

1. 122, காந்தி பஜார் மெயின் ரோடு, பெங்களூர் – 4.
2. 6, சி.எஸ்.ஐ. கட்டிடம் அசோகா ரோடு, தும்கூர்.
3. 1375, சீரியாஸ் காம்ப்ளக்ஸ் முதல் மாடி, நாராயண சாஸ்தி சாலை மைசூர்–1.
4. கே.ஆர்.எஸ்.காம்ப்ளக்ஸ் எம்.ஜி.ரோடு, சிந்தாமணி.
5. பி.எம்.ரோடு, ஹாசான்.
6. தாலிபான் பேட் ஹுப்ளி.


### சீனா நாட்டின் மிகப்பெரிய சுவர் (The Great Wall of China)

சீனாவின் மாபெரும் சுவர் உலக மகா சாதனைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

சீனாவின் மிகவும் சக்தி வாய்ந்த அரசர் ஷி ஹுவாங்டி (Shih Huang ti) என்பவரால் இந்தச் சுவர் கட்டப்பட்டது.

இவர் தன் படை பலத்தின் உதவியுடன், கொஞ்சமும் கருணையில்லாமல் பல நாட்டு அரசர்களைக் கொன்று, அவர்களுடைய ராஜ்ஜியங்களை பலவந்தமாக கைப்பற்றி, ஒரு மாபெரும் ராஜ்ஜியத்தை நிறுவினார்.

மற்ற ராஜ்ஜியங்களை, தான் அழித்ததைப் போன்று, தன் நாட்டின் எல்லைக்கு அப்பாலிருந்து யாராவது ஒரு அரசன் படையெடுத்து வந்து, தன் ராஜ்ஜியத்தை அழித்துவிடக்கூடும் என்று இவர் பயப்பட்டு வந்தார்.

தன்னுடைய ராஜ்ஜியத்திற்குள் எதிரி படைகள் சுலபமாக நுழைந்து விடுவதைத் தவிர்க்க, தன் நாட்டு எல்லை முழுவதும் நீண்ட உயரமான சுவர் ஒன்றை எழுப்பத் தீர்மானித்தார்.

பல்லாயிரக் கணக்கான ஆட்கள் பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து கடினமாக உழைத்து இந்த நீண்ட சுவரைக் கட்டி முடித்தார்கள்.

கிறிஸ்து பிறப்பதற்கு 238 அண்டுகளுக்கு முன் இந்தப் பணி துவக்கப்பட்டது.

ராஜ்ஜியத்தின் நீண்ட வடக்குப் பக்கமிருந்த எல்லை முழுவதும் இந்த சுவர் கட்டப்பட்டது.

செங்கல், கற்கள், மணல் போன்றவைகளைப் பயன்படுத்தி இந்தச் சுவரைக் கட்டினார்கள். ஒவ்வொரு நூறு கஜங்கள் இடைவெளிகளில் உயரமான கோபுரங்கள் (Watch Towers) கட்டப்பட்டு அவைகளில் படைவீரர்கள் காவல் காத்து எதிரிகள் நாட்டை நெருங்காமலிருப்பதைக் கண்காணித்து வந்தார்கள். அந்தச் சுவரில் 20,000 பாதுகாப்புக் கோபுரங்கள் கட்டப்பட்டன.

தந்தி : காமாட்சி சில்க் தொலைபேசி : 223002/222196/238946 237604/239676

47 ஆண்டுகளாக மக்கள் விரும்பிய வண்ணம் புதுப்புது ரகங்களில் காஞ்சிபுரம் பட்டாடைகள் கண்கவரும் வண்ணம் தயாரித்து அவர்கள் நல்லாதரவைப் பெற்ற நிறுவனம் தோழர் கே.எஸ். பார்த்தசாரதி அவர்களால் தமிழகத்தில் துவக்கப்பட்ட முதல் பட்டு கூட்டுறவு சங்கம்

**காஞ்சிபுரம் காம்ாட்சியம்மன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட்., நெ.ஜி.1612,**

**5, காமாட்சியம்மன் நெசவாளர் காலனி, ஓரிக்கை போஸ்ட், காஞ்சிபுரம் – 631 501.**

தலைமையக விற்பனை நிலையம் : 168–ஏ மற்றும் 323, காந்தி ரோடு, காஞ்சிபுரம் – 631 501.

விற்பனை நிலையங்கள் :

1. 27, இரண்டாவது அக்ரஹாரம், சேலம் – 636 001.
2. 139, கீழவெளி வீதி, மதுரை – 625 001.
3. 33, திருவேங்கடசாமி தெரு, ஈரோடு – 638 001.
4. 19/1ஏ, சேர்மன் சண்முக நாடார் தெரு, சிவகாசி.
5. 28–12–10/5, ஷாலினிராம் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், மகுதி வீதி, அருண்டேல்பேட், விஜயவாடா – 520 002.
6. 15–3–423, பிரகாசம் பந்துலு ரோடு, இந்துபூர் – 515 201.
7. கைத்தறி வளாகம், 11–பி, பத்ம ஸ்ரீ நாச்சிமுத்து வளாகம், பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை – 600 008.
8. காஞ்சி கூட்டுறவு பட்டு, 811, அண்ணாசாலை, சென்னை–600 002.
9. தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு விற்பனை வளாகம், அண்ணாநகர் பிளாசா, டி.என்.எச்.பி.சி–47, 2வது அவின்யூ, அண்ணாநகர், சென்னை–600 040.
10. தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு விற்பனை காம்ப்ளெக்ஸ், 248, ஜவஹர்லால் நேரு தெரு, பாண்டிச்சேரி–1.
11. 14/408, 409, ட்ரங்க் ரோடு, நெல்லூர் – 524 001.
12. 464, பெரிய கடை வீதி, திருச்சி – 620 008.
13. 98, ஈஸ்வரன் கோயில் தெரு, திருப்பூர்–4
14. ராஜா அண்ணாமலை சாலை, சாய்பாபா காலனி, கோயம்புத்தூர்.
15. 1, கே.பி. பெரிய கருப்பன் தெரு, கீழக்கடை பஜார், விருதுநகர்.
16. எம்.ஆர்.எம். ஆர்கேட், அம்மன் கோயில் சன்னதி தெரு, காரைக்குடி.
17. ஆர்.கே.வி.சாலை, முனிசிபல் காம்ப்ளெக்ஸ், கடை எண்.9, ஈரோடு லூம் வேர்ல்டு, ஈரோடு.

### உற்பத்தியைப் பெருக்க ஒருவர் கடைப் பிடித்த வழி

பதினெட்டாவது நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ராபெர்ட் ஓவென் (Robert Owen) என்பவர் துணி தயாரித்து வரும் ஒரு ஆலையை விலைக்கு வாங்கினார்.

அவர் தொழிற்சாலையில் இருக்கும் ஒவ்வொரு இயந்திரத்திலும் சிவப்பு, பச்சை, மஞ்சள் ஆகிய கலர்களைக் கொண்ட மூன்று நாடாக்களைக் கட்டி வைத்தார்.

தொழிலாளர்கள் அனைவரும் எதற்காக மூன்று வர்ணங்களைக் கொண்ட நாடாக்கள் ஒவ்வொரு இயந்திரத்திலும் கட்டப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள ஆவலாக இருந்தார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு அந்த நாடாக்கள் ஒவ்வொரு இயந்திரத்தை இயக்கி வரும் தொழிலாளியின் திறமையை எடுத்துக் காட்டுகின்றன என்பதை புரிந்து கொண்டார்கள்.

அந்த தொழிற்சாலையின் அதிபர் மிகவும் பாடுபட்டு நன்கு உழைத்து வருபவர்களுடைய இயந்திரங்களில் சிவப்பு நாடாக்களை மட்டும் வைத்து விட்டு மற்ற இரண்டு நாடாக்களை அகற்றி விட்டார்.

சராசரி தொழிலாளியைப் போன்று வேலை செய்து வருபவர்களுடைய இயந்திரங்களில் பச்சை நாடாக்கள் காணப்பட்டன.

சரியாக வேலை செய்யாத தொழிலாளர்கள் இயக்கி வந்த இயந்திரங்களில் மஞ்சள் நாடாக்கள் காணப்பட்டன.

புதிய முதலாளி தொழிலாளர்களிடம் அவர்களுடைய செயல் திறமையைப் பற்றி வாயைத் திறந்து எதுவும் சொல்லவில்லை. ஆனால் அந்த மூன்று நாடாக்களின் மூலம் அவர் ஒவ்வொரு தொழிலாளியினுடைய செயல் திறமையை எடுத்துக் காட்டி விட்டார்.

அதற்குப் பிறகு எந்த ஒரு தொழிலாளியும் தன் இயந்திரத்தில் மஞ்சள் நாடா இருப்பதை விரும்பவில்லை.

தொழிலாளிகள் அனைவரும் கடினமாக உழைக்க ஆரம்பித்தார்கள்.

சிறிது நாட்களுக்குப் பிறகு அந்தத் தொழிற்சாலையில் இருந்த அத்தனை இயந்திரங்களிலும் சிவப்பு நாடாக்கள் மட்டும் தென்பட்டன.



# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

## கோவை மாவட்டத்தில் மகளிர் திட்டம் செயல்பாடுகள் மாநிலத்திலேயே முதலிடம், மொத்த முதலீடு ரூ 6.1 கோடி

**வ**றுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழைப் பெண்களில் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றி சுயமாக வருமானம் ஈட்டுமளவிற்கு ஒரு நிலையான நன்மையை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மகளிர் திட்டத்தின் கீழ் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்க 21 தொண்டு நிறுவனங்கள் தேர்ந்தெடுத்து சென்னையிலுள்ள மகளிர் திட்டத்தில் தலைமை அலுவலகத்தில் மூலம் அங்கீகாரம் அளிக்கப்பட்டு தொண்டு நிறுவனங்கள் மூலம் இதுவரை 4,700 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 67,850 மகளிர்கள் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர். "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பதற்கிணங்க குறைவான வருமானம் கொண்ட இக்குழு உறுப்பினர்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு துவங்கி குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றிற்கு குறைந்தது ரூ. 40/– சேமித்து வருகின்றனர். இதுவரை ரூ.6.1 கோடி சேமிப்பு செய்துள்ளனர். இச்சேமிப்புத் தொகையை கொண்டு மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு அவசரத்தேவைக்கு குழுக் கடன் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் கந்து வட்டிக்காரர்களிடம் கடன் வாங்குவதை தவிர்த்துள்ளனர். இவ்வாறு பெறப்பட்ட குழுக் கடனை குழு உறுப்பினர் தவணை தவறாமல் செலுத்திவிடுகின்றனர். குழுக்கடன் ரூ. 8.7 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் குழு உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயல்படவும் சேமிப்பு பழக்கத்தை உருவாக்கிடவும் குழு இரட்டை முறை கணக்குப் பதிவேடுகளைப் பேணவும் திட்டமிட்டு செயல்படவும் பொருளாதார மேம்பாடு அடையவும் தேவையான ஊக்குநர்/ பிரதிநிதி மற்றும் குழு உறுப்பினர்களுக்கு உரிய பயிற்சிகள் அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகிறது. *இதுவரை 3533 குழுக்களுக்கு ஊக்குனர்/ பிரதிநிதி மற்றும் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.*

மேலும் 6 மாதம் வயது அடைந்த குழுக்களை தேர்வு செய்து தரம் பிரித்தலில் ஈடுபடுத்தி தகுதியான குழுக்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் இதுவரை 1,656 குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ 1.66 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1 வருடம் முடிந்த குழுக்களை தேர்ந்தெடுத்து அவர்கள் செய்யும் தொழில் அடிப்படையில் 334 குழுக்களுக்கு 50 சதவிகிதம் மானியத்துடன் கூடிய தொழில் கடனை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வங்கிகள் மூலம் சுமார் ரூ. 10 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுயதொழில் தொடங்கவும் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் தொழில் முனைவோர் பயிற்சி 5,427 பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. *இதன்மூலம் பெண்கள் சுயதொழில் தொடங்க தேவையான அடிப்படை அனுபவங்களையும் உற்பத்தி சந்தைப்படுத்தல் மூலதனம் போன்றவற்றில் சிறந்த அறிவையும்* பெற்றுள்ளனர். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மகளிர் திட்டம் தொண்டு நிறுவனங்கள் 3,221 உறுப்பினர்களுக்கு பல்வேறு வகையான தொழில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.



### தமிழகத்திலேயே மிக அதிகமான ரேசன் கடை

மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழகத்திலேயே மிக அதிகமாக 56 ரேசன் கடைகள் வழங்கப்பட்டு மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் சரியான எடையில் குடிமை பொருட்களும், சிறந்த சேவையும் நுகர்வோருக்கு அளித்து வருகின்றனர். ஆவின்பால் மற்றும் பாலினால் தயாரிக்கப்பட்ட பொருட்களை கமிஷன் அடிப்படையில் விற்பனை செய்து மகளிர் குழுக்கள் முன்னேற சுமார் 10 இடங்கள் தேர்வு செய்து பால் விற்பனை செய்து பொருளாதார மேம்பாடு அடைந்து வருகின்றனர்.






### புளியமரம் ஏலம் எடுத்து, தரமான புளி விற்பனை

சிறப்பு அம்சமாக மலைவாழ் பெண்கள் குறிஞ்சி மகளிர் கூட்டமைப்பு, ஏற்படுத்தி மலைப்பகுதியில் உள்ள புளிய மரங்களை பொது ஏலத்தில் எடுத்து அதிலிருந்து எடுக்கும் புளியை கொட்டை நீக்கி பதப்படுத்தி தரமான புளியை 500 கிராம். 1 கிலோ அளவுகளில் விற்பனை செய்து வருகின்றனர். இதற்காக தாயனூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலமாகவும் மாவட்ட ஊரக வளர்ச்சி மூலமாகவும் இதுவரை ரூ. 4.90 இலட்சம் தொழில் கடன் வழங்கப்பட்டுள்ளது. புளியைப் பதப்படுத்துவதற்காக சுமார் ரூ. 3.50 இலட்சம் மதிப்பில் தொழிற்கூடம் ஒன்றும் புளியை தேவையான வடிவில் அமைப்பதற்கு அச்சு இயந்திரமும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக வழங்கப் பட்டுள்ளது.

### அரிய வகை மூலிகை விற்பனை

தற்போது சித்த மருத்துவம் வேர் ஊன்றி வளர்ந்து வருவதை கவனத்தில் கொண்டு மலைகளில் கிடைக்கும் அரிய வகை மூலிகைகள் குழு பெண்களால் சேகரிக்கப்பட்டு மொத்தமாக விற்பனையாளர்களுக்கு விற்கப்பட்டு வருகின்றது என்பது தனிச்சிறப்பாகும்.

### சமையல் எரிவாயு இணைப்பு

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சிறப்புத் திட்டங்களில் ஒன்றான மகளிர் நலத்திற்காக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் மகள் ஆகிய புதுமணத் தம்பதிகளுக்கு இலவசமாக ஒரு முறை மட்டும் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 134 பயனாளிகள் தேர்வு செய்து அதில் 20.6.2002 அன்று திருப்பூரில் நலத்திட்டப் பணிகளின் கூட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 80 பயனாளிகளுக்கு எரிவாயு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டன.

கோவை மாவட்டத்தில் மகளிர் திட்டம் மூன்றாவது கட்டமாகத் தொடங்கப்பட்டு மிகச்சிறப்பாகச் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

– *செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கோயம்புத்தூர்.*

• • •



# தேசிய பெடரேஷன் கோப்பைப் போட்டியில் பதக்கம் பெற்றவர்களுக்கு முதலமைச்சர் பரிசுகள் வழங்கி பாராட்டு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.8.2002 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னையில் நடைபெற்ற தேசிய பெடரேஷன் கோப்பைக்கான போட்டியில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்ற 10 சீனியர் தடகள விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு ரொக்கப் பரிசாக மொத்தம் ரூபாய் 56 ஆயிரத்தினை வழங்கி பாராட்டினார்கள்.

சென்னையில் ஜூன் 2002ல் எட்டாவது தேசிய பெடரேஷன் கோப்பைக்கான போட்டிகள் நடைபெற்றன. இதில் சீனியர் தடகளப் போட்டியில் பங்கேற்று, தங்கம், வெள்ளி, வெண்கலம் என பல்வேறு பதக்கங்களை தமிழ்நாட்டைச் சேர்ந்த 14 விளையாட்டு வீரர்கள் வென்றுள்ளனர். தமிழ்நாட்டிற்குப் பெருமையையும், வெற்றியையும் தேடித் தந்த இந்த வீராங்கனைகளுக்கு தமிழக அரசு பொருத்தமான பரிசுகளை வழங்கி மேலும் ஊக்குவிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அமெச்சூர் தடகள சங்கத்தின் தலைவர் அரசுக்கு கோரிக்கை வைத்திருந்தார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தற்போதுள்ள விதிமுறைகளின்படி இவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்க வழிமுறை இல்லை என்றாலும், இதனை சிறப்பு நிகழ்வாகக் கருதி, விளையாட்டு வீராங்கனைகளை மேலும் ஊக்கப்படுத்தவும், விளையாட்டில் உள்ள ஆர்வத்தை மேம்படுத்தவும் எட்டாவது தேசிய பெடரேஷன் கோப்பைக்கான போட்டியில் பங்கேற்று தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்ற அஞ்சு பி.ஜார்ஜ், வி.எஸ்.சுரேகா, எம்.சங்கீதா, கே.என்.பிரியா, நூஷின் ராஜேந்திரன், என்.தாரணி, ரோஸ்லின் ஆரோக்கியமேரி, கிருஷ்ண பிரியா, ஆர்.ஸ்நேகா பிரின்ஸி ஆகிய 9 வீராங்கனைகளுக்கும், எஸ்.லக்ஷ்மிநாராயணன் என்ற விளையாட்டு வீரருக்கும் அவர்களின் தன்மைக்கேற்ப மொத்தம் ரூ.56 ஆயிரத்தினை ரொக்கப் பரிசாக வழங்க மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.8.2002 அன்று அனுமதி வழங்கியிருந்தார்.

இந்த ரொக்கப் பரிசுத்தொகை கீழ்க்கண்ட வகையில் இந்த விளையாட்டு வீரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

| வ.எண். | பெயர் | நிகழ்ச்சி | பதக்கம் | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | அஞ்சு பி.ஜார்ஜ் | நீளம் தாண்டுதல்,<br>மும்முறை தாண்டுதல்<br>4 x 100 மீ. தொடர் ஓட்டம் | தங்கம்<br>தங்கம்<br>தங்கம் | 17,000 |
| 2. | வி.எஸ்.சுரேகா | போல்வால்ட் | தங்கம் | 7,500 |
| 3. | எம்.சங்கீதா | உயரம் தாண்டுதல் | தங்கம் | 7,500 |
| 4. | கே.என்.பிரியா | 4 x 100 மீ. தொடர் ஓட்டம் | தங்கம் | 2,000 |
| 5. | நூஷின் ராஜேந்திரன் | 4 x 100 மீ. தொடர் ஓட்டம் | தங்கம் | 2,000 |
| 6. | என்.தாரணி | 4 x 100 மீ. தொடர் ஓட்டம் | தங்கம் | 2,000 |
| 7. | ரோஸ்லின் ஆரோக்கியமேரி | 4 x 100 மீ. தொடர் ஓட்டம்<br>400 மீ. தடை ஓட்டம் | தங்கம்<br>வெள்ளி | 7,000 |
| 8. | கிருஷ்ண பிரியா | மும்முறை தாண்டுதல் | வெள்ளி | 5,000 |
| 9. | ஆர்.ஸ்நேகா பிரின்ஸி | ஹெப்தலான் | வெண்கலம் | 3,000 |
| 10. | எஸ்.லக்ஷ்மி நாராயணன் | நீளம் தாண்டுதல் | வெண்கலம் | 3,000 |



முதலமைச்சர் அவர்கள் இந்த ரொக்கப் பரிசுகளை, எட்டாவது தேசிய பெடரேஷன் தடகளப் போட்டியில் பதக்கங்களை வென்ற விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு **5.8.2002** அன்று நேரில் வழங்கிப் பாராட்டியதோடு, மென்மேலும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.


எட்டாவது தேசிய தடகளப் போட்டியில் பரிசுகளை வென்ற இந்த **10** விளையாட்டு வீரர்களில் **6** வீரர்கள் தமிழ் நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் "எதிர்கால விளையாட்டு வீரர்கள்'' (Future Champions) என்ற திட்டத்தின் கீழ் தமிழக அரசால் அடையாளம் காணப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டு தமிழக அரசால் தத்தெடுத்து அறிவிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். 20 வயதுக்குட்பட்ட இவர்கள் 5 ஆண்டுகளுக்கும் மேலாக வெவ்வேறு விளையாட்டு களில் பங்கு பெற்றுள்ளனர்.

சிறப்பு ரொக்கப் பரிசினை பெற்றுக் கொண்ட இந்த விளையாட்டு வீராங்கனைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்கள்.





# பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை - நலத்திட்டங்கள் அமைச்சர் ஆய்வு



**செ**ன்னை சேப்பாக்கத்தில் வேளாண்மை துறை கூட்ட அரங்கில் 20.8.2002 அன்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.கே.சுதர்சனம் அவர்கள் தலைமையில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களால் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்திட்டங்கள் முன்னேற்றத்தின் மீதான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் தகுதியுடைய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்படோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியர்களுக்கு பள்ளிப்படிப்பு / பட்டமேற்படிப்பு, தொழிற் மேற்படிப்பு போன்ற இனங்களில் 2002–2003–ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட விவரப்படி கால வரம்புக்குள் கல்வி உதவித் தொகை வழங்கி முடிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

| | |
|---|---|
| பள்ளிப்படிப்பு உதவித் தொகை | : 31.10.2002 |
| கல்லூரி படிப்பு | : 31.10.2002 |
| தொழிற்பட்டப்படிப்பு புதுப்பித்தல் | : 31.10.2002 |
| புதியவை | : 30.11.2002 |

ஆய்வின் போது நடப்பு நிதியாண்டில் கல்வி நிறுவனங்கள் திறக்கப்பட்ட அன்றே இலவச பாடப்புத்தகங்கள் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களில் 9வது வகுப்பு படிப்பவர்கள் 2,10,526 நபர்களுக்கும், 10–ஆம் வகுப்பு படிப்பவர்களில் 1,93,689 நபர்களுக்கும் ஆக 4,04,215 மாணவர்களுக்கு வழங்கப்பட்டு

விட்டதையும் இதே போன்று மிகப்பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு இனத்தைச் சேர்ந்த 9–ஆம் வகுப்பு மாணவர்கள் 1,83,109 நபர்களும், பத்தாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் 1,64,548 நபர்களும் ஆக மொத்தம் 3,47,657 நபர்களுக்கு இலவச பாடபுத்தகங்கள் வழங்கப்பட்டு விட்டதை ஆய்வு செய்தார்.

அரசு மாணவர், மாணவியர் விடுதிகள் தனியார் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருவதினால் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக 770 விடுதிகளுக்கு அரசுக் கட்டடங்கள் கட்டுவதற்காக அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக முதற்கட்டமாக இதுவரையில் 14 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. 100 விடுதிகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்து 31.12.2002–க்குள்ளாக 100 விடுதிகள் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

மாநில அளவில் இத்துறையின் மூலம் செயல்படும் 972 மாணவ மாணவியர் விடுதிகளில் மாணவர் சேர்க்கும் பணியினை 31.8.2002–க்குள்ளாக முடிக்கப்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்கள். இதைத் தவிர அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ் மாணவியருக்கு சுகாதாரமான முறையில் அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள உண்டி அளவு மற்றும் உணவு வகைகள் வழங்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

மாநில அளவில் +2 தேர்வில் முதல் மதிப்பெண்கள் பெறும் மாணவ மாணவியர்களுக்கும் 10–ஆம் வகுப்புத் தேர்வில் முதல் மதிப்பெண்கள் பெறும் மாணவ மாணவியர்களுக்கும் மாவட்ட அளவில் 10–ஆம் வகுப்புத் தேர்வில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெறும் மாணவ மாணவியருக்கும் அரசு நிர்ணயம் செய்துள்ள பரிசுத்தொகைகளை 30.9.2002–க்குள் வழங்கப்பட வேண்டும் என்றும், இதே போன்று பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் நினைவுப் பரிசுகளையும் 30.9.2002–க்குள் வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

இலவச தொழிற்கல்வி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய பித்தளை தேய்ப்புப் பெட்டி, கல்லுடைக்கும் கருவி, முடிதிருத்துவோர் கருவி, அனைத்தையும் 30.9.2002–க்குள் வழங்கப்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.



மலைப் பிரதேசங்களில் செயல்படும் 18 விடுதிகளில் தங்கிப் பயிலும் 922 மாணவர்களுக்கு ரூ.17 இலட்சம் செலவில் மரத்தாலான இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள் வழங்கும் பணியினை துரிதமாக வழங்கி முடிக்க அறிவுரை வழங்கினார்.

மலைப்பிரதேசங்களில் செயல்படும் 18 விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியருக்கு குளிப்பதற்கு வெந்நீர் வசதி ரூ.2.34 இலட்சம் செலவில் சூரிய சக்தி மூலம் செயல்படும் வாட்டர் ஹீட்டரும், மின் சக்தி மூலம் செயல்படும் வாட்டர் ஹீட்டரும் துரிதமாக வழங்கிட அறிவுரை வழங்கினார்.

மாநில அளவில் செயல்படும் 972 விடுதிகளுக்கும் விடுதிக்கு ரூ.1000 வீதம் ரூ.9.72 இலட்சம் செலவில் விளையாட்டு சாதனங்கள் வழங்கிடும் பணி துரிதமாக செயல்பட அறிவுரை வழங்கினார்.

மாநிலத்தில் உள்ள 972 விடுதிகளுக்கும் ஒரு விடுதிக்கு ரூ.3000 வீதம் ரூ.29.16 இலட்சம் செலவில் நூலக புத்தகங்கள் வாங்கி வழங்கும் பணியினை விரைவில் செய்து முடித்திட அறிவுரை வழங்கினார்.

36 விடுதிகளுக்கு ரூ.19.96 இலட்சம் செலவில் விடுதி வசதி செய்து தரும் பணியையும், 20 விடுதிகளுக்கு கழிவறை வசதி ரூ.10.04 இலட்சம் செலவில் செய்து தரும் பணியையும், 9 விடுதிகளுக்கு ரூ.20 இலட்சம் செலவில் சிறப்பு பழுதுகள் பார்க்கும் பணியையும், விரைவுபடுத்துமாறு அறிவுரை வழங்கினார்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதா மேம்பாட்டுக் கழகம் மூலமாக தொழிற்கடன் வழங்கும் பணியினை உடனுக்குடன் செயல்படுத்திட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு, மிகப்பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மற்றும் சீர்மரபினர் இனத்தவர்க்கான நலத்திட்டங்கள் அனைத்தையும் குறித்த காலத்தில் செயல்படுத்திட வேண்டும் என்று அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல. அலுவலர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அரசு செயலர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, திரு.என்.பி.குப்தா,இ.ஆ.ப., பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் திரு.சிவ.சூரியன், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

### பெர்னார்ட் ஷா கொடுத்த பதிலடி

ஜி.கே. செஸ்டெர்டன் (G.K.Chesterton) என்பவர் குட்டையாகவும், பருமனாகவும் இருந்தார்.

பெர்னார்ட் ஷா (Bernard Shaw) ஒல்லியாகவும், உயரமாகவும் இருந்தார்.

செஸ்டர்டன் பெர்னாட்ஷாவைப் பார்த்து, "உங்களைப் பார்ப்பவர்கள் இங்கிலாந்து நாட்டை பஞ்சம் வாட்டி வருகிறது என்று முடிவு கட்டி விடுவார்கள்" என்று கூறினார்.

பெர்னார்ட்ஷா சிரித்துக் கொண்டே, "அப்படி சொல்லுபவர்கள் உங்களைப் பார்த்தால், பஞ்சம் ஏற்பட்டதற்கான காரணத்தை உடனடியாகப் புரிந்து கொண்டு விடுவார்கள்" என்று பதில் கூறினார்.

### சர் ராபர்ட் வால்போல்

சர் ராபர்ட் வால்போல் என்பவர் இங்கிலாந்து நாட்டின் முதல் பிரதம மந்திரியாக பொறுப்பேற்று 21 வருட காலம் தொடர்ந்து பிரதம மந்திரியாக பணி புரிந்து வந்தார்.

அவர் தன் பிரதம மந்திரி பதவியை ராஜினாமா செய்துவிட்டு (Houghton) என்ற ஊரில் குடியேறினார்.

அவர் தன் ஊரில் இருக்கும் வாசகசாலைக்குச் சென்று ஒரு புத்தகத்தை கையில் எடுத்து அதை சில நிமிடங்கள் உற்றுப் பார்த்தார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் கொட்ட ஆரம்பித்தது...

"நீண்ட காலமாக நான் பிரதம மந்திரியாக இருந்துவிட்டேன். பொறுப்புகள் நிறைந்த அந்தப் பணியினால் எனக்கு படிப்பதற்கு நேரம் கிடைக்காமல் போய்விட்டது. அந்தப்பணி, படிப்பின் மீது இருந்த என் ஆர்வத்தை, முற்றிலும் அழித்து விட்டது. நான் இப்போது என்ன செய்யட்டும்?" என்று சொல்லி வருத்தப்பட்டார்.

*பெட்டிச்செய்திகள் :* பி.எஸ்.ஆர்.ராவ் எழுதிய 'பிரமிப்பூட்டும் அரிய தகவல்கள்' நூலிலிருந்து...


துவக்கம் : 1910

தொலைபேசி : 222123
220980

## சின்ன காஞ்சிபுரம் கூட்டுறவு நகர வங்கி லிமிடெட் எண்.381

தலைமை அலுவலகம் : அறிஞர் அண்ணா மாளிகை, 85, திருக்கச்சி நம்பித்தெரு, காஞ்சிபுரம் – 631 501.

**வங்கி வழங்கிடும் நிரந்தர வைப்புகளுக்கான வட்டி விகிதம்**

- ★ 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை – 5%
- ★ 46 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை – 7%
- ★ 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை – 8%
- ★ 1 வருடம் முதல் 3 வருடங்கள் வரை – 9%
- ★ 3 ஆண்டுகளுக்கு மேல் 5 ஆண்டுகள் வரை – 9.5%
- ★ 5 ஆண்டுகளுக்கு மேல் – 10%

இதர வணிக வங்கிகளை விட கூடுதல் வட்டி வழங்கப்படுகிறது.

**வங்கியில் வழங்கப்படும் கடன்கள்**

நகைக்கடன் – ரூ.1,00,000, வீடு அடமானக் கடன் – 5,00,000, நபர் உறுதிக் கடன் – 15,000, மகளிர் வளர்ச்சிக் கடன் – ரூ.20,000, மகளிர் தொழில் முனைவோர் கடன் ரூ.5,00,000, சிறுதொழில் கடன் – ரூ.5,00,000, நுகர்வோர் கடன் – ரூ.25,000, வாகனக் கடன் – 30,000

பொதுமக்கள் தங்கள் தேவைக்கு மேற்கண்ட கடன் திட்டங்களில் பங்குபெற்று பயன் அடையுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் விவரங்களுக்கு : தலைமை அலுவலகம் ☎ : 22123, 20980
அய்யம்பேட்டை கிளை : 53120
ஆலடி பிள்ளையார் கோவில் தெரு கிளை : 25395
இரயில்வே சாலை கிளை : 25199 அலுவலகங்களை அணுகவும்.

# இளைய தலைமுறைக்கான சென்னையில் ‘தட்சிணசித்ரா’

• டாக்டர் ஏ.ஆர். ராமராஜு

நம் நாட்டு மக்கள் பிற நாடுகளில் உலகெங்கிலும் உள்ளனர். இவர்களில் பெரும்பாலும் கல்லூரி படித்து முடித்து தொழில் அனுபவம் பெற்ற மாணவர்கள் அதாவது, எஞ்சினியர்கள், மருத்துவர்கள், கம்ப்யூட்டர்துறை வல்லுநர்கள் என்று சொல்லிக் கொண்டே செல்லலாம். நமது நாட்டின் தலையாய விஞ்ஞானி அப்துல்கலாம் நமது மக்கள் அறிவுத் துறையில் சிறந்து விளங்கி நாம் நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வார்கள் என்று சரியான கணிப்பினை வழங்கியுள்ளார்கள். இந்த இளைய தலைமுறையில் அனைவரும் அவரவர் தம் துறைகளில் சிறந்த புலமை பெற்றவர்கள்தான் என்பதில் ஐயமேதுமில்லை. இவர்களும் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்து சென்று அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, அரபுநாடுகள் மற்றும் லண்டன் என பல பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கே நம் நாட்டின் பல பகுதிகளில் உள்ள பண்பாடு மற்றும் கலாச்சாரம் பற்றித் தெரிந்திருக்க முடியாது. வடஇந்தியாவில் ஆக்ராவில் வாழும் ஒருவர் தென்னிந்தியாவின் தஞ்சாவூரில் உள்ள ஒரு விவசாய குடும்பத்தின் பண்பாடு மற்றும் கலாச்சாரம் பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இவர்கள் வெளிநாட்டில் தங்கியிருக்கும் போது நம் நாட்டைப் பற்றியும் பண்பாடு மற்றும் கலாச்சாரம் பற்றிய கேள்வி கேட்டால் இவர்கள் பதில் தெரியாத சூழலில் அவதிப்படுவார்கள்.

நம் நாட்டின் பெருமையையும், புகழையும் வெளிப்படுத்தி பெருமைப்பட வேண்டியவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. நாம் நம்மைப் பற்றி எண்ணும்போது நம் நாட்டை பற்றியும் எண்ண வேண்டியது நமது கடமையாகும். நம் நாட்டின் இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் சாராம்சம் என்ன ? கீதோ உபதேசத்தில் சொல்லப்பட்ட கருத்துக்கள் யாவை. நம் நாட்டு பாரம்பரியம், பண்பாடு பற்றியும் அறிவது நலம். வெளிநாட்டில் தற்போது இருக்கும் நம்மவர் பலருக்கும் இதுபற்றி ஏதும் தெரியாது என்று எண்ணும்போது மிகவும் வருத்தமாக உள்ளது.

நம் நாட்டின் பல பகுதிகளில் உள்ள நமது பண்பாட்டு சிறப்புகளை, ஆன்மீக சிந்தனைகளைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும். நமது நாட்டின் பல சிறப்புகள், தனித்தன்மைகள் யாவும் தெரிந்திருந்தால் நல்ல தாகும். நமது அறியாமையால் நமது நாட்டின் பெருமையை அழித்துவிடக் கூடாது. அச்செயல் நாட்டிற்கு நாம் செய்யும் துரோகமாகும்.

நம் சமாதானக் கொள்கைகள், நம் தேசப் பிதா மகாத்மா காந்தியின் போதனைகள் மற்றும் சாதனைகள், விவேகானந்தரின் வரலாறு, நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வின் சிறப்புகள் போன்ற எல்லாவற்றையும் தெரிந்திருப்பது நலம். ஆனால், இன்றைய நிலை என்ன ? நம்மவர்க்கு நம்மைப்பற்றி ஏதும் தெரியவில்லை. இதுதான் நிதர்சனமான உண்மை.

வெளிநாட்டில் படிக்கச் செல்லும் மாணவர்கள், பணிக்காகச் செல்லும் தொழில் வல்லுநர்கள் ஆகிய இளைய தலைமுறையினர் ‘தட்சினா சித்ரா’ மையத்தை ஒரு முறை பார்த்துவிட்டு வெளிநாடு சென்றால், இவர்கள் நம் நாட்டின் அருமை பெருமைகளை வெளிநாட்டில் பரப்பும் இந்தியத் தாய்த் திருநாட்டின் தூதுவர்களாகவே மாறிச் செயல்படுவார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது’ என்ற மொழிக்கு ஏற்ப இளமைப் பருவத்திலே, அதாவது பள்ளி மற்றும் கல்லூரிப் பருவத்திலேயே இந்த மையத்தின் தாக்கத்தை அவர்களிடையே ஏற்படுத்தலாம்.

**தட்சிணசித்ரா** : இது உங்கள் சமூக பாரம்பரிய மையம். இது பண்டைத் தென்னிந்தியர்களின் பண்பாடு மற்றும் கலாச்சார வரைவு என்றால் மிகையாகாது. இப்பகுதி 10 ஏக்கர் நிலப்பரப்பில் முட்டுக்காடு என்ற இடத்தில் வங்காளவிரிகுடாவைப் பார்த்தவாறு அமைக்கப் பட்டுள்ளது. இதனை Chennai Craft Foundation நிர்வாகம் செய்து வருகிறது. இந்தப் பண்பாட்டு மற்றும் கலாச்சார மையம் நான்கு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் தென்பகுதியில் உள்ள நான்கு மாநிலங்களாகிய தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரபிரதேசம், இவைகளில் பண்டைக்காலப் பண்பாடு மற்றும் கலாச்சாரம் பிரதிபலிக்கப்படுகிறது.

ஆதிகால வீட்டின் கட்டமைப்பு அப்படியே இங்கு காணமுடியும். தொன்மையான பொருட்கள், கைவினைப் பொருட்கள், தொழில் திறனை நேரடியாகக் காணும் வாய்ப்புள்ளது. நீங்களும் பழகலாம்.

இம்மையம் நமது பள்ளி, கல்லூரி மற்றும் பிற துறையினருக்கும் பழங்காலப் பண்பாடு கலாச்சாரத்தை புகட்டும் மையமாக அமைந்துள்ளது. நமது கலாச்சாரப் பெட்டகமாகவும் கருவூலமாகவும் திகழ்கிறது. இம்மையத்தின் முகவரி :

*“தட்சினா சித்ரா”,*
*கடற்கரை சாலை,*
*காஞ்சிபுரம்,*
*முட்டுக்காடு, காஞ்சிபுரம் மாவட்டம்.*
*தமிழ்நாடு* – ***603118.***
*போன்:* ***915–45303***

இம்மையம் சரித்திரப் புகழ் பெற்ற மாமல்லபுரம் செல்லும் வழியில் சென்னைப் பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து 35 கி.மீ. சென்னை சென்ட்ரலிலிருந்து 30 கி.மீ. தொலைவிலும் உள்ளது.


***விவேகானந்தரின் வரலாறு, நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வின் சிறப்புகள் போன்ற எல்லாவற்றையும் தெரிந்திருப்பது நலம். ஆனால், இன்றைய நிலை என்ன ? நம்மவர்க்கு நம்மைப்பற்றி ஏதும் தெரியவில்லை. இதுதான் நிதர்சனமான உண்மை.***


## தனித்தன்மை

தட்சினா சித்ரா என்ற இந்த மையம் ஒரு தனித் தன்மையுடைய பாரம்பரியத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. தென் இந்தியத் திருநாட்டின் பண்டைக் கால மக்களின் வாழ்க்கை நெறிமுறை (தொழிலும், இருப்பிடமும் ஒரே இடத்தில் அமைந்துள்ள பாங்கு, கலாச்சாரம், பண்பாடு, இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறை ஆகியவற்றையும் காணலாம்). இங்கு காணப்படும் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா வீடுகள் 19 ஆம் நூற்றாண்டை நமக்குப் பிரதிபலிப்பதாக அமைந் திருக்கிறது. இவைகளை நேரில் பார்த்து ரசித்தால் நம் முன்னோரின் பண்பாடும் கலாச்சாரமும் தெளிவாக நமக்குப் புரிய வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டுப் பகுதி முற்றிலும் பணி முடிந்துவிட்ட நிலையில் உள்ளது. தமிழ்நாட்டு நுழைவாயிலே ஒரு செட்டி நாட்டு வர்த்தகர் வீடாக அமைந்துள்ளது. அதன் கதவுகள் மற்றும் வீட்டு கட்டுமானப் பொருட்கள் யாவும் ஆயிரம் வருடத்திற்கு முந்தியது. இதனுள்ளே தமிழ் பண்பாட்டுப் பொருட்காட்சியையும் காணலாம். இதையடுத்து 150 வயதடைந்த விவசாயியின் வீடு அமைந்துள்ளது. இது தஞ்சாவூர் வீடு. அடுத்து மண்பாண்டபம் செய்யும் குயவர் வீடு, திருவள்ளுவர் மனை ஆகியவற்றைக் காணலாம். இன்னும் இரண்டு இடங்களில் உருவாரங்கள் (Terrocotta) அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று கிராமத்து காவல் தெய்வம் அய்யனாரின் உருவம் ஒன்று பெரிதாக உள்ளது. இன்னொரு இடத்தில் சில பல உருவாரங்கள் பண்டைக்கால முறையில் அமைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். இந்தியாவின் பட்டு நகரம் காஞ்சிபுரம். காஞ்சிபுரம் நெசவாளர் வீட்டமைப்பு மிக நன்றாக உள்ளது. தொழிலுக்கும் வீட்டு வாழ்க்கைக்கும் ஒரு சேர முக்கியத்துவம் கொடுத்துள்ள முறை மிகவும் பாராட்டுதற்குரியது. வீட்டினுள் குழித்தறியைக் காணலாம்.

தமிழ்நாடு முழுவதும் தயாரிக்கப்படும் நெசவுப் பொருள்கள் கண்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்து கண்டிப்பான அனுஷ்டானங்களைக் கொண்டு வாழும் திருநெல்வேலி பிராமணர் வீடு அமைந்துள்ளது. இது ஒரு எளிய வாழ்க்கையைச் சித்திரிக்கிறது. மேலும், அந்தந்த பகுதியில் சிறப்பான கலை, கைவினைப் பொருட்கள் பற்றியும் அறிந்துகொள்ள நல்ல வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளார்கள்.

கேரளா பகுதியில் 3 வீடுகள் உள்ளன. அவைகளின் கட்டுமானப் பணி வடக்கு மற்றும் தெற்கு கேரள கலாசாரத்தை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளது. முதல் வீடு 200 வயது ஆகிய வீடு – இது ஒரு இந்துவின் வீடு, திருவிதாங்கூரைச் சேர்ந்தது. அடுத்து வருவது சிரியன் கிறிஸ்டியன் வீடு – இது கோட்டயத்தைச் சேர்ந்தது. இவ்வீடுகளில் உள்ளே காட்சிப் பொருள்களாக அவர்கள் பயன்படுத்திய கலை, கலாச்சார பொருள்களையும், கைவினைப் பொருட்களையும் காணலாம்.

கர்நாடகா பகுதியின் வீட்டின் கட்டுமான பணிகள் விரைவாக நடந்து வருகின்றன. இதுவரை ஒரு நெசவாளர் வீடு இலிகல் பகுதியைச் சார்ந்தது கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

## வீடுகள்

இது ஒரு செட்டி நாட்டு வணிகரின் இல்லம். இதுபோன்ற பண்டைக் காலத்தில் பல வீடுகள் செட்டி நாட்டில் குறிப்பாக காரைக்குடியையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காணலாம். இந்த வீட்டின் கூரை ஓட்டினால் மூடப்பட்டிருக்கும் – இருதள அமைப்புக் கொண்டதாகும். வீட்டில் நடுவிலே தொட்டிக்கட்டு அமைப்பு இருக்கும். முன்பக்கத்தில் வாசலின் இரு மருங்கிலும் இருதள அமைப்பு உள்ளது. விசாலமான கூடம் உண்டு. முன் வராண்டாவில் முன்பக்கம், உள்பக்கத்திலும் இரு திண்ணை அமைப்பு உண்டு.

செட்டிநாடு வீட்டின் உள்ளே ஒரு பொருட்காட்சியும் உள்ளது. இது நம் முன்னோரின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை விளக்குவதாக அமையும். ஐந்து வகையான நிலங்கள் பற்றியும் அறியலாம்.

இந்நிலங்களின் தன்மைக்கேற்ப கைத்தொழில் மற்றும் கலை அம்சங்கள் அமைவதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

திறந்தவெளி அரங்கில் விழாக்கால நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பொழுதுபோக்கு அம்சமாக ஓர் அரங்கினுள் பொம்மலாட்டம் மற்றும் தேவராட்டம், மயிலாட்டம் ஆகியவற்றைக் காணலாம். ஜோசியம் பார்க்கலாம். கிளியும் ஜோசியம் சொல்லும்.

## பார்வையாளர்களுக்கு செய்முறைப் பயிற்சி

இங்கு பண்டைக் கலாச்சாரத்தை ரசித்து ருசிக்கவும் செய்யலாம்.

1. கோலங்கள் வரைய .......................................... ரூ.10
2. தென்னை இலைத் தோரணம் ரூ.5 கிளிகள் .... ரூ.10
3. மண்பாண்டங்கள் உருவாக்க பயிற்சி ............... ரூ.10
4. பல்லாங்குழி, பாண்டி விளையாட (இலவசம்)
5. நெல் குத்தி அரிசி எடுத்தல் ................................ ரூ.5
6. அச்சுத்தொழில் – துணிமேல் அச்சடித்தல் ........ ரூ.10

இவைகள் நாம் ரசித்தவற்றை ருசிக்கவும் கற்றுத் தருகின்றன.

## விவசாயப் பண்ணை வீடு

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாயவரத்து பண்ணை வீடு அன்று இருந்த அதே நிலையில் இன்று இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். நெல் குத்துவது, காயவைப்பது, விவசாயக் கருவிகள் ஆகியவற்றையும் உள்ளே அமைக்கப்பட்டுள்ள பொருட்காட்சியில் காணலாம்.

## மண்பாண்டம் செய்யும் குயவர் வீடு

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் அமைந்துள்ள மண்பாண்டம் செய்யும் குயவர் வீட்டைக் காணலாம். அந்த வீட்டில் தாய்கள் வாழவும் தொழில் செய்யவும் தனித்தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளதையும் காணலாம். மண்பாண்டம் செய்யும் சக்கரம் சுழலச் சுழல குயவனாரின் கைவண்ணத்தால் பலவிதமான மண்பாண்டங்கள் உருவாகின்றன. இதனைத் தொடர்ந்து காட்டிக் கொண்டேயுள்ளனர். ஏன் நீங்களும் இதனைப் பழகலாம். அதற்கு ரூ. 10 மட்டும் தேவை.

## கூடைமுடைவோரின் மண் வீடுகள்

இரண்டு சாதாரணமான மண் வீடுகள் (செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தது) கூடைத் தொழில் செய்வோர்களுக்கென்று அமைக்கப்பட்டுள்ளன. இவ்வீட்டில், சமைக்க, பூஜை செய்ய மற்றும் தூங்க இடவசதி உண்டு. தமிழ்நாட்டில் கிடைக்கும் அனைத்து நார் பொருள்களுக்கான கண்காட்சி சிறப்பாக அமைந்துள்ளது.

## காஞ்சிபுரம் நெசவாளர் வீடு

காஞ்சிபுரத்துப் பண்டைக் கால வீட்டினை இங்கு அப்படியே அமைத்துள்ளார்கள். இங்கு ஒரு குழியுடன் கூடிய தறி ஒன்று (Pit Loom) நெய்வதற்காக வீட்டினுள்ளேயே அமைக்கப்பட்டிருக்கிறது. இது காஞ்சிபுரம் பட்டு புடவை நெசவுக்கு மிகவும் உகந்தது.

## நெசவுத் தொழில் பொருட்காட்சி - அரங்கம்

இந்த அரங்கத்தில் தமிழ்நாடு மாவட்டங்களில் கிடைக்கும் அனைத்து நெசவுப் பொருட்களும் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. அவைகளாவன, பிராந்திய சீலைகள், ஆண்களின் ஆடைகள், வியாபார



நெசவுப் பொருட்கள் மற்றும் திருவிழாக் காலங்களில் பயன்படும் நெசவுப் பொருட்கள், தேர்த்தோரணங்கள், தேர்ச்சீலைகள் முதலியவையும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## ஆம்பூர் பிராமணர் இல்லம்

தென் தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆம்பூர் விவசாய கிராமத்து பிராமணர் வீட்டை அப்படியே இங்கு காணலாம். இது பிராமணர் வசிக்கும் அக்கிரகாரத் தெருவில் இருந்து கொண்டு வந்தது. இக்கிராமத்து அக்கிரகாரத்தில் பிராமணர்கள் தங்கள் வீதியின் இருமருங்கிலும் வரிசையில் கூட்டாகக் குடியிருப்பார்கள். இன்னும் இக்கூட்டு குடியிருப்பில் சில வீடுகளையும் இங்கு காணலாம். அத்தோடு பொருட்காட்சிப் பொருள்களும் இடம் பெற்றுள்ளன.

தமிழ்நாட்டு வீட்டுக் கதவுகளின் மீது மஞ்சள் பூசி சிகப்புப் பொட்டிடுவதையும் நீங்கள் பார்த்திருக்கலாம். மஞ்சள் பல இடங்களில் மரத்தின் சட்டத்தின் மீதும் கதவுகள் மீதும் பூசப்படுவதைக் காணலாம். மஞ்சள் பட்ட இடத்தில் கரையான் வராது. எனவே, அறிவியல் ரீதியாக மரத்தை காக்கும் மருந்தாக (கரையானிடமிருந்து காக்க) மஞ்சள் பயன்படுகிறது என்பது தெளிவாகிறது.

தமிழ்நாட்டு மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தார்கள் என்பதும் தெரியவருகிறது. குறிப்பாக விவசாய பணிகளில் நாத்து நடவு, களை எடுத்தல், எருவிடல், அறுவடை செய்தல் போன்ற பல காலங்களில் பலவிதமான விழாக்களை கொண்டாடி மகிழ்கின்றனர். நாற்று நடும் போது பூஜை நடைபெறுகிறது. சூரியனுக்கும் நீருக்கும் வணக்கம் செலுத்துவர். மேலும், அறுவடையின்போது புது அரிசியில் பொங்கல் வைத்துப் படைத்து நன்றி செலுத்துவர். மாடுகளுக்கும் பொங்கல் கொடுத்து மகிழ்வார்கள்.

வாழை இலையில் சாப்பிடுவதால் நல்ல செரிமாணம் ஏற்பட்டு நல்ல பசியை ஏற்படுத்துகிறது. நீரையும், சூரியனையும், மண்ணையும், பசுமாட்டையும் அவர்கள் தெய்வமாகவே வழிபட்டனர்.

## கேரளாவின் இந்து வீடு (திருவாங்கூர்)

தென் கேரளத்தில் ஒரு சிறிய நடுத்தர வர்க்க குடும்பத்திற்கான வீட்டைக் காணலாம். இது ஒரு விவசாய நாயர் குடும்பத்திற்குரியது. தங்களுக்குள் மட்டுமே திருமண உறவுகளை ஏற்படுத்திக்கொள்வர். கேரளாவில் வீட்டு அலங்காரப் பொருட்கள் போன்றவை யாவும் மேல் வர்க்கத்தினர் மற்றும் நடுத்தர மக்கள் பயன்படுத்துவது போன்றே அதிக பொருட் செலவுடன் தயாரித்து பயன்படுத்துகிறார்கள்.

## மற்றொரு இந்து வீடு

மான் கதவு, கள்ளிக்கோட்டை மரத்தால் கட்டப்பட்ட இரட்டை மாடி வீடுகள். நடுத்தர மக்கள் இந்த மரக் குடியிருப்பையே விரும்பினர். இவர்கள் பெரும்பாலும் மத்திய மற்றும் வடகேரளா பகுதியில் வசித்தனர். இந்த வீடு மேனன் பிரிவினர் அதிகமாகப் பயன் படுத்துகிறார்கள். அப்பகுதி கைவினைப் பொருள்கள் யாவும் பயனில் இருந்தன. மேலும், ஆயுர்வேத மசாஜ்க்காக சாதனங்களும் பயன்பாட்டில் இருந்தன.

## கிருத்தவர் இல்லம் : (புதுப்பள்ளி, கோட்டயம் மாவட்டம், கேரளா)

இது ஒரு சிரியன் கிருத்துவ இல்லம். கேரள கிருத்தவரின் கலாச்சாரத்தை இது பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. இவ்வீட்டின் அடிப்படைக் கட்டமைப்பு மரத்தாலாகியது, நல்ல மர இணைப்புகள் உள்ளன. தரைக்கடியில் தானிய சேமிப்பு கிடங்கு, சமையல் அறையில் நீருக்காக ஒரு கிணறும் உண்டு. இவர் ஓர் அறையைச் சுற்றியே வாழ்க்கையை அமைத்துள்ளனர். இவ்வீடுகள் பெரும்பாலும் திருவாங்கூர் பகுதியில் உள்ளன. இதற்கு அருகில் அமைந்த பெரிய கட்டடம் தானியத்தைச் சேமித்து வைக்கப் பயன்படுத்தப்படுகிறது. இவைகள் யாவும் பொருட்காட்சியில் இடம்பெற்ற பொருள்கள்தான்.


## கர்நாடகாவின் இல்கால் நெசவாளர் வீடு

கர்நாடகத்தின் வட பகுதியில் இல்கால் என்ற இடத்தில் இத்தகைய வீடுகள் பல உள்ளன. இவைகள் யாவும் நெசவாளர் குடும்பத்திற்கேற்றவாறு வடிவமைக்கப் பட்டுள்ளன. எல்லா வீடுகளும் கருங்கல்லினால் கட்டப்பட்டவை. ஏனெனில் இங்கு இக்கற்கள் தான் ஏராளமாகக் கிடைக்கின்றன. வீடு கட்டவும் இதைத்தான் பயன்படுத்துகிறார்கள்.

## வருடம் முழுவதும் விழாக்கள்

இங்கு வருடம் முழுக்க பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இவ்விழாக்கள் அந்தந்த காலகட்டத்திற்கேற்ப, பிராந்தியத்திற்கு ஏற்ப ஏற்பாடு செய்யப்பட்டு கொண்டாடப்படுகின்றன. இவைகளில் பண்பாடு, கலாச்சாரம், கைவினைப் பொருள்கள் மற்றும்





நாட்டுப்புறப் பாடல்கள் ஆகியவற்றை பிராந்திய அடிப்படையில் கண்டு களிக்கலாம்.

### பொங்கல் பண்டிகை (ஜனவரி 14 முதல் 17)

தமிழ்நாட்டு மக்களின் அறுவடைத் திருவிழா பொங்கல் ஆகும். இது இங்கு நான்கு நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது.

தட்சினா சித்ரா மையத்தில் உண்மையாகவே புது அரிசியில் பொங்கல் சமைத்து திறந்தவெளி அரங்கில் அனைத்துப் பார்வையாளர்களுக்கும் கொடுக்கப் படுகிறது. நாட்டுப்புறப் பாடல் மற்றும் ஆடல் பாடல்களையும் கண்டு களிக்கலாம். ரேக்ளா வண்டி சவாரி உண்டு. கும்மி, கோலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், பொம்மலாட்டம் ஆகியவைகளும் உண்டு.

### வசந்தவிழா (பிப்ரவரி 18 முதல் 28 வரை)

இவ்வசந்த விழா கலைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு விழா ஆகும். இது தட்சினா சித்ரா மையத்தில் பிப்ரவரியில் கொண்டாடப்படுகிறது. தென்னிந்தியாவின் தனிப்பட்ட கலைகளின் சிறப்புகளை தனித்தன்மையும் எடுத்துச் சொல்வதற்காகவே இவ்விழா நடைபெறுகிறது. பள்ளி மாணவர்களுக்கென்று ஒரு மேளாவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

### உகாதி (மார்ச்சு 17 முதல் 25)

உகாதி பண்டிகை என்பது புது வருடப் பிறப்பு ஆகும். இது குறிப்பாக தெலுங்கு பேசுவோர், கன்னடம் பேசுவோர், சிந்திகளும் மற்றும் மகாராஷ்டிரர்களும் இதனைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். தட்சினா சித்ரா மையத்தில் ஒன்பது நாள் விழாவாக நடைபெறுகிறது. இச்சமயம் ஆந்திரபிரதேசம் மற்றும் கர்நாடகா மக்களின் உணவு மற்றும் உடை பழக்கங்கள் பற்றி விரிவாக விளக்கப்படும்.

### தமிழ்ப் புத்தாண்டு தினம் (ஏப்ரல் 14 முதல் 17)

சித்திரை மாதத்தின் முதல் நாள்தான் தமிழர்களுக்கு புத்தாண்டு தினமாகும். கேரள மக்களும் இதனையே சைத்ரா விசு என்று ஒன்பது வகை தானியங்களை ஆற்றலின் கருவூலமாகிய சூரியனுக்குப் படைத்து நன்றி தெரிவிப்பார்கள். இதுவும் இங்கு கொண்டாடப் படுகின்றது.



### ஆடிப்பெருக்கு மற்றும் அய்யனார் திருவிழா

கிராமத்துக் காவல் தெய்வம் அய்யனார். கிராமிய மக்களுக்கு வரும் பிரச்சினைகளுக்கு காப்பாகவும், தீர்வாகவும் அமைவதும் இக்காவல் தெய்வம் தான். இக்கடவுளை மக்கள் ஓர் ஊர்வலமாக அய்யனாரின் பாடல்களை பாடிக்கொண்டே செல்வார்கள். இந்த மையத்தில் பக்த கோடிகள் சிறு சிறு பூச்சிகளையும், அணில், முயல், எலி போன்றவற்றை அய்யனாரின் உருவாரத்திற்குமுன் படைத்து (மண் மற்றும் மணலில் உருவாக்கப்பட்ட அய்யனார் சிலை, சிகப்பு கருப்பு மற்றும் வெள்ளை வண்ணம் பூசப்பட்டிருக்கும்) (Terrocotta) வணங்கி வழிபடுவார்கள்.

ஆடிப்பெருக்கு என்பது தமிழ்நாட்டின் பழைய பண்பாட்டின் சின்னமாகத் திகழ்கிறது. நீரை உயிர்காக்கும் அமுதமாக எண்ணி அதை வணங்கினார்கள். நீரின் ஆற்றல் அளப்பரியது. இதனை நம் தமிழர் நன்கு அறிந்து இருந்தனர் என்பதற்கு இதுவே சான்று. ஆனால் இப்படி இவ்விழாவை நகைச்சுவைத் திருவிழாவாகக் கொண்டாடு கிறார்கள். பழங்கால விளையாட்டுக்கள் சிலம்பம், சில்லு ஆட்டம், கபடி, இசை நாற்காலி சுற்று போன்றவைகள் சிறார்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன.

### ஓணம் (ஆகஸ்ட் 18 முதல் 28)

இது ஒரு அறுவடைத் திருநாள், இதனைத் திருவிழாவாக மலையாளிகள் கொண்டாடுகின்றனர். அதுசமயம் கேரளப் பூ அலங்காரப் போட்டிகள் நடைபெறும். கேரள உணவு வகைகள் தயாரித்து விநியோகிக்கப்படும்.

### நவராத்திரி தசரா (அக்டோபர் 13 முதல் 21)

தமிழ் புரட்டாசி மாதத்தில் 9 நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இதற்கென்று தனிப்பட்ட கொலு ஏற்பாடு செய்யப்படுகின்றது. இதனை பொம்மைகளின் திருவிழா என்றும் கூறுவர். இதுசமயம் சிறப்பான சங்கீதக் கச்சேரிகளும் நடைபெறும்.

### தீபாவளி/கார்த்திகை (நவம்பர் 10 முதல் 18)

இவைகள் இரண்டும் இந்து பண்டிகைகள். அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கொண்டாடப்படும். தட்சினா சித்ரா மையத்தில் தென்னிந்தியாவின் சிறப்பான விளக்குகள் கொண்டு தீப அலங்காரம் செய்யப்பட்டு, தீபங்கள் ஏற்றப்படும். கண்ணுக்கினிய தீப அலங்காரத்துடன் இத்தீபத் திருவிழா கண்கொள்ளாக் காட்சியாக அமையும்.

### கிறிஸ்துமஸ் (டிசம்பர் 7 முதல் 15)

தட்சினா சித்ராவில் கிறிஸ்துமஸ் திருவிழா இயற்கையின் எழிலோடு கொண்டாடப்படுகிறது. தமிழில் பூபாளப் பாடல்கள் பாடப்படும். அதே சமயம், சிறப்புக் கண்காட்சி, பரிசுப் பொருள் விற்பனை, அலங்காரம் ஆகியவைகளும் உண்டு.

### முடிவுரை

இந்த தட்சினா சித்ரா மையம் பண்டைக்கால தென்னிந்தியாவின் நாகரீகம், பண்பாடு கலாச்சாரத்தின் கருவூலமாகத் திகழ்கிறது.


இதற்கு Chennai Craft Foundation, Chennai-90யின் செயல்திட்டம்தான் காரணம். வரவேற்பறைக்கு அடுத்து ஒரு ஹாலில் வீடியோ காட்சி நமக்கு முன்னுரையாகக் காட்டப்படுகிறது. அதனை Vision of India என்றே சொல்லலாம்.

இதுமட்டுமின்றி திறந்தவெளி அரங்கு, ஒரு கல்யாண மண்டபம், தரமான உணவு படைக்கும் உணவகம், தங்குமிடங்கள் என்று பல உள்ளன. இங்கு கல்யாண மண்டபமும் வாடகைக்கு உண்டு.

இம்மையம் பண்பாட்டு கல்வியை பலருக்கும் கொடுக்கத் தயாராக உள்ளது. அதற்கான திட்டங்களும் உள்ளன. இதனைப் பயன்படுத்துவது நமது கடமை. ஒரு நாள் முழுவதும் தங்கி இருந்து அமைதியை அனுபவித்து திரும்பலாம். பொம்மலாட்டம், கிளி சோதிடம், சோதிடம், தேவராட்டம், ஒயிலாட்டம் முதலியவையும் நடைபெறுகிறது.

இந்த மெகா பட்ஜெட் திட்டத்தின் அமைப்பில் தோட்டாத்தரணி அவர்களின் பங்களிப்பை நினைவு கூர்வதாக பல அமைப்புகளைக் காணலாம்.

சென்னையில் உள்ளோர் பலருக்கும் இது பற்றிய விபரம் தெரியுமா என்பது சந்தேகம்தான். நான் ஒரு கோவையைச் சார்ந்த கல்வியாளன். ஒரு நாள் சென்றுவந்து, அனுபவத்தை பலரும் அடையவேண்டும் என்ற ஒரு முக்கிய நோக்கிலேயே இக்கட்டுரையை எழுதி சமர்ப்பிக்கிறேன். ஒருநாள் அங்கு தங்கினால் நாம் பெறப்போகும் பலன் பல வருடங்களுக்குப் பயன்படுவதாக அமையும். •




# ஊரும் பேரும்

**பழ. அண்ணாமலை**

பொதுவாக ஊர்ப்பெயர்கள் எல்லாம் இரு கூறுகளைக் கொண்டதாக அமைந்திருக்கின்றன. அதில் முதலில் உள்ளது சிறப்புக்கூறு, பின்னது பொதுக்கூறு.

பொதுக்கூறு என்பது ஊர்ப் பெயரின் விகுதியாக அமைந் திருக்கும் குடி, புரம், கோட்டை, புரி, வயல், ஊர், மங்கலம் போன்ற சொற்கள். சிறப்புக்கூறு என்பது ஊர்ப்பெயரின் முதல் பகுதி. அது அந்த ஊரின் சிறப்பு அல்லது தன்மையைக் காட்டுவனவாக அமைந்திருக்கும்.

செட்டிநாட்டில் நகரத்தார் வாழுகின்ற 74 ஊர்களும் இந்த இரு கூறுகளாய் அமைந்திருக்கின்றன.

குடி, புரம், கோட்டை, ஊர் என்ற பொதுக்கூறுகளாய் அமைந்துள்ள ஊர்களின் பெயர்க் காரணங்களை இங்கு காண்போம்.

**அரியக்குடி:** இவ்வூர் காரைக் குடிக்கு தென்கிழக்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அரிக்குடியின் திரிபே அரியக்குடி ஆகியிருக்கக்கூடும். திருவேங்கடமுடையான், அலர்மேலு மங்கை ஆலயம் இங்கு பெருமை பெற்றது. இவ்வூர் மக்களால் 'தென் திருப்பதி' என்று அழைக்கப் பெறுகின்றது. ராஜகோபுரத்தின் உயரம் 50 அடி. இங்குள்ள வாகனங்களில் கருடன், குதிரை இரண்டும் தங்கத்தாலும், அனுமான், நாகம், கேடயம், தேர் முதலானவை வெள்ளியாலும் செய்யப்பெற்றவை. இந்தக் கோவிலின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள மூல கருடன் மிகவும் சக்தி வாய்ந்தது.

இங்குள்ள கல்யாண மண்டபத்தின் கூரையில் 14 உலகங்கள் பற்றிய சித்திர வேலைப்பாடுகள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவை.

பெருமைபெற்ற இந்த பெருமாள் கோவிலைத் தவிர இவ்வூரில் நகரத்தார் சிவன் கோவிலும், செல்லியம்மன் கோவிலும், ஒரு மாதா கோவிலும் இருக்கின்றன.

இசைக்கும் கலைக்கும் இவ்வூர் பெயர் பெற்றது. உலகப்புகழ் இசை மேதை இராமானுஜ அய்யங்கார் இவ்வூரில் பிறந்தவரே. இவர் இராமநாதபுரம் சமஸ்தானத்தின் சங்கீத வித்வானாகத் திகழ்ந்த இசைமேதை பூச்சி ஸ்ரீநிவாச அய்யங்காரின் மாணாக்கர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆத்தங்குடி :** இவ்வூர் திருமயத்திலிருந்து தெற்கே சுமார் 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

அரசு அலுவலகக் குறிப்புகளில் எல்லாம், ஆத்தங்குடிக்கு அரண்மனைப்பட்டி என்ற பெயரே காணப்பெறுகிறது. பெரிய மருது பாண்டியர் காலத்தில் (கி.பி. 18ஆம் நூற்றாண்டு) குன்றக்குடித் தேர்த் திருவிழாத் தொடர்பாகத் தரப்பெற்ற ஓலைச்சுவடிச் சாசனத்தில் "முதல் திருநாள் செலவிற்கு அரண்மனைப்பட்டி என்னும் ஆதித்தன்குடியில் அரண்மனைப்பட்டிக் கண்மாய்ப் பாசனத்தில் ஆறு காணி நிலம் நன்செய்" என்றே குறிக்கப் பெறுகிறது. ஆதலின் இந்த ஆதித்தன்குடியே நாளடைவில் மருவி ஆத்தன்குடி என ஆயிற்று என்று கூறுகின்றனர். ஆதித்தன் என்ற சொல்லுக்குச் சூரியன் என்று பொருள்.

செட்டிநாட்டரசர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் இவ்வூரில் நடைபெற்ற நகரத்தார் விழா ஒன்றில் தண்டபாணி தேசிகருக்கும், தேசிக விநாயகம் பிள்ளைக்கும் முறையே இசையரசு என்றும் கவிமணி என்றும் பட்டங்கள் கொடுத்து, தமிழக மக்களுக்கு கவிமணியை அறிமுகம் செய்துவைத்த பெருமை உடையது இவ்வூரே.

**காரைக்குடி:** இவ்வூர் திருப்பத்தூருக்குக் கிழக்கே சுமார் 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இராமேஸ்வரம் - சென்னை இருப்புப்பாதையில் அமைந்துள்ள ஊர்களில் இதுவும் ஒரு பெரிய சந்திப்பு.

முன் காலத்தில் இங்கு முட்கள் நிரம்பிய காரைச்செடிகள் அடர்ந்த காட்டுப்பகுதியாக இருந்திருக்கிறது. காட்டை அழித்து மக்கள் வாழ்வதற்கு தக்க ஊராக மாற்றி இங்கு குடியேறியதும் இது காரைக்குடி எனப்பெயர் பெற்றது. புராதனக் கலை அல்லது இலக்கிய நூல்களில் 'காரிகுடி' என்றே கையாளப்பெற்று வந்துள்ளது. பின்னர் மருவி காரைக்குடி என ஆயிற்று எனக் கூறுகின்றனர். சுமார் 75 ஆண்டுகட்கு முன்னர் இது ஒரு சிற்றூராகவே இருந்திருக்கிறது. 1855இல் ஊராட்சி மன்றம் ஏற்படுத்தப்பெற்று பின்னர் 1928இல் நகராட்சியாக மாற்றப்பட்டது. இப்போது இது இரண்டாம் வரிசை நகராட்சியாகச் செயல்பட்டு வருகிறது.

இங்கு எண்ணற்ற கோவில்கள் இருப்பினும் கொப்புடையம்மன் கோவில் தான் புகழ்பெற்ற கோவில். இங்கு நகரத்தார் சிவன்கோவிலும், கிருஷ்ணன் கோவிலும், கழனிவாசல் பெருமாள் கோவிலும், முத்தாளம்மன் கோவிலும் முக்கியமான கோவில்கள். இரு மாதா கோவில்களும் ஒரு மசூதியும் இங்கு இருக்கின்றன.

கல்விக்காகக் கோடி கொடுத்த கொடைஞன், குடியிருந்த வீடும் கொடுத்த விழுத்தெய்வம், 'வள்ளல் அழகப்பச் செட்டியார்' உருவாக்கித்தந்த அழகப்பா பல்கலைக்கழகம், பல தொழில் நுணுக்கக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, மாதிரி மேல்நிலப்பள்ளி, ஆயத்தப் பள்ளி, மாண்டிஸோரிப் பள்ளி, தொடக்கப்பள்ளி, இசைப்பள்ளி முதலியன இங்கு அமைந்து கல்வியின் தனித் தன்மையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. மேலும் ஐ.ஏ.எஸ். படிப்பிற்கான எல்லாப் பாடங்களுக்கும் மாலை நேர வகுப்புகள் நடைபெறுகின்றன. அழகப்பா கல்லூரி திறந்த வெளிப்பல்கலைக் கழகமாகவும் செயல்பட்டு சுற்றுச் சூழலில் உள்ள மக்களுக்கு கல்வி தரப் பயன்படுகிறது. இங்கு மின்வேதியியல் ஆய்வு நிலையம் ஏற்படுத்தி நன்கு செயலாற்றி வருகிறது.

உலக மகாக் கவிஞன் கம்பனுக்கு விழா எடுத்த முதல் ஊர் காரைக்குடியே. ஒவ்வொரு பங்குனி மாதமும் மூன்று நாட்கள் விழா நடைபெறும். இந்த விழாக்களில் பங்கு பெறாத தமிழ்ச் சொற்பொழிவாளர்கள், இலக்கியவாதிகள், கவிஞர்கள் எவருமே இல்லை என்று சொல்லலாம்.

தினசரி அங்காடிகள் பல இருப்பினும், இங்கு ஒவ்வொரு திங்கட்கிழமையும் வாராந்திரச் சந்தை கூடுகிறது.

கீழப்பூங்குடி: ஒக்கூர் - மேலூர் நெடுஞ்சாலையில் சிவகங்கைக்கு வடக்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய ஈசுவரனை மதியாமல், தானே எல்லாம் என்ற ஆணவத்துடன் பிரம்மா இருக்க, அந்த ஆணவத்தை அழித்து, அறிவு புகட்ட எண்ணிய பரம்பொருளே வைரவக் கடவுளாகத் தோன்றி, பிரம்மாவின் ஒரு தலையை வெட்டி விடுகிறார். சிரமிழந்த பிரமன், ஆணவம் ஒழிந்து, ஆண்டவனை வேண்டித் தவமியற்றி மீண்டும் சிரத்தைப்பெற நினைத்து, இவ்வூரில் ஒரு குளம் உண்டாக்கி, அதில் மலர்களை மலரும்படி செய்து, பக்கத்தில் கடம்ப மரத்தின் அடியில் சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து, குளத்தில் தோன்றிய மலர்களைக் கொண்டு அர்ச்சித்து வழிபட்டார் என்றும், குளத்தில் பூக்கள் நிறைந்து குடிகொண்ட காரணத்தால் இவ்வூருக்கு பூங்குடி எனப்பெயர் வந்ததாகவும், அதற்குச் சான்றாக இன்னும் "ஈஸ்வரன் திடல்" என்ற இடம் இவ்வூரில் இருப்பதாகவும் கூறுகின்றனர். கண்டாசுரனோடு போரிட்டு வெற்றி கண்ட தேவியைப் பூமாரி செய்து தேவர்கள் வாழ்த்திய இடம் பூங்குடி. இங்குள்ள கள்ளர் இனத்தவர்கள் இவ்வூருக்கு மேற்குப் பக்கத்தில் சென்று குடியேறியதால் அப்பகுதி மேலப்பூங்குடி என்றும், கிழக்குப் பக்கத்தில் உள்ள இவ்வூர் கீழப்பூங்குடி என்றும் பெயர் பெற்றது எனக் கூறப்படுகிறது. இங்கு நகரத்தார்கள் மிகுதியும் வாழ்கிறார்கள்.

காராளர் என்ற சிவயோகி ஒருவரும் புதுக்கோட்டையில் மெய்யடியாராகத் திகழ்ந்த தவத்திரு உலகநாத சுவாமிகளும், ஏறத்தாழ 260 ஆண்டுகட்கு தவயோகியாகத் திகழ்ந்து தெய்வ சக்தியுடன் விளங்கிய இராமையா அடிகள், நிட்டை கூடித் திருவருட் துணையால் மிளகாய்ச்சாமி என்னும் பெயருடன் இவ்வூரில் வாழ்ந்து வந்திருப்பதே இவ்வூருக்குச் சிறப்பு. பூங்குடி என்ற பெயர் ஏற்படுவதற்கு முன் இவ்வூருக்கு "கடம்பாரண்யம்", "பூமன் நகரம்" என்ற பெயர்களும் வழங்கி வந்திருக்கின்றன.

பலவான்குடி: கானாடுகாத்தான் குன்றைக்குடி நெடுஞ்சாலையில் காரைக்குடியிலிருந்து வடக்கே 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

முருகப் பெருமான் சூரக்குடியில் சூரனை வென்று, திருவேலங்குடியில் அமர்ந்து, மாலையிட்டான்பட்டியில் மாலை சூடிக்கொண்டு ஆலத்திப்பட்டியில் ஆலத்தி எடுத்துக்கொண்டு பலவான்குடியில் பல வாணர்கள் இருந்து தொழுதபின், இறுதியாக குன்றக்குடிக்கு ஏகினான் என்பது புராண வரலாறு. மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய "சூரைப் பாணர் புராணத்தில்" இந்தச் செய்திகள் கிடைக்கின்றன. மேற்கூறிய சூரக்குடி, வேலங்குடி, மாலையிட்டாம்பட்டி, ஆலத்திப்பட்டி முதலிய ஊர்கள் அனைத்தும் சூரக்குடியிலிருந்து குன்றக்குடி செல்லும் ஒரே வழியில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பல வாணர்கள் வாழ்ந்து வந்ததினால் இவ்வூருக்குப் 'பலவாணர்குடி' என்றிருந்து பிறகு மருவிப் பெயர் வந்ததாகக் கூறுகின்றனர்.

பனங்குடி: இவ்வூர் காரைக்குடிக்கு தென்மேற்கே சுமார் 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பனை மரங்கள் மிகுதியும் அடர்ந்த ஒரு பகுதியில், நகரத்தார்கள் வாழத் தொடங்கினர். அது சமயம் பிற ஊர்களில் வாழ்ந்து வந்த நகரத்தார்கள் அவர்களைப் 'பனைக் குடியினர்' என்றும், அந்தப் பகுதியை 'பனைக்குடி' என்று அழைத்தும் வந்தனர். இந்த பனைக்குடியே பின்னர் மருவி 'பனங்குடி' ஆயிற்று, என்றும் கூறுகின்றனர். இவ்வூரில் உள்ள நல்ல வளமிக்க நிலங்களுக்கு நீர்வளம் தந்து உதவும் "பனங்குடி"க் கண்மாண் இங்கிருப்பதாலும் இப்பெயர் வந்திருக்கக்கூடும் என்று கூறுகின்றனர். இவ்வூர் நகரத்தார்கள் செல்வச் செழிப்புடன் அன்று வாழ்ந்திருந்ததால் இவ்வூரைப் பணம் குடியிருக்கும் ஊர் என்ற கருத்தில் 'பணக்குடி' என்றிருந்தது. பின்னர் 'பனங்குடி' ஆக மருவி விட்டதென மற்றொரு சாராரும் கூறுகின்றனர். முடிவாக எதைக் காரணப் பெயராகக் கொண்டிருக்கக்கூடும் என்பதற்கு இலக்கிய மற்றும் சரித்திரச் சான்றுகள் இல்லையெனினும் மரம், செடி, கொடி அடிப்படையில் அமைந்துள்ள ஊர் என்று கொண்டால் பனைமரங்கள் மிகுதியாக காணப்பட்ட பகுதியில் வாழ்ந்ததால் பனைக்குடியே, பனங்குடியாக மருவியிருக்க முடியும் என்று கொள்வதே ஏற்புடையது.

**சண்முகநாதபுரம் :** இவ்வூர் காரைக்குடியிலிருந்து தேவகோட்டை செல்லும் வழியில் வடகிழக்கே செல்லும் குறுக்குச் சாலையில் சுமார் 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வெளியேறிய நகரத்தார்கள் தேவகோட்டைக்கு அருகில் உள்ள சேந்தணி, கொறட்டி போன்ற சின்னஞ் சிறிய கிராமங்களில் குடியேறிப் பின்னர் தங்கள் வசதிக்காக பல ஊர்களை அமைத்துக் கொண்டு குடியேறினர் என்பது வரலாறு. அவ்வாறு சேந்தணி என்ற கிராமத்தில் தங்கியிருந்த நகரத்தார்கள் கி.பி. 1840-1850க்கு இடைப்பட்ட காலத்தில் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடியில் ஆட்சிபுரிந்த 18வது மகாசந்நிதானம் அவர்களிடம் 60 மனையிடங்களை பர்மாவிலிருந்து உண்டியல் மூலம் பணம் அனுப்பியும் குடிவாரதாரர்களிடம் 60 மனையிடங்களையும் விலைக்கு வாங்கினர். குன்றக்குடியில் அவ்வாறு இடம் வாங்கியபோது, அங்கு எழுந்தருளியுள்ள சண்முகநாதப் பெருமான் பெயரையே



அவ்வூருக்கு சூட்டுவதாகவும் இடந்தந்தருள வேண்டும் எனவும் வேண்டிப் பெற்றனர். நகரத்தார்கள் சொன்ன சொல்லைக் காப்பாற்றும் நாணயமுள்ளவர்களாதலாலும், இயல்பாகவே முருகப் பெருமானிடம் பக்தி கொண்டவர்கள் ஆதலாலும், இவ்வூருக்கு 'சண்முகநாதபுரம்' எனப் பெயர் வைத்ததாகக் கூறுகின்றனர். மருது சகோதரர்களில் ஒருவருக்கு ஏற்பட்ட முதுகுப் பிளவைக் கட்டியைக் குணப்படுத்தியதற்கு மகிழ்ந்து, அவர்கள் கொண்டுள்ள இறைபக்தி காரணமாகவும் 1.5 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பை இறையிலியாகக் கொடுத்து செம்பொன்மாரி என்ற கிராமத்தை உருவாக்கினர். அதுவே 'சண்முகநாதபுரம்' எனப்பெயர் பெற்றது என்றும் கூறுகின்றனர்.



இவ்வூருக்கு சண்முகநாதபுரம் என்றே பெயர் இருந்தபோதிலும் மூன்று போக விளைச்சலுக்கும் ஆறாத வயல்கள் இவ்வூரைச் சூழ்ந்திருப்பதால் இவ்வூரை "ஆறாவயல்" என்றும் அழைத்து வருகின்றனர். ஆயினும் அஞ்சல் நிலையம், அரசினர் குறிப்புகள் அனைத்தும் இவ்வூரைச் சண்முகநாதபுரம் என்றே குறிப்பிடுகின்றன.

**சொக்கநாதபுரம் :** இவ்வூர் கல்லலில் இருந்து மேற்கே சுமார் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

ஏறத்தாழ நூறு ஆண்டுகட்கு முன் உருவாக்கப் பெற்ற இவ்வூரின் அண்மையில் உள்ள கத்தாழம்பட்டு, ஓலைக்குடி, பக்கிரிப்பட்டி, சுத்தப்பட்டுக் கருங்குளம் ஆகிய சிறுசிறு கிராமங்களிலிருந்து நகரத்தார்கள் ஒன்று கூடி சிவகங்கை சமஸ்தானத்தில் கவுல் உரிமை பெற்று புதிதாக இவ்வூரில் குடியேறி வாழத் தொடங்கினர். எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சொக்கநாதப் பிரபுவை தியானித்து வந்த அகத்தியர் சிலையும் இவ்வூரில் உள்ள ஆலயத்தில் பிரதிட்டை செய்திருப்பதால், அவர் வணங்கிய சொக்கநாதர் பெயராலேயே இவ்வூர்ப் பெயரும் ஆயிற்று.

நகரத்தார்கள் வாழுகின்ற 74 ஊர்களில் இவ்வூர் சிவன் கோவில் மட்டுமே, அகஸ்தியர் சிலை பிரதிட்டை செய்திருக்கின்ற காரணத்தால், மேற்கு முகமாக அமைக்கப்பெற்றுள்ளது. இதுபோல தமிழகத்தில் அகஸ்தியர் சிலை பிரதிட்டை செய்துள்ள இன்னும் ஆறு ஊர்கள் இருக்கின்றன. அவைகளும் மேற்கு முகமாகவே அமையப்பெற்றுள்ளன. இவ்வூர்க் கோயிலுக்கு இது ஒரு சிறப்பு.

**சொக்கலிங்கபுரம் :** இதனை 'மதகுபட்டி' என்றும் அழைக்கிறார்கள். இது சிவகங்கை திருப்பத்தூர் சாலையில் சிவகங்கைக்கு வடகிழக்கில் 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

மதுரை மாவட்டத்தில் உள்ள அழகிச்சிப்பட்டி, கொட்டாணிபட்டி ஆகிய ஊர்களில் வாழ்ந்து வந்த நகரத்தார்கள் ஒன்று சேர்ந்து தங்கள் வாழ்க்கை வசதிக்காக 80 - 85 ஆண்டுகட்கு முன் இவ்வூரை உருவாக்கி இருப்பதாகத் தெரிகிறது. சிங்கம்புணரிக்கு அருகில் மற்றொரு

சொக்கலிங்கபுரம் என்ற ஊர் இருப்பதால் இவ்வூரை வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே "மதகுட்டி சொக்கலிங்கபுரம்" எனப் பெயரிட்டாலும், இவ்வூரின் மேற்கே உள்ள பெரிய ஏரியின் கீழ்ப்புறத்தில் உள்ள மடவாயில் (நீர்பாயும் மடை) பெரியதொரு மதகும், பலகை அடைப்பும் காணப்படுவதால் 'மதகுபட்டி' எனப் பெயர் வந்ததாகக் கூறுகின்றனர்.

சோழபுரம் : சிவகெங்கை திருப்பத்தூர் பேருந்துச் சாலையில் சிவகெங்கைக்கு வடகிழக்கே ஆறு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

சோழமன்னர்களில் ஒருவன் தென்பகுதிக்கு யாத்திரையாக வந்த வழியில், முன்பு கந்தர்வர்கள் தங்கியிருந்த கந்தவனப் பொய்கையாகிய சோலையில் தங்கியிருந்தான். அப்போது அந்த ஊரில் உள்ள அம்மன் அருளால் அவனுடைய ஊமைப்பெண் பேசியதாகவும், அதன் காரணமாக இப்பகுதிக்குச் 'சோழன்புரம்' என்று பெயர் வந்தது என்றும், அதுவே நாளடைவில் மருவி 'சோழபுரம்' என ஆயிற்று எனக் கூறுகின்றனர். கவியோகி சுந்தானந்த பாரதியார் நீர்நிலைகள் நிரம்பிய சோலைகளடர்ந்த "சோலைபுரமே" பின்னர் "சோழபுரம்" என ஆகியிருக்கக்கூடும் என்று கூறுவதாயும் அறிகிறோம். இப்பகுதி மக்கள் எழுத்திலும் பேச்சிலும் "சோளபுரம்" என்றே காணப்படுகிறது.

நாச்சியார்புரம் : திருப்பத்தூரிலிருந்து காரைக்குடி - தேவகோட்டை செல்லும் நெடுஞ்சாலையில் காரைக்குடியிலிருந்து வடகிழக்கே சுமார் 6 கி.மீ. தொலைவில் உள்ளது.

சுமார் 100 ஆண்டுகட்கு முன்பு இவ்வூருக்கு அண்மையிலுள்ள பல ஊர்களில் வசித்து வந்த நகரத்தார்கள், சிவகங்கை சமஸ்தானத்தில் புன்செய் நிலங்களை மேல்வாரப் பாத்தியதைக்கு நிலக்குத்தகை கொடுத்து வாங்கி இவ்வூரை ஏற்படுத்தியதாகவும் இவ்வூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் மருது சகோதரர்களால் தோற்றுவிக்கப்பட்ட காட்டு நாச்சியம்மன் கோவில் இருப்பதால் அந்த அம்மனின் பெயராலேயே 'நாச்சியார்புரம்' எனப் பெயர் பெற்றதாகவும் கூறுகின்றனர்.

இவ்வூரில் சிவன் கோவிலும், புகழ்பெற்ற நாச்சியாரம்மன் கோவிலும் இருக்கின்றன.

கொ. லெட்சுமிபுரம் : இவ்வூர் திருமயத்திற்குத் தென்கிழக்கே சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

ஏறத்தாழ 12 ஆண்டுகட்கு முன் சிவகெங்கை சமஸ்தானத்திலிருந்து, இரண்டு நகரத்தார் பெருமக்கள் கவுல் வாங்கிப் பிரித்துக் கொண்டனர். இங்குள்ள நகரத்தார்கள் மிக்க செல்வச் செழிப்புடையவர்களாக இருந்த காரணத்தால் செல்வத்திற்கு அதிபதியான இலக்குமியின் பெயரையே இவ்வூருக்கும் சூட்டினர். திருமயம் ஒன்றியத்தில் உள்ள விரையாச்சிலைக்குப் பக்கத்திலும் 'இலக்குமிபுரம்' என்ற ஊர் ஒன்று இருப்பதால், இவ்வூரினை வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே இவ்வூருக்கு அண்மையில் உள்ள கொத்தமங்கலத்தின் முதல் எழுத்தை சேர்த்து 'கொ. இலக்குமிபுரம்' என்று அழைத்தனர்.

வி. லெட்சுமிபுரம் : இவ்வூர் திருமயத்திலிருந்து வடமேற்கே சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

கொ. லெட்சுமிபுரத்திற்கு ஏற்பட்டுள்ள பெயர்க் காரணமே இவ்வூருக்கும் பொருத்தமுடையது. சாக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள கொ. லெட்சுமிபுரத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டவே விரையாச்சிலைக்கு அண்மையில் இவ்வூர் இருப்பதால் வி. லெட்சுமிபுரம் எனப் பெயர் வந்திருக்கக்கூடும் எனத் தெரிகிறது. நெய்க் குணம் என்ற ஊருக்குப் பக்கத்தில் இருப்பதாலும் சிலர் இதனை நெ. லெட்சுமிபுரம் என்றும் கூறுகின்றனர். இங்கு வெள்ளைக் கல் மிகுதியும் இருப்பதால், கல்லுடைப்புத் தொழில் சிறந்து விளங்குகிறது.

அலவாக் கோட்டை : சிவகெங்கை திருப்பத்தூர் நெடுஞ்சாலையில் மதகுபட்டிக்கு மேற்கே சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சோழபுரத்தில் உள்ள அம்மனுக்கு அணிவிக்கிற அணிகலன்கள், ஆபரணங்கள் செய்வதற்காக விட்டுக்கொடுக்கப்பட்ட கிராமமே 'ஆபரண நல்லூர்' என்ற பெயரால் அழைக்கப்படும் 'அலவாக் கோட்டை'. சோழபுரம் ஊராக இருந்தபோது வயல்கள் நிரம்பிய பகுதியாக இருந்தது ஆபரணநல்லூர், பின்புதான் மக்கள் இவ்வூரில் குடியேறியதாகக் கூறுகிறார்கள். அங்கு குடியேறிய நகரத்தார் மக்கள் திரைகடல் ஓடி திரவியம் தேடி, தங்கள் வீடுகளைத் தங்களுக்குப் போதுமான அளவுக்கு கோட்டை போன்ற அளவான வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்ததால் 'அளவாக் கோட்டை' என்பதே நாளடைவில் "அலவாக் கோட்டை" என்று மருவியுள்ளதாகக் கூறுகின்றனர். நிலவளம் நிரம்பிய இவ்வூருக்கு இங்குள்ள அலவைக் கண்மாய், காரக்கண்மாய் முதலியவற்றால் நீர்வளம் தந்து நெல்மணியைக் கோட்டை கோட்டையாய்க் குவித்து வாழ்ந்ததின் காரணமாகவும் 'அளவைக் கோட்டை'யே மருவி "அலவாக் கோட்டை" என ஆகியிருக்கலாம் என்றும் கூறுகின்றனர்.



**தேவகோட்டை :** காரைக்குடிக்குத் தென்கிழக்கே சுமார் 17 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர்.

"தேவியின் கோட்டை"யாகிய "தேவி கோட்டை"யே மருவி இப்போது "தேவ கோட்டை" என வழங்கி வருவதாகக் கூறுகின்றனர். சிலர் தேவர்கோட்டை என்றும் கூறுகின்றனர். பல நூற்றாண்டுகட்கு முன்பு காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வந்த நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் வாழ்ந்து வருகின்ற சிறப்பான ஊர். இவ்வூருக்கு அண்மையில் 'தேவிகோட்டை' என்ற ஒரு சிற்றூர் உள்ளது. அங்கிருந்து இங்கு குடியேறி வந்ததால் தேவகோட்டை என்றும் ஆகியிருக்கலாம்.

இங்கு பல சிறுசிறு கோயில்களும், பிரசித்தி பெற்ற ஒன்பது கோவில்களும் இருக்கின்றன. அவைகளில் சிறப்பு வாய்ந்தது நகரத்தார்களுடைய நகரச் சிவன் கோவில். இது தவிர சிலம்பணி சிதம்பர விநாயகர் கோயில், கருதாவூரணிப் பிள்ளையார் கோவில் வெள்ளையன் ஊருணியில் உள்ள கலங்காத கண்ட விநாயகர் கோவில், ரெங்கனாதர் ஆலயம், ஸ்ரீராமர் கோவில், சிவன் கோவில் திண்ணன் செட்டி கைலாச விநாயகர், சிவன் கோவில்கள் இரவிசேரி சிவன் கோவில், கிருஷ்ணன் கோவில் முதலியன இருக்கின்றன.

நாட்டரசன் கோட்டை : சிவகெங்கையிலிருந்து கிழக்கே 10 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து 1000 ஆண்டுகட்கு முன் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பொட்டலாகக் கிடந்த இவ்வூரில் வந்து ஒரு கோட்டைக்குள் வாழ்ந்து வந்ததால் நாட்டுக் கோட்டையே காலப்போக்கில் "நாட்டரசன் கோட்டை"யாக மாறியிருக்கிறது என்று கூறுகின்றனர். ஊருக்குக் கடைசி உலகம்பட்டி என்பதுபோல நாட்டுக்குக் கடைசி நாட்டரசன் கோட்டை எனப்பெயர் பெற்றது. செட்டி நாட்டிற்கு வடக்குக் கடைசியில் உலகம்பட்டி அமைந்திருப்பதுபோல, தெற்குக் கடைசியில் நாட்டரசன் கோட்டை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

களவழி நாடு என்று இப்பகுதி பெயர் பெற்றிருந்தது. போர்க்களம் பல கண்ட மறவர் வாழும் நாடு பாண்டியர் முடிசூடும் அரண்மனை இருந்தமையால் முன்பு இவ்வூர் 'முடிகொண்ட பாண்டியபுரம்' எனப் பெயர் பெற்றிருந்தது.

இவ்வூருக்கு மேற்கே கரிகாலச் சோழ மன்னனால் பிரதிட்டை செய்யப் பெற்ற சிவகாமி அம்மன் உடனாய கரிகாலச் சோழீஸ்வரர் உறைகின்ற சிவன் கோவிலும், கருப்பண்ணசுவாமி கோவிலும், ஊர்க்காவலன் என்ற ஐயனார் கோவிலும், பெருமாள் கோவிலும் ஏற்பட்டிருக்கின்றன.

உலகமகாக் கவிஞன் கம்பர் வந்து தங்கி தன் இறுதி நாட்களை இங்கு கழித்து, இயற்கை எய்திய பின் அவர்களுக்கு சமாதிக் கோவிலும் இங்கு அமைந்துள்ளது, இவ்வூருக்கு கிடைத்துள்ள மற்றொரு சிறப்பு.

அமராவதிபுதூர் : காரைக்குடிக்குத் தெற்கே சுமார் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர்.

இவ்வூர் உருவாகி சுமார் 300 ஆண்டுகள் இருக்கலாம் என மதிக்கப்படுகிறது. இவ்வூரில் உள்ள மிகப்பெரிய அமராவதி கண்மாயை வைத்தே இவ்வூருக்கு முதலில் 'அமராவதி' என்ற பெயர் ஏற்பட்டது. என்றும், பிறகு அதற்குப் பக்கத்திலும் புதிதாக ஒரு ஊரை ஏற்படுத்திக் கொண்டதால், இரண்டு பகுதிகளையும் சேர்த்து 'அமராவதிபுதூர்' எனப் பெயரிடப் பெற்றது என்றும் கூறுகிறார்கள்.

**ஆத்திக்காடு தெற்கூர்:** திருப்பத்தூரிலிருந்து வடமேற்கே சுமார் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

செட்டிநாடு மேலவட்டகையில் பிரசித்திபெற்ற ஊர், ஆ.தெற்கூர். ஆத்தி மரங்கள் அடர்ந்த காடாக இருந்ததால் முன்பு 'ஆத்திக்காடு' என்று பெயர் பெற்றிருந்தது. இங்கே இந்தக் காடுகளை அழித்து, நிலத்தைத் திருத்தி, வீடுகள் கட்டிக்கொண்டு நகரத்தார்கள் வாழத் தொடங்கினர். இந்த ஆத்திக்காட்டின் தெற்குப் பகுதியில் நகரத்தார்கள் வீடுகள் அதிகம் கட்டிக்கொண்டதால் இதற்கு ஆத்திக்காடு தெற்கூர் எனப் பெயர் வந்ததாகக் கூறுகின்றனர்.

**ஒக்கூர்** : சிவகெங்கையிலிருந்து திருச்சி செல்லும் நெடுஞ்சாலையில் வடக்கே 12 கி.மீ. தொலைவில் உள்ளது.

நகரத்தார்களின் குலத்தொழிலாகிய கடல்வாணிபம் கருதி, கடல் கடந்து பொருள் தேடி மீண்டும் தாயகம் வந்ததும் சுற்றத்தார் அனைவரும் காணவருவது இயல்பு. ஒக்கல் என்ற சொல்லுக்கு உறவினர் அல்லது சுற்றத்தார் என்பது பொருள். எனவே, சுற்றத்தார் இங்ஙனம் இங்கு வந்து கண்டு செல்வதால் இது ஒக்கலூர் என்று இருந்திருக்கும். பின்னர் காலப்போக்கில் மருவி ஒக்கூர் என ஆகியிருக்கும் எனச் சிலரும் கூறுகின்றனர். இவ்வூருக்கு 'ஒக்கை' எனவும் பெயருண்டு. பரிமேலழகர் பாடலில் 'ஒக்கைக் காவலர்' என்று கூறப்படுவதை இங்கு உற்று நோக்குக. இங்கு பல இனத்தவர்கள் வாழ்ந்தாலும் மிகுதியாக வாழ்கின்றவர்கள் நகரத்தார்களே.

**கோட்டையூர்** : காரைக்குடிக்கு வடக்கே 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் நகரத்தார்கள் வெளிநாடுகளில் வணிகம் செய்தும், தொழில்கள் நடத்தியும் பொன் கோட்டையுடன் திரும்பிவந்த

காரணத்தால் இவ்வூருக்குக் கோட்டையூர் எனப்பெயர் வந்ததாகக் கூறுகின்றனர். பத்தாம் நூற்றாண்டில் ஏழகப்பெருந்தெரு பிரபலமாக இருந்தது. இதில் கொற்றவை கோயில்கள் புகழ் பெற்றிருந்தன. இன்னும் இவ்வூரில் கொற்றவை கோயில்கள் இருப்பதைக் காணலாம். ஏழகப்படை இருந்த கோட்டையின் கீழ்பால் மக்கள் வாழ்ந்த ஊரே கோட்டையூர். ஏழகப்படையை தமிழக வரலாறு வியந்து பாராட்டுகின்றது. எனவே பல நூற்றாண்டு கால வரலாற்று பின்னணித் தொன்மையுடையது 'கோட்டையூர்' என்றும் கூறுகின்றனர்.

**செம்பனூர்** : கல்லல் ஊராட்சி ஒன்றியத்தில் கல்லலிருந்து மதுரை செல்லும் வழியில் மேற்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் மண்வளம் செம்மண் பூமியாக இருப்பதால் 'செம் மண்ணூரே' நாளடைவில் "செம்பனூர்" என ஆயிற்று என்றும், இவ்வூர் மக்கள் பொருள் வளத்தில் சிறந்திருந்த காரணத்தால் "செம்பொன்னூர்" மருவி, 'செம்பனூர்' ஆயிற்று என்றும் கூறுகின்றனர்.

**செவ்வூர்**: இவ்வூர் திருப்பத்தூர் ஒன்றியத்தில், பொன்னமராவதிக்கு தென்கிழக்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

செம்மண் பூமியாகி, நிலவளம் நிரம்பிய இப்பகுதிக்கு நீர்வளம் தருகின்ற நீர்நிலை 'செவல்கண்மாய்' இவ்வூரில் இருப்பதாலேயே இதற்கு மண்வாகிலும், நீர்நிலை வாகிலும் 'செவ்வூர்' எனப்பெயர் வந்ததாகக் கூறுகின்றனர்.

மகா மகோபாத்யாய உ.வே.சா அவர்களுக்கு இவ்வூர் வெண்பாப் புலிக் கவிராயர் இல்லத்திலிருந்துதான் சீவக சிந்தாமணி'க் காவியத்தின் ஏட்டுப் பிரதிகள் கிடைத்தாக அவர்கள் சுய சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

**சொக்கலிங்கம் புதூர்** : இவ்வூர் ஆத்தங்குடிக்கு அருகில் கிழக்கே 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

ஆத்தங்குடி, வலையபட்டி, பழைய ஆத்தங்குடி, காரைக்குடி முதலான ஊர்களிலிருந்து நகரத்தார்கள் இங்கு வந்து வீடு கட்டிக் கொண்டு குடியேறியிருப்பதாகத் தெரிகிறது. 'மயூரகிரி' என வழங்கும் குன்றக்குடி முருகப் பெருமானுக்கு பால் அபிஷேகம் செய்வதற்கென்றே சிவகங்கை ஜமீன்தாரிணி காத்தமா நாச்சியாரவர்களால் தொத்தம் சேர்வை என்பவருக்கு இனாமாக அளிக்கப்பட்டது. சொக்கனேந்தல் என்ற இவ்வூர். நகரத்தார்கள் இவ்வூருக்குக் குடியேறியதும் சொக்கனேந்தல் என்ற இவ்வூரின் பெயரை 'சொக்கலிங்கம் புதூர்' என மாற்றி அமைத்துக் கொண்டதாகக் கூறுகின்றனர்.

**பள்ளத்தூர்** : இவ்வூர் காரைக்குடிக்கு வடக்கே சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் சாலைகள் வடக்கே ஏற்றமும், தெற்கே இறக்கமுமாக அமைந்திருப்பதால் மழைநீர் ஆறாகப் பாய்ந்து தெற்கே உள்ள ஊருணியில் தேங்கி நிறையும். இவ்வூர் பள்ளமான பகுதியில் அமைந்திருந்தலால் பள்ளத்தூர் எனப் பெயர் பெற்றது. இரணிக் கோவில் உ.அ.வகையினர் மித்திராவயலிலிருந்து இங்கு பழையூரில் வசித்து வந்தார்கள். இவர்கள் தான் இப்போதுள்ள பள்ளத்தூர் என்ற இடத்தில் கவுல் வாங்கிப் புதிதாக ஊரை உருவாக்கினர். அது புதூர் என்றாகிப் பின்னர் நிலத்தின் தன்மையால் பள்ளத்தூர் என்றாயிற்று.

**வெற்றியூர்** : கல்லலிருந்து தெற்கே சுமார் 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர்.

புகழ்வாய்ந்த சின்னமருது, பெரிய மருது என்ற இரு மன்னர்களும் தங்கள் பகைவர்களுடன் போரிட்டு வெற்றிகண்ட இடம் என்ற காரணத்தால் இவ்வூருக்கு 'வெற்றியூர்' எனப்பெயர் வழங்கிற்று. அம்மை, கண்டாசுரனை வெற்றிகண்ட இடமென்பதால் இவ்வூருக்கு வெற்றியூர் எனப்பெயர் வந்தது என்ற புராண வரலாறும் உண்டு. இங்கு வெற்றிகொண்ட சகோதரர்கள் மாலை சூட்டிக்கொண்ட இடமான 'மாலைகொண்டான்' என்ற சிற்றூரும் இவ்வூருக்கு அருகில் அமைந்திருப்பதைக் காணலாம்.

- திரு. **பழ. அண்ணாமலை** எழுதிய
**'செட்டிநாடு ஊரும் பேரும்'**
என்ற நூலிலிருந்து...

• • •

**போராடி உயர்ந்தவர் காமராஜர்**

**போ**ராடிப் போராடி வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராஜர். அவர் முதல்வராக இருந்தபொழுது வீணாக சட்டப்பிரச்சினையை வைத்து அவர் செய்ய வேண்டிய காரியங்களைத் தள்ளிப் போட்டதில்லை. மக்களுக்காகத் தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர்.

**- டாக்டர் எம்.ஜி.ஆர்.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **கே. செல்லமுத்து** இ.ஆ.ப, இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி: 5368926/5364906

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224071
சென்னை-600 008

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.



**உ**ங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**.

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் | மாதச் சந்தா | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா | கூடுதல் தொகை (3 + 4) | அரசு தள்ளுபடி * | அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4 | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள ... ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு ... அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் க... வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்... குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - ... கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் ... ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்... மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் ம... பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

தமிழரசு
R.N.I.NO.21446/70
Licence No.G/TN/CPMG/190.WPP-130

